
# சித்தர் இலக்கியம்

ஆய்வு நூல்

மீ.ப.சோமு



அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

# சித்தர் இலக்கியம் - 6

ஆய்வு நூல்

ஆசிரியர்
மீ.ப. சோமசுந்தரம்
சோமு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002.

முதல் பதிப்பு : 2009
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

விலை : ரூ.
வெளிநாடு :

மற்ற விவரங்களுக்கு :
சிறப்பு அதிகாரி
நூல் வெளியீட்டுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002.

அச்சிட்டோர்
ஜனகம் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சிதம்பரம்.

## உள்ளுறை


முன்னுரை

1. மந்திர ஆற்றல்
2. பதச்சோறு
3. சித்தர் பாடல்கள்
   1. இடைக்காடர்
   2. குதம்பைச் சித்தர்
   3. கடுவெளிச் சித்தர்
   4. அகப்பேய்ச் சித்தர்
   5. பாம்பாட்டிச் சித்தர்
   6. பத்திர கிரியார்
   7. வாலைக் கும்மி
   8. அழுகணிச் சித்தர்
   9. ஞானக் கும்மி
   10. கருவூரார் பூசை விதி
   11. நந்தீசர் பூசைவிதி
   12. இராமதேவர் பூசை விதி
   13. உரோமரிஷி ஞானம்
   14. வால்மீகர் சூத்திர ஞானம்
   15. அகத்தியர் ஞானம்
   16. திருமூல நாயனார் ஞானம்
   17. சுப்பிரமணியர் ஞானம்
4. சிவயோக சாரம்

*Dr.M.A.M. Ramaswamy,* B.A.,D,Litt.
Pro-Chancellor : Annamalai University
Member of Parliament (Rajya Sabha)

Flat.# 111, Ranka View Apartments
51/22-4, Richmond Road,
Bangalore - 560 025.
Tel : 080-25587779
Fax : 080-25584896

## அணிந்துரை

சித்தர் இலக்கியம் 4,5,6 ஆம் தொகுதிகள் வெளிவருவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

என் அருமைத் தந்தையார் அவர்கள் தமது மறைவுக்குச் சில வாரங்கள் முன்பு, இந்த ஆய்வுப் பணியைத் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் செய்ய வேண்டும் என்று விரும்பி, இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக உருவாவதற்குரிய திட்டத்தைக் கலந்து பேசினார்கள். அவர்களுடைய மறைவுக்குப் பிறகு தந்தையார் உருவாக்கிய திட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விரிந்து பரந்த இந்த அரிய ஆய்வு நூலைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வழங்குகிற பணியானது, எங்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழுக்குச் செய்யும் ஒரு நிலையான தொண்டு என்று நான் கருதுகிறேன்.

அமரர் திரு. மீ. ப. சோமு அவர்கள் ஆழ்ந்த மொழிப் புலமையோடு, தத்துவ நுண்ணறிவும், நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஒப்பு நோக்கும் ஆற்றலும் ஒரு சேரப்பெற்றிருந்த நல்லறிஞர். சில மகான்களின் நேர்முகத் தொடர்பும் அவருக்கு உண்டு. எந்தப் பணியை யாரிடம் எவ்வாறு ஒப்படைக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதில் வல்லமை பெற்று விளங்கிய என் தந்தையாரின் எண்ணம் நூல்வடிவம் பெற்றுள்ளது. இந்த சிறந்த நூலைத் தமிழ் மக்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வாயிலாக வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

மு. அ. மு. இராமசாமி

Prof. **Dr. M. Ramanathan,**
M.S. (G.S.) F.R.C.S.(Glasg)
Vice-Chancellor

Phone : Office : 04144-238283
Res. : 04144-238214
Fax : 04144-238925
04144-238080
E-mail : auvc_mr@hotmail.com
ANNAMALAI UNIVERSITY,
ANNAMALAINAGAR P.O. 608 002
INDIA

## பாராட்டுரை

சித்தர் இலக்கியம் குறித்த இவ்வரிய ஆராய்ச்சி நூலின் 4, 5, 6ஆம் தொகுதிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக மறுமதிப்புப் பெறுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இத்தொகுதிகளில் நாடறிந்த நல்லறிஞர் திரு. மீ. ப. சோமசுந்தரம், சித்தர்கள் குறிப்பு மொழியில் வெளியிட்டுள்ள மெய்ஞ்ஞான இரகசியங்களை எளிமையாக்கித் தமிழுலகிற்குத் தந்துள்ளார்கள்.

இந்நூல் உருவாக்கத்திற்கு முதற்பெருங் காரணரான கொடைவள்ளல் டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டதாகும். சித்தர் இலக்கியம் நூலாக வெளிவர வேண்டுமென்று விழைந்த தந்தையாரின் திட்டத்தை மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம்.இராமசாமி அவர்கள் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி உரியது.

சிவவாக்கியர், கபிலர், காகபுசுண்டர், இடைக்காடர், கடுவெளிச்சித்தர், அகப்பேய்ச்சித்தர், பாம்பாட்டிச்சித்தர், பத்திரகிரியார், கருவூரர், நந்தீசர் முதலிய சித்தர் பலரின் பாடல்கள் உரிய விளக்கங்களுடன் இந்நூல்களில் தரப்பட்டுள்ளன.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்பார்கள். அதாவது புற உலகிலும் பெறுதற்கரிய மானுட உடம்பிலும் பொதிந்திருக்கும் தத்துவம் ஒன்றுதான் என்பதை உணர்ந்து உணர்த்தியவர்கள் சித்தர்கள். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பதைப் பலபட வலியுறுத்தியவர்கள். பேரானந்தமாகிய வீடுபேற்று நிலையைப் புறக்கோலங்களாலும் பொய்ம்மைச் சடங்குகளாலும்

அடையமுடியாது என்பதை எடுத்துரைத்தவர்கள். ஆனந்த அனுபூதி நிலையைப் பெறுவதற்கு உரிய யோகப் பயிற்சிகளை, வழிபாட்டு முறைகளை, மந்திரக் கருத்துக்களை விவரிக்கும் இப்பாடல்களில் உலக வாழ்வியல் கருத்துக்களும் அறிவுறுத்தப்பட்டிருப்பது எல்லா மக்களும் இன்புற்று வாழவேண்டும் என்பதற்காகத்தான். சித்தர்கள் வழங்கும் மெய்ஞ்ஞான உண்மைகள் அறிவியற் கருத்துக்களோடு இயைந்து விளங்கும் சிறப்பையும் நூலாசிரியர் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

இறையனுபவம் என்பது சொல்ல முடியாத சுகம் ஆகும். அதைச் சொல்ல முடிந்த அளவு சித்தர்களும் விளக்க முடிந்த அளவு அறிஞர். மீ.ப.சோமு அவர்களும் புலப்படுத்தியுள்ளார்கள்.

தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் மட்டுமன்றிப் பொதுமக்களும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளியநடையில் எழுதப்பட்டிருப்பது இந்நூலின் குறிப்பிடத்தக்க சிறப்பாகும். அரிய நூல் படைத்த அவரை மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழ்கூறு நல்லுலகம் படித்துப் பயன் கொள்ள வேண்டுமென்று விழைகிறேன்.

மா. இராமநாதன்

முனைவர். பழ. முத்துவீரப்பன்
பேராசிரியர் & தலைவர்

தமிழியல் துறை
முதன்மையர் இந்திய மொழிப்புலம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

## பதிப்புரை

சித்தர்கள் சமய உலகிலும் சமுதாய வெளியிலும் புரட்சிகரமான கருத்துக்களைப போதித்தவர்கள். 'உள்ளமே கோயில்' என்று உரக்கச் சொன்னவர்கள். சாதி, சடங்கு, சாத்திரங்களை ஆவேசமாக எதிர்த்தவர்கள். அவர்தம் இலக்கியங்கள் பேரின்பப் பேற்றை அடைய வழிகாட்டுவன. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயரிய நெறியை வலியுறுத்துவன. 'உள்ளத்துக்குள்ளே ஒளிந்திருப்பவன் இறைவன்' என்பதை எடுத்துரைப்பன. உலகளாவிய ஒருமைக்குக் குரல் கொடுப்பன. பெறுவதற்கரியது மானுட உடம்பு; அதனைப் பயன்படுத்தி ஒளிப்பயிற்சி, ஒலிப்பயிற்சி ஆகியவற்றை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் பிறவிப்பேற்றை அடையலாம் என்று விளக்குவன. மரபுவழிச் செய்யுட்களையும், நாட்டுப்பாடல்கள் அமைப்பையும் பின்பற்றி எளிய நடையில் அரிய கருத்துக்களைத் தருவன. வாழ்வியல் நெறிகளை விவரித்து வாசிப்பவரை நேசிக்க வைப்பன.

அறிஞர் மீ.ப.சோமு சித்தர் இலக்கியங்களில் ஆழங்காற்பட்டவர். தக்க குருமார்கள் வழி சித்தர் இலக்கிய நுட்பங்களைக் கற்றுணர்ந்த பெருமையர்.

சித்தர் இலக்கியம் 4ஆம் தொகுதியில் சிவவாக்கியம், கபிலர் அகவல் என்னும் இருநூல்கள் இடம் பெற்றுள்ளன. சிவவாக்கியம் என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ள 856 பாடல்களும் தத்துவப் பாடல்களாகவும் துதிப்பாடல்களாகவும் விளங்குபவை. தொடர்ந்து வைத்தியம் குறித்த சித்தர் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

சிவவாக்கியம் தந்த சிவவாக்கியர் ஒருமைப்பாடு என்ற பேரானந்த ஒடுக்கத்தின் பேரின்பத்தை அனுபவித்தவர். உலகம் முழுதும் இறைவனே என்ற ஒருமைக் காட்சியை உணர்ந்தவர். சரியை, கிரியை, யோக, ஞான நிலைகளில் தோய்ந்து பாடுபடுபவர். சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளைப் பேசியதில் தந்தைபெரியாரை விட ஒருபடி மிஞ்சியவர். ராம நாமத்தின் மகிமையையும் விளக்கியுள்ளார்.

அகக் காட்சி பெறும் வழிகளை எளிமையாக எடுத்துரைத்தவர். மனம் மலர்கிற நிலையே ஞானம் என்றவர். பெறுதற்கரிய உடம்பைப் பெற்றும் ஞான ரகசியங்களை அறியாதிருப்பது- உடம்புக்குள் ஞானவாசலைத் திறக்கத் தெரியாமல் மூடி வைத்திருப்பது - வீடுகட்டிக் கதவைச் சாத்தி வைத்திருப்பது போல என்கின்றார்.

கபிலர் அகவல் என்ற நூல் பிறப்பால் உயர்வுதாழ்வில்லை, அவரவர் சிறப்பால்தான் உயர்வு என்பதை விரிவாக எடுத்துரைப்பது. உலகளாவிய பொதுநோக்கு, சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கை எதிர்ப்பு, புரட்சி மனப்பான்மை ஆகியவற்றின் திரட்டுப் பாலாகத் திகழ்வது. மழையும், காற்றும், பூமியும், கதிரவனும் அனைவருக்கும் பயன்படுவது போல மானிடர் யாவர்க்கும் குலமும், குடியும், பிறப்பும், வழிபடுதெய்வமும் ஒன்றே என்று வலியுறுத்துவது. இப்பாடற் செய்திகளை ஆய்ந்தும் தோய்ந்தும் இயன்றவரை எளிமைப் படுத்தி விளக்கியுள்ளார் அறிஞர் மீ.ப.சோமு.

5ஆம் தொகுதியில் சிவவாக்கியம் எனும் தலைப்பில் காகபுசுண்டர் எழுதிய 987 பாடல்கள் குறிப்புரையுடன் இடம் பெற்றுள்ளன. இச்சையை விடுப்பதும் சினம் நீக்குவதும் மோட்சம் அடைவதற்குரிய வழிகள் ஆகும். உடலும் மனமும் செம்மைப்பட்டால் அனுபூதி நிலை பெறலாம். அக உலகின் கதவைத் திறத்தலே பயிற்சிகளில் எல்லாம் பெரிய பயிற்சி. உட்சோதியைக் கண்டு தெளிவதே மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதற்குரிய அமரநெறி. குண்டலினியை எழுப்புவது என்பது பயிற்சியினால் கிடைக்க வேண்டிய ஒரு மகத்தான அனுபவம் ஆகும் என்றெல்லாம் சித்தர்கள் கூறும் பல்வேறு ஞானநெறிகள், யோக முறைகள் மீ.ப.சோமுவால் எளிய நடையில் விளக்கப்பட்டுள்ளன.

ஆறாம் தொகுதியில் மந்திர ஆற்றல், பதச்சோறு என்னும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. இடைக்காடர், குதம்பைச் சித்தர், கடுவெளிச்சித்தர், அகப்பேய்ச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், பத்திரகிரியார் முதலிய 17 தலைப்புகளில் பலநூறு சித்தர் பாடல்கள் குறிப்புரைகளுடன் விளக்கம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் தன்னை அறிய வேண்டும் என்பதை விளக்குவன. சீவனுக்குள்ளே சிவமணம் பூக்க வழிகாட்டுவன. கையில் விளக்கு வைத்துக்கொண்டு வழி தெரியாமல் கடலில் விழக் கூடாது என்று நெறிப்படுத்துவன.

மனித உடம்பிலே நிலைகொண்டுள்ள எழுத்தாகிய ஆற்றல்களையும் ஆறு ஆதார நிலைகளையும் மூலக்கனலின் இயக்கத்தையும் வாசிப்பயிற்சி முறைகளையும் பேசாக்கிளவி வாயிலாகச் சித்தர்கள் விளக்குவதை எடுத்துரைப்பன. சுருங்கச் சொன்னால் குறியீட்டு மொழியில் கூறப்பட்டிருக்கும் பல்வேறு ஆன்ம ரகசியச் செய்திகளை இயன்றவரை எளிமைப்படுத்தி விளக்குவன.

பிறவிப் பயனை அடைய வழிகாட்டும் சித்தர் இலக்கியக் கருத்துக்களைப் பொதுமக்கள் அனைவரும் உணரும் வகையில் எளிமைப்படுத்த முயன்றுள்ள அறிஞர் மீ.ப.சோமு ஆன்மிக உலகின் பாராட்டுக்குரியவர் ஆவார்.

பழ. முத்துவீரப்பன்

# மந்திர ஆற்றல்

சித்தர் இலக்கியப் பாடல்களிலே முந்திய பகுதிகளிலும் இந்தப் பகுதியின் மேற்பக்கங்களிலும் சேர்க்கப்பட்டுள்ள கவிதைகள் அனைத்தும் சித்தர்கள் என்று மக்களால் அழைக்கப்பெற்ற சான்றோர்களின் பாடல்களே. அற்புதச் செயல்கள் பல புரிந்து, சித்தர்களின் வாழ்வாகவே நாளெல்லாம் வாழ்ந்து, மெய்ப்பொருட் பேரறிவு நிலையிலே ஒன்றிநின்று, திருவாய் மலர்ந்த ஞானக் கவிஞர்களின் படைப்புகளே இவை. துறவிகளாகவே வாழ்ந்த பெரியார்கள் பொதுமக்களின் ஞானக் கல்விக்காக இயற்றித் தந்த கவிநன்கொடை எனலாம்.

இந்தப் பாடல்களைத் தவிர, சித்தர் இலக்கியம் என்று தனிப்பெயர் சூடி வழங்காமல், பொருண்மையிலே ஞானவாக்குகளாகத் திகழ்கிற பாடல்களும் தமிழ் இலக்கிய சோலையிலே பூத்து நிற்கின்றன.

ஆழ்ந்து சிந்தித்தோமானால், ஆழ்வார்களிலே பெரும்பாலான சான்றோர்களும், தேவாரம் பாடிய மூவரும், திருமழிசை ஆழ்வார், ஆண்டாள், மாணிக்கவாசகர், திருமூலர் எனப் பலரும் ஆன்ம ஆற்றல் சுடர் வீசுகிற நூற்றுக்கணக்கான பாடல்களை நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஆண்டாளையும், நம்மாழ்வாரையும், வேறு சிலரையும் கோவில்களிலேயே வழிபடுகிறோம். நாச்சியார் சந்நிதியின் பின்னணி நமக்குந் தெரியும். திருவில்லிப்புத்தூர் போலவே ஆழ்வார் திருநகரிப் புளியமரம் ஒரு புண்ணியத்தலம். ஆவுடையார் கோவிலைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை.

ஆராய்ந்து பார்த்தால் சித்தர் பாடல்கள் என்ற தனியான தொகுப்புக்களிலே வழங்காவிடினும், இத்தகைய தமிழகத்துச் சான்றோர்கள் சிலரின் இலக்கியம் சித்தர் இலக்கியமாகவே விளங்குகிறது என்பது உண்மை.

நக்கீரருடைய திருமுருகாற்றுப்படை இன்றைக்கும் பல நலங்களை வழங்குகிற பாராயண இலக்கியமாகப் பல நூறு பக்தர்களால் பயிலப்பட்டு வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

சித்தர்களாக வாழ்க்கை நடத்தாவிடினும், கடவுளோடு உறவு கொண்டு இறைவனுடன் பழகி விளையாடிய சுந்தர மூர்த்தி சுவாமிகளும், ஆண்டாளும், வேறு சிலரும் ஞான ஆற்றலைத் துய்த்து அந்த ஆற்றல் நிரம்பிய பாடல்களை உலகுக்கு அருளியவர்களே ஆம். திவ்வியப் பிரபந்தப் பாடல்களும், மூவர் தேவாரமும் சித்தர் இலக்கியம் என்ற பிரிவிலேயே வைத்து வணங்க வேண்டிய பாடல்களாம்.

திருமூலருடைய திருமந்திரமும், திருமாளிகைத் தேவர், பட்டினத்தடிகள், கருவூரார், காரைக்கால் அம்மையார் முதலிய சில ஞானியர்களின் பாடல்களும் சித்தர் இலக்கியம் என்று தனியாக அழைக்கப் பெறாமல் திருமுறைகளிலே இடம்பெறுகின்றன. திருமழிசை ஆழ்வார், குலசேகரர் போன்ற மகான்களின் பாடல்களும் திவ்வியப் பிரபந்தத்திலே இடம்பெறுகின்றன.

திருமுறைகளிலும் பிரபந்தத்திலும் உள்ள பாடல்களில் மந்திர ஆற்றலும், சித்திகளைச் செய்து கடவுளாற்றலை நிலை நாட்டிய பாடல்களும் பற்பல பதிகங்களாகவும், பாசுரங்களாகவும் திகழ்கின்றன.

இத்தியாதி காரணங்களினால், சமயப் பாடல்களில் இன்னோரன்ன பல பாடல்களைச் சித்தர் இலக்கியம் என்ற பகுப்பிலே ஆய்ந்து நோக்குவது இந்த ஆராய்ச்சிக்குப் பொருந்தமேயாகும். மந்திர ஆற்றல் நிரம்பிய வாக்காக மக்களால் வணங்கப்பட்டு, நோய் தீர்க்கவும், நல்வாழ்வு பெறவும், கோள் இடர் களையவும் இன்றளவும் பயின்று வருகிற பாடல்களை இந்த நோக்கிலே கண்டு ஆராய்வது இப்பகுதியின் ஒரு பிரிவாகவே கொள்ளப்பட்டுள்ளது.

நம்மாழ்வாருடைய தேனொழுகும் கவிதைகள் வேதமாகவே வைணவர்களால் ஆராதிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சொல்லப்போனால் வைணவக் கோவில்களிலே வேதத்திற்கு முந்திய இடம் பிரபந்தத்திற்குத் தரப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம்.

சடகோபர் அந்தாதி பாடிய கம்பர் நம்மாழ்வாராகிய குருகூர்ப் (ஆழ்வார்திருநகரி) புனிதனை ஏத்திப் பாடுகிறார். அவருடைய பாடலிலே எம்பெருமான் எப்படி வசமாகிறான் என்பதை மனமுருகிப் பாடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். வேதத்துக்குள் அகப்படாமல் தப்பிச் செல்கிற திருமால், நம்மாழ்வாருடைய பாடலுக்குள்ளே அகப்பட்டு விடுகிறான் என்றும், அந்த மூலப் பரஞ்சுடர், வேதங்களைத் தாண்டிச் சென்றாலும் நம்மாழ்வாருடைய பாடலின் ஓர் (சைவ உலகம்)

அடியைக்கூடக் கடந்து அடியெடுத்து வைக்கமுடியாது என்றும் களிப்புப் பொங்கப் பாடுகிறார் கம்பநாட்டாழ்வார்! அந்தப் பாடல் வருமாறு:

வேதத்தின் முன்செல்க:
மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர்
கோதற்ற ஞானக்
கொழுந்தின்முன் செல்க; குணங்கடந்த
போதக் கடல்எம்
குருகூர்ப் புனிதன் கவியினொரு
பாதத்தின் முன்செல்லு
மோதொல்லை மூலப் பரஞ்சுடரே!

என்று சடகோபர் அந்தாதிப் பாடல் நம்மாழ்வாரின் (குருகூராகிய ஆழ்வார்திருநகரிப் புனிதன்) இறையாற்றலை வணங்கித் துதித்துக் கூத்தாடுகிறது.

வைணவர்களின் சிரத்துமீது வீற்றிருக்கும் எம்பெருமானார் இராமானுஜர் ஆழ்வார்திருநகரியையும், அந்த மண்ணையும் அந்தப் பொருநை நதியையும் எப்படிக் கொண்டாடுகிறார்! சித்தர்களுடைய காலடி பட்ட மண்ணை நாம் திருநீறாகவும் நாமத்துக்குரிய திருமண்ணாகவும் போற்றி அணிந்து கொள்வது போலே வருகிறது இராமாநுஜருடைய தமிழ்ப்பாடல்:

இதுவோ திருநகரி
ஈதோ பொருநை
இதுவோ பரமபதத்
தெல்லை - இதுவோதான்
வேதத் தமிழ்செய்து
மெய்ப்பொருட்கும் உட்பொருளாய்
ஓதும் சடகோபன்
ஊர்!

(சடகோபன் - நம்மாழ்வார், வேதத்தமிழ் செய்து - தமிழ் மறையை அருளி.)

இவ்வாறே ஆண்டாளையும் பெரியாழ்வாரையும் மனமொழி மெய்களால் வணங்குவதோடு, அந்தப் பிரபந்தப் பாடல்களை 'வேதாந்தப் பா' என்றே இராமாநுஜர் கொண்டாடுகிறார்.

பக்தி இலக்கியத்தில் உள்ள இந்த வேதாந்தப் பாடல்களை ஆய்வு நோக்கிலே பார்த்தால் சித்தர் இலக்கியம் என்றே கொள்ள இடமுண்டு.

திருமழிசை ஆழ்வார் மகைக்குகையிலே இருந்து தவமியற்றியதும், அந்த இடத்தை நெருங்கி வரும்போது முதலாழ்வார்களாகிய பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் மூவருக்கும் இவ்வுலகில் இதுவரை அவர்கள் கண்டறியாத ஒரு ஞானப் பேரொளி காணப்பட்டதும், அந்த ஒளியை அவர்கள் ஆராயப்புகுந்து குகையினுள் திருமழிசை ஆழ்வாரைச் சந்தித்ததும் வரலாறாக எழுதப்பட்டுள்ளது.

திருமழிசை ஆழ்வாரின் வாழ்விலே பல அற்புத நிகழ்ச்சிகள், ஒரு சித்தரின் அதிமானுட நிகழ்ச்சிகள், நடைபெற்றன என்பதை வைணவ உலகு நன்கறியும். நாமத்துக்குரிய திருமண் அகப்படாமல் ஆழ்வார் வருந்தும்போது, திருவேங்கடவன் அவருடைய கனவிலே தோன்றித் திருமண் கிடைக்கும் இடத்தைக் காட்டினான் என்றும், ஆழ்வார் உடனே அங்கே சென்று திருமண் எடுத்துப் பன்னிரண்டு திருநாமம் அணிந்து கொண்டு, ஒரே பரவசத்தில் பாடினார் என்றும் வரலாறு கூறுகிறது. பாடல் வருமாறு:

ஆல நிழற்கீழ்
அறநெறியை நால்வர்க்கு
மேலை உகந்துதைத்தான்
மெய்த்தவத்தோன் - ஞாலம்
அளந்தானை ஆழிக்
கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு
மாறு!

இவ்வாறே கணிகண்ணன் நிகழ்ச்சியில் இரண்டு வெண்பாக்கள் நிகழ்த்திய பேரற்புதம் உலகம் அறிந்ததே.

கணிகண்ணன் போகின்றான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க
வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும்
போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக்
கொள்!

என்ற வெண்பாவைப் பாடிய திருமழிசையாழ்வாரின் சொற்படி, நாகப்பாயைச் சுருட்டிக் கொண்டு திருமால் எழுந்தருளித் திருமழிசையாரின் பின்னால் வெளிநடந்தான் எனவும், பின்பு ஆழ்வார் அரசனுக்கு மன்னிப்பு வழங்கிய கணிகண்ணனின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துத் திருமாலை நோக்கி,

கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க
வேண்டும் - துணிவுடைய
செந்நாப் புலவனும்
போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக்
கொள்!

என்று கோரிக்கை விடுக்கவே எம்பெருமான் பாயை மறுபடியும் மடக்கிக் கொண்டு கச்சிக்குத் திரும்பினான் எனவும் வரலாறு. ஓர் இரவு முழுதும் வெளியேறித் தங்கியிருந்த அந்த இடத்துக்கு 'ஓரிரவிருக்கை' என்றே பெயராயிற்று. அந்தத் திருமாலும் "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" ஆனார்

இது ஒரு சித்து விளையாட்டுத் தானே! திருமழிசை ஆழ்வார் தெய்வத்தோடு நிகழ்த்திய ஒரு சித்து விளையாட்டே இது!

இதுபோன்று, ஆழ்வாருடைய திருமேனியில் பள்ளிகொண்ட நாதன் தனது எழிற்கோலத்தைக் காட்டி அருளியது போன்ற பற்பல அற்புத நிகழ்ச்சிகளை ஆழ்வார் வாக்கு சாதித்துள்ளது. இத்தகைய ஆழ்வாரின் பாடல்கள் பல பிரபந்தத் தொகுப்பிலே காணப்படுகின்றன. ஆய்வு முறையில் இந்தக் கவிதைச் செல்வமும் சித்தர் இலக்கியமே!

திருமழிசையார் போலவே நம்மாழ்வார் வாழ்விலும் பல அற்புதங்கள் காண்கிறோம். நம்மாழ்வாருடைய தெய்வ வாக்கின் மகிமை நோக்கி அவரை 'அருள்மாறன்' எனவும், 'திருநாவீறுடைய பிரான்' எனவும் தமிழுலகம் அழைத்து வணங்குகிறது

'விட்டுணுச் சித்தர்' என்றே வணங்கப் பெறுகிற பெரியாழ்வாரின் அற்புதங்கள் நமக்குத் தெரியும். ஆண்டாளோ "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி"! திருமாலை மணந்து சுகித்த மாதரசி அவர்!

மைத்தன நம்பி
மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக்
கனாக்கண்டேன் தோழீநான்

என்ற பாடலிலே உள்ள அற்புதத்திற்கு மேலான ஓர் தெய்வ அற்புதம் வேறு என்ன உண்டு? நாகபரியங்கத்தை மிதித்தேறி, நம்பெருமானது திருமேனியிலே ஒன்றி அவனை என்றும் பிரியாத நிலை எய்தினாள் ஞானக் கவிக்கன்னியான ஆண்டாள்! காரைக்கால் அம்மையைப போலவே இவரும் ஒரு சித்தர் பிறவி என்றால் மிகையில்லை.

வைணவ ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்தால் இப்படிப்பட்ட பல இறையாற்றல் அனுபவங்களை ஒவ்வொருவருடைய அனுபவத்திலும் பற்பல படிநிலைகளிலே காண்கிறோம். மேலும் வானுலக வரவேற்பு பற்றிய ஆழ்வார் பாசுரங்கள் எல்லாம் சித்தர் அனுபவங்களாகவே காண்கின்றன.

சொன்னவண்ணம் கேட்கிறவனாகப் பெயர்பெற்ற திருமால் எல்லா ஆழ்வார்களின் சொல்லுக்குமே கட்டுப்பட்டவனாக இருப்பதைக் காண்கிறோம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெல்மூட்டையைத் தூக்குவதற்கு ஆள் கேட்கிற அளவுக்குச் தெய்வத்தோடு விளையாடினார், தம்பிரான் தோழராக! அவ்வாறே ஆழ்வார்களும் எம்பெருமானோடு சித்தர்களின் ஞான விளையாட்டை விளையாடியிருக்கிறார்கள்.

இந்த இடத்தில் இன்னொரு உண்மையை நாம் மறப்பதற்கில்லை. சொன்ன வண்ணம் கேட்டான் எம்பெருமான் என்றால், யார் சொன்னதைச் சொன்னவண்ணம் கேட்டான்? நீங்களும் நானும் சொன்னால் இந்தக் கடவுள் கேட்கிறானா? சொல்கிறவர் சொன்னால் கேட்கிறான்! அப்படிச் சொல்கிறவர், சொல்லக் கூடிய தகுதியும் மந்திரச் சொல்லும் பெற்றவர் யார்? அவர்களே சித்தர்கள்!

ஆழ்வார்களும் நாயன்மார்களும் கவிஞர்கள், அரிய பெரிய கவிஞர்கள், ஐயமில்லை. ஆனால் மற்றக் கவிஞர்களுக்கும் இவர்களுக்கும் அடிப்படையிலேயே ஒரு மாறுபாடு இருக்கிறது. மிகச் சிறப்பான ஒரு மாறுபாடு அது.

சைவ உலகம் மும்மூர்த்திகள் என்று வணங்குகிற அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் இன்றைய இசையுலகிலே மும்மூர்த்திகள் என அழைக்கும் தியாகராஜர், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவருக்கும் கொள்ளுப் பாட்டனார்கள்! இவர்கள் அனைவருமே வாக்கேயகாரர்கள்! அதாவது கருநாடக இசை உலகிலே மும்மூர்த்திகளை வாக்கேயகாரர்கள் என்று அழைக்கிறோம் அல்லவா, அவ்வாறே தேவார மும்மூர்த்திகளும் வாக்கேய காரணர்கள். மணிவாசகரும், ஆழ்வார்களும் வாக்கேயகாரர்களே!

வாக்கேயகாரர் என்ற சொல்லுக்கு என்ன பொருள்? இசையும், சொல்லும், சங்கீதமும், சாகித்தியமும் - இரண்டுமே ஒருமித்துப் படைத்தவர்கள். அதாவது இவருடைய பாடல்களுக்குச் சொல் தந்தவரும் இசை அமைத்தவரும் இவர்களே!

இசைப்பாடலிலே சொல்லை வழங்குபவர் ஒருவரும், அதற்கு இசை அமைப்பவர் மற்றொருவருமாக ஒத்துழைப்பதில் பிசகில்லை. சிலப்பதிகரத்தில் அடியார்க்குநல்லார் தனித்தனி இலக்கியமே சொல்லியிருக்கிறார். எனவே பாடல் ஆசிரியனே இசையாசிரியராகவும் இருக்க வேண்டும் எனற கட்டாயம் இல்லை. ஆனால் நம்முடைய திருமுறைகளிலும் பிரபந்தப் பாசுரங்களிலும் பருத்தியே புடவையாகக் காய்த்திருக்கிறது!

ஆராய்ந்து பார்த்தால் 'வாக்கேயகாரர்கள்' என்று வடமொழியாளர் அழைக்கிற இசைப்பாடல் வல்லுநர்களின் பாடல் ஒவ்வொன்றும் ஒரு மணமலரைப் போன்றது! ஒரு வாசனைப் பூ எப்படி மலர்கிறதோ அப்படி மலர்ந்து வந்த பாடல்கள் அவை!

பூவானது மொட்டு விடும்போதே அந்த மொட்டுக் குள்ளேயே எல்லாப் பண்புகளும் ஒரு சேர அமைந்திருக்கும். வண்ணம், இதழ்க்கூறு, மணம் எல்லாம் இருக்கும். ஒரு கணக்குப்படி, ஒரு சட்டத்தின்படி இருக்கும்! பிச்சிப் பூவிலே பிச்சிப்பூவின் மணந்தான் இருக்கும். அரளிப்பூவின் நெடி பிச்சிப்பூவில் இராது. ஒரு மலருக்கு இன்னொரு மலரின் வாசனை இராது! பூ என்ன, இலை, தழை எல்லாமே அப்படித்தான்! மருக்கொழுந்திலே ரோஜாப்பூ மணக்காது! எலுமிச்சை இலையிலே மருக்கொழுந்து வாசனை இராது! ஒவ்வொன்றுக்குள்ளும் ஒரு பிறவி நியதி, ஒரு பெரிய சட்டம், கட்டுப்பாடு இருக்கிறது!

சங்கராபரணம் என்றால் அதில் தோடி வராது! புறநீர்மைப் பண்ணிலே வியாழக்குறிஞ்சியோ, அந்தாளிக் குறிஞ்சியோ கலக்காது! ஒவ்வொரு பண்ணுக்கும் ஒரு நிறம், ஒரு மணம் உண்டு. இத்தனை கோடி மலர்கள் பூக்கின்றனவே ஒரு பூவுக்கு இன்னொரு பூவின் நிறம் இயற்கையிலே வருகிறதா? அம்மட்டோ! ஐந்து இதழ்கள் இருக்கவேண்டிய ஒரு பூவுக்கு நான்கோ அல்லது ஆறு இதழ்களோ இருப்பதில்லை. அப்படி ஒரு வரையறை, அப்படி ஒரு கணக்கு இயற்கையிலே, தாவர இலையிலே, இருக்கிறது! நான்கு சுரங்கள் என்ற ஒலிநிலைகள் உள்ள பண்ணுக்கு நான்குதான் இருக்கும். முழுமைப் பண்களான சம்பூரண இராகங்களுக்கு ஒரு சுவரம் உண்டு. அதில் மாற்றமிராது. அதோடு எந்தெந்த சுவரம் அந்த ஏழாக இருக்கலாமோ அவைதான் இருக்கும். சுவரம் மாறினால் அபசுவரமாகிவிடும்! சிலருக்கு, ஆயிரத்தில் ஒருவருக்கு ஐந்து விரலுக்கு ஆறுவிரல் முளைப்பதுபோல் அது! இதையே ஆங்கிலத்தில் ..................... என்பார்கள்.

கவித்துறை என்றால் அங்கேயும் எல்லாம் ஒரு கணக்கு! வெண்பா என்றால் அதற்கு ஒரு கணக்கு. வெண்பாவிலே கட்டளைக் கலித்துறையைக் காண முடியாது. சீரும் தளையும் அப்படி அமைந்திருக்கப் பார்க்கிறோம். தாண்டகம், திருவிருத்தம் எல்லாமே ஒரு கணக்குக்கு உட்பட்டவை. அப்படியானால் எழுத்தை எண்ணிக் கொண்டா இட்டுக் கட்டினார்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும்! இல்லை! அவர்களுடைய வாக்கு அருள்வாக்கு! அமைப்பிலேயே எல்லாம் அமைந்துவிடுகிறது! இறைவனோடு, கணக்கர்களுக்கெல்லாம் கணக்கனாக விளங்குவதோடு ஒன்றிய திருவருட்செயல் அது!

தமிழகத்திலே திருமாலின் கோவில்களிலே பாசுரங்களை வேதம் ஓதுகிற முறையிலேயே ஓதி வருகிறார்கள். அதோடு இந்தத் தமிழ் மறைகளுக்கு அவர்கள் கொடுக்கிற முக்கியமும் பெருமையும் மெய்சிலிர்க்கச் செய்கின்றன. பொதுவாகவே சைவர்களாகிய நாம் பிராகாரம், அபிஷேகம், அம்பாள் என்றெல்லாம் வடமொழியைத்தான் பயன்படுத்துகிறோம். வைணவர்கள் அப்படியில்லை. திருச்சுற்று, திருமஞ்சனம், தாயார் என்று தூய தமிழ்ச்சொற்களையே தங்கள் கோயில் வழக்கில் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறே பெருமாள் புறப்பாட்டிலே தமிழ்வேதம் முன்செல்லுவதைக் காணலாம்.

பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டல்

திருமால் என்பதில் அவர்களுடைய பிடிப்பு எத்துணை வலிமையுடையது!

வைணவர்களுக்குத் தமிழில் உள்ள ஈடு இணையற்ற பற்று அவர்களுடைய கோவில் வழக்கிலே இத்தனை தெளிவாக இருந்தும்கூட, திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் அமைந்துள்ள பழைமையான பண்களைப் பற்றிய ஆதாரச் செய்திகளும், பண் அமைதி பற்றிய வழக்காறுகளும் ஓரளவே இன்றைய நடைமுறையில் காணப்படுகின்றன.

வரலாறும் வழக்காறும் ஒருபுறம் இருக்க, வைணவப் பாசுங்களின் தோற்றமும், தேவாரப் பதிகங்களின் தோற்றமும் ஒரே தன்மையனவாம். இந்த அருட்கவிகள் அத்தனையும் மனிதப் பிறப்புகசு ஒப்பானவை. ஒவ்வொரு பாடலும் பிறந்தது ஒரு குழந்தை பிறப்பது போலவே ஆகும்.

ஆம்; குழந்தை பிறக்கும்போது எப்படி இருக்கின்றது! கண் இருக்க வேண்டிய இடத்தில் காது இராது. ஒரு மோட்டர்க்கார் உண்டாக்குவதென்றால் ஒவ்வொரு அங்கமாகச் செய்து பொருத்தி உண்டாக்குகின்றனர். நான் வெளிநாட்டில் இருந்தபோது ஸ்டேண்டர்ட் மோட்டார் தொழிற்சலைக்குள்ளே போய்ப் பார்த்தேன். முதலில் ஒரு இரும்புத் தண்டு உள்ளே போகும். வெளியில் வரும்போது ஒரு காராக வருகிறது. முதல் வாசலில் ஒரு இரும்புத் தண்டைப் பார்க்கிறோம். கடைசி வாசலில் மோட்டார் கார் வெளியில் வருகின்றது. அந்தந்த இடத்தில் இயந்திரமே ஒவ்வொரு கருவியாகச் செய்து தானே பொருத்திக் காராக வெளியே அனுப்பி விடுகிறது. ஒரு குழந்தை அப்படியாக பிறக்கின்றது? கரு உண்டாகும்போதே கை, கால், கண், மூக்கு, நெற்றி, நாக்கு, முப்பத்திரண்டு பல்லுக்கு வேண்டிய வாய்ப்புகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. ஒரு அணுவுக்குள்ளேயே உருவம் முழுமையும் இருக்கிறது. தேவாரம் ஒவ்வொன்றும் அப்படி வந்திருக்கிறது.

அது மட்டுமா? வாக்கேயகாரர் கவிஞர் என்றோம். தேவார ஆசிரியர்கள் யார் என்றால் நாம் வழிபடும் தெய்வங்கள்; சமையத் தலைவர்கள்; சமய குரவர். அவர்கள் என்ன டப்பா பாட்டு எழுதுகின்றவர்களா? எல்லாவற்றுக்கும் மேலாக, உலகத்தில் யாருக்குக் கோவிலுக்குள் சிலை வைத்து வணங்குகிறார்கள்? அறுபத்து மூன்று நாயன்மார்களுக்குச் சிலை இருக்கின்றது. தேவாரம் பாடியவர்களைக் கோவிலுக்குள் சிலை வைத்து வணங்குகின்றோம். இதைவிட இன்னும் என்ன உயர்வு வேண்டும்! சமாதியில் பூசை

செய்யவில்லை. மும்மூர்த்திகளுக்கு அதுதான் செய்கிறார்கள். நாம் கோவிலுக்குள் சிலை வைத்தோம். எந்தச் சிவன் கோவிலாவது நாயன்மார்களின் சிலை இல்லாமல் இருக்கின்றதா? பாட்டெழுதுகின்றவர்களுக்கு என்ன இடம் பார்த்தீர்களா? நடிக்கிறவனுக்கு நடராசன் என்று கோவில் வைத்திருக்கின்றோம். அவன் நடனம் ஆடிக்கொண்டே இருக்கின்றான். எந்த நாட்டில் இந்தச் சிறப்பு இருக்கிறது?

தியாகராசருக்குச் சமாதியில்தான் ஆண்டுதோறும் பூசை செய்வார்கள். நாம் அப்படி இல்லை. கபாலீசுவரர் கோவிலில் எழுந்தருளப் பண்ணியிருக்கின்றோம். தேவாரம் பக்தியோடு இயைந்தது. பக்தியை விட்டுத் தேவாரத்தை அனுபவிப்பது என்றால் அது சீனியை விட்டு விட்டு லட்டு சாப்பிடுவது போன்றதாகும். உடலும் உயிரும் போன்றது தேவாரமும் பக்தியும். உயிரற்ற மனிதனும் பக்தியற்ற தேவாரமும் ஒன்றுதான். பக்தியும் சொல்லும் இசையும் சேர்ந்து ஒன்றாக அமைந்திருப்பது தேவாரம்.

நாமெல்லாம் கோவிலில் சென்று அவர்களை வணங்க மாட்டோம் என்பதற்காக, அவர்களே ஆண்டுக்கு ஒருமுறை வெளியில் வருகின்றார்கள். அதுதான் அறுபத்து மூவர் விழா. கையில் திருவருளை வைத்துக்கொண்டு இறைவன் வேட்டை நாயாகத் துரத்திக் கொண்டு வருகின்றான். என்று ஓர் ஆங்கிலக்கவி பாடினான். The Honour of Heaven என்பதாக! அதுபோன்று அறுபத்து மூவரும் அவர்களாகவே புறப்பட்டு வருகின்றார்கள்.

தேவாரத்தைச் சிவப்புப் பட்டிலே போர்த்து மூடிவைத்துச் சாம்பராணி காட்டுகின்றான். இதற்காகவா தேவாரம் எழுதினார்கள்? பூசைக்குரிய பாட்டு அது. அதனால் அதை வைத்துப் பூசை பண்ணுவதா? வணக்கத்துக்குரிய ஒருவன் இருக்கிறான் என்றால் அவனைப் பின்பற்ற வேண்டும். அதுபோன்று பாட்டு எதற்காக எழுதி வைத்திருக்கிறார்கள் என்றால் நாமெல்லாம் பாட வேண்டும் என்பதற்காக எழுதி வைத்திருக்கிறார்கள். ஒரு கவிஞனுக்குச் செய்யும் பெரிய துரோகம் அவன் கவிதையைப் படிக்காததுதான். தேவாரத்துக்கு நாம் செய்யும் துரோகம் தேவாரத்தைப் பாடாமல், அதற்குப் பூசை செய்வதுதான். மக்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து பாடவேண்டும் என்பதற்காக எழுதப்பெற்றது தேவாரம். கோஷ்டிகானமாக ஏற்பட்டது. பல்லியங்கள் ஒலிக்கப் பல குரலும் ஒரே

குரலாக ஒலிக்கக் கூடிய இசையாகத் தேவாரம் அமைந்தது. 'வாரம்' என்ற சொல்லுக்கே அதுதான் தேவாரம்.

இவ்வளவு பண்புள்ள தேவாரத்துக்குள்ளே சங்கீத முறையில் என்ன சிறப்பு இருக்கிறது என்று பார்ப்போம். நம்முடைய சேவல் இருக்கின்றதே அது எந்தச் சேவலையும் வெற்றி கொள்ளும்.

தேவாரப் பண்களின் இசை நுட்பம் எப்படி இருக்கின்றது என்றால், யாப்பு அமைதியோடு இரண்டறக் கலந்தது. அதாவது தேவாரப் பாடலின் இசைவடிவம், அந்தப் பாடலின் சொல் வடிவத்தோடு இரண்டறக் கலந்தது. ஊடும் பாவுமாக நெய்யப் பெற்ற ஆடையைப் போன்று, இந்த யாப்பு அமைந்துள்ளது. இரண்டில் ஒன்றை உருவிவிட்டால் மற்றொன்றும் தொய்வுபெற்றுவிடும்.

இதை மேலும் ஒரு சான்று கொண்டு விளக்கலாம். ஒரு பெரிய இராகத்தின் ஆரம்ப ஒலி ச என்று இக்காலத்தில் வழங்குகிற சட்சத்தில் நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட ஒலி, ஒரு குறிப்பிட்ட குறியீட்டு எழுத்தில் நிற்கிறது. 'ச' வுக்குள்ளேயே ஒலி இருக்கிறது! அது ஒரு குறியீடு. அவ்வளவுதான். அந்த ஒரு குறியீட்டை ஆதார ஒலியாகக் கொண்டு ஓர் ஒலிக் கிரமத்தில் வரிசைப்படுத்தி, அந்த இராகத்தின் உருவத்தை அறுதி செய்கிறோம். தேவாரத்தில் நேரசை, நிரையசை என்ற அசைக்குள்ளே ஒலி இருக்கின்றது. தேவாரப் பாடலின் ஒவ்வொரு பாடலின் அடியையும் நேர்நிலை என்று அலகிட்டுப் பார்த்தோமானால், இந்த அசைகளின் வரிசையே, அந்தப் பண்ணுக்குரிய சுரவரிசையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

சரிகமபதநி என்று சுரக்குறிப்பு எழுதுவது போல நேர் நிரை நிரை நேர் என்று எழுதிக்கொண்டு போனால் அதிலே பண்ணின் ஒருவகையான கொட்டேஷன்கூட இருக்கும். இனி, இந்தச் சுரவரிசையை மேலும் ஆராய்ந்தோமானால், அந்தப் பண்ணுக்குரிய சாயல் எதில் பிறக்கிறது என்பதைப் பார்க்கலாம். அசைகள் புணர்ந்து சீராகி, சீர்கள் புணர்ந்து தளையாகும்போது தாளத்தோடு புணர்கின்ற பண் உதிக்கிறது. இன்னும் இந்த ஒலிச்சட்டத்தை ஆராய்ந்தால் ஒரு தேவாரப் பண், அந்தத் தேவாரப் பாடலின் தளையிலே நின்று கண் இமைகளைத் திறக்கின்றது.

இவ்வாறு ஒலியும் எழுத்தும், இசையும் மொழியும், சதிபதிகளாக இணைந்து ஒலி அறமாகிய ஓர் இல்லறத்தை

நடத்துகின்றன. காதல் ஒருமித்து, இறைவனின் திருவடிகளிலே ஆதரவுறும்போது தேவாரப் பண்ணியல் பிறக்கிறது. இசையும் மொழியும் கலந்து ஈன்ற குழந்தைகளாகிய தேவாரப் பாடல்களின் சிறப்பு நுட்பம் இது.

எனவேதான் தொல்காப்பியர் குறிப்பிடுகிற தேவபாணி வகையிலே கொச்சக ஒருபோகு என்னும் இலக்கணம் அப்படியே பொருந்துகிற பல பாடல்களைத் தேவாரத்திலே பார்க்கலாம். அதேபோ திருக்குறுந்தொகை, தரவு கொச்சகம், திருநேரிசை போன்ற அற்புதமான வடிவங்களையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அவனுடைய விருத்தங்களையும் வழிநடத்தக் கூடிய வல்லமை பெற்ற பல விருத்த இனங்களாகிய ஒலிவடிவங்களையும், அருணகிரிநாதருடைய சந்தத்திற்கு வித்திட்ட பல வண்ண வண்ணத் தாள இசை வடிவங்களையும் தேவாரத் திருமுறைகளிலே நாம் பார்க்கிறோம்.

பல திருப்புகழ்ப் பாடல்களுக்கு இசை அப்படியே இருக்கிறது. அதைப் பாடியும் காட்டலாம்.

தண்ணீருக்கு வடிவம் கிடையாது. எந்தப் பாத்திரத்தில் ஊற்றுகின்றோமோ அந்தப் பாத்திரத்தின் வடிவத்தைத் தானும் எடுத்துக்கொள்கிறது தண்ணீர். உருண்டையான பாத்திரத்தில் ஊற்றினால் உருண்டு அமர்ந்து கொள்கிறது. தட்டையான பாத்திரத்தில் ஊற்றினால் தட்டையாக இருநது கொள்கிறது. அதுபோலப் பாடல்களைப் பெய்து வைத்துள்ள பண்ணின் வடிவமும் அந்தந்தப் பாடல்களின் யாப்பு வடிவத்தைத் தானும் எடுத்துக் கொள்கிறது. அந்தந்தத் திருமுறைப் பாடல்களின் தளையைக் கொள்கலமாகக் கொண்டு இசை என்னும் ஒலிவடிவம் தாங்கி இயங்கத் தொடங்குகிறது. இதுவே தேவாரப் பாடல்களின் இசை வடிவத்தில் உள்ள அடிப்படையான உண்மையாகும்.

தேவாரப் பாடல்களின் அடிகளிலே எழுத்துக்களின் எண்ணிக்கைக்கூட ஒரு சட்டத்துக்குள் அடங்கியுள்ளது. சான்றாகத் திருக்குறுந்தொகை என்னும் வடிவத்தைப் பார்த்தால், முதற்சீர் தேமாவாக இருந்தால், அந்த அடியில் பதினோரு எழுத்துகள்தான் இருக்கும். புளிமாவாக இருந்தால், எழுத்துக்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகத்தான் இருக்கும்.

இதுபோலவே தளையை ஆராய்ந்தால் முதற் தளை நேரொன்றாசிரியத் தளை, இரண்டும் மூன்றும் வெண்டளை என்று அமைந்திருப்பதைக் பார்க்கலாம் நான் வற்புறுத்திக் கூறுவது என்னவென்றால், தேவாரப் பண்களின் இசைக்கு அடிப்படை, சரிகமபதநி என்ற சுரங்களாகிய ஒலி நிலைகளைப் போலவே அந்தந்தந்தத் தேவாரத்தின் எழுத்துகளும் சொற்களும் சீர்களும் தளைகளும் ஒலியை வாங்கிநிற்கும் கொள்கலங்களாகப் பிறப்பெடுத்திருக்கின்றன. ஆகவே, பண்களின் இசைநுட்பத்திற்கு அடிப்படை அந்தத் தேவாரப் பாடல்களின் எழுத்துகளும் அவற்றின் எண்ணிக்கையும், அவை புணர்த்துக் கொண்டுள்ள தளைகளுமாகும். எனவேதான் காய்ச்சீர் பெற்று வந்த தரவு கொச்சகக் கலிப்பாவின் பண் அமைதி, தனித்தன்மையோடு திருமுறையிலே நிகழ்வதைப் பார்க்கிறோம்.

இந்தத் தனித்தன்மை திருமுறைகளிற் போலவே திவ்வியப் பிரபந்தத்திலும் காணப்படுகிறது. வழிபாடு இயற்றுகிறவர்கள் நாள்தோறும் ஓதிவருகிற திருமுருகாற்றுப்படை, விநாயகர் அகவல் போன்ற பனுவல்களிலும் தனிப்பண்பு ஒளிவீசக் காண்கிறோம். சித்தர்கள் கண்ட ஞான ஒளி, கடவுள் ஒலி இதுவே.

இந்த ஒளிதான் செய்யுளை மந்திரமாக்குகிறது. இந்த ஒளிதான் பாடல்களுக்கு மந்திர ஆற்றலை நல்குகிறது.

மந்திர ஆற்றல் என்பது இரண்டு வகைப்படும்.

முதலாவது வகை : மந்திரங்கள் என்று அழைக்கப்பெறுகிற தனியான எழுத்துச் சேர்க்கைகள், சொல் வடிவங்கள், மொழி யிணைப்புகள்.

இரண்டாவது வகை: பாடல்களில் உள்ள யாப்பும் இசையும் தருகிற மந்திர ஆற்றல்.

முதலாவது வகையான மந்திரங்கள், உலகின் எல்லா நாடுகளிலும் அந்தந்த மக்கள் பேசுகிற எல்லா மொழிகளிலும் அந்தந்த நாட்டு முனிவர்களாலும் சித்தர்களாலும் அவரவர்களின் மரபுகள் வழிமுறைகளுக்கு ஏற்பப் பற்பல சட்ட திட்டங்களோடு, 'உபதேசம்' என்ற இரகசிய மறைமொழிகளாக, நேருக்கு நேராய் அறிவுறுத்தப்பெற்றுப் பல நோக்கங்களுடனும் பயன்களுடனும்

பயின்று வருகின்றன. எகிப்துக்கு நான் சென்றிருந்த போது, இவ்வகையான பல மந்திர எழுத்துக்களையும், சக்கரங்களையும் எகிப்திய மொழியிலும், ஹிரோகிளிபித் என்ற அந்நாட்டுப் பழைய நெடுங்கணக்கிலும் பார்த்தேன். இவை போலவே, ஒவ்வொரு நாட்டிலும் அவரவர்கள் மொழியில், அவரவர்களின் தொன்மை வழிப்படி மந்திரங்கள் உண்டு. இவற்றிலே மொழி வேற்றுமையோ உயர்வு தாழ்வோ கிடையாது. எல்லா நாட்டிலும் எல்லா மக்களுக்கும் எல்லா மொழிகளிலும் அவரவருக்குரிய மந்திரங்கள் உண்டு.

எல்லா மொழிகளிலும் மந்திரங்கள் இருப்பது போலவே, தமிழர்களுக்குரிய தமிழ் மந்திரங்களுக்கும் தொல்காப்பியர் போன்ற இலக்கண ஞானிகளுமே இலக்கணம் வகுத்துள்ளார்கள். இந்தத் தமிழ் மந்திரங்களையும் சட்டதிட்டங்களையும் பற்றித் தமிழ்ச் சித்தர்களின் நூல்களில் மிக விரிவாகக் காண்கிறோம். அன்றியும் தமிழ் நெடுங்கணக்கின் வடிவமே மந்திர ஆற்றல் நிரம்பியது என்பதைத் தமிழ்ப்பெரும் பண்டிதரும் முதுபெரும் பேராசிரியருமாக விளங்கிய மாணிக்க நாயகர் போன்றோர் அறுதியிட்டு விளக்கியிருக்கிறார்கள். "தமிழ் மறை விளக்கம்" என்ற அரிய நூலிலே இதன் பரப்பை நன்கு காணலாம். அந்த நூலிலிருந்து இரண்டு பெரிய உண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

ஒன்று :- இயற்கையின் மூலவடிவமான கருவின் உருவமே. தமிழ்மொழியின் ஓகாரம் என்ற வரிவடிவத்தின் உருவமாகும். அதாவது பிரணவத்தின் உருவமாகும். இந்த வடிவந்தான் அபயஹஸ்த, வரஹஸ்த மூர்த்தமாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த வடிவத்திலிருந்தே தமிழ்மொழியின் மற்ற வரிவடிவங்கள் எழுந்திருக்கின்றன. இவையும் தத்தமது மந்திரப் பொருளைத் தத்தம் வரிவடிவங்களிலேயே உட்கொண்டு நிற்கின்றன.

இரண்டாவது உண்மை :- தமிழ் எழுத்துக்களின் மந்திரப் பொருளும் அந்த எழுத்துக்களாலாகிய சொற்களின் மொழிப் பொருளும் அதாவது கருத்தும், ஒன்றாகவே இருப்பது நம் தமிழ்மொழியின் கடவுள் தன்மைக்கு ஆன்மச் சான்றாகத் திகழ்கிறது. இந்த மந்திர ஆற்றலோடு தானே தமிழ்மொழியானது தன் நெடுங்கணக்காகிய உயிர்களிலும் உடல்களிலும் தனிநிலையிலும் இயங்குகிறது.

இது தமிழ் எழுத்துக்கள் ஒலிதரும் இயல்பிலேயே பெற்றுள்ள மந்திர ஆற்றல் ஆகும். இனி மந்திர ஆற்றல் பெற்ற பாடல்களுக்கு வருவோம்.

மந்திர ஆற்றல் நிரம்பிய பாடல்கள், மந்திரங்களைப் போலவே எல்லா மொழிகளிலும் உலகின் எல்லா நாடுகளிலும் அவரவர் தாய்ப்பாலோடு உண்டு உரம்பெற்று வளர்ந்து வந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட மொழிக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கோ என்று இல்லாமல், உலகின் எல்லாப் பகுதிகளிலும், இசையோடு கலந்த மந்திரப் பாடல்களுமே செய்யுள்களும் வழங்கி வருகின்றன. உலகின் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்து ஆராய்ந்தவர்களுக்கு இவ்வுண்மை நன்கு தெரியும்.

இவ்வண்ணமான பாடல்கள் இரண்டு வகைப்படும்.

(1) ஒன்று, மந்திரங்களையே, மந்திரச் சொற்களையே பாடல்களுக்குள் பிணைத்து யாத்துச் செய்யப்பட்ட பாடல்கள்.

(2) மற்றொன்று, தமது யாப்பமைதியாலும், வைப்பு முறையாலும் மந்திர ஆற்றலோடு இயங்கும் பாடல்கள்.

இந்த இருவகையான பாடல்களுமே, "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி, தவ ஆற்றல் பொருந்திய சித்தர்களால், பெரியோர்களால், தவநிலையிலே கிளக்கப்பெற்ற மொழிகளாம்.

மந்திரங்கள், எந்த மொழியிலுமே உச்சரிப்பதற்காகவோ, அல்லது மானச வழிபாட்டுக்காகவோ ஏற்படுத்தப்பட்டன. இந்த மந்திரங்களைத் தமது உடலகத்தே உட்கொண்டு நிற்கிற பாடல்கள், இந்த உச்சரிப்பினால் அல்லது சிந்தனையினால் ஆற்றல் பெறுவதோடு, அந்த உச்சரிப்பை மடக்கி மடக்கி யாத்துப் பாடலாகப் புனைந்துள்ள யாப்பு அமைதியின் மூலமும் வலிமை பெறுகின்றன. இசைப் பாடல்களில் இவற்றைப் பாடும்போது அதிக இசைச்சிக்கல் இன்றி, நேரான பண்ணமைதியோடு ஓதுவதே நமது தமிழ்மரபு ஆகும். சான்றாகத் திருமூலர் 'சிவ சிவ' என்கிற மந்திரத்தைப் பற்றிச் சொல்லுகிற ஒரு திருமந்திரப் பாடலைப் பாருங்கள்:-

சிவ சிவ என்கிலர்
தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத்
தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத்
தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச்
சிவகதி தானே!

இந்தத் திருமந்திரப் பாட்டில், சொல்லின் வைப்பு முறையினால் உண்டாகிற ஒரு தனியான மந்திரச் சிறப்பைச் சைவ மரபிலே உள்ள பெரியோர்கள் நுட்பமாக விளக்கிக் கூறக் கேட்டிருக்கிறேன். அதாவது இந்தத் திருமந்திரத்தில் 'சிவ' என்ற பரம்பொருளின் ஒலிவடிவம் ஒன்பது முறை வருகிறது. இதை வைத்து நம் பெரியவர்கள் என்ன சொன்னார்கள் என்றால்,

"இத்திருப் பாட்டை ஈராறுமுறை ஏத்திவரின்
ஒத்தஉரு நூற்றெட்டாம் ஓர்"

என்று கூறினார்கள். திருமுறை பன்னிரண்டின் நினைவோடு, இத் திருமந்திரத்தை நாள்தோறும் 12 முறை ( 12 x 9 = 108) ஓதுவது என்பது ஒரு வழிபாட்டு முறை என்றார்கள். நூற்றெட்டு என்று மந்திரக்கணக்கு வரும்.

சுத்தாங்கம் என்ற இசை முறைப்படி இதை ஓதுவதோ அல்லது எளிய முறையிலே மனனம் செய்து பாடுவதோ இந்தத் திருமந்திர அமைப்பிற்குச் சாலுமாம்.

இனி, இதே வகையான மந்திரச்சொல் கொண்ட இன்னொரு பாடலைப் பார்ப்போம். இது யாப்பு முறையிலே திருமந்திரத்தினின்று வேறுபட்டது. இது திருக்குறுந்தொகை என்ற வகை. அதோடு 'சிவ சிவ' என்ற மந்திரத்தின் விரிவாகிய நமசிவாயத்தை வழுத்துகிறது. அப்பர் சுவாமிகளின் திருக்குறுந்தொகை :-

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே!

இனி, இன்னொரு வகையான மந்திரப் பாடலைப் பார்ப்போம். இது திருவிருத்தம் என்ற யாப்பமைதியிலே சேர்ந்தது. வடமொழி வேதங்களை ஓதுகிற முறையிலே 'கனம்' என்றும், 'ஜடை' என்றும் சட்டதிட்டங்கள் இருப்பது போலவே, தமிழிலும் சுத்தாங்கம் என்றும், கீதாங்கம் என்றும் இரண்டு முறைகளைக் கடைப்பிடிப்பதுண்டு. அந்தச் சட்டப்படி, முதலில் நாம் பார்க்க வேண்டியது சுத்தாங்கமாகப் பாடப்பெறுகிற திருவிருத்தம். இது ரக்ஷாபந்தனம் அல்லது காப்பீடு என்கிற மந்திரச் சடங்கை நினைவூட்டுகிற முறையிலே, அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்கும் ஒரு கடவுட் காப்பீடாகும். அப்பர் சுவாமிகள் அருளிய பாடல்:-

வெம்மை நமன்தமர் மிக்குவிரவி விழுப்பதன்முன்
இம்மை யுன்தாள் என்றன்நெஞ்சத் தெழுதிவை, ஈங்கிதழில்
அம்மை யடியேற்கு அருளுதி என்பதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்தே!

உண்மையான சிவதீக்ஷை என்பது இதுதான். அவன் திருவடியை நம் நெஞ்சத்து எழுதி வைப்பது. இதைச் சிவபெருமானே வந்து செய்ய வேண்டும்; இந்தப் பரம சிவதீக்ஷையைப் பரம்பொருளே எழுந்தருளிச் செய்யவேண்டும் என்று கடவுட் காப்பீடாக, விண்ணப்பம் செய்கிறது இந்தத் திருவிருத்தம்.

சுத்தாங்கமாக அமைந்த பாடல்களிலே தெய்வ அருளை நாடுகிற இத்தகைய மந்திரப் பாடல்களைப் போலவே, எண்ணியது முடிக்கும் நோக்கத்தில் அறம் பாடுவதும், திறம் பாடுவதும், வாழ்த்துவதும் ஆகிய மந்திரப் பாடல்களும் தமிழில் உண்டு. நக்கீரர் பாடியனவாக வழங்கிவரும் அங்கத வெண்பாக்கள் பலருக்கும் தெரிந்திருக்கும். தொல்காப்பிய உரைக்கு மேற்கோளாக வரும் இந்த அங்கத வெண்பாப் பாடல்கள், வீழ்த்தும் ஆற்றலும், வாழ்த்தும் ஆற்றலும் கொண்டு செயல்புரிந்த வரலாற்றை இங்கே நினைவூட்டுகிறேன்.

இனி, கீதாங்கம் என்ற இசைத்துறைக்கு வருவோம். இந்தத் துறையிலே அமைந்துள்ள இசைப்பாடல்கள், தமது யாப்பு முறையினாலும் இசை அமைப்பினாலும் மின்சார ஆற்றல் நிரம்பிய மின்கலனைப் போல, ஓர் இறைமாண்பு பெற்றுத் திகழ்கின்றன. இத்தகைய பாடல்கள், மூன்று முக்கியமான சட்டங்களில் அடங்கும்.

ஒன்று, எழுத்துக்களைத் தேர்ந்தமைக்கும் முறையில், குதலைப்பொருத்தம், காளைப் பொருத்தம், அரசப் பொருத்தம், பிணிப்பொருத்தம், அழிவுப்பொருத்தம் என்ற ஐவகை ஒலிப்பொருத்தங்களையும் கடைப்பிடித்து மந்திர ஓசை பெறுவன. மந்திர ஆற்றலில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு இந்த உண்மையை இங்கே நினைவுபடுத்த வேண்டும் என்று கருதி, இதைக் குறிப்பிடுகிறேன். தவிரவும், நமது ஞானியரின் பாடல்களில் எல்லாம் எழுத்துப் பொருத்தம் அமைந்த 'உலகெலாம்' என்பது போன்ற மங்கலச் சொல் இறைவன் திருவருளால் தரப்பட்டது என்று படிக்கிறோம் அல்லவா?

ஆகவே, மந்திர ஆற்றலைப் பெறுகிற பாடல்களுக்கு முதலாவது எழுத்துப் பொருத்தம் முக்கியமாகும். இந்தப் பொருத்தம் தானே எண்ணியும், தான் கருதாமல் இறைவன் திருவருளால் அமைவதுண்டு.

இரண்டாவது சட்டம் என்னவென்றால் அடிகளின் நீளம், அமைப்பு, இவற்றை இயக்குகிற பண்களின் அமைதி ஆகியவற்றிற்கும் வரம்பு கட்டி வைத்திருக்கின்றார்கள்.

மூன்றாவது, எந்தப் பாடலை எந்த நேரத்தில் எந்த முன்னிலையில் எந்தச் சடங்கின்போது பாடவேண்டும் என்ற சட்டமாகும்.

இந்த மூன்று சட்டங்களுக்கும் உட்பட்ட பாடல்களைப் பெரும்பாலும் 'வாரம்' என்ற பாடல் இனத்திலே பார்க்கிறோம்.

"தோரிய மடந்தையர் வாரம் இசைப்ப"

என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறுகிற இந்த வாரப் பாடல்கள், தெய்வத்தோடு உறவாடித் தெய்வத்துக்கும் மனிதனுக்கும் இடையே ஆன்மப்பாலம் அமைக்கின்றன! 'வாரம்' என்பது பேரின்பம் பயப்பது என்ற உட்கிடையிலும், வழிபாடு என்ற கருத்திலும், கூட்டமாகப் பாடுவது என்ற பொருளிலும் வருவதாகும்.

இத்தகைய வாரப் பாடல்கள், நாடகத் தமிழில், கவுத்துவம், காப்பு, சீர்வாழ்த்து, நாந்தி என்ற பல பெயர்களில் வழங்கி வருகின்றன. பிற்காலத்திலுங்கூடக் கங்கமுத்து நட்டுவனார், ஆழ்வாரப்ப பிள்ளை

போன்ற பல இசைப்புலவர்கள், இத்தகைய பாடல்கள் பலவற்றைத் தொன்மை நெறிப்படியே புனைந்துள்ளார்கள். தொல்காப்பியர் கூறுகிற பண்ணத்தி என்ற பிரிவிலே, இந்த நாந்திப் பாடல்கள் அடங்கும். இப்பாடல்கள் ஒரு நிகழ்ச்சி தொடங்கும்போதும், முடியும்போதும் பாடப்பெறும்! நாடகம் அல்லது நாட்டியமாகிற கூத்து தொடங்குவதற்கு முன்பு, மழை புயல் முதலிய இயற்கையின் இன்னல்கள் நேராதவாறு, 'திக்பந்தனம்' என்கிற 'திசைக்கூட்டு' அமைப்பதற்காக, (அக்காலத்தில் பெரும்பாலும் திறந்தவெளி அரங்குகள்) இந்த மந்திரப் பாடல்கள் பாடப்பட்டன என்று அறிகிறோம். பின்னர், நாடகம் அல்லது கூத்து முடியும்போது, பலசுருதி சொல்வதாக, நாந்திப் பாடல்களிலே, திருக்கடைகாப்புக் கூறப்பட்டது. இவை யாவும் 'வாரம்' என்ற இசைப்பா வகையில் சேரும்.

இனி, இந்த வாரங்களுக்கெல்லாம் கொடுமுடியாகிய சிகரம் போன்றவை தே-வாரங்களாம். இவற்றின் வேதச்சிறப்பும், மந்திர ஆற்றலும் பற்றி எத்தனையோ சான்றுகளோடு சாமிநாத பண்டிதர் போன்ற பேரறிஞர்கள், பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார்கள். இந்தப் பாடல்கள் எல்லாம் ஆளுடைய பிள்ளையார் அருளியதுபோல "எனதுரை தனதுரை"யாக இறைவன் ஏற்றுக்கொண்ட பதிவாக்காகும் என்பதும் பசுவாக்கு இல்லை என்பதும் நாம் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதோடு 'சிக்ஷா' என்று வேதத்துக்கு அங்கமுறை இருப்பது போல, இந்தப் பாடல்களும் 'கட்டளை' என்று சிக்ஷிக்கப்பட்ட சந்த முறையிலே (சிக்ஷை - கட்டளை) நடப்பனவாம். முதலாவது சான்று, அப்பர் சுவாமிகளுக்குச் சூலைநோய் தீர்த்த மந்திரப் பாட்டு.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரொடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்ட னத்துறை யம்மானே!

கொல்லிப் பண்ணிலே அமைந்த இந்த மந்திரப் பாடல், ஒரு நோய்க் கொல்லியான மந்திரப் பாடல் என்பது, சைவ சித்தாந்திகளின் வழிபாட்டு நம்பிக்கை மரபு!

இனி, விண்ணப்ப மந்திரமாகிய ஒரு பாடல். இது வடமொழியில் 'சாகை' யின் ஒரு பேதமாகிய 'ப்ராஹ்மனம்' என்னும் ஆதேசம் போன்றது. அதாவது - ஏவுகின்ற காரியங்களை, ஆணையிடுகின்ற செயல்களை, அப்படியே ஏவல் விளைவாக விண்ணப்பமாக விடுக்கிற பாடல்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதம், உங்களுக்கெல்லாம் தெரியும். அவருடைய ஏவலாகிய ஒரு தெய்வக் கோரிக்கையை இப்போது பார்ப்போம்.

நீள நினைந்தடி யேன்உமை
நித்தலும் கைதொழுவேன்
வாளன கன்மட வாள்அவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெரு மான்குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெரு மான்அவை
அட்டித்த ரப்பணியே!

சுத்தாங்கம் என்ற முறையிலே அடங்குமாயினும், கீதாங்கத்தின் ஒரு பிரிவாகவும், முன்முகப்பாகவும் இன்றைய இசையுலகில் ஆளத்தி என்னும் ஆலாபனைமுறை பயின்று வருகிறது. இந்த ஆளத்தி முறையிலே வியப்பினால் அருள்வேண்டல் என்ற வழிபாட்டு முறைப்படி, அப்பர் சுவாமிகளுடைய திருநேரிசை அமைந்திருக்கிறது. இந்த நேரிசை திருவாவடுதுறைப் பதிகம்:

மாயிரு ஞாலம் எல்லாம்
மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே!

பண்ணுக்கு முக்கியம் கொடுத்துக் கீநாங்கமாகவே பாடுகிற மந்திரப் பாடல்கள், தேவாரத்தில் மிகப் பலவாம். இவற்றில் ஒன்று திருநீற்றுப் பதிகம். பாண்டிய மன்னின் வெப்புநோயைத் தீர்த்தருளிய இந்த மந்திரப் பாடல், நமது பிறவிப் பிணியாகிய நோயையே தீர்க்கவல்ல மந்திரம் என்று நமது மரபு கூறும் அந்தப் பாடல் :

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவால வாயான் திருநீறே!

மந்திரத்தில் மாங்காய் விழுமா என்று கேட்பார்கள். மந்திரத்தில் மாங்காய் என்ன, மழையே வீழும், வானமாரியே பொழியும் என்கிறது நமது தேவாரம்.

தருமபுர ஆதின வரலாற்றிலே பதினைந்தாவது குருமகா சந்நிதானம் அவர்கள், சாரங்கியிலே மேகராகக் குறிஞ்சியை வாசிப்பித்து மழை வரவழைத்துப் பஞ்சம் போக்கினார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. பண்ணுக்குள்ள மந்திர ஆற்றல் அது! அந்தப் பண்ணிலே அமைந்த திருப்பராய்த்துறைப் பதிகம் மிகவும் புகழ்பெற்றது. நான்கு, மூன்று, நான்கு, மூன்று என்று சீர்கள் அமைந்த மேகராகக் குறிஞ்சிக் கட்டளை இது:-

| | |
|---|---|
| நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை | (நான்குசீர்) |
| கூறு சேர்வதோர் கோலமாய்ப் | (மூன்றுசீர்) |
| பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை | (நான்குசீர்) |
| ஆறு சேர்சடை அண்ணலே! | (மூன்றுசீர்) |

இனி, சொல்லின் வல்லமையும் பண்ணின் ஆற்றலும் ஆகிய இரண்டினோடு தாள இயலின் வேகமும் இணையும்போது, மந்திர ஆற்றல் எப்படி முடுகுகிறது என்பதற்கு ஓர் சான்று, திருஞான சம்பந்தப் பெருமானுடைய மந்திரப் பாடல்:-

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு
மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை
தன்னை வினவில்
ஏனமிள மானினொடு கிள்ளைதினை கொள்ளஎழி
லார்கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி விலகுகா
ளத்திமலையே!

தாளவேகத்தினாலும், அழுத்தத்தினாலும் பிறக்கும் இசையானது, மந்திரச் சொல்லோடு சேர்ந்து ஒரு ஆன்ம ஆற்றலைப் பெறுகிறது என்பதற்கு இன்னொரு சான்று, திருச்சிறுகுடியில் அருளிய பதிகம். திருமுக்கால் என்ற கட்டளையில் அமைந்த ஓர் அரிய யாப்பு இது.

பதிமலி மதிளணி சிறுகுடி மேவிய
படமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே!

எழுத்து, சொல், சீர் இவற்றைத் தேர்ந்தெடுத்து யாக்கிற யாப்புமுறை, இசை, தாளம் இவையாகிய பல அங்கங்களிலும் மந்திர ஆற்றலைத் தேக்கி, நம் முன்னோர்கள், மண்ணில் நல்ல வண்ணம் நாம் அனைவரும் வாழ்வதற்கும், நம் அல்லல்கள் அகல்வதற்கும் பல தமிழ்ப் பாடல்களை நாளும் ஓதற்குரிய மந்திரங்களாக நமக்கு வழங்கியுள்ளார்கள். இவற்றில் மிக முக்கியமான ஒருபதிகம். இந்த நாயன்மார்கள் வாழ்வில் பயன் தந்த வரலாறு போலவே, இன்றளவும் தமிழகத்திலே வழிவழியாகப் பாடப்பெற்றுப் பலருக்கும் பயன் நல்குகிற ஒரு பதிகம் . சில ஆண்டுகளுக்கு முன்பு நவக்கிரகங்களில் எட்டுக் கோள்கள் ஒன்றாகக் கூடியபோது, தமிழ் மக்கள் எல்லாரும் ஓதவேண்டும் என்று சொல்லிப் பல பெரியோர்கள் நாடெங்கும் கோரிக்கை விடுத்த மந்திரப்பதிகம் இது.

*வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்*
*உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழம்வெள்ளி*
*சனிபாம் பிரண்டும் உடனே*
*ஆசறு நல்ல நல்ல அவைநல் லநல்ல*
*அடியா ரவர்க்கு மிகவே!*

இவ்வாறே திவ்வியப் பிரபந்தம்.

❖❖❖

# பதச் சோறு

சித்தர்களிலே எத்தனை வகை உண்டு என்று பலர் கேட்கிறார்கள்.

சித்தர்கள் எத்தனை பேரோ அத்தனை வகைகள்!

ஒவ்வொரு சித்தரும் ஒவ்வொரு வகை! ஒரு சித்தரைப் போல இன்னொரு சித்தர் இருப்பதில்லை. செயல், பேச்சு, பாட்டு, பழக்கம், உறவுமுறை எல்லாவற்றிலுமே ஒவ்வொரு சித்தருக்கும் ஒரு தனிப்பண்பு இருக்கிறது! ஒவ்வொருவரும் ஒரொருபோக்கு! ஓரோரு வகை!

அப்படியானால் சித்தர்கள் எத்தனை பேர் என்ற கேள்வி எழுகிறது.

"எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா!" என்ற பாரதியாருடைய பாடலிலே வருகிறது அல்லவா? அவ்வாறே சித்தர்கள் பலர் ஆவர். பலர், மிகப்பலர்

எல்லா நாட்டிலும், எல்லா மொழிகளிலும், காடுகளிலும், மலைகளிலும், ஊரின் புறத்திலும், ஊரகத்திலும், எல்லாத் திசைகளிலும் சித்தர் உண்டு. தமிழகத்துக்கு மட்டுமே உரியவர்களில்லை இந்தச் சித்தர்கள்! உலகெங்கிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

ஆம். தமிழ்நாட்டிலே இன்றைக்கும் பல சித்தர்கள் இருக்கிறார்கள். இதற்கு முன்பும் பலர் இருந்தார்கள். அவர்களிலே நம்முடைய கண்ணுக்குத் தெரிந்தவர், தெரியக்கூடியவர் பலர். நம் கண்ணுக்குத் தெரியாதவரும், தெரிய முடியாதவரும் பலர்! இவ்வாறு எண்ணற்ற சித்தர்கள் இருந்துவந்த போதிலும் அவர்களுடைய பயிற்சிமுறை என்பது ஒரே தன்மைத்து என்பது ஒரு சுவையான உண்மை.

இந்த மகான்களிலே பாடல் பாடுகிறவர்களும் உண்டு; மௌனமாக இருப்பவர்களும் உண்டு! மனித சமுதாயத்திலே தோய்ந்தும் தோயாது வளைய வருகிறவர்களும் உண்டு.

இவர்கள் அத்தனை பேருமே மனித ஆற்றலைக் கடந்த பல வல்லமைகள் நிரம்பிய மகான்கள்! எல்லாருடைய ஞானத்திலும் ஒற்றுமை நிலவுகிறது!

தமிழ்மொழியிலே பற்பல பாடல்கள் பாடியருளிய சித்தர்களையே இன்றைய இலக்கிய உலகம் நன்கு அறியும். இவர்களிலும் தாங்கள் பாடிய பாடல்களில் முழுதையுமோ அல்லது சில பகுதிகளையோ ஏட்டிலே எழுதாத அல்லது எழுதுவிக்காத பல சித்தர்களும் உண்டு.

ஆகவே, சித்தர் பாடல்கள் என்று சொல்லும்போது ஏட்டிலே திரட்டி வைக்கப்பட்ட பாடல்களின் ஆசிரியர்களையே, மட்டுமே குறிப்பிடுகிறோம்.

இத்தகைய சித்தர்களிலே பட்டினத்தார் போன்ற சித்தர்களின் பாடல்கள், திருமுறை என்னும் தமிழ் வேதங்களிலே சேர்க்கப்பட்டு, அந்தத் திருமுறை நூல்களின் தொகுப்புக்களிலேயே உறுப்பாகத் திகழ்கின்றன. திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், சேரமான் பெருமாள் போன்றோரும் நம்முடைய திருமுறைகளிலே கோயில் கொண்டுள்ளனர். திருமூலர் என்னும் சித்தர் பெருமான் அருளிய திருமந்திரம் என்னும் நூல் தனித் தொகுப்பாகவே அமைந்து, பத்தாவது திருமுறை என்று வணங்கப் பெறுகிறது.

பகுத்துத் தொகுக்கப்பட்ட இத்தகைய பாடல்களைத் தவிர, நாட்டுப்புறப் பாடல்கள் பலவற்றிலும்கூடப் பல சித்தர் பாடல்கள் இடம்பெறுகின்றன. இவையெல்லாம் உதிரிப் பாடல்களாகச் சேர்த்துத் தொகுக்கப்பட்டு, அந்த நூல்களும் வழக்கத்தில் உள்ளன. "பதினெண் சித்தர் ஞானக் கோவை" போன்ற சில பழைய நூல்கள் இந்த வகையிலான தொகுப்புகள்! பொதுவாகச் சொன்னால், சித்தர் பாடல்கள் என்னும் இலக்கியமானது இத்தனைப் பாடல்களும் சேர்ந்த களஞ்சியமே யாகும்.

இந்தக் களஞ்சியத்திலே மூன்று வகையான பாடல்களைக் காணலாம். அதாவது பாடல்களின் அமைப்பை இலக்கியக் கண்கொண்டு ஆராய்ந்தால், இந்தப் பாடல்களிலே மூன்று விதங்கள் இருப்பது புலனாகும்.

முதலாவது பிரிவிலுள்ள பாடல்கள், எல்லாருக்கும் புரியக் கூடிய எளிய கவிகளாக விளங்குபவை. அதாவது நிகண்டுகள், அகராதிகள் எதுவும் இல்லாமல் எல்லாரும் படித்து அவற்றைப் புரிந்துகொண்டு விடலாம்.

இரண்டாவது பிரிவு எப்படி இருக்கும் என்றால், ஆழத்திலே குதித்துப் பார்க்கக் கூடிய ஒரு சிலருக்கு மட்டுமே இந்தப் பாடல்கள் புரியும்! வார்த்தைகள் எளிமையாக இருக்கலாம். ஆனாலும் அவற்றுக்குள்ளே சில முடிச்சுக்கள் இருக்கும். அந்த முடிச்சுகளை அவிழ்ப்பது சிக்கலாக இருக்கும்! இவை இரண்டாவது வகை!

மூன்றாவது வகையான பாடல்கள், மிகமிக எளிய சொற்களே இருந்தாலும், படிக்கப் படிக்க முடிச்சுக்கு மேல் முடிச்சு ஆக விழுந்து கொண்டே போகும். முதலாவது முடிச்சை அப்படிப் போட்டிருப்பார்கள். இத்தகைய பாடல்களை ஞானப்பயிற்சி பெற்ற மிகச்சிலரே புரிந்துகொள்ள இயலும்! இவர்களுங்கூட ஞானாசிரியர்களின் உதவியினாலேயே இந்தப் பாடல்களை நன்கு விளங்கிக்கொள்ள முடியும்!

சித்தர் பாடல்கள் இப்படி மூன்று தன்மைகளில் இருந்த போதிலும், இந்தப் பாடல்கள் அனைத்திலும் ஒரு மாயக் கவர்ச்சி இருக்கும்! அது ஒரு மின்காந்த சக்தி!

சொற்களும் அவற்றின் உட்கருத்தும் என்ன என்று தெரிந்து கொள்ள முடியாத நிலையிலுமே, அந்தப் பாடல்கள் நம்மை எப்படியோ கவர்கின்றன என்பதை உணரலாம்!

மாங்காய்ப்பால் உண்டு
மலைமேல் இருப்பார்க்குத்
தேங்காய்ப்பால் எதுக்கடி - குதம்பாய்
தேங்காய்ப்பால் எதுக்கடி

என்ற பாடலிலே, மாங்காய்ப்பால் என்றால் என்ன, தேங்காய்ப்பால் என்றால் என்ன என்பது தெரியாவிட்டாலும், புரியாவிட்டாலுங்கூட, அந்தப் பாடல் நம்மை மயக்குகிறது அல்லவா? இதுதான் அந்தக் காந்த சக்தி. சித்தர் இலக்கியம் பற்றிய எனது ஆய்வு நூலின் முதலாவது பகுதியிலே இதுபற்றி விரிவாகவே எழுதியுள்ளேன்.

எல்லாருக்கும் பொருந்தக் கூடியதும், எல்லாருக்கும் பயன்படக் கூடியதும், விஞ்ஞானம் ஒப்புக்கொள்ளக் கூடிய விதத்திலே ஆன்ம அறிவியலோடு ஒட்டியதுமான பாடற்செல்வம் சித்தர் இலக்கியத்திலேயே நிரம்பியுள்ளது.

உடம்பினையும், உள்ளத்தையும், உயிரையும் ஆராய்ந்து பல நுட்பமான அற்புத இரகசியங்களைத் தமிழகத்தின் சித்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இன்று ரஷியாவிலும், பல்கேரியாவிலும், ருமேனியாவிலும், செக்கோஸ்லேவாகியா போன்ற நாடுகளிலும், பல்கலைக்கழக அறிவியல் துறைகளிலே நவீனக் கருவிகள் கொண்டு ஆய்வுசெய்து வெளியிட்டுள்ள பல விஞ்ஞான உண்மைகள், நமது சித்தர் இலக்கியத்திலுள்ள உண்மைகளை அப்படியே உறுதிப்படுத்துகின்றன! அதாவது இன்றைய விஞ்ஞானம் நமது மெய்ஞ்ஞானத்தின் வழியிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது! இதை உணர்ந்து நமது ஏளனங்களை நாம் உதற வேண்டிய காலம் வந்து கொண்டிருக்கிறது! அது மட்டுமல்ல; இத்தகைய அறிவியல் இரகசியங்களை எழில்மிகுந்த கவிதைகளிலே சித்தர்கள் நமக்காகப் பாடியிருப்பது இன்னொரு சிறப்பாகும்!

இந்த மனதத்துவ அறிவியற் பேருண்மைகள் தவிர, வைத்தியம், வானியல், தாவர இயல், வேதியியல் போன்ற பல துறைகளிலும் ஆழமாகச் சென்று அரிய பெரிய நுட்பங்களைக் கண்டு பாடியிருக்கிறார்கள்.

அறிவுக்கு விருந்தாகவும், மருந்தாகவும் அமைந்துள்ள இந்தப் பாடல்களைத் தவிர, நமது சித்தர்களின் இலக்கியத்திலே இன்னொரு முக்கியமான பகுதி, உடற்பயிற்சியினால் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, அதன்பிறகு உள்ளத்தின் பயிற்சியினால் உயிரைக் கட்டிக் காப்பதற்கான வழியுமாகும். இந்த முறைகளையும் அழகிய பாடல்களிலே, எளிய சொற்களிலே, சித்தர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஒருமைப்பாடு என்று இன்று நாம் சொல்லுகிறோமே, இந்த உணர்வை வானளாவக் கண்டு, 'ஒன்றே குலம்' என்றும், 'ஒருவனே தேவன்' என்றும் பாடுகிற குரல் நம்முடைய திருமூலரின் குரலாகும்! இந்தப் பரந்த மனப்பான்மையோடு கூடிய சித்தர் பாடல்கள் நூற்றுக்கணக்காகத் தமிழில் வழங்கி வருகின்றன. அச்சிலே

ஏறிவிட்டவையும் உண்டு, அச்சேறாதவையும் உண்டு. கவிதை என்ற நிலையிலே பார்த்தாலும் நெஞ்சம் தோய்ந்து அனுபவிக்கக் கூடிய அழகுப் பாடல்களாக இவை மிளிர்கின்றன.

பாடலாம், பாடிக் காட்டலாம், இதயத்திலே தேக்கி வைத்து நாளெல்லாம் அனுபவித்துக் கொண்டே இருக்கலாம். அத்தகைய பாடற் பனுவல்கள் பின் பக்கங்களில் வருகின்றன. அவற்றின் பதச்சோறு காண்போம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

## சிவவாக்கியர்

சித்தர்களிலே சிவவாக்கியருக்கு ஒரு தனியான இடம், தனிச்சிறப்போடு கூடிய இடம் உண்டு. இந்த ஆய்வுநூலின் நான்காவது தொகுதியிலே அவர் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

சிவவாக்கியர் அருளியுள்ள பாடல்களிலே சில உயர்தனிப் பண்புகளைத் தெளிவாகக் காணுகிறோம்.

வார்த்தைகள் மிகமிக எளிய வார்த்தைகள். ஆனால் அவை வெளியிடுகிற பொருள் மிகமிக ஆழமானது! அதோடு இந்தச் சித்தர் பேசுகிற பேச்சு அத்தனையும் சொந்த அனுபவத்திலிருந்து வருவது!

தவநிலையிலே நின்று, உள்ளத்துக்குள்ளே புகுந்துசென்று, பல அரிய பேருண்மைகளைக் கண்டு, தெளிவோடு பேசுகிறார் சிவவாக்கியர்! அனுபவ பூர்வமாகப் பேசுவதால் அவருடைய வாக்கிலே உறுதியும் பாடல்களின் போக்கிலே ஒரு பெரிய ஆன்ம வேகமும் அமைந்துள்ளன.

ஆம்; ஆன்ம வேகம் என்று ஒன்று இருக்கிறது. அது நுட்பமானது விரைவானது; எல்லாரையும் தன்வசம் ஈர்ப்பது. அனுபவத்திலிருந்து விழித்த நிலையிலே பாடுவதால், இந்தச் சித்தரின் பாடல்களிலே உள்ள ஒலிப்பண்பு தனித்தன்மையோடு தீப்பொறி பறக்கும்படியாகத் தாளம் போட்டுக்கொண்டு ஓதுகிறது. இரவு நீங்கிப் பொன்னொளி வீசிக் கதிரவன் உதிப்பது போன்ற விழிப்பின் சூழல் அது!

இறைவனுடைய திருவிளையாடல்களிலெல்லாம் மிகப் பெரிய திருவிளையாடல் எதுவென்றால், எல்லாச் செயல்களையும் இயக்குகிற பரம்பொருள் நம்முடைய கண்களுக்குத் தெரியாமல்

ஒளிந்துகொண்டிருப்பதுதான்! இந்தக் 'கண்ணாம்பூச்சி' விளையாட்டு ஒரு தெய்வலீலை. இதைப்பற்றி ஒரு வேடிக்கையான கதை உண்டு.

காரியம் ஆகவேண்டுமானால் எந்தப் பெரிய அதிகாரியையும் எப்படியோ போய்ப் 'பிடித்து' விடுகிறான், இந்த மனிதனாகிய கள்ளன்! மலையிலே போய்த் தங்கல் இட்டால் அங்கே போயிருந்தால், அங்கேயும் கப்பலிலே சென்று பார்த்துப் பிடித்து விடுவான்! வானத்திலே போய் இருந்தாலும் ஆகாய விமானம் இருக்கவே இருக்கிறது! இப்போதோ விண்வெளிக் கலங்களே இருக்கின்றன, எந்த மண்'_லத்துக்கும்!

கடவுள் யோசித்தாராம். "எவரெஸ்ட் சிகரத்திலே போய் ஒளிந்துகொண்டால், இந்தத் திருட்டு மனிதன் அங்கே வந்து நம்மைப் பிடித்து விடுகிறான்! இவன பிடியிலிருந்து தப்பிப்போய் ஒளிந்து கொள்வதற்கு வேறு என்ன இடம் உண்டு?"

இறைவன் சிந்தனை செய்தானாம், மனிதன் புகுந்து சென்று கண்டுபிடிக்க முடியாமல் ஒளிந்துகொள்வதற்கு ஏற்ற இடம் எது என்று! எல்லாம் விளையாட்டுக்காகத்தான்!

"வெளியே எங்கே போய் ஒளிந்து கொண்டாலும் கண்டு பிடித்துவிடுவான், இந்தக் கள்ளப் பயலான மனிதன்! இவன் புகுந்து பாராத இடம் ஒன்றே ஒன்று இருக்கிறது! அது இவனுடைய உடம்புக்கு உள்ளேயே இருக்கிறது! உள்ளத்துக்கு உள்ளே போய் ஒளிந்து கொண்டோமானால், மனிதன் அந்த இடத்துக்கு வர மாட்டான்!"

இவ்வாறு முடிவுசெய்து தமது கண்ணாமூச்சியை மனித உடம்புக்குள்ளே, உள்ளத்துக்குள்ளே போய் ஒளிந்துகொண்டு விளையாடுகிறாராம் கடவுள்!

விளையாடல்தான்! மனிதனை ஆட்கொள்வதற்கு இப்படி ஒரு கருணைமிக்க திருவிளையாட்டைச் செய்கிறது பரம்பொருள், திருமூலர் பாடுகிறார்.

கள்ளப் பெருமக்கள்
காண்பர் கொலோஎன்று
உள்ளத்தின் உள்ளே
ஒளிந்திருந்து ஆளுமே!

(ஒளிந்திருப்பது ஆட்கொள்வதற்குரிய கண்ணாம்பூச்சி விளையாட்டுத்தான்)

உடம்பினுள் மிகமிக நுட்பமான முறையிலே மெய்ப்பொருள் மறைந்து நிற்கிறது! மனிதன் அதைக் கண முடியாமல் வெளியே சென்று எங்கெங்கோ தேடுகிறான்! அலைகிறான்! நாடுகிறான். ஓடுகிறான். தேடுகிறான். பிறகு வாடுகிறான்! இதுவே மனித குலத்தின் சரித்திரமாக இருக்கிறது!

சிவவாக்கியருடைய அற்புதமான பாடல் வருகிறது.

ஓடி ஓடி ஓடி ஓடி
உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி
நாட்களும் கழிந்துபோய்

'கண்ணாமூச்சி' தொடர்ந்து நடக்கிறது! நாட்கணக்காக நடக்கிறது.

உட்கலந்த சோதியை நாடி நாடி ஓடி ஓடி நாட்கள் கழிந்து போகின்றன. அந்த சோதியைக் கண்ட பாடாக இல்லை!

ஆன்ம இரகசியங்களைத் தெளியாமல், உணராமல், சோதியை நாடி ஓடுகிற இந்த ஓட்டம் நடந்து கொண்டே இருக்கிறது!

சிவவாக்கியர் ஒரு ஞானியின் பரிவோடு சொல்கிறார்.

வாடி வாடி வாடி வாடி
மாண்டு போன மாந்தர்கள்

சோதியைக் கண்டுகொள்ள முடியாமல் , வாடி வாடி அந்த வாட்டத்திலேயே உயிரைவிட்ட மக்கள் எத்தனை பேர்! எத்தனைக்கோடி கோடியோ, அந்த எண்ணிக்கை எண்ணில்லாத கோடியே! என்கிறார் சிவவாக்கியர்.

ஓடி ஓடி ஓடி ஓடி
உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி
நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி
மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி
எண்ணிறந்த கோடியே!

ஒன்றிலிருந்து பிரிந்து மற்றொன்று, அந்த ஒன்றை நாடுவது இயல்பே! மனித மனத்தின் ஆன்ம நாட்டம் இதுவே! ஆனால் ஞானப் பேருண்மைகளின் வழி தெரியாமல், திசை புரியாமல், மக்கள் வீணாகிப் போகிறார்களே என்று பரிவு கலந்த புன்னகை. அதில் ஒரு சிவதயை! அப்படி வருகிறது ஒரு பெரிய அனுபவ ஞானியான சிவவாக்கியரின் பாடல்!

## அனுபவ ஞானம்

இறைவனுடைய ஆனந்த நிலையைக் கண்டு தெளிந்ததோடு, அந்தப் பேரானந்தத்திலேயே எப்போதும் தோய்ந்திருப்பவர்களே சித்தர்கள். நினைப்பும் மறப்பும் இல்லாத இன்பநிலை என்பது அதுதான். ஒன்றை மறப்பது என்று ஏற்பட்டால் தானே, பிறகு அதை நினைப்பது என்பது உண்டாகும். மறப்பதே இல்லாதபோது, நினைப்பதும் இல்லைதானே! இடையீடு இல்லாத இந்தப் பேரின்ப நிலையிலே இரவுபகல் இருபத்துநான்கு மணிநேரமும் மூழ்கியிருப்பவருக்குக் காலம் என்ற கணக்கு எது? உள் என்றும் புறம் என்றும் சொல்லுகிற இடம் எது? அகலம், நீளம், உயரம் என்ற கணக்குகளும் ஏது? காலமும், இடமும், கணக்கும் கடந்த பேரின்ப நிலை என்பது அதுவே!

இந்த நிலையை அடைவதற்கு முன்பு அந்த ஞானி ஆரம்பத்தில் எப்படி இருந்தார்? தொடக்கத்திலேயே இந்த ஞானநிலை அவருக்குக் கிடைத்துவிட்டதா? இல்லை! எல்லாரையும் போல அவரும் சாதாரண அறிவு நிலையேதான் இருந்தார். கண்டதையே நம்புவது என்றும், காணாததை இல்லை என்று சாதிப்பதுமான அறிவு நிலையிலே தான் அவரும் இருந்தார். பிறகு என்ன நேர்ந்தது?

தொண்டு என்றும், வழிபாடு என்றும், யோகப்பயிற்சி என்றும், ஞானநிலை என்றும் பலவாறாகச் சொல்லப்படுகிற தெய்வ அனுபவத்திலே இதயம் ஈடுபட்டது. இதற்கு முன்பும் எத்தனையோ பிறவிகளில் இப்படிப் பற்பல தரங்களிலே இந்த முயற்சி நடந்ததுண்டு. அதெல்லாம் கூடித் திரண்டு இப்போது மொட்டு மலராகி, மலர் காயாகிப் பின்னர் காய் கனியாகக் கூடிய பருவம் வந்தது! அதனால் என்ன நிகழ்ந்தது?

சிவவாக்கியர் தமது ஆன்ம அனுபவ வளர்ச்சியின் வரலாற்றை எடுத்துச் சொல்கிறார்.

என்னிலே இருந்த தொன்றை
யான் அறிந்த தில்லையே

எனக்கு உள்ளேதான். வெளியே இல்லை. உள்ளுக்குள்ளேதான். என்னோடு கூடவே தான், அந்த மெய்ப்பொருள் இருந்தது! என்னிலே இருந்த அந்த மெய்ப்பொருளை, அந்த ஒன்றை, நானும் அறிந்துகொள்ளாமலேதான் இருந்தேன்.

இவ்வாறு தமது பழைய நிலையைப் பேசுகிறார் சிவவாக்கியர். ஓடி ஓடி உட்கலந்த சோதியை நாடித் தேடிக் காணாமல் வாடி வாடி மடிந்த மாந்தர்கள் பற்பல கோடி என்று நமக்குச் சொன்னார் அல்லவா இந்த ஞானி! தாமும் அந்தக் கோடி கோடியான மரந்தருள் ஒருவராக அந்த உட்கலந்த சோதியைக் காணாமலே இருந்ததாகச் சொல்கிறார்!

என்னிலே இருந்த தொன்றை
யான் அறிந்த தில்லையே

"என்னுடைய நிலையும் அப்படித்தான் இருந்தது!" என்கிறார் சித்தர்.

தமக்குள்ளே இருந்த தெய்வத் தத்துவத்தை அறியாமல் இருந்த நிலை இந்தப் பிறவியிலேதானா, அல்லது இதற்கு முன்பு எடுத்த பற்பல பிறவிகளிலா என்பதையெல்லாம் உரையாசிரியர்கள் தங்கள் தங்கள் கோட்பாடுகளுக்குத் தக்கவாறெல்லாம் சர்ச்சை செய்யலாம். ஆனால் இது உயிரின் பரிணாம தத்துவத்தில் அவரவருக்கு உள்ள கொள்கைகளைப் பொறுத்தது.

ஒரு காலத்தில் நானும் எனக்குள்ளே இயங்குகிற மெய்ப்பொருளைக் காணாமலேதான் இருந்தேன் என்பதுதான் பாடலின் பொருள்.

*இந்த நிலையிலே என்ன நேர்ந்தது? சித்தர் சொல்லுகிறார்:*

*என்னிலே இருந்த தொன்றை*
*யானறிந்து கொண்டபின்*

*எனக்குள்ளே இருக்கக்கூடிய அந்த மெய்யான பொருளை யான் அறிந்தேன்! அப்படி தான் அறிந்தபின், பிறருக்கு அதுபற்றி எப்படிச் சான்று காட்டுவது? எனக்குள்ளே இருப்பதை நான்தான் அறிந்துகொண்டேன். அதைப் பிறர் காணுவது எப்படி?*

*என்னில் இருப்பதை நான் காணுகிறேன். மற்றவர்கள் அதைக் காணுவது எப்படி? அவரவர் தம்தம் அனுபவத்திலே பார்க்க வேண்டிய காரியம் அல்லவா அது?*

*என்னிலே இருந்த தொன்றை*
*யாவர் காண வல்லிரே?*

*எனக்குள்ளே இருப்பதை நான் காணுகிறேன். வெளியே உள்ள பிறர் அதை என்னுள்ளே இருப்பதை, எப்படிக் காண முடியும்?*

*"யாவர் காண வல்லமை படைத்தவர்?" என்ற கேள்விலேயே அதற்குரிய விடையும் அடங்கியிருக்கிறது.*

*சர்க்கரையைச் சுவைத்தவனுக்கு அது தித்திப்பாக இருக்கிறது. அந்த இனிப்பைப் பிறர் தெரிந்துகொள்வது எப்படி? அவர்களும் சர்க்கரையைத் தாங்களே சுவைத்துப் பார்க்க வேண்டும்.*

*எனக்குள்ளே முக்குணி நீச்சல் பாய்வது போல் புகுந்து சென்று, எனக்குள்ளே நான் இருந்து, இருந்து, இருந்து முக்காலமும் அதை உணர்ந்து கொண்டேன். பிறரும் அவ்வாறு செய்தால் அல்லாமல் அதைக் காணுவது இயலாது!*

*ஆன்ம அனுபவங்களிலே உள்ள ஒரு பெரிய நுட்பம் இதுவே. அவரவர் தாமாகவே முயன்று தமது சொந்த அனுபவத்திலே துய்க்க வேண்டிய பேரின்பம் அது!*

என்னிலே இருந்த தொன்றை
யானறிந்த தில்லையே
என்னிலே இருந்த தொன்றை
யானறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த தொன்றை
யாவர்காண வல்லிரே
என்னிலே இருந்திருந்து
யானறிந்து கொண்டேனே

ஞானியின் அனுபவ ஆனந்த வெளியீடு எல்லையற்ற தெளிவோடும் களிப்போடும் எளிய சொற்களிலே அழகிய கவிதையாக வடிவம் எடுத்து வருகிறது!

## நீயும் நானும்

இறைவனோடு எப்போதும் ஒன்றியிருக்கக் கூடிய பக்குவம் சித்தியான பிறகு, தெய்வத்தை மறப்பது என்பது ஏது? மறந்தால் அல்லவோ நினைப்பது என்ற செயல் எழுகிறது. இதுவே சித்தர்களின் மெய்ஞ்ஞான இன்ப நிலை! இந்த நிலையைப் பாடுகிறார் சிவவாக்கியர்.

'காண்பது' என்ற செயலே புறக்கண்ணின் செயலான பார்வை என்பது! நமக்கு உள்ளேயே இருக்கக்கூடிய ஒன்றைப் 'பார்ப்பது' என்றோ, 'காண்பது' என்றோ கூறுவதில் பொருளில்லை! அகத்திலே உணர்கிற பேருணர்வு அது! கண்ணால் பார்ப்பதும், காதால் கேட்பதும், நாவினால் சுவைப்பதும், நாசியினால் நுகர்வதும், உடம்புகொண்டு தொடுவதும் தனித்தனியே எந்தெந்த உணர்ச்சிகளைத் தருமோ அத்தனையும் சேர்ந்த, அத்தனையும் ஒன்றிய ஓர் உணர்வின் அனுபவம் அது! இறைவனை மறவாமல் எப்போதுமே நினையாமல் நினைப்பது என்ற மெய்ஞ்ஞான அனுபவத்துக்குள் இந்த ஐம்புல உணர்ச்சியும் ஒன்று சேர்ந்து அடங்கும்! ஐந்தும் அடங்கிய அனுபவம் அது!

சிவவாக்கியர் பேசுகிறார் :

"நினைப்ப தன்றிக் கண்டிலேன்"

நினைவு என்ற 'ப்ரக்ஞை' அது!, காண்பது என்ற வெளிச்செயல் அதில் இல்லை.

நினைப்ப தன்றிக் கண்டலேன்
நீயலாது வேறில்லை

"உன்னைத் தவிர வேறு எதுவும் இந்த அகவுணர்விலே கிடையாது!" என்கிறார் சித்தர்.

பகவத் கீதையிலே 'அநந்யம்' என்று கூறப்பட்டுள்ளதற்கு, இரண்டு பொருள் பெரியோர்கள் கூறுவார்கள். அந்த ஒன்றோடு அன்னியமின்றிப் பொருந்தி ஒன்றியிருப்பது என்று ஒரு பொருள். அந்த ஒன்றைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற முழு உணர்வு நிலை என்பது இரண்டாவது பொருள்.

அதுவே மயமாகவும், அதுவன்றி வேறு மற்றொன்று இல்லை என்று இருப்பதுமாகிய அந்த அனன்னிய நிலையைச் சிவவாக்கியர் இவ்வாறு சொல்லுகிறார்.

நினைப்ப தன்றிக்
கண்டிலேன்
நீய லாது வேறில்லை

சரி, அப்படியானால் நினைப்பதும், மறப்பதுமாய் இருக்கக்கூடிய நிலை என்ன? அதுவே மாயை!

மாயை என்பதை மாய்கை என்று சொல்வதில் ஒரு சித்தர் மரபு இருக்கிறது. அதாவது நில்லாதது, நிலையற்றது, மாயக்கூடியது என்ற பேருண்மை அதில் பொதிந்து கிடக்கிறது.

நினைப்பு மாய்ம றப்புமாய்
நின்ற மாய்கை மாய்கையே

பரம்பொருள் எப்படிப்பட்டது! அகண்டமானது. எங்கும் பரந்தது. அனைத்துமானது. அதோடு அதன் தோற்றம் எப்படி? தோற்றமே இல்லாத ஒரு தோற்றம் அது? ஆதிக்கும் ஆதியாய், அனாதியாய் நிற்பது! அனாதிக்கு முன் அனாதியாய் நிற்பது!

பரம்பொருளின் நிலை இப்படி இருக்கும்போது, அந்த மெய்ப்பொருள் எனக்குள் இருப்பதும், நான் அதற்குள் இருப்பதும் எவ்வாறு?

அனைத்து மாய்அ கண்டமாய்
அனாதி முன்அ னாதியாய்

அப்படி இருப்பது பரம்பொருள். அந்தப் பரம்பொருளின் நிலை அவ்வாறு இருக்கும்போது,

எனக்குள் நீஉ னக்குள்நான்
இருக்கு மாறது எங்ஙனே?

உன்னுள்ளே நானும், என்னுள்ளே நீயுமாக இருக்கிற நிலை எப்படிப் பட்டது. அது எவ்வாறு அமைந்தது என்பதை எப்படி எவ்வாறு சொல்வது? எவ்வாறு நினைத்துப் பார்ப்பது!

இறைவனை நினைக்கிறேன் என்று சொல்வதிலே பொருளில்லை! எப்போதும் அவன் என்னுள்ளே இருக்கிறான்! நினைப்பும் மறப்புமாய் இருப்பது ஒரு மாயமே! அனைத்துமாய்த் தனத்தனியே இருப்பதும், அகண்டமாய் எங்கும் வியாபித்து இருப்பதும், அனைத்தையுங் கடந்து நிற்பதும், எல்லாம் பரம்பொருளே!

எனக்குள்ளே நீயும், உனக்குள்ளே நானுமாக இருக்கும்போது, நினைப்பது என்பது எப்படி என்று கேட்கிறார்!

சித்தர்களுடைய கேள்விகள் விடையை எதிர்பார்த்துக் கேட்கப்படுகிற வெற்று வினாக்கள் அல்ல! விடையில்லாத சிரஞ்சீவிக் கேள்விகள் அவை! அவற்றுக்கான விடை அந்தக் கேள்விகளுக்குள்ளேயே இருக்கிறது. உண்மையில் அது கேள்விக் குறியா, அல்லது வியப்புக் குறியா என்று வேறு பிரித்துச் சொல்ல முடியாதது அந்த வினாவே வியப்பாகும். அந்த வியப்பே வினாவாகும். '?' என்று குறியும் '!' என்ற குறியும் இணைந்தது அது!

சிவவாக்கியருடைய பாடல்களிலே, மெய்ப்பொருள் ஞான நிலையை விளக்கக் கூடிய அரிய கவிதைகளில் ஒன்று இது! தெய்வ அனுபவத்திலிருந்து வியப்பும் வினாவுமாக எழுந்து, வினாவின் வடிவத்தில் வியப்பை வெளியிடுகிற ஓர் அற்புதமான பாடல் இது:

நினைப்ப தன்றிக் கண்டிலேன்
நீய லாது வேறில்லை
நினைப்பு மாய்ம றப்புமாய்
நின்ற மாய்கை மாய்கையே!

*அனைத்து மாய்அ கண்டமாய்*
*அனாதி முன்அ னாதியாய்*
*நினக்குள் நான்எ னக்குள்நீ*
*நினைக்கு மாற தெங்ஙனே!*

## மோன நிலை

விள்ளுதல் என்றால் வெளியிட்டுச் சொல்லுதல் என்று பொருள். 'விண்டவர்' என்றால் வெளியிட்டுப பேசிய மனிதர்கள்! 'கண்டவர்' என்றால் ஞானப் பேரின்பத்தை அனுபவித்துக் கண்டவர்கள்! இறைவனைக் காணுதல் என்றாலே, அந்த இறையின்பத்தைச் சொந்த அனுபவத்திலே அனுபவித்து, அதைக் கண்டு தெளிந்தவர்கள் என்று அர்த்தம்.

பேருண்மையாகிய மெய்ப்பொருளின் ஆனந்தத்தைக் கண்டவர்கள் அதை வெளியிட்டுப் பேச முடியுமா? பேச்சினால் அளந்து சொல்லிவிட முடியுமா அந்த அரிய இன்பத்தை? முடியாது! எனவே கண்டவர்கள் அதைப்பற்றிப் பேசுவதில்லை, பேச முடிகிறதில்லை! ஆனால், அதைப் பற்றிப் பேசுகிறார்களே, அவர்கள் யார்? அவர்கள் எல்லாம் அதைக் காணாதவர்கள்! காண வேண்டும் என்ற வேட்கை மட்டும் உடையவர்கள். ஆனால் இன்னும் காணாதவர்களே அவர்கள்! ஆகவே பேரின்ப நிலையின் தன்மை எப்படி இருக்கிறது என்றால் அதைக் கண்டவர்கள் அதைப் பற்றிப் பேசுவதில்லை! அதைப் பற்றிப் பேசுபவர்கள் அதைக் கண்டதில்லை!

இந்த ரசமான முரண்பாடு இருக்கிறதே, இதைத் தான் கண்டவர்கள் சொன்னதில்லை, சொன்னவர் கண்டதில்லை என்னும் பொருளிலே 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்று ஞானிகள் கூறியிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பாடுகிறார் சிவவாக்கியர்!

இறைவன் இந்த உடம்புக்குள்ளேதான் இருக்கிறான்! புதிதாக உள்ளே நுழையவில்லை, நாம் பிறந்தபோதே இந்த உடம்புக்குள்ளே அந்த மெய்ப்பொருளும் உட்புகுந்துதான் இருக்கிறது! அப்படியானால் நீண்ட பயிற்சிக்குப் பிறகு ஞானிகளும் யோகிகளும் தங்கள் உடம்புகளுக்குள்ளே மெய்ப்பொருளைத் தரிப்பது எப்படி? ஏற்கனவே உள்ளே இருந்த பேருண்மையை, இதுவரை காண முடியாமல் இருந்து, பிறகு முயன்று முயன்று பாடுபட்டுக் கண்டு கொள்கிறார்கள்! பிறகு? பிறகு அதைப் பற்றிப் பேசி அதை வர்ணிக்க

முடியாத நிலையிலே, அப்படியே மௌனமாகி விடுகிறார்கள்! கண்டதற்குப் பிறகு ஏற்பட்ட மாறுதல் இந்த மௌனந்தான்! பேச்சு, பேச்சு, பேச்சு என்பதெல்லாம் காண்பதற்கு முந்தித்தான்!

தேங்காய்க்குள்ளே இளநீர் எப்போது புகுந்தது? தெங்கு உருவாகும்போதே அந்த இளநீரும் அதில் கலந்ததால் இருந்தது! தெங்கு முதிர முதிர இளநீர் வளம்சுரந்து பெருகிற்று. அதுபோலவே தான் ஞானயோக வளர்ச்சி முதிர முதிர, இறையின்பமானது சுரந்து, உடம்புக்குள்ளே சுரந்து, பெருகி நிரம்புகிறது! புதிதாக இளநீர் உள்ளே புகவில்லை.

செய்ய தெங்கி லேஇளநீர்
சேர்ந்த கார ணங்கள்போல்
ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டனன்

இளநீர் என்ற தத்துவம், தெங்கிலே எவ்வாறு உள்ளிருந்து சுரப்பு முதிர்ந்து முதிர்ந்து நிரம்பிவிடுகிறதோ, அவ்வாறே இறைவன் என் உள்ளத்தில் அப்போதே, புகுந்தவன், படிப்படியாக எனக்குத் தெரியும்படியாகக் கோயில் கொண்டான்! இதனால் இப்போது, இந்த ஞான முதிர்ச்சியாகிய பக்குவத்துக்குப்பின், அவனைக் கண்டு கொண்டேன்! அதாவது அவன் இருப்பது இப்போது எனக்குத் தெரிகிறது! அவன் என்னுள்ளே கோயில் கொண்டிருப்பதைத் தரிசித்துக் கொண்டேன்! இதனால் என்ன நேர்ந்தது?

ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர்முன்னம்
வாய்தி றப்ப தில்லையே!

அவ்வளவுதான்! வாய்மூடி மௌனமாகி அப்படியே அமர்ந்து விட்டார் சித்தர்! நாட்களோ, வாரங்களோ, மாதங்களோ அந்த நிஷ்டை கலந்த பிறகுதான் கண்களைத் திறப்பார்!

செய்ய தெங்கி லேஇளநீர்
சேர்ந்த கார ணங்கள்போல்
ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டனன்

ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர்முன்னம்
வாய்தி றப்ப தில்லையே!

சிவவாக்கியர் தமது மோன நிலையாகிய தியான நிலையான நிலையின் தன்மையை இப்படிக் கூறுகிறார்!

இந்த ஞான மோன தியான நிலை கலைந்தபின், அந்த நிஷ்டையிலிருந்து வெளிவந்த பிறகே, அடுத்த பாடல் வரும்! அப்படி வருகிற பாடல்களிலே இந்த ஞானப் பேரின்ப முயக்கம், மயக்கம் ஆகிய சொல்கடந்த ஆனந்த நிலையை அடைவது எப்படி என்பதைப் படிப்படியாக மக்களுக்குக் கற்பித்து, எளிய இனிய பாடல்களிலே அந்த வழியைச் சொல்கிறார்; சொல்கடந்த இன்பத்துக்குரிய வழிகளை, இன்பத்தை அல்ல, வழிகளைப் பேசுகிறார்.

## ராம நாம மகிமை

இறைவனுடைய காட்சியை இந்த உடம்புக்குள்ளே கண்டு துய்த்த மகானாகிய சிவவாக்கியர், பொதுமக்களுக்குக் கடவுளின்பத்தை அனுபவிக்கிற பல வழிகளையும் அவரவர்களுடைய பக்குவத்திற்கேற்ப எடுத்துச் சொல்கிறார். அந்த வழிகளிலே ஒன்று, ராமநாம சங்கீர்த்தனம்! ராமநாம ஜபம்!

வால்மீகியின் கதை நமக்குத் தெரியும் ஒரே மந்திரம். அதுவும் ராமநாமம் என்ற ஒரே நாமம். அதே சபம்! அதே உச்சாடனம். அதுவே தவம்! அதுவே எல்லாம்!

சிவவாக்கியர் பேசுகிறார்!

அந்திப்பொழுது, காலைப்பொழுது, உச்சிவேளை என்பதாக மூன்று காலங்களைப் பெரியோர்கள் பூசை செய்வதற்குரிய தக்க நேரங்களாகச் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? மூன்றுகால பூசை என்பார்கள் இதை! அந்த வழிபாட்டிலே ஒரு முக்கியமான பகுதிதான் மூன்றுகாலமும் குளிப்பது. அதாவது, நீராடுவது என்ற வழிபாட்டுச் சடங்கு!

இந்த மூன்று வழிபாட்டு வேளைகளிலும், புண்ணிய நீர்நிலைகளிலே குளிப்பது என்று ஒரு சடங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தி காலை உச்சிமூன்றும்
ஆடுகின்ற தீர்த்தமும்

மூன்று நேரங்களிலும் புனிதமான, புண்ணியமா, தீர்த்தங்களிலே நீராடுவதாகிய சடங்கு இருக்கிறதே, அந்தச் சடங்கிற்கு உரிய தீர்த்தம் எது?

அதோடு நிற்கவில்லை சடங்கு! இந்த மூன்று நேரமும் சந்தி, தர்ப்பணம், ஜபம், தபம் என்று விரிவாகவே பல செயல்கள், வழிபாட்டு முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதைச் சொல்லுகிறார் சிவவாக்கியர்.

சந்தி தர்ப்பணங்களும்
சபங்களும் தபங்களும்

இப்படிச் சொல்லப்பட்டுள்ள சப தபங்கள் எவை? எல்லாருக்கும் எல்லா நிலையிலும் உள்ள பொதுமக்களும் பின்பற்றக் கூடிய வழியைச் சொல்ல வருகிறார் சித்தர்.

சிந்தை மேவு ஞானமும்
தினம்சபிக்கும் மந்த்ரமும்

சாதாரண மக்களை நோக்கி உபதேசம் செய்கிறார் சிவவாக்கியர். மிகமிக எளிய ஒரு பேருபதேசம் இது!

அந்தி, காலை, உச்சி ஆகிய மூன்று வேளைகளிலே ஆடவேண்டிய தீர்த்தமும், சந்தியும் தர்ப்பணமும் சபதபங்களும் உள்ளத்துக்குள்ளே வைத்துவைத்துப் பக்குவப் படுத்துகின்ற ஞானவெள்ளி முறையும், நாள்தோறும் உச்சரிக்க வேண்டிய மந்திரமும், எல்லாமும் சேர்ந்த ஒட்டுமொத்தமான ஒரே வழி இருக்கிறது. மிகமிக எளிய வழி, என் அப்பனே, உனக்கு மிகவும் எளிய சுலபமான வழி! அது என்ன தெரியுமா?

எந்தை ராம ராமராம
ராம என்னும் நாமமே!

என் அப்பனாகிய ராமன், அவனுடைய ராம நாமம் இருக்கிறதே அதை மீண்டும் சொல்லு! அதுபோதும்! தீர்த்தம், மூன்று காலை பூசை, சந்தி, தர்ப்பணம், சபதபங்கள், ஞானம், மந்திரம் எல்லாம் அதுவே! அது ஒன்றிற்குள்ளேயே இத்தனையும் அடங்கியிருக்கிறது! அதுவே

தீர்த்தம். அதுவே சந்தி. அதுவே தர்ப்பணம், அதுவே சபதபங்கள், மந்திரங்கள் எல்லாம்!

மனித குலத்தினிடத்தில் உள்ள எல்லையில்லாத கருணையிலே பேசுகிறார் சிவவாக்கியர்! அவருடைய பெயர் சிவவாக்கியர்தான். ஆனார் அவர் சொல்லுவது ராமநாம மகிமையை! அந்த ஒரு நாமத்தைச் சொன்னாலே போதும் சபதபங்களின் பலன் எல்லாம் அதிலேயே காணலாம் என்கிறார் சித்தர்!

அந்தி காலை உச்சிமூன்றும்
ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்பணங்களும்
சபங்களும் தபங்களும்
சிந்தை மேவு ஞானமும்
தினம் சபிக்கும் மந்த்ரமும்
எந்தை ராம ராமராம
ராம என்னும் நாமமே

சாதி, சமய, உயர்வு தாழ்வுகள் அனைத்தையும் கடந்த ஒரு மாபெரும் ஞானியின் பேச்சு இப்படி வருகிறது! இத்தனை எளிமையோடு பொது மக்களுக்காக வருகிறது.

## ஆன்ம வழிபாடு

சிவவாக்கியர் தமது கவிதையிலே பல பேருண்மைகளை வெளியிட்டிருக்கிறார். எளிய நிலையிலுள்ள சாமானிய மனிதரிலிருந்து, ஞானயோகப் பயிற்சியிலே முனைந்து சாதனைகள் செய்கிற பக்குவிகள் வரை, எல்லாருக்கும் அவரவர் நிலைக்குப் பொருந்துகிறபடி பல நுட்பங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். கோவில்களையும் புற வழிபாடுகளையும் உதறி நின்றும் பேசியிருக்கிறார்! ஆனால் எல்லா உபதேசங்களுமே கடவுளின் பேரின்பத்தை நாம் அடைவது எப்படி என்ற வழிக்கு அவர் காட்டுகிற பாதையேயாகும்! மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்றும், எல்லாமே அதனுடைய மலர்ச்சியாகிய வெளியீடுதான் என்றும் நம்புவதோடு, அந்த மெய்யான ஞானத்தைத் தமது அனுபவத்திலே மெய்யாகவே கண்டு அந்த ஆனந்தத்திலிருந்து பிறந்த பாடல்களே சிவவாக்கியர் அருளியுள்ள ஞானப் பாடல்கள்! எதையும் நம்பாமல் எல்லாவற்றையும் ஏளனம் செய்கிற வெற்றுப் பாடல்கள் அல்ல, சிவவாக்கியரின் பாடல்கள்!

வெளிவேடங்களுக்கும் பொருளற்ற சடங்குகளுக்கும் முக்கியம் கொடுத்து அவற்றிலேயே மூழ்கி மெய்ப்பொருள் நிலையை மறந்து விடக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காக ஒரு சில பாடல்களிலே சடங்குகளை அவர் உதறிப் பேசுவார்! ஆனாலும் ராம நாமத்தையும் நமசிவாயமாகிய ஐந்தெழுத்தையும் சாதாரண நிலையிலுள்ள பக்தர்களுக்கு அவர் உபதேசம் செய்கிற பாடல்களும் உண்டு.

இந்தப் பாடல்களிலெல்லாம் மிக மிகக் கவர்ச்சி பொருந்திய பாடல்களிலே முக்கியமானவை. ஆன்ம வழிபாட்டைப் பற்றி அவர் பாடியுள்ள சில அரிய கவிதைகள். அந்தப் பாடல்களிலே ஒன்று, உடம்புக்குள்ளே சித்தர் நிகழ்த்துகிற மானச பூசையைப் பற்றியது.

"இறைவன் கோவில் கொண்டு வீற்றிருப்பது என் உடம்புக்குள்ளே! அந்த இறைவனுக்கு நான் எப்படி வழிபாடு செய்கிறேன் என்பதைச் சொல்கிறேன்" என்று நம்மிடம் பேசுகிறார் சிவவாக்கியர்.

புறவழிபாடு செய்கிற பக்தர்கள் என்ன செய்கிறார்கள்? விக்கிரகத்துக்கு அபிடேகம் செய்து அர்ச்சனை புரிகிறார்கள் அல்லவா? சித்தர் தமது ஆன்ம பூசையை எப்படி நிகழ்த்துகிறார்?

பூவும் நீரும் என்மனம்
பொருந்து கோயில் என்உளம்!

எல்லாம் அகவழிபாடு அல்லவா? அதிலே பூவும் நீரும் மனந்தான்! இறைவன் பொருந்தி வந்து அமர்ந்த கோயில் எது? என் உள்ளமே!

ஆவியோடு இலிங்கமாய்
அகண்டம் எங்கும் ஆகிலும்
மேவுகின்ற ஐவரும்
விளங்கு தீப தீபமாய்

ஆவியோடு இலிங்கமாக எங்கும் பரந்து நிற்கிற மூர்த்திக்குச் செய்கிற ஆன்மலிங்க பூசை அல்லவா? சித்தர் பேசுகிற பூசை. அதற்கு ஏற்பவே பூசைக்கு உரிய உபகரணங்களும் அமைகின்றன!

ஐந்து புலன்களுமே ஐந்து விளக்குகள்! உள்ளமாகிய கோவிலிலே ஐம்புல விளக்குகள் எரிகின்றன, மனமாகிய பூவினால் அர்ச்சனை நடக்கிறது! மானச வழிபாடு நிகழ்கிறது!

இந்தப் பூசை - அந்திகாலத்துப் பூசையா? சந்தியா பூசையா? அதைச் சொல்லுகிறார்! அதாவது, இந்த வழிபாட்டுக்கு நேரம் காலம் என்ற கணக்கே கிடையாது. அந்தி, சந்தி இல்லாத இருபத்து நான்கு மணி நேர பூசை இது! அப்படியென்றால் என்ன பொருள்? இந்த வழிபாட்டுக்கு இடைவேளை என்பதே இல்லை. இந்தக் கோவிலிலே உச்சிக்காலம் முடிந்து நடை சாத்துவது என்பது கிடையாது! இரவுபகல் இடையீடின்றி எப்போதும் தொடர்ந்து நடக்கிற ஆன்ம வழிபாடு இது! இதற்கு நேரம் காலம் கிடையாது!

ஆடுகின்ற கூத்தனார்க்கு
அந்தி சந்தி இல்லையே!

ஆன்ம மூர்த்தியாகிய இந்த ஞானமா நடராஜ மூர்த்திக்கு, எப்போதும், எந்நேரமும் இந்த ஆன்மலிங்க வழிபாடு நடந்துகொண்டே இருக்கிறது!

பூவும் நீரும் என்மனம்
பொருந்து கோயில் என்னுளம்
ஆவி யோடி லிங்கமாய்
அகண்ட மெங்கு மாகிலும்
மேவு கின்ற ஐவரும்
விளங்கு தீப தீபமாய்
ஆடு கின்ற கூத்தனார்க்குஓர்
அந்தி சந்தி இல்லையே!

சிவவாக்கியர் நம் கண் முன்பு படம்பிடித்துக் காட்டுவது, யுகயுகாந்தரமாய், ஊழிஊழியாய், தட்டுத்தடையின்றி நடந்து கொண்டிருக்கிற பூசை!

## சமுதாய அறம்

இந்த உலக இயக்கத்தையும் இதிலுள்ள உயிர்களின் இயக்கத்தையும் செலுத்தி நடத்தி வருகிற ஆற்றல்களை ஆராய்ந்து பார்த்த உலகப் பேரறிஞர்கள் 'க்ரேவிடேஷனல் புல்' என்னும் இந்த ஈர்ப்புச் சக்திக்கு ஆதாரமாக இன்னொரு பேராற்றல் செயற்படுகிறது என்று கண்டு சொல்லியிருக்கிறார்கள்!.

நம்முடைய பூமியையும், நமது கண்ணுக்குத் தெரிகிற கோள்களையும், விண்மீன்களையும், நம்முடைய கண்ணுக்குப்

புலப்படாத இன்னும் பல்லாயிரமான சுடர்ப்பொருள்களையும், ஒன்றோடொன்று பிடித்து இழுத்துக்கொண்டு, எல்லாமே ஒரு பெரிய சட்டத்தின்படி இயங்கி வருகின்றன என்பதை, விஞ்ஞானம் ஏற்கனவே நமக்கு அறுதியிட்டுச் சொல்லியிருக்கிறது. இப்போதோ என்றால், ரஷ்யா போன்ற நாடுகளில் புதிதாக 'காஸ்மோ பயாலஜி' (Cosmo Biology) என்ற ஒரு பெரிய அறிவியல் ஆராய்ச்சியின் மூலம் மேலும் பல நுட்பங்களைக் கண்டுபிடித்து, ஒரு மிகப் பெரிய உண்மையை வற்புறுத்திக் கூறுகிறார்கள்! அதாவது நம்மைச் சுற்றிலும் இயங்கி வருகிற எல்லா வெளிமண்டலங்களுமே நம்மோடும், நமது உள்ளங்களோடும், நம்முடைய உடம்புக்குள்ளே செயற்படுகிற அத்தனை இயக்கங்களோடும், நமது உயிரோடுமே சேர்ந்து பின்னிப் பிணைந்து கட்டுண்டு, நம்மையும் இந்தப் பேரண்டச் சட்டத்துக்குள்ளேயே பிடித்து ஆட்டுகின்றன என்று, இன்றைய 'காஸ்மோ பயாலஜி' என்ற விஞ்ஞான முன்னேற்றம் பகுத்தறிவோடு நமக்கு உணர்த்துகிறது! வெறும் நம்பிக்கையில்லை இது; இது விஞ்ஞானம்!

இதை ஏன் இங்கே சொல்கிறேன் என்றால், நமது சித்தர்களுடைய இலக்கியத்தின் அடிப்படையான தத்துவ உண்மையே இதுதான்! சித்தர்கள் நமக்குக் கூறுகிற பேருண்மைகளில் எல்லாம் அடிப்படையான உண்மை, பேருண்மை, இதுதான்! அதாவது, நாம் ஒவ்வொருவரும் இந்த விசுவ சக்தியான, இந்தப் பேரண்ட ஆற்றலின் இயக்கத்தோடு சேர்ந்து சுழல்கிற சிறுசிறு துகள்களே! தனிப்பொருள்கள் இல்லை!

எனவே, எல்லாமாகச் சுழல்கிற பேரண்டச் சுழற்சியிலே சேர்ந்து சுழல்கிற உயிரியக்கத்தில் கட்டுண்டு நாமும் சுழல்கிறோம்! இந்தச் சுழற்சிக்கெல்லாம் ஆதாரமாக நின்று, சுழற்சிகளைச் சுழற்றுகிற வல்லமையோடு ஒரு மாபெரும் பேராற்றல் இருக்கிறது. என்ன பெயரில் வேண்டுமானாலும் அதை அழையுங்கள். அப்படி ஒரு பேராற்றல் இருக்கிறது என்பது சத்தியம் என்கிறது சித்தர் இலக்கியம்!

கோவில்களையும் சடங்குகளையும் உதறிக்கொண்டு பேசுவது போல் நமக்குத் தோன்றுகிற ஒரு முனிவரும் கூட, எல்லையற்ற பரம்பொருள் ஒன்று உண்டு என்பதைக் கண்டவனே! அந்தப் பரம்பொருளிடத்திலே பேரன்பும், எல்லையற்ற பெரிய நம்பிக்கையும் உடையவனாக நின்றே முனிவன் பேசுகிறான்! பொருள் அற்ற வெறும் சடங்குகளையும், மூட நம்பிக்கைகளையும் ஏளனம் செய்து பேசுகிற

ஒரு சித்தனுமே கடவுள் என்றும், பரம்பொருள் என்றும், உருவமும், பெயரும் கடந்த இறையாற்றல் என்றும் சொல்லி, அந்த ஈடுபாட்டின் அடிப்படையில் நின்றே தனது பேச்சைப் பேசுவான்! எதையும் நம்பாமல், எல்லாவற்றையும் உதறிப் பேசுகிற வெற்றுக் குரலில்லை சித்தனுடைய குரல்!

சித்தர்களுடைய இலக்கியத்திலேயே நாம் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய அடிப்படையான உண்மை இது! அதாஃது புறச்சடங்குகளையும், வெளி வேடங்களையும் துச்சமாகப் பேசுகிற சித்தனும், கடவுள் நம்பிக்கையிலும் பரம்பொருளின் பேராற்றலிலும் இதயம் தோய்ந்து ஈடுபட்டவனே ஆவான்!

அது மட்டுமில்லை, இந்த உலகிலே நன்மை, தீமை எனவும், பாவ புண்ணியங்கள் எனவும், இரண்டு இரண்டாக இயங்குகிற செயல்களிலே சித்தர்களுக்கு நம்பிக்கை உண்டு! "இதைச்செய், இது நல்லது" என்றும், "இதைச் செய்யாதே, இது தீமையானது" என்றும் நமக்கு எடுத்துச் சொல்வார்கள் சித்தர்கள்!.

'பாவம், புண்ணியம்' என்ற பகுப்புக்களை, எல்லாச் சித்தர்களும் பாடியிருக்கிறார்கள் எப்படிப் பாடியிருக்கிறார்கள்! என்றால் எளிமையிலும் எளிமையான சிறு சிறு சொற்களிலே எளிமையான அழகோடு பாடியிருக்கிறார்கள்!

பின்பக்கங்களிலுள்ள பாடல்களிலிருந்து ஒரு சிறு உதாரணம் பார்க்கலாம்.

கடுவெளிச் சித்தர் நமக்குத் தெரியும். கடுவெளி என்றால் பூமியின் நிலப்பரப்பு என்ற ஒரு பொருள்; வானத்திலுள்ள 'ஈதர்' (Ether) என்னும் விண்வெளி. ஆகாசம், என்று இன்னொரு பொருள்! கடுவெளிச் சித்தர் என்பவர் நிலத்திற்கும் வானத்திற்குமாகப் பரந்து நிற்கிற கூடுவெளியிலே பரம்பொருளைக் கண்ட ஒரு பெரிய ஞானியாவார்! எங்குமாய்ப் பரந்து நிற்கிற இந்த வெளிக்குள்ளே ஞானப் பார்வையைச் செலுத்தி, ஊடுருவிப் பார்த்து, இதற்கு ஆதாரமாக உள்ள இயக்கத்தின் ஆற்றலாகிய பரம்பொருளைக் கண்டவர், கடுவெளிச் சித்தர்! இப்படிப்பட்ட மிகப்பெரிய ஞானி மிக எளிய தமிழிலே பாபம் புண்ணியம் ஆகிய இரண்டையும் பற்றிப் பாடுகிறார்.

தந்தனக்கருவி, தெந்தனா, துந்தினா என்று பற்பல விதமாக வழங்குகிற சுரைக்குடுக்கை பார்த்திருப்பீர்கள். சுரைக்காயினால் செய்து ஒரே ஒரு கம்பியைக் கட்டி அதில் ஆட்காட்டி விரலினால் ஓர் இசையொலியை ஒற்றைத் தாளத்திலே எழுப்புவார்கள், தெருப்பிச்சைக்காரர்கள். பலர் இவ்வாறு பாடிச் செல்வதைக் கிராமப்புறங்களிலே அதிகமாகப் பார்க்கலாம். அவர்கள் பாடுகிற பாட்டின் மெட்டு, எளிமையாக இருக்கும். அத்தகைய ஒரு மெட்டிலே வருகிறது கடுவெளிச் சித்தரின் பாட்டு :

பாபம் செய்யாதிரு மனமே!

என்று பல்லவி தொடங்குகிறது.

"ஏ மனமே, நீ பாவச் செயல்களை, தீமைகளைச் செய்யாதே!" என்கிறார் சித்தர்.

உலகிலே நாம் பார்க்கிறோம். தீமைகளைச் செய்து இன்பமாக வாழ்கிற 'பெரிய' மனிதர்கள் பலர்! அப்படியிருக்கும் போது ஏன் இந்த உபதேசம்?

தீய செயல்களைச் செய்து, சமுதாய வாழ்விலே உச்சநிலையை அடையும்போது, பாவங்களைப் பற்றிய எண்ணமோ, உணர்ச்சியோ, கவனமோ அவர்களுக்கு இராது! ஊக்கமாக மேலும் மேலும் தவறுகளையே தொடர்ந்து செய்துகொண்டு போவார்கள்! பிறகு, ஆடி ஓடி ஓய்ந்து அமர்கிற பருவத்திலே, வாழ்வின் மாலை நேரத்திலே தனக்குத் தானே உள்மனம் குத்திக் காட்ட ஆரம்பிக்கும்! பின்னர், மரணமானது நெருங்க நெருங்க இந்தக் குற்ற உணர்வு மேலும் அதிகமாகும்! தன் நெஞ்சே தன்னைச்சுடத் தொடங்கும்! மரணத்தின் போது அந்த மரணத்திற்கு நிம்மதி ஏது? பழைய பாபச் செயல்கள் எல்லாம் மனக்கண்ணின் முன்னால் எழுந்து திரைப்படமாகச் சுழல் சுழலாக விரிந்து சுழலத் தொடங்கும்! ஒரே யம வாதனைதான்!

நண்பகல் பன்னிரண்டு மணிக்கு நமது நிழல் நமக்குத் தெரியாது! இது போலவே புகழின் உச்சியிலே, இன்பத்தின் நண்பகலிலே தனது பாவம் தன் கண்ணுக்குத் தெரியாது! ஆனால், ஆயுளின் மாலை நேரம் நெருங்க, நெருங்க, இந்தப் பாவ நிழல் நீண்டுகொண்டே போய்க் கண்ணுக்கு நன்றாகத் தெரிய ஆரம்பித்துவிடும்! யமன் என்ற பெயரில் வெளியிலிருந்து ஒருவன் வரவேண்டிய அவசியமே இல்லை! உள்ளேயே அவன் தோன்றிவிட்டான்!

எத்தனையோ பல கயவர்களின் முடிவுக்காலம் இப்படிப்பட்ட வேதனையிலேதான் முடிகிறது! இந்த வேதனையே யமனாக வேலை செய்கிறது! ஒரே ஆவேசத்தோடு உள்மனத்தில் வேலை செய்கிறது!

'யமன் கோபத்தோடு உயிரைக் கொண்டு போகிறான்' என்று சொல்வதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?

சித்தர் பாடுகிறார்:-

பாபம் செய்யாதிரு மனமே - நாளைக்
கோபம் செய் தேயமன்
கொண்டோடிப் போவான்
பாபம் செய்யா திரு மனமே!

சுரைக் குடுக்கையின் இசை ஒலி நிற்கிறது. ஒற்றைத் தான் மட்டும் கேட்கிறது. இப்போது மறுபடியும் அந்த இசை எழுகிறது.

சித்தர் மேலும் பாடுகிறார்:

நல்ல வழிதனை நாடு - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கட்டத்தில் கூடு - அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு!

பாபம் செய்யா திரு மனமே!

(நாடு - விரும்பி ஈடுபாடு கொள்; பரமன் - பரம்பொருள்; நத்தி - விரும்பி; வள்ளலை - கருணாமூர்த்தியான இறைவனை)

பாவங்களில் எல்லாம் பெரிய பாவம், புண்ணிய பாவ உணர்ச்சி என்பதே இல்லாமல் வாழ்வதாகும்! தினமும் நாம் என்ன செய்கிறோம் என்பது போலவே, நாள்தோறும் நாம் எது எதைச் செய்வதில்லை என்பதும் வாழ்விலே முக்கியம்! இந்த இரண்டையுமே அடிக்கோடு போட்டு உணர்த்துகிறார் கடுவெளிச் சித்தர். இதை உணர்த்திவிட்டு, உயிரின் நுட்பங்களை மிக எளிய கதையைப் போலச் சொல்லத் தொடங்குகிறார்.

## நந்தவனமும் ஆண்டியும்

இந்த உலகமானது கவர்ச்சிகள் நிரம்பியது! கண்ணையும் உள்ளத்தையும் கவர்ந்து இழுக்கக்கூடிய அழகுகள் நிரம்பியது! இதில்

உள்ள மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள், பறவைகள், விலங்குகள் எல்லாம் அழகு மயமானவை! அது மட்டுமா? ஆணுக்குப் பெண் அழகு! பெண்ணுக்கு ஆண் அழகு!

இத்தனை அழகுத் தத்துவங்களும் ஒன்றையொன்று ஈர்க்கின்றன! அதுதான் உலக இயக்கம். அதுதான் உயிர்களின் இயக்கம்.

வழிவழியாக உயிர் வர்க்கங்கள் நாமும் வாழ்ந்து தமது வம்ச வழிகளை, தமது பரம்பரையை, தாயும் சேயுமாக, மரமும் கன்றுமாக, செடியும் கொடியுமாக வளர்த்துப் பெருக்கி உயிர் வர்க்கத்தைக் காத்து வருவது இந்தக் கவர்ச்சியினால்தான்.

நிற்பனவும் நடப்பனவுமாகிய அசரப் பொருள்களும்; சரப் பொருள்களும், அறிவுள்ளனவும் அறிவற்றனவுமாகிய சேதன அசேதனங்களும், எல்லாமே இந்த ஈர்ப்புச் சக்திக்கு உட்பட்டனவே!

ஈர்ப்பு மயமான இந்த உலகியல் வாழ்க்கையில் நல்ல ஈர்ப்பு எது, தீய ஈர்ப்பு எது என்பதை ஞானத்தினால் வரையறை செய்து மனித குலத்துக்கு அதை உபதேசிப்பதே சித்தர் இலக்கியம்!

சித்தர்கள் இந்த உலகத்தை நந்தவனம் என்பார்கள்! காதலியின் கூந்தலிலே சூட்டுவதற்கும் இந்த நந்தவனத்திலே மலர்கள் உண்டு. பூசைக்குரிய பூக்களும் உண்டு. எதை எதற்கு எப்போது எப்படிப் பயன்படுத்துவது என்பதுதான் சித்தர்கள் கூறுகிற ஞானம்!

கடுவெளிச் சித்தர் இந்த உலக வாழ்வாகிய நந்தவன வாழ்க்கையை உருவகப்படுத்திப் பாடுகிறார். ஒரு கதையைப் போல ஞானத்தைப் பேசுகிறார். எப்படி?

உயிரை ஒரு துறவி என்றோ அல்லது ஆண்டி என்றோ சொல்லலாம். ஏனென்றால் இன்பமோ துன்பமோ உயிரைப் பாதிப்பதில்லை. உடலோடு சரி.

அது மட்டுமில்லை. இந்த உயிரானது ஒவ்வொரு உடலாகச் சென்று புகுந்து வெளிவந்து திரிவது! பரதேசியாகிய ஆண்டியைப் போல அது ஊர் சுற்றுவது. ஓர் உடம்பிலேயே நிலையாக நில்லாதது!

பற்றுக்கள் இல்லாததும், இன்பதுன்பப் பிணைப்புக்கள் இல்லாததும், ஓர் இடத்தில் நிலையாக வசிக்காததுமான உயிரை ஆண்டி என்று அழைப்பதிலே பொருத்தமும் அழகும் இருக்கின்றது!

கூடுவெளிச் சித்தர் பாடுகிறார்:-

நந்தவனத்தில் ஓர் ஆண்டி

எங்கோ ஒரு நந்தவனம் இருந்தது. அங்கே ஓர் ஆண்டி இருந்தான்! என்று ஒரு கதை சொல்வது போல ஆரம்பிக்கிறார் கூடுவெளிச்சித்தர்.

நந்தவனத்தில் குடியிருக்க வந்த ஆண்டி என்ன செய்தான்?

நந்தவனத்தில் ஓர் ஆண்டி
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி

நாலாறு மாதம் என்றால் நாலும் ஆறும் சேர்ந்து பத்து மாதம்!

நந்தவனத்தில் இருக்கிற அந்த ஆண்டிப் பரதேசியானவன், பத்து மாதமாக 'ஆர்டர்' கொடுத்துக் கோரிக்கை அனுப்பிவிட்டுக் காத்திருந்தான்! யாரிடம்? குயவனிடம்!

பாண்டங்கள் செய்கிற தொழிலாளியான குயவனிடம் தனக்கு ஒரு பாத்திரம் வேண்டும் என்று வேண்டி, அந்த விண்ணப்பம் நிறைவேறுவதற்காகப் பத்து மாதங்கள் பொறுத்திருந்தான்!

தோண்டி என்றால் மண்பானை. பாத்திரம். மண்ணால் ஆன குடம் என்று சொல்வதும் பொருத்தம்.

குயவனிடம் சொல்லி அந்தத் தோண்டி உருவாவதற்குப் பத்து மாதம் பிடித்தது!

சித்தர் பாடுகிறார்:-

நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி

பத்து மாதங்கள் ஆயின. அந்தத் தோண்டியைக் குயவன் செய்து கொடுப்பதற்கு!

குயவனிடமிருந்து குடத்தை வாங்கிவந்தான் அந்த ஆண்டி! கதையின் உருவகத்தை இப்போது பார்க்கலாம்.

ஆண்டி என்பது உயிர். தோண்டி அல்லது குடம் என்பது இந்த மனித உடம்பு.

குடத்துக்குள்ளே தண்ணீர் நிரம்பியிருப்பது போல இந்த உடலுக்குள் உயிரானது ஒவ்வொரு பகுதியிலும் நிரம்பி நிற்கிறது!

குயவன் யார்? இநத அண்ட பிண்ட சராசரம் அனைத்தையும் உருவாக்குகற படைப்பு ஆற்றல்! அந்த ஆற்றலை 'அவன்' என்றும், 'பிரமன்' என்றும் அழைக்கிறோம்.

படைப்புக் கடவுளாகிய அயன் என்னும் குயவன் உயிராகிய ஆண்டிக்காக ஒரு தோண்டியை, ஓர் உடம்பைச் செய்து அந்த ஆண்டியிடம் கொடுக்கிறான். தவணை பத்து மாதம்!

முழுமையான நிறை பேற்றுக்கு திதிக் கணக்கிலே பத்துமாதம் என்று ஒரு பொதுக்கணக்கு உண்டு. அதைச் சொல்லுகிறார் சித்தர்.

பத்து மாதங்கள் கழித்து உயிராகிய ஆண்டிக்கு, அயனாகிய, குயவனிடமிருந்து பாண்டம், தோண்டி கிடைக்கிறது!

தோண்டியை வாங்கிக் கொண்ட அந்த ஆண்டி நந்தவனத்திலே, அழகும் கவர்ச்சியும் நிரம்பிய இந்த உலக வாழ்விலே என்ன செய்கிறான்?

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!

"அடியே, கதையைக் கேட்டாயா?" என்று சித்தர் சிரிக்கிறார். ஞானானந்தச் சிரிப்பாகச் சிரிக்கிறார்!

மிகவும் வேண்டினான் ஆண்டி! குயவனும் மிகவும் பாடுபட்டு ஓர் அழகான தோண்டியைப் பத்து மாதங்களாகச் செய்து அதை அந்த ஆண்டியிடம் கொடுத்தான்!

எத்தனைப் பாதுகாவலாகவும், எத்தனை அக்கறையோடும் அந்தத் தோண்டியைப் பேண வேண்டும் அந்த ஆண்டி? ஆனால் அப்படிச் செய்தானா அந்த ஆண்டி?

நெறியற்ற, பொறுப்பற்ற, கட்டுப்பாடு இல்லாத பைத்தியக் காரனைப்போல என்ன செய்தான் ஆண்டி?

ஒரே கும்பக் குடம் ஆடி, குதித்துக் களித்துக் கூத்தாடி, கூத்தாடி கூத்தாடி அந்த அரிய தோண்டியைத் தரையிலே உடைத்து விட்டான்!

இந்த உடம்பு எதற்காகக் கொடுக்கப்பட்டது என்ற உயர்வை மறந்து, வாழ்வை வீணடிக்கிற பொறுப்பற்ற செயலை இப்படிப் பாடுகிறார் கூடுவெளிச் சித்தர்.

மனித உடம்பு கிடைப்பது ஓர் உயிருக்கு அரிதிலும் அரிது! இதுவே ஞானிகள் கண்ட பேருண்மை. அந்த உடம்பும் சீரான பாத்திரமாகக் கிடைத்தது. இன்னும் எத்தனை உரிய அரிய அருமை! அதை நல்ல விதத்திலே ஞானத்தோடு பயன்படுத்தாமல், கூத்தாடித் தனமாக வீணடித்தால் அந்த அவல நிலையைக் கண்டு சிரிக்கத்தானே வேண்டும்! அழவா செய்வது? சித்தர் அந்தப் பைத்தியக்காரத் தனத்தை வேதாந்தச் சிரிப்போடு பாடுகிறார்:-

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான்ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!
- நந்தவனத்தில் ஓர் ஆண்டி!

வாழ்வாங்கு வாழாமல் இந்த வாழ்க்கையைப் பொருளற்ற கேளிக்கையாகச் செய்து, உடம்பெடுத்த பயனை உணர்வோடு துய்க்காமல் வீணாக்குகிற செயலை, இப்படி ஓர் உருவகக் கதையாக வழங்குகின்றார் பேரானந்தப் பெருஞ்சுகத்தை அனுபவித்த சித்தராகிய நம் கடுவெளிச் சித்தர்!

## ஈடேற வழி

இந்த உடம்பினால் செய்ய வேண்டிய நற்செயல்கள் பல இருக்கும்போது, மனித வாழ்க்கையை வீணடிக்கிற பேதைமையைக் கண்டு சிரிக்கிற கடுவெளிச் சித்தர் மனித குலத்துக்கு உபதேசம் செய்கிறார்.

வாழ்க்கையை வீணாக்காமல் எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று அறிவுரைகள்சொல்லுகிறார் சித்தர்.

ஈடேறுவதற்குரிய வழிகள் என்ன என்பதை எளிய சொற்களிலே பாடுகிறார்:-

வேத விதிப்படி நில்லு - நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
(பாபம் செய்யாதிரு மனமே!)

உலகில் எல்லா மதங்களிலும், எல்லா மொழிகளிலும் வேதங்கள் என்றும், மறைகள் என்றும், ஞானச் சட்ட நூல்கள் தெய்விகமான நிலையிலே ஓதப்பட்டு வருகின்றன. அவற்றிலே விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளின்படி வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதுதான் அந்தந்தச் சமயத்தின் அடிப்படை!

கிறிஸ்தவனுக்கு விவிலிய தேவம். இஸ்லாமியனுக்குத் திருக்குர் ஆன் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இவை போன்று, எல்லா மொழிகளிலும், எல்லா நாட்டிலும், எல்லா மதங்களிலும் உள்ளன. சுயதருமம் என்பது இதுவே. அவரவர் தம் தமக்கு விதிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும், இவற்றிலே உயர்வு தாழ்வு கற்பிப்பது அறிவீனம் என்பதுமே சித்தர்கள் கூறுகிற ஒருமைப்பாடு. "அவரவர் இறையவர் குறைவிலர்" என்று ஆழ்வார் பாடுவதும் இதுவே.

"உனது வேதத்தில் என்ன சொல்லப்பட்டு உள்ளதோ அதை நீ கடைப்பிடிக்க வேண்டும். உன்னுடைய முன்னோர்கள், நல்லோர்கள் எப்படி நடந்து காட்டினார்களோ அப்படியே நீயும் செய்! இதுவே தருமம்" என்கிறார் சித்தர். மேலும் பாடுகிறார்:-

மெய்ஞ்ஞானப் பாதையில் ஏது - சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு - உன்னை
அண்டினோர்க்கு ஆனந்தமாம் வழி கூறு!

கடுவெளிச் சித்தர் வெட்ட வெளியிலே சித்தி பெற்றவர் என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டது. அதோடு அறிவற்ற பாதைகளை ஒதுக்க வேண்டும் தூற வேண்டும் என்றால் இல்லாமற் செய்துவிட வேண்டும் என்று பொருள். அதைச் சொல்லுகிறார் கடுவெளிச் சித்தர்.

அடிப்படையான அறங்களை இவ்வாறு சொல்லி, சமுதாயப் பழக்க வழக்கங்களிலே உள்ள நல்ல பல சட்ட திட்டங்களை ஒரு குழந்தைக்கு எடுத்துச் சொல்வது போலச் சொல்லுகிறார்.

நம்மை ஒருவர் கடுமையாகப் பேசிவிட்டாலும் நாம் பொறுமை இழக்கக் கூடாது.

வைதோரைக் கூட வையாதே!

என்கிறார், இந்த ஞானி! வைதோர்கதைத் திருப்பி வையக் கூடாது என்றால், நாமே போய் ஒருவரை வைவது இதைவிடப் பெரிய தவறு என்பதை அந்த அறிவுரையிலே உள்ளடக்கி அப்படிக் கூறுகிறார்.

வைதோரைக் கூட வையாதே - இந்த
வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே

"அவன் வைதான் நானும் வைதேன்" என்றோ, "அவன் வைததுக்குப் பதிலாக நான் வைதேன்" என்றோ சொல்வது பிசகு என்கிற சித்தர், சத்தியம் என்ற பண்பை அழுத்தந் திருத்தமாக வற்புறுத்திக் கூறுகிறார்.

"இந்த உலகமே பொய் பேசினாலும், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அத்தனை பேருமே பொய் பேசினாலும் நீ பொய் பேசாதே!" என்று அடிக்கோடு போட்டுத் தமது அறிவுரையை வரைகிறார் கடுவெளிச்சித்தர்

இனி, 'அகிம்சை'யைப் பேசுகிறார். வார்த்தைகளிலே வசவு இருக்கக் கூடாது என்றும், பேச்சிலே பொய் கூடாது என்றும், வரையறை செய்கிற இந்த ஞானி, கொடிய செயல்கள் எதுவுமே செய்யக் கூடாது என்று கண்டிப்போடு கூறுகிறார்.

'வெய்ய வினைகள்' என்றால் கொடிய செயல்கள் அவற்றைச் செய்யாதே.

வெய்ய வினைகள் செய்யாதே - கல்லை
வீணில் பறவைகள் மீதில் எய்யாதே!

தெருவிலே நம்மைக் கண்டு ஒதுங்கி ஒடுகிறது நாய். ஆனாலும் அதை விடுவதில்லை. குறிபார்த்து அந்த நாயின்மீது கல்லை எறிகிறது மனித இயல்பு!

அந்த நாய் இந்தச் சிறுவனைக் கண்டு குலைக்கவே வேண்டாம். சும்மா போனாலும் அதை அப்படியே விடுவதில்லை! மனிதமனத்தின் அடிப்படை வெம்மை இது!

நாய்களைப் போலவே தான் பறவைகளை இம்சிப்பதும் பறவைகளைக் கல்லால் எறிவது கொடிய வெம்மைச் செயலாகும்!

வைதோரைக் கூட வையாதே - இந்த
வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே!
செய்ய வினைகள் செய்யாதே! - கல்லை
வீணில் பறவைகள் மீதிலெய் யாதே!

இந்த உள்ளத்திலே பிற உயிர்கள் படுகிற வேதனையைக் கண்டு அதிலே களிக்கிற ஒரு வெய்ய இயல்பு இருக்கிறது. மனிதனுடைய உள்ளத்திலே அவனோடு பிறந்திருக்கிற விலங்கியல்பு இது! நமக்குத் தீமை செய்யாத உயிருக்குமே ஓர் இடையூற்றை அல்லது வேதனையை உண்டாக்கி, அந்தத் துயரத்திலே அந்த உயிர் தத்தளிப்பதைப் பார்ப்பதிலே நமக்கு ஓர் ஆனந்தம்! இந்த மிருக உணர்ச்சியை முதலில் நாம் வெல்ல வேண்டும் என்று கூறுகிறார் சித்தர்பிரான்!

நல்லவர் தம்மைத் தள்ளாதே

என்று மனிதக் கூட்டுறவின் மேன்மையைப் பேசுகிறார்.

மெய்க்குரு சொற் கடவாதே

என்று குரு பக்தியை வற்புறுத்துகிறார்.

பாரில் உயர்ந்தது பக்தி - அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முக்தி

என்று பக்தி நெறியை உபதேசிக்கிறார்.

அவர் கடுவெளியிலே பரத்தைக் கூடிய ஞானயோக சித்தராக இருந்தபோதிலும், மக்களுக்கு அவர் அறிவுரை கூறும்போது எல்லாருக்கும் எளிதாக இருக்கக்கூடிய பக்தி வழியையே எடுத்துச் சொல்கிறார்.

மேவுதற்கு அரிதானது முக்தி என்ற நிலை. அது மேவரு முக்தி! அந்த அரிய முக்தியை அடைவதற்குரிய எளிய வழி பக்தியே!

"இனிய முறையிலே வழிபாடு செய்! அன்பு என்னும் மலர்களை இறைவனுக்கு அர்ச்சனை செய். ஆனந்த மயமான தேவனை,

இறைவனை, ஆனந்த மயமாக நீயும் வழிபாடு! உடம்பை வருத்த வேண்டாம். இந்த எளிய இனிய முறையை, நல் வழிபாட்டை, நீ கடைப்பிடி! உன் உடலும் ஆவியாகிய உயிரும் ஈடேறும்! படிப்படியாக. நீ வழிபட வழிபட, நாள்தோறும் உன் உடலும் ஆவியும் ஈடேறும். இது மிக இன்பமான வழி. இந்தப் பூசை நெறி! மலர்களுக்காக, அர்ச்சனைப் பூக்களுக்காக, நீ அலைந்து தேட வேண்டாம்... அன்பு மலர், அதுவே பெரிய மலர்! அதுவே பெரிய அர்ச்சனை! இந்த உலகில், இந்த உலக வாழ்வில், இல்லறத்தில் குலாவி இருந்துகொண்டே இதைச் செய்யலாம், துறவியாக நீ மாற வேண்டாம்!" என்று எளிமையிலும் எளிமையாக மனிதன் ஈடேறுவதற்குரிய வழியை உபதேசிக்கிறார்:-

அன்பெனும் நன்மலர் தூவி - பர
மானந்தத் தேவன அடியினை மேவி
இன்பொடும் உன்னுடல் ஆவி - நாளும்
ஈடேறத் தேடாய்நீ இங்கே குலாவி!

பெரிய பெரிய யோக மார்க்கங்களிலே தேர்ந்த சித்தர் கடுவெளிச் சித்தர், எல்லா நிலையிலும் உள்ள சாதாரண மக்களும் எளிதாகச் செய்து ஈடேறுவதற்கு இப்படி ஒரு மார்க்கத்தை, எளிய வழியை நமக்குக் கூறுகிறார்.

## நல்ல பழக்கங்கள்

இந்த மனித சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருந்துகொண்டே, துறவியாகாமலேயே, கடவுளின் திருவருளைப் பெறுவதற்குரிய நல்ல வழிகளையும் பழக்க வழக்கங்களையும் எளிய முறையிலே எடுத்துச் சொல்கிறார் கடுவெளிச் சித்தர்.

"தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே"

என்று ஒரு போதனை! சமுதாய வாழ்விலே கடைப்பிடிக்க வேண்டிய ஒரு பெரிய நல்லறம் ஆகும் இது!

சாதாரண மனித இயல்பு என்னவென்றால், கலக்கிய தண்ணீரிலே மீன் பிடிப்பது! அதாவது சூழ்நிலை குழம்பியிருந்தால் அதிலே ஆதாயம் பார்ப்பது!.

'கோள்மூட்டுவது' என்று சொல்லுகிறோம் அல்லவா? அது மட்டுமில்லை. இரண்டு பேர் மனத்தாங்கலாக இருந்தார்கள் என்றால்,

அந்தத் தாங்கலுக்குள்ளே புகுந்து நிலைமையை மேலும் சிக்கலாக்குவது என்று ஒரு குணம் உண்டு! சண்டை இன்னும் வலுக்கும்! ஊடே புகுந்தவனுக்கு ஆதாயம்! எரிகிற திரியை இன்னும் நன்றாகத் தூண்டுவிடுகிறது! நெருப்பிலே மண்ணெண்ணெய் விடுவது! இதெல்லாம் சிலருடைய சில்விஷமங்கள்!

இப்படிப்பட்ட கேடான காரியங்களைச் செய்யாதே என்கிறார் சித்தர் - பாபம் செய்யாதே என்பது பல்லவி!

இந்த அளவுக்கு உலகியலை ஆராய்ந்து நீதிமொழிகளைக் கூறுகிற சித்தர், சில கெட்ட பழக்கங்களை அறவே கூடாது என்று கண்டிக்கிறார்.

கஞ்சாப் புகைபிடி
யாதே - வெறி
காட்டி மயக்கிடும்
கள் குடியாதே!

போதை தருகிற புகையைப் பிடிக்கும் பழக்கத்தைச் சித்தர் வன்மையாகக் கடிகிறார். புகை பிடிப்பது போலவே கள் முதலிய பானங்களை அருந்துவதையும் தடுக்கிறார். முதலில் வெறியைக் காட்டிப் பிறகு மயக்கத்தை உண்டாக்கிப் பின்னர் அதல பாதாளத்தில் தள்ளிவிடுகிற பொருள்தான் கள்! கள் என்றால் கள்ளும் அதன் தம்பியும் அண்ணனும் தாயாதிமார்களும் எல்லாமே சேர்ந்துதான்!

காந்திஜி நாட்டின் நன்னல வாழ்வுக்கு அடிப்படையாக, மதுவிலக்கை உபதேசித்தார். அதோடு அகிம்சையை இணைத்தார். அந்த முறையிலேயே வருகிற கடுவெளிச் சித்தரின் பாடல்:

கஞ்சாப் புகைபிடி யாதே - வெறி
காட்டி மயக்கிடும் கள்குடி யாதே!
அஞ்ச உயிர்மடி யாதே - பக்தி
அற்றஅஞ் ஞானத்தின் நூல்படி யாதே!
- பாபம் செய்யாதிரு மனமே!

மதுவிலக்கு, அகிம்சை, துதி நூல்கள் ஓதுவது என்ற மூன்றும் காந்தீயத்தின் ஆதாரமான கொள்கைகள்! சத்தியத்தைப் பற்றி ஏற்கெனவே சித்தரின் அறிவுரையைப் பார்த்தோம்.

நமது தேசத் தந்தையான மகாத்மா நமது நாட்டின் முனிவர்களும் சித்தர்களும் கூறியுள்ள அடிப்படையான பாரத தருமத்தின் மீதிலேயே தமது சித்தாந்தத்தை நிறுவினார் என்பதற்கு இதெல்லாம் உதாரணமான பாடல்கள்.

இனி, ஜாதி பேதங்கள், நீதி உணர்வு ஆகிய பெரிய கொள்கைகளை எடுத்துரைக்கிறார் சித்தர்:

எவ்வகை யானநன் னீதி - அவை
எல்லாம் அறிந்தே எடுத்துநீ போதி!

உலகிலே என்னென்ன நன்னீதிகள் உண்டோ அத்தனை நீதிகளையும் கற்றுக்கொள்! அவற்றை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்!

இதற்குமேல் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஒவ்வாமல், அதாவது ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாமல், முரண்பட்டுச் சண்டையிடுகின்றன நமது சாதிமுறைகள்! எல்லாம் ஒரே சாதி என்பதே பேருண்மை என்பதை வற்புறுத்துகிறார்.

ஒவ்வாஎன் றபல சாதி-யாவும்
ஒன்றென் றறிந்தே உணர்ந்திடு ஓதி!

ஓதி ஓதி உணரவேண்டிய உண்மை இது. அறிவினால் அறிந்து கொண்டால் மட்டும் போதாது! எல்லாம் ஒன்றே என்னும் அறிவை முதலில் பெறவேண்டும். அதுவே ஒரு பெரிய சாதனைதான். இனி, அவ்வாறு அறிந்துகொண்டால் மட்டும் போதாது. அதை உணர வேண்டும். உணர்ந்தால் மட்டும் அது நிலையாக நிற்காது. ஓதி ஓதி உணரவேண்டிய ஒரு பயிற்சி அது! அந்தப் பயிற்சியை உபதேசிக்கிறார் கடுவெளிச் சித்தர்!

எவ்வகை யானநன்
னீதி - அவை
எல்லாம் அறிந்தே
எடுத்துநீ போதி!

ஒவ்வா என்றபல
சாதி - யாவும்
ஒன்றென் றறிந்தே
உணர்ந்திடு ஓதி!
- பாபம் செய்யாதிரு மனமே!

ஒருமைப்பாடு என்பது இன்று நேற்று உபதேசிக்கப்பட்ட அறமில்லை! நமது பாரத தேசத்தின் ஞானிகள், சித்தர்கள் அனைவரும் பல நூறு ஆண்டுகளாக நமக்கு மீண்டும் மீண்டும் அந்தந்தக் காலத்து மொழிகளிலே அவ்வப்போது செய்துவருகிற மிகப் பெரிய உபதேசமாகும்!

எத்தனையோ மகான்கள் எத்தனையோ முறை, எத்தனையோ வடிவத்தில் சொல்லிவந்த போதிலும், மனித குலத்தின் உணர்வுக்குள்ளே ஒருமைப்பாடு என்ற மந்திரம் எளிதில் புகுவதில்லை! எல்லாம் ஒன்றே என்ற அறிவு தோன்ற வேண்டுமானால் அது எத்தனை சாதனையான செயல்! அதனால்தான் இத்தகைய நல்லுணர்வுகள் நலியும்போதெல்லாம் அவை மீண்டும் மலர்ச்சி பெறுவதற்காக இறைவனுடைய குரல்போல மகான்களின் குரல் எழுந்து ஒலிக்கிறது. ஆதிநாள் தொடங்கி நேற்று நம் காதிலே ஒலித்த காந்திஜியின் குரல்வரை, இந்த ஒலி அனைத்தும் தெய்வத்தின் குரலே! யுக தருமத்தைப் பேசுகிற சத்தியத்தின் குரலே!

தாழ்வுற்றுக் கிடக்கிற சமுதாயத்தை ஈடேற்றுவதற்காக, அவ்வப்போது பெரியோர்கள், ஞானிகள், மகாத்மாக்கள் தோன்றி மனித குலத்தின் மனச்சாட்சியாக ஒலிக்கிறார்கள்; ஒலி கொடுக்கிறார்கள்! அவ்வாறு ஒலிகொடுக்கும் ஞானப் பேருணர்வின் குரல்களிலே ஒன்றுதான் கடுவெளிச் சித்தரின் குரலும்! அந்தக் குரலிலே சாதராண மக்களுக்குப் புரிகிற சாதாரண மொழிகளிலே, சாதாரண வாழ்வின் சாதாரணமான பழக்கங்களிலே நல்லன எவை எவை என்பதைக் கூறிப் பேரானந்தப் பெருவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் கடுவெளிச் சித்தர்!

## ஆடு பாம்பே!

சித்தர்களுடைய பாடல்கள் என்று சொன்னதுமே நமது தமிழ்நாட்டு மக்களுக்கு, உடனே நினைவிற்கு வருகிற மகான்களில் ஒருவர்தான் பாம்பாட்டிச் சித்தர்! 'ஊத்தைக் குழியிலே' என்று தொடங்குகிற அவருடைய பாடலும், 'நாதர் முடிமேலிருக்கும்' என்று

ஆரம்பிக்கிற பாம்பாட்டியாரின் மற்றொரு பாடலும் தமிழகத்திலே அவ்வளவு தூரம் புகழ்பெற்று விளங்குபவை!

நல்ல பாம்பு என்று நினைக்கும்போது நம் கண்முன் நிற்கிற இயல்புகள் யாவை? படம் எடுத்து ஆடுவதும், சீறிப் பாய்வதுமே அல்லவா? அதோடுகூட, பாம்புக்குக் கண்ணே செவி என்றும், செவியே கண் என்றும் உணர்த்துகிற ஒரு பழைய தமிழ்ச்சொல்லாகிய 'கட்செவி' என்னும் சொல்லும் நமக்கு நினைவு வரும். எனவே அந்தப் பாம்பையே ஆன்ம சக்திகளுக்கு உருவகமாக நம் சித்தர்கள் எல்லாரும் எடுத்துக் கொண்டார்கள். சீறுவதும் ஆடுவதுமாகிய இயல்பு கொண்ட நமது மூச்சைப் பாம்பாக உருவகித்தார்கள். அதுபோலவே யோகப்பயிற்சி முறையிலே கண்ணினால் கேட்பதும், செவியினால் பார்ப்பதும் ஆகிய ஒரு பெரிய இரகசியமான யோகமுறை உண்டு! அதையும் கட்செவியாகிய பாம்போடு இணைத்து உருவகம் செய்தார்கள். அதாவது மனித உடம்பின் முதுகுத்தண்டு என்று சொல்லப்படுகிற 'வெர்ட்டிப்ரா' இருக்கிறதே அது, வாலிலே புறப்பட்டுப் பிடரி வரைசென்று படம் எடுத்து அமைந்திருப்பதையும் பாம்பு என்றார்கள். ஆகையினால்தான் குண்டலினி என்ற ஆன்ம ஆற்றலுக்கு 'சர்ப்பன்ட் பவர்' 'பாம்பின் ஆற்றல்' என்ற மரபுச்சொல் வங்குகிறது.

இத்தனை உருவகங்களையும் நன்றாக நினைவிலே நிறுத்திக் கொண்டு, அந்த நினைவோடு பாம்பாட்டியாரின் பாடல்களைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் தத்துவத்துக்குள்ளே இருக்கிற உட்புதையலான ஞானப் பொருள் நன்கு புரியும்.

பாம்பாட்டிச் சித்தருடைய பாடல்களின் இன்னொரு சிறப்பு என்னவென்றால் இத்தனை உருவகங்களையும் விட்டுவிட்டு, ஒரு சாதாரணமான பாம்பைப் பார்த்துப் பாடப் பெற்ற கவிதைகள் என்று எண்ணி இந்தப் பாடல்களைப் பார்த்தாலும் அவற்றின் நயம் நம்மைக் கவர்வதாக இருக்கிறது!

மற்ற எல்லாச் சித்தர்களையும் போலவே, பாம்பாட்டிச் சித்தரும் மிகுந்த பணிவோடும் பேரன்போடும் குருவுக்கு வணக்கம் சொல்லுகிறார். அந்த வணக்கத்தையும் பாம்பைப் பார்த்தே பாடுகிறார்.

ஞானகுருவின் சிறப்புக்களைப் பலவிதத்திலும் வியந்து வணங்கிப் பாடுகிறார். அந்த ஆசாரியனின் வல்லமைகளை எல்லாம் எப்படிக் கூறி முடிப்பது என்று ஒரே வியப்போடு பேசுகிறார்.

'பரகாயப் பிரவேசம்' என்னும் 'கூடுவிட்டுக் கூடுபாய்தல்' என்றும் ஒரு சித்தி உண்டு. தன் உடம்பிலுள்ள உயிரை இன்னொரு உடம்புக்குள்ளே செலுத்திப் புகுந்து, அந்தப் புதிய உடம்பிலே இயங்குகிற ஆற்றல் இது! இத்தகைய ஆற்றலோடு 'வீடுபேறு' என்கிற மேலான முத்தி நிலை மேலும் மேலும் தொடர்ந்து கற்பிக்க வல்லவர் ஞானகுரு. அவரை வணங்குகிறார் பாம்பாட்டிச் சித்தர்.

கூடுவிட்டுக் கூடுபாயும் கொள்கை உடைய
குருவினது வல்லமை யார்கூற வல்லார்?
வீடுபெறும் வகையை மேன்மேலும் காட்டும்
மெய்க்குருவைப் பணிந்துநின்று ஆடு பாம்பே!
ஆடு பாம்பே, தெளிந் தாடு பாம்பே!

## ஆதி வணக்கம்

சித்தர் என்றாலே அவர்கள் பாம்பைப் பிடித்து ஆட்டுகிறவர்கள் என்று பார்த்தோம். அதாவது உடம்பின் அகத்திலே உள்ள நல்லபாம்பைப் பிடித்து ஆட்டுகிற வல்லமை படைத்தவர்.!

ஞானகுருவுக்கு வணக்கம் செலுத்துகிற பணிவன்போடுதானே பரம்பொருளுக்கு வணக்கம் கூறுகிறார் பாம்பாட்டியார்!

சிவனுடைய திருவடியை, அந்தச் சிவனார் சீர்பாதத்தை ஆன்மக்கண்ணால் கண்டு கொண்டோம் என்ற மெய்யறிவோடு அந்தத் தெளிவோடு, பாம்பினிடம். பேசிப் பாம்பை ஆட வைக்கிறார் சித்தர்!

தெருவிலே நாம் பார்க்கும் பாம்பாட்டிகளைப் போலவே இந்தச் சித்தரும் அகப்பாம்போடு பேசி ஞான விளையாட்டு விளையாடுகிறார்.

தெளிந்து தெளிந்துதெ ளிந்தாடு பாம்பே
சீர்பாதம் கண்டுதெளிந் தாடுபாம்பே!
ஆடுபாம் பேதெளிந் தாடுபாம்பே - சிவன்
அடியினை கண்டோமென் றாடுபாம்பே!

என்பது அவர் பாடல்.

'அடியிணை' என்றால் இணையடி, இரண்டு அடிகள் என்று பொருள்.

சித்தர்களுடைய மொழியிலே, இரண்டு அடிகள் என்பதற்கு ஒரு தத்துவ பொருள் உண்டு. வலமும் இடமுமான இரண்டு திருவடிகள் என்று சொல்லும்போது, சூரிய சந்திர ஆற்றல்களே குறிக்கப்படுகின்றன.

சிவன், சிவை என்று அப்பனையும் அம்மையையும் அழைக்கிறோம். ஆதியும் அவனுடைய பாதியும் வலமும் இடமுமாக இயங்குகிறார்கள். 'சிவாய நம' என்று ஓதுவது போலவே, 'சிவாய்யாம் நம:' என்றும் ஒரு மந்திரம் , இரண்டு சிவர்களை வணங்குவதாக இதற்குப் பொருள் இதுவே சிவனாகிய ஈசனையும், 'சிவை' என்று அழைக்கப்பெறுகிற ஈசுவரியையும் குறிக்கிறது!

இரண்டு தெய்வ ஆற்றல்களும் மட்பாண்டமான இந்த உடம்பிலே, இந்த மண் ஆற்றலோடு சேர்ந்து இயங்குகின்றன! 'பாஸிடிவ்', 'நெகடிவ்', 'எர்த்' என்று மூன்றும் இணைந்து மின்சார ஆற்றல் தொழிற்படுகிறது அல்லவா? அப்படி ஒரு நுட்பம் இது! மின்சாரம் மட்டுந்தானா? இல்லை. இந்த உலகிலுள்ள எல்லா வகையான ஆற்றல்களும் இந்த மூன்று இணைப்புக்களிலேதான் செயற்படுகின்றன என்பதை அறிவியற்கண் கொண்டு ஆராய்ந்து கண்டவர்கள் நம் முன்னோர்களாகிய சித்தர்கள்! இந்த மூன்று ஆற்றல்களோடு லயமாகி, உள்ளமும் உயிரும் பேருணர்வு நிலையிலே உடம்புக்குள்ளே சென்று, ஒன்றி நின்ற மோனசமாதி யாதல் என்கிற பெரிய தியானமே ராஜயோகம்! அதை 'நீடுபதம்' என்று சித்தர்கள் வர்ணிப்பார்கள். ஜீவன் முத்தர்கள் அவர்கள்!

நித்திய ஞானப் பெருவாழ்வு என்னும் அந்த நீடுபதம், நமக்குச் சொந்தமாகிவிட்ட சொத்து என்று பாடுகிறார் பாம்பாட்டிச் சித்தர்! அந்த நீடுபதமாகிய பேரின்பப் பெரு வாழ்வுக்குத் தமது சீடர்களைப் பழக்குகிறார் சித்தர்! அந்தப் பயிற்சி நடைபெறும்போது, அந்தப் பெரும்பாடான, பெருநிலையான, பயிற்சிக்கு நடுவிலே கடவுளை விடாமல் நன்றாகச் 'சிக்' என்று பிடித்துப் பன்னிப் பன்னிப் பரவவேண்டும் என்று, பாம்புக்குக் கூறுகிறார் பாம்பாட்டிச் சித்தர்! அத்தனை ஞானயோக முயற்சியின் போதும், தெய்வப் பிடியை விட்டுவிடாமல் மூச்சானது ஆடவேண்டும், சுவாசம் இயங்கவேண்டும்! அதைப் பாடுகிறார்:

நீடுபதம் நமக்குஎன்றும் சொந்தமொன்றே
நித்தியமென் றேபெரிய முத்தியென்றே
பாடுபடும் போதும்ஆதி பாதம்நினைத்தே
பன்னிப்பன்னிப் பரவிநின் றாடுபாம்பே!

ஆடுபாம்பே! தெளிந் தாடுபாம்பே!
தெளிந்து தெளிந்துநின் றாடுபாம்பே!

## வாலைப் பெண்ணாள்

சித்தர் இலக்கியங்களிலே பிற்காலத்தில் எழுந்த பல கும்மிப் பாடல்களில வாலைக் கும்மி என்று பெயர்பெற்ற ஒரு தொகுப்பு இருக்கிறது.

பாடல்கள் கும்மி என்னும் நாட்டுப்புறச் சந்தத்தில் நயமாக இருப்பதோடு, சித்தர்களின் கொள்கை மரபுகளைத் தெளிவாக மிக எளிய தமிழிலே கூறும் பாங்கோடு மிளிர்கின்றன.

வாலை என்பது 'பாலா' என்றும், 'பாலா திரிபுரசுந்தரி' என்றும் வணங்கப் பெறுகிற அம்பாளின் சிறுமி வடிவாகும்! திருமூலருடைய திருமந்திரங்களில் இந்தச் சிறுமியாகிய அன்னையைப் பற்றிய மந்திரப் பாடல்கள் மிக அற்புதமாகத் திகழ்கின்றன. வடமொழியில் பல முனிவர்கள் இந்தத் தெய்வத்தைப் பாடியிருக்கிறார்கள். முத்துசுவாமி தீக்ஷிதரும், தியாகராஜரும், சியாமா சாஸ்திரியும் இவளைத் தான இசையோடு கீர்த்தனங்களியற்றிப் பாடலால் வழிபடுகிறார்கள்! இந்தப் பாலா வழிபாடு, நமது பாரத தேசத்தின் புகழ்பெற்ற தொன்மையானதோர் வழிபாடாகும்.

'வாலைக்கும்மி' என்ற சித்தர் நூல், தனது யாப்பு முறையிலே தமிழ்ப்புலவர்களின் செய்யுள் இலக்கிய நெறியைப் பின்பற்றி இறை வணக்கத்துடன் தொடங்குகிறது.

கும்மித் தமிழிலே விநாயகரை வணங்குகின்ற காப்புப் பாடலிலே, பாலவிநாயகரையே வணங்குகிறார் இந்தச் சித்தர் - பாலாம்பிகையைப் பாடுவதற்காக!

சக்தி சுடாதரி வாலைப்
பெண்ணாம் - அந்த
உத்தமி மேற்கும்மிப்
பாட்டுரைக்க
வித்தைக் குதவிய ஒற்றைக்
கொம்பன் - வாலை
சித்தி விநாயகன்
காப்பாமே!

வியாச முனிவர் பாரதம் எழுதுவதற்கு உதவியவரல்லவா கணேச மூர்த்தி! மேரு மலையிலே அந்தப் பாடல்களை எழுதிவரும்போது எழுத்தாணி உடைந்துவிடவே, உடனே அந்த ரசிகப் பெருமான் தனது கொம்பையே ஒடித்து, வேகம் தடைப்படாமல் மேலே எழுதிக்கொண்டு போனான். வியாசர் சொல்லச்சொல்ல! வியாசருடைய காவிய வேகத்திற்கும், பெருமைக்கும், விநாயகனுடைய ரசிக உள்ளத்துக்கும் எப்படி அழகாக வெளிச்சம் போடுகிறது இந்த வரலாறு!

ஒடிந்த கொம்பு கையிலே! முகத்தில் மற்றைய ஒற்றைக் கொம்பு! இந்த விநாயகன் வித்தைக்கு உதவியவன் என்பது வரலாறு!

அப்படிப்பட்ட கணபதியைத் தமது வாலைக்கும்மிக்குக் காப்புக் கடவுளாக வணங்கித் தமது நூலைத் தொடங்குகிறார் சித்தர்! அடுத்து சரஸ்வதி வணக்கம்! கலைமகளை ஒரு நடன நாயகியாகப் பாடுகிறார் சித்தர்!

சித்தர்கள் போற்றிய
வாலைப் பெண்ணாள் - அந்தச்
சத்தியின் மேற்கும்மிப்
பாட்டுரைக்க
தித்திமி தோம்என
ஆடும் சரஸ்வதி
பத்தினி பொற்பாதம்
காப்பாமே!

நர்த்தன சரஸ்வதியை வணங்கி, இந்தக் கும்மியாகிய நர்த்தனத்தைத் தமிழ்ப் பாடலிலே தொடங்குகிறார் வாலைச் சித்தர்!

விநாயகரையும் கலைமகளையும் துதித்து விட்டுச் சற்குருவாகிய சிவபெருமானையே வணங்குகிறார்! கங்கை அணிந்த சிவசம்பு, குருவுக்கெல்லாம் குருவாகிய தட்சிணாமூர்த்தியாம் சற்குரு அல்லவா அவன்! திருமாலின் தங்கையாகிய அம்பாளைப் பாடுவதற்கு அந்தச் சற்குரு காப்பாக நிற்பானாக!

எங்கும் நிறைந்தவள் வாலைப் பெண்ணாம் - மாலின்
தங்கையின் மேற்கும்மி பாடுதற்குக்
கங்கை அணிசிவ சம்புவாம் சற்குரு
பங்கயப் பொற்பாதம் காப்பாமே!

விநாயகர், கலைமகள், சிவன் ஆகிய தெய்வங்களுக்குக் காப்பு சொல்லிவிட்டு, முருகனுக்கு வருகிறார்! பொன்மான் ஈன்ற பெண்மான் அல்லவா வள்ளி! அந்த வள்ளிக்கு இசைந்த மணவாளனாகிய மால்முருகேசனை வணங்குகிறார்.

ஞானப்பெண் ணாம்அருட்
சோதிப் பெண்ணாம் - ஆதி
வாலைப்பெண் மேற்
கும்மி பாடுதற்கு
மாலைப்பெண் ணாக்கிய
வள்ளிக் கிசைந்திடும்
மால்முரு கேசனும்
காப்பாமே!

அடுத்து மதுரையை ஆண்டவனாகிய இந்த வாலையாகிய ராஜ பாண்டிப் பெண்ணின் கும்மிக்கு, காண்டீபனாகிய அர்ஜுனனுக்குப் பணிபூண்டான் அல்லவா பார்த்தசாரதி, அந்த வைகுந்த நாதனை வணங்குகிறார்.

ஆண்டிப்பெண் ணாம்ராச
பாண்டிப்பெண்ணாம் - வாலை
அம்பிகை மேற்கும்மி
பாடுதற்குக்
காண்டீப னார்பணி
பூண்டவன் வைகுந்தம்
ஆண்டவன் பொற்பதம்
காப்பாமே!

இனி சித்தர்களுக்கு உரிய ஒரு முக்கிய வணக்கம் வருகிறது! பரம்பொருளோடு தம்மைத் தொடர்பு படுத்துகிற பிணைப்பாற்றலை, நந்தி என்று வணங்குவது சித்தர் மரபாகும்! நந்தியே சித்தர்களின் ஆன்ம குரு! சிந்தையினுள்ளே இறையாற்றலாக வியக்கத்தக்க விதத்திலே முன்வந்து சித்தர்களின் எல்லா ஆற்றல்களையும் இயக்குகிறவர் நந்தி பெருமான்! அந்த நந்திக்கு வணக்கம் கூறுகிறார் வாலைச் சித்தர்.

அந்தரி சுந்தரி வாலைப்
பெண்ணாம் - அந்த
அம்பிகை மேற்கும்மி
பாடுதற்குச்
சிந்தையில் முத்திநல்
வித்தையாய் வந்திடும்
நந்தீசர் பொற்பதம்
காப்பாமே!

## எல்லாம் மெய்யே

சித்தர்களைப் பற்றிப் பொதுமக்களிடையே பரவலான ஒரு கருத்து நிலவுகிறது. அது என்னவென்றால், இந்த மனித உடம்பை அவர்கள் மிகவும் இழிவாகப் பேசுவார்கள்; மிகவும் வெறுப்போடு இந்த உடம்பை ஏசிப் பேசுவதோடு, பெண்களை மிகவும் தாழ்வாக வைத்துப் பாடுவார்கள் என்பதாகும்.

இந்தக் கருத்து விரிந்து பரவியிருப்பதற்குக் காரணம், பயனற்ற கேளிக்கைகளிலேயே வாழ்நாளை முழுதுமாகக் கழித்து, நிலையான நற்பேறு அடையாமல் மனிதர்கள் வீணாகி விடக்கூடாதே என்ற எண்ணத்தில் சில சித்தர்கள் ஒருசில பாடல்களைக் கடுமையாகப் பாடியுள்ளார்கள் என்பதனாலேதான்! ஆனால், சித்தர்களின் உண்மையான அடிப்படைக் கொள்கை ஞான ஒருமைப்பாடலேயாகும்!

நமக்குக் கிடைத்துள்ள இந்த உடம்பு, மிகப் பெரிய ஆன்ம சாதனமாகும் என்பதே சித்தர்களுடைய கொள்கை! அதோடு, பெண்கள் எல்லோரும் அன்னையாகிய இறைவியின் வடிவங்களே என்றும் சித்தர்கள் கூறுகிறார்கள். மோசமான இயல்புள்ள ஒரு சிலரைப் பற்றி அவர்கள் எச்சரிக்கையாகச் சொன்ன வார்த்தைகளை, எல்லாருக்குமாகச் சொன்ன வார்த்தைகளாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

இந்த உடம்பைப் பற்றி மிக மிக உயர்வாகவே வருகிறது வாலைக் கும்மியின் வாசகம்:

ஊத்தைச் சடலம் என்று
எண்ணாதே - இதை
உப்பிட்ட பாண்டம்
என்றெண்ணாதே!

அழுகிப் போகிற பொருள்களோடு சேர்த்து இந்த உடம்பையும் எண்ணிவிடக் கூடாது என்கிறார் சித்தர்!

அழியக்கூடிய தன்மை இதற்கு உண்டு; ஆனால் பிறவியை அழியாது காப்பாற்றக்கூடிய மாபெரும் ஆற்றலும் இதற்குள்ளேயே இருக்கிறது! எல்லாம் பார்க்கிறவனுடைய பார்வையைப் பொறுத்தது!

பார்த்த பேருக்கே
ஊத்தையில்லை - இதைப்
பார்த்துக்கொள் உன்றன்
உடலுக்குள்ளே!


இந்தச் சரீரத்துக்குள்ளே உற்றுப்பார்க்கத் தெரிந்துகொண்டால், இந்த உடம்பானது எவ்வளவு உயர்ந்த சிறந்த பொருள் என்பது புலனாகும்! 'அகப்பார்வை' என்ற இரகசியம் கைவந்தவர்களுக்கு அது புரியும். இந்த உடம்பு இழிவான பொருள் இல்லை. இது மிகமிக உயர்ந்த பொருள் என்பது அப்போதுதான் புலனாகும்!

அது மட்டுமா? மேலும் பாடுகிறார் தமது ஞான மொழிகளை:

இன்றைக்கு இருப்பதும்
பொய்யல்லவே - வீடும்
என்வாழ்க்கை என்பதும்
பொய்யல்லவே!
இல்வாழ்க்கை என்பதும்
பொய்யல்லவே!

"யாரடா சொன்னது, இதெல்லாம் பொய்கள் என்பதாக?" என்று அதட்டிக் கேட்கிறார் சித்தர்.

இன்றைக்கு நாம் இருப்பது பொய்யா? இல்லை, இந்த வீடு, நமது இல்லம், இது பொய்யா? இல்லை! வாழ்க்கை என்று, காலையிலே தூக்கத்திலிருந்து எழுவதும், அலைவதும், உண்ணுவதும், உறங்குவதும், மீண்டும் எழுவதுமாகி வாழ்கிறோமே, இது பொய் என்று எவன் சொன்னது? அத்தனையும் மெய். அத்தனையும் உண்மை! சித்தர் இதோடு நிறுத்தவில்லை. நம்மைக் கைப்பிடித்தாளே மனைவி, அவள் பொய்யா? இல்லை நாம் பெற்ற பிள்ளைகள், அவை பொய்யா? இல்லை!



பெண்டாட்டி யாவதும்
பொய்யல்லவே - பெற்ற
பிள்ளைகள் ஆவதும்
பொய்யல்லவே!
கொண்டாட்ட மான
தகப்பன் பொய்யோ - முலை
கொடுத்த தாயும்
பொய்யாமோ?

நமக்குப் பாலூட்டி வளர்த்த நம் தாய் எப்படிப் பொய்யாவாள்? நம்மை ஆளாக்கிய தகப்பனைப் பொய் என்று எப்படிச் சொல்லுவது! அப்படி எல்லாம் பொய் என்பது அறிவீனம். அத்தனையும் உண்மை. அத்தனையும் மெய் என்பதே மெய்! அதனால் தான்,

இன்றைக்கு இருப்பதும்
பொய்யல்லவே - வீடும்
இல்வாழ்க்கை என்பதும்
பொய்யல்லவே!

என்று ஆணித்தரமாகக் கும்மி அடிக்கிறார் வாலைச்சித்தர்.

சித்தர்களுடைய சித்தாந்தத்தின் அடிப்படை இதுவேயாகும் பொய் என்று நாம் இழிவாக எண்ணுகிற பொருளுக்குள்ளும் செயலுக்குள்ளும் நிலையான மெய்யைக் காட்டுகிறவனே சித்தன்! இதையே மேலும் பாடுகிறார் வாலைக் கும்மியிலே!.

## சக்தியாகிய தத்துவம்

இல்லற வாழ்க்கையும், மனைவியும், சுற்றமும், தாய் தகப்பனும், எல்லாமே மெய் என்றும், பொய் இல்லை என்றும் உறுதியோடும் ஆனந்தத்தோடும் பாடுவதோடு மனித உறவுகள் அனைத்துமே பராசக்தியின் தத்துவம் என்கிறார் சித்தர். சில புரட்சிக் கருத்துக்களையே கூறுகிறார், அற்புதமாக!

சிவன் என்றும், சிவை என்றும், கடவுட் தத்துவத்தை ஆணாகவும் பெண்ணாகவும் கூறுவது மரபு: இந்த இரண்டுமே ஒன்றுதான் என்பதோடு இரண்டுமே வாலைதான் என்கிறார் வாலைச்சித்தர். அப்படிச் சொல்லுகிற முறையிலே, சிவபெருமானுடைய செயல்களையெல்லாம் அம்மையின் செயல்களாகவே வருணித்துப் பாடுகிறார்.

மார்க்கண்டேயனுக்காகக் காலனை, எமனை, உதைத்தது யார்? பராசக்தி தான்!

தேவர்கள் உய்யும்பொருட்டுப் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விஷம் வந்ததே. அந்தக் கொடிய நஞ்சை உண்டது யார்? எல்லாம் எங்கள் வாலையாகிய திருவருட் சக்திதான் என்று, கும்மியடித்துக்கொண்டு கூத்தாடுகிறார் வாலைச் சித்தர்!

காலனைக் காலால் உதைத்தவளாம் - வாலை
ஆல்கா லவிடம் உண்டவளாம்!

வாலையின் செயல்களை எப்படியெல்லாம் எடுத்துச் சொல்லுவது! இந்த உலகங்களையெல்லாம் படைத்தது யார் என்று நினைக்கிறீர்கள்? அவளே தான். அந்த வாலையானவள் மாளாத, அதாவது, மீண்டும் மீண்டும் மறைந்து மறைந்து தோன்றிக்கொண்டே இருக்கிற, இந்த சகத்தைப் படைத்துத் தந்துவிட்டு, மனித உடம்பாகிய ஒரு சிறந்த கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு, அந்தக் கோட்டைக்குள்ளே கட்டுகாவலோடு வசிக்கிறாள்!

மாளாச் செகத்தைப் படைத்தவளாம் - இந்த
மானுடக் கோட்டை பிடித்தவளாம்!

கோட்டைகளில் எல்லாம் பெரிய கோட்டை, ஒன்பது வாசல்கள் உள்ள இந்த மனித சரீரமாகிய கோட்டைதான்! அந்தக் கோட்டையைப் பிடித்து அதிலிருந்து ஆட்சி செய்கிறாள் வாலை! அதாவது திரிபுரசுந்தரி!

காலனைக் காலால் உதைத்தவளாம் - வாலை
ஆலகா லவிடம் உண்டவளாம்!
மாளாச் செகத்தைப் படைத்தவளாம் - இந்த
மானுடக் கோட்டை பிடித்தவளாம்!

அவள் பேரரசி! சகமாகிய ராஜதானியிலே உடம்பாகிய கோட்டைக்குள்ளே இருந்து, அரசாள்கிறாள் இந்த வாழ்வுக்கரசி!

இதற்குமேல் ஒரு பாடல் வருகிறது. அது மகானாகிய ஒரு சித்தராலேதான் பாட முடியும்! ஆன்ம நேய ஒருமைப்பாடு பாடுகிறார் வாலைச்சித்தர்! உலக இலக்கியங்களிலேயே இப்படிப்பட்ட ஒரு கருத்து அபூர்வம்! அத்தனை புரட்சிகரமான ஒருமைப்பாடு அது! அது எப்படி வருகிறது பாருங்கள்:

அன்னையாக நம்மைப் பெற்றவள் யார்? நம்முடைய தனிப்பட்ட தாயாரா? இல்லை! அந்தத் தாயும் வாலை தான்! நம்மைப் பெற்றெடுத்து நமக்குத் தாய்ப்பாலாகிய அமுதத்தை ஊட்டியவள் வாலையே! பிறகு என்ன நேர்ந்தது? வளர்ந்தோம். வாலிபப் பருவத்தை அடைந்தோம். அப்போது என்ன செய்தாள் வாலை? மனைவி என்ற உருவத்திலே வந்து நமக்கு இல்லற இன்பத்தைத் தந்தாள். யார்? வாலையாகிய பராசக்தியே!

மாதாய் வந்தே அமுதம் தந்தாள் - மனை
யாட்டியாய் வந்து சுகம்கொடுத்தாள்

எப்பேர்ப்பட்ட கருத்து என்பதைப் பாருங்கள்! அன்னையும் மனைவியும் எல்லாம் சக்தியின் வடிவங்களே என்று சொல்லலாம். அப்படிச் சொல்லாமல், பராசக்தியே நமக்கு மாதாவாக வந்து பாலூட்டினாள், மனைவியாக வந்து வாழ்க்கை இன்பம் நல்கினாள் என்கிறார் சித்தர்! அவ்வளவுதானா? நம்முடைய சுற்றம், உறவினர்கள், எல்லாம் அவளே என்கிறார் இந்த ஞானி!

மாதாவாய் வந்தே அமுதந் தந்தாள் - மனை
யாட்டியாய் வந்து சுகங்கொடுத்தாள்
ஆதர வாகிய தங்கையானாள் - நமக்கு
ஆசைக் கொழுந்தி மாமியானாள்!

மெய்சிலிர்க்கச் செய்கிற ஒருமைப் பார்வை இது! இந்தப் பார்வையிலே அனைத்தையும் கண்டு மேலும் கும்மி அடித்துக் கொண்டே பாடுகிறார் வாலைச்சித்தர்!

## பேரறிவின் நுட்பங்கள்

இல்வாழ்க்கையாகிய இல்லறத்தை இகழ்ந்து பேசுவதும், பெண் இனத்தை இழிவாகத் தூற்றுவதும் ஞானம் ஆகாது என்கிறார் வாலைச்சித்தர்.

இரண்டு இரண்டாக இயங்கி ஒன்றை ஒன்று கவர்ந்து நிற்பதே உயிரின் இயக்கமாகும். மண் என்று சொல்லும்போது, அதைக் கவிந்துகொண்டு நிற்கிற வானத்தை, விண்ணை மறந்து விடலாமா? பூ என்று, மலர் என்று, நாம் சொல்லும்போது, அதற்குள்ளே இருந்து கமழ்கிற வாசனையை மறந்து விடலாமா?

சித்தர் பாடுகிறார்:-

மண்ணும் இல்லாமலே விண்ணும் இல்லை - கொஞ்சம்
வாசம் இல்லாமலே பூவும் இல்லை!

மண்ணும் விண்ணுமாக ஒன்றையொன்று சார்ந்து நிற்பதே அண்டங்களின் இயக்கத்துக்கு அடிப்படையாகும்! பூவுக்குள்ளே சிறிதாவது, கொஞ்சமாவது வாசனை இருக்கும். பூவின் உயிரியக்கம் அப்படி இருக்கிறது! அது போலவேதான் எல்லாவிதமான ஈர்ப்புச் சக்திகளும் தொழிற்படுகின்றன! பூவுக்குள்ளே வாசம் கமழ்வது போலவேதான் இந்த உடலுக்குள்ளே உயிர் இயங்குகிறது! சீவனுக்குள்ளே சிவமணம் பூப்பதும், மலருக்குள்ளே வாசனை கமழ்வதும் உயிரியக்கத்தின் நுட்பங்கள்! அவ்வாறு தான் ஆண்-பெண் ஆகிய இரண்டு ஆற்றல்களுக்குள்ளே தொழிற்படுகிற ஈர்ப்பும் ஆகும்!

பெண்ணும் இல்லாமலே ஆணும் இல்லை - இதைப்
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே

படைப்பின் ஆதார இரகசியத்தை, அதன் தோற்றத்தை இவ்வாறு விளக்குகிறார் வாலைச் சித்தர். ஒன்றுக்கொன்று ஆதாரமாகவும், ஒன்றை ஒன்று ஈர்க்கிற சக்தியாகவும், ஒன்றோடு ஒன்று இணைந்து கட்டுண்டு அமைந்திருப்பதை மறந்துவிட்டுப் பெண்மையை இழித்துப் பேசுவது மடமையேயாகும்!

மண்ணுமில் லாமலே விண்ணுமில்லை - கொஞ்சம்
வாசமில் லாமலே பூவுமில்லை
பெண்ணுமில் லாமலே ஆணுமில்லை - இதைப்
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே!

வாலைப் பெண்ணாகிய தெய்வத்தை, திரிபுர சுந்தரியை, மனமாகிய வாலைப் பெண்ணுக்கு மேலும் விளக்குகிறார் வாலைச் சித்தர். இரண்டாகிய தத்துவத்தை இரண்டு வாலைகளைக் கொண்டே பேசுகிறார்!

உலக வாழ்வாகிய கவர்ச்சி மிக்க இந்த நந்தவனத்திலே, ஞானமாகிய ஒரு பெரிய அருட்சோதி இருக்கிறது. வெளியிலே உள்ள நந்தவனத்தைப் போலவே இந்த மனித உடம்பும் ஒரு பெரிய நந்தவனமேதான்! இந்த உடம்பாகிய நந்தவனத்துக்குள்ளே நிலையாக எப்போதும் எரியக் கூடிய ஒரு ஞானவிளக்கு உண்டு. அதுவே ஞான மணிச்சோதி! இந்த வெளிச்சத்தை உணர்வதும், கண்டு தெளிவதும்

ஞான வழிபாடு! இந்த வழிபாட்டைச் செய்வது என்பது, நிலத்தைத் திருத்தி உழுது பயிர் செய்வதைப் போன்றதாகும். நிலத்தை 'நத்துவது' என்பது இதுவே! இப்படிச் செய்தால் நெல்லை நன்கு அறுவடை செய்யலாம்! இதுவே வாலையாகிய பாலாம்பிகையைப் பூசை செய்கிற ஞான நெறியாகும்! இந்தப் பூசையைச் செய்வதற்குப் பூர்வ புண்ணியம் வேண்டும். 'விட்டகுறை' இருந்தால் அது வந்து மறுபடியும் இந்தப் பிறவியிலே தொட்டுக்கொண்டு தொடரும். இதை அழகாகப் பாடுகிறார் வாலைச் சித்தர்.

நந்த வனத்திலே சோதியுண்டு - நிலம்
நத்திய பேருக்கு நெல்லுமுண்டு
விந்தையாய் வாலையைப் பூசிக்க - முன்னாளில்
விட்ட குறைவேணும் வாலைப் பெண்ணே!

"அவன் அருளால் அவன்தாள் வணங்குதல்" என்று பெரியோர்கள் சொல்லுவது இந்தப் பூர்வ புண்ணியமாகிய விட்ட குறையைத்தான்! இதையே சித்தரும் சொல்லுகிறார். தெய்வத்தை வழிபடுவதற்குமே தெய்வத்தின் திருவருள் வேண்டியதிருக்கிறது! அது இருந்தால்தான் பேரறிவின் நுட்பங்களுமே புலப்படுகின்றன என்பது சித்தர் வாக்கு!

## வாலையின் வல்லமைகள்

திருவருளினால் ஞானம் உண்டாகிறது என்பதையும், தெய்வ வழிபாடு செய்வதற்குத் தெய்வ அருள் வேண்டும் என்பதையும் சிறுசிறு சொற்களிலே, அழகான கும்மித் தமிழிலே பாடிய சித்தர், வாலையின் மாபெரும் ஆற்றல்களை மிக எளிய வார்த்தைகளிலே எடுத்துச் சொல்லுகிறார்.

இரவிலே தூங்குகிறோம், எல்லா நினைவுகளும் மறந்து உறங்கி விடுகிறோம்! அந்த நினைவற்ற தருணத்திலும் பாலாம்பிகை நம்மோடுதான் இருக்கிறாள்! வீற்றிருக்கிறாள்!

நித்திரை தன்னிலும் வீற்றிருப்பாள்

என்று வாலையின் ஆட்சி நிலையை மிக எளிய சொற்களிலே கூறுகிறார்! அது மட்டுமா?

எந்த நேரத்திலும் அந்தத் திரிபுரசுந்தரியானவள் நம்முன் நிற்கிறாள்! கூப்பிட்ட அழைப்புக்குக் குரல்கொடுக்கிற தெய்வம் வாலை!

நித்திரை தன்னிலும் வீற்றிருப்பாள் - எந்த
நேரத்திலும் வாலை முன்னிற்பாள்!
சத்துரு வந்தாலும் தள்ளிவைப்பாள் - வாலை
உற்றகா லனையும் தானுதைப்பாள்!

பகையை அகற்றுபவரும், எமனைக் காலால் உதைப்பவரும் யார்? அந்த வாலைதான்!

மேலும் பாடுகிறார் வாலையின் வல்லமைகளை! எப்படி? இந்த அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் படைத்தவன் லயித்தவாறு, அந்த உவகையிலே உண்டாக்கினாள்! பிறகு இந்த அண்டங்கள் அனைத்திலும் உள்ளாகி, எள்ளுக்குள் எண்ணெய் மறைந்திருப்பது போலே, அனைத்துக்குள்ளும் அவள், பாலாம்பிகை, நிற்கிறாள் என்கிறார் வாலைச்சித்தர்!

பல்லா யிரங்கோடி அண்டம்முதல் - பதி
னான்கு புவனமும் மூர்த்திமுதல்
எல்லாம் தானாய்ப் படைத்தவளாம் - வாலை
எள்ளுக்குள் எண்ணெய்போல் நின்றவளாம்!

தெய்வ வல்லமை என்ற மாபெரும் படைப்புச் சக்தியானது, எப்படி இயங்குகிறது என்பதை இவ்வாறு ஞானத் தமிழிலே கூறுகிறார் பேரறிவாளராகிய ஞானி!

படைப்பையும், உயிர்கள், உலகங்கள் ஆகியவற்றின் இயக்கத்தையும், வாலை என்ற தெய்வ ஆற்றலையும், இவ்வாறு கும்மி நடையிலே பாடி வந்த சித்தர், இப்போது ஒரு பெரிய ஞானக் களிப்பிலே பேரானந்தப் பரவசத்திலே, குதிக்கத் தொடங்குகிறார்! அவருடைய தமிழும் கும்மி கொட்டிக்கொண்டு ஒரு துள்ளலிலே வருகிறது!

ஆடுங்கள் பெண்டுகள் எல்லோரும்

"ஏ, உயிர் வர்க்கங்களாகிய பெண்களே, குதியுங்கள்! குதித்துக் குதித்து நீங்கள் ஆடுங்கள்! கும்மி தட்டுங்கள்!" என்கிறார் சித்தர்.

இந்தக் கும்மித் தமிழைச் சொன்னவர் யார்? அந்தக் கொங்கணர் பெயரைச் சொல்லி, சித்தர் பரம்பரையோடு ஆனந்த நிலையிலே கூடிக் கலந்து, ஆன்ம நேயக் களிப்பிலே ஆடிப் பாடிக் குதியுங்கள்! கும்மி கொட்டியவாறு வாலையின் திருவடியை வணங்குங்கள்! அந்தத்

தெய்வத் திருப்பாதங்களைப் போற்றிக் கொண்டாடுங்கள்! "இதுவே பேரின்பப் பெருங்களிப்பு" என்று ஒரே ஞானசுகத்திலே தோய்ந்தவராகத் தமது கும்மிக்கு, உலக மாந்தரை அழைக்கிறார் வாலைச் சித்தர்!

ஆடுங்கள் பெண்டுகள் எல்லோரும் - இந்த
அன்பான கொங்கணர் சொன்னதமிழ்
பாடுங்கள் சித்தர்கள் எல்லோரும் - வாலை
பாதத்தை போற்றிக் கொண்டாடுங்கடி!

ஒரு சித்தனுடைய எளிமை, களிப்பு, துள்ளல் எல்லாரையும் ஒருமைப் பாட்டுடன் அழைக்கிற ஞானக் கருணை, உலகம் அனைத்தையும் தழுவி அணைக்கிற பேரன்பு, அத்தனையும் கலந்த கும்மித் தமிழை இவ்வாறு உலக மக்களுக்கு வழங்குகிறார் வாலைச் சித்தர்!

## ஞானமாகிய பெண்

இனிமையும் எளிமையும் ஆன்மிகமும் இணைந்து உருவாகியுள்ள சித்தர் பாடல்களிலே 'வாலைக்கும்மி' என்னும் கும்மிப் பாடல்களைப் போலவே அதே சந்தத்தில் எழுந்த மற்றொரு தொகுப்பு ஞானக் கும்மி என்பதாகும்.

உயிர் வர்க்கத்தைப் பெண்களாக உருவகித்து, ஞானப் பேருண்மைகளை அந்தப் பெண்களோடு சேர்ந்து கும்மியடித்துக் கொண்டு பாடுகிற அழகான பாடல்கள் இவை! நாட்டுப்புறப் பாட்டுக்களைப் போன்றதான அமைப்பிலே இந்தப் பாடல்கள் இருந்தபோதிலும், இவற்றின் பேச்சு பூமியையும் வானத்தையும் அளாவி எழுகிற பெரிய பேச்சாக இருக்கும்!

பிண்டம் என்று சொல்லுகிற இந்த உடம்பையும், அண்டம் என்று சொல்லுகிற வெளி உலகையும் இணைத்துப் பாலம் அமைக்கின்ற அற்புதமான பாடல்கள் இவை.

இந்தப் பாடல்கள், மனித உடம்புக்குள்ளே இயங்குகிற பல பல தத்துவங்களையும் ஆன்ம மொழியிலே விளக்கி, இந்தத் தத்துவங்கள் பரம்பொருள் என்னும் கடவுட் தத்துவத்தோடு எப்படிக் கூடிக் குலாவிக் களிக்கின்றன என்ற இரகசியத்தை மிகவும் ஆனந்தத்தோடு பாடிக் குதிக்கின்றன! கவியழகு என்ற இலக்கியப் பெருமையும், ஞான எழில்

என்ற தத்துவப் பெருமையும், இரண்டும் சேர்ந்து, ஒரு மலருக்கு வண்ணமும் வாசனையும் இணைந்து ஒன்றாகக் கூடியிருப்பது போல் ஒருங்கிணைந்து காணப்படுவதே, இந்த ஞானக் கும்மியின் பெருஞ் சிறப்பாகும்!

லாவிடேஷன், ஸைகோனிஸிஸ், டெலிபதி, ஈதெரிக்டபின் என்றெல்லாம் இன்றைய விஞ்ஞானிகள் ஆராய்ந்து சொல்வது நமக்கு வியப்பூட்டுகிறது அல்லவா? அதே போல 'ப்ளாஸ்மா பாடி' என்று சொல்லப்படுகிற நுண்ணுடலைப் பற்றி ரஷ்ய விஞ்ஞானிகள் அண்மைக் காலத்தில் பல இரகசியங்களை வெளியிட்டிருப்பதை அறிவியல் மாணவர்களும், விஞ்ஞான அறிஞர்களும் அதிசயத்தோடு பேசுகிறார்கள். இந்தக் கருத்துக்களை ஞானக் கும்மியிலும், இதே போன்ற சித்தர் பாடல்களிலும் விரிந்து, பரந்து, ஆழ்ந்து, நுணுகி ஆராய்ந்து சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்! தூல உடம்பு, காரண உடம்பு, சூக்கும உடம்பு என்பதாகவும், பரு உடல், முனைப்பு உடல், நுண் உடல் என்பதாகவும் பகுத்துத் தொண்ணூற்றாறு செயல்கள் இந்த உடம்புக்குள் எப்போதும் சாதாரண நிலையில் நடந்து கொண்டு வருவதை எளிய கவிதைகளிலே படம்பிடித்துக் காட்டி, இந்த உடம்புக்குள்ளே நுழைந்து இவற்றைப் பார்ப்பதற்கு இரகசிய வாசல் எது என்பதையும், இந்த ஞானப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

எல்லா மக்களுக்கும் களிப்பூட்டுகிற சந்தத் தமிழிலே இத்தகைய மாபெரும் இரகசியங்களைப் பாடத் தொடங்குகிறார் ஞான முனிவராகிய இந்த வாலைச்சாமி என்னும் சித்தர்! இப்பாடல்களை எளிய ஞானக் கும்மியாகப் பாடுவதற்கு தமக்குத் துணைசெய்யவேண்டும் என்று, விநாயகரை வேண்டி வணங்குகிறார்.

சித்தர்களுடைய பெரிய பண்பாடு என்னவென்றால், எதைத் தொடங்குவதற்கு முன்பும், குருவுக்கு முதலிலே நன்றி சொல்வதாகும்.

"இந்த ஞானக்கும்மியை நான் பாடுவதற்கு அருள்செய்தது யார்? சற்குருதான்!" என்று பாட்டைத் தொடங்குகிறார்!

ஒளிவடிவானவனும், உண்மையைக் காட்டுபவனுமே குரு அவனே தேசிகன்! "அந்தத் தேசிகனின் திருவருளால் இந்தப் பாடல்களைப் பாடுகிறேன். சிவபாலனாம் கணபதி காத்துப் புரப்பானாக!" என்று வணங்குகிறார் சித்தர்! கடவுள் வழிபாட்டில் சித்தர்களுக்கு உள்ள பக்திக்கு இதுவே சான்று!

*சீர்மேவு ஞான வடிவான பரதேசிகன்*
*தேசிகன் சற்குரு தன்னருளால்*
*பார்மீதில் ஞானக் கும்மிபாடச் - சிவ*
*பாலன் கணபதி காப்பாமே!*

## ஞானியின் வணக்கம்

*விநாயகருக்கு வணக்கம் கூறும்போதே உள்ளத்துக்குள் பரதேசிகனாகிய குருவின் திருவருளை வந்தித்துத் தொடங்குகிறார் பேரின்ப ஞானியாகிய சித்தர்! விநாயகருக்கு வணக்கம் சொன்னவர் அடுத்து ஆனைமுகனின் தம்பியைத் துதிக்கிறார். தும்பி என்றால் ஆனை. தும்பிமுகன் என்பது ஆனைமுகனாகிய விநாயகனை. வாலையாகிற திரிபுரசுந்தரியைக் கும்பிட்டு அஞ்சலி செலுத்துகிறார் சித்தர்.*

*அம்பிகை வாலை பாதம்போற்றி - அருள்*
*ஆனந்தக் கும்மித் தமிழ்பாட*

*அம்மையின் திருவடியை வணங்கி ஞானக் கும்மியைப் பாடுகிறேன். இப்பணியிலே எனக்குக் காப்பாக இருக்கத் தும்பிமுகனுக்கு இளைய தம்பியை நான் வணங்குகிறேன் என்பது சித்தர் வாக்கு!*

*அம்பிகை வாலை பதம்போற்றி - அருள்*
*ஆனந்தக் கும்மித் தமிழ்பாட*
*தும்பி முகனுக் கிளையவனாம் - சிவ*
*சுப்பிரமணியன் காப்பாமே!*

*தத்துவங்களை மக்களுக்கு எடுத்து விளக்குவது என்றால் என்ன? படைப்பின் இரகசியங்களை, உயிர் அமைப்பின் நுட்பங்களைப் பகுத்தறிந்து அந்த அரும்பெரும் இயல்புகளையெல்லாம் எடுத்து இயம்புவது என்கிற செயலானது, பரம்பொருளின் சக்திகளையே ஆய்ந்து சொல்வது போலத்தானே? இதைச் சொல்லி வணங்குகிறார் சித்தர். பரம்பொருள் என்றால் அது எப்படிப்பட்டது? நான்கு வேதங்களாகவும், ஆறு அங்கங்களாகவும், எத்தனையோ கிளைகளாகவும், பல்கிப் படர்ந்து நிற்பதே பரம்பொருள்! அதாவது அறிவின் எல்லாப் பிரிவுகளுக்குள்ளும் விரிந்து கிடக்கிறது என்று பொருள். விஞ்ஞானத்தின் நானாவிதமான பிரிவுகள். மெய்ஞ்ஞானத்தின் கிளைகள் ஆகிய எல்லாமாகி நிற்பது*

எது? பேரறிவாக இருக்கும், அந்தப் பரம்பொருளே இறைவன்! எனவே இறைவனை நான்கு வேதங்களாகவும், வேதாங்கங்கள் ஆறாகவும், இன்னும் நானாவிதமாகவும் விரிந்து கிடக்கிற பேரறிவு என்றும், அந்த அறிவின் மயமானவன் என்றும் சொல்ல வேண்டும்! ஆகையினால் தான் கடவுளை அறிவாக, பகுத்தறிவாக, பேரறிவாக நிற்பவன் என்கிறார் சித்தர்! நாலாகிய, வேதங்களை 'நாலாம் வேதம்' என்றும், அதாவது 'நாலாகிற வேதம்' என்றும், ஆறு அங்கங்களை ஓராறு என்றும் கூறுகிறார். "அப்படி நிற்பவனாகிய இறைவனை உயர்ந்த நிலையிலே போற்றி, இந்தக் கும்மியைப் பாடுகிறேன். இப்படிப் பாடுவதற்கு என் அருகில் முருகன் நின்று காக்க வேண்டும்!" என்கிறார்.

நாலாம் வேதமும் ஓராறும் - வெகு
நானா பேதமாய் நின்றானை

வேத வேதாங்க சொரூபியான இறைவனை என்பது பொருள். அப்படிப்பட்ட இறைவனை,

மேலாய்ப் போற்றிக் கும்மி பாட

அவனை மேன்மையோடு வணங்கி இந்தக் கும்மியைப் பாடுவதற்கு,

- செந்தில்
வேலவன் தன்பதம் காப்பாமே

திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் வேலாயுதக் கடவுள் காப்பாக அமையட்டும்!

நாலாம் வேதமும் ஓராறும் - வெகு
நானா விதமாய் நின்றானை
மேலாய்ப் போற்றிக் கும்மிபாட - செந்தில்
வேலவன் தன்பதம் காப்பாமே!

## திறவுகோல்

சித்தர்களுடைய இலக்கியங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குவது, இந்த மனித உடம்பின் இரகசியமே யாகும்! இந்த அறிவே அஸ்திவாரமாகிய அடிக்கல்!

உடம்பை உதாசீனம் செய்யாமல் இந்த உடம்புக்குள்ளே இயங்குகிற தத்துவங்களை ஆள்வது எப்படி என்பதே, தமிழ்நாட்டுச் சித்தர்கள் நமக்கு வழங்கியுள்ள ஒப்பற்ற ஞானக் கல்வியாகும்! இந்த உடம்பை ஆள்வது என்பது உடம்பை மட்டுமல்ல, இந்த உலகத்தையே ஆள்வதாகும்! ஏனென்றால் எல்லாவிதமான வல்லமைகளும் மணலுக்குள் மறைந்திருக்கும் நீரூற்றைப் போல இந்த உடம்புக்குள்ளே ஒளிந்துள்ளன என்பதே சித்தர் தமிழின் சாரம்! 'விதி, விதி' என்று நிலைமைகளைச் சமாளிக்காமல் கையை உதறுவது ஞானமாகாது! விதியினுக்கு விதி செய்கிற முறையே, சித்தர்களின் ஞான முறை! இதைப் பாடுகிறது ஞானக் கும்மி!

வீடு பூட்டிக் கிடக்கிறது என்றால் என்ன செய்கிறோம்? கையினால் சாவியைப் பூட்டுக்குள்ளே கொடுத்து அதைத் திறக்கிறோம்! இதுவே சித்தர்களின் ஞானத் திறவுகோல்!

இந்த உடம்பு என்பது இயற்கையின் படைப்பிலே நமக்குக் கிடைத்த வீடு! சிருஷ்டி சக்தி என்ற படைப்பாற்றல் நமக்கு என்று பட்டாச் செய்து ஆவணமாகக் கொடுத்த கிரயப் பத்திரம். அது நமது கையிலேயே இருக்கிறது! சர்வ சுதந்திர பாத்தியதை நமக்கு இருக்கிறது! இதைச் சரியாக நாம் அனுபவிக்க வேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் அவரவருக்கு வீடுகளை ஒதுக்குவது போல, பரம்பொருள் என்கிற படைப்புச் சக்தி நமக்கு ஒரு வீடு 'அலாட்' செய்து நம்மிடம் ஒப்படைத்திருக்கிறது! அந்த வீட்டைத் திறந்து உள்ளே போவதற்குரிய சாவியும் நமது கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது! ஆனால் நாம் அந்த வீட்டைத் திறப்பதே இல்லை! புறத்திண்ணையிலேயே நமது சுகபோக வாழ்க்கை கழிகிறது! எத்தனை பெரிய மடமை இது!

"ஞானப் பெண்ணே, அடியே, இந்த வேடிக்கையைக் கேட்டாயாடீ?" என்று கைகொட்டுகிறார், கும்மி தட்டுகிறார், சித்தர்!

உடம்பாகிய வீடு மனமாகிய பூட்டினால் பூட்டியிருக்கிறது! உள்ளே நுழைவதற்கு என்ன செய்ய வேண்டும்?

பூட்டைத் திறப்பதும்
கையாலே - மனப்
பூட்டைத் திறப்பதும்
மெய்யாலே

சாதாரண வீடுகளின் சாதாரணப் பூட்டுகளைக் கையினால் திறக்கிறோம். உடம்பாகிய வீட்டிலே மனமாகிய பூட்டை எப்படித் திறப்பது?

கையினால் இரும்புப் பூட்டைத் திறப்பது போலே, மெய்யினால் அதாவது மெய்யாகிய சரீரத்தினால் மனப்பூட்டைத் திறக்க வேண்டும்!

மனம் என்ற பூட்டைத் திறப்பதற்குரிய, அதைத் திறக்கக் கூடிய, பூட்டு எது? இந்த உடம்புதான்! இந்த உடம்புதான் அதற்குரிய சாவி!

மனமாகிய பூட்டை உடம்பாகிய சாவி, மெய்யாகிய திறவுகோல் கொண்டு திறந்துவிட்டால், ஆகா, அந்த மாளிகைக்குள்ளே எத்தனை கோடிப் பேரானந்த அறைகள், எத்தனை பெரிய பேரின்பமான சயனம் நமக்காகக் காத்திருக்கிறது?

சாவி, திறவுகோல் தெரியாத மூடன் என்ன செய்கிறான்? அவனால் இந்த உடம்பாகிய வீட்டைத் திறக்க முடியவில்லை. "விட்ட விதி அவ்வளவுதான்!" என்று புலம்புகிறான் அவன்!

பூட்டைத் திறப்பதும்
கையாலே - மனப்
பூட்டைத் திறப்பதும்
மெய்யாலே
வீட்டைத் திறக்க
முடியாமல் - விட்ட
விதிவிதி என்பார்
ஞானப் பெண்ணே!

"ஞானப் பெண்ணே! இந்தக் கையாலாகாத்தனம் எத்தனை வேடிக்கை பார்த்தாயா!" என்று கும்மியிலே சிரிக்கிறார் சித்தர்!

மேலும் பாடுகிறார் ஞான முனிவர்.

வெறும் கண்ணால் பார்த்தால் வழி தெரியாது! மனக்கண்ணால் பார்க்கவேண்டும். ஐம்புலன்களையும் சாதாரண இச்சைகளிலே செலுத்தி வீணடிக்காமல், கண்ணை உட்பக்கமாகத் திருப்பிப் பார்க்க வேண்டும்! அப்போது மனக்கண்ணுக்கு வழி புலப்படும்!

கண்ணாலே மனக் கண்ணாலே - அதைக்
கண்டா லேவழி உண்டாகும்
பெண்ணா சைதனை அடுக்காமல் - வழி
பேணிப் பாரடி ஞானப்பெண்ணே!

கண்ணால் பார்ப்பது என்பது சாதாரண அறிவு. மனமாகிய கண்ணால் பார்ப்பது என்பது பகுத்தறிவு. அந்த மனப் பார்வையை உள்முகமாகப் பார்த்தால் அதுவே ஆன்ம அறிவாகிய பேரறிவு. அதைப் பாடுகிறார் சித்தர்!

## உடம்பினுள் உடம்பு

இந்த உடம்பையே திறவுகோலாகக் கொண்டு மனப்பூட்டைத் திறக்க வேண்டும் என்று சொல்லுகிற சித்தர், உடம்புக்குள் உடம்பாக இயங்குகிற சூக்குமத்தைப் பேசுகிறார்.

நவீன அறிவியற் கலைகளை நன்கு வளர்த்துள்ள கம்யூனிஸ நாடுகளில், நுட்பமான பல ஆய்வுகளைப் புதிய புதிய விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு நடத்தி, நமது உடம்புக்கு வெளியேயும் உடம்பின் உள்ளேயும் தொழிற்படுகிற ஒளி உடம்பைப் பற்றிப் பல உண்மைகளை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த நவீன விஞ்ஞான முடிவுகளையே நமது சித்தர் இலக்கியம் நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறது! அந்த முடிவுகளிலே ஒன்றுதான் இந்த உடம்புக்குள் உடம்பாக இருந்து, இயங்கியும் இயக்கியும் வருகிற 'சூக்ஷ்ம சரீரம்' என்னும் நுண்ணுடல்! இதைப் பாடுகிறது ஞானக் கும்மி.

தூல வேதமாகிய இந்த உடம்பை மறந்து, அதாவது இந்தத் தூலத்தை விட்டு விட்டு, உள்ளே இருக்கிற நுண்ணுடலாகிய சூட்சுமத்திற்குள் நாம் புகுந்து விடவேண்டும்! அதுவே ஞானயோகமுறை. சித்தர்களின் ராஜயோகம் அது!

தூலத்தை விடுவது என்பது என்ன? தூலமாகிய இந்தப் பரு உடலுக்குள் மூங்கி மூழ்கிச் சென்றுவிட வேண்டும்! அப்படிச் செய்தால் நுண்ணுடலுக்குள் புகுந்துவிடலாம்!

தூலத்தை விட்டு விடாயாகில் - அதில்
சூட்சுமத்தைக் காண முடியாது!

பருஉடலை மறந்து, நமது நினைவு என்னும் நுண்ணுடலைப் பற்றிப் பிடித்து உள்ளே நுழைந்து சென்றால்தான், ஆன்ம நுட்பங்களைக் காண முடியும். அப்படி இல்லாவிட்டால் சூட்சத்தைக் காண முடியாது!

அப்படி உள்ளே செல்கிற பாதை இருக்கிறதே, அதுதான் ஞானப்பாதை! அந்தப் பாதைக்கும் இந்தப் பருஉடலுக்கும் ஒரு பாலம் போட்டிருக்கிறது! அந்தப் பாலத்திலே ஏறி மனத்தினால் நடந்து செல்லவேண்டும். அப்படிச் செல்வோமானால், அதுவே பெரும்பாதையாகும்! மிகப் பெரிய, மேன்மையான சிறந்த பாதை அது என்கிறார் சித்தர்.

தூலத்தை விட்டுவி டாயாகில் - அதில்
சூட்சத்தைக் காண முடியாது
பாலத்தால் ஏறி நடந்தக்கால் - பெரும்
பாதைஇ தல்லவோ ஞானப் பெண்ணே!

இந்தப் பெரும்பாதையிலே உள்ளம் என்கிற உலகுக்குள்ளே நுழைந்து விட்டால், அங்கே ஒரு பட்டணமே, ஒரு பெரிய நகரமே இருக்கிறது! அது மாவட்டம், மாபெரும் வட்டம்! ஞானப் பாதை கிட்டினால் இந்த நகரமும் கிட்டும்!

பாதையான பெரும் பாதையைக் - கிட்டப்
பட்டணம் உண்டு ஒரு வட்டமதாய்

அந்தப் பட்டணமாகிய மாவட்டத்திலே என்ன நடக்கிறது? ஆகா! நாதமும் கீதமும் அங்கே ஒலித்துக் கொண்டேயிருக்கும்! அது மாவட்டமான நாத சங்கீதப் பொன் மணிமண்டபம்! முறிவேயில்லாத தொடர் நிகழ்ச்சியாக, அங்கே சங்கீதம் கேட்கிறது!

நாதமும் கீதமும் கேட்குதடி - தெய்வ
நாயகன் சந்நிதி முன்பாக - தெய்வ
நாயகன் நந்நிதி ஞானப்பொண்ணே!

உடம்புக்குள்ளே, தூல நினைவுகளை விட்டுவிட்டு, நுட்பமான நுண்ணுடலுக்குள்ளே புகுந்தோமானால், அந்த மாவட்டத்திலே நாதமும் கீதமுமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறது! "ஏ, ஞானப் பெண்ணே, ஞான வடிவே, அந்த இடந்தான் தெய்வ நாயகனுடைய சந்நிதியடி!" என்று கும்மி தட்டுகிறார் சித்தர்!

எதற்காக உடம்பு வேண்டும் என்றால், அதை மறப்பதற்காகவே அது வேண்டும்! தூலத்தை விடுவதற்காகவே தூலம் வேண்டியிருக்கிறது! உடம்பைக் கொண்டுதான் உடம்பை மறக்கடிக்க வேண்டும்! உடம்பைக் கொண்டுதான் உடம்பை விட்டொழிக்க வேண்டும்! உடம்பைக் கொண்டுதானே, இந்த உடம்புக்கு உளளே புகவேண்டியதிருக்கிறது! பரு உடல் இல்லையென்றால், நுண்ணுடலுக்குள் புகுந்து செல்வதற்கு வழி எது? இதுவே சித்தர் ஞானம்!

*பாதையா னபெரும் பாதையைக் - கிட்டிடப்*
*பட்டணம் உண்டொரு வட்டமதாய்*
*நாதமும் கீதமும் கேட்குதடி தெய்வ*
*நாயகன் சந்நிதி ஞானப்பெண்ணே!*

## ஞானக் குதிரை

இரண்டு கண்களோடு மூன்றாவது கண்ணையும் சேர்த்துப் பாடியுள்ள சித்தர் மூச்சுப் பயிற்சியாகிய மற்றொரு முறையையும் பாடுகிறார்.

இடது நாசியில் இழைகிற மூச்சு சந்திரனாகும். வலம் என்பது சூரியன்! நடுவான அக்கினிமூச்சு என்பது சுழுமுனை! இந்தப் பயிற்சிக்கு வாசியோகம் என்றும் ஒரு பெயர் உண்டு. வாசி என்றால் மூச்சு அல்லது சுவாசம்! அதே வாசி என்ற சொல்லுக்குக் குதிரை என்றும் ஒரு பொருள்! எனவே இந்த வாசிப் பயிற்சியைக் குதிரையேற்றம் எனவும், குதிரைப் பயிற்சி எனவும், இன்னும் பல அழகான சொற்களிலும் குறிப்பிடுவார்கள் சித்தர்கள்!

சுவாசத்தை அடக்கிப் பயிற்சி செய்வது மிகவும் கடினமான, அதே சமயம் மிகவும் உயர்வான, ஒரு யோகப் பயிற்சியாகும்! எதிரிலே ஆசிரியன் நேர்முகமாக இருந்து கற்பிக்கவேண்டும். இல்லையென்றால், ஒன்றுக்கு ஒன்று நேர்ந்துவிட இடமுண்டு! காரணம் என்னவென்றால், மூச்சைப் பிடித்து அடக்கி, நெறியிலே செலுத்துவது என்பது, மிகவும் கவனமாகவும் சட்ட திட்டத்தோடும் செய்யவேண்டிய நுட்பமான யோகமுறையாகும். சூட்சமமான இரகசியம் என்பார்கள் இதை! சித்தர் பாடுகிறார்:

சூட்சக் குதிரை அடங்காது - சுழிக்
கோட்டுக்குள் செல்ல முடியாது!
மூச்சுக்கு ஆயிரம் காதவழி - மிக
முந்தி நடக்குமாம் ஞானப்பெண்ணே!

சுவாசம் என்ற வாசியாகிற குதிரையானது எளிதில் அடங்காது. அந்தக் குதிரையை அடக்கி வசமாக்குவது பெரும்பாடான பயிற்சியாகும். அது வேகமாகப் பறக்கக்கூடிய குதிரை. சுழிக்கோட்டுக்குள் அதைச் செலுத்துவது ஏன் பெரும்பாடாக இருக்கிறதென்றால், அது மூச்சுக்கு ஆயிரம் காத தூரம் வேகமாய் முந்திக்கொண்டு ஓடுகிற பாய்ச்சலான காற்றுக் குதிரை!

இந்தக் குதிரையை மனம் ஒன்று கோட்டையிலே கட்டிப் போட்டிருக்கிறது! இந்தக் குதிரையின் 'பரித்தொழு' என்கிற 'லாயம்' எங்கே இருக்கிறது? வீதிகள் வந்து கூடுகிற சந்தைப் பேட்டையில் மனக்கோட்டையில் இருக்கிறது!

சித்தர்களுடைய மொழியிலே புருவநடு என்னும் மையத்திற்கே 'சந்தை' என்று ஒரு சொல் உண்டு! "சந்தையில் வைத்துச் சமாதி செய்" என்பார்கள்!

சித்தர் பாடுகிறார். ஒரு பெரிய இன்னலைப் பற்றி! சுவாசப் பயிற்சி செய்யும்போதே, பல நோய்நொடிகளும், ஆசையின் வேறு பல சிக்கல்களும், சோதனைகளும், உடம்புக்கும் உள்ளத்துக்கும் உண்டாகலாம். அவை ஏற்படாதவாறு கவனமாகச் சுவாசப்பயிற்சி செய்ய வேண்டும்! எதிரிகள் வந்து மனக்கோட்டையிலே குதிரைகட்டிய லாயத்திலே வந்து, கதவைத் தட்டுவார்கள். அதனால் கண்காணிப்போடு இருக்கவேண்டும்! இப்படி ஒரு எச்சரிக்கையை இந்த மகான் தமது கும்மியிலே மனமாகிய ஞானப்பெண்ணுக்கு அறிவுறுத்துகிறார். எப்படி?

"குதிரை கட்டிய லாயத்திலே - மனக்
கோட்டையி லேசந்தைப் பேட்டையிலே
எதிரிதான்வந்து தட்டுகிறான் - இதை
ஏதென்று கேளடி ஞானப்பெண்ணே!"

தேவர்கள் அசுரர்கள் என்பதெல்லாம் சித்தர்கள் மொழியிலே உருவகங்கள்! இந்த உடம்புக்குள்ளே செயற்படுகிற நல்லனவும் கெட்டனவுமான சக்திகள் அவை! உடம்பினுள் ஞானவெள்ளி

நடக்கும்போது, அசுரர்கள் என்னும் தீயசக்திகள் உடம்பிலிருந்து கிளம்பிவந்து, யாகத்தை அழிக்கப்பார்ப்பார்கள்! உடம்பாகிய பாற்கடலைக் கடையும்போது, அதில் நஞ்சு தோன்றும்! அமுதத்தைத் தீய சக்திகளாகிய உடற்கூறுகள் தட்டிக்கொண்டு போய்விடப் பார்க்கும்! இந்தப் பேருண்மைகளையெல்லாம் ஞானிகள் கதைபோல உருவகித்து, அருவமான சக்திகளுக்குக் கதாபாத்திரங்களாகிய உருவங்களைக் கொடுத்துச் சொல்லுவார்கள். நுட்பமாகப் பார்த்து இந்த உருவகங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். கதை என்று ஏளனமாய்ப் பொய்போலத் தள்ளிவிடக் கூடாது.

ஞானக்கும்மி, குதிரை என்றும், லாயம் என்றும், கோட்டை என்றும், சந்தை என்றும், எதிரி என்றும் உருவகத்திலே பேசுகிறது! இந்த உருவகங்களுக்குள் அறிவியலோடு கூடிய பேருண்மைகளே பொதிந்துள்ளன. அறிவுக் கண்ணோடு அவற்றையே மேலும் பாடுகிறார், ஞானம் மிக்க கும்மித் தமிழிலே!

## ராஜ யோகம்

இந்த உடம்பினுள் புகுந்து பார்த்து, மிகமிக நுட்பமான பல இரகசியங்களைத் தமிழகத்துச் சித்தர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! விஞ்ஞான உலகம் இன்றைக்கு நவீன சோதனையினால் நிலைநாட்டி வருகிற மாபெரும் அறிவியல் உண்மைகளைப் பல நூற்றாண்டுகளாகக் கற்றும் கற்பித்தும் தேர்ந்த மகான்களே, இந்த வணக்கத்துக்குரிய ஞான யோகிகள்! நாம் கண்டுபிடித்த அந்த அரிய பெரிய ஞானயோக இரகசியங்களைத் தமிழகத்தின் சொத்தாகக் கவிக் களஞ்சியத்திலே வைத்துப் பூட்டி நம்மிடம் தந்துள்ளார்கள்!

பெரிய விலை மதிப்புள்ள பொருள்களை வங்கியின் 'லாக்கர்' என்னும் பாதுகாப்புப் பெட்டகத்திலே கொண்டு பூட்டி வைப்பது போல, இந்தச் சொத்தை ஞான பரம்பரை பாதுகாத்து வருகிறது! திருடுபோய் விடக்கூடாது என்பது மட்டுமல்ல, தவறான கைகளிலே அகப்பட்டுத் தவறான வழிகளிலே இந்தச் சொத்து விரயம் ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே, இத்தனை பலமான பாதுகாப்புடன் வைத்திருக்கிறார்கள்!

அணு ஆற்றலை எப்படி ஆக்கமான பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு கட்டுப்பாட்டை விதிக்கிறோமோ, அப்படியேதான் இந்த இரகசியச் செல்வத்தின் பெட்டகத்தையும் நன்றாகப் பூட்டி, அந்தச் சாவியை நம்பிக்கைக்கு உரிய

பெரியோர்களிடம் கொடுப்பார்கள் கண்ட கண்ட மனிதர்களிடம் எல்லாம் சாவியைக் கொடுத்துவிட மாட்டார்கள்.

சித்தர்களின் இரகசிய உண்மைகள் எப்படி எதற்காகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை இவ்வாறு விளக்குவதே முறையாகும்.

இந்த இரகசியங்கள் நான்கு விதமான பெரும்பிரிவுகளிலே ஆறு வெவ்வேறு வகையான முறைகளிலே பயிலப்பட்டு வருகின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானவை இரண்டு! ஒன்று மூச்சைக்கொண்டு, சுவாசத்தினால் பயில்கிற முறையாகும் மற்றொன்று கண்பார்வையைக் கொண்டு பயில்வதாகும்! இந்த இரண்டோடு மற்ற எல்லா முறைகளும் இணைந்து செயல்படுவதே ராஜ யோகமாகும். பல சரடுகள் கொண்டு முறுக்கிய ஒரு பெரிய தங்கக் கயிறு அது!

பாதைகள் நான்காக இருக்கலாம். நானூறாகவும் இருக்கலாம் ஆனால் அவையாவும் போய்ச் சேருகிற இடம் ஒன்றே ஆகும்! ஆகவே இவற்றில் உயர்வு தாழ்வோ, வேறு எத்தகைய வித்தியாசமோ இல்லை ஏனென்றால் இந்தப் பயிற்சி முறைகள் அனைத்திற்கும் அடிப்படையாகத் திகழ்கிற பொருள் ஒன்றே! ஒருமைப்பாடு கொண்டவை! மேலெழுந்தவாறு பார்த்தால், ஒன்றுக் கொன்று மாறுபடுவது போலத் தோன்றலாம். கொஞ்ச தூரம் அந்த இரகசியப் பாதையிலே போய்ப் பார்த்தால், எல்லாச் சாலைகளும் ஒரே பட்டணத்தை நோக்கித்தான் செல்லுகின்றன என்பதை உணர்வோம்.

ஞானச் சித்தர் தமது கும்மியிலே ஆறு இரகசியங்களிலே ஒரு நுட்பமான இரகசியத்தைப் பாடுகிறார்.

இடது கண்ணிலே உள்ள சுடருக்குச் சந்திரன் என்று பெயர். வலது கண் சூரியன். நடுவிலே இருப்பது தீ என்றும், செருப்பு என்றும் 'வன்னி' என்றும் அழைக்கப்படுகிற சுழுமுனைச் சுடர்! இப்போது புரிகிறதல்லவா, மூன்றாவது கண் என்பது நெற்றிக்கண் என்பதும் அதிலே நெருப்பு இருக்கிறது என்பதும்! பாடலைப் பாருங்கள்

முச்சுடர் வட்டமே சக்கரமாம் - அது
மூக்கு நுனியில் சுழுமுனையாம்
அச்சுடர் வட்டத்து இருந்தவனே - குரு
ஆனந்த நந்தியாம் ஞானப் பெண்ணே!

சந்நிதியின் முன்னால் கோவிலிலே நந்திதேவர் இருப்பதிலே உள்ள உருவகம் இது! இந்த மரபை ஒட்டியே, சித்தர்களின் இலக்கியத்திலே நந்தி தேவரே ஆதியான ஆன்மஞான குருவாக வணக்கத்தோடு பாடப்பெறுகிறார்!

இடப்பக்கம் சந்திரனும், வலத்தில் சூரியனும், நடுவில் அக்கினியாகிய வன்னியும் என்று சொல்லப்படுகிற அந்த இரகசிய நுட்பத்தை, மேலும் கும்மி அடித்துக் கொண்டு பாடுகிறார் சித்தர்.

நந்தி இருந்தது வன்னிவட்டம் - அதில்
நாட்டம் புருவமத்தி யானதிட்டம்

'நாட்டம்' என்பது பார்வை புருவ மத்தியமான பார்வையின் திட்டத்துக்குள், வன்னியாகிய நெருப்பு வட்டம் இருக்கிறது. அந்த வன்னி வட்டத்திலே யார்? நந்திதேவர்! இருமருங்கிலும் சந்திர சூரியனார்களாகிய இடக்கண் வலக்கண் ஆகிய இரண்டு சுடர்கள்! 'மத்யான திட்டம்' என்று பாடுவதில் ஒரு சாதுரியம் என்னவென்றால் நடுவான திட்டம் என்பதோடு, நடுவிலே அமைந்த ஒரு பெரிய தியான நிலையான திட்டம் என்ற உட்பொருளும் அதில் சிலேடை போன்று ஒலிக்கிறது அல்லவா?

நேரிலே இந்த இடங்களைத் தொட்டுக் காட்டுவதற்கு, ஒரு குரு கிடைத்த பிறகுதான் பயிற்சியைத் தொடங்கலாம்! குரு கிடைப்பதற்கு ஒரு வேட்கை உள்ளத்திலே வரவேண்டும் அல்லவா? அந்த வேட்கையைக் கும்மித் தமிழ்பாடி உள்ளத்திலே பொங்கச் செய்கிறது. இந்த ஞானக்கும்மி! நான்கு வரிகளுக்குள்ளே ஆன்ம நாட்டத்தைப் பதிக்கிறார் இந்த மகான்!

நந்தி இருந்தது வன்னிவட்டம் - அதில்
நாட்டம் புருவமத்தி யானதிட்டம்!
சந்திர னும்கதிர்ச் சூரியனும் - அந்தத்
தலத்தில் நின்றனர் ஞானப் பெண்ணே!

## அமுதம் உண்போம்

சித்தர்களுடைய ஞானக்கண் பயிற்சியையும், மூச்சுப் பயிற்சியாகிய வாசியோகத்தையும் கும்மித் தமிழிலே பாடிய சித்தர், இந்த உடம்புக்குள்ளே சுரந்து வருகிற அமுதத்தைப் பாடுகிறார்.

'சரீர சித்தி உபாயம்' என்று சொல்கிற ஞானயோக முறையிலே, சோமபானம் பருகுதல் என்று அழைப்பார்கள். இந்தச் சோமபானம் என்பது சித்தர்கள் கணடுபிடித்துள்ள ஒரு பெரிய ரகசியம்! நமது நாட்டு அறிவியலுக்கே உரிய பெருஞ்செல்வம் இது!

உடற்கூற்று வல்லார்களாகிய வைத்தியர்கள் நமது நாட்டிலும் சரி, மேலை நாடுகளிலும் சரி, இந்த உடம்புக்குள்ளே இயங்கி வருகிற பல சுரப்பிகளையும் நாளங்களையும் பற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். இன்றைய விஞ்ஞானமும் இந்தக் கண்டுபிடிப்பை வைத்திய முறையிலேயே அடிக்கோடு போட்டு உறுதிப்படுத்தியுள்ளது.

மனித உடம்புக்குள்ளே இந்தத் திரவமானது, உயிராற்றலுக்கே உயிராற்றலாகச் சுரந்து செயற்படுகிறது! இத்தகைய ஒரு திரவப் பாலே சோம அமுதம் அல்லது சோம பானம் என்பது. உயிரைக் காக்க வல்லதும், வேறு பல அதிசய வல்லமைகளை வழங்க வல்லதுமான இந்தச் சோம பானத்தைப் பற்றி ஞானக் கும்மி பாடுகிறது. இந்தச் சோமபானம் நம்முடைய ஞானிகள் கண்டுபிடித்துள்ள அறிவுக்கு அறிவான சித்த இரகசியம்!

ஏதேதோ பானங்களைக் குடித்து மயங்கி விழுகிற மனித சமுதாயத்தை நோக்கிச் சித்தர் பாடுகிறார். மனத்தை உட்செலுத்தி மெய்ப்பொருளோடு லயம் ஆகும்படி உள்ளுணர்வு தரவல்லதாகிய அரிய பானம் ஒன்று, இந்த உடம்புக்குள்ளேயே சுரக்கிறது! அதைப் புறக்கணித்துவிட்டுக் கள்ளைக் குடிப்பது எவ்வளவு மடமை! கஞ்சாப் புகை பிடித்துத்தானா மனமானது உள்ளே ஒடுங்கவேண்டும்! இல்லை, இல்லை! அதற்கு எல்லாம் மேலானதோர் பானம், கேடு இல்லாததும் பேரின்பமே தரவல்லதுமான பானம், உள்ளுக்குள்ளேயே இருக்கிறது என்று பாடுகிறார் சித்தர். சோமபானமும் அதோடு சேர்ந்த வேறு சில சுரப்பிகளின் பானமும் உள்ளன என்கிறார்.

கள்ளுண்டு தள்ளுண்டு நில்லாதே - பின்பு
கஞ்சா உறக்கமும் கொள்ளாதே
உள்ளுண்டு ரோமக் கலையாகி - பானத்தை
ஊட்டிக் கும்மி யடியுங்கடி!

சோம பானமாகிய உடம்பின் சுரப்பி தருகிற அமுத பானத்தைத் தவிர, மற்ற லாகிரிகள் எல்லாம் சோம்பலும் தூக்கமுமே தரும்! அதிகப் பசியை உண்டாக்கிப் பிறகு நாளாக நாளாகச் சோகை என்ற நோயை

உண்டாக்கிக் கேடு செய்துவிடும்! ஆகையால் இந்தப் பழக்கங்களுக்கு இடமே கொடுக்கக் கூடாது என்கிறார் சித்தர்! இவற்றை விலக்கிவிட்டு, இந்த உடம்பின் சுரப்பிகளிலேயே கசிந்து வருகிற ஞானபானத்தை அருந்தி, ஞானப் பார்வையிலே உடம்புக்குள்ளே புகுந்து பார்த்து, அந்த அகப்பார்வையிலே ஒன்றி லயமாக வேண்டும் என்பது சித்தர் வாக்கு. அந்த ஒன்றிய பார்வையான ஆன்மலயத்துக்கு நெற்றிக் கண் பார்வையாகிய சிவனார் பார்வை என்றும், சாம்ப சதாசிவ நாட்டம் என்றும் பெயர். அதைப் பாடுகிறார், தூங்காமல் தூங்குவது என்னும் அந்த ஞான உறக்கத்தைக் கூறுகிறார்.

சோம்பலும் தூக்கமும் ஆகாதே அன்ன
சுதியும் சோகையும் கொள்ளாதே
சாம்ப சதாசிவ நாட்டத்திலே - நின்று
சார்ந்து கும்மி யடியுங்கடி!

மனம் மன உலகிலே மனமயமாக ஒடுங்கும்போது, ஆத்ம சக்தி என்ற உயிராற்றல் ஓங்குகிறது என்றும், அந்தத் தியான நிலையிலேதான் மூளையும் மற்ற நரம்புசார்ந்த உட்கருவிகளும், அரிய முறையிலே அமைதியான சாந்த அலைகள் என்கிற அதிர்வுகளை அசைக்கின்றன என்றும் மூளை நரம்பு வல்லுநர்கள், மேலைநாட்டு விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து சொல்லுகிறார்கள், இன்றைய அறிவியல் மொழியிலே! இதையே வற்புறுத்துகிறது ஞானக் கும்மி.

## நிலையான இன்பம்

நிலையானதும், மெய்யானதும் ஈடு இணையற்றதுமான பரம்பொருளுறவு என்னும் பேரின்பத்தை அடைவதற்கு, நேரான வழி என்ன என்பதைச் சொல்லுவதே சித்தர் பாடல்களின் நோக்கம்! அந்த வழியைச் சுவையில்லாத முறையில் இளைத்துப்போன சொற்களிலே சொன்னால், கேட்பவர்களுடைய உள்ளத்திலே அந்த உபதேசம் பதிவுபெறாது போய்விடும்! இதற்காக இனிய தமிழிலே, எளிய சந்தத்திலே, உள்ளம் பூரித்த களிப்போடு கும்மியாகப் பாடுகிறார் சித்தர்! பெரிய பெரிய ஆழமான அறிவியல் உண்மைகளை எல்லாம் தாளம் போட்டுக்கொண்டு நாட்டுப்புற மெட்டிலே பாடிவிடுகிறார். விஞ்ஞான நுட்பங்களையெல்லாம் மெய்ஞ்ஞானத்தோடு கலந்து, தேனையும் பாலையும் சேர்த்து வழங்குவது போலே, எளிய தமிழிலே தந்து விடுகிறார் இந்த ஞானி!

பரம்பொருளோடு சுகித்து வாழ்வதற்குரிய அரச வழிகளிலே இரண்டைப் பார்வை என்ற முறையிலும், மூச்சு என்ற முறையிலும் கூறிய சித்தர், வாசி யோகமாகிய குதிரைப் பயிற்சியைப் பாடும்போது குதிரையிலே ஏறிச் செல்வது போன்ற துள்ளலோடு களிப்பு பொங்கும் படியாகப் பாடுகிறார்.

மூச்சை அடக்கப் பயிலுவதற்கு முன்னர், வீணாசைகளை அடக்கப் பயிலவேண்டும் என்று சொல்ல வருகிறார். அதையும் அழகோடு கூடிய கவிதையிலே சொல்லுகிறார்.

புற்றுக்குள்ளே பாம்பு இருப்பதைப் போலே, நெஞ்சுக்குள்ளே வீணான பேராசை குடியிருக்கும் என்று பேசுகிறார்.

பாம்பு இருக்குது புற்றுக்குள்ளே - சுக
பந்தம் இருக்குது நெஞ்சுக்குள்ளே
வீம்பை அடக்கி உயர்ந்தக்கால் - பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே!

உடம்பையும் உள்ளத்தையும் கெடுக்கின்ற வீணான பேராசைகளிலே மூச்சைக் கொடுத்தால், பிறகு மூச்சுப் பயிற்சி என்ற குதிரை ஏற்றத்துக்கு என்ன மூச்சு மிஞ்சப் போகிறது? ஆகையால் அதை முதலில் அடக்கி உயரவேண்டும் என்கிறார். அப்படிச் செய்தால் வாசியோகம் என்ற அருமையான குதிரை வேடிக்கையை, பரி வேட்டையைப் பார்க்கலாம்! அல்லாது போனால் குதிரை நம்மைக் குழியிலே தள்ளிவிடும்!

வீம்புகளை அடக்கிப் பிறகு குதிரையாகிய வாசியோகத்திலே ஏறிச் சென்றால் என்ன நடக்கும்?

மூலத் தெருவில் ஒருபாய்ச்சல் - அந்த
முச்சந்தி வீதியில் ஒரு பாய்ச்சல்
மேலைத் தெருவில் ஒரு பாய்ச்சல் - பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே!

மூச்சின் தோற்றுவாயான அந்த மூலத் தெருவிலிருந்து ஒரு பாய்ச்சல்! பிறகு சந்திரனும் சூரியனும் அக்கினியும் கூடுகிற முச்சந்தி வீதியிலே அடுத்த பாய்ச்சல்! இதனால் என்ன ஆகும்? மேலத்தெரு என்கிற மேலுச்சி வீதியிலே சென்று பாயும் நமது மூச்சுக் குதிரை!

அடிப்படையான உண்மை என்ன? இந்த உடம்புக்குள்ளே இயல்பாக அமைந்துள்ள தத்துவங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள், ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் சுற்றி வருகின்றன. இவற்றை மண்ணிலிருந்து விண்ணுக்கு உயர்த்த வேண்டும். திருமூலர் இந்த அரிய வித்தையை, இந்த அரிய ஆன்மக் கலையை, 'மடை மாற்றல்' என்பார். ஒரு மடையிலே பாய்கிற தண்ணீரை இன்னொரு மடைக்கு மாற்றம் செய்வது என்பது இந்தக் கலை! விஷய இச்சைகளிலே செல்கிற புலன்களை மாற்றுகிற இந்த ஆன்ம ஞானத்தைக் கீதாசாரியனும், அர்ஜுனனிடம் கூறுகிறார். பாரத தேசத்து முனிவர்கள் எல்லாரும் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பயின்று அனுபவித்துப் பலன்கண்ட ஒரு மாபெரும் கலை இது. இந்தக் கலையிலே வெவ்வேறு பயிற்சி முறைகள் உண்டு. கலை ஒன்றே. அந்த ஒரே கலையின் பல கிளைகளிலே ஒரு முக்கியம வாய்ந்த கிளைதான் சுவாசப் பயிற்சி! அந்தக் கடினமான கலையைச் சுலபமான தமிழிலே பாடுகிறது ஞானக்கும்மி!

## யார் நம் குரு?

'நினையாமல் நினைப்பது' என்ற தியான நிலையைப் பற்றியும், தூங்காமல் தூங்குவது என்ற அரியதொரு கலையைப் பற்றியும் ஏற்கெனவே பார்த்தோம். இதுபோலவே சொல்லாமல் சொல்லுவது என்று இன்று இருக்கிறது. அது என்னவென்றால், வெறும் சொற்களிலேயே பேசாமல், அனுபவ பூர்வமான செயல்மூலம் பேசுதல்! அதாவது அந்த ஆசிரியருடைய வாய் பேசுவதற்குப் பதிலாக அவருடைய செயலே, அவருடைய உடம்பே, பேசும்! இது மிகப் பெரிய கல்வி! சொல்லாமலே சொல்லுகிற உபதேசம் இதுவே! இதைப் பாடுகிறது ஞானக்கும்மி.

மந்திரம் என்பதே வெளியிட்டுச் சொல்லாமல் மன ஒலி அதிர்வினால் உள்ளுக்குள்ளே அதிரச் செய்கிற நுட்பமான ஒலி அதிர்வுகளாகும். 'Vibration' என்கிற அதிர்வின் ஒலி அலைகள் அவை! அவற்றிற்குரிய மையங்கள் உடம்பில் உண்டு.

பேசாது இருக்கும்
இடம்பார்த்தே - அதைப்
பெற்றே இருப்பது மந்திரமாம்

ஆசான் என்றே
உபதேசம் இட்டால் - குரு
அல்லவென்று கும்மி யடியுங்கடி!

வார்த்தைகளால் மட்டும் எவ்விதமான பயனும் கிடையாது! எனவே, சொற்குரு வேறு, சற்குரு வேறு என்று ஆகிறதல்லவா? அதுமட்டுமா? வெளிவேடங்களை வைத்து நம்பிவிடக் கூடாது என்றும் அறிவுறுத்துகிறார் சித்தர் பெருமான்! எப்படி?

தாடிவளர்த்துச் சடைவளர்த்து - நல்ல
சந்யாசி என்றொரு வேடமிட்டு
ஓடித்திரிநத புலையாட்டை - இங்கே
ஒப்புவதாரடி ஞானப்பெண்ணே!

ஓடித் திரிந்த புலையாடு என்பதிலே எத்தனையோ சிலேடைப் பொருள்கள் உண்டு. கழுத்திலே நாடிபோன்று ஒரு சதை தொங்குகிற வெள்ளாடு நமக்குத் தெரியும். அந்தத் தாடி போன்ற தொங்கு சதைக்கு 'அதர்' என்று பெயர். நெடி வீசுகிற புலை ஆடு அது. அப்படி ஒரு பொருள். இன்னொரு பொருள், புலையாட்டம் என்றால் அது பித்தலாட்டம். வஞ்சனை - ஏமாற்று என்று பொருள்! வெறியாட்டமாகிய காம லீலைகளையும் இது குறிக்கும்! அத்தனையும் சேர்த்து வெளிவேடங்களை உதறிப் பேசுகிறார் சித்தர் இந்த அழகான பாடலிலே!

சித்தர்களுடைய உலகத்திலே 'குரு' என்ற சொல்லுக்கு, வெளிச்சம் அல்லது ஒளி என்றும் பொருளாகும். ஞானப் பேருண்மையை வார்த்தையிலே சொல்லாமல், தொட்டு உணர்த்துகிறவரும், அவ்வாறு சொல்லாமல் சொல்லுகிறவருமாகிய குருவானவர், நமக்கு வெளியே இருந்து, ஞானாசிரியனாக விளங்கி நமக்கு வழிகாட்டுகிறார். பின்னர் நமக்குள்ளே இருக்கும் குரு, தமது கல்வியைத் தொடங்குகிறார். அதாவது, ஒளிமயமான ஞான அனுபவக் கல்வி தொடங்குகிறது! இந்த உட்பொருளாகிய ஒளியை நாம் அறிந்து கொள்ளாவிட்டால், எவ்வித ஆன்மீகப் பயனும் நமக்கு இல்லை. இதை அறிந்து தேர்ந்து விட்டாலோ, நமது அகஉடம்பு புடம்போட்ட தங்கம் ஆகிவிடும்! பொருளைத் தெரிந்துகொள்ளாமல் புடம் போடுவது எப்படி?

குரு இருப்பதும் நெஞ்சுக்குள்ளே - மனக்
கோணல் அறுப்பதும் தன்னுக்குள்ளே
பொருள்இ ருப்பதும் அறியாமல் - புடம்
போடுவ தெப்படி ஞானப்பெண்ணே!

மெய்யான குரு, ஞான குரு நமக்கு இரண்டு நிலையிலே கைகொடுக்க வேண்டும். முதலாவது நிலை, மனித உருவத்திலே நம்முன் வந்து, உட்பொருளை நமக்கு அனுபவத்திலே காட்ட வேண்டும். இதன் பின்பு, அடுத்த நிலை தொடங்குகிறது ஒளியாகிய குரு உடம்பையும், நமது உள்ளத்தையும், உள்ளுக்குள் அனைத்தையும் புடம்போட்ட தங்கமாக மாற்று உயர்த்தி ரசவாதம் செய்து விடுகிறார்! செம்பையும் பொன்னாக மாற்றுகிற மெய்ஞ்ஞானம் அதுவே!

❖❖❖

# இடைக்காட்டுச் சித்தர்

இந்த அரிய மகான் இடையர் குலத்தில் உதித்தவர் என்று பலரும், இடையனுடைய பாவனையிலிருந்து பசுக்களாகிய ஆன்மாக்களை நோக்கிப் பாடியதால் இவரை இடையர் என்று எண்ணுவதற்கு இடம் இருக்கிறதே தவிர இடையர் இல்லை என்று மிகச் சிலரும் கூறுகிறார்கள். இவரைப் பெரும்பாலும் கொங்கண முனிவரின் மாணவர் என்றே அறிஞர்குலம் சொல்லுகிறது.

இவருடைய காலம் கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டு என்று தெரிகிறது. எனினும் சங்க இலக்கியத்திலும் இடைக்காடர் பாடல்கள் காணப்படுவதால் ஒரு மயக்கம் இருக்கிறது.

புறச்சான்றுகள் இல்லாத நிலையில் அகச் சான்றுகளை மட்டுமே வைத்துக்கொண்டு காலத்தினை அறுதியிடுகிற ஆய்வு முடிவுகளில் எனக்கு நம்பிக்கை இல்லை.

சொல்லாட்சி என்பவை வைத்தே சில பேரறிஞர்கள் கால ஆய்வு செய்து முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த முறையலான கணிப்பு புலமையை எடுத்துக் காட்டலாம், ஆனால் காலத்தை அறுதியிடுவதற்கு உற்ற துணை ஆகாது என்பது என் கருத்து.

இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே வழக்கொழிந்த சொற்களைக் கையாண்டு கடும்நடை எழுதுகிற அறிஞர்கள் இல்லையா? நூறு ஆண்டுகள் கழித்து இந்த நடையை மட்டும் வைத்துக்கொண்டு இவர் பாரதி காலத்துக்குப் பல்லாண்டுகள் முந்தியவர் என்று ஓர் ஆராய்ச்சியாளர் முடிவெடுத்தால் அது எப்படி இருக்கும்!

இந்த நூற்றாண்டிலும் சென்ற நூற்றாண்டிலுமே குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர் போன்றோர் புலமை நடை கையாண்டு சில நூல்களும், பேச்சொடு கலந்த எளிய நடையினைக் கையாண்டு குறம், குறவஞ்சி போன்ற பனுவல்களும் ஆக்கியுள்ளதைக் காணுகிறோம்.

எடுத்துக்கொண்ட பொருளுக்கும், யாருக்காக எழுதுகிறோம் என்ற குறிக்கோளுக்கும், என்ன வடிவத்தில் எந்த அரங்கிற்காக எழுதுகிறோம் என்ற அமைதிக்கும் தக்கவாறு ஒரே புலவர் வேறுபட்ட

நடைகளைப் பயன்படுத்துகிற அவசியத்தையும் வகையையும் பார்க்கிறோம்.

சித்தர்கள் பாடல்களைத் தங்களுடைய புரட்சியையும், சமநோக்கையும், சீர்திருத்தக் கருத்துக்களையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் பொதுமக்களுடைய நெஞ்சத்தில் ஆணி அடித்தாற் போலப் பதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இயற்றும்போது, அந்தக் கவிதைகளிலே நாடோடி மக்களின் பாங்கையும், மொழியையும், இதயப் பண்புகளையும் அவர்களில் ஒருவனாக நின்று எடுத்தோதுவதே பயனுள்ள படைப்பாக அமையும். இந்த முறையிலே புலமை மிக்க பண்டிதர்களும் பாமர நடையைக் கையாள்வது முத்தமிழில் நாடகத் தமிழின் அடிப்படைக் கோட்பாடாக விளங்குகிறது. எனக்குத் தெரிந்து பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முதுபெரும் அறிஞர் வேங்கடசாமி நாட்டார் போன்றோர் வானொலியிலே பேச வரும்போது தங்களுடைய புலமை நடையைக் கைவிட்டுக் கொச்சைத் தமிழிலே இலக்கிய உரை நிகழ்த்தியதுண்டு.

இதையெல்லாம் மனத்திற்கொண்டு கால ஆராய்ச்சியிலே வெறும் ஊகத்தின் முடிவுகளைத் தவிர்க்கலாம். தவிர்க்க வேண்டும் என்பது என் பணிவான கருத்தாகும்.

அபிதான சிந்தாமணி ஆசிரியர் வியப்புக்கும் மதிப்புக்கும் உரிய சிங்காரவேலு முதலியார் தமது ஆய்விலும் செவிவழிச் செய்திகளை மனம் வைத்துச் சில வரலாற்றுக் குறிப்புகளைத் தமது நூலிலே பெய்திருக்கிறார். இந்த ஆய்வை வைத்து இடைக்காடரைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை நான் ஆனந்த விகடன் தீபாவளி மலரில் ஒரு கதையாக எழுதி வெளியிட்டேன். அதே கதை இந்தச் சித்தர் இலக்கிய நூலின் முதலாவது பகுதியில் அச்சாகியிருக்கிறது.

அபிதான சிந்தாமணியில் வந்துள்ள இடைக்காடர் வரலாற்றின் அடிப்படையில் ஒரு குறிப்புத் தருகிறேன்.

இவர், தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டிலிருந்த இடையர். பொதிகை மலைச் சாரலில் ஆடு மேய்த்திருக்கையில், நவசித்தர்களில் ஒருவர் வந்து இவரிடம் பால் தரும்படி கேட்டார். அவருக்கு அன்போடு பால் தந்து மகிழ்வித்தார். மனம் நிறைந்த சித்தர் இந்த இடையருக்கு 'ஞானக்' கல்வி என்ற பாலை ஊட்டினார். அந்த நொடியிலிருந்து இடையர் சித்தர் ஆனார்.

ஒரு முறை இந்த இடைக்காட்டுச் சித்தர் தமது ஞானத் தொலைநோக்கினால் பன்னிரண்டு ஆண்டுகளில் நாடு பஞ்சம் வந்து உழலப் போவதைக் கண்டு கொண்டார். தமது ஆடுகளுக்கு எந்தப் பஞ்சத்திலும், மழையிலாது எந்த வறட்சி ஏற்படினும், எப்போதும் கிடைக்கக் கூடிய எருக்கிலையைத் தின்னும்படி பழக்கம் செய்தார். நாடு கொடிய பஞ்சத்தால் இன்னலுறும்போது இவருடைய ஆடுகள் மட்டும் எருக்கிலையிலே பிழைத்திருப்பதை நவக்கிரக நாதர்கள் ஒன்பதின்மரும் கண்டு இவரிடம் உண்மை அறிய வந்தனர். சித்தர் அவர்களைத் தமது உபசரிப்பிலே திக்குமுக்காடச் செய்து ஆட்டின் பாலை அருந்தும்படி கொடுத்தார்.

எருக்கிலை தின்ற ஆடுகளின் பாலிலே எருக்கிலைச் சத்து கலந்திருந்த காரணத்தால் பால் உண்டதும் நவ நாயகர்கள் மயங்கித் தலை சாய்ந்தனர். சித்தர் தமது உள்ளத்திற்குள் கிரகங்களின் சாரநிலை எப்படி இருந்தால் மழைபெய்யும் என்பதைக் கணக்கிட்டு அந்தச் சார நிலையிலே உறங்கிய கிரகங்களை மாற்றி அமைத்தார். உடனே மழை பொழிந்து ஆறுகளும் குளங்களும் நீர் நிரம்பி ஓடிய நிலை ஏற்படவே சித்தர் மகிழ்ந்தார்.

இந்தச் சித்தர் சரீரம் என்ற மருத்துவ நூல் ஒன்றும் இயற்றியுள்ளார்.

இடைக்காடரைப் போகரின் மாணவர் என்றும் கூறுவர். இவர் காலம் கடைச்சங்க காலம். திருவள்ளுவரின் குறளுக்கு இவரே "கடுகைத் துளைத்து" என்று தொடங்கும் சாற்றுக்கவி தந்தவர்.

இடைக்கழி நாட்டில் பிறந்தவர் என்றும், ஊசிமுறி இவர் இயற்றியது என்றும் ஒரு வரலாறு கூறுகிறது.

குலசேகர பாண்டியன் காலத்தவர் என்றும் கூறப்படுகிறது. அரசனைக் காணுவதற்காக இவரும் கபிலரும் ஒரு சமயம் அரண்மனை சென்றபோது, அரசன் முகமன் தராத காரணத்தால் இருவரும் வெகுண்டு சென்றனர். பின்னர் அரசன் வருந்தி மீண்டும் அழைப்பு விடுக்கவே இருவரும் மற்றப் புலவரும் வந்து மகிழ்வித்தனர் என்றும் ஒரு நிகழ்ச்சி காணப்படுகிறது.

இவரைப் பற்றிய செவிவழிச் செய்தி ஒன்றும் உண்டு:

இடைக்காடர் திருமாலின் அவதாரம். சங்கம் அழிந்து போகும்படி சாபம் இட்டவர் இவரே! இவரிடம் சில சித்தர்கள் வந்து

திருமாலின் அவதாரங்களில் சிறந்தது எது என்று கேட்க, அதற்கு இவர் "ஏழை, இடையன், இளிச்சவாயன்" என்று மறுமொழி சொன்னார். இந்த மறுமொழியின் உள்ளுறையைப் புரிந்துகொண்டு அந்தச் சித்தர்கள் மகிழ்ச்சியோடு சென்றனர்.

இடைக்காடர் மலையாளம் வட்டாரத்தில் இடைக்காடு என்ற ஊரில் பிறந்தவர் என்றும் கூறுவர். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியுள்ளவர் என்பதைத் தமிழறிஞருலகு நன்கறியும். முல்லைத் திணையைச் சிறப்பாகப் பாடியவர். அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியத்திலும் திருவள்ளுவ மாலையிலும் இவருடைய பாடல்களைக் காணுகிறோம்.

மேலே கூறிய வரலாறுகள் தமக்குள் எப்படி மாறுபடினும், இடைக்காடர் இடையர் என்ற செய்தியில் பலரும் ஒருமித்துப் பேசுகிறார்கள்.

இறைவனே இடையன் என்ற உருவகத்திற்கு உள்ளானவன். பதி பசு பாசம் என்ற மூன்று சொற்களிலேயே பசுவும் அதைப் பிணித்துள்ள கயிறும் புலனாகின்றன! எனவே பதியாகிய இடையன் அங்கே தோன்றுகிறான்! கிறித்துவ சமயத்திலும் மேய்ப்பன், ஆயன் என்ற உருவகம் இருப்பது இங்கே நினைவு கூர்ந்து மகிழத்தக்கதாம்.

பின்வரும் பாடல்களிலே எளிய சொற்கள் இருப்பினும், சில உருவகங்களும் குழூஉக் குறிகளும் இடையிலே வருவதால் எல்லாவற்றுக்குமே அடிக்குறிப்பாக உரை தரப்பட்டுள்ளது.

உபதேசப் பொருள் என்ற சித்தர்களின் ஞானப் பயிற்சி பற்றிய தகவல்களும் ஒல்லும் வகையாலும் இடத்தாலும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

# இடைக்காட்டுச் சித்தர் பாடல்

## காப்பு

### - கலி விருத்தம் -

ஆதி யந்தமில் லாதவ னாதியைத்
தீது றும்பவத் தீப்படு பஞ்சுபோல்
மோது றும்படி முப்பொறி யொத்துறக்
காத லாகக் கருத்திற் கருதுவாம்.

## தாண்டவராயக் கோனார் கூற்று

### - கண்ணிகள் -

எல்லா வுலகமு மெல்லா வுயிர்களும்
எல்லாப் பொருள்களு மெண்ணரிய
வல்லாள னாதி பரம சிவனது
சொல்லா லாகுமே கோனாரே. 1

---

காப்பு: இறைவணக்கம் என்பது வணங்குபவர்களின் பக்குவ நிலைக்கு ஏற் மாறுபடும். இந்தக் காப்புச் செய்யுள் சித்தரின் முறையிலான ஒரு தியானம்

ஆரம்பமும் முடிவும் இல்லாத பரம்பொருளுக்கு வணக்கம் கூறுகிறா கொங்கணரின் மாணவரான இடைக்காடர். அந்தப் பரம்பொருளை உள்ளத்தினால், கருத்தினால் வணங்குகிறார். பிறவித்துயரம் என்ற பூர்வமா துன்பம் தீயிலே வெந்துபோகிற பஞ்சைப் போல அழிந்தொழியும் வண்ண கருத்தினால் ஏத்துகிற வணக்கம் இது. சூரியன் சந்திரன் நெருப்பு ஆகிய இ மேனிப்பொறிகள் மூன்றும் இணங்குகிற சித்தர் முறை இதுவே. இந் ஒழுக்கமுறையிலே பேரன்பாகிய காதலோடு தியானம் என்னு கருத்துநிலையிலே கருதுவோம் என்கிறார் இடைக்காடர்.

1. பரமசிவனது ஆற்றல் எண்ணிப் பார்க்க முடியாத அளப்பரிய பேராற்ற ஆகும். அவனுடைய ஒலியின் நுட்பத்திலே இந்த உலகங்கள் அனைத்தும் இந்த உயிர்கள் அனைத்தும், பொருள்கள் அனைத்தும் ஆக்கப்பட்டன.

தாண்டவக்கோன் என்றால் தாண்டவ அரசன், ஆடல் வேந்தன், நடராஜன் ஒலிமயமான இயக்க நாயகன் அவன்.

தாயுமானவர் பராபரமே என்று அழைத்துக் கண்ணிகள் பாடியதுபோல் இடைக்காடர் தாண்டவக்கோனை அழைக்கிறார்.

வானியல் போல வயங்கும் பிரமனே
சூனிய மென்றறிந் தேத்தாக்கால்
ஊனிய லாவிக் கொருகதி யில்லையென்
றோர்ந்துகொள் குவீர்நீர் கோனாரே. 2

முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக் குறுதிகள் செயயாக்கால்
சித்தியும் பத்தியும் சத்தியு முத்தியுஞ்
சேரா வாகுமே கோனாரே. 3

தொல்லைப் பிறவியின் தொந்தமுற் றறவே
சோம்பலற் றுத்தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவு ளெய்தும் பதமுமக்கு
இல்லையென் றெண்ணுவீர் கோனாரே. 4

---

2. வயங்குதல் - விளங்கி இயங்குதல். பிரமம் - முழுமுதற்பொருள். சூனியம் - வெறுமை, வெறுமையே எல்லாமாக விளங்கி ஓர் சட்ட அமைப்பில் இயங்கியும் இயக்கியும் வருகிறது என்ற பேருண்மையை உணர்வதே ஞானாகும். அதுவே ஊனுக்குள் இயங்குகிற ஆவிக்கு உறுதி தரவல்லது.

3. முத்திக்கு முழுமுதற் காரணமாக உள்ளது பரம்பொருளாகிய மூர்த்தியே. அந்த மூர்த்தியை வழிபடுவதே முத்திக்கு உறுதிசெய்யும் முறை. இது கூடவில்லையென்றால், எந்த இறைநெறியின் பயனும் கைகூடாது.

4. பிறவித் தொல்லையின் தொடக்கு அறுவதற்கு ஒரே வழி தவம் செய்வதே யாகும். அந்தத் தவமும் சோம்பலின்றித் தாழாது உஞற்ற வேண்டும். இல்லையென்றால் தெய்வபதம் என்றும், இறைமை என்றும் ஞானிகள் கூறுகிற கடவுட் கொற்றம் எய்தாது போய்விடும். அதாவது மனிதன் மனித நிலையிலிருந்து உயர்ந்து கடவுள்நிலையை அடைவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழி இடையீடில்லாத தவமேயாகும் என்பது சித்தர் வாக்கு.

ஆரண மூலத்தை அன்புட னேபர
மானந்தக் கோலத்தைப் பண்புடனே
பூரண மாகவே சிந்தித்து மெய்ஞ்ஞானப்
போதத்தைச் சார்ந்திடும் கோனாரே. 5

காலா காலங் கடந்திடு சோதியைக்
கற்பனை கடந்த அற்புதத்தை
நூலாற் பெரியவர் சொன்னநுண் பொருளை
நோக்கத்திற் காண்பது கோனாரே. 6

சொல்லருஞ் சகல நிட்கள மானதைச்
சொல்லினாற் சொல்லாமற் கோனாரே
அல்லும் பகலு மகத்தி லிருந்திடிற்
அந்தகன் கிட்டுமோ கோனாரே. 7

---

5. மெய்ஞ்ஞான உணர்வு ஏற்படுவதற்குரிய வழியைக் கூறுகிறார் இடைக்காடர்.

மறைகளின் தோற்றமும் உட்பொருளும் முழுமுதற் கடவுளாகிய பரம்பொருளேயாகும். அந்த மூலத்தை அன்புடன் கருதவேண்டும். கருதுதல் என்றால் தியானித்தல். அதுவே சித்தர்களின் முறையிலான சிந்தனை என்பது.

பரம்பொருளானது ஆனந்த வடிவானது. அந்த ஆனந்தக் கோலத்தைப் பண்புடன், அதாவது முறைமையுடன் சிந்தித்தல் வேண்டும். சிந்தித்தல் என்றால் முழுமையாகத் தோய்ந்து, இரண்டற்ற நிலையிலே தியானிப்பது.

இதுவே மெய்ஞ்ஞான உணர்வுக்கு வழியாகும்.

6. நோக்கம் என்பது கண்கள் கொண்டு அகத்திலே உட்புகுந்து காணுவது.

காலம் காலமின்மை என்ற நிலைகளைக் கடந்து ஒளியாகும் அது!. அது கற்பனைக்கு எட்டாத அற்புதம். ஞான நூல்களிலே சான்றோர்கள் கூறியுள்ள நுட்பமான பொருள் இந்த ஒளியே. இதை அகக்கண் கொண்டு காணவேண்டும்.

7. யமன் நெருங்கமாட்டான். எப்போது? மாசற்ற அந்த ஒளியை மோன ஒடுக்கத்திலே கண்டு இரவும் பகலும் அதிலேயே ஒன்றி நிற்கக் கற்றுக்கொண்டால் யமன் நெருங்கான்.

சூரியன் வாள்பட்ட துய்ய பனிகெடுந்
தோற்றம்போல் வெவ்வினை தூள்படவே
நாரியிடப் பாகன் தான்நெஞ்சிற் போற்றியே
நற்கதி சேர்ந்திடுங் கோனாரே. 8

மும்மலம் நீக்கிட முப்பொறிக் குக்கிட்டாத
முப்பாழ் கிடந்ததா மப்பாழைச்
செம்மறி யோட்டிய வேலை யமயத்துஞ்
சிந்தையில் வைப்பீரே கோனாரே. 9

பஞ்ச விதமாய்ச் சஞ்சலம் பறக்கப்
பற்றற நின்றதைப் பற்றி யன்பாய்
நெஞ்சத் திருத்தி யிரவு பகலுமே
நேசித்துக் கொள்ளுவீர் கோனாரே. 10

---

8. சூரிய ஒளியில் பனி மறைவது போல், இந்த ஒளிக்காட்சியில் வினைகள் நீங்கும்.

9. செம்மறி ஓட்டுதல் என்பது ஆடுமேய்க்கும் மொழியில் கூறப்பட்ட உலகச் செயல்களை!

மூன்று கனலும் தாண்டிய வெறும் வெளியிலே, ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றும் அழிகிற நிலை உள்ளது. அதை எல்லா நேரத்திலும் ஒடுக்க நிலையிலே நின்று கருத வேண்டும்.

10. ஐம்பொறிகளிலுமே சஞ்சலம் படர்ந்து நிற்கிறது. இதைப் பறக்கடிக்க வேண்டும்.

பற்று அற்ற நிலையிலே அந்தரமாக நிற்கும் அந்தப் பரமான்ம ஒளியை நெஞ்சகத்திலே நிலைநிறுத்தி இரவும் பகலும் நேசத்தோடு கூடினால் அதுவே உய்வுக்குரிய ஒரே வழி.

## நாராயணக் கோனார் கூற்று
### - தரவு கொச்சகம் -

சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான்பொருளைப் பஞ்சவுரு வானவொன்றைப்
பேரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக எந்நாளும் நெஞ்சிருத்தி வாழ்வேனே. 11

கண்ணுள் கருமணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுருவப் பாதியனைப் பேசரிய முப்பொருளை
விண்ணின் அமுதை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணளியை யுள்ளில்வைத்துச் சாரூபஞ் சாருவனே. 12

---

11. மனித உடம்புக்குள்ளே நமது கண்ணின் ஒளியைக் கொண்டு சித்தர் முறையிலான தவத்தைச் செய்து பழகுகிற பக்குவியை நாராயணக்கோன் என்பது இடைக்காடர் மரபு! அதாவது மனிதர் குலத்தின் தலைவனாக நிற்கும் நிலை அது. அந்த நிலையிலே நின்று பயில்கிற மனித ஞானி தனது திடசித்தத்தைக் கூறுகிறார். சிவமாகிய தீக்கொழுந்து அந்த அகக்கண் ஒளியாகும். அது தெள்ளிய அமுதநிலை. அது செந்நிறத் தேனாயாகும். அது வானுயர்ந்த பொருள். ஐந்து உருவப்பொருள் அதுவே. ஐந்து சிவநிலைகளும் அதுவே. வான ஒளியாகிய பெருஞ்சுடர், பேரின்பக் கடல் அது. அதை நேருக்கு நேராகக் கண்கொண்டு கண்டு நெஞ்சத்து நிலைநிறுத்திப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வேனாக!

12. கண்ணுக்குள் தெரிகிற அகஒளியின் பண்புகளை விளக்குகிறார். கற்பகம் - எண்ணிக் கோருவது அனைத்தையும் தரவல்லது. காஞ்சனம் பொன்போன்ற ஒளி தெரியும். கருணை மயமான சந்திரஒளி.

## கண்ணிகள்

மனமென்னும் மாடடங்கிற் றாண்ட வககோனே - முத்தி
வாய்த்ததென் றெண்ணேடா தாண்ட வக்கோனே. 13

சிவமென்னும் பாம்பிறந்தாற் றாண்டவக்கோனே - யாவுஞ்
சித்தியென்றே நினையேடா தாண்ட வக்கோனே. 14

ஆசையெனும் பசுமாளின் தாண்ட வக்கோனே - இந்த
அண்டமெல்லாங் கண்டறிவாய் தாண்ட வக்கோனே. 15

ஓசையுள்ள டங்குமுன்னந் தாண்ட வக்கோனே - மூல
ஓங்காரங் கண்டறிநீ தாண்ட வக்கோனே. 16

---

13. மாடு அடங்குதல் என்பதற்கு இரண்டு பொருள், அதனுடைய கொட்டம் அடங்குதல், அது கருத்தரித்தல் என்று இருபொருள்.

மனம் வெறியடங்கிச் சூலாகுதலே ஞான உணர்வாகிய சித்தி.

14. பாம்பு போன்று நஞ்சுடையது சினம்.
இது மடிவதே மிகப்பெரிய சாதனை.

15. ஆசை என்பது பல கன்றுகளை ஈனுகிற காராம்பசு.
அது மாண்டதானால் எல்லா ஞான சாதனைகளும் கிட்டும்.

16. மூல ஓங்காரத்தைக் காணுகிற பயிற்சியே குண்டலினி யோகமாகும்.
ஓசை அகத்திலே அடங்குதலே ஞான ஒடுக்கமாகும்.

மூலப் பகுதியறத் தாண்ட வக்கோனே - உள்ளம்
முளைத்தவேர் பிடுங்கேடா தாண்ட வக்கோனே. 17

சாலக் கடத்தியல்பு தாண்ட வக்கோனே - மலச்
சாலென்றே தேர்ந்தறிநீ தாண்ட வக்கோனே. 18

பற்றே பிறப்புண்டாக்குந் தாண்ட வக்கோனே - அதைப்
பற்றா தறுத்துவிடு தாண்ட வக்கோனே. 19

சற்றே பிரத்திச்சை தாண்ட வக்கோனே - உன்னுள்
சலியாமல் வைக்கவேண்டுந் தாண்ட வக்கோனே. 20

அவித்தவித்து முளையாதே தாண்ட வக்கோனே - பத்தி
அற்றவர் கதியடையார் தாண்ட வக்கோனே. 21

செவிதனிற்கே ளாதமறை தாண்ட வக்கோனே - குரு
செப்பில்வெளி யாமலலவோ தாண்ட வக்கோனே. 22

---

17. முதலிலேயே தொடங்கிய வினையின் ஆணிவேரைப் பிடுங்கிட வேண்டும். மூலக்கனலை எழுப்புவதே வழி.

18. இந்த உடம்பாகிய பானையின் இயல்பு என்ன? இது மலம் நிரம்பிய சாலாகும்.

19. ஆசைதான் பிறவியை ஏற்படுத்துகிறது. அந்தப் பற்றைப் பற்றற அறுத்துவிட வேண்டும்.

20. பிரமத்திடம் இச்சை வைப்பது மிக நுண்ணியது. அதைச் சலியாமல் நிலைநிறுத்துகிற முயற்சியே தவமாகும்.

21. அவித்தமுளை மீண்டும் முளைக்காது. வினைகளின் விதைகளை அவிக்கவல்லது ஈடுபாடு என்னும் பக்தியேயாகும்.

22. கேட்ட மறை பெரிதுதான். ஆனால் கேளாத மறை அதைவிடப் பெரிதாகும். கேளாத என்றால் புறச்செவியினால் கேட்க இயலாதது. அது அகத்திலே ஒலிப்பது. கேளாமலே கேட்கிற ஒலி அது. அந்த ஒலியை எழுப்புவது என்பதே சித்தவித்தை. அது செப்பவும் வெளிவருவது. அதாவது அகக்கரணங்கள் ஒன்றும்போது அந்த அகஒலி எழுகிறது. அதுவே "கீதக் கண்ணாடியில் கேட்டு நின்றேனே" என்று திருமூலர் பாடுகிற ஒலி அனுபவமாகும்.

## கட்டளைக் கலித்துறை

மாடும் மனைகளும் மக்களும் சுற்றமும் வான்பொருளும்
வீடும் மணிகளும் வெண்பொன்னுஞ் செம்பொன்னும்
வெண்கலமும்
காடும் கரைகளுங் கல்லாப் பணியும் கரிபரியும்
தேடும் பலபண்டம் நில்லா சிவகதி சேர்மின்களே. 23

## நேரிசை வெண்பா

போகம்போம் போக்கியம்போம் போசனம்போம்
புன்மைபோம்
மோகம்போம் மூர்க்கம்போம் மோசம்போம் - நாகம்போம்
வேதமுத லாகமங்கள் மேலான தென்றுபல்கால்
ஓதுபிர மத்துற்றக் கால். 24

---

23. மாடு - செல்வம். மனைகளும் - துணைவியும் மக்களும். சுற்றமும் வான்பொருளும் - மேலான உடைமைகளும். வெண்பொன் - வெள்ளி. செம்பொன் - தங்கம். தேடும்பல பண்டம் - சம்பாதிக்கிற பல சொத்துக்களும்.

24. போகம் - துய்ப்பு. அதாவது உலக இச்சை. போசனம்போம் - உணவில் ஆசைகூடிய நாட்டம் இராது. புன்மை - சிறுமை. மோகம் - பற்று. மூர்க்கம் - வெகுளி. மோசம்போம் - ஏமாற்றுகிற பண்பு போகும். தாகம்போம் - ஆசை ஏக்கம் தாபம் தொலையும். வேதங்களும் ஆகமங்களும் மேலான கதி என்று பன்னிப் பன்னி எடுத்துச் சொல்கிற பிரம்மத்திலே தோய்கிற ஒடுக்கம் கைவரப்பெற்றால் இத்தனை கேடுகளும் நம்மைவிட்டு நீங்கிப்போம்.

பிரமத்தில் உறுதல் என்பது மூலாதாரத்திலிருந்து கனலை எழுப்பி ஆதார நிலைகளூடு மேலே சென்று ஆயிரம் இதழ் நிலையத்திலே பரப்பிரும்மமாகிய வான் சோதியிலே ஒன்றிநிற்றல்.

## தாண்டவராயக் கோனார் கூற்று

தாந்தி மித்திம தந்தக்கோ னாரே
தீந்தி மித்திமி திந்தக்கோ னாரே
ஆநந்தக் கோனாரே - அருள்
ஆநந்தக் கோனாரே.

ஆயிரத்தெட்டு வட்டமுங் கண்டேன்
அந்தவட் டத்துள்ளே நின்றதுங் கண்டேன்
மாயிரு ஞாலத்து நூற்றெட்டும் பார்த்தேன்
மந்த மனத்துறுஞ் சந்தேகந் தீர்த்தேன். (தாந்)

அந்தக் கரணமெ னச்சொன்னா லாட்டையும்
அஞ்ஞான மென்னு மடர்ந்தவன் காட்டையும்
சந்தத் தவமென்னும் வாளினால் வெட்டினேன்
சாவா திருந்திடக்கோட்டையுங் கட்டினேன். (தாந்)

மெய்வாய்கண் மூக்குச் செவியெனு மைந்நாட்டை
வீறுஞ் சுவையொளி யூறோசை யாங்கோட்டை
எய்யாம லோட்டினேன் வாட்டினே னாட்டினேன்
ஏக வெளிக்குள்ளே யோக வெளிக்குள்ளே. (தாந்)

---

கூற்று - சுற்று என்பது சில சுவடிகளில் கூத்து என்றும் வரும். இது, ஞானமும் ஆனந்தமும் சேர்ந்த ஞானானந்தம் என்கிற பேரறிவுக் களிப்பாகும். இந்தக் களிப்பு ஒளியும் ஒலியும் ஒன்றிய செவியும் கண்ணும் கூடிய அகஉலகின் 'கட்செவி என்னும் பாம்புப் பயிற்சி. இந்தக் களிப்பை வெளியிடுகிறார் சித்தர்.

எண்ணிக்கையற்றதும், எண்ணிக்கை சொல்லுவதுமான சக்கர நிலைகளும், அவற்றின் மைய நிலைகளும், வழிபாட்டுக் களங்களும் கண்டு தெளிவு பெற்றேன்.

மம்மர் என்று சொல்லுகிற இருளான காட்டையும், அகக்கருவிகளின் இயக்கத்தையும், ஒளித்தவம் என்கிற வாள்கொண்டு வெட்டினேன். சாகாக்கல்வி கற்று மரணமிலாப் பெருவாழ்வுக்குக் களம் பண்ணினேன்.

ஐந்து புலன்களாகிய நாட்டிலே ஐம்புல இயக்கமாகிய காட்டை வில்கொண்டு எய்யாமல் ஓட்டி, வாட்டி, ஆட்டிப் படைத்தேன். எல்லாம் யோகமுறையாகிய வெட்ட வெளியிலே நடத்திய செயல். மனம்கொண்டு புரிந்த கருத்தின் காரியம் இது.

பற்றிரண் டும்மறப் பண்புற்றேன் துன்புற்றேன்
பாலையு முட்கொண்டேன் மேலையாங் கட்கண்டேன்
சிற்றின்பம் நீக்கினேன் மற்றின்பம் நோக்கினேன்
சிற்பரஞ் சேர்ந்திட்டேன் தற்பரஞ் சார்ந்திட்டேன்

அண்ணாக்கை யூடே யடைத்தே யமுதுண்ணேன்
அந்தரத் தரத்தை யப்பொழு தேயெண்ணேன்
விண்ணாகும் மொழியை மேவிப்பூ சைபண்ணேன்
மெய்ஞ்ஞான மொன்றன்றி வேறேயொன்றை
நண்ணேன் (தாந்)

மண்ணாதி பூதங்க ளைந்தையுங் கண்டேனே
மாயா விகாரங்கள் யாவையும் விண்டேனே
விண்ணொளி மொழியை மெய்யினுட் கொண்டேனே
மேதினி வாழ்வினை மேலாக வேண்டேனே. (தாந்)

---

சித்தர் தமது பேரின்ப நிலையை மேலும் விளக்குகிறார். பாவ புண்ணியம், நல்வினை தீவினை ஆகிய பற்றுக்கள் இரண்டையும் களைந்த நிலையில் ஏற்படுகிற பண்பே ஞானப்பண்பு என்பது. இந்த இரண்டையும் கடந்த நிலையில் தொடர்புற்றேன். ஞானப்பாலை உண்டேன். பரமபத பானமும் கொண்டேன். உடலின்பமாகிய சிற்றின்பம் நீங்கிப் பேரின்ப நோக்கு பெற்றேன். ஞானநிலையாகிய சிற்பரம் சேர்ந்தேன். நல்லிறையின்பம் சார்ந்து ஒழுகலுற்றேன்.

உள்நாக்கை அடைத்து அமுதம் குடித்தேன். பலவிதச் சித்திகளை எய்துவதில் மனம் பற்றாமல் மெய்யான ஞான தவத்தையே நாடினேன்.

ஐந்து பருப்பொருள் நிலையையும் புரிந்துகொண்டேன். மாயையின் செயல்களைத் திறந்து பார்த்து உதறினேன். ஒளியின் ஒலியாகிய நாதத்தின் பேச்சை உடம்பினுள் ஒளிசெய்ய வைத்தேன். இந்த உலகத்து வாழ்க்கையை மேலாகக் கருதி விரும்பவில்லை நான்!

சித்தர் தமது பக்குவ நிலையை இவ்வாறு எடுத்துச் சொல்லி, நாட வேண்டிய பதம் எது என்பதை மக்களுக்குக் காட்டுகிறார்.

வாக்காதி யைந்தையும் வாகாய்த் தெளிந்தேனே
மாயைசம் பந்தங்க ளைந்தும் பிரிந்தேனே
நோக்கரு யோகங்க ளைந்தும் புரிந்தேனே
நுவலுமற் றைந்தியோக நோக்கம் பரிந்தேனே (தாந்)

ஆறா தாரத்தெய் வங்களை நாடு
அவர்க்கும் மேலான ஆதியைத் தேடு
கூறான வட்டவா னந்தத்திற் கூடு
கோசம்மைந் துங்கண்டு குன்றேறி யாடு (தாந்)

## நாராயணக் கோனார் கூற்று

ஆதி பகவனையே பசுவே
அன்பாய் நினைப்பாயேல்
சோதி பரகதிதான் பசுவே
சொந்தம தாகாதோ.
எங்கும் நிறைபொருளைப் பசுவே
எண்ணிப் பணிவாயேல்
தங்கும் பரகதியில் பசுவே
சந்ததஞ் சாருவையே.

---

பேச்சு, மூச்சு, நோக்கு, கேட்பு, துய்ப்பு ஆகிய ஐந்தின் நிலைகளையும் தெளிவாய்ப் பதிந்து கொண்டேன். வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என்னும் வாய், கை, கால், மலவாய், கருவாய் என்ற ஐந்தொழில்களையும் அவற்றின் இயல்புகளையும் கண்டு யோகநிலை தெளிந்தேன்.

இதன் நுட்பம் என்னவென்றால், ஒலியானது விண்ணிலும் செவியிலும் கூடுகிறது. மெய்யூறு காற்றிலும் மேனியிலும் கூடுகிறது. காட்சி தீயிலும் கண்ணிலும் கூடுகிறது. சுவையானது தண்ணீரிலும் நாக்கிலும் கூடுகிறது. மனமானது மண்ணிலும் மூக்கிலும் கூடுகிறது.

இவற்றின் விரிவும் ஆறு ஆதார நிலைகளும், இந்த ஆறு தெய்வங்களும் ஐந்து கோசங்களின் நுட்பங்களும் முந்திய தொகுதிகளில் படங்களோடு விளக்கப்பெற்றுள்ளன.

இதே கருத்துக்களையே இடைக்காடர் இப்பாடல்களிலே கூறி மேலும் பசுவுக்கு உணர்த்தும் களியிலும் பேசுகிறார்.

பசு என்பது, ஞானியாகிய இடையனால் மேய்க்கப்படுகிற மானிடப் பசுக்களையும், பதியின் ஆட்சிக்குட்பட்ட ஆன்மப் பசுக்களையும்!

அல்லும் பகலுநிதம் பசுவே
ஆதி பதந்தேடில்
புல்லும் மோட்சநிலை பசுவே
பூரணங் காண்பாயே.

ஒன்றைப் பிடித்தோர்க்கே பசுவே
உண்மை வசப்படுமே
நின்ற நிலைதனிலே பசுவே
நேர்மை யறிவாயே.

நின்ற நிலைதனிலே பசுவே
நேர்மை யறிவாயே.

எல்லா மிருந்தாலும் பசுவே
ஈசர் அருளிலையேல்
இல்லாத் தன்மையென்றே பசுவே
எண்ணிப் பணிவாயே.

---

அல்லும் பகலும் - இரவுபகலற்ற நிலையில். ஆதிபதம் - நீடுபதம் என்றும் உயர்பதம் என்றும் சித்தர்கள் அழைக்கிற மெய்ஞ்ஞானத் துய்ப்பு. புல்லும் - சேர்ந்து இணையும். பூரணம் - முழுமை.

ஒன்றைப் பிடித்தல் - குறிக்கோளாகிய ஒடுக்க நிலை. நின்றநிலை - ஒடுங்கி நிற்கிற யோகநிலை. நேர்மை - ஒன்று என்ற தன்மையின் ஆதார ஒடுக்கம்.

எல்லாம் இருந்தாலும் - வாழ்வின் நலங்கள் அனைத்தும் இருந்த போதிலும். இல்லாத்தன்மை - அவை எதுவும் இல்லாதவாறான இன்மை நிலையே.

இறையருள் இருந்தால் எல்லாம் இருந்த தன்மையாகும். அஃதில்லையேல் எது இருந்தும் இன்மை என்ற நிலைதான்!

தேவனு தவியன்றிப் பசுவே
நேர்த்திடில் வேறொன்றில்லை

ஆவிக்கு மாவியதாம் பசுவே
அத்தன் திருவடியே.

தாயினுஞ் அன்பனன்றோ பசுவே
சத்திக்குள் ளானவன்றான்
நேய முடையவர்பால் பசுவே
நீங்கா திருப்பானே.

முத்திக்கு வித்தானோன் பசுவே
மூலப் பொருளானோன்
சத்திக் குறவானோன் பசுவே
தன்னைத் துதிப்பாயே.

ஐயன் திருப்பாதம் பசுவே
அன்புற்று நீபணிந்தால்
வெய்ய வினைகளெல்லாம் பசுவே
விட்டோடுங் கண்டாயே.

---

உணர்ந்த உணரவேண்டிய நிலையை இவ்வாறு பாடுகிறார்.

பொருள், பரம்பொருள், ஆன்மா, பரமான்மா என்ற முறையிலே ஆவிக்கும் ஆவி என்கிறார்.

பற்றற்றவன் இறைவன் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அன்பர்களுக்கு அவன் தாயினும் அன்பன்! நீங்காது எப்போதும் அன்பருடனேயே இருப்பவன் அவன்.

முத்திக்கு வித்து யார்? அனைத்துக்கும் வித்தான அவனே! அவன் சக்தியோடு இணைந்த மூர்த்தி.

இப்படிப்பட்ட தலைவனாகிய ஐயனை அன்புடன் பணிந்தால், தீவினைகள் அனைத்தும் விட்டோடிவிடும்.

பசு என்ற விளிக்கு இயையப் பாடல்களின் சொல்லாட்சியும் கருத்தின் பொதுமைகளும் அமைந்துள்ளன.

சந்திர சேகரன்றான் பசுவே
தாழ்ந்து பணிவாயேல்
இந்திரன் வான்முதலோர் பசுவே
ஏவல் புரிவாரே.

கட்புலன் காணவொண்ணாப் பசுவே
கர்த்தன் அடியிணையை
உட்புலன் கொண்டேத்திப் பசுவே
உன்னத மெய்வாயே.

சுட்டியுங் காணவொண்ணாப் பசுவே
சூனிய மானவத்தை
ஒட்டிப் பிடிப்பாயேல் பசுவே
உன்னை நிகர்ப்பவர்யார்.

---

சந்திரசேகரன் என்பது பிறைசூடியை. இதன் நுட்பம் என்னவென்றால், சித்தர்களுடைய தவத்துக்கு அடிப்படை சந்திர கலையாகும்.

சந்திரனைக் கொண்டு சூரியனைக் கொண்டு அக்கினி காரியத்தை முடிக்க வேண்டும் என்பதே! இதுவே முத்தழல் வழிபாடு எனப்படுவது! இத்தகைய வழிபாடு இயற்றுவோருக்கு வானுயர்ந்த ஆற்றல்களும் கைகூடும். இதையே இந்திரனும் வானவரும் ஏவல்புரிவதாக மொழிவது ஞானமரபு.

கட்புலனுக்குக் காண ஒண்ணாத பரம்பொருள் உட்புலனுக்கு வசமாகிறது.

சுட்டிக் காட்ட முடியாத தன்மைத்தாகும் சூனியப் பொருள். அந்தச் சூனிய அவத்தை என்ற தத்துவம் அப்படிப்பட்டது. அதைச் சார்ந்து பற்றிவிட்டால் அதன்விளைவுகள் வியப்பான அனுபவங்களாக விரியும்!

தன்மனந் தன்னாலே பசுவே
தாணுவைச் சாராதோர்
வன்மர மொப்பாகப் பசுவே
வையத் துறைவரே.

சொல்லொன்று நற்பொருளாம் பசுவே
சோதியைப் போற்றாக்கால்
இல்லென்று முத்தநிலை பசுவே
எப்பொரு ளுஞ்சொலுமே.

## பலரொடு கிளத்தல்
## குறள் வெண்செந்துறை

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை
விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே. 47

மனம்வாக்குக் காயமெனும் வாய்த்தபொறிக் கெட்டாத
தினகரனை நெஞ்சமதிற் சேவித்துப் போற்றீரே. 48

---

தாணு - தூண். நிலைபேறு.

நிலைபேறாக நிற்கிற தாணுவான மெய்ப்பொருளைப் பற்றுக்கோடாக மேவி நில்லாதவர்கள், வெறும் மரங்கள்!

ஒளி வடிவான பிரணவப் பொருளை, அந்தச் சோதியை, ஏத்தி வழிபடாது போனால் முத்தி என்பது கிட்டாது போகும்.

47. இனி, அடுத்து வருகிற செந்துறை ஈரடிக் கண்ணிகள் தத்துவ விளக்கங்களாக அமைகின்றன. முதலாவது குறள் கண்கொண்டு செய்கிற ஆன்மப்பயிற்சி கூறுகிறது. கண்மணிக்குள் மணிவிளக்காகத் தெரிவது அந்தப் பரஞ்சுடர்; அதனைப் போற்றிப் பயிலுங்கள்.

48. மனம், வாக்கு, காயம் முதலான பொறிகளுக்குப் புலப்படாத சூரியச்சுடராகிய அப்பனைச் சேவித்துப் பயிலுங்கள்.

காலமூன் றுடங்கடந்த கதிரொளியை யுள்ளத்தாற்
சாலமின் றிப்பற்றிச் சலிப்பறவே போற்றீரே. 49

பாலிற் சுவைபோலும் பழத்தில் மதுப்போலும்
நூலிற் பொருள்போலும் நுண்பொருளைப் போற்றீரே. 50

மூவர் முதலை முக்கனியைச் சர்க்கரையைத்
தேவர் பொருளைத் தெள்ளமுதைப் போற்றீரே. 51

தூய மறைப்பொருளைச் சுகவா ரியமிர்தை
நேய முடனாகு நிலைபெறவே போற்றீரே. 52

சராசரத் தைத்தந்த தனியான மூலமென்னும்
பராபரத் தைப்பற்றிப் பவமறவே போற்றீரே. 53

மண்ணாதி பூதமுதல் வகுத்ததொரு வான்பொருளைக்
கண்ணாரக் காணக் கருத்திசைந்து போற்றீரே. 54

---

49. சாலம் - மதில், மறைப்பு. முக்காலங்களையும் கடந்து நிற்கிறது அந்தக் கதிரொளி. அதனை உள்ளத்தின் கண்கொண்டு பற்றிப் பிடித்துச் சலிப்பில்லாமல் பயிலுங்கள்.

50. அகத்தில் பொதிந்துள்ள நுட்பம் அது. எவ்வாறு? பாலுக்குள் சுவை, பழத்துக்குள் இரசம், நூலுக்குள் பொதிந்துள்ள பொருள் ஆகிய தன்மையது அது.

51. படைப்பு, காப்பு, அழிப்பு என்ற முத்தொழிலுக்கும் மூத்தது அந்தப் பொருள். வாழையும், பலாவும், மாவும் போன்றது. இனிப்பானது, வான்பொருள் அது! தெள்ளிய அமுதம் அதுவே.

52. தூய வேதப்பொருள் அது. இன்பக் கடலின் கடைந்தெடுத்த அமுதம்.

53. அசையும் பொருள், அசையாப் பொருள் அனைத்தையும் படைத்த கேவலப்பொருள் அது. கேவலம் என்றால் தனித்தது, ஒப்பற்றது. அதிலிருந்து வந்ததே கைவல்யம்! கேவலம் கிட்டுவதே கைவல்யம்! பவமாகிய பிறப்பு நங்கும் வழி கைவல்ய ஞானமாகும்.

54. பூதங்களைத் தோற்றுவித்த அந்தப் பொருளை ஞானக் கண்ணால் காண்பதற்கு மனம் கூடுங்கள்.

பொய்ப்பொருளை விட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்றுப் போற்றீரே. 55

எள்ளிற்றை லம்போல எங்கும் நிறைபொருளை
உள்ளிற் றுதித்தே யுணர்வடைந்து போற்றீரே. 56

## நெஞ்சோடு கிளத்தல்

பூமியெல்லா மோர்குடைக்கீழ்ப் பொருந்தவர சாளுதற்குக்
காமியம்வைத் தாலுனக்குக் கதிவளதோ கனமனமே. 57

பெண்ணாசை யைக்கொண்டு பேணித் திரிந்தக்கால்
விண்ணாசை வைக்க விதியிலையே கன்மனமே. 58

மேயும் பொறிகடமை மேலிடவொட் டார்க்குவினை
தேயுமென்றே நல்வழியிற் செல்லுநீ கன்மனமே. 59

பொன்னிச்சை கொண்டு பூமிமுற் றும்திரிந்தால்
மன்னிச்சை நோக்கும் வாய்க்குமோ கன்மனமே. 60

---

55. பொய்யான பொருள்களை விட்டொழிக்க வேண்டும். எளிதில் புலனாகா மெய்ப்பொருளை நாளும் பொழுதும் நாடி இசைய வேண்டும்.

56. எள்ளில் எண்ணெய் போல உட்பொதிந்து உறைவது அது. எங்கும் அ அவ்வாறே நிறைந்து நிற்கிறது.

57. இனிவரும் பாடல்கள் மனக்கல்லைத் தகர்ப்பவை. முதலாவது கண்ணியி பேராசையைச் சாடுகிறார். உலகம் முழுவதையும் அரசாள ஆசைப்பட்டா அது வீணாசை என்பது ஒருபுறமிருக்கப் பரம்பொருள் நாட்டம் இல்லா போய்விடும் அல்லவா?

58. பரம்பொருளை நாடுவது என்பது மெய் ஆசை அதை விடுத்துப் பெ ஆசையில் உழன்றால் எப்படி?

59. பொறிகள் + தமை = பொறிகடமை. பொறியாசை மேலெழாமல் அடங்கினா வினைகள் தேயும்.

60. பொன்னில் ஆசையுற்றால், மன்னில், அதாவது இறைவனில் நோக்கு எப்ப வாய்க்கும்? வாய்க்காது!

பொய்யான கல்விகற்றுப் பொருண்மயக்கங் கொள்ளாமல்
மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் கன்மனமே. 61

பேய்க்குரங்கு போலப் பேருலகி லிச்சைவைத்து
நாய்நரிகள் போலலைந்தேன் நன்மையுண்டோ கன்மனமே. 62

இரும்பையிழுக் குங்காந்தத் தியற்கைபோற் பல்பொருளை
விரும்பினதால் அவைநிலையோ விளம்புவாய் கன்மனமே. 63

கற்பநிலை யாலலவோ கற்பகா லங்கடத்தல்
சொற்பநிலை மற்றநிலை சூட்சுமங்காண் கன்மனமே. 64

தேக மிழப்பதற்குச் செபஞ்செய்தேன் தவஞ்செய்தேன்
யோகமட்டுஞ் செய்தாலென் யோசிப்பாய் கன்மனமே. 65

சாகா திருப்பதற்குத் தான்கற்ற கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறிநீ கன்மனமே. 66

---

61. ‘கற்றாரை யான்வேண்டேன்’ என்பது ஏன்? மூளையைக் கனப்படுத்துகிற கல்வியைப் பொய்க்கல்வி என்கிறார் சித்தர். அந்தக் கல்வியானது பொருள்மயக்கம் தருவது.

62. வெறிபிடித்த குரங்கு தொத்தித் தொத்திப் பற்றுவதுபோல் உலகப் பொருள்களில் இச்சை பற்றுவதில் பயனில்லை.

63. காந்தம் இரும்பை இழுக்கும். அவ்வாறு மனத்தின் ஈர்ப்புச் சக்தியினால் அந்தப் பொருளுக்கு நிலையான தன்மை ஏற்படுமா? ஏற்படாது!

64. கற்பகாலம் என்பது ஊழி. கற்பத்தைக் கடப்பதற்குரிய நிலை கற்பநிலையாகிய யோகமே. மற்ற நிலைகள் எல்லாம் கற்பநிலையில்லை, சொற்பநிலை!

65. மரணத்தை வெல்லும் வழி தேராமல் வெறும் செபதபங்களால் ஏது பயன்?

66. சாகாக் கல்வியே கல்வி! மற்றக் கல்வி அனைத்தும் வாகற்ற கல்வி.

## அறிவொடு கிளத்தல்

எல்லாப் பொருள்களையு மெண்ணப் படிபடைத்த
வல்லாளன் றன்னை வகுத்தறிநீ புல்லறிவே. 67

கட்புலனுக் கெள்ளளவுங் காணா திருந்தெங்கும்
உட்புலனாய் நின்றவொன்றை உய்த்தறிநீ புல்லறிவே. 68

விழித்திருக்கும் வேளையிலே விரைந்துறக்க முண்டாகும்
செழித்திலங்கும் ஆன்மாவைத் தேர்ந்தறிநீ புல்லறவே. 69

மெய்யிலொரு மெய்யாகி மேலாகிக் காலாகிப்
பொய்யிலொரு பொய்யாகும் புலமறிநீ புல்லறிவே. 70

ஆத்துமத்தின் கூறான அவயவப்பேய் உன்னுடனே
கூத்துப் புரிகின்ற கோளறிவாய் புல்லறிவே. 71

இருட்டறைக்கு நல்விளக்காய் இருக்குமுன்றன் வல்லமையை
அருட்டுறையில் நிறுத்திவிளக் காகுநீ புல்லறிவே. 72

---

67. இறைவன் உலகத்தை எது கொண்டு படைத்தான்? எண்ணத்தினால் படைத்தான். எண்ணினான், அது உண்டாயிற்று என்றபடி!

68. கட்புலனுக்கு எந்தச் சிறிய அளவிலும் காண ஒண்ணாதது பரம்பொருள். எங்கும் உட்புலனாய் நிற்பது அது.

69. விழித்திருக்கும்போதே உறக்கம் வருகிறது. மரணம் வருவதும் அப்படியே!

70. புலனுடைய தன்மை என்ன? உடம்பாகிய மெய்யிலே உண்மையான மெய்போலத் தோற்றம் தந்து கருவியாக அது இயங்குகிறது.

71. கோள் - இடர்ப்பாடு. ஆன்மாவின் கூறு என்ன செய்கிறது இந்த உடம்பு? மெய்யைக் காணவிடாமல் வீணடிக்கிறது! அதனுடைய கூத்து இது!

72. இருட்டறைக்குள் இருக்கும் விளக்கே போன்றது அறிவு. இருளுலகில் பயன்படுகிற அறிவாகிய விளக்கை அருளுலகிலே ஏற்றிவைக்க வேண்டும்.

நல்வழியிற் சென்று நற்பதவி யெய்தாமல்
கொல்வழியிற் சென்று குறுகுவதேன் புல்லறிவே. 73

கைவிளக்குக் கொண்டு கடலில்வீழ் வார்போல்
மெய்விளக்குன் னுள்ளிருக்க வீழ்குவதேன் புல்லறிவே. 74

வாசிக்கு மேலான வாசியுன் னுள்ளிருக்க
யோசிக்கு மேற்கதிதான் உனக்கரிதோ புல்லறிவே. 75

அன்னையப்போ லெவ்வுயிரும் அன்புடனே காத்துவரும்
முன்னவனைக் கண்டு முத்தியடை புல்லறிவே. 76

---

73. நல்லது இருக்கும்போது அல்லதை விரும்புவதே இச்சையின் தன்னியல்பாகும். அதை அறிவுறுத்துகிறார் இந்தக் கண்ணியிலே மெய்ஞ்ஞான சித்தர்.

74. கையில் விளக்கை வைத்துக் கொண்டே வழி தெரியாமல் கடலில் வீழ்வதுண்டோ? உடம்புக்குள், அதற்கு உள்ளேயே மெய்விளக்கு இருக்கும்போது, பொய்யான குண்டுகுழிகளில் வீழலாகுமோ?

75. வாசி என்கிற மூச்சுக்கு மேலே, அதன்மீது இவர்தல் என்னும் மேலான வழி உனக்குள்ளேயே உள்ளது.

76. பால்நினைந்தூட்டும் தாய் போலே இந்த உடம்புக்குள்ளே முன்னவனாக நிற்கிறான் இறைவன். அவனைக் காணும் முறை தேர்ந்து வீடுபெற வேண்டும் என்பதே சித்தர் ஞானமாகும்.

## சித்தத்தொடு கிளத்தல்
### கண்ணிகள்

அஞ்ஞானம் போயிற்றென்று தும்பீபற - பர
மானந்தங் கணடோமென்று தும்பீபற
மெய்ஞ்ஞானம் வாய்ந்ததென்று தும்பீபற - மலை
மேலேறிக் கொண்டோமென்று தும்பீபற. 77

அல்லல்வலை யில்லையென்றே தும்பீபற - நிறை
ஆணவங்க ளற்றோமென்றே தும்பீபற
தொல்லைவினை நீங்கிற்றென்றே தும்பீபற - பரஞ்
சோதியைக் கண்டோமெனத் தும்பீபற. 78

ஐம்பொறி யடங்கினவே தும்பீபற - நின்ற
அருவே பொருளாமெனத் தும்பீபற
செம்பொருள்கள் வாய்த்தனவே தும்பீபற - ஒரு
தெய்வீகங் கண்டோமென்றே தும்பீபற. 79

மூவாசை விட்டொமென்றே தும்பீபற - பர
முத்திநிலை சித்தியென்றே தும்பீபற
தேவாசை வைத்தோமென்று தும்பீபற - இந்தச்
செகத்தை யொழித்தோமென்று தும்பீபற. 80

---

77. ஞானத்தின் பயனைத் துய்த்ததாகக் கூறி அந்த வழிமுறைகளை விளக்குகிற கண்ணிகள் இவை. அஞ்ஞானம் நீங்குவதே ஆனந்தம். மெய்ஞ்ஞானம் என்பது மலைமேல் ஏறுவது. உச்சிக்கு மேலே உள்ள நுட்பமான ஞான நிலைகளைத் தேறுவது என்பது பொருள். மனத்தைத் தும்பியாக்கிப் பாடியவாறு.

78. சித்தத்தைத் தும்பியாக வைத்ததினால் அல்லலை வலை என்றார்.

79. அருவே பொருள் என்றது நிட்களமாகிய பிரம்மத்தை. செம்பொருள்கள் வாய்த்தல் என்பது ஞான சாதனைகளை.

80. மூவாசை - மூன்று ஆசைகள், மண் பொருள் பொன் என்பவை. தேவாசை - இறைப்பற்று, செகத்தை ஒழித்தல் என்பது உலக இச்சைகளை விட்டொழித்தல்.

பாழ்வெளியை நோக்கியே தும்பீபற - மாயைப்
பற்றற்றோ மென்றேநீ தும்பீபற
வாழ்விட மென்றெய்தோந் தும்பீபற - நிறை
வள்ளல்நிலை சார்ந்தோமே தும்பீபற. 81

எப்பொருளுங் கனவென்றே தும்பீபற - உல
கெல்லாம் அழியுமென்றே தும்பீபற
அப்பிலெழுத் துடலென்றே தும்பீபற - என்றும்
அழிவில்லா தாதியென்று தும்பீபற. 82

---

81. பாழ்வெளி - மோனப் பரமானந்த வெட்ட வெளி. வள்ளல் நிலை என்பது இடம் கடந்த நிலை.

82. பொருள்கள் அனைத்தும் தோற்றமே என்பதைக் கனவு என்னல் ஞான மரபாகும்.

'காணும் பொருள்களை இல்லை என்று சொல்லுவதாகப் பொருள் கொள்ளலாகாது. அவை அனைத்தும் பரத்தை மறைக்கிற பார்முதற்பூதம் என்ற கருத்திலே, அவை தோற்றமே தவிர உண்மையில்லை என்பதே 'கனவு' என்பதன் பொருள். அதுபோலவே, நீர்மேல் எழுத்து என்ற கருத்தில் அப்பில் எழுத்து என்றார். அப்பு - தண்ணீர் நீர்மேல் எழுதுகிற எழுத்து எவ்வாறு வினாடியில் மறைகிறதோ அவ்வாறுதானே ஞானப்பயிற்சி தேறாத மானிட உடல் விரைவில் அழியும் தன்மையது. ஆனால் ஆதியாகிய ஆன்ம நிலை என்றும் நிலையானது. அந்த நிலையை இந்த உடம்போடு அடைய வேண்டும்.

## குயிலொடு கிளத்தல்

கரணங்கள் ஒருநான்கு மடங்கனவே - கெட்ட
காமமுதல் ஓராறும் ஒடுங்கினவே
சரணங்கள் ஒருநான்கும் கண்டனமென்றே - நிறை
சந்தோட மாகவே கூவுகுயிலே. 83

---

83. மனக்களிப்பைக் குயிலின் கீதம் என்றும், அந்த நிலையை உணர்த்துகிற விளிப்பொருளைக் குயில் என்றும் கையாண்டு பாடுதல் சித்தரின் உத்தி.

நான்கு கரணங்களாவன : மனம், அறிவு, நினைவு, முனைப்பு, ஆகியவை. மனஸ், புத்தி, சித்தம், அகங்காரம் என்றும் அழைக்கப்பெறுவன. இவை அகக்கருவிகளாம்.

காமம் முதல் ஆறு என்றது : அவா, வெகுளி, இவறன்மை, மயக்கு, செருக்கு, பொறாமை. இவற்றையே காமக் குரோத மோக லோப மத மாத்சர்யம் என்றும் கூறுவர்.

சரணங்கள் நான்கு : தொண்டு, மகவு, நட்பு, ஞானம் ஆகிய நான்கு பாதங்கள் அல்லது நான்கு பாதைகள்.

இதன் விரிவு திருமந்திரத்தில் பேசப்படுகிறது.

தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்பன அவை.

உலகமோக் காளமாமென் றோதுகுயிலே - எங்கள்
உத்தமனைக் காண்பரிதென் றோதுகுயிலே
பலமதம் பொய்ம்மையெயேன் றோதுகுயிலே - எழு
பவமகன் றிட்டோம் நாமென் றோதுகுயிலே. 84

சாதனங்கள் செய்தவர்கள் சாவார்குயிலே - எல்லாத்
தத்துவங்கள் தேர்ந்தவர்கள் வேகார்குயிலே
மாதவங்கள் போலும்பலன் வாயாக்குயிலே - மூல
மந்திரங்கள் தான்மகிமை வாய்க்குங்குயிலே. 85

எட்டிரண்ட றிந்தோர்க்கிட றில்லைகுயிலே - மனம்
ஏகாம னிற்கிற் கதி யெய்துங்குயிலே
நட்டனையைச் சார்ந்தறிந்து கொள்ளுகுயிலே - ஆதி
நாயகனை நினைவில்வைத் தோதுகுயிலே. 86

---

84. ஒக்காளம் - உமிழுவற்குரியது.
எழுபவம் - ஏழு பிறவி. ஏழ்மை பிறவி எனினுமாம்.

85. சாதனங்கள் - ஞான யோகப் பயிற்சிகள்.
வாய்க்கும் வாய்க்கும்படி செய்யும்.

86. எட்டும் இரண்டும் - முந்திய பகுதிகளில் விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது.
ஏகாமல் நிற்கில் - நிலைபெயராது ஒன்றினால்.
நட்டனை - போலித் தோற்றம், பொய்ம்மை.

## மயிலொடு கிளத்தல்

ஆடுமயி லேநட மாடுமயிலே - எங்கள்
ஆதியணி சேடனைக்கண் டாடுமயிலே
கூடுபோகு முன்னங்கறி கொள்ளுமயிலே - என்றுங்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே. 87

இல்லறமே யல்லவாமென் றாடுமயிலே - பத்தி
இல்லவர்க்கு முத்திசித்தி இல்லைமயிலே
நல்லறமே துறவறங் காணுமயிலே - சுத்த
நாதாந்த வெட்டவெளி நாடுமயிலே. 89

---

87. ஆணவத்தை மயில் என்று உருவகித்தல் ஒரு சமய மரபாகும். ஞானமானது ஆணத்தின்மீது இவரும்போது தெய்வநிலையாகிறது. முருகன் என்பது ஞானதத்துவம். பேரறிவாற்றல். அவன் தனது ஊர்தியாக மயிலில் ஏறிவருகிறான். பல வடிவங்கள் எடுக்க வல்ல ஆணவமாகிய சூரபதுமனை முடிவில் மயிலாக்கி இவர்ந்தான் முருகப்பெருமான். ஆணவத்தை வெற்றி கொள்வது அதை மயிலாகக் கொண்டு இவர்வதே யாகும். "அதனை அடுத்தூர்வது" என்ற உத்தியாகும் அது!

ஆதியணிசேடன் - எங்கள் சிவபெருமான் அணிந்துள்ள பாம்பணியாகிய நாகம் அதைக்கண்டு கூத்தாடு என்கிறார் சித்தர்! பாசத்தை வென்ற நிலை அது!

88. இல்லறத்தை உதறிப் பேசுவது துறவிநிலையில் நின்றவாறு.

89. காற்றூண் -கால் + தூண். அசையாமல் நிற்கக்கூடிய ஆதாரமான தூண். பாற்றூடுருவல் - பாய்ந்து ஊடுருவித் தாக்குதல். பாறுதலும் ஊடுருவுதலுமாகிய பாய்ச்சல். கீழேயிருந்து திடீரென்று மேலே பாய்ந்து செலலும் மயிலின் குதிப்பாய்ச்சல், தொலைதூரப் பாய்ச்சலன்று, துணிவும் ஊடுருவலுங் கொண்ட பாய்ச்சலாகும்.

## அன்னத்தோடு கிளத்தல்
## குறள் வெண்செந்துறை

சிறுதவளை தான்கலக்கிற் சத்திரத்தி னழல்மறையும்
மறுவயத் தான்கலக்கின் மதிமயங்கும் மடவனமே. 90

காற்றின் மரமுறியுங் காட்சியைப்போல் நல்லறிவு
தூற்றிவிடி லஞ்ஞானந் தூரப்போம் மடவனமே. 91

அக்கினியாற் பஞ்சுபொதி அழிந்திட்ட வாறேபோல்
பக்குவநல் லறிவாலே பாவம்போம் மடவனமே. 92

குளவிபுழு வைக்கொணர்ந்து கூட்டிலுருப் படுத்தல்போல்
வளமுடைய வன்மத்தை வசப்படுத்து மடவனமே. 93

அப்புடனே யப்புச்சேர்ந் தளவுசரி யானதுபோல்
ஒப்புறவே பிரமுமுட னொன்றிநில்லு மடவனமே. 94

காய்ந்த இரும்புநிறங் காட்டுதல்போல் ஆத்துமத்தை
வாய்ந்திலங்கச் செய்து வளம்பெறுநீ மடவனமே. 95

---

90. நிழல் - Image என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ். மறுவாய் என்றது குற்றங்கள் தோன்றுகிற மனஊற்றை. சிறிய தவளை தத்திற்றானால் சித்திரத்தின் வண்ணநிழல் அழியும். சிற்றின்ப ஆசைகள் மனத்திற் புகுந்தால் மதியானது மயக்கமுறும்.

91. காற்று மரத்தை முறிப்பதுபோல், அறிவு தோய்ந்தவாசி யோகத்தினால் மம்மர் அழிந்துபடும்.

92. தீயானது பஞ்சை எரிப்பதுபோலே பக்குவ அறிவினால் பாவங்கள் சாம்பளாகும்.

93. குளவி புழுவுக்கு வடிவம் வருவதுபோல், வெறிபிடித்த மனத்தை உருவாக்க வேண்டும்.

94. எந்த அளவு தண்ணீரோ அதே அளவு உப்பு கரைந்த பிறகும் நிற்கிறது, உப்புத் தண்ணீராக! அவ்வாறு பிரமத்தோடு கலந்து அளவையில் நிற்பாயாக!

95. இரும்பு நெருப்பிலே காயும்போது செந்நிறம் கொள்கிறது. உருகி வடிவம் கொள்கிற வளைவுநிலை அது! அவ்வாறே உள்ளத்தை ஞான நெருப்பில் போட்டுக் காய்ச்ச வேண்டும்.

## புல்லாங்குழலூதல்
### கண்ணிகள்

தொல்லைப் பிறவி தொலைக்கார்க்கு முத்திதான்
இல்லையென்றூ துகுழல் - கோனே
இல்லையென்றூ துகுழல். 96

இந்திர போகங்கள் எய்தினுந் தொல்லையென்
றந்தமா யூதுகுழல் - கோனே
அந்தமா யூதுகுழல். 97

மோன நிலையினில் முத்தியுண் டாமென்றே
கானமா யூதுகுழல்கோனே
கானமா யூதுகுழல். 98

---

96. தொலைக்கார்க்கு - தொலைக்காதவர்களுக்கு. பிறவி என்ற தொல்லை
தொலைத்து நீங்காதவர்களுக்கு முத்தியில்லை.

97. இந்திர போகங்கள் - உலக ஆடம்பர சுகங்கள். அத்தனையும் தொல்லைதா
பிறவிச் சுழலுக்கு வழிதான்.
அந்தமாய் - இனிமையழகோடு.

98. முத்தி என்ற நிலை சித்திப்பதற்கு உரிய ஒரே வழி மோனத் தவமேதான். அதி
எவ்விதமான ஐயமும் இல்லை. எனவே நல்ல வரக்க ஊதுவாய், மோன நி
ஒன்றே முத்திக்கு வழி என்பதில் ஐயமற ஊதி ஒலிபரப்புவாயாக!

ஆடுமாடுகளை மேய்க்கும் உத்தியிலே வருகிற பாடல்கள
அமைந்தமையினால், குழலை உரக்க ஊதும்படி பாடுகிறார் சித்தர்.

நாய்போற் பொறிகளை நாநாவி தம்விட்டோர்
பேயரென் றூதுகுழல் - கோனே
பேயரென் றூதுழல். 99

ஓடித் திரிவோர்க் குணர்வு கிட்டும்படி
சாடியே யூதுகுழல் - கோனே
சாடியே யூதுகுழல். 100

ஆட்டுக்கூட் டங்களை அண்டும் - புலிகளை
ஒட்டியே யூதுகுழல் - கோனே
ஒட்டியே யூதுகுழல். 101

மட்டிக் குணமுள்ள மாரீச நாய்களைக்
கட்டிவைத் தூதுகுழல் - கோனே
கட்டிவைத் தூதுகுழல். 102

கட்டாத நாயெல்லாங் காவலுக் கெப்போதும்
கிட்டாவென் றூதுகுழல் - கோனே
கிட்டாவென் றூதுகுழல். 103

---

99. நாய் என்றது காரண காரிய ஆலோசனை இல்லாமல் தெருவில் விழுகிற இலைகளை ஆராயாது புசிக்கிற நிலையைச் சுட்டியவாறாம். பேயர் என்றது வெறியர்கள் என்ற கருத்தில்.

100. அறங்களை அறிவுறுத்துவதை நன்றாகக் கேட்கும்படி கூறவேண்டும் என்கிறார், செவியிலே சென்று துளைக்கும்படி!

101. ஆடுகளைப் புலிகள் அண்டுவது போலே ஆசைகள் நம்மைக் கவ்வுகின்றன. அவற்றை ஓட்ட வேண்டும்.

102. மட்டிக்குணம் - சுற்றிச் சுற்றி வருகிற மண்டலிக்கும் இயல்பு. நாய்களுக்குரிய குணம் அது! மாரீச நாய் என்றது ஆசை காட்டுகிற மோசடியை!

103. நாயைக் கட்டிப் போடவேண்டும். இல்லையென்றால் நாயகனுக்கு அது பயன்படாது! காவலுக்கு உதவாது. பல சுவடிகளில் இது 'காதல்' (காவல் என்பது) என்றிருக்காது.

பெட்டியிற் பாம்பெனப் பேய்மன மடங்க
ஒட்டியே யூதுகுழல் - கோனே
ஒட்டியே யூதுகுழல். 104

எனதென்றும் யானென்றும் இல்லா திருக்கவே
தனதாக வூதுகுழல் - கோனே
தனதாக வூதுகுழல். 105

அற்றவிட மொன்றே யற்றதோ டுற்றதைக்
கற்றதென் றூதுகுழல் - கோனே
கற்றதென் றூதுகுழல். 106

---

104. பெட்டிப் பாம்பாக மனம் அடங்கவேண்டும் என்பது பொருள்.

105. அகங்காரம், மமகாரம் என்பார்கள். யான், எனது என்பது பொருள். இவ்வாறே எனது என்றும், தனது என்றும் இருவகையாக உடைமை உணர்ச்சி பேசுகிறது. எல்லாவற்றிற்கும் அடிப்படை எனது என்ற மமகாரமும், யான் என்ற அகங்காரமுமே ஆம்.

106. ஆசைகள் அறுகின்ற இடம் எது? அற்றது ஆசை, உற்றது பேரின்ப வீடு என்ற ஞானம் பிறக்கின்ற இடம் அது! 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்ற பொய்யில் மறைமொழி கூறுகிற இடம் இதுவேயாகும். அதுவே கல்வியின் நிலையாகிய கற்ற இடம்!

## பால் கறத்தல்

சாவா திருந்திடப் பால்கற - சிரம்
தன்னி லிருந்திடும் பால்கற
வேவா திருந்திடப் பால்கற - வெறு
வெட்ட வெளிக்குளே பால்கற. 107

தோயா திருந்திடும் பால்கற - முனைத்
தொல்லை வினையறப் பால்கற
வாயா லுமிழ்ந்திடும் பால்கற - வெறு
வயிறார வுண்டிடப் பால்கற. 108

நாறா திருந்திடும் பால்கற - நெடு
நாளு மிருந்திடப் பால்கற
மாறா தொழுகிடும் பால்கற - தலை
மண்டையில் வளரும் பால்கற. 109

உலகம் வெறுத்திடும் பால்கற - மிக
ஓக்காள மாகிய பால்கற
கலசத்தி னுள்விழப் பால்கற - நிறை
கண்டத்தி னுள்விழப் பால்கற. 110

---

107. பால்கறத்தல் என்பது ஞானப்பாலைக் கறத்தலாகிய ஞானயோகம். சாகாமல் இருப்பதற்குரிய பால் சிரசிலே இருந்து சுரக்கின்ற ஞானப்பாலே!

108. தோயாதிருத்தல் - உலகக் கட்டுகளில் சிக்காமல் நிற்றல். முனைத் தொல்லைவினை - பிறவிச் சுழலுக்குக் காரணமான வினை. வாயால் உமிழ்ந்திடும் பால் என்பது, ஞானப் பயிற்சியிலே உண்ணாக்கு வழியாகச் சுரந்து வருகிற பேரின்பப் பால்!

109. ஞானப்பால் நாற்றம் எடுப்பதில்லை. நெடுநாள் வாழ்வதற்குரிய பால். மாறாது சுரக்கும் அந்தப் பால். அது தலைமண்டையிலிருந்து வளர்ந்து வருகிற ஞான ஊற்றின் சுரப்பு.

110. உலக இச்சைகளை வெறுத்திடச் செய்கிற பால் அது. ஓக்காளமாக வாயிலிருந்து உமிழ்ந்து வருகிற பால் அது. வாய்க்கலசத்துள் விழுகிறது இந்தப்பால். நிறைகண்டத்துக்குள் சொட்டுகிறது அது.

ஏப்பம் விடாமலே பால்கற - வரும்
ஏமன் விலக்கவே பால்கற
தீப்பொறி யோய்ந்திடப் பால்கற - பர
சிவத்துடன் சாரவே பால்கற. 111

அண்ணாவின் மேல்வரும் பால்கற - பேர்
அண்டத்த லூறிடும் பால்கற
விண்ணாட்டி லில்லாத பால்கற - தொல்லை
வேதனை கெடவே பால்கற. 112

---

111. ஏப்பம். சாதாரண உணவினால் வருகிறது. ஞான உணவுக்கு ஏப்பம் இல்லை. தீப்பொறி - புலன்களின் வெறிச்செயல்.

112. அண்ணா - அண்ணாக்கு.
அண்டம், பேரண்டம் என்பது பிண்டத்துக்கும் பொருந்தும். தலை உச்சியைப் பேரண்டம் என்றவாறு. அமுதம் என்பது வானவர்களின் பானம் என்றும், அமரர்களாக வானவர் மரணமின்றி வாழ்வது இந்த அமுதம் அருந்தியதால் என்றும் கூறுவர். சித்தர்கள் கூறுகிற ஞானப்பால், பாற்கடலைக் கடைந்து வானவர்கள் எடுத்த அமுதம் அன்று. விண்ணவர் நாட்டிலும் கிட்டாத ஞான அமுதம் அது. உடம்புக்குள்ளே கறந்து எடுக்கின்ற ஞானப் பாலமுதம் அது.

## கிடை கட்டுதல்

இருவினையான மாடுகளை ஏகவிடு கோனே - உன்
அடங்குமன மாடொன்றை யடக்கிவிடு கோனே. 113

சாற்றரிய நைட்டிகரே தற்பரத்தைச் சார்வார் - நாளும்
தவமவமாக் கழிப்பவரே சனனமதில் வருவார். 114

அகங்கார மாடுகண்மூன் றகற்றிவிடு கோனே - நாளும்
அவத்தையெனும் மாடதைநீ யடக்கிவிடு கோனே. 115

ஒருமலத்தன் எனுமாட்டை ஒதுக்கிக்கட்டு கோனே - உடன்
உறையுமிரு மலந்தயை மோட்டிக்கட்டு கோனே. 116

மும்மலத்தன் எனுமாட்டை முறுக்கிக்கட்டு கோனே - மிக
முக்கால நேர்மையெல்லாம் முன்பறிவாய் கோனே. 117

இந்திரியத் திரயங்களை இறக்கிவிடு கோனே - என்றும்
இல்லையென்றே மரணங்குழ லெடுத்தூது கோனே. 118

உபாதியெனும் மூன்றாட்டை ஒட்டிவிடு கோனே - உனக்
குள்ளிருக்குங் கள்ளமெல்லாம் ஓடிப்போங் கோனே. 119

முக்காய மாடுகளை முன்னங்கட்டு கோனே - இனி
மோசமில்லை நாசமில்லை முத்தியுண்டாங் கோனே. 120

---

113. கிடைகட்டுதல் என்றால் இடையர்களின் நாள்வேலையின் முடிவான பணி. அதைப் பாடுகிறார் இடைக்காடர். இருவினை என்னும் மாடுகளை விரட்ட வேண்டும். மனம் என்னும் மாட்டை அடக்க வேண்டும்.

114. நைட்டிகர் - விரதம் காப்பவர்.
தவத்தை அவமாகக் கழித்தல் என்றால் தவநிலையிலிருந்து தவறுதல்.

115. அகங்கார மாறு - ஆணவமலம்.

116. ஆணவமலத்தை ஒதுக்கிக் கட்ட வேண்டும். கன்மம், மாயை என்கிற இரண்டு மாடுகளையும் ஓட்டிவிட வேண்டும்.

117. முக்கால நேர்மை முன்னறிதல் - திரிகால ஞானம்.

118. இந்திரியத் திறயம் - மூவாசை.

119. உபாதி - மூவாசை.

120. முக்காயம் - பருவுடல், நுண்ணுடல், காரண உடல்.

கன்மபல மாடுகளைக் கடைக்கட்டு கோனே - மற்றக்
கன்மத்திர யப்பசுவைக் கடையிற்கட்டு கோனே. 121

காரணக்கோ மூன்றனையுங் கால்பிணிப்பாய் கோனே - நல்ல
கைவசமாஞ் சாதனங்கள் கடைப்பிடிப்பாய கோனே. 122

## வேறு

பிரமரந்த ரத்திற் பேரொளி காண்எங்கள் கோனே - வாய்
பேசா திருந்து பெருநிட்டை சாரெங்கள் கோனே. 123

சிரமதிற் கமலச் சேவை தெரிந்தெங்கள் கோனே - முத்தி
சித்திக்குந் தந்திரஞ் சித்தத் தறியெங்கள் கோனே. 124

விண்ணாடி வத்துவை மெய்யறிவிற் காணுங் கோனே - என்றும்
மெய்யே மெய்யிற்கொண்டு மெய்யறிவிற் செல்லுங் கோனே. 125

---

121. கன்மபல மாடுகள் - தொழிலுறுப்புகளின் செயல்கள். கன்மத்திரயம் - இருப்புவினை, நுகர்வினை, நடப்புவினை என்னும் மூன்று.

122. காரணக்கோ - காரண மாடுகளாகிய இச்சைகள். அவற்றில் மூன்று பொருட்பற்று, புதல்வர்ப் பற்று, உலகப் பற்று.

123. பிரமரந்திரம் - உச்சித் துவாரம்.

124. சிரமதிற் கமலம் - சிரத்தாமரை.

125. விண்ணாடி வத்து - சிதாகாசத்தில் வீற்றிருக்கும் பரத்துவம்.
மெய்யே மெய்யிற் கொள்ளல் - உடம்பாகிய மெய்யில் ஞானசாதனமாகிய மெய்யைக் கையாளுதல். இதுவே ஞானிகள் சொல்கிற எல்லாப் பயிற்சி முறைகளுக்கும் அடிப்படையாக அமைந்த சாதனம் ஆகும்.

கண்ணாடி யினுள்ளே கண்டுபார்த் துக்கொள்ளு கோனே - ஞானக்
கண்ணன்றிக் கண்ணாடி காணவொன் ணாதெங்கள் கோனே. 126

சூனிய மானதைச் சுட்டுவார் எங்குண்டு கோனே - புத்தி
சூக்குமமே யதைச்சுட்டு மென்றெண்ணங்கொள் கோனே. 127

நித்திய மானது நேர்படி லேநிலை கோனே - என்றும்
நிற்குமென் றேகண்டு நிச்சயங் காணெங்கள் கோனே. 128

சத்தியும் பரமுந் தன்னுட் கலந்தே கோனே - நிட்டை
சாதிக்கி லிரண்டுநீ தன்னுள்ளே காணலாங் கோனே. 129

மூகைபோ லிருந்து மோனத்தைச் சாதியெங் கோனே - பர
மூலநிலை கண்டு முட்டுப் பிறப்பறு கோனே. 130

---

126. கண்ணாடி என்றது கண்ணின் நாடியான நுட்பமான அகக்கண் பார்வையை.

127. வெட்ட வெளியை யாராலே சுட்டிக் காட்ட முடியும்? நுண்ணுடலின் நுட்பமே அதைக் காட்டும்.

128. நித்தியமான ஒளிக்காட்சி கிட்டிவிட்டால் அது மறையாது நிற்கும் என்பதை உணர்வாயாக.

129. சந்திர சூரிய மண்டலங்களும் அம்மையும் அப்பனுமான அனுபவ நிலை இந்த உடம்புக்குள்ளேயே துய்க்க வல்லது. இதைக் கிட்டும்படி செய்வதே ஞானக் கல்வியாகும்.

130. ஊமையைப் போல் வாய் பேசாத மௌனியாக இருந்து சாதனை செய்வாயாக! பிறப்பை நீக்கிப் பிறவா வரம் தரவல்லது இது!

(இடைக்காட்டுச் சித்தர் பாடல் முற்றிற்று)

# குதம்பைச் சித்தர்

குதம்பை என்பது பெண்கள் காதில் அணிகிற நகை.

காதில் ஓலைச் சுருளையும், தொங்கட்டானையுங்கூடக் குறிப்பதும் உண்டு.

எங்கள் குருமார்களில் ஒருவர் இதையே தென்மாவட்டத்துப் பெண்களின் பாம்படம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். 'குதம்பாய்' என்று குதம்பை அணிந்த பெண்ணை முன்னிலைப் படுத்திப் பாடுவதால் 'குதம்பைப் பாடல்கள்' என்றும், இந்த ஞானியைக் 'குதம்பைச் சித்தர்' என்றும் கூறுகிறார்கள்.

'குதம்பேய்' என்பது குதம்பை என ஆயிற்று என்று சொல்வாரும் உண்டு. குதம் உடைய பேய் எனப் பெண்களை இழிவு கூறிப் பாடுவதால் இந்தச் சித்தர் 'குதம்பேய்ச் சித்தர்' என்றும், பாடல்களின் விளி 'குதம்பாய்' அன்று, 'குதம்பேய்' என்பதுதான் என்றும் இவர்கள் கூற்று!

உண்மையில் இந்தச் சித்தர் குதம்பாய் என்று அழைப்பது தமது மனத்தை நோக்கியே!

எத்தனையோ சுருள்களும் அணிகளும் கொண்ட இடமல்லவா இந்த மனித மனம், இதுவும் குதம்பைதான்! எத்தனை பாம்படங்கள் இந்த மனக்குதம்பையிலே தொங்குகின்றன! இந்தப் பாடலுக்குரிய பொருள் அந்தந்தப் பாடல்களின் கீழே அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது.

இசைப்பாடல் இனங்களில் உள்ள கண்ணி என்ற யாப்பிலே அமைந்த பாடல்கள் இவை.

# குதம்பைச் சித்தர் பாடல்

## - கண்ணிகள் -

வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்போர்க்குப்
பட்டய மேதுக்கடி - குதம்பாய்
பட்டய மேதுக்கடி. 1

மெய்ப்பொருள் கண்டு விளங்குமெய்ஞ் ஞானிக்குக்
கற்பங்க ளேதுக்கடி - குதம்பாய்
கற்பங்க ளேதுக்கடி. 2

காணாமற் கண்டு கருத்தோ டிருப்பார்க்கு
வீணாசை யேதுக்கடி - குதம்பாய்
வீணாசை யேதுக்கடி. 3

---

சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் சாடுகிற தொனியே சித்தர் பாடல்களின் ஆதார சுருதியாகும். இந்நிலையில் குதம்பைச் சித்தர் பாடல்களில் இந்த அடிப்படையிலும் ஒரு சிறிய மாறுபாடு காணலாம். அதாவது துறவிகளிலேயும் சம்பிரதாயங்களும் சடங்குகளும் ஆடம்பரங்களும் அமைத்துக் கொண்டுள்ள துறவிகள் உண்டு அல்லவா? அவர்களையே சாடுகிறார் குதம்பைச் சித்தர்! காதணியாகிய குதம்பைக் கண்ணியோடு பேசுவதாக நெஞ்சோடு கிளக்கிறார் இந்த ஞானி.

1. வெட்ட வெளியையே சத்தியம் என்று ஆராதித்துத் தவம் செய்கிற மெய்யான துறவிகளுக்குப் பட்டாநிலங்கள் எதற்கு? என்று கேட்கிறார் குதம்பைச் சித்தர் தமது முதலாவது பாடலிலேயே. பட்டயம் - நிலம் தமது உடைமை என்பதற்கான பதிவுச்சான்று.

2. மெய்ப்பொருளைக் கண்டு மெய்யிலே திகழ்கிற ஒரு ஞானிக்குக் காயகற்பங்கள் ஏன்? அதாவது அப்படிப்பட்ட துறவிகள் போலிகளே என்பது கருத்து!

3. புறக்கண்ணால் பாராமல் அகக்கண்ணால் பார்த்துத் தியான நிலையாகிய கருத்தில் ஒருவர் உண்மையிலேயே இருப்பவரானால் அவருக்கு வீணான ஆசைகள், பற்றுக் கோடுகள் வேண்டுமா? இருக்குமா? இராது.

வஞ்சக மற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்
சஞ்சல மேதுக்கடி - குதம்பாய்
சஞ்சல மேதுக்கடி. 4

ஆதார மான அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி - குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி. 5

நித்திரை கெட்டு நினைவோ டிருப்போர்க்கு
முத்திரை யேதுக்கடி - குதம்பாய்
முத்திரை யேதுக்கடி. 6

தந்திர மான தலந்தனில் நிற்போர்க்கு
மந்திர மேதுக்கடி குதம்பாய்
மந்திர மேதுக்கடி. 7

---

4. சில பெருந்துறவிகள் உலகவர் முன் தோன்றிப் பல சஞ்சலங்களுக்கு உள்ளாவதைப் பார்க்கிறோம் அல்லவா? இவர்கள் வஞ்சகர்கள் என்பது கருத்து.

வஞ்சகமே யில்லாத மெய்வழி கண்டு திளைப்போர்க்குச் சஞ்சலங்கள் ஏற்படுமா? ஏற்படாது. அப்படி ஏற்பட்டால் அவர்கள் வஞ்சத் துறவிகளே.

5. பல துறவிகள் வாதப் பிரதிவாதங்களாகிய வாதாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஆதார அடிப்படையான மூலமும் உச்சியும் கண்டு தெளிந்தவர்கள் வாதாட்டங்களில் ஈடுபடார்கள்.

6. சில துறவிகள் பற்பல அடைமொழிகள் தாங்கி வளைய வருகிறார்கள். முத்திரை போட்டுக் கொள்கிறார்கள். இது ஏன்? நித்திரையில்லாமல் தியானம் கூடியவர்களான, தூங்காமல் தூங்கி ஒடுக்க நிலையில் உள்ளவருக்கு இந்த முத்திரைகள் குத்திக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை!

7. சிலர் மந்திரங்கள் என்றும், சடங்குகள் சுபங்கள் என்றும் ஆடம்பரம் செய்கிறார்கள். இலக்கணம் விரிக்கிறார்கள் அல்லவா? நுட்பயோக இரகசியமான தியானத்தலத்தில் இருப்போர்க்கு இவை வேண்டுவதில்லை.

சத்திய மான தவத்தி லிருப்போர்க்கு
உத்திய மேதுக்கடி - குதம்பாய்
உத்திய மேதுக்கடி. 8

நாட்டத்தைப் பற்றி நடுவரை சேர்வோர்க்கு
வர்ட்டங்க ளேதுக்கடி - குதம்பாய்
வாட்டங்க ளேதுக்கடி. 9

முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்க ளேதுக்கடி - குதம்பாய்
சத்தங்க ளேதுக்கடி. 10

உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டோர்க்கு
இச்சிப்பிங் கேதுக்கடி - குதம்பாய்
இச்சிப்பிங் கேதுக்கடி. 11

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மோகாந்த மேதுக்கடி - குதம்பாய்
மோகாந்த மேதுக்கடி. 12

---

8. உத்தியம் - பதவி, சமுதாயப் பெருமை. சத்தியமான உண்மைத் தவத்தில் இருப்பவர்களுக்குப் பதவிகள், சமுதாய நிலைகள் அவசியமில்லை. 'உத்தியம்' என்பதை யாக வகையான சடங்குகள் எனப் பொருள்கொள்ளலும் உண்டு.

9. நயனப் பயிற்சி என்னும் முறையிலே கண்கொண்டு செய்கிற தவம் இது. நாட்டம் என்கிற அகக்கண் பார்வை கொண்டு நடுவில் நிற்பவர்களுக்கு வாட்டம் எதற்கு? அப்படி வாடியவர்கள் இருந்தால், அவர்கள் மெய்த்தவத்தார் இல்லை.

10. சத்தங்கள் - ஆர்ப்பாட்ட ஆரவாரங்கள்.

11. உச்சிக்கு மேலே சிதம்பரத்தில் இருப்பவருக்கு ஆசைகள் இரா. அப்படியிருந்தால் அவர்கள் இருக்கும் இடம் சிதம்பரம் இல்லை!

12. தீவினைகள் வேகவைத்துத் தாம் வேகாமல் ஒளிகண்டு நிற்பதே மெய்த்தவம். அப்படித் தவம் புரிகிற ஞானிகளிடம் மோகச் சிக்கல்கள் இருக்க மாட்டா.

சாகாமற் றாண்டித் தனிவழி போவோர்க்கு
ஏகாந்த மேதுக்கடி - குதம்பாய்
ஏகாந்த மேதுக்கடி. 13

அந்தரந் தன்னி லசைந்தாடு முத்தர்க்குத்
தந்திர மேதுக்கடி - குதம்பாய்
தந்திர மேதுக்கடி. 14

ஆனந்தம் பொங்கி அறிவோ டிருப்பார்க்கு
ஞானந்தா னேதுக்கடி - குதம்பாய்
ஞானந்தா னேதுக்கடி. 15

சித்திரக் கூத்தைத் தினந்தினங் காண்போர்க்குப்
பத்திர மேதுக்கடி - குதம்பாய்
பத்திர மேதுக்கடி. 16

---

13. துறவு என்று சொல்லித் தனிமையை நாடுகிறார்கள். தனிமை அல்லது தனிவழி என்பது தனக்குள்ளே அல்லவா இருக்கிறது.

14. தந்திரங்கள் என்று சொல்லிப் பற்பல விதிமுறைகளை இலக்கணம் செய்து பேசுகிற துறவிகளைக் காய்கிறார் குதம்பைச் சித்தர்.
அந்தர வெளியிலே பிணைப்பின்றி நடனநிலை கொள்வார்க்குத் தந்திரங்கள் வேண்டியதில்லை.

15. ஞானம் என்பதும் ஒருவகைச் செருக்கால் நிற்பதைச் சிலரிடம் காண்கிறோம். படிப்பும் பேச்சும் அவ்வாறு செய்து விடுகின்றன. சில பெரிய துறவிகளைக் கூட! அந்த நிலையைச் சாடுகிறார்.

16. பத்திரம் என்ற சொல் பலபொருள் குறிக்கும் ஒரு மொழி. வழிபாட்டிற்குரிய பத்திரம் (இலை) பூ முதலிய பூசைப் பொருள்கள். பத்திரமாக இருப்பதற்குரிய காவல். சொத்து சுகங்களுக்கான பட்டயம் அல்லது சாசனம். இது ஒன்றுமே ஞானக்கூத்தினைக் கண்டு களிக்கும் நிலையிலுள்ளவனுக்கு வேண்டுவதில்லை.

முக்கோணந் தன்னில் முளைத்தமெய்ஞ்ஞானிக்குச்
சட்கோண மேதுக்கடி - குதம்பாய்
சட்கோண மேதுக்கடி. 17

அட்டதிக் கெல்லாம் அசைந்தாடும் நாதர்க்கு
நட்டணை யேதுக்கடி - குதம்பாய்
நட்டணை யேதுக்கடி. 18

முத்திபெற் றுள்ளம் முயங்குமெய்ஞ் ஞானிக்குப்
பத்திய மேதுக்கடி - குதம்பாய்
பத்திய மேதுக்கடி. 19

அல்லலை நீக்கி அறிவோ டிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி - குதம்பாய்
பல்லாக் கேதுக்கடி. 20

அட்டாங்க யோகம் அறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி - குதம்பாய்
முட்டாங்க மேதுக்கடி. 21

---

17. மூன்று நாடிகளும் மூன்று மண்டலங்களும் கோடிட்டு நிற்கும் நிலையில் உதித்தெழுகிற ஞானிகளுக்குப் பத்திகாண்டிகள் சொல்லுகிற சக்கரங்கள் அவசியமில்லை. அந்த நிலையைத் தாண்டி நிற்பவர்கள் அவர்கள்.

18. நட்டணை - வெளிவேடம், நடிப்பு, போலித்தனம். மெய்ஞ் ஞானிக்கு வேடங்கள் வேண்டாம்.

19. பத்தியம் - விரதம் முதலிய புறச்சடங்குகள். அக ஒடுக்கம் கைகூடப்பெற்ற மகான்களுக்குப் புறச் சட்டதிட்டங்கள் இல்லை. அப்படிப் புறவேலைகள் இருந்தால் அவர்கள் ஞானிகள் இல்லை.

20. அல்லல்கள், புற அல்லல்கள், அக அல்லல்கள். இந்தத் தொல்லைகளை வென்று ஞானநிலையில் இருப்பவர்களுக்குப் பல்லக்கு முதலிய சாதனங்கள் ஏன்? அப்படி வைத்திருப்பவர்களுக்கு அகஞானத்தில் குறையிருக்கிறது என்று பொருள்!

21. முட்டாங்கம் - முட்டாக்கு; போர்வை, அல்லது உடற்பயிற்சி ஆசன நிலைகள். அட்டாங்கம் என்ற யோகமுறை பயின்றாருக்குச் சால்வைகள் அல்லது துறவுவேட ஆடைகள் வேண்டாம். அவர்கள் உடம்பை வருத்துவதில்லை.

வேகம் அடக்கி விளங்குமெய்ஞ் ஞானிக்கு
யோகந்தா னேதுக்கடி - குதம்பாய்
யோகந்தா னேதுக்கடி. 22

மாத்தானை வென்று மலைமே லிருப்போர்க்குப்
பூத்தான மேதுக்கடி - குதம்பாய்
பூத்தான மேதுக்கடி. 23

செத்தநரைப் போலத் திரியுமெய்ஞ் ஞானிக்குக்
கைத்தான மேதுக்கடி - குதம்பாய்
கைத்தான மேதுக்கடி. 24

கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பார்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி - குதம்பாய்
கொண்டாட்ட மேதுக்கடி. 25

---

22. எல்லா மனவேகங்களையும் அடக்கி வென்ற சன்மார்க்க ஞானிக்கு யோகம் பயிற்சியுமே அவசியமில்லை. சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று நிலைகளையும் கடந்த ஞானி அவன்.

23. உடம்பிலுள்ள பெரிய பகைகளை வென்று மலை உச்சியாகிய சிரத்திலே தவம் செய்கிற ஞானிகளுக்கு மலர் வழிபாடோ அல்லது உலகு சுற்றி வருதலோ ஏன்?

24. புலன் நுகர்வுகள் ஏதுமின்றி இச்சைகள் செத்துப்போன ஞானியருக்குக் கைத்தாளம் வேண்டியதில்லை. அவர்கள் பஜனை செய்ய வேண்டாம்.

25. அகக்கண்ணுக்குள்ளே ஒடுங்கி நிற்போருக்குக் கேளிக்கைகள் ஏன்! கேளிக்கைகளில் இருப்பவர்கள் போலித் துறவிகளே என்கிறார் குதம்பைச் சித்தர்.

காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்க ளேதுக்கடி - குதம்பாய்
கோலங்க ளேதுக்கடி. 26

வெண்காய முண்டு மிளகுண்டு சுக்குண்டு
உன்காய மேதுக்கடி - குதம்பாய்
உன்காய மேதுக்கடி. 27

மாங்காய்ப்பா லுண்டு மலைமே லிருப்போர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி - குதம்பாய்
தேங்காய்ப்பா லேதுக்கடி. 28

பட்டணஞ் சுற்றிப் பகலே திரிவார்க்கு
முட்டாக் கேதுக்கடி - குதம்பாய்
முட்டாக் கேதுக்கடி. 29

---

26. காலனை வெல்கிற கருத்து என்கிற தியான நிலை கைகூடியவர்களுக்கு வேடங்கள் வேண்டாம். வேடதாரிகள் இக்கருத்தறிவு கைகூடப் பெறாதவர்களே.

27. உணவு வகைகளை உட்கொள்ளுகிற உடம்பு அவர்களுக்கு இல்லை. அவர்கள் இந்த நிலைகளையெல்லாம் தாண்டிய நுண்ணுடல் கொண்ட ஞானிகள்.

28. மாங்காய்ப்பால் என்பது ஞானப்பாலின் குழூஉச் சொல். பிரமத்தில் ஒடுங்கிய மகான்கள் சிரத்திலிருந்து சுரக்கிற பாலை, மாவடு போன்ற சுரப்பி ஒன்றிலிருந்து சுரக்கிற அமுதத்தை உண்டவர்கள். மலைமுகடாகிய உச்சந் தலையிலே கூடி நிற்பவர்கள். அவர்களுக்குத் தேங்காய்ப்பால் போன்ற ஆடம்பர உலகச் சத்துணவுகள் வேண்டுவதில்லை.

29. அக உலகமாகிய ஞானமாநகரிலே இரவின்றி ஒரே வெளிச்சமான பகலில் உலவுகிறவர்களே ஞானிகள். அவர்களுக்கு மேனி மூடவேண்டிய அவசியமில்லை! தவதூதர்கள் அவர்கள்!

தாவார மில்லை தனக்கொரு வீடில்லை
தேவார மேதுக்கடி - குதம்பாய் 30
தேவார மேதுக்கடி.

தன்னை யறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை யேதுக்கடி - குதம்பாய் 31
பின்னாசை யேதுக்கடி.

பத்தாவுந் தானும் பதியே டிருப்பர்க்கு
உத்தார மேதுக்கடி - குதம்பாய் 32
உத்தார மேதுக்கடி.

---

30. சித்தன் குடியிருக்கும் வீடு அவனுடைய ஞான உடம்பே யாகும். தாழ்வார வீடுகளிலுள்ள! அவன் துதிப்பாடல்கள் பாட வேண்டியதில்லை!

31. பின்னாசை - பின்னுக்கு இழுக்கிற உலகப் பிணைப்புக்கள்.

தன்னை அறிந்து தலைவனாகிய இறைவனைக் கூடியுள்ள ஞானிக்கு வேறு ஆசைகள் பின்னால் எதற்கு?

32. பத்து நாடிகள் ஒடுங்கி நிற்கிற இடத்தில் உள்ள கணவனாகிய இறைவனோடு இருப்பவர்களுக்கு, அத்தகைய மகான்களுக்குக் கட்டளைகள் வேண்டாம். எல்லா மறுமொழிகளையும் தாண்டிய மோனநிலை அது!

(குதம்பைச் சித்தர் பாடல் முற்றிற்று)

# கடுவெளிச் சித்தர்

இந்தச் சித்தர் இரண்டு கடுவெளியின் அடிப்படையில் இப்பெயர் பெற்றார்.

இந்த உலகமே கடும் வெளிதான் எனறு தெளிந்தவர் இவர். அதோடு இந்த உடம்பினுள் இறைமை கோயில் கொண்டிருப்பது உச்சிக் களமாகிய கடுவெளியில் என்றுணர்ந்து அங்கே கூடிநின்று சித்தி பெ'ற்ற மகான் இவர்.

இவருடைய காலம் பதினைந்தாம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது. இந்தப் பாடல்கள் எளிமையிலும் எளிமையாக இருப்பினும், சங்கேதச் சொற்களோடு பற்பல உருவங்களும் நிரம்பியவை. இவற்றின் சந்தம் 'ஆனந்தக் களிப்பு' என்பதோடு, இவற்றின் சீரமைப்பும் தளைகளின் புணர்ப்பும் இசைப் பண்போடு கூடியுள்ளன.

ஞானப் பயிற்சி முறைகளைக் கூறுவதோடு, பொது மக்களுக்குரிய நல்வாழ்வுச் சீலங்களையும், பழக்க வழக்கங்களையும் அறக் கோட்பாடுகளையும் கூறுகிறார். கடுவெளிச் சித்தர்.

இவரும் பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கூறுகிறார்கள்.

# கடுவெளிச் சித்தர் பாடல்

## ஆனந்தக்களிப்பு

### - பல்லவி -

பாபஞ்செய் யாதிரு மனமே நாளைக்
கோபஞ்செய் தேயமன்
கொண்டோடிப் போவான்
பாபஞ்செய் யாதிரு மனமே. 1

### சரணங்கள்

சாபங்கெடுத்திட லாமோ - விதி
தன்னை நம்மாலே தடுத்திட லாமோ
கோபந் தொடுத்திட லாமோ - இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ (பாபஞ்) 2

---

ஆனந்தகளிப்பு என்பது ஒரு சந்தம். தாயுமானவர் அருளியுள்ள 'சங்கர சங்கர சம்போ' முதலான பாடல்கள் இந்த இனத்தைச் சார்ந்தவையே. எளிய இனிய சொற்களால் ஆகிய இந்தப் பாடல்கள் நாடு முழுவதும பரவியுள்ள சித்தர் பாடல்களில் மிகவும் புகழ் பெற்றவையாம்.

சித்தர்கள் என்போர் எல்லா உலகச் சட்டங்களையும் தாண்டி நடக்கிற ஞானிகளே யானாலும், கடவுள் நம்பிக்கையும் பாவ புண்ணிய உணர்வுகளும் உபதேசிக்கிற குருமார்களே ஆவார்கள். ஞான நெறிகளையும், பேரின்ப அனுபவங்களையும் வெளியிடுகிற பாடல்களே பெரும்பாலாகக் காணுகிற சித்தர் இலக்கியத்தில் இத்தகைய அறிவுரைகளையும் நெகிழ்கிற பாடல்களையும் எளிய சந்த வடிவங்களிலே பார்க்கிறோம். சான்றாகப், பிறர்மனை நயவாமை போன்ற அறிவுரைகளையும் திருமூலர் தமது திருமந்திரத்திலே வழங்குவதைக் காண்கிறோம் அல்லவா?

1. பாவம் செய்தால் மரணம் அமைதியாக இராது. என்று பொது மக்களுக்குப் புரிகிற பாங்கிலே கூறுகிறார் சித்தர்.
2. சபிக்கிற குணம் போகவேண்டும். விதிப்படி நடக்கும். கோபம் கூடாது. மனத்தை ஆசைக்குக் கொடுத்திடக் கூடாது.

சொல்லருஞ் சூதுபொய் மோசம் - செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம் - எந்த
நாளும் மனிர்க்கு நன்மையாம் நேசம் (பாபஞ்) 3

நீர்மேற் குமிழியிக் காயம் - இது
நில்லாது போய்விடும நீயறி மாயம்
பார்மீதில் மெத்தவும் நேயம் - சற்றும்
பற்றா திருந் திடப் பண்ணு முபாயம் (பாபஞ்) 4

நந்த வனத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!. (பாபஞ்) 5

---

3. வினையின் பயன் எப்படி விளையும் எனறு சொல்லி எச்சரிக்கை செய்கிறார். சூது, பொய், பித்தலாட்டம் எல்லாம் சுற்றத்தோடு நாசமாக்கிவிடும். நட்பு, உறவு, நன்றியுணர்வு ஆகியனவே மனிதருக்கு நன்மை தருவன.

4. இந்த உடம்பு நீர்க்குமிழிபோல் நொடியில் மறையும். ஒரு மாயம்! இப்பாடலின் கருத்து பல பாடல்களில் சித்தர்கள் கூறுகிற கருத்தேயாம்.

5. நந்தவனம் என்பது கவர்ச்சி மிக்க மலர்கள் பூத்த நந்தவனம் போன்ற இந்த உலக வாழ்க்கை. ஆண்டி - ஆன்மா, உயிர்.
இந்த உலகில் உயிரானது படைப்புக் கடவுளாகிய குயவனை மிகவும் வேண்டுதல் செய்து பத்துமாதம் வேண்டி ஒரு மனித உடம்பைக் கொண்டு வருகிறது.
பிறகு கூத்தாட்டம் போட்டு உலக வாழ்விலே ஆடி ஓடி ஓய்ந்து இந்த உடம்பாகிய தோண்டியை, பானையை உடைத்துப் போட்டு விடுகிறது!
மனித வாழ்வைப் பற்றிய ஓர் சித்திரமாக, ஆனந்தக் களிப்புச் சித்திரமாக வருகிறது இந்த அற்புதமான, புகழ்பெற்ற பாடல்!

தூடன மாகச்சொல் லாதே - தேடுஞ்
சொத்துக்க ளிலேஒரு தூசும்நில் லாதே
ஏடணை மூன்றும்பொல் லாதே - சிவத்
திச்சைவைத் தாலெம லோகம்பொல் லாதே.
(பாபஞ்) 6

நல்ல வழிதனை நாடு - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு - அந்த
வள்ளல் நெஞ்சினில் வாழ்த்திக்கொண் டாடு.
(பாபஞ்) 7

நல்லவர் தம்மைத்தள் ளாதே - அறம்
நாலெட்டில் ஒன்றேனும் நாடித்தள் ளாதே
பொல்லாங்கில் ஒன்றுங்கொள் ளாதே - கெட்ட
பொய்ம்மொழிக் கோள்கள் பொருந்தவிள் ளாதே
(பாபஞ்) 8

வேத விதிப்படி நில்லு - நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாத நிலைமையே சொல்லு - பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு.
(பாபஞ்) 9

---

6. தூடணம் - தூஷணை, தூற்றல். தூசும் - ஒரு சிறு துரும்பும் தூசியும். ஏடணை - இச்சை, ஆசை. மூன்று - பொருட்பற்று, பெண்பற்று, உலகப்பற்று.

7. நத்தியே - விரும்பியே. வல்லவர் - சான்றோர்.

8. அறம்நாலெட்டு - முப்பத்திரண்டு அறங்கள். பொல்லாங்கு - தீது. கோள் - புறங்கூறல், பழிச்சொல். விள்ளுதல் - வெளியிடுதல்.

9. வேதவிதி - சான்றோர் கூறிய ஆசார இலக்கணங்கள். சாதநிலைமை - இயல்பான ஒழுகலாறு. சாதித்துக் கொல் - பயின்று உறுதியோடு நீக்கிவிடு.

இந்த நான்கு பாடல்களிலும் உலக மாந்தருக்கு நாளும் வாழ்விலே கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகளை அறிவுறுத்துகிறார் கடுவெளிச் சித்தர். முப்பாழும் தாண்டிய வெறுமை வெளியிலே பேரின்பம் துய்த்த நிலையிலுள்ள ஒரு மகான் கீழிறங்கி வந்து, எளிய தமிழிலே சமுதாய மக்களுக்கு நீதி புகட்டுகிற பாங்கு உய்த்துணரத்தக்கது.

பிச்சையென் றொன்றுங்கே ளாதே - எழில்
        பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே
இச்சைய துன்னையா ளாதே - சிவன்
        இச்சைகொண் டவ்வழி யேறிமீ ளாதே.
(பாபஞ்) 10

மெய்ஞ்ஞானப் பாயி லேறு - சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு - உன்னை
அண்டினோர்க் கானந்த மாம்வழி கூறு.
(பாபஞ்) 11

மெய்க்குரு சொற்கட வாதே - நன்மை
        மென்மேலுஞ் செய்கை மிகவடக் காதே
பொய்க்கலை யால்நட வாதே - நல்ல
        புத்தியைப் பொய்வழி தனில்நடத் தாதே.
(பாபஞ்) 12

---

10. ஏற்பது இகழ்ச்சி என்பது மட்டுமல்ல, மனித ஆன்ம நிலைக்கே முரண்பட்டது. பெருக்க மாளாதே - பல தொல்லைகளுக்கு உள்ளாகி மடியாதே. இச்சையானது மேலேறி உன்னை ஆட்டக் கூடாது; இறைவனிடத்தில் அந்த இச்சையைச் செலுத்தி மாறுபடாமல் நிற்பாயாக! இதே அறிவுரை கீதையிலும் பேசப்படுகிறது.

11. வேதாந்த வெட்ட வெளி - வேதங்களின் முடிவாகிய பரவெளி. தேறு - வெளிவடைந்து கொள். தூறு - விட்டு நீங்கி மறந்துவிடு.

12. சித்தர்களுடைய இலக்கியத்திலே ஆதார ஒலியாகக் கேட்பது அவர்களுடைய குருபக்தியாகும். ஆசானிடத்தில் அவர்களுக்குள்ள மதிப்பும் நன்றியுணர்வும் முன்னுதாரணங்களாகப் பின்பற்ற வேண்டியவை. திருமூலர் பல இடங்களில் குருவின் பெருமையை அடிக்கோடிடுகிறார்.

குருவின் சொல்லை மீறாதே. நன்மை செய்வதில் சிக்கனம் கூடாது! பொய்யான பாடம் படியாதே. அறிவைப் பொய்ம்மை வழியில் செலுத்தாதே! ஒவ்வொரு பாடலும் அறிவுரைக் கொத்தாகத் திகழ்கிறது!

கூட வருவதொன் றில்லை - புழுக்
கூடெடுத் திங்கண் உலைவதே தொல்லை
தேடரு மோட்சம தெல்லை - அதைத்
தேடும் வழியைத் தெளிவோரு மில்லை.
(பாபஞ்) 13

ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு - இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் நாடு
முந்தி வருந்திநீ தேடு - அந்த
மூலம் அறிந்திட வரமுத்தி வீடு.
(பாபஞ்) 14

உள்ளாத நால்வகைக் கோட்டை - பகை
ஓடப் பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை
கள்ளப் புலலென்னும் காட்டை - வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம் வீட்டை.
(பாபஞ்) 15

காசிக்கோ டில்வினை போமோ - அந்தக்
கங்கையா டில்கதி தானுமுண் டாமோ
பேசுமுன் கன்மங்கள் சாமோ- பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ.
(பாபஞ்) 16

---

13. மரணத்துக்குப் பின்பு இந்தப் பிணத்தோடு கூட வருவது எதுவுமில்லை. புழுக்கூடாகிய உடம்பை எடுத்ததே தொல்லை. மோட்சவீடே குறிக்கோளாகும். அதைக் கிட்டுகிற வழியைத் தெரிந்தவர் இல்லை. அதாவது அரிதிலும் அரிது என்பது கருத்து.

உடம்பை இப்படி நொந்து பேசுவதன் நோக்கம் புழுக்கூட்டைப் பொற்கூடாக ரசவாதம் செய்வது மெய்ஞ்ஞானப் பயிற்சி ஒன்றுதான் என்பதை உணர்த்தவே.

14. ஐந்துபேர் - ஐந்து பொறிகள். ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் முறையை. ஐந்து உடம்புக்குள் ஐந்தில் சேருகிற வகையிலே சித்தர் இலக்கியம் விளக்குகிறது, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பஉடம்பு என்று பிரித்தது!

15. நான்கு கோட்டைகள் என்பன, மனம், அறிவு, நினைவு, முனைப்பு.

16. காசிக்குப் போனால் கருமம் தொலையுமா? கங்கையில் ஆடிவிட்டால் மட்டும் கதி கிட்டிவிடுமா? பேதங்கள் அப்படியெல்லாம் போய் விடுகின்றனவா? இல்லை.

பொய்யாகப் பாராட்டுங் கோலம் - எல்லாம்
போகவே வாய்த்திடும் யாவர்க்கும்போங் காலம்
மெய்யாக வேசுத்த சாலம் - பாரில்
மேவப் புரிந்திடில் என்னனு கூலம்.
(பாபஞ்) 17

சந்தேக மில்லாத தங்கம் - அதைச்
சார்ந்துகொண் டாலுமே தாழ்விலாப் பொங்கம்
அந்தமில் லாதவோர் துங்கம் - எங்கும்
ஆனந்த மாக நிரம்பிய புங்கம்.
(பாபஞ்) 18

பாரி லுயர்ந்தது பத்தி - அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி
சீரி லுயரட்ட சித்தி - யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பத்தி.
(பாபஞ்) 19

---

17. வேடங்கள் எல்லாம் எமன் வருகிறவரை தான்! ஏமாற்றுக்கள் பித்தலாட்டங்கள் எல்லாம் எந்த நன்மையும் தரமாட்டா!

18. பொங்கம் - பொலிவு.
துங்கம் - தூய்மை.
புங்கம் - உயர்வு.

19. மேவரு முத்தி - மேவுதற்கரிய வீடு.
சீரிலுயர் அட்ட சித்தி - சிறப்பு மிகுந்த அட்டமா சித்திகள்.

இந்தப் பாடல்களில் அடுத்த படியில் ஏறி மேலும் சில உயர்ந்த அறிவுரைகளைக் கூறுகிறார். சமுதாய ஒழுக்கம் கூறிய மகான் இப்போது தனி. மனித அறங்களை, இறைநெறிகளை எடுத்துரைக்கிறார். பொதுக் கருத்துகளாகச் சொல்லி இத்தகைய முயற்சிகளில் தனிமனிதன் முனையவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார்.

அன்பெனும் நன்மலர் தூவிப் - பர
மானந்தத் தேவின் அடியினை மேவி
இன்பொடும் உன்னுட லாவி - நாளும்
ஈடேற்றத் தேடாய்நீ இங்கே குலாவி.
(பாபஞ்) 20

ஆற்றரும் வீடேற்றங் கண்டு - அதற்
கானவழியை யறிந்துநீ கொண்டு
சீற்றமில் லாமலே தொண்டு - ஆதி
சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடுங் கெண்டு
(பாபஞ்) 21

ஆன்மாவா லாடிடு மாட்டந் - தேகத்
தான்மா அற்றபோதே யாமுடல் வாட்டம்
வான்கதி மீதிலே நாட்டம் - நாளும்
வையி லுனக்கு வருமேகொண் டாட்டம்.
(பாபஞ்) 22

எட்டு மிரண்டையும் ஓர்ந்து - மறை
எல்லா முனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து.
(பாபஞ்) 23

---

20. மலர் தூவி வழிபடுவதிலே எந்த மலரைத் தூவ வேண்டும்?
அன்பாகிய வாடா மணமலர்!
தேவின் - கடவுளின், மூர்த்தியின். குலாவி - மனந்த தோய்ந்தவாறு.

21. ஆற்றரும் வீடு - சேர்தற்கரிய வீடுபேறு. சிவனுக்குத் தொண்டு என்றது தா மார்க்கத்தை, தொண்டு நெறியை. கொண்டு சேர்தல் - ஆட்கொண்டு இணைதல். கெண்டு என்றும் ஒரு பாடல் உண்டு. கெண்டு - செல்வம், பேறு.

22. உடலியக்கம் உயிரிருக்கும் போதுதான்!
வான்கதி - உயர்கதியாகிய வீடுபேறு என்னும் முக்தி.

23. 'எட்டும் இரண்டும்' விரிவாக முன்னர் விளக்கப்பட்டுள்ளது. வேதங்களை ஒட்டுமொத்தமாக இந்த உடம்பிலேயே தெளிந்து தேர்வதே ஞானயோகப் பயிற்சியாகும். வேதாந்தமான வெட்ட வெளியிலே ஒடுங்குகிற கல்வி அது!

மேலும் அடுத்தபடியாக ஞானத்தின் உயர்வை உணர்த்துகிறார் சித்தர்.

இந்த வுலகமு முள்ளுஞ் - சற்றும்
இச்சைவை யாமலே யெந்நாளுந் தள்ளு
செந்தேன்வெள் ளம்மதை மொள்ளு - உன்றன்
சிந்தைதித் திக்கத் தெவிட்டவுட் கொள்ளு.
(பாபஞ்) 24

பொய்வேதந் தன்னைப் பாராதே - அந்தப்
போதகர் சொற்புத்தி போதவா ராதே
மைவிழி யாரைச் சாராதே - துன்
மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்துசே ராதே.
(பாபஞ்) 25

வைதோரைக் கூடவை யாதே - இந்த
வையம் முழுதும்பொய்த் - தாலும்பொய் யாதே
வெய்ய வினைகள்செய் யாதே - கல்லை
வீணிற் பறவைகள் மீதிலெய் யாதே.
(பாபஞ்) 26

---

24. இந்த உலகத்தின் உள்ளே இச்சை வையாமல் தள்ளிவிட்டு உன் உள்ளத்துக்குள்ளே செல்வாயாக! அங்கே அகத்தேன் ஊறுகிறது. அதை மொண்டு பருகு! சிந்தை தெவிட்டத் தெவிட்ட தித்திக்கும் தேனைப் பருகுவாயாக!

25. நூல்கள் ஒரு கோடி! கண்ட கண்டவற்றைப் படியாதே. போதம் ஏற்படுவது எல்லாப் போதகர் சொல்லினாலும் இல்லை! பெண்ணாசையில் சாராமல், பொய்யர்களின் சிற்றினம் சேராமல் வாழ்வாயாக!

26. ஞானப் பயிற்சியோடு சேர்த்து அகிம்சை, சத்தியம் ஆகிய பண்புகளையும் உபதேசம் செய்கிறார் சித்தர்.

உள்ளத்துக்குள்ளே ஞானம் பயில்வதோடு வெளியே கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளும் உண்டு என்பது கருத்து.

சிவமன்றி வேறே வேண்டாதே - யார்க்குந்
தீங்கான சண்டையைச் சிறக்கத்தூண் டாதே
தவநிலை விட்டுத்தாண் டாதே - நல்ல
சன்மார்க்க மில்லாத நூலைவேண் டாதே.
(பாபஞ்) 27

பாம்பினைப் பற்றியாட் டாதே - உன்றன்
பத்தினி மார்களை பழித்துக்கட் டாதே
வேம்பினை யுலகிலூட் டாதே - உன்றன்
வீறாப்புத் தன்னை விளங்கநாட் டாதே.
(பாபஞ்) 28

போற்றுஞ் சடங்கைநண் ணாதே - உன்னைப்
புகழ்ந்து பலரிற் புகலவொண் ணாதே
சாற்றுமுன் வாழ்வையெண் ணாதே - பிறர்
தாழும் படிக்குநீ தாழ்வைப்பண் ணாதே.
(பாபஞ்) 29

---

27. மேலும் பொதுவான அறிவுரைகளை வழங்குகிறார். சிவம் என்றது பரம்பொருளை.

28. பாம்பைப் பிடிப்பதும் அதை ஆட்டுவதும் கூடாது. மனைவியைப் பழித்தலாகாது. உலகிலே கசப்பான உணர்வுகளைப் பரப்பக்கூடாது.
வீறாப்பு - தற்பெருமை கூடிய ஆணவம்.
பழிவாங்கும் மனப்பான்மை.

29. துதி பாடுகிற மனிதர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதை வற்புறுத்துகிறார் இந்த ஞானி! உனது வாழ்வின் நலத்தையே மனத்திற்கொண்டு செயல்கள் புரிகிற தன்னலத்தே விடுவாயாக! அதே சமயம் பிறருக்கு இழுக்கு ஏற்படும்படி தாழ்வு செய்யாதே.

கஞ்சாப் புகைபிடி யாதே - வெறி
காட்டி மயங்கியே கட்குடி யாதே
அஞ்ச வுயிர்மடி யாதே - பத்தி
அற்றவஞ் ஞானத்தி னூல்படி யாதே.
(பாபஞ்) 30

பத்தி யெனுமேணி நாட்டித் - தொந்த
பந்தமற் றவிடம் பார்த்ததை நீட்டிச்
சத்திய மென்றதை யீட்டி - நாளுந்
தன்வச மாக்கிக்கொள் சமயங் ளோட்டி.
(பாபஞ்) 31

செப்ப நும் பலவித மோகம் - எல்லாஞ்
சீயென் றொறுத்துத் திடங்கொள் விவேகம்
ஒப்பறும் அட்டாங்க யோகம் - நன்றாய்
ஓர்ந்தறி வாயவற் றுண்மைசம் போகம்.
(பாபஞ்) 32

எவ்வகை யாகநன் னீதி - அவை
எல்லா மறிந்தே யெடுத்திநீ போதி
ஒவ்வொவென் றபல சாதி - யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துற வோதி
(போபஞ்) 33

---

30. மாணவர்களுக்கும் சிறுவர் சிறுமியர்க்கும் சொல்லவேண்டிய நல்லுரைகள் வருகின்றன.

31. பத்தி என்ற ஏணியை நாட்டி அதில் ஏறிப் பிணைப்புகள் அற்ற இடத்திற் செல்ல வேண்டும். சமயங்களிலே புகுந்து பார், சத்தியம் என்பதைச் சம்பாதித்துக் கொள்.

32. நீதிகள் எத்தனை வகையோ அத்தனையும் தேர்ந்து நீ எடுத்து இயம்பு. பல சாதிகள் ஒவ்வாதன. எல்லாம் ஒன்றே என்ற மாபெரும் ஒருமைப்பாட்டினை நீயும் அறிந்து பிறருக்கும் அறிவிப்பாயாக!

கள்ளவே டம்புனை யாதே - பல
கங்கையி லேயுன் கடம்நனை யாதே
கொள்ளைகொள் ளநினை யாதே - நட்புக்
கொண்டு புரிந்துநீ கோள்முனை யாதே.
(பாபஞ்) 34

எங்குஞ் சயபிர காசன் - அன்பர்
இன்ப இருதயத் திருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன் - தன்னைத்
துதிக்கிற பதவி அருளுவன் ஈசன்.
(பாபஞ்) 35

---

34. திருட்டுத்தனமான வேடங்கள் வேண்டாம். பல தண்ணீரில் உன் உடம்பை நனைக்காதே. அதாவது ஒன்றென்று இரு, அதுவே நன்றென்று இரு என்பது கருத்தாகும்.

கொள்ளையடிக்க, அது எந்த வகையினாலும் நினையாதே.

நட்புறவு கொண்டு பிறகு நம்பிக்கைத் துரோகமாகக் கோள் மூட்டாதே.

35. வெற்றி நாயகனும், அன்பர்களின் இதயத்தில் இருப்போனும், சீரான அடியவர்களின் தொண்டனுமான தன்னைப் பாராட்டினால், துதித்தால் இறைவன் பதம் அருள்வான் என்று முடிக்கிற இந்த ஆனந்தப் பாடலிலே சுயசரிதக் குறிப்புக்கள் எந்த அளவுக்குப் பொதிந்துள்ளன என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் புரிந்துகொள்ள வேண்டும். புறச்சான்றுகள் இல்லை. ஊகமும் அகச்சான்றுமே துணை.

(கடுவெளிச்சித்தர் பாடல் முற்றிற்று)

# அகப்பேய்ச் சித்தர்

'அகப்பை' என்று மருவிய 'அகப்பேய்' உள்ளத்தைப் பேயாக உருவகிக்கிறது.

இந்த உடம்பினுள் இயங்குகிற புலனாசைகள் அத்தனையும் மனிதனைப் பேயாக மாற்றி உலக வெறியிலே உழலச் செய்கின்றன அல்லவா? அந்த அகப்பேயை அழைத்து அதற்கு அறிவுரை கூறுவதோடு, ஞானச் செந்நெறியாகிய சன்மார்க்கத்தையும் கற்பிக்கிறார் இந்த மகான்.

தனது அகத்திலே உறைகிற பேயை அழைப்பார்போலே, மனித மனங்கள் அனைத்தையுமே விளித்து நல்லுரையும் ஞானக் கல்வியும் ஊட்டுகிறார் இந்த அகப்பேய்ச் சித்தர்.

இவருடைய பாடல்கள் உலக பாசங்களையும் இன்னல்களையும் கடந்து நின்றாலும், மனித குலத்தின் மீது அவர் கொண்டுள்ள கருணையும், மக்கள் அனைவரும் பேரின்பப் பெருவாழ்வு பெற்று உய்யவேண்டும் எனற பெருநோக்கும் நிரம்பி நிற்கின்றன. அவற்றின் எளிமைக்குள்ளே பற்றற்ற ஒரு துறவி மனித குலத்தின் மேம்பாட்டிலே பற்றுக்கொண்டு மனமுருகிப் பாடுகிற சித்தரின் செம்மை உள்ளத்தைக் காண்கிறோம்.

# அகப்பேய்ச் சித்தர் பாடல்

நஞ்சுண்ண வேண்டாவே அகப்பேய்
நாயகன் தாள்பெறவே
நெஞ்சு மலையாதே அகப்பேய்
நீயொன்றுஞ் சொல்லாதே. 1

பராபர மானதடி அகப்பேய்
பறவையாய் வந்ததடி
தராதல மேழ்புவியும் அகப்பேய்
தானே படைத்ததடி. 2

---

"நாயகனாகிய இறைவனுடைய நிலையிலே கூடுவதற்கு நெஞ்சம் ஏன் மலைக்கிறாய்? நஞ்சையா சாப்பிட வேண்டி வரும்?" என்ற கேள்வியோடு தொடங்குகிற இந்த அகப்பேய்ச் சித்தரின் பாடல் ஞானக்கும்மி, பாம்பாட்டிச் சித்தர், போலவே தாளம் போட்டுக்கொண்டு வருகிற கவிமாலையாம்.

அகப்பேய் என்றே உடம்புக்குள் தொழிற் படுகிற விகாரங்கள் அடங்கிய உள்ளத்தை அழைக்கிறார், இந்தச் சித்தர். அதனால் அவருடைய பெயரே அகப்பேய்ச் சித்தர் என்றும், நாடோடி வழக்கில் அகப்பைச் சித்தர் என்றுங்கூட வழங்குகிறது.

நஞ்சுண்ண வேண்டாவே என்ற மொழியிலே அமுதம் அல்லவா உண்ணவேண்டும் என்பது தொக்குநிற்கிறது.

பராபரம் - ஒப்பற்ற மேன்மையான பரம்பொருள். அப்படிப்பட்ட மேலான பரம்பொருள் நாம் அதை நாடுவதன்றி, அதுவே நம்மை ஆட்கொள்ளப் பறந்து வருவது. 'The Hound of Heaven' என்ற பாடலில் ஆங்கிலக் கவிஞன் கடவுள் நம்மைத் துரத்திப்பிடிக்கிற வேட்டைநாயாகவே வருவதாகப் பாடுகிறார். நம்மவர்கள் தடுத்து ஆட்கொள்ளுதல் என்றே ஒரு தன்மை கூறுகிறார்கள்.

நாத வேதமடி அகப்பேய்
நன்னடங் கண்டாயோ
பாதஞ் சத்தியடி அகப்பேய்
பரவிந்து நாதமடி. 3

விந்து நாதமடி அகப்பேய்
மெய்யாக வந்ததடி
ஐந்து பெரும்பூதம் அகப்பேய்
அதனிட மானதடி. 4

நாலு பாதமடி அகப்பேய்
நன்னெறி கண்டாயே
மூல மானதல்லால் அகப்பேய்
முத்தி யல்லவடி. 5

---

3. நாதவேதம் - ஒலிக்கின்ற திருமறை. அது நம்முள்ளே நடனம் ஆடுகிறது ஓசை ஒலியோடு! அதன் கருணைத் திருவடியே சக்தி. பரம் விந்து நாதம்!

4. அந்த விந்துநாதம் மெய்யாக மெய்யினினுள் வந்தது! ஐந்து பூதங்களும் அதனுள் அடக்கம் - பரத்தில் மறைந்தது பார்முதற்பூதம்!

5. நாலு பாதம் - தொண்டுப் பாதமாகிய தாசம், மகவுப் பாதமாகிய சற்புத்திரம், நட்புப் பாதமாகிய சகம், ஞான பாதமாகிய சித்தம்.

இந்த நாலும் நான்கு நெறிகளில் அடைவது. இதையே திருமூலர் தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என வகுத்துக் கூறி விரிவுகள் சொல்கிறார்.

இந்த நெறிகளே முத்தியாகாது, இதுவே அடிப்படை. மூலாதாரம் என்பது பயிற்சிக்குத் தொடக்கநிலை. இருபத்தாறு தத்துவங்களைத் தாண்டி இருபத்தேழாவது நிலையில் ஒடுங்குவதே முத்தி.

வாக்காதி யைந்தடியோ அகப்்பேய்
வந்த வகைகேளாய்
ஒக்கம தானமடி அகப்பேய்
உண்மைய தல்லவடி. 6

சத்தாதி யைந்தடியோ அகப்பேய்
சாத்திர மானதடி
மித்தையு மாகுமடி அகப்பேய்
மெய்யது சொன்னேனே. 7

வசனாதி யைந்தடியோ அகப்பேய்
வண்மையாய் வந்ததடி
தசநாடி பத்தேடி அகப்பேய்
திடனிது கண்டாயே. 8

காரண மானதெல்லாம் அகப்பேய்
கண்டது சொன்னேன்
மாரணங் கண்டாயே அகப்பேய்
வந்தவி தங்களெல்லாம். 9

---

6. வாக்காதி ஐந்து - இந்திரியங்கள், அவை உண்மையல்ல.
ஒக்கமதானம் - எறிய வேண்டிய நிலையில் உள்ளவை அவை.

7. சாத்திரமானவை ஐந்து பருப்பொருள்கள்.
அவை மித்தை, அதாவது பொய்.

8. வசனாதி ஐந்து - கர்மேந்திரியங்களின் ஐந்து செயல்கள். அவை :
1) வசனமாகிய பேச்சு, 2) இயக்கம், 3) ஈகை, 4) வெளியீடு, 5) உவகை.
இவையே வடமொழியில் 1) வசனம், 2) கமனம், 3) தானம், 4) விசர்ஜனம்,
5) ஆனந்தம் எனப்படும்.
தசநாடியாகிய பத்து : இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை (உள்நோக்கு), புருடன் (வலக்கண் நரம்பு), காந்தாரி (இடக்கண் நரம்பு), அத்தி (வலச்செவி), அலம்புடை (இச்சை), சங்கினி (கருவாய்), குகு என்னும் மலவாய் நரம்பு.

9. காரணமானது - பிறப்பெடுத்து வந்து இயங்குகிற காரணங்கள். மாரணம் - மடிவு, அழிவு.

ஆறு தத்துவமும் அகப்பேய்
ஆகமஞ் சொன்னதடி
மாறாத மண்டலமும் அகப்பேய்
வந்தது மூன்றடியே. 10

பிருதிவி பொன்னிறமே அகப்பேய்
பேதைமை யல்லவடி
உருவது நீரடியோ அகப்பேய்
உள்ளது வெள்ளையடி. 11

தேயு செம்மையடி அகப்பேய்
திடனது கண்டாயே
வாயு நீலமடி அகப்பேய்
வான்பொருள் சொல்வேனே. 12

---

10. ஆறு தத்துவம் : விழைவு, செயல், அறிவு, வைப்பு, கரப்பு, அழிப்பு. வேறு விதமாகவும் சொல்லலாம். பொதுவாகத் தத்துவம் தொண்ணூற்றாறு என்பது பல நூல்களில் வழங்குபவை.

மண்டலம் மூன்று : சந்திரன், சூரியன், நெருப்பு.

11, 12. ஐம்பூத இயல்புகளிலே மண் பொன்னிறம். உருவம் பெற்ற தண்ணீர், அதாவது மேகமாக அல்லது ஆவியாக நில்லாமல் தண்ணீராக வீழ்ந்தது வெள்ளை நிறம். நெருப்பு செந்நிறம். காற்றின் நிறம் நீலம். இவை ஐம்பூத நிறங்கள் என வழங்கும்.

இந்த ஐம்பூத நிறங்கள் சித்தர்களின் பயிற்சி முறைகளிலே மிகவும் நுட்பமாகப் பயன்படுகின்றன. பார்வைப் பயிற்சி என்கிற ஞானக்கல்வியிலே இந்த நிறங்களுக்கு முக்கியம் தரப்படுகிறது. யோகம் பயில்கிற மாணவனுக்கு ஐந்து நிறங்கள் காணுகிற அனுபவம் உண்டு. இவற்றிலே ஐந்து பருப்பொருள்களும் ஐந்து மனப்பண்புகளும் உணர்த்தப்படுகின்றன. அதோடு ஞானிகளின் கண்களுக்கு அவர்கள் பார்க்கும் ஒவ்வொரு மனிதரையும் சுற்றி இந்த ஐந்து நிறங்களிலே ஒன்று மண்டலித்து நிற்கும். அவை அந்தந்த மனிதரின் இயல்பை அறிவுறுத்தும் என்பதை நயனதீட்சை பெற்ற பார்வைப் பயிற்சி பெற்ற மாணவர்கள் அறிவார்கள்.

வான மஞ்சடியோ — அகப்பேய்
வந்தது நீகேளாய்
ஊமை தாகாதே — அகப்பேய்
உள்ளது சொன்னேனே. 13

அகார மித்தனையும் — அகப்பேய்
அங்கென் றெழுந்ததடி
உகாரங் கூடியடி — அகப்பேய்
உருவாகி வந்ததடி. 14

மகார மாயையடி — அகப்பேய்
மலமது சொன்னேனே
சிகார மூலமடி — அகப்பேய்
சிந்தித்துக் கொள்வாயே. 15

---

13-15. அடுத்து வருகிற ஆறு பாடல்களும் அட்சர தத்துவங்களோடு பிரபஞ்சப் பொருளைக் கூறுவன. அதோடு மந்திரப் பொருளையும் விளக்குவனவாம்.

ஓம் என்ற மாபெரும் மந்திரம் கடவுளை உணர்த்தக்கூடிய வல்லமை பெற்றது. அதனால் அதற்கு அடிப்படையான மந்திரம், பிரணவ மந்திரம் என்று பெயர். இந்த மந்திரம் ஓர் எழுத்து ஒரு மந்திரம் என்று தோற்றம் தருகிற ஒலியாக இருப்பினும், அதனுள் 'அ'வும், 'உ'வும், மவும் சேர்ந்து ஒன்றியுள்ளன. இந்த மூன்றும் இணைகின்றதன் நுட்பத்தை முதலாம் பகுதியில் இருபத்தெட்டாவது அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்துக்கள் முக்கனலை உணர்த்துகின்ற தன்மையும், இதன் விரிவான பருவுடல், நுண்ணுடல், இலிங்க உடலின் தன்மைகளும் அவை இயங்குகிற முறையும் சித்தர் ஞானத்தில் நுட்பமான பிரிவாகும்.

இதற்குமேல் சிவ்வெழுத்து என்கிற 'சிவ' எழுத்து விளக்கம் பெறுகிறது.

வன்னம் புவனமடி அகப்பேய்
மந்திர தந்திரமும்
இன்னமுஞ் சொல்வேனே அகப்பேய்
இம்மென்று கேட்பாயே. 16

அத்தி வரைவாடி அகப்பேய்
ஐம்பத்தோ ரட்சரமும்
மித்தையாங் கண்டாயே அகப்பேய்
மெய்யென்று நம்பாதே. 17

தத்துவ மானதடி அகப்பேய்
சகலமாய் வந்ததடி
புத்தியுஞ் சொன்னேனே அகப்பேய்
பூத வடிவலவோ. 18

இந்த விதங்களெல்லாம் அகப்பேய்
எம்மிறை யல்லவடி
அந்த விதம்வேறே அகப்பேய்
ஆராய்ந்து காணாயோ. 19

---

16. வன்னம் - வனப்பு. புவனம் - உலகம்.

17. அத்தி - ஏழாவது நாடி. தசநாடிகளில் முக்கியமான ஒரு நாடி.

18-19. இந்த ஐம்பத்தொரு அட்சரங்களின் விரிவும் இதற்கு முந்திய பாடலும் அடுத்துவரும் இரண்டு பாடல்களின் விரிவும் எழுத்தும் நிலையும் என்ற அத்தியாயத்தில் முதலாவது பகுதியில் விளக்கம் பெற்றிருப்பதோடு, சக்கரங்களின் படங்களிலும் எழுத்துக்கள் நிரப்பி அச்சிடப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் இங்கே தரவேண்டியதில்லை.

இங்கே முக்கியமாகச் சித்தர் பெருமான் வற்புறுத்துவது இந்த வழிபாட்டு மூர்த்தியெல்லாம் நாதனுடைய காட்சியாகாது என்பதும், இந்த உடம்புக்குள்ளே காண்கிற ஒளியனுபவமே மெய்யான இறையின்பக் காட்சி என்பதுமே! சித்தர் இலக்கியத்தில் இதே கருத்து பல ஞானிகளும் வற்புறுத்துகிற அடிப்படையான ஞானக் கல்வியாகும்.

பாவந் தீரவென்றால் அகப்்பேய்
பாவிக்க லாகாதே
சாவது மில்லையடி அகப்பேய்
சற்குரு பாதமடி. 20

எத்தனை சொன்னாலும் அகப்பேய்
என்மனந் தேறாதே
சித்து மசித்தும்விட்டே அகப்பேய்
சேர்ந்துநீ காண்பாயே 21

சமய மாறுமடி அகப்பேய்
நம்மாலே வந்ததடி
அமைய நின்றவிடம் அகப்பேய்
ஆராய்ந்து சொல்வாயே. 22

ஆறாது மாகுமடி அகப்பேய்
ஆகாது சொன்னேனே
வேறே யுண்டானால் அகப்பேய்
மெய்யது சொல்வாயே. 23

---

20. பாவித்தல் - மனத்திலே இச்சைகளைச் செலுத்துதல்.
சற்குருபாதம் - ஞானஒளி காணும் நிலை. அதற்கு முடிவில்லை.

21. முப்பாழும் தாண்டிய பெருவெளி என்ற யோகக்களம் உணர்வுகள் தாண்டிய நிலையம். அங்கே சேதன அசேதன சலனங்கள் இரா.

22. சமயம் ஆறு சன்மதம் என்று அழைக்கப்பெறுகிற நமது சமய உட்பிரிவுகள். அவை சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் ஆகியன.

23. ஆறாறு - முப்பத்தாறு தத்துவங்கள். இந்த முப்பத்தாறாகும் தத்துவங்களும் ஆகாத நிலையைப் பேசுவது ஞானநிலை.

இந்தப் பாடல்களால் வற்புறுத்திக் கூறுகிற ஞானம் எண்ணிக்கையினாலோ அல்லது படிப்பினாலேயே உண்டாவதன்று. தத்துவங்களையும் மனம் வாக்குகளையும் உணர்வினால் தாண்டியும் தாண்டாத ஒரு பயிற்சியே மூலக்கனலை எழுப்பி ஆயிரம் இதழிலே ஒடுங்குகிற கல்வியாகும். செவிகளையும் கண்களையும் பயிற்சியினால் மூடி உள்முகமாகச் செல்லும் பயணம் ஆதாரநிலைகளூடு செல்லுதல். மூலாதாரத்திலிருந்து பரவெளிவரை பாவம் அமைக்கிற கலையே மெய்ஞ்ஞானபோதம் என்பது.

உன்னை யறிந்தக்கால் அகப்பேய்
ஒன்றையுஞ் சேராயே
உன்னை யறியும்வகை அகப்பேய்
உள்ளது சொல்வேனே. 24

சரியை யாகாதே அகப்பேய்
சாலோகங் கண்டாயே
கிரியை செய்தாலும் அகப்பேய்
கிட்டுவ தொன்றுமில்லை. 25

யோக மாகாதே அகப்பேய்
உள்ளது கண்டக்கால்
தேக ஞானமடி அகப்பேய்
தேடாது சொன்னேனே. 26

---

24. தன்னை அறிகின்ற அறிவு கைவரப் பெற்றால் வேறு எந்த நெறியையும் அகமானது சேராது. அந்தத் தன்னை அறியும்வகை என்னவென்று மேலே பேசுகிறார் சித்தர்.

25. சரியை என்கிற தாசமார்க்கம் சரிப்படாது. அதன் பலன் சாலோகம் என்ற பதமே. இறைவனோடு சேர்ந்து கூடுகிற நிலையில்லை சாலோகம். இறைவனோடு இறை உலகத்தில் இருப்பதே சாலோக பதவி. அவனைக் கூடிச் சேர்வதில்லை. கிரியை என்கிற சற்புத்திர மார்க்கமும் மேலான பதமாகிய சாயுச்சியம் தாராது.

26. யோக மார்க்கமும் பயன்தராது. சகமார்க்கமாகிய அது தெய்வ வடிவத்தையே தரும். தெய்வத்தோடு கலந்துவிட முடியாது. ஆனால் தேக ஞானமாகிய சன்மார்க்கம் அப்படியில்லை. அது தருகிற பதவி அதற்குமேல் தேடுவதற்கு வேறொன்றும் இல்லாத உன்னதமான கொடுமுடிப் பதவியாகும்!

ஐந்துதலை நாகமடி அகப்பேய்
ஆதாயங் கொஞ்சமடி
இந்தவிடந் தீர்க்கும் அகப்பேய்
எம்மிறை கண்டாயே. 27

இறைவ னென்றதெல்லாம் அகப்பேய்
எந்த விதமாகும்
அறைய நீகேளாய் அகப்பேய்
ஆனந்த மானதடி. 28

கண்டு கொண்டேனே அகப்பேய்
காதல் விண்டேனே
உண்டு கொண்டேனே அகப்பேய்
உள்ளது சொன்னாயே. 29

---

27. ஐந்து புலன்களால் வருகிற ஆதாயம் மிகக் குறைவு. எமது இறைஞானம் இந்த ஐந்தலை நாக விடத்தைத் தீர்த்து வைக்கும்.

28. இறைவன் இறைவன் என்று சொல்கிற அந்தப் பதவி எந்த விதம் அடையலாம். எடுத்துச் சொல்கிறேன்.
அறைதல் - எடுத்துக் கூறுதல்.

29. கண்டு கொள்ளுதலும், உண்டு கொள்ளுதலும் ஞானத் துய்ப்பாம். காதல் விள்ளுதல் அன்புடன் உரைத்தல். உள்ளது சொல்லல் அனுபவத்தை அப்படியே வெளியிடுதல்.

அகப்பேயாகிய வெளி மனத்துக்கு அறிவுரை சொல்வது போல உலக மக்களுக்கு ஞான போதனை செய்வதே சித்தரின் குறிக்கோள். அதோடு ஞான அனுபவத்தினால் உண்டாகிற களிப்பு கவிதையின் அடிகளிலே துள்ளி வருகிறது.

உள்ளது சொன்னாலும் அகப்பேய்
உன்னாலே காண்பாயே
கள்ளமுந் தீராதே அகப்பேய்
கண்டார்க்குக் காமமடி. 30

அறிந்து நின்றாலும் அகப்பேய்
அஞ்சார்கள் சொன்னேனே
புரிந்த வல்வினையும் அகப்பேய்
போகாதே யுன்னைவிட்டு. 31

ஈசன் பாசமடி அகப்பேய்
இவ்வண்ணங் கண்டதெல்லாம்
பாசம் பயின்றதடி அகப்பேய்
பாரமது கண்டாயே. 32

சாத்திர சூத்திரமும் அகப்பேய்
சங்கற்ப மானதெல்லாம்
பார்த்திட லாகாதே அகப்பேய்
பாழ்பலங் கண்டாயே. 33

---

30. நான் சொல்வது இருக்கட்டும். நீயே செய்து பார். இல்லையென்றால் தீயவை நீங்க மாட்டா.

31. ஞானத்தைத் தெரிந்து கொண்டாலும் தீய வினைகளுக்கு அஞ்சார்கள். செய்த வினைத் தீமைகள் நீங்கா. அதற்கு ஒரே வழி ஞானப் பயிற்சியின் விளைவுகளைத் தாமே தமக்குள் துய்க்க வேண்டும்.

32. நான் கண்டு அனுபவித்த இத்தனைக்கும் அடிப்படை ஈசனிடத்து ஏற்பட்ட ஈடுபாடே.
அந்தப் பாசத்தைப் பயின்று வளர்க்க வேண்டும். அது ஒரு பெரிய பொறுப்பாகும். எளிதில்லை.

33. நூலறிவை உட்கொள்வதினால் பயனில்லை. நூல்களைப் பார்க்கப் பார்க்க அனுபவப் பலன் பாழாகிறது.

ஆறு கண்டாயோ அகப்்பேய்
அந்த வினைதீ
தேறித் தெளிவதற்கே அகப்பேய்
தீர்த்தமு மாடாயே. 34

எத்தனை காலமுந்தான் அகப்பேய்
யோக மிருந்தாலென்
முத்தனு மாவாயோ அகப்பேய்
மோட்சமு முண்டாமோ. 35

நாச மாவதற்கே அகப்பேய்
நாடாதே சொன்னேனே
பாசம் போனாலும் அகப்பேய்
பசுக்களும் போகாவே. 36

நாண மேதுக்கடி அகப்பேய்
நல்வினை தீர்ந்தக்கால்
காண வேணுமென்றால் அகப்பேய்
காணக் கிடையாதே. 37

---

34. ஆறு - வழி, மார்க்கம். தீர்த்தம் ஆடுதல் என்றால் ஞான அனுபவத்திலே மூழ்கித் திளைத்தல்.

35. நுட்பங்களை உணர்ந்து பயின்றாலன்றி, எத்தனை காலம் யோகம் இருந்தாலும் முத்தன் ஆவது இல்லை. மோட்சம் கிட்டாது.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணா ரமுதினைக் கண்டறிவார் இல்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கில்
கண்ணாடி போலே கலந்திருந் தானே!

என்பது திருமந்திரம்.

36. கயிறு அறுந்தாலும் பசுக்கள் ஆதவனைச் சுற்றிச் சுற்றி வருகிற இயல்பை இங்கே நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.

37. இருவினைகளும் தீரவேண்டும் என்றால் நல்வினையும் சேர்த்திதான்! அதற்கு ஏன் தயக்கம்? சும்மா பார்த்திட வேண்டும் என்றால் மட்டும் காணக் கிடைக்குமா பேரின்ப சுகம்?

சும்மா இருந்துவிடாய் அகப்பேய்
சூத்திரஞ் சொன்னேனே
சும்மா இருந்தவிடம் அகப்பேய்
சுட்டது கண்டாயே. 38

உன்றனைக் காணாதே அகப்பேய்
ஊனுள் நுழைந்தாயே
என்றனைக் காணாதே அகப்பேய்
இடத்தில் வந்தாயே. 39

வான மோடிவரில் அகப்பேய்
வந்தும் பிறப்பாயே
தேனை யுண்ணாமல் அகப்பேய்
தெருவோ டலைந்தாயே. 40

---

38. சும்மா இருந்த இடம், சூத்திர பூமி போன்ற பாழ்வெளி. அங்கே தணல் எரிகிறது.

39. தன்னை அறியாமல் எப்படித் தனக்குள் நுழைந்து பயன் காண்பது. தன்னையும் தனக்கு ஆதாரத் தலைவனையும் காண வேண்டும் என்பது கருத்து.

40. முகடு அசைதல் என்ற ஓர் அனுபவம் உண்டு. அதைப் பிறப்பிறப்பு வெல்லாது. தேனுண்ணுதல் என்ற ஓர் அனுபவம் உண்டு. அது நிலைபேறு தரும். அதை உண்ணாதவர்கள் அக வீதிகளிலே கனல் சுற்ற வீணராவார்கள். பிறப்பிறப்பாகிய தெருவிலே அல்லலுறுவார்கள். பிறவிகள் தோறும் உயிர்ப்பயணம் தொடர்கிறது!

சைவ மானதடி அகப்பேய்
தானாய் நின்றதடி
சைவ மில்லையாகிய அகப்பேய்
சலம்வருங் கண்டாயே. 41

ஆசை யற்றவிடம் அகப்பேய்
ஆசாரங் கண்டாயே
ஈசன் பாசமடி அகப்பேய்
எங்ஙனஞ் சென்றாலும். 42

ஆணவ மூலமடி அகப்பேய்
அகாரமாய் வந்ததடி
கோணு முகா ரமடி அகப்பேய்
கூடப் பிறந்ததுமே. 43

---

41. சைவம் - பேரின்பநிலை. சலம் வருதல் - வினைச்சூழலில் சிக்கிப் பிறப்பிறப்பு தொடருதல்.

42. ஆசையில்லாத இடமே ஆசார நிலையாகும். அங்கே சடங்குகளுக்கு முக்கியமில்லை. இறைப் பற்றாகிய பாசமே முக்கியம்.

43. அகார உகார மகாரங்களை அகங்காரம் புத்தி மனம் என்று சொல்வதும் ஒரு மரபு.

பொதுவாக 'ஓம்' என்ற பிரணவத்தில் அ, உ, ம மூன்றும் இணைந்து நிற்பதால் மூன்றுக்கும் வெவ்வேறு உட்பொருள்கள் சொல்லப்படுகின்றன.

மும்மூர்த்திகளாகவும், மூன்று காலங்களாகவும் கொள்வதும் உண்டு. தவம் செய்கிற மகான்கள் இந்த மூன்றையும் சூரியன், சந்திரன், அக்கினி என்று விளக்கம் செய்து முத்தழல் வளர்த்தலை உருவகமாகக் கூறுவார்கள்.

ஒன்று மில்லையடி அகப்பேய்
உள்ள படியாச்சே
நன்றிலை தீதிலையே அகப்பேய்
நாணமு மில்லையடி. 44

சும்மா இருந்தவிடம் அகப்பேய்
சுட்டது சொன்னேனே
எம்மாய மீதறியேன் அகப்பேய்
என்னையுங் காணேனே. 45

கலைக ளேதுக்கடி அகப்பேய்
கண்டார் நகையாரோ
நிலைக ளேதுக்கடி அகப்பேய்
நீயார் சொல்வாயே. 46

இந்த அமிர்தமடி அகப்பேய்
இரவி விடமோடி
இந்து வெள்ளையடி அகப்பேய்
இரவி சிவப்பாமே. 47

---

44. முப்பாழான வெளியின் நிலையை ஒரு புதிர் போலச் சொல்கிறார். நன்று தீது இல்லாத நாணமற்ற இடம். ஒன்றுமில்லை என்றால் இரண்டு மூன்று என்று இருந்தாலல்லவோ ஒன்று என்ற ஒன்று இருக்கும். இரண்டில்லை என்றால் ஒன்று என்பது ஏது?

45. சும்மா இருக்கிற இடமே வேள்வி. அது சுடும். என்ன அதியம் என்றால் அங்கே என்னையும் நான் காண முடியவில்லை! அதாவது தன்னை இழந்த இடம் அது என்பது பொருள்.

46. கலைகள் - கற்பனைகள். நிலைகள் - பிற புறப்பதவிகள். 'நீ' என்பது நிலைகள் இல்லாத தத்துவமல்லவா?

47. இரவி - சூரியன். அமிர்தம் - உள்ளே சுரந்து வருகிற பானம். விடம் - நீர். மேகத்திலிருந்தோ, மண்ணில் ஊறியோ வருவதன்று; சுரப்பிலிருந்து சுரந்து வருகிற திரவம். இதுவே ஞானிகள் பருகிக் கண்ட உயிர்நீர். இந்து - சந்திரன்.

ஆணல பெண்ணலவே அகப்பேய்
அக்கினி கண்டாயே
தாணுவு மிப்படியே அகப்பேய்
சற்குரு கண்டாயே. 48

என்ன படித்தாலும் அகப்பேய்
எம்முறை யாகாதே
சொன்னது கேட்டாயே அகப்பேய்
சும்மா இருந்துவிடு. 49

காடும் மலையுமடி அகப்பேய்
கடுந்தவ மானாலென்
வீடும் வெளியாமோ அகப்பேய்
மெய்யாக வேண்டாவோ? 50

பரத்தில் சென்றாலும் அகப்பேய்
பாரிலே மீளுமடி
பரத்துக் கடுத்தவிடம் அகப்பேய்
பாழது கண்டாயே. 51

---

48. அக்கினியின் நிலை என்ன? ஆண் பெண் என்ற பான்மையற்றது. தாணுவாகிய சிவமும் அப்படியே. அதுவே சற்குருவாகிய உள்ளொளி.

49. நீயாக எதைப் போய்ப் படித்தாலும் இந்த அனுபவ உரைபோல் ஆகாது. சொன்னதைக் கேட்பாயானால் 'சும்மா இரு' என்பேன். அசைவற்றுச் செயலற்று ஒடுக்கத்திலே நிலை.

50. காடும் மலையும் திரிந்திட்டாயானாலும் அங்கு கடுமையான தவங்கள் இயற்றினாலும் பயனில்லை. வீடுபேறு புலனாகாது! அவை மெய்யாக இல்லை! மெய்யாகா விட்டால் பின் எப்படிக் கிட்டும்?

51. பரத்திலே செலுத்தினாலும் மீண்டும் அது மண்ணுக்கு வரும். அப்படியில்லாமல் இன்னும் மேலே சென்றால் அதுவே பாழ்வெளியான இடம்.

பஞ்ச முகமேது அகப்பேய்
பஞ்சு படுத்தாலே
குஞ்சித பாதமடி அகப்பேய்
குருபாதங் கண்டாயே. 52

பங்க மில்லையடி அகப்பேய்
பாத மிருந்தவிடம்
கங்கையில் வந்ததெல்லாம் அகப்பேய்
கண்டு தெளிவாயே. 53

தானது நின்றவிடம் அகப்பேய்
சைவங் கண்டாயே
ஊனற நின்றவர்க்கே அகப்பேய்
ஊனமொன் றில்லையடி. 54

---

52. பஞ்சமுகம் - ஐந்து இந்திரிய நிலைகள். பஞ்சு படுத்தால் - அடித்து நொறுக்கி அழித்தல். குஞ்சித பாதம் - தூக்கிய திருவடி. கனல் எழுப்புகிற ஞான சித்தி இதனுள் அடங்கும்.

53. பங்கம் - சேறு, தோல்வி, கங்கை - ஆகாச கங்கை என்றும் வான்நீர் என்றும் சொல்கிற உச்சி சுரந்த பானம்.

54. தானது நின்றவிடம் - தான் ஒடுங்கிய அந்த ஞானக்களம். சைவம் - சிவமயமானது. ஊனற நின்றவர்க்கே - உடலுணர்வு நீங்கிய ஞானவழி செல்வார்க்கு.

ஊனம் ஒன்று இல்லை - கேடெதும் குறையெதுவும் இராது.

ஐம்புலனைச் சுட்டெரித்து மூலக்கனலை எழுப்பி ஞானயோகம் பயின்றால், அந்த நிலையே சிவமயமானது. அப்படிச் செய்வார்க்கு எந்த ஊனமும் இல்லை.

சைவம் ஆருக்கடி அகப்பேய்
தன்னை அறிந்தவர்க்கே
சைவ மானவிடம் அகப்பேய்
சற்குரு பாதமடி. 55

பிறவி தீரவென்றால் அகப்பேய்
பேதகம் பண்ணாதே
துறவி யானவர்கள் அகப்பேய்
சும்மா இருப்பார்கள். 56

ஆர லைந்தாலும் அகப்பேய்
நீயலை யாதேயடி
ஊர லைந்தாலும் அகப்பேய்
ஒன்றையும் நாடாதே. 57

---

55. சைவம் என்ற சிவமயமான நிலை யாருக்கு? தன்னைத்தான் அறிந்தவனுக்கு.

56. பிறவித் தொல்லை நீங்கவேண்டும் என்றால் இதில் எந்த மாற்றமும் செய்யலாகாது. இஃதொன்றே வழி. முற்றும் துறந்தவர்கள் அசைவின்றிக் கோடாமல் நிற்பார்கள்.

57. வேறு யார் எங்கே சுற்றித் திரிந்தாலும் நீ ஒடுக்கத்திலே நிலை நிற்பாயாக! ஊர் சுற்றினாலும் எதையும் இச்சிக்காதே! எதிலும் நாட்டம் வைக்காதே!

தூண் போனறு அசையாமல் ஒடுக்கம் கூடுவதிலுள்ள ஒப்பற்ற பலன்களைச் சொல்லுகிறார் சித்தர்.

தேனாறு பாயுமடி அகப்பேய்
திருவடி கண்டவர்க்கே
ஊனாறு மில்லையாடி அகப்பேய்
ஒன்றையும் நாடாதே. 58

வெள்ளை கறுப்பாமோ அகப்பேய்
வெள்ளியுஞ் செம்பாமோ
உள்ள துண்டோடி அகப்பேய்
உன்னாணை கண்டாயே. 59

அறவுள் மன்னுமடி அகப்பேய்
ஆதார மில்லையடி
அறிவு பாசமடி அகப்பேய்
அருளது கண்டாயே. 60

வாசியி லேறியடி அகப்பேய்
வான்பொருள் தேடாயோ
வாசியி லேறினாலும் அகப்பேய்
வாராது சொன்னேனே. 61

---

58. திருவடி ஞானம் கைகூடியவர்க்கு உள்ளே அகத்தேன் ஆறாக ஊறிவரும். சுரப்பிகளிலிருந்து பாயும். உலக இச்சைகளை நாடாதே. ஊனாறு என்கிற சுக்கிலம் முதலான சுரப்புகள் நின்றறு போகும்.

59. வெள்ளை கறுப்பாகாது. வெள்ளி செம்பாகாது. ஆனால், உள்ளது, உள்ளே இருப்பதாகிய காமம் முதலியன அற்றுப்போம்.

60. அறிவாகிய நுண்மையில் அது பொருந்திச் சேரும். வேறு கால்கோள் அதற்குக் கிடையாது. அறிவில் உண்டாகிய பாசமே அருளாம். அது இறைமையானது.

61. வாசி என்னும் காற்றிலே ஏறி அதைத் தேடி இருபத்து நான்கு படிகளைத் தாண்டிச் செல்லவேண்டும். ஏதோ காற்றிலே ஏறிவிட்டால் போதுமா? அந்த நிலை கிட்டாது.

தூராதி தூரமடி அகப்பேய்
தூரமு மில்லையடி
பாராமற் பாரடியோ அகப்பேய்
பாழ்வினை தீரவென்றால். 62

உண்டாக்கிக் கொண்டதல்ல அகப்பேய்
உள்ளது சொன்னேனே
கண்டார்கள் சொல்வாரோ அகப்பேய்
கற்பனை யற்றதடி. 63

நாலு மறைகாணா அகப்பேய்
நாதனை யார்காண்பார்
நாலு மறைமுடிகில் அகப்பேய்
நற்குரு பாதமடி. 64

மூல மில்லையடி அகப்பேய்
முப்பொரு ளில்லையடி
மூல முண்டானால் அகப்பேய்
முத்தியு முண்டாமே. 65

---

62. எட்டுவதற்கு ஒண்ணாத நிலை என்பதால் அதைத் தூராதி தூரம் என்னவாம். அதே சமயம் இந்த உடம்புக்குள்ளே அந்த இடம் இருப்பதால் அது தொலைதூரமும் இல்லை! பாராமல், அதாவது கண்ணை மூடிக்கொண்டு, அதைப் பார்க்க வேண்டும் அகத்தினுள்.

63. ஏதோ இட்டுக் கட்டிச் சொல்வதில்லை. உள்ளது சொன்னேன், பொதுவாகக் கண்டவர்கள் சொல்வது அரிது. கற்பனை இல்லை அது. கண்டு தெளியலாம்.

64. நான்கு திருமறைகளும் தேடிக் காண முடியாத பரம்பொருள் அது. அந்த நாதனைக் கண்டவர்கள் யார்? வேதாந்தம் என்று சொல்லப்படுகிற கொடுமுடியில் சற்குருநாதனாகிய இறைவனின் திருவடியைக் காணலாம்.

65. ஆதிமூலம், பதிபசுபாசம் ஆகிய முப்பொருள் எல்லாமே இல்லை என்கிற ஒரு சூனிய வெளி. அதுவே முத்தித்தலம். மூலாதாரம் எழுந்தால் அந்த முத்தி கிடைக்கும்.

இந்திர சாலமடி அகப்்பேய்
எண்பத் தொருபதமும்
மந்திர மப்படியே அகப்பேய்
வாயைத் திறவாதே. 66

பாழாக வேணுமென்றால் அகப்பேய்
பார்த்ததை நம்பாதே
கேளாமற் சொன்னேனே அகப்பேய்
கேள்வியு மில்லையடி. 67

சாதி பேதமில்லை அகப்பேய்
தானாகி நின்றவர்க்கே
ஓதி யுணர்ந்தாலும் அகப்பேய்
ஒன்றுந்தா னில்லையடி. 68

---

66. பதம் - பரமுத்திக்குக் கீழ்ப்பட்ட பதவிகள். இந்திர பதவி முதலியனவாம். இவை அனைத்தும் மக்களை மயக்குகிற தியக்குகிற திக்குமுக்காடச் செய்கிற சாதனைகள்.

மந்திர சித்திகளும் அப்படியே, மாயாஜால வித்தை போன்றதே.

67. நீ அகக்கண் பார்வையிலே பார்த்ததை நம்பாமல், புறக்காட்சிகளையே நம்பினால் வீண்போவாய்! அகக்கண் பார்வையை நம்பினால் பாழ்வெளியை அடைந்து ஞானக்களிப்பு அடைவாய்.

68. தானாகி 'அனன்யம்' என்கிற ஒருமையிலே நின்றவர்களுக்குச் சாதி பேதங்கள் இல்லை. கலைகளையும் சாத்திரங்களையும் ஓதி உணர்ந்தாலும், வெறுமையே! சாத்திரக் குப்பையைத் தள்ளுங்கடி என்றவாறு.

சூழ வானமடி அகப்பேய்
சுற்றி மரக்காவில்
வேழம் உண்டகனி அகப்பேய்
மெய்யது கண்டாயே. 69

நானு மில்லையடி அகப்பேய்
நாதனு மில்லையடி
தானு மில்லையடி அகப்பேய்
சற்குரு வில்லையடி. 70

மந்திர மில்லையடி அகப்பேய்
வாசனை யில்லையடி
தந்திர மில்லையடி அகப்பேய்
சமய மழிந்ததடி. 71

---

69. மரக்கா - மரச்சோலை. சுற்றிலும் வானவெளி. இந்த உடம்போ வேழம் என்கிற யானைநோய் பிடித்த விளாம்பழமாகும். அதாவது உள்ளே வெறும் பொக்கு!

70. எல்லாமாகிக் கலந்து நிரம்பி நின்ற நிலையிலே 'நான்' ஏது, 'நாதன்' ஏது? சற்குருநாதன் எங்கே? எல்லாமாகிக் கலந்த பாழ் தாண்டிய பரநிலை அது!

71. எல்லாம் போய் அந்த வெளியே நிரம்பிப் பாழாக முட்டுகிறது. அங்கே மந்திரங்கள், உடம்பை வருத்தல், தந்திர உத்திகள் யாதும் இல்லை. சமயாதீத நிலையாக அந்த மோனப் பரவெளியில் சமயங்களும் இல்லையாயின!

அற்புதமான பாடல்கள். மிகவும் நுட்பமான சிதாகாசப் பெருவெளியின் பேரின்ப நிலையை மிக அழகிய முறையில் பேச்சுத் தமிழிலே எளிய சந்தத்திலே படம்பிடித்துவிட்டார் சித்தர்.

பூசை பாசமடி அகப்பேய்
போதமே கொட்டமடி
ஈசன் மாயையடி அகப்பேய்
எல்லாமு மிப்படியே. 72

சொல்ல லாகாதே அகப்பேய்
சென்னாலுந் தோஷமடி
இல்லை இல்லையடி அகப்பேய்
ஏகாந்தங் கண்டாயே. 73

தத்துவத் தெய்வமடி அகப்பேய்
சதாசிவ மானதடி
மற்றுமுள்ள தெய்வமெல்லாம் அகப்பேய்
மாயை வடிவாமே. 74

வார்த்தை யல்லவடி அகப்பேய்
வாசா மகோசரத்தே
ஏற்ற தல்லவடி அகப்பேய்
என்னுடன் வந்ததல்ல. 75

---

72. பூசை என்பதும் ஒருவகைப் பாசமே! "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்றார் திருமூலர். போதம் என்பது வெறும் ஆடம்பரச் செருக்குத்தான். இறைவன் என்பதே மாயைதான் என்கிறார் மிகப் பெரிய ஒரு ஞான நிலையிலிருந்து இந்த மகான்!

73. இவ்வாறு சொல்வதே ஆகாது! அப்படிச் சொல்வதே குற்றம்! ஆனாலும் இல்லை இல்லை என்பதே ஏகாந்தப் பேருண்மை!

74. தத்துவத் தெய்வம் - இருபத்துநான்கு தத்துவங்களைத் தாண்டி, இருபத்தைந்தாவது தத்துவமான ஆன்மாவைத் தாண்டி, இருபத்து ஆறாவது தத்துவமாக நிற்கிற பரப்பிரும்மமே. அதுவே சதாசிவம். மற்ற யாவும் தெய்வமில்லை, மாயை வடிவமே!

75. வாசகங் கடந்த நிலையாகிய வாசாம கோசரம் என்பது மொழியில்லை. கொல்வதில்லை அது. கொண்டு வந்ததும் இல்லை.

சாத்திர மில்லையடி அகப்பேய்
சலனங் கடந்ததடி
பார்த்திட லாகாதே அகப்பேய்
பாவனைக் கெட்டாதே. 76

என்ன படித்தாலென் அகப்பேய்
ஏதுதான் செயதாலென்
சொன்ன விதங்களெல்லாம் அகப்பேய்
சுட்டது கண்டாயே. 77

தன்னை யறியவேணும் அகப்பேய்
சாராமற் சாரவேணும்
பின்னை யறிவதெல்லாம் அகப்பேய்
பேயறி வாகுமடி. 78

பிச்சை யெடுத்தாலும் அகப்பேய்
பிறவி தொலையாதே
இச்சை யற்றவிடம் அகப்பேய்
எம்மிறை கண்டாயே. 79

---

76. அது சாத்திரப் பொருளில்லை. அசைவுகளைக் கடந்த பொருள் அது. கண்ணால் பார்த்தல் ஆகாது. பாவனை செய்யவும் இயலாது.

77. எதைப் படித்தாலும், எது செய்தாலும், சொன்ன இந்த முறைகள் எல்லாம் பொசுப்புகிறவை என்பதை உணர்ந்துகொள்.

78. தன்னைத்தான் அறிய வேண்டும். ஒட்டாமல் ஒட்ட வேண்டும். மற்ற அறிவுகள் எல்லாம் வெறும் வெறித்தனமான பேயறிவாம்.

79. பரதேசியாகப் போய்ப் பிச்சை எடுத்து வாழ்ந்தால் பிறவி தொலைந்து விடுமா? தொலையாது. இச்சைகள் அறுந்த இடமே இறைநிலையாம்.

கோல மாகாதே அகப்பேய்
குதர்க்க மாகாதே
சால மாகாதே அகப்பேய்
சஞ்சல மாகாதே. 80

ஒப்பனை யல்லவடி அகப்பேய்
உன்னாணை சொன்னேனே
அப்புட னுப்பெனவே அகப்பேய்
ஆராய்ந் திருப்பாயே. 81

மோட்சம் வேண்டார்கள் அகப்பேய்
முத்தியும் வேண்டார்கள்
தீட்சை வேண்டார்கள் அகப்பேய்
சின்மய மானவர்கள். 82

---

80. கோலம் - வேடங்கள்.
தர்க்கம் - எதிருக்கு எதிரான வாத தர்க்கங்கள்
சாலம் - பிறரை மயக்குகிற வித்தைகள்.
சஞ்சலம் - மனம் பேதலித்தல்.

81. ஒப்பனை - சோடித்த உரை.
தண்ணீரில் உப்பு என்றால் பார்த்துக்கொள்.
அப்படிக் கலப்பதே சிவநிலை.

82. வீடும் வீடுபேறு வேண்டியதில்லை என்பார்கள். தீட்சையாகிய ஞானக் கல்வியின் செயல் முறைப்பாடங்களும் வேண்டாம் என்பார்கள். யார்? சின்மயம் என்னும் பரஞான மயமாக இருப்பவர்கள்.

பாலன் பிசாசடி அகப்பேய்
பார்த்தக்கால் பித்தனடி
கால மூன்றுமல்ல அகப்பேய்
காரிய மல்லவடி 83

கண்டது மில்லையடி அகப்பேய்
கண்டவ ருண்டானால்
உண்டது வேண்டுமோ அகப்பேய்
உன்னாணை சொன்னேனே. 84

அஞ்சையு முன்னாதே அகப்பேய்
ஆசையும் வேண்டாதே
நெஞ்சையும் விட்டுவிடு அகப்பேய்
நிட்டையிற் சாராதே. 85

---

83. பாலன் – பாலனைப் போலிருக்கிற ஆத்துமா. அது ஆணவ தத்துவம், பிசாசு! சிந்தித்துப் பார்த்தால் பித்துப்பிடித்தவன் அந்தப் பரம்பொருளைக் காண்பவன்! நேற்று இன்று நாளை என்பதல்ல பேச்சு! காலங்கடந்த செயலைப் பற்றிப் பேசுகிறோம்.

84. இந்த நுட்பங்களைக் கண்டவர்கள் யாருமில்லை. மிகமிக அரியர். கண்டவர்களைக் கண்டாயானால் அவர்கள் புசித்ததை அறிவது உட்கொண்டு பார்த்த அனுபவத்தை நீ வேண்டிப் பெறுவாய்!

85. ஐம்புலப் புசிப்பு வேண்டாம். ஆசையை விட்டுவிடு. நிட்டையிற் சாராது நெஞ்சோடு செய்வதையுமே அகல்! "அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்றும், 'புலன்களைப் போகவிட்டுப் போடு' என்றும் சொல்கிற அதீத நிலையிலான பேச்சு இது.

நாதாந்த வுண்மையிலே அகப்பேய்
நாடாதே சொன்னேனே
மீதான சூதானம் அகப்பேய்
மெய்யென்று நம்பாதே. 86

ஒன்றோ டொன்றுகூடில் அகப்பேய்
ஒன்றும் கெடுங்காணே
நின்ற பரசிவமும் அகப்பேய்
நில்லாது கண்டாயே. 87

தோன்றும் வினைகளெல்லாம் அகப்பேய்
சூனியங் கண்டாயே
தோன்றாமற் றோன்றிவிடும் அகப்பேய்
சுத்த வெளிதனிலே. 88

பொய்யென்று சொல்லாதே அகப்பேய்
போக்கு வரத்தானே
மெய்யென்று சொன்னவர்க்கு அகப்பேய்
வீடு பெறலாமே. 89

---

86. நாதாந்தத்தில் உள்ளதாகக் கூறுகிற தானநிலையை முயலாதே. அதில் நம்பிக்கை வேண்டாம். சூதானம் என்கிற சேம இருப்பு அல்லது பத்திரப்படுத்திச் சேர்த்து வைக்கிற புண்ணிய மூட்டை - அதிலும் மெய்யென்ற நம்பிக்கை வேண்டாம்.

87. ஒன்று ஒன்றைக் கூடினால், அதாவது ஒன்றினால் இரண்டற்ற நிலை என்பதில்லை, ஒன்றும் அற்ற நிலை அல்லவா அது! அந்த ஒன்றும் இல்லையாம். சிவமும் சீவமும் ஒன்றானால் இரண்டுமே இல்லை!

88. வினைத் தோற்றம் எல்லாம் சூனியம். சுத்த வெளிதனிலே எல்லாம் தோன்றுதல் இல்லாமல் தோன்றுகிற நிலையாம்.

89. இயக்கங்களை மட்டும் பொய் என்று சொல்லாதே. அவற்றை மெய்யென்று மெய்யிலே கண்டு சொன்னவர்கள் வீடுபேறு அடைவார்கள்.

வேத மோதோதே அகப்பேய்
மெய்கண்டோ மென்னாதே
பாதம் நம்பாதே அகப்பேய்
பாவித்துப் பாராதே! 90

---

90. பாழ்வெளியாகிய சூனிய வெட்ட வெளியிலே செயல்கள் இல்லை. படிப்போ அல்லது பேச்சோ அங்கே கிடையாது. 'தான் அவன் ஆனபின் யாரை நினைவது' என்ற மகா வாக்கை எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வாறே உரையற்ற தொன்றை உரைசெய்வதும் வீண்! அந்த உயரிய மோன ஞானநிலையிலேயிருந்து வருகிறது இந்தப் பாட்டு. அரிய கருத்தை அரிய முறையிலே வெளியிடுகிறார் சித்தர். இந்தப் பாடல்களோடு சேர்ந்து ஓதவேண்டிய பாடல்கள் இரண்டு திருமந்திர நூலில் காணலாம். இந்தப் பாடலைப் போலவே மிகமிக அற்புதமான பாடல்கள் அவை.

தான்வரைவு அற்றபின் யாரை வரைவது
தான்அவன் ஆனபின் யாரை நினைவது
காமனை வென்றகண் யாரை உகப்பது
தூமொழி வாசகம் சொல்லுமின் நீரே.

உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாணல் ஆகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே!

(அகப்பேய்ச் சித்தர் பாடல் முற்றிற்று)

# பாம்பாட்டிச் சித்தர்

இவர் வாழ்ந்தது பாண்டிய நாடு என்று பலரும் கூறுகிறார்கள்.

காட்டிலே பாம்புகளைப் பிடித்து ஆட்டுவது இவருடைய வேலை. இப்படி ஒருநாள் அவர் காட்டுக்குள் சென்றபோது, நவரத்தினம் (மாணிக்கம்) உள்ள பாம்பைப் பிடிக்கவேண்டும் என்று எண்ணி, நீண்ட தொலைவு வனத்தினுள் புகுந்து சென்றார். அப்போது சட்டை முனி எதிர்ப்பட்டார். அவரால் ஈர்க்கப்பட்டு, அவரிடம் தீட்சை பெற்றார். சமாதி கூடிவிட்டது. பின்னர் சமாதியிலிருந்து எழுந்துவந்து சித்துக்கள் விளையாடத் தொடங்கினார்.

இவர் ஒரு மன்னன் மடிந்தபோது, அவனுடைய உடம்புக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார். அரசியோடு இருந்த காலை, இறந்த பாம்பு ஒன்றை உயிர்ப்பித்து ஆட்டினார். அதிலிருந்து பாம்பாட்டிச் சித்தர் என்று ஆனார்.

கொங்கு நாட்டில் மருதமலையடிவாரத்தில் இருந்து இவர் தவம் இயற்றியதாக வரலாறு. சித்தர் ஆரூடமும் வைத்தியமும் பற்றிச் சில நூல்களும் இவர் செய்துள்ளார்.

பின்வரும் பாடல் ஆன்மீகக் கல்வியையும் இரகசிய தீட்சை முறைகளையும் பேசுகின்றன.

# பாம்பாட்டிச் சித்தர் பாடல்

## கடவுள் வணக்கம்

### கண்ணிகள்

தெளிந்து தெளிந்துதெளிந் தாடுபாம் பே-சிவன்
சீர்பாதங் கண்டுதெளிந் தாடு பாம்பே
ஆடுபாம் பேதெளிந் தாடுபாம் பே-சிவன்
அடியிணை கண்டோமென் றாடு பாம்பே. 1

நீடுபதம் நமக்கென்றுஞ் சொந்த மென்றே
நித்தியமென் றேபெரிய முத்தி யென்றே
பாடுபடும் பேதுமாதி பாதம் நினைத்தே
பன்னிப் பன்னிப் பர்விநின் றாடுபாம்பே. 2

---

பாம்பாட்டிச் சித்தர் பாம்பை நோக்கிப் பாடுவதாக ஓர் உத்தியைக் கையாள்வது,பாம்பாகிய குண்டலினியை நோக்கிக் கூறுவதாகவும் ஒரு மரபு நிலவி வருகிறது.

1. எளிய சொற்களும், எளிய கருத்துக்களுமாக இசைப் பண்போடு செல்கிற அடிகள் இவை. தெளிந்து ஆடுதல் - உறக்கத்திலிருந்து விழித்துவந்து ஆடுதல். தூக்கம் தெளிதல் என்பது பாம்புக்குப் பொருந்துவதோடு, ஞானப் பாம்பாகிய மூலக் கனலுக்கும் பொருந்தும்.

மூலக்கனலை 'உசுப்புதல்' என்று வாய்மொழியாகச் சொல்வதும் சித்தர்களின் பழக்கமாகும்.

2. நீடுபதம் - நிலையான வீடு. பாடுபடும்போதும் ஆதிபாதம் நினைத்தல் என்பதே தவத்தின் நுட்பமாம். 'தாதி மனம் நீர்க்குடத்தேதான்' என்பதுபோல் ஞானப் பயிற்சிகளில் எது செய்து பழகும்போதும் மனம் நிற்க வேண்டிய இடம் பரம்பொருளின் பாதத்திலேதான்!

பொன்னிலொளி போலவெங்கும் பூரணமதாய்ப்
பூவின்மணம் போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பல உயிர்களில் மன்னிப் பொருந்தும்
வள்ளலடி வணங்கிநின் றாடு பாம்பே. 3

எள்ளிலெண்ணெய் போலவுயி ரெங்கு நிறைந்த
ஈசன்பத வாசமலர் எண்ணி யெண்ணியே
உள்ளபடி அன்புபத்தி ஓங்கி நிற்கவே
ஒடுங்கிய டங்கித்தெளிந் தாடு பாம்பே. 4

அண்டபிண்டந் தந்தவெங்கள் ஆதி தேவனை
அகலாம லேநினைத்தே அன்பு டன்பணிந்
தெண்டிசையும் புகழ்ந்திட ஏத்தி யேத்தியே
ஏகமன மாகநாடி யாடு பாம்பே. 5

---

3. பொன் ஒளியின் சிறப்பு அதனுடைய முழுமை. பூமணத்தின் சிறப்பு அதனுடைய பொற்பு, அதனுடைய நன்மணப் பரிமளிப்பு.
இறைவன் உயிர்களிடத்தில் முழுமையோடு கலந்திருக்கிறான், பொற்போடு கலந்திருக்கிறான்.

4. எள்ளுக்குள் எண்ணெய் என்ற சொற்றொடர் அடிக்கடி கேட்கிறோம். இதன் நுட்பம் என்னவென்றால், எண்ணெயானது எள்ளில் முழுமையாக, எள்ளினுடைய எல்லா அணுக்களுள்ளும் மறைந்து நிற்கிறது. ஈசன் உயிர்கள் அனைத்திலும் மறைந்து நிற்பதும் இவ்வாறுதான்.

5. அண்டம் என்பது சுற்றியுள்ள உலகம். பிண்டம் என்பது இந்த உடம்பு. ஏகமனதாக நாடுதல் என்றால் மனம் அப்படியே ஒன்றுதல் என்பதோடு இறைவனைத் தவிர வேறு ஏதும் புகாமல் மனத்தை நாடச் செய்தல். இதுவே 'அனன்யம்' என்றும் கீதை முதலான நூல்களில் சொல்லப்படுகிற ஈடுபாடு.

சோதிமய மானபரி சுத்த வத்துவைத்
தொழுதழு தலற்றித்தொந் தொந்தோ மெனவே
நீதிதவ றாவழியில் நின்று நிலையாய்
நினைந்துநி னைந்துருகி யாடு பாம்பே. 6

அருவாயும் உருவாயும் அந்தி யாயும்
அந்த மாயும் ஒளியாயும் ஆகம மாயும்
திருவாயுங் குழிவாயுஞ் சீவ னாயும்
செறிந்தவத் துவைப்போற்றி யாடு பாம்பே. 7

சுட்டிக்காட்ட ஒண்ணாதபாழ்ச் சூனி யந்தன்னைச்
ஆட்சமதி யாலறிந்து தோட மறவே
எட்டிப்பிடித் தோமென்றோ னந்த மாகப்பை
எடுத்து விரித்துநின் றாடு பாம்பே. 8

எவ்வுயிரும் எவ்வுலகும் ஈன்று புறம்பாய்
இருந்து திருவிளையாட் டெய்தி யும்பின்னர்
அவ்வுயிரும் அவ்வுலகும் ஆகியு நின்ற
ஆனந்த வெள்ளங்கண் டாடு பாம்பே. 9

---

6. சோதி மயமான பரிசுத்த வஸ்து பரம்பொருள். அதை நினைப்பதும் நினைந்து உருகுவதும் இடையீடின்றி நிகழ வேண்டும் என்பதைச் சொல்லடுக்கு உணர்த்துகிறது.

7. பரம்பொருள் எப்படியெல்லாம் செறிந்து திகழ்கிறது என்பதை ஞான நூல்களும் சமயச் சான்றோர்களும் கூறியுள்ள அதே பான்மையில் இந்தச் சித்தரும் அடுக்கிச் சொல்கிறார்.

8. பாழ்ச்சூனியம் என்பதே ஞானிகள் சொல்கிற வெட்டவெளி. அதை அறிவது நுண்ணிய உணர்வினாலும் நுண்ணுடலினாலுமே. அதை எட்டிப் பிடித்தோமென்று கூத்தாடுவோம். படம் எடுத்து அதை விரித்து ஆடுவது களிப்பின் வெளியீடாகும்.

9. எல்லா உயிர்களையும் ஈன்ற பரம்பொருள், வெளியே நின்று இயக்கி விளையாடியும் அத்தனை உயிர்களாக ஆகியும் அந்த நிலையை எப்படிக் கூறுவது! ஒரே ஆனந்த வெள்ளம்!

## குரு வணக்கம்

சாற்றுமடல் பொருளாவி தத்த மாகவே
தானும்வாங்கி நின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றிமனம் வாக்குக்காயம் மூன்றும் பொருந்தப்
புகழ்ந்துபு கழ்ந்துநின் றாடாய் பாம்பே. 10

பொய்ம்மதங்கள் போதனைசெய் பொய்க்கு ருக்களைப்
புத்திசொல்லி நன்னெறியிற் போக விடுக்கும்
மெய்மதந்தான் இன்னதென்றும் மேவ விளம்பும்
மெய்க்குருவின் பாதம்போற்றி ஆடாய் பாம்பே. 11

வேதப்பொருள் இன்னதென்று வேதங் கடந்த
மெய்ப்பொருளைக் கண்டுமனம் மேவி விரும்பிப்
போதப்பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரணசற் குருதாள்கண் டாடு பாம்பே. 12

---

10. காப்பாகக் கடவுள் வணக்கம் பாடிவிட்டுச் சித்தர் தமது குருவுக்கு வணக்கம் சொல்லித் தொடங்குகிறார். ஞான குருவின் இயல்பு இரகசியங்களை வெளியிடும் முன், காப்புப் பிரமாணமாக உடல்பொருள் ஆவியைத் தத்தம் வாங்குவது மரபு. ஞானப் பயிற்சியினைக் கற்கப் புகுவார்க்கு இந்த மரபு தெரியும்.

11. பொய்யான நெறியில் நிற்போருக்கு மெய்புகட்டி நல்வழிக்கு ஆற்றுப்படுத்துகிற சத்திய ஞான குருவின் பதம் போற்றி!

12. வேதங் கடந்த மெய்ப்பொருளைக் கண்டு துய்த்து அந்தக் கல்விப் பொருளையே கற்பிக்கிற முழுமையான நல்லாசானுடைய திருப்பாதம் கண்டு, ஏ பாம்பே, நீ ஆடுவாயாக!

குருவின் ஞான தரிசனம் எப்படிக் கண்விழிக்கச் செய்கிறது என்பதே பொருள்.

உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்
கள்ளமனந் தன்னைத்தள்ளிக் கண்டுகொண் டன்பாய்க்
களித்துக்க ளித்துநின் றாடாய் பாம்பே. 13

அங்கையிற்கண் ணாடிபோல ஆதி வத்துவை
அறிவிக்கும் எங்களுயி ரான குருவைச்
சங்கையறச் சந்ததமுந் தாழ்ந்து பணிந்தே
தமனியப் படமெடுத் தாடாய் பாம்பே. 14

காயம்நிலை யழிகையைக் கண்டு கொண்டுபின்
கற்புநிலை யுள்ளிற்கொண் டெக்கால மும்வாழும்
தூயநிலை கண்டபரி சுத்த குருவின்
துணையடி தொழுதுநின் றாடாய் பாம்பே. 15

கூடுவிட்டுக் கூடுபாயுங் கொள்கை யுடைய
குருவின்வல் லபமெனக் கூற வல்லவர்
வீடுபெறும் வகையைமென் மேலுங் காட்டும்
மெய்க்குருவைப் பணித்துநின் றாடாய் பாம்பே. 16

---

13. உள்ள பொருளை, இல்லாததை அன்று, உள்ளதை அங்கைக் கனியாகக் காட்டுகிற குரு அவர்.
கள்ள மனத்தை உதறிக் கண்டுகொண்ட அந்தக் களிப்பிலே ஆடுவாயாக!

14. ஆதி வஸ்துவான பரம்பொருள் நமக்கு உள்ளேயே இருக்கிறது. கையிலே கண்ணாடி கொண்டு நமது முகத்தைப் பார்ப்பது போல, நமது அகத்தைப் பார்க்கும்படி காட்டியவர் எங்கள் குரு.
சங்கை அற - ஐயம் இல்லாமல்.
தமனியம் - தங்கம்.

15. பரம்பொருளோடு ஒரே மனத்தோடு ஈடுபடுவதே ஞானியரின் கற்பாகும். அதுவே தூய நிலை.
துணையடி - அடியிணை.

16. கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்ற பரகாயப் பிரவேசம் ஒரு பெரிய சித்தி நிலையாகும். திருமூலர் கதை நமக்குத் தெரியும். "எங்கள் குரு அத்தனை வல்லமை கொண்டவர்" என்று களிக்கிறார் சித்தர்.

அட்டதிக்கும் அண்டவெளி யான விடமும்
அடக்கிய குளிகையோ டாடி விரைவாய்
வட்டமிட்டு வலம்வரும் வல்ல குருவின்
மலரடி தஞ்சமென் றாடாய் பாம்பே. 17

கற்பகாலம் கடந்தாதி கர்த்தா வோடுங்
கடமழி யாதுவாழும் கார ணக்குரு
பொற்பதமே தஞ்சமென்றே போற்று தல்செய்து
பூரணச் சிந்தையோ டாடாய் பாம்பே. 18

வச்சிரத்திற் கோர்பழுது வாய்க்கு மாயினும்
வல்லுடம்புக் கொருகுறை வாய்த்தி டாது
மெச்சுகட முள்ளவெங்கள் வேத குருவின்
மெல்லடி துதித்துநின் றாடாய் பாம்பே. 19

---

17. கமன குளிகையினால் எங்கும் எப்போதும் எப்படியோ சென்றுலவுகிற வல்லமையைச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.
பாம்பாட்டிச் சித்தரின் குரு சட்டைமுனிவர் என்று சொல்லப்படுகிறதை இங்கே ஒட்டிப் பார்த்தால் இத்தனை வல்லமைகளும் உடைய மகானே அவர் என்ற அவரைப் பற்றிய குறிப்போடு இயைகிறது.

18. கற்பகாலம் - ஊழிக்காலம்.
கடம் அழியாது - உடம்பு மடியாமல்.

19. தமது குருவின் காயசித்தி எப்படிப்பட்டது என்று விளக்கம் செய்கிறார் பாம்பாட்டிச் சித்தர். பழுது வராத கடினமும் உறுதியும் வாய்ந்த இரத்தினமே வைரம். அதுவே வச்சிரம். அதற்கு ஒரு பழுது வந்தாலுங் கூட எங்கள் குருவின் உடம்புக்கு அதன் உறுதிக்குத் தீங்கு வராது. அப்படிப்பட்ட வச்சிர சரீரம் அவருடைய உடம்பு.
மெச்சுகடம் - மெச்சி வணங்கும்படியான உடம்பு.

## பாம்பினது சிறப்பு

நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதளத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடு பாம்பே. 20

வளைபுகும் போதேதலை வாங்கும் பாம்பே
மண்டலமிட் டுடல்வளை வண்ணப் பாம்பே
தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே
தலையெடுத் தேநீவிளை யாடு பாம்பே. 21

குற்றமற்ற சிவனுக்குக் குண்டல மானாய்
கூறுந்திரு மாலினுக்குக் குடை யானாய்
கற்றைக்குழல் பார்வதிக்குக் கங்கண மானாய்
கரவாமல் உளங்களித் தாடு பாம்பே. 22

---

20. இந்தப் பாட்டு நாடெங்கும் நன்கு பரவியுள்ள அழகான பாட்டு. ஆனால் இருபொருள் கொண்டது. பொதுமக்கள் கொள்கிற பொருள் ஒன்று. ஞானியரின் செம்பொருள் மற்றொன்று.

பாம்பு என்பது குண்டலினி ஆற்றலை. நாதர் - பரமசிவன்; ஞானிகள் என இருபொருள். நாதராகிய சிவன்முடியில் அணியாக இருப்பது; ஞானிகளுடைய உச்சியிலே சென்று ஆடுவது.

நச்சுப்பை - மூலக்கனலை எழுப்பும்போது அமுதம் வருவதற்கு முன்பு நச்சுதான் வரும். பாற்கடலைக் கடைந்த போது விடம் வந்து சிவன் அதனை உண்டு கண்டத்தில் அடக்கிய உருவம் இதுவே. பாதளம் - மூலாதாரம்.

21. வளை - ஆதாரத்தலம். தளை - மூச்சுக்கட்டு. சாதாரணப் பாம்புக்குரிய வளை, தளை எல்லாம் எளிய பொருளே.

22. சிவன் - அப்பன். மால் - உயிர். பார்வதி - அம்மை. சூரிய கலையை அப்பனாகவும், சந்திர கலையை அம்மையாகவும் கொள்வது யோக நுட்பம். கரவாமல் ஆடுதல் - மூலாதாரத் தலத்தில் படுத்துக் கிடக்காமல் எழுந்துநின்று இயங்கல்.

மண்டலத்தைத் தாங்குமிக வல்லமை கொண்டாய்
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப் பாயானாய்
கண்படை நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்
கண்ணேசெவி யாகக் கொண்டாய் ஆடு பாம்பே. 23

சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்
சங்கரனுக் காபரணந் தானு மாகினாய்
மந்திரத்துக் கடங்கினாய் மண்டல மிட்டாய்
வளைந்து வளைந்துநின் றாடு பாம்பே. 24

## சித்தர் வல்லபங் கூறுல்

எட்டுநாகந் தனைக்கையா லெடுத்தே யாட்டுவோம்
இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்
கட்டுக்கடங் காதபாம்பைக் கட்டி விடுவோம்
கடுவிடந் தனைக்கக்கி யாடு பாம்பே. 25

---

23. மண்டலம் - உடம்பிலுள்ள ஞானப் பயிற்சிக்குரிய மூன்று மண்டலங்கள். யோகநித்திரையானது இந்தக் குண்டலினியாகிய பாம்புப் படுக்கையிலேதான். கண்ணே செவியாதல் என்ற கட்செவி நிலையே பார்வையும் கேள்வியும் ஒன்றிய தவநிலை.

24. சந்திரனையும் சூரியனையும் தீண்டுவதே சித்தர்களின் யோகப்பயிற்சி முறை.

25. எட்டு நாகம் என்பது எண்குற்றங்கள். அவை அவா, வெகுளி, மருள், பற்று, செருக்கினால் வருகிற வெறி, பொறாமை, ஆடம்பரம், தன்முனைப்பு ஆனவை. கை என்பது மூச்சு அல்லது பார்வைப் பயிற்சியை. இந்திரனார் உலகு - வெளி மண்டலம்.

மூலக்கனலை எழுப்புவதும், குண்டலினியை ஆதார நிலைகளிலே செலுத்தி யோகம் பயில்வதும் பாம்பைப் பிடித்து ஆட்டுதல் என்று சொல்லப்படும். முதுகந்தண்டு வழியாக இயங்குகிற ஆற்றலென்பதனால், பாம்பு என்று அழைப்பதில் பொருத்தமும் அழகும் உண்டு.

ஆதிசேடன் ஆயினுமெம் மங்கையி னாலே
ஆட்டிவிடு வோமெங்கள் ஆக்கி னைக்குள்ளே
நீதியோடு மடங்கியே நின்றிடச் செய்வோம்
நின்றநிலை தவறாம லாடு பாம்பே. 26

தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்குவோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்குவோம்
ஆணைப்பெண்ணும் பெண்ணையாணும் ஆகச்செய்குவோம்
ஆரவாரித் தெதிராய்நின் றாடு பாம்பே. 27

எட்டுமலை களைப்பந்தாய் எடுத்தெறிகுவோம்
எழுகட லையுங்குடித் தேப்ப மிடுவோம்
மட்டுப்படா மணலையும் மதித்து விடுவோம்
மகாராசன் முன்புநீநின் றாடு பாம்பே. 28

---

26. ஆதிசேடன் - குண்டலினி.
நீதியோடு அடங்கிநிற்றல் - அந்தந்த ஆதார நிலைகளில் விதிப்படி சென்று நிற்றல்.

27. துரும்பு தூணாவதும், தூண் துரும்பாவதும் நயனப் பயிற்சி என்னும் ஞானக்கண் பயில்வார்களின் அனுபவமாகும். மாணவர்கள் ஞானக்கல்வி பயிலும்போது இதனைச் செய்து பார்க்கலாம். சந்திரகலை சூரியக்கலைகளை மாற்றுகிற பயிற்சியே பெண்ணை ஆணாக்குவதும் ஆணைப் பெண்ணாக்குவதுமான ஞான உத்தியாகும்.

28. எட்டுமலை - எட்டு மாபெரும் இடையூறுகளான அஷ்டராகங்கள் அல்லது எண்பெரும் ஈர்ப்புக்கள். இவையே முன்னர் விளக்கிய எண்குற்றங்கள் என்னும் எட்டுப் பாம்புகள். ஏழ்கடலைக் குடித்து ஏப்பம்விடுதல் என்பது ஏழு பிறவிகளாகிய பிறப்பிறப்புத் தொல்லைகளை வென்று விடல். மட்டுப்படா மணல், இந்த உடம்பின் பிருதிவி இயல்புகளான பிண்ட ஆற்றல்கள். இவற்றை மதித்துப் பயன்படுத்துவோமானால், அதுவே உடம்பைக் கொண்டு உடம்பை வெல்லுகிற திறனாக மலரும்.

29. மண்டலங்களை மறைத்தல் நயனப்பயிற்சி. இதன் வாயிலாகவே உச்சி மண்டலமாகிய வான மண்டலத்தையும் வளைக்கலாம். சூனியம் - ஞானப் பாழ்வெளி.

மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்
முந்நீருள் இருப்பினும் மூச்ச டக்குவோம்
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்
தார்வேந்தன் முன்புநீநின் றாடு பாம்பே. 30

செப்பரிய மூன்றுலகுஞ் செம்பொன் னாக்குவோம்
செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்
இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம்
எங்கள்வல்ல பங்கண்டுநீ யாடு பாம்பே. 31

வேதன்செய்த சிருட்டிகள்போல் வேறு செய்குவோம்
வேதனையு மெங்கள்கீழே மேவச் செய்குவோம்
நாதனுட ன் சமமாக நாங்களும் வாழ்வோம்
நாங்கள் செய்யும் செய்கையதென் றாடு பாம்பே. 32

---

30. மூண்டெரியும் அக்கினி - மூலக்கனல். முந்நீர் - முக்குணச் சுரப்புகள். புலி - கொடிய உணர்ச்சிகள்.
தார்வேந்தன் - அகத்தினுள் மாலை அணிந்த கோலத்தில் காட்சி தருகிற அரசு ஒளி.

31. மூன்று உலகு - மும்மண்டலங்கள். செங்கதிர் - சூரியன். தண்கதிர் - சந்திரன். பெரிய உலகை இல்லாமற் செய்தல் என்பது புற உலகப் பிணைப்புக்களை அண்டவிடாமல் இயற்றுகிற தவநிலை.

32. வேதன் - படைப்புக் கடவுளாகிய அயன். அவனுடைய படைப்பைப் போல ஞான உடம்பை அக உலகிலே நிறுவுதல் ஞானியின் செயலாகும். வேதனாகிய அயனுடைய இயக்கமாகிய உடம்பின் இயல்பை வென்று ஆட்டுதலே வேதனைத் தம் கீழே மேவச் செய்வதாகக் கூறுகிறார்.

ஈசத்துவம் என்ற சித்தி நிலையை அடைகிற மகான் இறை இயல்பை எய்துகிறான். அதுவே நான்காவது அடியின் பொருளாகும்.

அறுபத்து நாலுகலை யாவு மறிந்தோம்
அதற்குமே லொருகலை யான தறிந்தோம்
மறுபற்றுச் சற்றுமில்லா மணமு முடையோம்
மன்னனே யாசானென் றாடு பாம்பே. 33

சீறுபுலி யானையாளி சிங்க முதலாய்ச்
சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்
வீறுபெறுங் கடவுளை எங்க ளுடனே
விளையாடச் செய்குவோமென்றாடு பாம்பே. 34

## சித்தர் சம்வாதம்

வாசுகியை ஒருபக்கம் மன்ன நிறுத்தி
மகத்தான பதுமனை மறுபக் கம்வைத்தே
தேசுலாவு தக்கனைத்தன் திக்கினிற் சேர்த்துச்
செய்யபது மனைக்கொள்ளும் சித்த னாரே. 35

அனந்தனை யொருபக்க மாக நிறுத்தி
அதன்பக்கங் குளிகனை யண்டச் சேர்த்துக்
கனங்கொண் கார்க்கோடகன் காணக் காட்டுங்
கடுஞ்சங்க பாலனைத்தான் சித்த னாரே. 36

---

33. அறுபத்து நான்கு கலை - உலகவர்கள் பயில்கிற ஆய கலைகள் அறுபத்து நான்கு. அதற்கு மேற்பட்ட கலை கல்லாக் கலை என்னும் ஞான அனுபவக் கலையாம். மறுபற்று - இறைப்பற்றைத் தவிர மற்ற இச்சைகள். மன்னே ஆசான் - அகத்தில் உள்ள நாதனே குருவாம். குரு என்ற சொல்லே ஒளியை உணர்த்தும்.

34. விலங்குகளைத் தமது சிற்றடிக்குக் குற்றேவல் செய்யும்படி இயக்குதல், திரிகின்ற புலன்களை அடங்கிநின்று ஞானசாதனைகளிலே ஏவுதல். குற்றேவல் என்பது அகவேலை. கடவுளை விளையாடச் செய்தல் அகத்திலே நடனம் புரிவித்தல்.

35. நாடிகளையும் மூச்சையும் இயக்குகிற நுட்பம் சொல்கிறார். நேர்முகப் பயிற்சியினால் புரிந்துகொள்ள வேண்டிய முறை இது. வாசுகி - எட்டு நாகங்களில் கீழ்த்திசை தாங்கும் பாம்பு. இங்கே நாடியும் கீழ்மூச்சுமான தத்துவம். பதுமன் - எட்டு நாகங்களில் மேல் திசையைத் தாங்குவது. இங்கே மேல்நாடியும் மேல்மூச்சுமான தத்துவம். தக்கன் - எட்டு நாகங்களில் முன்னாகம். இங்கே முன்னாடியும் முன்மூச்சுமான தத்துவம். தக்கம் என்ற சொல் பற்றின் காரணத்தைக் குறிக்கும் 'தக்கம் படாமை தவம்' என்பது பஞ்சமூலம்.

36. வாயுவும் நாடியுமான பயிற்சியை நாகங்களின் பெயர்கொண்டு சொல்லியவாறு.

அட்டதிக்குஞ் சக்கரங்க ளாகக் கீறி
அக்கோண நிலைகளி லக்கரஞ் சேர்த்துத்
திட்டமுடன் மந்திரத்தைச் செபித்து நில்லும்
சித்தந்தடு மாறாதே சித்த னாரே. 37

அட்டதிக்குஞ் சக்கரங்க ளமைத்து விட்டோம்
அல்லவற்றிற் சக்கரங்க ளமைத்து விட்டோம்.
எட்டுநாக மிருக்கின்ற இடத்தில் விட்டோம்
இனியென்ன செய்வம்சொல்லும் சித்த னாரே. 38

நடுவாக ஆதிசேடன் றன்னை நாட்டும்
நான்குதிக்கும் மந்திரித்த நீறு தூவும்
கடுவிடங் கக்கவேயக் கட்செ விகளைக்
கையிலெடுத் தாடுங்கள் சித்த னாரே. 39

---

37. முன்பகுதிகளில் படங்களும் விளக்கங்களும் அச்சாகியுள்ளன.

38. மேற்படி.

39. இந்தச் சக்கரத்துக்குள்ளே பாம்பைக் கட்டுப்படுத்தும் முறையிலே நாகத்தை அமைத்து அதற்குரிய மந்திரத்தை ஓதி, சட்ட விதிகளின்படி வழிபாடு இயற்றுதல் பற்றிக் கூறுகிறார். சமுதாய நலம் கோரி இத்தகைய எந்திரங்கள் செய்து பயிலுதல் உண்டு. தேள் கடித்தால் அதற்குரிய முறையும் இதுபோலவே சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய சித்தி பெற்றுவிட்டால் பாம்பு விடம் உடம்பைத் தாக்காது. அதோடு தேட்கடி முதலான நச்சுத்தாக்கலும் ஏற்படாது. இவ்வாறு பயின்றுள்ள சிலர் இந்த விடக்கடி சிகிச்சையைப் பொதுமக்களுக்காக இலவசமாகவும் தொழில்முறையிலும் செய்கிறார்கள். யோகஞான சித்தர்கள் நிலைவேறு.

## பொருளாசை விலக்கல்

நாடுநகர் வீடுமாடு நற்பொரு ளெல்லாம்
நடுவன்வ ரும்பொழுது நாடி வருமோ
கூடுபோன பின்பவற்றாற் கொள்பய னென்னோ 40
கூத்தன்பதங் குறித்துநின் றாடாய் பாம்பே.

யானைசேனை தேர்பரி யாவு மணியாய்
யமன்வரும் போதுதுணை யாமோ அறிவாய்
ஞானஞ்சற்று மில்லாத நாய்கட் குப்புத்தி 41
நாடிவரும் படிநீநின் றாடாய் பாம்பே.

மாணிக்கமா மணிமுடி வாகு வலயம்
மார்பிற்றொங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்
ஆணிப்பொன்முத் தாரமம்பொன் அத்தக் கடகம் 42
அழிவான பொருளெனநின் றாடாய் பாம்பே.

மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்
மதில்சூழ்ந்த அரண்மனை மற்று முள்ளவை
கூடவாரா வென்றவந்தக் கொள்கை யறிந்தோர் 43
குலவாமல் வெறுப்பாரென் றாடாய் பாம்பே.

---

40. எளிய பாடல். மாடு - செல்வம்.

41. நால்வகைச் சேனை. அரசர்களின் செல்வ நிலை கூறியவாறு.

42. மாணிக்க மாமணி - நவரத்தினங்களில் ஒன்றான மாணிக்கம்.
வாகுவலயம் - தோள் அணி.
அத்த கடகம் - கைக்காப்பு. பணி - ஆபரணங்கள்.

43. அரச உடைமைகளின் செழிப்பு கூறி, இவை அனைத்தும் மரணத்திற்குப் பின்பு உடன்வராத நிலையற்ற பொருள்கள் என்கிறார்.
குலவாமல் வெறுத்தல் - அவற்றில் இச்சைகொண்டு அவற்றோடு பொருந்தி இன்பம் நுகர்ந்து ஆடாமல் பக்குவமாக உள்ளத்திலிருந்து அவற்றை நீக்கிவிடுதல்.

மலைபோன்ற செம்பொற்குவை வைத்தி ருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ
அலையாமல் அகத்தினை அத்தன்பால் வைத்தோர்
அழியாரென் றேநீதுணிந் தாடாய் பாம்பே. 44

பஞ்சணையும் பூவணையும் பாய லும்வெறும்
பாழ்ச்சுடு காடதிலே பயன் பெறுமோ
மஞ்சள்காமாலை போய்க்கசுடு நாறு மணங்கள்
வருமென்று தெளிந்துநின் றாடாய் பாம்பே. 45

முக்கனியுஞ் சர்க்கரையும் மோத கங்களும்
முதிர்சுவைப் பண்டங்களும் மொத்தி யுண்டவாய்
மிக்கவுயிர் போனபின்பு மண்ணை விழுங்க
மெய்யாகக் கண்டோமென் றாடாய் பாம்பே. 46

---

44. செம்பொற்குவை - செம்மையான மாற்றுயர்ந்த பொன்குவியல்.
மறலி - எமன். அலையாமல் - மனச்சலனம் இல்லாமல்.
அகத்தினை - உள்ளத்தை, அகக்கரணங்களை.
அத்தன் - அப்பனாகிய உள் ஒளி.

45. பாயல் - படுக்கை.
அணை - தலையணை, திண்டு முதலியன.

46. மோதகங்களும் - சுவையான சிற்றுண்டிகளில் ஒருவகையான கொழுக்கட்டை.
முதிர்சுவைப் பண்டங்கள் - சுவை மிகுந்த உணவு வகைகள்.
மொத்தி உண்ணுதல் - புடைக்க உண்ணுதல்,
நிரம்பச் சாப்பிடுதல் ; மொத்துதல் - புடைத்தல்.

வண்ணப்பட்டும் வாசனையும் வாய்த்த கோலமும்
வண்கவிகை ஆலவட்டம் மற்றுஞ் சின்னமும்
திண்ணமுடன் யமபுரஞ் செல்லுங் காலத்தில்
சேரவர மாட்டாவென் றாடாய் பாம்பே. 47

மக்கள்பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்
மாளும்போது கூடவவர் மாள்வ தில்லையே
தக்கவுல கனைத்தையுந் தந்த கர்த்தனைத்
தாவித் தாவித் துதித்துநின் றாடாய் பாம்பே. 48

கானலைமான் நீரெனவே கண்டு செல்லல்போல்
காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்
மேனிலைகண் டார்கள்வீணாய் வீம்பு பேசிடார்
மெய்யன்பதம் நாடுவாரென் றாடாய் பாம்பே. 49

---

47. கவிகை - குடை. ஆலவட்டம் - விசிறி.
சின்னம் - இங்கே அரச அணிபணிகளைக் குறிக்கிறது.

48. "ஈருடல் ஓருயிர்" என்று ஒரு சொற்றொடர். அதன் நொய்ம்மையைச் சுட்டுகிறார் சித்தர். தக்க உலகு - கீழே விழாமல் ஒரு பெரிய ஈர்ப்பிலும் சட்டத்திலும் கட்டுண்டு நின்று சுழல்கிற அண்டங்கள்! தந்து - படைத்துத் தந்த. கர்த்தன் - படைப்புக் கர்த்தா.

49. கானல் - கானல் நீர், பொய்த்தோற்றம்.
வீம்பு - வரட்டு வாதம்.
இருப்பதை இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும், நாம் பார்ப்பது எப்படிப் பொய், நாம் கேட்பது எப்படிப் பொய், உண்ணுகிற உணவு உடம்பில் சேருவது எப்படிப் பொய் என்றெல்லாம் பலப்பல பேசுகிற உலக உரையாடல்!

## பெண்ணாசை விலக்கல்

வெயில்கண்ட மஞ்சள்போன்ற மாத ரழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்டே இலவுகாத் தோடுங் கிளிபோல்
உடல்போனால் ஓடுவாரென் றாடாய் பாம்பே. 50

செண்டுமுலை வண்டுவிழி கொண்ட தோகையைச்
சித்தப்பால் விழுங்கியே சீயென் றொறுத்தோம்
குண்டுகட் டெ ருமையேறுங் கூற்றுப் பருந்தைக்
கொன்றுதின்று விட்டோம்என் றாடாய் பாம்பே. 51

வட்டமுலை யென்றுமே வற்றுந் தோலை
மகமேரு என்றுவகை வைத்துக் கூறுவார்
கெட்டநாற்ற முள்ளயோனிக் கேணியில் வீழ்ந்தார்
கெடுவரென் றேநீதுணிந் தாடாய் பாம்பே. 52

மலஞ்சொரி கண்ணைவடி வாளுக் கொப்பாக
வருணித்துச் சொல்வார்மதி வண்மை யில்லாதார்
குருநலம் பேசுகின்ற கூகை மாந்தர்கள்
கும்பிக்கே யிரையாவரென் றாடாய் பாம்பே. 53

---

50. வெயில் கண்ட மஞ்சள் - காய்ந்து மஞ்சளான ஒளியை எதிரளிக்கிற உறை மஞ்சள். ஒயில் - மேனியின் தோற்ற நளினம். இலவு - இலவம்பஞ்சு.

51. செண்டுமுலை - பூச்செண்டுபோல் வண்ணமும் இறுகலுமான கொங்கை. வண்டுவிழி - வண்டு போல வடிவமும் கருநிறமும் சுற்றிக் கருமயிரும் இலக்கமும் கொண்ட கண்கள். தோகை - மயில்போன்ற ஒயில் உடைய பெண்மணி. சித்தம்பால் விழுங்கியே - உள்ளத்தில் சுரக்கின்ற காமம் என்னும் பாலை அது மீண்டும் சுரக்காதபடி உள்ளேயே அமுக்கி விழுங்கி. ஒறுத்தல் - வெறுத்தல். குண்டுகட்டு எருமை - பருத்துத் தடுத்துக் கொழுத்த எருமை மாடு. அதுவே எமனுடைய ஊர்தி. கூற்றுப் பருந்து - பருந்து போன்று உடலை உணவாகக் கொள்கிற எமன்.

52. வற்றுதல் - காய்ந்து சுருங்கிப் போகுதல். மகமேரு - பெரிய மேருமலை. யோனிக் கேணி - கருவாயிலாகிய குழிக்கிணறு.

53. மலம் - பீளை. வடிவாள் - கூரியவாள். பேசுதல் - இங்கே வைதல். 'ரொம்பப் பேசிவிட்டான்' என்றால் வைதான் என வழக்கு. கூகைமாந்தர் - அலறுகின்ற கோட்டான் போன்ற வாய்நீண்ட மனிதர்கள். கும்பிக்கு இரை - வயிற்றுச்சாமி.

சிக்குநாறுங் கூந்தலையே செழுமை மேகமாய்ச்
செப்புவார்கள் சொங்கைதனைச் செப்புக் கொப்பதாய்
நெக்குநெக்கு ருகிப்பெண்ணை நெஞ்சில் நினைப்பார்
நிமலனை நினையாரென் றாடாய் பாம்பே. 54

நாறிவரும் எச்சில்தனை நல்லமு தென்றும்
நண்ணுஞ்சளி நாசிதனை நற்குமி ழென்றும்
கூறுவர்கள் புத்தியில்லாக் கூகை மாந்தர்கள்
கோனிலையை யறியாரென் றாடாய் பாம்பே. 55

மயிலென்றுங் குயிலென்றும் மாணிக்க மென்றும்
மானேயென்றும் தேனேயென்றும் வானமு தென்றும்
ஒயிலான வன்னமயிற் கொத்தவ ளென்றும்
ஓதாமற் கடிந்துவிட் டாடாய் பாம்பே. 56

மின்னற்கொடி யென்றுஞ்சோதி விளக் கென்றும்
மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகை யென்றும்
கன்னற்கட்டி யென்றுஞ்சீனிக் கற்கண் டென்றும்
கழறாமற் கடிநதோமென் றாடாய் பாம்பே. 57

---

54. சிக்கு நாறுதல் - எண்ணெய்ப் பிசுக்கு நாற்றம் அடிக்கிற. செழுமை மேகம் - கார்மேகம். செப்பு - மரச்செப்பு நெக்குருகுதல் - நெகிழ்ந்து உருகிப் போதல். நிமலன் - மாசற்ற தலைவனாகிய இறையொளி.

55. அதரம் பருகுதலாகிய சிற்றின்பத்தை முதலடி கூறுகிறது. காதலியின் மூக்கை நற்குமிழ் என்பார்கள். கோனிலை - உச்சி ஒளிநிலை.

56. காதலர்களின் உரையாடலிலே வருகிற விளிமொழிகள்!
வண்ணமயிற் கொத்தவள் - வண்ணமான மயிலை நிகர்த்தவள்.
ஓதாமல் - துதி பாடாமல்.

57. மெல்லி - மென்மையானவள். வல்லி - கொடி போன்றவள்.
மேனகை - வானத்தழகி.
கன்னற்கட்டி - கருப்பங்கட்டி.
சீனி - கருப்பங்கட்டியைத் தூய்மைப்படுத்திய வெண்சர்க்கரை.
கற்கண்டு - கண்டமுதம்.
கழறாமல் - புகழ்ந்து விரிவுரை செய்யாமல்.

பூவையென்றும் பாவையென்றும் பொன்னே யென்றும்
பூந்திருவே என்றுமென்றன் பொக்கிட மென்றும்
கோவையென்றுங் கோதையென்றுங் கோகில மென்றும்
கூறாமற் றுறந்தோம்நாமென் றாடாய் பாம்பே. 58

மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத் தோலென்றும்
சலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்த சேறென்றும்
தானறிந்து தள்ளினோமென் றாடாய் பாம்பே 59

## சரீரத்தின் குணம்

ஊத்தைக் குழிதனிலே மண்ணை யெடுத்தே
உதிரப்பு னலினிலே யுண்டை சேர்த்தே
வாய்த்தகுய வனாரவர் பண்ணுட் பாண்டம்
வறகோட்டுக்கு மாகாதென் றாடாய் பாம்பே. 60

---

58. பூவை - 'மைனா' என இக்காலத்தில் வழங்கும் நாகணவாய்ப் பறவை. பாவை - வடித்துச் செய்த பதுமை. பூந்திரு - தாமரை மேவிய திருமகள். பொக்கிடம் - வைப்புநிதி. கோவை - கொடிவகை. கோதை - கூந்தல் நீண்ட பெண். கோகிலம் - குயில்போலும் குரலுடைய பெண்.

59. மலக்குடம் - மலம் நிரம்பிய குடமாகிய உடம்பு. புழுக்கூடு - புழு நெளிகிற தசையும் சுரப்பும் உள்ள உடம்பு. மல்கும் - நிரம்பி நிறைகிற. சலக்குழி முதலாக வருகிற சொற்றொடர் கருவாயிலே சுரப்பதும் ஊறிவருவதுமான நீரையும் குழம்புகளையும் குறிக்கிறது.

60. ஊத்தைக்குழி - அழுக்கு நிரம்பிய குறி. மண் - ஊறி வருகிற சேறுபோன்ற உயிர்நீர். உதிரப்புனல் - இரத்தநீர். உண்டை சேர்த்து - உடம்பாகிய பிண்டத்தைை உருவாக்கி. வாய்த்த குயவன் - பெறுதற்குரிய பேறாக நிற்கிற குயவனாகிய படைப்புக்கடவுள். பாண்டம் - மட்கலம் போன்ற இந்த உடம்பு. வறகோடு - உடைந்தபோன 'ஓட்டாஞ்சில்லு' என்னும் ஓட்டுத்துண்டு. அந்த ஓடாகக் கூடச் சிறிய பயனுக்கும் ஆகாது தீயிலே வெந்து போகிற உடம்பு. அதாவது களிமண் தீயிலிட்டால் பானை அகும். உடம்பாகிய பானை சாம்பலாகத்தான் போகும்.

இருவர்மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையா யிருப்பினு மந்தச் சூளை
அரைக்காசுக் காகாதென் றாடாய் பாம்பே. 61

பரியாசம் போலவே கடித்த பாம்பு
பலபேர றியவே மெத்த வீங்கிப்
பரியார மொருமாது பார்த்த போது
பையோடே கழன்றதென் றாடாய் பாம்பே. 62

சீயுமல முஞ்செறிசெந் நீரும் நிணமுஞ்
சேர்ந்திடுதுர் நாற்றமுடைக் குடமது உடைந்தால்
நாயுநரியும் பெரிய பேயுங் கழுகும்
நமதென்றே தின்றிடுமென் றாடாய் பாம்பே. 63

நீரிலெழும் நீர்க்குமிழி நிலைகெ டல்போல்
நில்லாதுடல் நீங்கிவிடும் நிச்சய மென்றே
பாரிற்பல வுயிர்களைப் படைத்த வன்தனைப்
பற்றவேநீ பற்றித் தெரிந் தாடாய் பாம்பே. 64

---

61. தந்தை தாயர். ஒருவர் பண்ண - மாதாவின் கருவிலே உருவாகிறது இந்த உடம்பு. ஈரைந்து மாதம் வைத்த சூளை - பத்துமாதம் இந்த மண்ணுருவம் சூளையாகிய காளவாயிலிலே வேகிறது. இந்த உடம்பு அதாவது உயிரற்ற பின்பு அது, அரைக்காசு மதிப்புக்குக் கூட விலை போகாது!

62. பாம்பு கடித்து விடம் ஏறுவது போல, ஆடவன் புணர்ந்ததன் விளைவாக உயிர்நீர் உள்ளே செல்கிறது. உல்லாசமான விளையாட்டான புணர்ச்சி, அந்தப் பரிகாசத்தில், நடந்த விடக்கடி இது. இதன் விளைவாகத் தாய் சூலானது எல்லாருக்கும் தெரிகிற வீக்கமாகிக் காட்சி தருகிறது. மருத்துவச்சி என்கிற ஒரு பெண் பரிகாரம் பார்க்கிறாள். நச்சுப்பை யோடு கழன்று வருகிறது கரு!

63. சீ - 'சலம்' என்கிற ஊனீர். செந்நீர் - இரத்தம். நிணம் - சதைத்துண்டு. குடம் - குடம் போன்ற உடம்பு.

64. படைத்தவனைப் பற்றுதல் என்றால், உள்ளொளியைப் பற்றிப் பிடித்துத் தவம் இயற்றுதல்.

நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங்கழு வினுமதன் நாற்றம் போமோ
கூறுமுடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்டமலம் நீங்காதென் றாடாய் பாம்பே. 65

காய்த்தமர மதுமிக்க நல்ல டிபடும்
கன்மவினை கொண்டகாயம் கண்டனை பெறும்
வாயத்ததவ முடையவர் வாழ்பவ ரென்றே
வத்துத்திரு வடிதொழு தாடாய் பாம்பே. 66

பேசரிய நவவாயிற் பீற்றல் துருத்தி
பெருங்காற்று புகுந்ததாற் பேச்சுண் டாச்சே
ஈசனிலை அறியாருக் கிந்தத் துருத்தி
எரிமண்ணிற் கிரையாமென் றாடாய் பாம்பே. 67

---

65. உடம்பிலே உயிரோடு புகுந்த மல அழுக்கு, நீராடுவதால் நீங்காது. தண்ணீரிலே கழுவுவதால் மீனின் நாற்றம் நீங்குவதில்லை அல்லவா?

66. காய்ந்தமரம் கல்லடி படுவதுபோல, பழம் வினைகள் நிரம்பிய உடம்புக்குக் கண்டனம் அதிகமாகவே இருக்கும். வாழ்வாங்கு வாழ்பவர் யார் என்றால் தவம் கைகூடிய ஞானிகளே ஆவர். வத்து - பரம்பொருள்.

67. நவ வாயில் - இந்த உடம்பில் உள்ள ஒன்பது ஓட்டைகள். பீற்றல் துருத்தி - கழிவுகள் கொண்ட தோற்பை. காற்று சென்று மீள்வதால் விரிந்து சுருங்கி இயங்குகிற துருத்தி என்றார்.

பெருங்காற்று - உயிர். எரிமண் - சுடுகாடு.

இந்த உடம்பை ஈவிரக்கம் இல்லாத வறண்ட மனப்பான்மையோடு கண்டிப்பதன் நோக்கம், மனிதர்கள் உலக இச்சைகளில் உழன்று காமிகளாக வாழாமல் ஞானப் பயிற்சிகளால் இந்த உடம்பாகிய ஞானசாதனத்தை முறையான விதத்தில் இறைவன் வாழ்கிற கோயிலாகப் பராமரிக்க வேண்டும் என்பதை இடித்துக் கூறுவதற்கே!

மரப்பாவை போலவொரு மண்ணுருச் செய்து
வளமான சீவனென்னுஞ் சூத்திரம் மாட்டித்
திரைக்குள்ளி ருந்தசைப்போன் தீர்ந்த பொழுதே
தேகம்விழு மென்றுதெளிந் தாடாய் பாம்பே. 68

தசநாடி தசவாயு சத்த தாது
சார்ந்தமரக் கப்பலது தத்தி விழுமே
இசைவான கப்பலினை ஏக வெள்ளத்தில்
எந்நாளும் ஓட்டத்துணிந் தாடாய் பாம்பே. 69

## அகப்பற்று நீக்கல்

தாமரையி னிலையிலே தண்ணீர் தங்காத
தன்மைபோலச் சகத்தாசை தள்ளி விட்டெங்கும்
தா மணியாய் விளங்கிய சோதி பதத்தைத்
தொழுது தொழுதுதொழு தாடாய் பாம்பே. 70

கள்ளங்கொலை காமமாதி கண்டித்த வெல்லாம்
கட்டறுத்து விட்டுஞானக் கண்ணைத் திறந்து
தெள்ளிதான வெட்டவெளி சிற்சொ ரூபத்தைத்
தேர்ந்துபார்த்துச் சிந்தைதெளிந் தாடாய் பாம்பே. 71

---

68. மரப்பாவை போல மண்ணினால் செய்த உருவம் இந்த உடம்பு. உயிர் அதாவது ஜீவன் என்னும் கயிற்றில் இந்தப் பாவை கட்டப்பட்டிருக்கிறது. திரைக்குள்ளிலிருந்து அசைப்பவன் ஆன்மதத்துவம். அது நீங்கியதும் உடம்பு பிணமாக வீழ்கிறது.

69. இடப்பக்கத்து நரம்பு, வலப்பக்க நரம்பு, நடுநரம்பு (அல்லது மூச்சு என்னும் பெயர் பெறுபவை), உள்நாக்கு, வலக்கண் நரம்பு, இடக்கண் நரம்பு, வலச்செவி நரம்பு, இடச்செவி நரம்பு, கருவாயின் நரம்பு, மலவாய் நரம்பு என்னும் பத்து நாடிகளும், உயிர்க்காற்று, மலக்காற்று, தொழிற்காற்று, ஒலிக்காற்று, நிரவுக்காற்று, விழிக்காற்று, இமைக்காற்று, தும்மற்காற்று, கொட்டாவிக் காற்று, வீங்கற் காற்று என்னும் பத்து வாயுக்களும், சாறு, செந்நீர், ஊன், கொழுப்பு, என்பு, மூளை, சுக்கிலம் அல்லது சுரோணிதமாகிய உயிர்நீர் என்னும் ஏழுதாதுக்களும் சார்ந்து சரக்கு நிரப்பிய கப்பலே இந்த உடம்பு. இது உலக இச்சைகள் என்னும் பாறையிலே முட்டி விழக்கூடாது. ஏகவெள்ளம் என்னும் பேரின்பக் கடலிலே அது பயணம் செய்வதற்கு இசைவாக அதைஓட்டுவதே தவமாகும்.

70. உலக இச்சையானது பட்டும் படாமல் வாழவேண்டும். தூமணியான சோதியே உள்ளொளியாகிய இறைவன்.

71. திருடு, கொலை, இச்சை போன்ற பாதகச் செயல்களில் ஈடுபடாமல், அகக்கண் பார்வை பெற்று, வெட்ட வெளியில் நிற்க வேண்டும். சிற்சொரூபம் - ஞானவடிவம், அதுவே உள்ளொளி.

சொல்லும்புளி யம்பழத்தின் ஓடு போலவே
சுற்றத்திருந் தாலுமவர் தொந்தங் கனற்று
நில்லுமன மேநிபர நின்ம லத்திலே
நின்றுணைதான் வெறும்பாழென் றாடாய் பாம்பே. 72

சேற்றிற்றிரி பிள்ளைப்பூச்சி சேற்றை நீக்கல்போல்
தேசத்தோ டொத்துவாழ்வார் செய்கை கண்டபின்
சாற்றுபர வெளிதனைச் சாரும் வழியே
தானடக்க வேணுமென் றாடாய் பாம்பே. 73

எண்ணெய்க்குந் தண்ணீர்க்குந் தொந்தம்இல்லா வாறுபோல்
எப்போதும் இப்புவியி லெய்த வேண்டும்
கண்ணுக்குக்கண் ணானவொளி கண்டு கொள்ளவே
கட்டறுத்து வாழ்ந்திடநின் றாடாய் பாம்பே. 74

---

72. புளியம்பழத்தில் பழமும் தோடும் ஒன்றாக இருந்தும் ஒட்டிக்கொள்ளாமல் இருப்பதுபோல், சுற்றஞ்சூழ இருந்தாலும் பிணைப்பில்லாமல் வாழவேண்டும். நின்மலமான பிரம்மமே துணையான பாழ்வெளிச் சிற்றம்பலம் என்றும் தேரவேண்டும்.

73. பரவெளியைச் சார, உலகச்சேற்றில் பற்றுக்கொடின்றி உலவ வேண்டும். பிள்ளைப்பூச்சி சேற்றிலே உலவினாலும் சேற்றில் சிக்குவதில்லை அல்லவா?

74. அகக்கண் ஒளியில் தோய்ந்து வாழ்வது எப்படியென்றால், தண்ணீருக்குள் எண்ணெய் தண்ணீரோடு ஒன்றாதவாறு உலக வாழ்வில் ஒன்றாது இயங்கவேண்டும்.

காட்டுக்குள்ளே போய்த்தவம் இயற்றவேண்டாம். உலகவாழ்வில் இருந்துகொண்ட ஞானிகள் நெறியிலே உள்ளொளியோடு ஒடுங்கித் தவவாழ்வு வாழலாம் என்பது கருத்து. புளியம்பழமும் தோடும், பிள்ளைப்பூச்சியும் சேறும், எண்ணெயும் தண்ணீரும் என்ற உவமைகள் தோய்ந்தும் தோயாத நிலையை விளக்குகின்றன!

கக்கிவிட்ட சோறுகறி கந்தமூ லங்கள்
கண்களுக்கு சுத்தமான காட்சி போலவே
சிக்கிக்கொண்ட சகத்தினைச் சீயென் றொறுத்துச்
சீர்பாதங் காணத்தெளிந் தாடாய் பாம்பே. 75

கோபமென்னும் மதயானை கொண்ட மதத்தைக்
கூர்கொள்யுத்தி அங்குசத்தாற் கொன்று விட்டேங்காண்
தீபமென்னுஞ் சிற்சொரூபச் செய்ய பொருளைச்
சேர்ந்துறவு கொண்டோமென் றாடாய் பாம்பே. 76

நித்தியமென் னுமலையில் நின்றுகொண் டோம்யாம்
நினைத்தபடி யேமுடித்து நின்மல மானோம்
சத்தியமா யெங்கள்கடந் தானழி யாதே
சந்ததமும் வாழ்வோமென் றாடாய் பாம்பே. 77

மனமென்னுங் குதிரையை வாகன மாக்கி
மதியென்னுங் கடிவாளம் வாயினிற் பூட்டிச்
சினமென்னுஞ் சீனியின்மேற் சீரா யேறித்
தெளிவிடஞ் சாரிவிட் டாடாய் பாம்பே. 78

---

75. கக்கி வாந்தி செய்த உணவுப்பொருள்கள் காட்சிப் பொருள்களாகத் தெரிவது போல, சிக்கி நிற்கிற உலகச் சூழலை ஒறுத்துத் தெளிவோடு வாழலாம்.

76. கோபம் ஒரு மதயானை. அந்த மதத்தை அடக்குகிற அங்குசம் எது? யுக்தி என்னும் ஞான முறையே. சிற்சொரூப்மான பேரறிவுடைய வடிவம் எது? உள்ளொளியின் சுடரேயாகும்.

77. நிலையான மலை ஞானிகளுக்கு எது? மலை என்னும் தலையுச்சியே. அதில் நின்று நினைவினால் நினைத்தபடி ஞானச்செயல் புரிந்து வென்றோம். உண்மையிலேயே நமக்கு மரணமில்லை.

78. வாகனம் - ஊர்தி. மதியாகிற அறிவே கடிவாளம். சினம் என்கிற சேணத்தின் மீது ஏறி அமர்ந்து தெளிவிடமாகிய பரவெளிக்குப் பயணம் போவதே தவமாகும். சீனி - சேணம்.

ஆசையென்னுஞ் செருப்பின்மேல் அடிமை வைத்தே
ஆங்கார முட்காட்டை அறவே மதித்தே
காசையெனுந் துர்க்குணத்திற்கு கனலைக் கொடுத்திக்
காலாகாலங் கடந்தோமென் றாடாய் பாம்பே. 79

காலனெனுங் கொடிதான கடும்ப கையைநாம்
கற்பமெனும் வாளினாலே கடிந்து விட்டோம்
தாலமதிற் பிறப்பினைத் தானும் கடந்தோம்
தற்பரங் கண்டோமென் றாடாய் பாம்பே. 80

தேனில்வீழ்ந்த ஈயைப்போலச் சிந்தை குலைந்து
திகையாமற் சிற்சொரூப தெரிச னைகண்டு
வானில்பறந் திடச்சூத வான்ம ணிதீர்ந்து
வாயிற்போட் டெகநீநின் றாடாய் பாம்பே. 81

---

79. ஆசையைத் செருப்பாகக் கொண்டு அதை மிதியடியாகப் பதிக்க வேண்டும். ஆங்காரமாகி முள்வனத்தை மிதித்து ஏகவேண்டும். காசை - புற்புதர். கெட்ட குணங்களாகிய புற்புதரை ஞானக்கனல் கொண்டு எரிக்க வேண்டும். காலத்தை வெல்லும் வழி இதுவே.

80. கற்பம் - மரணத்தை வெல்லும் மருந்து. யோகப் பயிற்சியினால் அமுதம் அருந்தியும் இதே கற்ப பலனைப் பெறலாம். காலனைக் கற்பம் எனற வாளால் வெட்டினோம். இறப்பை வென்றதால் பிறப்பும் இல்லை. தற்பரம் - ஆன்மாவுக்கு ஆன்மாவாகிய பரமான்மா; சிவம்.

81. தேனில் ஈ விழும்போது இனிப்பிலே தடுமாறுகிறது! இனிப்பு என்னும் சுவையிலே மடிகிறது! இந்தத் தடுமாற்றம் இல்லாதவாறு, ஞானச்சுடர் கண்டு நிற்பதே சித்தர் நெறியாகும். சூத வான்மணி என்பது சித்தர்கள் கண்ட கமனகுளிகை. அதை வாயில் அடக்கியவாறு உலகமெங்கும் பறந்து திரியலாம்.

தூக்கியநற் பாதங்கண்டேன் சோதியுங் கண்டேன்
சுத்தவெளிக் குள்ளேயொரு கூத்தனைக் கண்டேன்
தாக்கிய சிரசின்மேல் தைத்த பாதம்
சற்குருவின் பாதமென் றாடாய் பாம்பே. 82

ஆலடிப் பொந்தினிலே வாழ்ந்த பாம்பே
அரசடிப் பொந்தினிலே புகுந்து கொண்டாய்
வாலடி தன்னிலே பார்த்துப் பார்த்து
வாங்கியே தூங்கிநின் றாடாய் பாம்பே 83

நாலு தெருவினிலே நாலு கம்பம்
நடுத்தெரு வினிலேயோர் பொன்னுக் கம்பம்
போலும் விளங்குபொன்னுக் கம்பத்தி னுக்கே
பூமாலை சூடியேநின் றாடாய் பாம்பே. 84

ஆழிபெயர்ந் தாலுமேரு மட்டே யலையும்
அடியோடு பெயர்ந்தாலு மன்றிக் கால
ஊழிபெயர்ந் தாலுமதி யுண்மைப் படிக்கே
உறுதிபெய ராதுநின் றாடாய் பாம்பே. 85

---

82. தூக்கிய திருவடி என்பது ஞானக் கல்வியின் துய்ப்பு நிலை. சுத்த வெளி என்பது சிதம்பரம். அழுத்திய பாதம் சிரசின் மேல். அதுவே சற்குருவாகிய ஒளியின் பாதம்.

83. ஆலடிப் பொந்து - மூலாதார நிலை. அரசடிப் பொந்து - பிந்து சக்கரம்; ஆயிரம் இதழ்த் தாமரைத்தலம். வாலடி - மூலாதாரத்தின் தொடக்கநிலை. இதில் சொல்லப்பட்டது மூலக்கனலை எழுப்புகிற பயிற்சி.

84. நாலு தெரு - நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் என்ற மனத்தின் நான்கு பாதைகள். நடுத்தெரு - அத்தநிலை. அந்த அத்த நிலைக்கே மற்றுள்ள ஆறு சக்கரங்கள் படிகளாக உதவும்.

ஆறாதாரப் பயிற்சி என்பது மூலக்கனல் என்ற முற்பகுதியிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

85. கடலும் மேருமலையும், ஊழியுமே பெயர்ந்தாலுங் கூடப் பேரறிவுநிலையிலே உறுதி பெயராமல் நிற்பதே ஞானத்தவம், மோனத்தவம் என்பது.

வாயுவினை யிரையாக வாங்கி யுண்டே
வருடிக்கும் நீரினை வாயுள் மடுத்தே
தேயுபிறை குளிர்காய்ந்து வெட்ட வெளியில்
திகைப்பறச் சேர்ந்துநின் றாடாய் பாம்பே. 86

மாசில்கதி வளையிலே மண்டல மிட்டே
மதியான பெரும்பட மடலை விரித்தே
ஆசில்பரா பரமான ஆதி பாதத்தை
அடுத்தடுத் தேதுதித் தாடாய் பாம்பே. 87

காடுமலை நதிபதி காசி முதலாய்க்
கால்கடுக்க ஓடிற்பலன் காண லாகுமோ
வீடுபெறும் வழிநிலை மேவிக் கொள்ளவே
வேதாந்தத் துறையினின் றாடாய் பாம்பே. 88

---

86. மூலக்கனலாகிய பாம்புக்கு மூச்சே இரையாகும். கொட்டுகிற நீராகிய பானமே உணவு. முத்தமிழில் குளிர்காய்வதும், வெட்ட வெளியிலே நிற்பதுமே இயல்புகள்.

87. மாசில்கதி - பரகதிநிலை. அந்த வளையிலே மண்டலம் இடுவதே ஞானயோகம். சந்திர கலையோடு கூடிய அறிவே பாம்பின் படம். அந்தப் படத்தை மடல்விரித்து ஆதியின் திருவடியை அடுத்துநின்று களித்தலே யோகசமாதி.

88. 'கானும் மலையும்' சுற்றுவதால் பயனில்லை என்ற கருத்தை எல்லாச் சித்தர் பெருமக்களும் பற்பல வழிகளில் எடுத்தோதியுள்ளார்கள். வேதாந்தத் துறை என்பது வேதத்தின் கொடுமுடி என்று கூறுகிற உடம்பின் உச்சிநிலையே ஆகும். அந்தத் தெளிவு முதலில் ஏற்பட வேண்டும். பிறகு அதற்குரிய பயிற்சியைக் கற்க வேண்டும். அந்தப் பயிற்சியில் இடையீடு இல்லாத நம்பிக்கையும் உழைப்பும் வேண்டும். அதில் நின்று ஆட வேண்டும்.

எள்ளளவும் அன்பகத்தில் இல்லா தார்முத்தி
எய்துவது தொல்லுலகில் இல்லை யெனவே
கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைக் 89
கண்டு தொழுதேகளித் தாடாய் பாம்பே.

சூரியனைக் கண்டபனி தூர வோடல்போல்
சொந்தபந்தஞ் சிந்தபரி சுத்த தலத்தில்
ஆரியனைக் கண்டுதரி சித்தே யன்புடன் 90
அகலாமற் பற்றித்தொடர்ந் தாடாய் பாம்பே.

காந்தம்வலி யிரும்புபோல் காசில் மனத்தைக்
காட்சியான வத்துவுடன் கலக்கச் சேர்த்துச்
சாந்தமுடன் தோண்டியும் தாம்பும் போலச் 91
சலியாமற் றொடர்ந்து நின் றாடாய் பாம்பே.

உளியிட்ட கற்சிலையில் உண்டோ வுணர்ச்சி
உலகத்தின் மூடர்களுக் குண்டோ வுணர்ச்சி
புளியிட்ட செம்பிற்குற்றம் போமோ அஞ்ஞானம் 92
போகாது மூடருக்கென் றாடாய் பாம்பே.

---

89. மனத்தில் அன்பு வேண்டும் என்பது அடிப்படையாகும். அன்பு இல்லையென்றால் நெகிழ்கிற பண்பை உள்ளம் இழந்துவிடும். அதே சமயம் கள்ளப் புலனின் பிணைப்பை அறுக்க வேண்டும். முரண்பாடு போலத் தோன்றுகிற இந்த இரண்டன் இணைப்பே சாதனைக்கு வழியும் சாதனையும் ஆம்.

90. தூர ஓடல் - நில்லாது ஆவியாதல்.
சிந்தல் - நீங்குதல், உதறுதல். ஆரியன் - பரமகுரு.
அகலாமல் - அங்கிங்கு ஆடாமல் நிலைநிற்றல்.

91. காந்தம் வலி இரும்பு - காந்தம் வலிக்கிற அதாவது இழுக்கிற இரும்பு. காசில் மனம் - குற்றமற்ற மனம். தோண்டி - வாளி. தாம்பு - கிணற்றிலிருந்து வாளி கொண்டு தண்ணீர் இழுக்கும் கயிறு.

92. வெறும் சிலைக்கு உணர்ச்சி ஏது?
செம்பிலே புளிகொண்டு துலக்கினால் களிம்பு போகும்.
ஆனால் களிம்பு மீண்டும் மீண்டும் உண்டாகிற இயல்பு போகுமோ? போகாது.

திரளான போரிலூசி தேடல் போல்முத்தி
சிக்காது தேசாசார தேசிகர் தம்மால்
அருளான மூலகுரு வையர் செயலால்
ஆனந்தங் கண்டோமென் றாடாய் பாம்பே. 93

எட்டுச்சுரைக் காய்கறிக்கிங் கெய்தி டாதுபோல்
எண்டிசைதி ரிந்துந்கதி யெய்க வினையே
நாட்டுக்கொரு கோயில்கட்டி நாளும் பூசித்தே
நாதன்பாதங் காணார்களென் றாடாய் பாம்பே. 94

தன்னையறிந் தொழுகுவோர் தன்னை மறைப்பார்
தன்னையறி யாதவரே தன்னைக் காட்டுவார்
பின்னையொரு கடவுளைப் பேண நினையார்
பேரொளியைப் பேணுவாரென் றாடாய் பாம்பே. 95

---

93. யுத்த காலத்தில் அமர்க்களத்திலே தரையிலே ஊசி தேடுவது எத்தகைய மடமை! உலக ஆசாரங்களில் மூழ்கியுள்ள குருவினிடம் மெய்ம்மைக கல்வி அகப்படாது!

94. ஏட்டில் வரைந்துள்ள சுரைக்காயை நறுக்கிக் கறிசமைத்தல் முடியுமா? வெறும் சடங்குகளும் சாத்திர வழிபாடுகளும் இவ்வாறுதான்! நாடெங்கும் கோயில் கட்டி என்ன பயன்? உடம்புளே உத்தமன் கோயில் கொள்வதைத் தேர்ந்து இயங்க வேண்டும்.

95. தன்னை அறிந்தவர் தன்னை இழப்பார்கள். தன்னை அறியாதவரோ தன்முனைப்போடுள்ள முந்திரிக்கொட்டைகள்! உள்ளொளியைக் கண்டு பாதுகாக்கும் ஞானிகள் வேறு எந்த வணக்கமும் புரியார்கள். தன்னிலே தானாய் ஒடுங்குகிற அந்த யோகமே அனைத்துமாம்!

பாலிற்சுவை போலுமெங்கும் பாய்ந்த வொளியைப்
பற்றுப்பொன் பற்றவைத்த பான்மை போலே
காலிற்சுழு முனைநின்று கண்டு கொண்டு
களித்துக் களித்துநின் றாடாய் பாம்பே. 96

தேக்கெடுத்தே ஓடும்வானத் தேனை உண்டபின
தேகபந்தம் கொண்டமித் தேச வாழ்வினை
ஓக்காளமென் றெண்ணிமிகு மோகை யுடனீ
உள்ளந் தெளிந்துநின் றாடாய் பாம்பே. 97

சதுர்வேதம் ஆறுவகைச் சாத்தி ரம்பல
தந்திரம் புராணங்கலை சாற்று மாகமம்
விதம்வித மானவான வேறு நூல்களும்
வீணான நூல்களேயென் றாடாய் பாம்பே. 98

சமயபேதம் பலவான சாதி பேதங்கள்
சகத்தேர்க்கே யல்லாதுசற் சாதுக் களுக்கோ
சிமயத் லேறனபேர் சித்த மறுமோ.
சித்தர்சித் தாந்தந்தேர்ந் தாடாய் பாம்பே. 99

---

96. தங்கத்தோடு தங்கத்தைப் பற்றவைப்பது போல் உள்ளொளி கொண்டு பொன்வேலை செய்து, காற்றினால் சுழுமுனையில் யோகம் செய்வது என்பது என்பது தீட்சை என்னும் ஞானக்கல்வியின் பாடங்கள் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய கலையாகும். கால் - காற்று, மூச்சு.

97. தேக்கெடுத்து ஓடல் - நிறைந்து ததும்பி ஓடுதல்.
ஓக்காளம் - உமிழ்ச்சி. ஓகை - உவகை.

98. சதுர்வேதம் - நான்மறை. ஆறுவகைச் சாத்திரம் - ஆறு அங்கங்கள். தந்திரம் - ஆகம முறைகள். இத்தனையும் வீணானவை. "நூல் ஏணி விண்ணேற நூற்குப் பருத்தி வைத்தல்" என்றே தாயுமானவர் இந்த அறிவைச் சொல்கிறார்.

99. சற்சாதுக்கள் - ஞானத்துறவிகள். சிமயம் - இமயம்; உச்சந்தலை. சித்தர்களுடைய சித்தாந்தம் நூலறிவும், வழிபாட்டறிவும், ஆகம நெறிகளும் தாண்டிய நிலை. அவர்களுக்கு ஈதொன்றும் இல்லை, உலகவர்களுக்கே இவை.

பூசைசெய்த தாலேசுத்த போதம் வருமோ
பூமிவலஞ் செய்ததனாற் புண்ணிய முண்டோ
ஆசையற்ற காலத்திலே ஆதி வத்துவை
அடையலா மென்றுதுணிந் தாடாய் பாம்பே. 100

மூலவரே றிந்துகொண்டால் மூன்று லகமும்
முன்பாகவே கண்டுநித்ய முத்தி சேரலாம்
சாலவேர றிந்ததாலே தான்பய னுண்டோ
சகத்தைப்பொய் யென்றுதெளிந் தாடாய் பாம்பே. 101

சகத்தனாதி யென்றிடாது தான னாதியாற்
சமைந்ததென் றுரைப்பார்கள் சத்தை யறியார்
மகத்துவ நிலைகற்ப வன்மை யல்லாது
மற்றும்வன்மை யில்லையேயென் றாடாய் பாம்பே. 102

---

100. சுத்த போதம் - மெய்யறிவு. ஆசை எப்போது நீங்குகிறதோ அப்போது ஆதிப் பொருளான அந்த உள்ளொளியை அடையலாம்.

101. மூலவேர் - மூலாதாரம். முன்பாகவே கண்டு - அகக்கண்ணுக்கு முன்னாலேயே பார்த்து. சாலவேர் - இச்சையின் உறைவிடம்.

102. "பதியைப் போல் பசுபாசம் அனாதி" என்ற திருமூலர் வாக்கை நினைவுறுத்தும் அடிகள். சத்தை அறியார் - நிலையானதை உணராதவர். மகத்துவநிலை - பெருமைக்குரிய உன்னதமான நிலை.

புறச் சடங்குகளையும் ஆகம ஆசாரங்களையும் தாண்டிய நிலையிலிருந்து பாம்பாட்டிச் சித்தரின் உரை வருகிறது. அவருடைய வெறுப்பு, கசப்பு போன்ற பேச்சுக்குள் ஆழ்ந்த இரக்கமும் பரிவும் மனிதகுலத்தின்பால் இயங்குகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. சிந்தித்துப் பார்த்தால் உலக இச்சைகளை உதறுங்கள் என்று அவர் அறிவுறுத்துவதே மனிதகுலம் உய்யவேண்டும் என்னும் கருணையிலிருந்து உதித்த ஞான போதனையே ஆகும்.

ஆயிரத்தெட்டி தழ்வீட்டி லமர்ந்த சித்தன்
அண்டமெல்லாம் நிறைந்திடும் அற்புதச் சித்தன்
கரணமில்லா தோங்கிவளர் காரணச் சித்தன்
கண்ணுளொளி யாயினானென் றாடாய் பாம்பே. 103

நாற்பத்துமுக் கோணநிலை நாப்பண தாக
நாடுமக்க ரசசொரூப நாய கன்றனை
மேற்படுத்திக் கொண்டாலந்த மேலு லகமெலாம்
மெல்லடிக்குத் தொண்டேயாமென் றாடாய் பாம்பே. 104

கண்டவர்கள் ஒருக்காலும் விண்டி டார்களே
விண்டவர்கள் ஒருக்காலும் கண்டி டார்களே
கொண்டகோல முள்ளவர்கள் கோனிலை காணார்
கூத்தாடிக்கூத் தாடியேநீ யாடாய் பாம்பே. 105

ஆறுகலைக் குச்சுக்குள்ளே ஆடு மொருவன்
அயல்வீடு போகுமுன்னே அரண்கோ லின்கொள்ளு
வேறுபட்டால் அவன்றனை மீட்ட லரிதே
மேவிமுன்னே விடாதுகொண் டாடாய் பாம்பே. 106

---

103. ஆயிரத்து எட்டு இதழ் வீடு - சகஸ்ரதளம் என்ற கொடுமுடி நிலையாகும். இறைவனே அற்புதமான சித்தன், சித்தருக்கெல்லாம் சித்தன். மேனியெடுத்து ஓங்கி வளராதவனும் மேனிகளுக்கெல்லாம் காரணனும் ஆகிய அற்புதச் சித்தன். அவனே அகக்கண்ணின் உள்ளொளி.

104. முதலாவது பகுதியில் வரைந்து காட்டப்பட்டுள்ள திருவம்பலச் சக்கரம் போன்ற உள்ளொளிச் சக்கரங்களை ஒப்பு நோக்குக.

105. கண்டவர் சொன்னதில்லை, சொல்லுகிறவன் கண்டதில்லை. இதுவே ஞான தரிசனமாகிய காட்சியின் சதுரப்பாடு. விண்டவர் - வெளியிட்டுப் பேசியவர். கொண்டகோலம் - வெளிவேடம். கோனிலை - உச்சிநிலை.

106. ஆறுகலைக்குச்சு - ஆறு ஆதாரநிலைகள் கொண்ட இந்தச் சிறிய உடம்பு. ஆடும் ஒருவன் - இந்த உடம்பிலே ஆடுகிற மூச்சு. அயல்வீடு போதல் - வெளியே விட்டுப்போகுதல். அரண்கோலுதல் - மதில்போட்டுப் பாதுகாத்தல். அவன் வெளியே போய்விட்டால் பிறகு உள்ளே மீட்கமுடியாது. அதனால் அவனைப் போகவிடாமல் அரண்செய்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

எண்ணரிய புண்ணியங்கள் எல்லாஞ் செய்துமென்
ஏகனடி நெஞ்சமதி லெண்ணா விடிலே
பண்ணரிய தவப்பயன் பத்தி யில்லையேற்
பாழ்படு மென்றுதுணிந் தாடாய் பாம்பே. 107

எவ்வுலகுஞ் சொந்தமதாய் எய்தும் பயனென்
எங்களதி பதாம்புயம் எண்ணாக் காலையில்
இவ்வுலக வாழ்வுதானு மின்றே யறுமென்
றெண்ணிக் கர்த்தன் அடிநினைந் தாடாய் பாம்பே. 108

மணக்கோலங் கொண்டுமிக மனம கிழ்ந்துமே
மக்கள்மனை சுற்றத்தோடு மயங்கி நின்றாய்
பிணக்கோலங் கண்டுபின்னுந் துறவா விட்டால்
பிறப்புக்கே துணையாமென் றாடாய் பாம்பே. 109

---

107. ஏகன் - தன்னந் தனியான உச்சியிலே நிற்பவன். பத்தி என்ற அன்பீடுபாடு இல்லையென்றால் தவத்தினால் ஏது பயன்?

108. பதாம்புயம் - பாதத்தாமரை, பங்கயத் திருவடி. இன்றைக்கே மரணம்வரும் என்று எண்ணித் தாமதம் இன்றித் தவநிலையில் ஈடுபட வேண்டும்.

109. திருமண வைபவங்களில் களித்தல், மக்கள் மனை சுற்றம் என்று மயங்கல் எல்லாம் பிணக்கோலம் பார்த்தும் மாறாமல் இருந்தால் அது எங்கே கொண்டு செல்லும்?

பிறப்புக்கே வழி வகுக்கும். அதாவது பிறவிச் சுழலுக்கே அது துணைபோகுமே யன்றி, பிறப்பைக் கடக்கும் பெருமுயற்சிக்கு அது துணை செய்யாது.

பிறப்பையும் இறப்பையும் அறுத்து விடயான்
பெருமருந் தொன்றுசொல்வேன் பெட்புடன் கேளாய்
திறப்புடன் மனப்பூட்டுஞ் சிந்தைக் கதவும்
திறந்திடும் வகையறிந் தாடாய் பாம்பே. 110

இறந்தவர் ஐவரவர் இட்ட மானவர்
எய்தும்அவர் இறந்தாரென் றெல்ல வர்கருஞ்சொல்
மறந்தவர் ஒருவெரன்றே மண்ணினி லுள்ளோர்
வகையறிந் திடவேநின் றாடாய் பாம்பே. 111

## எண்சீர் விருத்தம்

ஆதார முதலிலே பாம்ப தாக
    ஆனந்த வயலிலே படம்வி ரித்தே
ஊகார முதலிலே யொத்தொ டுங்கி
    ஓடி வகாரத்தி னாவை நீட்டிச்
சீகாரங் கிடந்ததோர் மந்தி ரத்தைச்
    சித்தப்பி டாரனார் போதஞ் செய்ய
மாகாரப் பிறப்பையும் வேர றுத்து
    மாயபந்தங் கடந்தோமென் றாடாய் பாம்பே. 112

---

110. பெட்பு - விருப்பம். மனப்பூட்டும் சிந்தைக் கதவும் திறந்திடும் வகையைக் கூறுவதே ஞானக் கல்வியாகும்.

111. ஐவர் - ஐம்பொறிகள். அந்த ஐவரை ஐந்து புலனறிவுகள் ஆட்டுவதும் நின்றது. மறந்தவர் ஒருவர் - மனம்.

112. இந்தப் பாடலுக்குப் பொருள் சொற்பொருளாக மொழிவதில் பயனில்லை. இந்த நுட்பத்தை ஆசானிடம் நேர்முகக் கல்வியாகக் கற்றுத் தேர்தலே விபரீதங்களைத் தடுக்க வல்லது. "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவர் பாட்டைக் கெடுத்தான்" என்ற வசனம் இங்கே பொருந்தும். ஓரளவு முன்பகுதியில் உள்ள படங்கள் துணைசெய்யும்.

மந்திரஞ் சொல்லுவார் தம்மை யறியார்
        தனிமந்தி ரஞ்சொல்லுவார் பொருளை யறியார்
மந்திரம் செபிப்பார்கள் வட்ட வீட்டினுள்
        மதிலினைச் சுற்றுவார் வாயில் காணார்
அந்தரஞ் சென்றுமே வேர்பி டுங்கி
        அருளென்னும் ஞானத்தால் உண்டை சேர்த்தே
இந்த மருந்தினைத் தின்பீ ராகில்
        இனிப்பிறப் பில்லையென் றாடாய் பாம்பே. 113

களிமண்ணி னாலொரு கப்பல் சேர்த்தே
        கனமான பாய்மரங் காண நாட்டி
அளிபுலந் தன்னையே சுக்கா னாக்கி
        அறிவென்னு மாதாரச் சீனி தூக்கி
வெளியென்னும் வட்டத்தே யுள்ள டக்கி
        வேதாந்தக் கடலினை வெல்ல வோட்டித்
தெளிவுறு ஞானியா ரோட்டுங் கப்பல்
        சீர்பாதஞ் சேர்ந்ததென் றாடாய் பாம்பே. 114

---

113. மந்திரங்களைக் கற்று மொழிகிறவர்கள் தம்முள்ளே தாம் புகுந்து அறியாதவர்கள். தனி மந்திரம் உபதேசம் செய்கிறவர்களுக்குப் பொருள் தெரிவதில்லை. கற்றுக்கொண்ட மந்திரங்களை ஓதுகிறவர்கள் புறத்தை அறிகிறார்களே யன்றி அகம் காணார்கள். மதிலைச் சுற்றி வருகிறார்கள், நுழைவாயிலை அறியார்கள். அந்தரம் - உச்சிக்கு மேலே. வேர்பிடுங்கல் - மூலாதாரத்திலிருந்து முகடுவரையில் செய்கிற தவப்பயிற்சி. அருளுருண்டை என்பது ஞானப் பேருணவு.

114. கப்பலும் உடம்பும் உவமை பேசப் பெறுகின்றன. களிமண் - தசைநார். அளிபுலம் - இந்திரியம். சுக்கான் - அதுவே. அறிவே ஆதாரச்சீனி. ஞானியார் ஓட்டுகிற கப்பல் ஞான உடம்பு அல்லவா? அதன்நிலை வேதாந்தக் கடற்பயணம்தானே. அது சொல்லும் எல்லை சீர்பாத எல்லை.

உள்ளத்துக் குள்ளேயே யுணர வேண்டும்
உள்ளும் புறம்பையு மறிய வேண்டும்
மெள்ளக் கனலை யெழுப்ப வேண்டும்
வீதிப் புனலிலே செலுத்த வேண்டும்
கள்ளப் புனலைக் கடிந்து விட்டுக்
கண்ணுக்கு மூக்குமேற் காண நின்று
தெள்ளு பரஞ்சோதி தன்னைத்தேடிச்
சீர்பாதம் கண்டோமென் றாடாய் பாம்பே. 115

ஓங்காரக் கம்பத்தின் உச்சி மேலே
உள்ளும் புறம்பையு மறிய வேண்டும்
ஆங்காரக் கோபத்தை யறுத்து விட்டே
ஆனந்த வெள்ளத்தைக் தேக்கிக் கொண்டே
சாங்கால மில்லாமற் றாணு வோடே
சட்டதிட்ட மாய்சேர்ந்து சாந்த மாகத்
தூங்காமல் தூங்கியே சுகம டைந்து
தொந்தோம் தொந்தோமென் றாடாய் பாம்பே. 116

விரகக் குடத்திலே பாம்ப டைப்போம்
வேதாந்த வெளியிலேவிட்டே யாட்டுவோம்
கரணங்க ளைப்பிடுங்கி இரைகொ டுப்போம்
காலக் கடுவெளிநின் றாட்டு விப்போம்
துரகந் தனிலேறித் தொல்லுல கெங்கும்
சுற்றிவலம் வந்துநித்ய சூட்சங் காண்டும்
உரையற்ற மந்திரஞ் சொல்லி மீட்போம்
ஒருநான்கும் பெற்றோமென் றாடாய் பாம்பே. 117

---

115. கனல் - மூலக்கனல். வீதிப்புனல் - ஆதார வீதிச் சுரப்புகள். கள்ளப்புனல் - வெளிவிடுகிற மெய்கெட்ட நீர். கண்ணுக்கு மூக்கு மேற்காண நிற்றல் என்பது புருவ நடுவிலே அகப்பார்வை கூடுதல். தெள்ளு பரஞ்சோதி - தூய உள்ளொளி.

116. ஓங்காரக் கம்பம் - முதுகந் தண்டினூடு பாய்ந்து செல்கிற ஆன்ம வல்லமை கொண்ட ஆற்றல். சாங்காலம் இல்லாமல் - மரணம் இல்லாமல். தாணு -நிலையான பரம்பொருள். சட்டதிட்டம் - ஞானப் பயிற்சியின் விதிமுறைகள். தூங்காமல் தூங்கல் - கண்மூடியும் விழிப்புடன் நிற்றல்.

117. விரகக்குடம் - இச்சை உதிக்கிற தலம். கரணங்களைப் பிடுங்கி இறைகொடுத்தல் - மடைமாறல் என்னும் ஞான உத்தி. காலக்கடுவெளி - முகட்டுச்சி. துரகம் - குதிரை, இங்கே வாசி. உரையற்ற மந்திரம் - பேசா உத்தி. ஒரு நான்கும் பெறல் - நான்கு ஞானப் பதவிகள். இறைவனோடு ஒரே உலகில் நிற்றல், அவனுக்குச் சமீபத்தில் நிற்றல், அவனுடைய வடிவையே கொள்ளல், அவனோடு கலந்து ஒன்றுதல்.

காயக் குடத்திலே நின்ற பாம்பைக்
கருணைக் கடலிலே தியங்க விட்டு
நேயச் சுழுமுனை நீடு பாய்ச்சி
நித்யமான வஸ்துவை நிலைக்க நாடி
மாயப் பெருவெளி தன்னி லேறி
மாசற்ற பொருளினை வாய்க்கத் தேடி
ஆயத் துறைகடந் தப்பாற் பாழின்
ஆனந்தஞ் சேர்ந்தோமென் றாடாய் பாம்பே. 118

மூலத் தலத்திலே நின்ற கருத்தை
முற்றுஞ் சுழுமுனை தன்னி லூடே
மேலத் தலத்திலே விந்து வட்டம்
வேலை வழியிலே மேவி வாழும்
பாலத் திருத்தாய்க் கருணை யதனால்
பரகதி ஞானசொ ரூப மாகி
ஆலச் சயனத்து மாலுட னின்றே
ஆனந்தஞ் சேர்ந்தோமென் றாடாய் பாம்பே. 119

---

118. தியங்கவிட்டு - மூழ்கித் திளைக்கும்படி செய்து. சுழுமுனை பாய்ச்சல் - தியானயோகம் புருவ நடுவில். நித்யமான வஸ்து - நிலையான பரம்பொருள். மாயப் பெருவெளி - பாழ்வெளி அற்புதம் நிறைந்தநிலை. ஆலத்துறை - ஆதார நிலைகள்.

119. மூலத்தலம் - மூலாதாரம்.
விந்துவிட்டம் - பிந்து சக்கரம்.
வேலைவழி - ஆனந்த வெள்ளமாகப் பொங்குகிற ஞானப்பாதை.
பாலத்து இருத்துதல் - ஆதாரநிலைகளுக்கு இணைப்பான பாலத்திலே சேர்த்து நிறுத்தல்.
ஆலச் சயனம் - தூங்காமல் தூங்குகிற அறிதுயில் நிலை. மாறுடன் நின்றே ஆனந்தம் சேர்தல் - ஆன்மாவோடு இணைந்து பரம்பொருளில் நின்று களித்தல்.
முன்பாடல்களில் கூறிய அதே வழிமுறையை மேலும் விளக்கிக் கூறுகிறார்.

புலனைந்து வீதியில் வையாளி பாயும்
புரவியெனு மனத்தை ஒருமைப் படுத்தி
மலபந்த வுலகங் கடந்த தாலே
மன்னுகுரு பாதத்தி னிலையை நாடித்
தலமைந்து பூலோகங் கடந்த தாலே
சந்திர மண்டலமுங் கடந்த தாகும்
அலமந்து பூலோகக் கடலை நீக்கி
ஆனந்த மாகிநின் றாடாய் பாம்பே. 120

குருவென்னும் ஆசானி னுருவெ டுத்துக்
குறியான ஞானத்துப் பாக்கி யாக்கி
அருளென்னு மருளையே யுண்டை யாக்கி
ஆனந்த மாகவே யதைக்க டந்தே
மருளென்னு மாதர்மன நெறியைத் தொட்டு
வாங்காம லெரிந்திட நெட்டை யிட்டுப்
பருவளைக் குள்ளேயே பட்ட தென்றே
பற்றானைப் பற்றிநின் றாடாய் பாம்பே. 121

---

120. வையாளி பாய்தல் - பரிப்பாதையிலே பாய்ந்து செல்லல்; வாசி மூச்சில் கதியமைத்து இயங்குதல். மன்னுகுரு பாதம் - பொருந்த வேண்டிய ஒளியாகிய திருவடியில்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும் உடலுலகந் தாண்டி சந்திர மண்டலமும் தாண்டி இருந்து ஆறாவது தத்துவத்தில் ஒடுங்குதல் என்ற கலையை ஆசான் உணர்த்த உணர வேண்டும்.

121. ஞானத்தைத் துப்பாக்கி ஆக்கி, அருள் என்னும் குண்டால் அடிக்க வேண்டும். சிற்றின்ப இச்சையிலே அந்தக் குண்டு பாயவே, நெட்டை சென்று பருவளையாகிய ஞானக் குறியிலே படுகிறது அது. பற்றுதற்கு அரிய பற்றானைப் பற்றுகிற முறை இது.

கன்னான் குகையிலே கான்ம றிப்போம்
கருமா னுலையிலே தீயை மூட்டுவோம்
சொன்னார் தலையிலே பொன்னை யாக்குவோம்
சுருதி யருங்கல்வி ஒப்பஞ் செய்வோம்.
மின்னார்கள் பாசத்தை விட்டே யெரிப்போம்
மெய்ப்பொருட் குறிகண்டு விருப்பை யடைவோம்
பன்னாதே பன்னாதே சும்மா விருந்து
பராபரஞ் சேர்ந்தோமென் றாடாய் பாம்பே. 122

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்
வீதிப் பிரிவினிலே விளையா டிடுவோம்
வேண்டாத மனையினி லுறவு செய்வோம்
சோதித் துலாவியே தூங்கி விடுவோம்
சுகமான பெண்ணையே சுகித்தி ருப்போம்
ஆதிப் பிரமர்கள் ஐந்து பேரும்
அறியார் களிதையென் றாடாய் பாம்பே. 123

நெட்டெழுத் ததனிலே நிலைவி ரித்து
நீங்கா வெழுத்திலே வாலை முறுக்கி
விட்டவ் வெழுத்திலே படம்வி ரித்து
விண்ணின் வழியிலே மேவி யாடிப்
பட்ட வெழுத்தையும் பதிந்தி ருப்போம்
பன்னிரண்டா மெழுத்திற் பன்னிக் கூடித்
திட்டமுட மெனக்கருள் தேசிக னார்தம்
சீர்பாதஞ் சேர்ந்தோமென் றாடாய் பாம்பே. 124

---

122. கன்னான் குகையிலே - கன்னான் என்கிற கொல்லன் உலையாகிய இந்த உடம்பின் மூலாதாரத்திலே. கால் மறித்தல் - மூச்சை மாற்றி இயக்குதல். கருமான் உலையிலே தீ - மூலக்கனல். சொன்னார் தலையிலே பொன்னை ஆக்குதல் - பொன்னம்பலப் பயிற்சி. சுருதி அருங்கல்வி - வேதங்கடந்த ஞானம். ஒப்பம் செய்தல் - மெருகூட்டுதல். மின்னார்கள் பாசத்தை விட்டே எரிப்போம் - பெண்ணாசையை அந்தத் தீயில்போட்டு எரிப்போம். பன்னாதே சும்மா இருத்தல் - மனம் ஒடுங்கிமோன நிலையிலே நிற்றல்.

123. சந்தை வெளியிலே கோலை நாட்டுதல் - மூன்று கனலும் சந்திக்கிற இடத்திலே நிட்டை கூடுதல்.

124. இந்தப் பாடலில் வருகிற எழுத்தின் விரிவு விநாயகர் அகவல் விளக்க உரையிலும் காண்க.

ஊசித்துளைக் குடத்தினிற் பாம்பை யடைப்போம்
உலகெலாம் சுற்றியே யுலாவி வருவோம்
மாசுள்ள பிறவியை மறத்தி ருப்போம்
மனமொத்த வெளியிலே விட்டே யாட்டுவோம்
மாசுப் புலன்களை இரைகொ டுப்போம்
மனமுற்ற உச்சியிலேறி யாடுவோம்
பேசு மெழுத்தையும் விழுங்கி விடுவோம்
பிறப்பிறப் பற்றோமென் றாடாய் பாம்பே. 125

ஆணிக் குடத்திலே பாம்ப டைப்போம்
அக்கினிக் கோட்டைமே லேறிப் பார்ப்போம்
மாணிக்கத் தூணின்மேல் விட்டே யாட்டுவோம்
மனம்வாக்குக் காயத்தை இரைகொ டுப்போம்
நாணிக் கயிற்றையும் அறுத்து விடுவோம்
நமனற்ற நாதன்பதம் நாடியே நிற்போம்
ஏணிப் படிவழிகண் டேறி விடுவோம்
யாறுமிதை யறியாரென் றாடாய் பாம்பே. 126

---

125. ஊசித்துளைக்குடம் - மூச்சை அடக்கி மேலே செலுத்துகிற நுட்பமான வழியும் நிலையமும்.
மனம் ஒத்த வெளி - மனம் ஒடுங்குகிற பரவெளி.
பேசும் எழுத்தை விழுங்குதல் - சூக்கும அட்சர நிலையிலே வாசி நிற்றல்.

126. ஆணிக்குடம் - ஆதார நிலை.
அக்கினிக்கோட்டை - நெருப்புக் கோட்டையாகிய சுழுமுனை.
மாணிக்கத் தூண் - நடுநாடி.
நாணிக்கயிறு - முதுகந்தண்டின் நாண்கயிறாகிய ஆற்றல்.
ஏணிப்படி - தண்டின் படிப்படியான நிலைகள்.

இந்தப் பயிற்சி மிகவும் உழைத்துப் பெறவேண்டிய சாதனை. குருவானவர் ஒவ்வொரு கட்டத்திலும் சரிபார்த்து மேலே செலுத்த வேண்டிய மாபெரும் ஆன்மப் பயிற்சி முறை அடங்கியது.

வடக்குங் கிழக்குமாக நூலை யிழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம்
நடக்கும் வழியினிலே யுண்டை சேர்ப்போம்
நடவா வழியினிலே புடவை நெய்வோம்
குடக்குக் கரையினிலே கோலைப் போடுவோம்
கொய்தைதை யெங்குமே விற்று விடுவோம்
அடக்கியே யேகத்துள்ளே வைக்கவும் வல்லோம்
ஆதிபதங் கண்டோமென் றாடாய் பாம்பே. 127

சூத்திரக் குடத்திலே பாம்பை யடைப்போம்
சுழுமுனைக் குள்ளேயே சுகித்தி ருப்போம்
பாத்திரங் கொண்டுமே பலியி ரப்போம்
பத்தெட்டு மூன்று படிக டந்தோம்
ஊத்தைச் சடத்தினைப் புடமே யிடுவோம்
உளவ னெமக்கு நல் லுறுதி சொல்லப்
பார்த்துரை யிதன்மெய் பலிக்க வெண்ணிப்
பதனம் பதனமென் றாடாய் பாம்பே. 128

---

127. இதுவும் பயிற்சியின் முறைகள் சொன்னவாறாம். மூச்சை அடக்குதல், விடுதல், தானங்கள் மாற்றுதல் ஆகிய யோகப்பயிற்சி சிக்கல்கள் நிரம்பிய நுண்ணுடற் பயிற்சியாகும். உணர்த்த உணரவேண்டிய ஞானச்செயல் இது.

128. பேரறிவுக்குரிய புலனாற்றல்கள், செயலுக்குரிய புலனாற்றல்கள், தன்மாத்திரைகள், உயிர்நிலை, அகக்கருவிகள் என்பன சேர்ந்திருப்பதே இந்த யாக்கை. இருபத்து நான்கு தத்துவங்கள் இயங்குகிற தத்துவநிலயம் இது. இந்த உடம்புக்குள் உயிர் என்பது இருபத்து ஐந்தாவது தத்துவம். இந்த இருபத்தைந்துக்கும் மேற்பட்டது இருபத்தாறாவது தத்துவமான பரதத்துவம் அல்லது பரம்பொருள் இருக்கை. எல்லாம் உடம்போடு பட்ட நிலைகளே. உயிரானது இந்த இருபத்தாறாவது தத்துவத்தைச் சேர்வதே இந்தப் பாடல்களிலே பல குழூஉக் குறிகளும் சந்தேகங்களும் சொல்கிற பயிற்சி முறையாகும்.

மவ்வக் குடத்திலே பாம்ப டைப்போம்
மணிவட்ட வாசியை வாரி யுண்போம்
வவ்வக் குடங்களைத் தள்ளி விடுவோம்
வக்கிர சொப்பனந் தாண்டி விடுவோம்
பவ்வ வெளியிலே விட்டே வாட்டுவோம்
பஞ்ச கருவியைப் பலிகொ டுப்போம்
சிவ்வுரு வாகியே நின்றோ மென்றே
சீர்பாதங் கண்டுதெளிந் தாடாய் பாம்பே. 129

---

129. இந்தப் பாடலும் குழூஉக் குறியாலாகிய ஞானதீக்கை என்கிற பாடமாகும். இதன் முழுப்பொருளையும் மனத்தில் வாங்குவதற்கு ஞானிகள் இருபத்தொரு பாடங்கள் வகுத்துள்ளார்கள்.

நயனதீக்கை என்ற பார்வைக் கல்வியிலிருந்து சமாதி தீக்கை என்னும் ஒடுக்கக் கல்விவரை பயிற்சிகள் உள்ளன. இந்தப் பாடல் இருபத்தொன்றாவது பாடத்தை நான்கு அடிகளிலே நவில்கிறது.

இவற்றில் தொட்டுக் காட்டவேண்டிய அக்கரநிலைகள் நம் உடம்பில் எங்குள்ளன என்பது புரிந்துகொண்ட பின்பே மற்ற நிலைகள் கண்ணுக்குத் தெரியும். சொல்லின் பொருளன்று இது. மெய்யிலே தொட்டுக்காட்டவேண்டிய இரகசிய இடங்கள் இவை. இவற்றைத் தொட்டுக் காட்டுபவனே ஞானகுருவாம்.

(பாம்பாட்டிச் சித்தர் பாடல் முற்றிற்று)

# பத்திரகிரியார்

பத்திரகிரிராஜர் என்ற இவர் துறவியாவதற்கு முன்பு அரசாட்சி செய்தவர். பத்திரகிரியை அரசாண்டு வந்தபோது, பட்டினத்தடிகளின் சந்திப்பு இவருக்கு ஏற்பட்டதாகவும் ஒரு கதை.

பத்திரகிரி மாளிகையில் கொள்ளையடிப்பது என்று திட்டமிட்ட கள்வர்கள், அவ்வூர்க் காட்டுப் பிள்ளையார் கோவிலில் ஒரு நேர்த்திக்கடன் செய்து கொண்டார்கள். மாளிகையில் தங்கள் வேலை வெற்றியாக முடிந்தால் அந்தப் பிள்ளையாரப்பனுக்கு நகை சாத்துவதாக நேர்ந்தார்கள். அவ்வாறே திருடி மீளும்போது அவசரம் அவசரமாக ஒரு பெரிய முத்து மாலையை விநாயகர் கழுத்திலே வீசினார்கள். அப்போது அந்தச் சந்நிதியிலே ஒடுக்கம்கூடி மோனத் தவத்தில் இருந்த பட்டினத்தாரின் கழுத்திலே போய் அந்த மாலை விழுந்தது. பட்டினத்தடிகள் உணர்வு ஒடுங்கிய நிலையில் இருந்தவர், தவம் கலைந்து வெளியே வந்தார். அப்போது காவலர்கள் முத்துமாலையுடன் வெளியே வந்த அந்த ஆண்டியைத் திருடன் என்று பிடித்துப்போய் அரசனிடம் சேர்த்தார்கள். "திருடனைக் கழுவில் ஏற்றுங்கள்!" என்றான் மன்னன்!

கழுமரத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பட்டினத்தடிகள் தியான நிலையிலே அந்தக் கழுமரத்தை ஒரு பார்வை பார்த்தார். மரம் பற்றி எரியத் தொடங்கிற்று.

அச்சம் அடைந்து பதறிய மன்னன் அடிகளின் திருவடிகளில் வீழ்ந்து மன்னிக்கும்படி கோரினான்.

பட்டினத்தடிகள் பத்திரகிரி மன்னனுக்கு ஞானம் வழங்கினார். அரசன் அன்றிலிருந்து துறவு பூண்டு அடிகளார் சீடனானான். பிறகு இவருடைய வாழ்வும் பட்டினத்தடிகளின் வாழ்வும் பின்னிப் பிணைந்து காணப்பெறுகின்றன. அடிகளுக்குத் தாம் கொணரும் பிச்சையை வழங்கி மீதியைத் தாம் உண்டு மேலைக் கோபுர வாசலில் இவர் இருந்து வந்ததும், பிறகு ஒரு நாய் வரவே அதற்குத் தமது சேடத்தை வழங்கியதால் அந்த நாய் இவரை நீங்காமல்

உடனுறைந்ததும், இதனால் இவருக்குச் 'சம்சாரி' என்ற அடிகளார் பெயர் வந்ததும், அதை அறிந்து இவர் நாயின் தலையில் தமது பிச்சைச் சட்டியை விட்டெறிந்ததும், நாய் மடிந்து துறவியின் எச்சினை உண்ட புண்ணியத்தால் காசி ராஜனுக்கு மகளாய்ப் பிறந்ததும் பிற நிகழ்ச்சிகளும் செவிவழிக் கதைகள்.

அரசகுமாரி வளர்ந்து மணப்பருவம் அடைந்தபோது தந்தையிடம் திருமணம் வேண்டாம் என்று மறுத்து "என்னை என் குருநாதராகிய பத்திரிகிரியாரிடம் கொண்டு செல்லுங்கள்" என்று கண்டிப்பாகச் சொன்னதும், அரசகுமாரி தம்மிடம் வேந்து சேர்ந்ததும் இருவரும் நேரே பட்டினத்தடிகளிடம் சென்றதும் அவருடைய குருவருளால் இருவரும் முத்தி பெற்றதும் அக்கதையின் பிற நிகழ்ச்சிகள்.

இவற்றின் வரலாற்று மெய்ம்மை ஒருபுறம் இருக்கட்டும். பத்திரகிரியாரின் அரிய பாடல்கள் கையில் உள்ளன. அவை ஞானக் கருவூலம். மனித குலத்தின் சார்பில் பத்திரகிரியார் தாமே புலம்புவதாக உதித்து வந்துள்ள அரிய பாடல்கள் இவை!

# பத்திரகிரியார் அருளிச் செய்த
## மெய்ஞ்ஞானப் புலம்பல்

### கண்ணிகள்

முத்திதரும் வேத மொழியாம் புலம்பல்சொல்ல
அத்திமுக வன்றன் அருள்பெறுவ தெக்காலம். 1

ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம். 2

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம். 3

தேங்காக் கருணைவெள்ளந் தேக்கியிருந் துண்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம். 4

---

1. எக்காலம் என்று முடிகிற அடிகளால் அமைந்ததால் காப்புச் செய்யுளுமே அவ்வாறு முடிகிறது.

வேத மொழியான புலம்பல் என்ற முறையில் திருமறை ஞானமும் புலம்பலுமாக இப்பாடல்கள் நடக்கின்றன.

முத்தி தரக்கூடிய ஞானக் கருத்துக்களைச் சொல்வதற்கு அத்திமுகனாகிய ஆனைமுகக் கடவுளின் அருள் பெறுவோமாக!

2. ஆங்காரம் - அ;கங்காரம். சுட்டறுத்து - சுட்டுப் பொசுக்கி. தூங்காமல் தூங்குதல் - இமைகளை மூடினாலும் விழிப்புடன் நிற்றல். அந்த இன்பமே ஞானசுகம் என்பது.

3. சிவயோக நித்திரை - சிவத்தோடு ஒடுங்கிய நிலை. தேங்காக் கருணைவெள்ளம் - பொங்கிப் பெருகி வருகிற கடவுட் கருணைவெள்ளம்.

4. தேக்கியிருந்துண்பதற்கு - உள்ளத்தே பெருகி நிற்கச் செய்து பருகுவதற்கு. வாங்காமல் விட்ட குறை - முழுதும் துய்க்காமல் அடுத்த பிறவிக்கு என்று மிச்சம் கட்டிய புண்ணியம். வந்தடுத்தல் - வந்து சேருதல்.

எக்காலம் என்ற சொல்லுக்குச் சொற்பொருளாக என்றைக்கு என்று கொள்ளாமல், கிடைக்குமா, பெறுவேனோ, அடைவேனோ என்று பொருள் கொள்ளவேண்டும். தொக்கிநிற்கும் பொருள் கிடைப்பதற்கும் பெறுவதற்கும் கோருகிறேன் அல்லது முனைகிறேன் என்பதே.

ஓயாக் கவலையினா லுள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்கலாம். 5

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயா, புரிக்கோட்டை கைக்கொள்வ தெக்காலம். 6

காயா, புரிக்கோட்டை கைவசமாக் கொள்வதற்கு
மாயா அனுபூதி வந்தடுப்ப தெக்காலம். 7

சேயாய்ச் சமைந்து செவிடூமை போற்றிரிந்து
பேய்போ லிருந்துன் பிரமைகொள்வ தெக்காலம். 8

பேய்பொற் றிரிந்து பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய்போ னினைத்துத் தவமுடிப்ப தெக்காலம். 9

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங்காட்டி
மால்காட்டு மங்கயரை மறந்திருப்ப தெக்காலம். 10

---

5. உள்ளுடைந்து - மனம் முறிந்துபோய். மாயாப் பிறவி மயக்கு - மாயமான பிறவி மயக்கம்.

6. ஊடறுத்து - வெட்டிப் பிளந்து. காயாபுரிக் கோட்டை - உடம்பாகிய அக உலகப் பட்டணத்தின் கோட்டையை.

7. சேயாய் - குழந்தையைப் போல், சமைந்து - பக்குவப்பட்டு. செவிடூமை போல் திரிந்து - எதையும் காதிலே போட்டுக் கொள்ளாமல் வாய்மூடி மௌனியாகத் திரிந்து. பேய்போல் இருத்தல் - உடம்பு இருப்பது போலவே எண்ணி இயங்காமல், உடலற்ற பேய்போல இயங்குதல்.

9. பிணம்போற் கிடந்து - உடலின் தசைவளர்ச்சி அறவே இல்லாமற் கிடந்து. பண்ணை நாய்போல் - பாதுகாவலுக்கு என்று பண்ணைகளிலே வைக்கப்பட்டுள்ள நாயைப்போல், பேணுதல் காத்தலுமான எச்சரிக்கையோடு.

10. மால்காட்டும் மங்கையர் - மோக மூட்டி மயக்குகிற பெண்கள். உடலுறுப்பு அழகுகளைக் காட்டி மயக்குகிற சுந்தரிகள்.

பெண்ணினல்லா ராசைப் பிரமையினை விட்டொழிந்து
கண்ணிரண்டு மூடிக் கலந்திருப்ப தெக்காலம். 11

வெட்டுண்ட புண்போல் விரிந்தவல்குற் பைதனிலே
தட்டுண்டு நிற்கை தவிர்வதுவு மெக்காலம். 12

ஆறாத புண்ணி லழுந்திக் கிடவாமல்
தேறாத சிந்தைதனைத் தேற்றுவதும் எக்காலம். 13

தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய்யெனவே
சிந்தைதனிற் கண்டு திருக்கறுப்ப தெக்காலம். 14

மன்னுயிரைக் கொன்று வதைத்துண் டுழலாமல்
தன்னுயர்போ லெண்ணித் தவமுடிப்ப தெக்காலம். 15

பாவமென்ற பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்
ஆவியென்ற சூத்திரத்தை அறிவதினி எக்காலம். 16

---

**11.** பெண்ணின் நல்லார் - அழகிகள்.
பிரமை - மயக்கு. கலந்திருத்தல் - ஒடுங்கி யோகத்திருத்தல்.

**12.** அல்குலின் வடிவத்தை விரிந்து பிளந்த புண் என்கிறார்.
தட்டுண்டு - தடுமாறி.

**13.** ஆறாத புண் - முன்பாடலில் குறிப்பிட்டது.
தேறாத - தெளிவுபடாத.

**14.** பொய் - நிலையற்றது. திருக்கு - மயக்கம்.

**15.** பிற உயிர்களைத் தன் உயிர்போல் நேசிக்கும் சீவதயை என்கிற இரக்கமும் பரிவும் தவம் முடிப்பவருக்குரிய அடிப்படையான மன நெகிழ்வாம்.

**16.** தீய வழிகளிலே செல்வதால் என்ன நேர்கிறது? செய்கிற செயலைப் பாவம் என்று பலரும் பழிக்கிறார்கள், உயிர் வாழும்போது?
மரணம் வந்த பின்போ நரக வீழ்ச்சி.
ஆவி என்ற சூத்திரத்தை அறிவது - ஆன்மஞானம் பெறுவது.

உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவ தெக்காலம். 17

வேடிக்கையுஞ் சொகுசும் மெய்ப்பகட்டும் பொய்ப்பகட்டும்
வாடிக்கை யெல்லாம் மறந்திருப்ப தெக்காலம். 18

பட்டுடையும் பொற்பணியும் பாவனையுந் தீவினையும்
விட்டுவிட்டுன் பாதம் விரும்புவது மெக்காலம். 19

ஆமை வருமாட்கண் டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை, யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம். 20

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையும் மாளிகையுங்
கண்டு களிக்குங் கருத்தொழிவ தெக்காலம். 21

அத்தன் இருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்துநிதஞ்
செத்த சவம்போற் றிரிவதினி எக்காலம். 22

ஒழிந்த கருத்தினைவைத் துள்ளெலும்பு வெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி எக்காலம். 23

---

17. உளியிட்ட கல் - சிலை. உருப்பிடித்த செஞ்சாந்து - சுதை வடிவங்கள். புளியிட்ட செம்பு - விளக்கிப் பளபளக்க வைக்கிற செப்புப் படிமம்.

16. வேடிக்கை - பரிகாசப் பேச்சு, சல்லாபம்.
சொகுசு - புறவசதிகள். மெய்ப்பகட்டு - மேனி மினுக்கு.
பொய்ப்பகட்டு - சாயம் மறைவதும் போவதுமான மேற்பூச்சு.
வாடிக்கை - பதிவான உறவு.

19. பொற்பணி - தங்க நகைகள். பாவனை - நடிப்பு. மாதர்களுடைய கவர்ச்சி உத்திகள்.

20. ஆள் வருவது பார்த்து ஆமையானது தனது அங்கங்களை உள்ளே இழுத்து ஓட்டுக்குள் அடங்குகிறது. அவ்வாறு மோன உருவில் ஒடுங்குவதே யோகநிலை.

21. தண்டிகை - பல்லக்கு, சிவிகை. சாவடி - தங்குமிடம். சாளிகை - பணப்பை.

22. செத்த சவம்போல் திரிவது - எதிலும் பார்வையோ கேள்வியோ இல்லாமல் உடலுணர்ச்சி யற்று வளையவருவது.

23. கருத்திற் பற்றுத் துறந்து வெறும் எலும்புக்கூடு மூடிய, இரத்த ஓட்டம் இல்லாத பிணமாகத் திரிதல் என்பது உலக ஆசைகளில் பற்றின்றி இயங்குதல்.

அற்ப சுகமறிந்தே அறிவையறி வாலறிந்து
கெர்ப்பத்தில் வீழ்ந்துகொண்ட கோளறுப்ப தெக்காலம். 24

கருப்படுத்தி என்னையமன் கைப்பிடித்துக் கொள்ளாமுன்
உருப்படுத்தி யான் உடன்படுவ தெக்காலம். 25

தூண்டு விளக்கணையத் தொடர்ந்திருள்முன் சூழ்ந்தாற்போல்
மாண்டு பிழைத்துவந்த வகைதெரிவ தெக்காலம். 26

தூரியினில் மீன்போற் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி அடிபணிவ தெக்காலம். 27

எண்ணூா றகமிருந்தும் எய்தாத வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவது மெக்காலம். 28

அவவேடம் பூண்டிங் கலைந்து திரியாமற்
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம். 29

---

24. சுகம் அற்பமானது என்று அறிவுகொண்டு, அறிவை அறிவால் அறிகிற பேரறிவு நிலை பெற்று, கருவில் மீண்டும் மீண்டும் வீழ்கிற இடர்பாட்டை அறுத்தெறிய வேண்டும்.

25. கருப்படுத்தி - கருவழியில் சிக்க வைத்து.
உருப்படுத்தி ஆள - மேன்மையடைந்து மேலோங்க.

26. தூண்டித் தூண்டி எரிவது விளக்கு. அது அணையும்போது இருள் சூழ்கிறது. பிறப்பும் இறப்புமாகிய சுழல் இதுவே.

27. தூரி - வலை. சுழன்று - அகப்பட்டுச் சுழன்று. ஆரியன் - இங்கே ஞானகுரு.

28. வெண்ணீறு பூசி விளங்குதல் துறவு நிலைகொள்ளலுக்குரிய சின்னம். இங்கே அந்தச் சின்னம் கூறி அந்த நிலையைக் குறிப்பிடுகிறார்.

29. அவவேடம் - பொய்வேடம், குற்றமுடைய மனிதர்களின் ஏமாற்றுத் தோற்றம். சிவவேடம் - முந்திய பாடலில் சொன்ன தவக்கோலம்.

அண்டருக்கா நஞ்சருந்தி அம்பலத்தி லாடுசிவன்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வ
தெக்காலம். 30

பன்றி வடிவெடுத்துப் பாரிடந்து மால்காணாக்
குன்றில் விளக்கொளியைக் கூறுவது மெக்காலம். 31

தித்திக்குந் தெள்ளமிர்தைச் சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம். 32

வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்தே நிட்டையிலே
ஏகாந்தமாக இருப்பதினி எக்காலம். 33

மற்றிடத்தைத் தேடியென்றன் வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி யுறங்குவது மெக்காலம். 34

இன்றுளோர் நாளை இருப்பதும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவ தெக்காலம். 35

கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமற்
பஞ்சாமிர் தத்தைப் பருகுவது மெக்காலம். 36

---

30. அண்டர் - வானவர்.

31. பார்இடத்து - பூமியைக் குடைந்து சென்று. குன்றில் விளக்கொளி - முகட்டொளியாகத் தோன்றுகிற பரஞ்சோதி.

32. முத்திக்கு வித்து - முத்தி தருவது. முதனினைப்பது - முதலாக நினைத்து முனைப்போடு விளங்குவது. யோக நிலையிலே தியானிப்பது எனினும் ஆம்.

33. சாத்திரக் கல்விகளை விட்டு ஏகாந்த நிட்டை கூடுவது எப்போது?

34. மாற்றிடம் - வேறு இடங்கள். உற்றிடம் - உறுவதற்கு உற்ற இடம்.

35. மன்றுளோர் - பொது சபையார்கள், அறிஞர்கள், சான்றோர்.

36. பஞ்சாமிர்தம் - பஞ்சாமிருதம் போன்று இனிக்கின்ற நல்லுணவு. இங்கே ஞான அமுது.

செஞ்சலத்தி னாற்றிரண்ட செனனமோட் சம்பெறவே
சஞ்சலத்தை விட்டுன் சரணடைவ தெக்காலம். 37

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பா ரிடந்தோறும்
வெம்பித் திரிகை விடுப்பதினி எக்காலம். 38

ஆடுகின்ற சூத்திரந்தான் அறுமளவுமே திரிந்து
போடுகின்ற நாள்வருமுன் போற்றுவது மெக்காலம். 39

நவசூத்தி ரவீட்டை நானெற் றலையாமல்
சிவசூத் திரத் ததைத் தெரிந்தறிவ தெக்காலம். 40

மறந்து மலசலங்கள் மாயும்புழுக் கூட்டைவிட்டுக்
கரந்துள அடியிணைக்கீழ்க் கலந்துநிற்ப தெக்காலம். 41

இம்மைதனிற் பாதகனாய் இருவினைக்கீ டாயெடுத்த
பொம்மைதனைப் போட்டுன்னைப் போற்றிநிற்ப
தெக்காலம். 42

---

37. செஞ்சலம் - சுரோணிதம்; உதிரம். இந்த செனனம் வந்தது அவ்வாறு. இந்த செனனத்துக்கு மோட்சம் பெறச் செய்ய வேண்டியது, சஞ்சலம் விட்டுப் பரனைச் சரணடைவதே.

38. கும்பி - வயிறு. வெம்பித் திரிகை - அலமந்து திரிதல்.

39. இந்த உடம்பு உயிராகிய சூத்திரக் கயிற்றில் ஆடுகிறது. அந்தக் கயிறு அறுவதே மரணம் போடுகின்ற நாள் - உடம்பு வீழ்கின்ற நாள்.

40. நவசூத்திர வீடு - ஒன்பது வாயில் கொண்ட உடம்பு. சிவ சூத்திரம் - ஞானச் சரடு.

41. மலசலம் கழிப்பதும் மறந்துபோகிற நிலை, உயிர் பிரியும் நோய் நிலை. புழுக்கூடு - புழு நெளிகிற கூடாகிய உடம்பு. கரந்து - தப்பி.

42. இம்மை - இப்பிறப்பு. பாதகன் - பாவி. இருவினைக்கு ஈடாய் எடுத்த பொம்மை - முன்வினைக்குத் தக்கவாறு உடம்பெடுத்த பாவையாகிய உடம்பு. "வினைக்கீடாய் மெய்கொண்டு" என்பது திருமந்திரம்.

உப்பிட்ட பாண்டம் உடைந்துகருக் கொள்ளுமுன்னே
அப்பிட்ட வேணியனுச் காட்படுவ தெக்காலம். 43

சேவைபுரிந்து சிவரூபக் காட்சிகண்டு
பாவைதனைக் கழித்துப் பயனடைவ தெக்காலம். 44

காண்டத்தை வாங்கிக் கருமேகம் மீண்டதுபோல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவ தெக்காலம். 45

சோற்றுத் துருத்திதனைச் சுமந்தலைந்து வாடாமல்
ஊற்றைச் சடம்போட் டுனையடைவ தெக்காலம். 46

தொடக்கைச் சதமெனவே சுமந்தலைந்து வாடாமல்
உடக்கைக் கழதறி உனையறிவ தெக்காலம். 47

ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணி தீபத்தி லொன்றி நிற்ப தெக்காலம். 48

கூறரிய நால்வேதங் கூப்பிட்டுக் காணாத
பார ரகசியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம். 49

---

43. உப்பிட்ட பாண்டம் - சுவைக் கருவியாகிய இந்த உடம்பாகிய பானை. இந்த உடம்பு உடைந்தால் மீண்டும் உயிர் இன்னொரு கரு எடுக்கிறது. அப்பிட்ட வேணியன் - கங்கை சூடிய சடைமுடிக் கடவுளான சிவன்.

44. சேவை - கடவுள் தொண்டு.
பாவைதனைக் கழித்து - உடம்பைத் தெய்வ உழைப்புக் குள்ளாக்கி.

45. காண்டம் - நீர், இங்கே கடல்நீர். நீரை வாங்கி நீரை இறைப்பது மேகம். அவ்வாறு பாண்டத்திலிருந்து பிரித்துப் பரவெளியிலே நீராவி கலப்பதுபோல் கலத்தல்.

46. ஊற்றைச் சடம் - ஊத்தை உடம்பு.

47. தொடக்கை - பந்தத்தை. சதம் - நிலையானது. உடக்கை - உடம்பினை.

48. ஓசை - ஞானிகள் தங்கள் அகத்துள்ளே கேட்கும் ஒலி. மணிவிளக்கு - ஞானிகள் அகத்துள்ளே காண்கிற சுடர்.

49. பார ரகசியம் - மாபெரும் ரகசியம்.

புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவாய்
எல்லாப் பிறப்பி னிருளகல்வ தெக்காலம். 50

தக்கும்வகைக் கோர்பொருளும் சாராம லேநினைவில்
பக்குவந்வந் துன்னுருவைப் பார்த்திருப்ப தெக்காலம். 51

பருவத் தலைவரொடும் புக்கியின்பங் கொள்வதற்குத்
தெரிவைப் பருவம்வந்து சிக்குவது மெக்காலம். 52

தெரிவையுறும் பக்குவத்தின் சீராட்டெல் லாமறிந்து
குருவையறிந் தேநினைத்துக் கும்பிடுவ தெக்காலம். 53

வம்படிக்கும் மாதருடன் வாழ்ந்தாலும் மன்னுபுளி
யம்பழமும் ஓடும்போல் ஆவதினி எக்காலம். 54

பற்றற்று நீரிற் படர்தா மரையிலைபோல்
சுற்றத்தை நீங்கிமனந் தூரநிற்ப தெக்காலம். 55

---

50. புல்லாகத் தொடங்கி நரவடிவான மனிதப்பிறவி வரை எல்லாப் பிறப்பும் பிறந்தாகி விட்டது! பிறப்பாகிய இருள் எப்போது அகல்வது!

51. தக்குவகை - சிக்கி நின்றுவிடும் விதத்தில்.
பக்குவம் - பரிபக்குவம்.

52. பருவத் தலைவர் - ஞானமுதிர்ச்சியிலே கூடுகிற நாயகராகிய எம் இறை. புக்கு - கலந்து. தெரிவைப் பருவம் - தெளிந்த நிலை.

53. தெளிவரிய துய்க்கிய இன்பத்தின் - உயர்வெல்லாம் அறிந்து குருவைக் கொள்ளும் வழியே மெய்ஞ்ஞான வழி.

54. உலக வாழ்வில் இருந்தாலும், ஒட்டாது புளிந்தோடு போல் இணைப்பின்றி வாழ்வதே சான்றோர் அறிவுரை.

55. உறவினர்களோடு தொடர்பு நீரில் மிதக்கும் தாமரை இலைபோல் இருக்க வேண்டும். நீர்பற்று அதில் ஏறாமல் நீரிலேயே நிற்கிறதல்லவா அது?

சல்லாப லீலையிலே தன்மனைவி செய்தசுகம்
சொல்லாரக் கண்டெனக்குச் சொல்வதினி எக்காலம். 56

மருவும் அயற்புருடன் வருநேரங் காணாமல்
உருகுமன் போலெனுளம் உருகுவது மெக்காலம். 57

தன்கணவன் தன்சுகத்திற் றன்மனம்வே றானதுபோல்
என்கருத்தி லுன்பதத்தை ஏற்றுவது மெக்காலம். 58

கூடிப் பிரிந்துவிட்ட கொம்பனையைக் காணாமல்
தேடித் தவிப்பவன்போல் சிந்தைவைப்ப தெக்காலம். 59

எவ்வனத்தின் மோகம் எப்படியுண் டப்படிபோல்
கல்வனத் தியானம் கருத்துவைப்ப தெக்காலம். 60

கண்ணி லருவி கசிந்துமுத்துப் போலுதிர
எண்ணாம் பரம்பொருளை எண்ணுவது மெக்காலம். 61

ஆகம் மிகவுருக அன்புருக என்புருகப்
போக வநுபூதி பொருந்துவது மெக்காலம். 61

---

56-59. இந்த நான்கு பாடல்களிலும் பொருள் வெளிப்படை. பிறன்மனை நாடிச் சுகித்தலும், பிற புருடனைச் சேர்ந்து சுகித்தலும் சொல்லி, உலக இச்சையிலிருந்து விடுபட்டுத், தெய்வ இச்சை சார்வது பேசப்படுகிறது. மணாளனோடு ஆடிய சுகத்தையே திருமூலர் பேரின்பத்துக்கு ஒப்பிடுவதை இங்கே நினைவு கூறலாம்.

60. எவ்வனம் - யௌவனவனமாகிய இளமை.
அவ்வனத் தியானம் - ஆதார நிலைகளைப் பற்றிச் செய்கிற அகப்பயண யோகம்.

61. எண்ணாம் பரம்பொருளை - குறிக்கோளான பரசிவத்தை.

62. ஆகம் - யாக்கை. என்புருக - எலும்புமே உருகிட. போக அநுபூதி - பரம்பொருளோடு கூடிக் கலவிசெய்கிற பேரின்ப அனுபவம்.

நீரிற் குமிழிபோல் நிலையற்ற வாழ்வைவிட்டுன்
பேரின்பக் கருணைவெள்ளம் பெருக்கெடுப்ப தெக்காலம். 63

அன்பை யுருக்கி அறிவையதன் மேற்புகட்டித்
துன்பவலைப் பாசத் தொடக்கறுப்ப தெக்காலம். 64

கருவின் வழியழிந்து கருத்தைச் செலுத்தாமல்
அருவி விழிசொரிய அன்புவைப்ப தெக்காலம். 65

தெளியத் தெளியத் தெளிந்தசிவா னந்தத்தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம். 66

ஆதார மூலத் தடியிற் கணபதியைப்
பாதார விந்தம் பணிந்துநிற்ப தெக்காலம். 67

மண்வளைந்த நற்கீற்றில் வளைந்திருந்த வேதாவைக்
கணவளர்த்துப் பார்த்துள்ளே கண்டிருப்ப தெக்காலம். 68

---

63. உனது பேரின்பக் கருணைவெள்ளம் என்றது யோக நெறி கூடுவதற்கும், கூடும்போதும், கூடிநின்ற நிலையிலும் என்பதாகும்.

64. துன்ப வலைப் பாசம் - சிக்கல்கள் நிறைந்த பாச வலையினால் வருகிற துன்பம் பெரிது.

65. கருவின் வழி - சிற்றின்பம்.

66. மனம் பூண்டிருத்தல் - மனம் கொள்கலம் போல ஏந்தி நிற்றல்.

67. ஆதார மூலத்தடியிற் கணபதி என்பதையே மூலாதார கணபதி என்றும் சொல்லலாம்.

68. கீற்றை வளைத்தலும், மண்ணை வனைதலுமான படைப்பிலே நாடியும் தசையும் பொருந்த இந்த உடம்பைச் செய்தான் அயனாகிய வேதா, கண்வளர்த்து - இமைகளை மூடித் தூங்குதல்.

அப்புப் பிறைநடுவே அமர்ந்திருந்த விட்டுணுவை
உப்புக் குடுக்கையுள்ளே உணர்ந்தறிவ தெக்காலம். 69

மூன்று வளையமிட்டு முளைத்தெழுந்த கோணத்தில்
தோன்றும் உருத்திரங்களைத் தொழுதுநிற்ப தெக்காலம். 70

வாயுவறு கோணத்தில் வாழும் மகேச்சுரனைத்
தோயும்வகை கேட்கத் தொடங்குவது மெக்காலம். 71

வட்டவழிக் குள்ளே மருவுஞ் சதாசிவத்தைக்
கிட்டவழி தேடக் கிருபைசெய்வ தெக்காலம். 72

உச்சிக் கிடைநடுவே ஓங்குங் குருபதத்தை
நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வதினி எக்காலம். 73

பாராகிப் பார்மீதிற் பஞ்சவன்னந் தானாகி
வேராகி நீமுளைத்த வித்தறிவ தெக்காலம். 74

கட்டறுக்க வொண்ணாக் கருவிகர ணாதியெல்லாஞ்
சுட்டறுத்த நிட்டையிலே தூங்குவது மெக்காலம். 75

---

69. திருமால் அமர்ந்திருப்பது இந்த உடம்பில் சந்திர உலையல் நீர் பெருகும் தலத்திலே. ஒளிப்பயிற்சியின் முதலாவது தீட்சை என்கிற பாடம், இந்த இடத்தைக் குருநாதன் தொட்டுக் காட்டுவதேயாம்.

என் குருநாதர் கண்ணப்ப சுவாமிகள் திருமால் உறைகின்ற இந்த இரகசிய இடத்தை உடம்பிலே தொட்டுக்காட்டும் போது இந்தப் பாடலை அல்லாமல், சிவவாக்கியர் பாடலையும் சொல்லியே நுட்பத்தைத் தொட்டுக் காட்டுவதுண்டு.

70. சூரிய சந்திர அக்கினி மண்டலங்களில் வளையம் காண்பதும் சிவதரிசனம் இரண்டாவது தீட்சையாகும்.

71. இந்தப் பாடல் குறிப்பது மூன்றாவது பாடமாகிய மூச்சுப் பயிற்சி. இது வெறும் இரேசக பூரக கும்பகப் பயிற்சியில்லை. அதற்குள் ஆதாரநிலையின் தொடர்பும் பிணைந்திருக்கிறது.

72-75. இதுவும் தீட்சை முறையே. ஆசான் நேர்முகமாகச் செய்துகாட்டி மெய்ப்பிக்கிற பாடங்கள். 72, 73, 74, 75 ஆகிய கண்ணிகளில் இவை பேசப்படுகின்றன. இதோ பாருங்கள் என்று கையை வைத்து அழுத்திக் காட்டுகிற அனுபவங்களை உரையில் சொல்வது இயலாது!

கள்ளக் கருத்தையெல்லாங் கட்டோடு வேரறுத்திங்
குள்ளக் கருத்தை யுணர்ந்திருப்ப தெக்காலம். 76

அட்டகா சஞ்செலுத்தும் அவத்தைச்சட லத்துடனே
பட்டபா டத்தனையும் பகுத்தறிவ தெக்காலம். 77

அறிவுக் கருவியுட னவத்தைபடும் பாட்டையெலாம்
பிறிவுபட நிறுத்திப் பெலப்படுவ தெக்காலம். 78

பூதம் பொறிகரணம் போந்தவிந்து நாதமுமாய்ப்
பேதம் பலவிதமும் பிரித்தறிவ தெக்காலம். 79

தோன்றாசை மூன்றுந் தொடர்ந்துவந்து சுற்றாமல்
ஊன்றாசை வேரையடி யூடறுப்ப தெக்காலம். 80

புன்சனனம் போற்றுமுன்னே புரியட்டம் போகினினி
என்சனன மீடேறு மென்றறிவ தெக்காலம். 81

---

76. ஏமாற்றுகிற உலக வாழ்வோடு இணைந்த முறைகளை விட்டு ஞான முறை தேர்வது எப்போது?

77. அட்டகாசம் - ஒரே வெறியாட்டம். அவத்தை - உடல் துன்பங்கள் தவிர, அவத்தைகள் என்று ஞானிகள் வகுத்துள்ள சாக்கிரம். சொப்பனம் முதலியனவும் ஆம்.

78. அறிவுக் கருவி - ஞான சாதனமன்றி, மனம் பற்றுகிற நிலை. பிறிவுபடுதல் - வேறாக்குதல். இது ஐந்து ஆறாவது முதலான ஞானபாடங்கள்.

79. இதுவும் அது.

80. தோன்றாசை மூன்று - மண், பெண், பொருள் ஆசைகள். ஆசையின் வேரை அடியிலேயே அறுப்பது முதலாவது பாடத்திலே கற்பிக்கப்படுகிற ஞானக்கல்வி.

81. புன்சனனம் - ஈனப்பிறப்பு.
புரியட்டம் - புரியட்ட காயம் என்று அழைக்கப்படுகிற சூக்குமமாகிய நுண்ணுடல்.

நட்ட நடுவினின்று நற்றிரோ தாயியருள்
கிட்ட வழிகாட்டிக் கிருபைசெய்வ தெக்காலம். 82

நானேநா னென்றிருந்தேன் நடுவினின்ற கட்டழகி
தானே வெளிப்படுத்தித் தருவளென்ப தெக்காலம். 83

அடர்ந்த மனக்காட்டை அஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்துதொடர்ந்து வெட்டிச் சுடுவதினி எக்காலம். 84

ஐந்து பொறிவழிபோய் அலையுமிந்தப் பாழ்மனத்தை
வெந்து விழப்பார்த்து விழிப்பதினி எக்காலம். 85

இனமாண்டு சேர்ந்திருந்தோ ரெல்லாருந் தாமாண்டு
சினமாண்டு போகவருள் சேர்ந்திருப்ப தெக்காலம். 86

அமையா மனமமையும் ஆனந்த வீடு கண்டங்
கிமையாமல் நோக்கி யிருப்பதினி எக்காலம். 87

கூண்டுவிடுஞ் சீவன்மெள்ளக் கொட்டாவி கொண்டாற்போல்
மாண்டுவிடு மூன்னேநான் மாண்டிருப்ப தெக்காலம். 88

---

82. நடுநாடியில் ஒடுங்கி திரோதாயிக்கு உட்பட்டு அருள் காண்பது எப்போது? திரோதாயி என்பது ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களையும் இயக்கிப் பின்னர்ச் சீர்செய்து அருள்கிற சிவசக்தி என்னும் பேராற்றல்.

83. ஆணவ முனைப்பினால் இந்த உடம்பை இயக்கும் நாயகனும் நானே என்று நினைந்தேன். நடுநாடியிலிருந்து புறப்பட்டு வருகிற சக்தியானவள் வெளிவரும்படி செய்வதே பயிற்சிமுறை.

84. அஞ்செழுத்து - சூக்கும பஞ்சாக்கரம் என்ற இயக்கம்.

85. வெந்து விழப்பார்த்தல் - அகக்கண் பார்வைப் பயிற்சி.

86. இனத்தை ஆண்ட தத்துவங்கள் ஒழிந்து சினமும் ஒழிவது எப்போது?

87. அமைதல் - அமர்தல், அமைதி பெறல்.

88. நான் மாண்டிருத்தல் என்பது நான் என்ற அகங்காரமும் பிற மலங்களும் நீங்கியிருத்தல்.

ஊனிறைந்த காயமுயிரிழந்து போகுமுன்னம்
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம். 89

கெட்டு விடுமாந்தர் கெர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடு முன்னென்னைச் சுட்டிருப்ப தெக்காலம். 90

தோலேணி வைத்தேறித் தூரநடந் தெய்க்காமல்
நூலேணி வைத்தேறி நோக்குவது மெக்காலம். 91

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு கண்மூடித் தழுவிநிற்ப தெக்காலம். 92

காசினியெ லாநடந்து காலோய்ந்து போகாமல்
வாசி தனிலேறி வருவதினி யெக்காலம். 93

ஒலிபடரும் குண்டலியை உன்னியுணர் வாலெழுப்பிச்
சுழுமுனையின் தாள்திறந்து தூண்டுவது மெக்காலம். 94

---

89. ஊன் - மாமிசம். இந்த உடம்பு போவதற்கு முன்பே மலங்கள் நீங்கிவிட வேண்டும்.

90. கெர்விதங்கள் பேசி - முனைப்பான பேச்சுக்கள் சொல்லி.

91. தோலேணி - பக்கரை ஏணி.
நூலேணி - கற்றாழையாகிய ஏணி, வாசிப்பயிற்சி.

92. வாயோடு கண்மூடி மயக்கமுறல் - சிற்றின்ப நிலை. தாயோடு கண்மூடித் தழுவல் - யோக ஆலிங்கனப் பயிற்சி.
தாய் - இடப்பக்கமான சந்திரப் பயிற்சி.

93. காசினி - உலகம். வாசி - சுவாசப் பயிற்சி.

94. நாதங்கள் ஒலிக்கிற குண்டலி ஆற்றலை எழுப்பாது மூலக்கனற் பயிற்சி.
சுழுமுனையின் தாள் - இமைநடு என்னும் முக்கியமான ஆதாரநிலை.

இடையில் கலைநடுவே இயங்குஞ் சுழுமுனையில்
தடையறவே நின்று சலித்திருப்ப தெக்காலம். 95

மூல நெருப்பைவிட்டு மூட்டுநிலா மண்டபத்தில்
பாலை யிறக்கியுண்டு பசியொழிவ தெக்காலம். 96

ஆக வெளிக்குள்ளே அகங்காரப் புரவிசெல்ல
ஏக வெளியி லிருப்பதினி எக்காலம். 97

பஞ்சரித்துப் பேசும் பல்கலைக்கெட் டாப்பொருளில்
சஞ்சரித்து வாழ்ந்து தவம்பெறுவ தெக்காலம். 98

மலமுஞ் சலமுமற்ற மாயையற்று மானமற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம். 99

ஓடாம லோடி உலகைவலம் வந்துசுற்றித்
தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம். 100

அஞ்ஞானம் விட்டே அருண்ஞானத் தொல்லைதொட்டு
மெய்ஞ்ஞான வீடுபெற்று வெளிப்படுவ தெக்காலம். 101

---

95. நடைபெற நிற்றல் - மூச்சை அடக்குதல். சலித்திருப்பது - எல்லாம் விட்டு ஒடுங்கி நிற்றல்.

96. மூல நெருப்பை மூட்டுதலும் நிலாமண்டபத்திலே பால்கறந்து குடித்தலும் அகயோகப் பயிற்சிகள். பாலை இறக்கி உண்ணல் - பாலைக் கறந்து குடித்தல். பால் என்பது இங்கே 'மாங்காய்ப்பால்' என்று மறைமொழியிலே அழைக்கிற ஞானபானம்.

97. ஆகவெளி - உடம்புக்குள் உள்ள ஞானக்களம். புரவி - குதிரை, வாசி. ஏகவெளி - ஏகாந்தப் பெருவெளியாகிய சிதாகாசம்.

98. பஞ்சரித்துப் பேசும் - தொணதொணக்கும். சஞ்சரித்து - உலவி.

99. உடம்பின் உபாதைகள் நிற்கும் நிலையே ஒடுக்கம். அது மாயை மானம், அது நலம் குலம் எல்லாம் அற்றுப் போன பாழிடம்.

100. ஊர்திகள் மற்றும் பல சாதனங்கள் கொண்டு புறஉலகம் தனக்குள்ளே காணல் எப்போது?

101. வெளிப்படுவது - விடுதலை பெறுவது, வீடு பெறுவது.

வெல்லுமட்டும் பார்த்து வெகுளியெலாம் விட்டகன்று
செல்லுமட்டுஞ் சிந்தை செலுத்துவது மெக்காலம். 102

மேலாம் பதந்தேடி மெய்ப்பொருளை யுள்ளிருத்தி
நாலாம் பதந்தேடி நான்பெறுவ தெக்காலம். 103

எண்ணாத தூரமெல்லாம் எண்ணிவெண்ணிப் பாராமல்
கண்ணாடிக் குள்ளொளிபோற் கண்டறிவ தெக்காலம். 104

என்னை அறிந்துகொண்டே எங்கோமா னோடிருக்கும்
தன்மை யறிந்து சமைந்திருப்ப தெக்கலாம். 105

ஆறாதா ரங்கடந்த ஆனந்தப் பேரொளியைப்
பேறாகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம். 106

ஆணவ மாயத்தா வழித்துடலம் போகாமுன்
காணுதலா லின்பமுற்றுக் கண்டறிவ தெக்காலம். 107

---

102. வெகுளியெல்லாம் - காமம் வெகுளி மயக்கம்.

103. நாலாம்பதம் - சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யம் என்கிற இறையுலக பதவி, இறையருகு பதவி, இறையருப் பதவி, இறை ஒன்று பதவி எனும் நான்கு பதங்களில் பரமமூர்த்தி என்கிற சாயுஜ்யம்.

104. தொலைதூரப் பார்வையில்லை, அகப்பார்வை.

105. எங்கோமான் - எம்பெருமானாகிய இறைவன.

106. ஆறாதாரம் - மூலாதாரம் என்னும் குதத்தலம்.
சுவாதிட்டானம் என்னும் குய்யத்தலம்.
அநாகதம் என்னும் இதயத்தலம்.
மணிபூரகம் என்னும் நாபித்தலம்.
விசுத்தி என்னும் கழுத்தின் அடித்தலம்.
ஆக்ஞை என்னும் புருவநடு மையம்.

107. காணுதலால் - அகக்கண் பயிற்சி அறிந்து அதன் முதிர்வினால் ஒளிகண்டு சுகித்தல்.

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமதை
நிர்மலமாய்க் கண்டுவினை நீங்கிநிற்ப தெக்காலம் 108

முன்னை வினைகெடவே மூன்றுவகைக் காட்சியினால்
உன்னை வெளிப்படுத்தி உறுவதினி எக்காலம். 109

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணினொளி கண்டதுவும் வெளிப்படுவ தெக்காலம். 110

கனவுகண்டாற் போலெனக்குக் காட்டிமறைத் தேயிருக்க
நினைவைப் பரவெளியில் நிறுத்துவது மெக்காலம். 111

ஆரென்று கேட்டதுவும் அறிவுவந்து கண்டதுவும்
யாரென்று சொன்னதுவும் பகுத்தறிவ தெக்காலம். 112

நினைக்கும் நினைவுதொறும் நிறைந்தபரி பூரணத்தை
முனைக்குமேற் கண்டுகண்ணில் முளைத்தெழுப்புவ
தெக்காலம். 113

முப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாழும் பாழாய் அன்புசெய்வ தெக்காலம். 114

---

108. இந்தக் காயத்தோடு சேர்ந்த மும்மலப் பிறவியே இதன் தோற்றம்.

109. மூன்றுவகைக் காட்சி - மூலாதாரத்துக்கு மேலே அக்கினி மண்டலக் காட்சி, (2) உந்திக்கு மேலே சூரிய மண்டலக் காட்சி, (3) மேலான சந்திர மண்டலத்திலே அமிருத நிலைக் காட்சி.

எங்களுடைய குருமரபிலே இந்த மூன்றையும் ஒரே வாசலில் ஒரே காட்சியாகக் காண்பதை எங்கள் குருநாதர் கண்ணப்ப சுவாமிகள் முதலாவது தீட்சையிலேயே உணர்த்திக் காட்டுவதுண்டு.

110. இது நயனப் பயிற்சியின் பாற்பட்டது.

111. நினைவைப் பரவெளியில் நிறுத்துவது என்பதே ஞானப் பயிற்சியின் அடிப்படை.

112. விழைதல், காணுதல், சொல்லுதல் என்ற இந்தச் செயல்களைப் பகுத்தறிவதே அகஞானம்.

113. முனை - சுழுமுனை. இதுவும் பார்வை என்னும் நயனப்பயிற்சி.

114. மண்டலங்களைத் தாண்டிப் பரவெளி செல்லும்போது சூனியதத்துவம் கைகூடுகிறது.

சீரென் றெழுந்து தெளிந்துநின்ற வான்பொருளை
நீயென்று கண்டு நிலைபெறுவ தெக்காலம். 115

வவ்வெழுத்தும் மவ்வெழுத்தும் வாளாகுஞ் சிவ்வெழுத்தும்
யவ்வெழுத்தி னுள்ளே அடங்கிநிற்ப தெக்காலம். 116

எழுத்தெல்லாம் மாண்டிறந்தே ஏகமாய் நின்றதிலே
அழுத்தமாய்ச் சிந்தையைவைத் தன்புகொள்வ
தெக்காலம் 117

அருவாய் உருவாகி ஆதியந்த மாகிநின்ற
குருவாகி வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம் 118

நானென் றறிந்தவனை நானறியாக் காலமெல்லாந்
தானென்று நீயிருந்த தனையறிவ தெக்காலம். 119

என்மயமாய்க் கண்டதெல்லாம் எண்ணியெண்ணிப்
பார்த்தபின்பு
தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்துநிற்ப தெக்காலம். 120

---

115. ஞானச்சுடராக உள்ளிருந்து எழுந்து ஒளிவீசுகிற அந்தப் பரஞ்சோதியை ஒன்றுவதே ஒழுக்கமாகும்.

116-117. எழுத்து என்று குறிப்பது அட்சரங்களை அன்று. இந்த உடம்புக்குள்ளே உள்ள ஞானமையங்கள் அவை.

118. அவனே வந்து அவனையே உணர்த்துவதே பரஞானம்.

119. நீ இருப்பது என்னுள்ளேதான். நீ என்னையும் எனது அறியாமையையும் அறிவாய்! தனிமையில் நீ இருந்ததை நான் அறிவது எப்போது?

120. ஆணவம் ஒழிந்து அகங்கார மமகாரங்கள் ஒழிந்து இறைமையைச் சார்ந்து நிற்பது எப்போது? கருத்து ஒன்றே எனினும் பல உத்திகளில் வடிவங்களில் அது வெளிவருகிறது.

ஒளியிலொளியாம் உருப்பிறந்த வாறதுபோல்
வெளியில் வெளியான விதமறிவ தெக்காலம். 121

ஒளியிட்ட மெய்ப்பொருளை உள்வழியி லேயடைந்து
வெளியட்டுச் சாத்திவைத்து வீடுறுவ தெக்காலம். 122

காந்தம்வலித் திரும்பைக் கரத்திழுத்திக் கொண்டதுபோல்
பாய்ந்து விடித்துழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம். 123

பித்தாயங் கொண்டு பிரணவத்தை யூடறுத்துச்
செத்தாரைப் போலே திரிவதினி எக்காலம். 124

ஒழிந்தகருத் தினைவைத் துள்ளொலும்பு வெள்ளொலும்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம். 125

ஆதி கபிலர்சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை யில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம். 126

சூதுங் களவுந் தொடர்வினையுஞ் சுட்டிடக்காற்
றாதுந் துருத்தியைப்போட் டுனையடைவ தெக்காலம்.127

---

121. ஒளியில் ஒளி பிறக்கிறது என்பது எல்லாருக்கும் தெரியும். வெளியில் வெளி பிறப்பதே மெய்யான பரஞானம்.

122. சுடர்விடுகிற மெய்ப்பொருளை உடலுக்குள்ளே சென்று கண்டு வெளித்தாள் கொண்டு பூட்டிவைப்பதே ஞானியர்கள் கற்பிக்கிற போதநெறி.

123. காந்தம் இரும்பை இழுப்பதுபோல் பற்றி இழுப்பது பத்தாவது தீட்சையாகிய ஞானக்கல்விப் பாடமுறை.

124. பிரணவத்தை அதாவது பிரணவத்தானமாகிய நுண்ணுடலின் ஞான மையத்தை ஊடுறுருவல் என்ற யோக உத்தி பேசுகிறார்.

125. இச்சைகள் அனைத்தும் மாண்ட நிலையில் உடலிணைப்பின்றி இறையுணர்விலே ஒடுங்குவதே சமாதி நிலையாம்.

126. கபிலர் தமது அகவலில் கூறியுள்ள இந்த ஞானநுட்பம் நான்காவது பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

127. வாசி என்னும் யோகமுறையின் வாயிலாக உள்ளத்தின் விகாரப்பாடுகளை எளிதில் நீக்கிவிடலாம்.

ஆசை வலைப்பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசை மணித்தீபத்தி லொன்றிநிற்ப தெக்காலம். 128

கல்லாய் மரமாய்க் கயலாய்ப் பறவைகளாய்ப்
புல்லாய்ப் பிறந்தசென்மம் போதுமென்ப தெக்காலம். 129

தக்கும்வகைக் கோர்பொருளும் சாராம லேநினைவில்
பக்குவமாய் நின்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம். 130

தூரோ டிசைந்து சுழன்றுவருந் தத்துவத்தை
வேரோ டிசைந்து விளங்குவது மெக்காலம். 131

பாக நடுவேறிப் பயந்தெழுந்த சித்திரத்தை
ஏக நடுமூலத் திருத்துவது மெக்காலம். 132

ஓரின்பங் காட்டும் உயர்ஞான வீதிசென்று
பேரின்ப வீடுகண்டு பெற்றிருப்ப தெக்காலம். 133

---

128. புற ஆசைகளை நீக்கிய நிலையில் ஞானயோகம் இயற்றினால் உட்செவியினால் ஓசை கேட்டலும் அகக்கண்ணிலே இளிகாணலும் கை கூடும்.

129. பற்பல பிறவிகள் தொடர்கிற இந்தச் சூழலைத் தப்புவதற்கு ஒரே வழி சித்தர் ஞானமே.

130. உலகில் பற்றுக்கோடாக நிற்கும் நிலையின்றி இறைவனை ஒலிவடிவிலே கண்டிருப்பதே வீடுபேறாம்.

131. தூர்-வேர். சகதியும் ஆம். பிறப்பிறப்புத் தத்துவத்தை விட்டு, ஆணிவேரான இறையைத் தத்துவத்தோடு இணைவதே ஞானயோகம்.

132. பாகம் - உறுப்பு, இங்கே ஒரு உருப்பு. பயந்து - பெற்றெடுத்து. எழுந்த சித்திரத்தை - வளர்ந்த எழுந்த உடலை. இந்த உடம்பை மீண்டும் பிறந்த இடத்தையே நோக்காமல் நடுமூல நாடியிலே செலுத்திப் பரவெளியில் ஒன்றுவது எப்போது?

133. ஓர் இன்பம் - ஒப்பற்ற அக இன்பம். நினைவாகிய ஓர்தலில் பிறக்கும் இன்பம் எனினும் ஒக்கும். ஞான வீதியிலே சென்றால் பேரின்பப் வீட்டைப் போயடையலாம்.

காரணமாய் வந்தென் கருத்தில் உரைத்ததெல்லாம்
பூரணமா கக்கண்டு புகழ்ந்திருப்ப தெக்காலம். 134

ஆயுங் கலைகளெல்லாம் ஆராய்ந்து பார்த்ததற்பின்
நீயின்றி ஒன்றுமிலா நிசங்காண்ப தெக்காலம். 135

குறியாகக் கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற் சேர்ந்து பிறப்பறுப்ப தெக்காலம். 136

மத்தடுத்து நின்று மருளாடு வார்போலே
பித்தடுத்து நின்னருளைப் பெற்றிருப்ப தெக்காலம். 137

சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேகாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம். 138

என்னை யறியாம லிருந்தாட்டுஞ் சூத்திரநின்
றன்னை யறிந்து தவம்பெறுவ தெக்காலம். 139

உள்ள மறியா தொளித்திருந்த நாயகனைக்
கள்ள மனந்தெளிந்து காண்பதினி எக்காலம். 140

---

134. காரணமாய் வந்து - உபாயத்தினால், உத்தியினால் வந்து தோன்றி. கருத்தில் உரைத்த ஞானத்தின் அனுபவ விளக்கம் பெறுவதே யோகம். புகழ்ந்திருத்தல் - பூரித்திருத்தல்.

135. ஆயுங் கலைகள்- அறுபத்துநான்கு என்று சொல்லப்படுகிற எண்ணிலாக் கலைகள்.

136. குறியாகக் கொண்டு சற்பாத்திரமாக ஏற்றுக் கொண்டு. குலம் - உயர்நிலை.

137. மத்தருத்து நின்று - உலக மயக்கில் சிக்கி. மருளாடுவார் போல் - வெறிகொண்டவர் போல்.

138. சாகாமல் செத்திருந்து - உயிர் போகாத நிலையில் உடல் ஆசை மடிந்து. வேகாமல் வெந்திருக்க - தீயிலே வேகாமல் அகத்திலே ஆசைகள் வெந்து, இறைமையில் உருகி யிருக்க.

139. நான் அறியாமலே என்னை ஆட்டுகிற சூத்திரதாரியே உன்னை உணர்ந்து தவம்பெறுவது எப்போது? சூத்திர - சூத்திரதாரியே. கயிற்றால் ஆட்டுபவனே. சூத்திரம் - கயிறு.

140. உள்ளம் அறியாது - தனக்குள் அவன் இருப்பது உள்ளத்துக்கே தெரியாது.

வாசித்துங் காணாமல் வாய்விட்டுப் பேசாமல்
பூசித்துத் தோன்றாப் பொருள்காண்ப தெக்காலம். 141

பன்னிரண்டு காற்புரவி பாய்ந்துசில்லந் தப்பாமல்
பின்னிரண்டு சங்கிலிக்குட் பிணிப்பதினி யெக்காலம். 142

நாட்டுக்கா லிரண்டும்விட்டு நடுவுக்கா லூடேபோய்
ஆட்டுக்கா லிரண்டினுள்ளே அமர்ந்திருப்ப தெக்காலம். 143

பாற்பசுவை பூட்டிப் பதியில்வந்து சீராட்டிக்
காற்பசுவை ஓட்டியதிற் கட்டிவைப்ப தெக்காலம். 144

பலவிடத் தேமனத்தைப் பாயவிட்டுப் பாராமல்
நிலவரையிலூ டேபோய் நேர்படுவ தெக்காலம். 145

காமக் கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக் கனல்வளர்த்தி யுள்ளிருப்ப தெக்காலம். 146

---

141. பூசித்தும் - பூஜைகள் செய்தும். பூ - செய் என்ற இருசொற் சேர்க்கையே பூசை என்ற தமிழ்ச்சொல்லாகி, அது பூஜை என வடமொழியாயிற்று என்பர் மேலைநாட்டுப் பன்மொழி ஆய்வாளர். பூசனை என்பது பூசெய்வினை என்பது அவர்கள் விளக்கம்.

142. பன்னிரண்டு காற்புரவி - பன்னிரண்டு என்ற கணக்கில் ஓடுகிற மூச்சுக்குதிரை. சில்வம் தப்பாமல் - தடையில்லாமல்.

பின்னிரண்டு சங்கிலிக்குள் பிணைப்பது - வாசி யோகத்திலே சூரிய சந்திரக் கணக்கில் இரேசக பூரகங்களாற் கட்டி ஆளுதல்.

143. நாட்டுக்கால் - இடநாடி, வலநாடி இரண்டையும் அல்லாமல். நடுவுக்கால் - நடுநாடி. ஆட்டுக்கால் இரண்டிலுள்ள - சூரிய சந்திரகலைகள் ஆடுகிற நிலையில் நடுவுக்குள்.

144. பாற்பசு - பாலுணர்ச்சியின் சுரப்பியை. பதியில்வந்து - இறைமையில் சேர்ந்து. சீராட்டி - குலாவிமகிழ்ந்து. காற்பசு - வலமூச்சும் இடமூச்சுமாகிய வாசி. கால் - காற்று.

145. நிலவரை - மண்மலையாகிய உடற்களம். நேர்படுதல் - நேராக நிலையாக நிற்றல்.

146. காமக்கடல் - சிற்றின்பம். ஓமக்கனல் - வேள்வித்தீ; மூலக்கனலாகிய நெருப்பு.

உதயச் சுடர்மூன்றும் உள்வீட்டிலே கொளுத்தி
இதயத் திருநடன மினிக்காண்ப தெக்காலம். 147

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம். 148

பட்டமற்றுக் காற்றிற் பறந்தாடுஞ் சூத்திரம்போல்
விட்டு வெளியாக விசுவசித்த லெக்காலம். 149

அட்டாங்க யோகமதற் கப்பாலுக் கப்பாலாய்க்
கிட்டாப் பொருளதனைக் கிட்டுவது மெக்காலம். 150

ஒட்டாம லொட்டிநிற்கும் உடலுமுயி ரும்பிரித்தே
எட்டாப பழம்பதிக்கிங் கேணிவைப்ப தெக்காலம். 151

பாசத்தை நீக்கிப் பசுவை பதியில்விட்டு
நேசத்தி னுள்ளே நினைந்திருப்ப தெக்காலம். 152

ஆசார நேச அனுட்டான மும்மறந்து
பேசா மெய்ஞ்ஞானநிலை பெற்றிருப்ப தெக்காலம். 153

---

147. உதயச்சுடர் மூன்று - யாக்கையில் உதிக்கிற சூரியன், சந்திரன், நெருப்பு ஆகிய முச்சுடர். உள்வீடு - அகத்துள் நிலைபெற்றுள்ள ஆதாரம். திருநடனம் - சிற்றம்பலக் கூத்தாகிய ஞானப் பேரின்பம்.

148. நாதாந்த மூல நடு - உடம்பின் உச்சிக்கு மே உள்ள நடுவெளியாகிய மூலக்கனலின் குறிக்கோள்.

149. "பட்டமும் கயிறும்போல பறக்க நின்ற சீவன்" என்பது சிவாக்கியர் மொழி.

150. அட்டாங்க யோகம் - சித்தர்களின் பயிற்சி. முன்பகுதிகளில் விளக்கப்பெற்றுள்ள விரிவு காண்க.

151. ஒட்டாமல் ஒட்டி - கயிறோ பிசின்பசையோ கொண்டு ஒட்டவைக்காமல், இந்தப் புறச்சாதனங்கள் அனைத்தையும் விட வன்மையாக ஒட்டிக் கொண்டுள்ள, பற்ற வைக்காமல் பற்றிக் கொண்டுள்ள.

152. பாசம் - நிலையான மல இருள். பதி - இறைவன். பசு - சீவான்மா.

153. ஆசார நேச அனுட்டானம் - பத்தி மார்க்கமாகிய தாச சத்புத்ர நெறிகளிலுள்ள நியமங்களும் புறச்சடங்குகளும்.

பல்லா யிரங்கோடிப் பகிரண்ட மும்படைப்பே
அல்லாது வேறிலையென் றறிவதினி எக்காலம். 154

ஆதிமுத லாகிநின்ற அரியென்ற அச்சரத்தை
ஓதி யறிந்துளே உணர்வதினி எக்காலம். 155

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்ப தெக்காலம். 156

அல்லும் பகலுமென்றன் அறிவையறி வாலறிந்து
சொல்லும் முறைமறந்து தூங்குவது மெக்காலம். 157

இயங்குஞ் சராசரத்தில் எள்ளுமெண்ணே யும்போல
முயங்குமந்த வேத முடிவறிவ தெக்காலம். 158

ஊனாகி யூனில் உயிராகி எவ்வுலகுந்
தானாகி நின்ற தனையறிவ தெக்காலம். 159

---

154. பல்லாயிரம் கோடி அண்ட பகிரண்டங்கள் அனைத்தும் செயற்கையே.

155. இந்த அட்சரங்களும் நிலைகளும் எழுத்தும் நிலையும் என்று முன்பகுதிகளில் விரிவாக விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

156. சூத்திரத்தைக் கண்டு - நுண்ணுடலின் நுட்பத்தை உணர்ந்து.

157. அறிவை அறிவால் அறிவதே - பேரறிவாகிற ஆன்ம ஞானம்.
சொல்லும் முறை மறந்து - வாக்கற்று.

158. இயக்கும் சராசரத்தில் - பரம்பொருள்தானே இயக்குகிற அசைவதும் நிற்பதுமான உலகப் படைப்புக்களில்.
எள்ளும் எண்ணெயும்போல் முயங்கும் - எள்ளில் எண்ணெய்போல் முயங்கிக் கலந்து உள்ளுறைகிற.

159. ஊனும் ஊனுக்குள் நிற்கும் உயிரும் இந்த உலகங்கள் அனைத்தும் தானேயாகி நிற்பது பரம்பொருள். அதை அறிவதே மெய்யான மெய்ஞ்ஞானமாகும்.

என்னைவிட்டு நீங்காமல் என்னிடத்து நீயிருக்க
உன்னைவிட்டு நீங்கா தொருப்படுவ தெக்காலம். 160

இன்னதென்று சொல்லவொண்ணா எல்லையற்ற
வான்பொருளைச்
சொன்னதென்று நானறிந்து சொல்வதினி எக்காலம். 161

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம். 162

என்னை இறக்கவெய்தே என்பதியை யீடழித்த
உன்னை வெளியில்வைத்தே ஒளித்துநிற்ப தெக்காலம். 163

கடத்துகின்ற தோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெக்காலம். 164

நின்றநிலை பேராமல் நினைவிலொன்றும் சாராமல்
சென்றநிலை முத்தியென்று சேர்ந்தறிவ தெக்காலம். 165

பொன்னும் வெள்ளியும் பூண்ட பொற்பதத்தை
யுள்ளமைத்து
மின்னு மொளிவெளியே விட்டடைப்ப தெக்காலம். 166

---

160. ஒருப்படுதல் - ஒன்றி நிற்றல்

161. சொன்னதென்று நானறிந்து - சொல்லத் தெரிந்து கொண்டதுபோல் அத்தனை தெளிவாக நான் அறிந்துகொண்டு.

162. அறிவை அம்பாகக் கொண்டு பரம்பொருளைக் குறிவைப்பதற்கு மனமே வில்லாகவும் பொறியே நாணாகவும் இயங்க வேண்டும்.

163. சதுரப்பாடான சொல்லாட்சி.
நான் என்ற ஆணவமலம் சாகடித்து, இந்த உடம்பை ஈடழித்து, இறைவனைப் பரவெளியிலே கூடுதலே சித்தர்யோகம். ஈடழித்தல் - இயல்பை அடக்குதல்.

164. கடத்துகின்ற தோணி - உடம்பு. கழைகள் - ஓடக்கோல்கள் கருத்து என்னவென்றால் ஆசைகளில் உழல்கிற அதே உடம்புதான் இவற்றைக் கடக்கவும் வேண்டி உள்ளது.

165. சென்றநிலை சேர்கிற ஆதாரநிலை.

166. மின்னும் ஒளிவெளி - சுடர்கின்ற ஒளிமயமான அகவெளியில் அதாவது பரவெளியில்.

கூட்டிலடை பட்டபுழு குளவியுருக் கொண்டதுபோல்
வீட்டிலடை பட்டருளை வேண்டுவது மெக்காலம். 167

கடலில் ஒளித்திருந்த கனலெழுந்து வந்தாற்போல்
உடலில் ஒளித்தசிவம் ஒளியெய்வ தெக்காலம். 168

அருணப் பிரகாசம் அண்டமெங்கும் போர்த்ததுபோல்
கருணைத் திருவடியில் கலந்துநிற்ப தெக்காலம். 169

பொன்னிற் பலவிதமாம் பூஷணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்ததுன்னில் ஒடுங்குவது மெக்காலம். 170

நாயிற் கடைப்பிறப்பாய் நான்பிறந்த துன்பமற
வேயிற் கனலொளிபோல் விளங்குவது மெக்காலம். 171

சூரிய காந்தியொளி சூழ்ந்துபஞ்சைச் சுட்டதுபோல்
ஆரியன் தோற்றத் தருள்பெறுவ தெக்காலம். 172

---

167. புழுவானது குளவி உருக்கொள்வது கொட்டிக் கொட்டிப் பெறுகிற உருவமைப்பு. ஞானம் கூடுவதும் இத்தன்மைத்தே.

168. வடவைக்கனல் என்பதே கடலில் ஒளிந்திருக்கும் கனல். மூலக்கனலும் இந்த உடம்புக்குள் அவ்வாறே உறைகிறது. அது வெளியிட்டுப் பெறுகிற அனுபவம் சிவானுபவம்.

169. அருணப் பிரகாசம் - சூரிய வெளிச்சம்.

170. "பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்" என்பது திருமந்திரம்.

171. வேயிற்கனல் மறைந்திருக்கிறது. உரசி உரசி வெளிப்படுகிறது.

172. இந்தப் பாடல் திருமந்திரத்தை ஒட்டியது. "சூரிய காந்தமும் சூழ்பஞ்சும்" என்ற திருமந்திரப் பாடலின் கருத்து மட்டுமல்லாமல் சொற்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

"சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"

இரும்பிற் கனல்மூட்டி இவ்வுருப்போய் அவ்வுருவாய்
கரும்பிற் சுவைரசத்தைக் கண்டறிவ தெக்காலம். 173

கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தானினைக்க
உருக்கொண்ட வாறாதுபோல் உனையடைவ தெக்காலம். 174

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில் வருவார்போல்
கூடுவிட்டுப் பாயுங் குறிப்பறிவ தெக்காலம். 175

கடைந்தவெண்ணெய் மோரிற் கலவாத வாறதுபோல்
உடைந்து தமியேன் உனைக்காண்ப தெக்காலம். 176

இருளை ஒளிவிழுங்கி ஏகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிருள் அகன்று நிற்ப தெக்காலம். 177

மின்னெழுத்து மின்னொடுங்கி விண்ணில் உறைந்தாற்போல்
எண்ணுகின்ற தென்னுள்ளே யானறிவ தெக்காலம்.
178

கண்ட புனற்குடத்திற் கதிரொளிகள் பாய்ந்தாற்போல்
கொண்ட சொரூபமதைக் கூர்ந்தறிவ தெக்காலம். 179

---

173. இரும்பிலே தீ எரிக்கும்போது தீச்சிவப்பாகிறது இரும்பு. மூலக்கனலின் தொழில் செயல்வகையும் இவ்வாறே. கரும்பு - உடம்பு, இதுவே ரசம்பிழிந்து தருகிறது.

174. முட்டையின் கருஉற்பத்தி மனவேகத்தினால் என்ற கருத்து பல சித்தர் பாடல்களில் காண்கிறது. சிவவாக்கியர் இதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

175. வீடு - வசிக்கிற இல்லம். கூடு - உடம்பு.

176. மோரைவிட்டு வெளிவருகிற வெண்ணெய் மீண்டும் மோரோடு கலவாது. அவ்வாறே வீடுபேறு சேர்ந்தவர் மீண்டும் உடம்பிலே கலந்து பிறப்பதில்லை.

177. இருளை ஒளியானது விழுங்குகிறது. ஒளியையும் இருள் விழுங்குகிறது. பகலும் இரவும் இவ்வாறே!

178. சிவவாக்கியர் பாடல் "விண்ணினின்று மின் எழுந்து" என்ற பாடலில் இதையே விளம்புகிறார்.

179. கண்டபுனற்குடம் - குடத்தின் தண்ணீரில். இதே உவமை கருத்து உபநிடதத்திலும் பேசப்படுகிறது. கீதையிலும் பல வடிவங்களில் உணர்த்தப்படுகிறது.

பூணுகின்ற பொன்னணிந்தாற் பொன்சுமக்கு மோவுடலை
காணுகின்ற என்கருத்திற் கண்டறிவ தெக்காலம். 180

செம்பிற் களிம்புபோற் சிவத்தை விழுங்கிமிக
வெம்பிநின்ற மும்மலத்தை வேறுசெய்வ தெக்காலம். 181

ஆவியுங் காயமும்போல் ஆத்துமத்தில் நின்றதனைப்
பாவி யறிந்துமனம் பற்றிநிற்ப தெக்காலம். 182

ஊமைக் கனாக்கண் டுரைக்கறியா இன்பமதை
தாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம். 183

சாகாச் சிவனடியைத் தப்பாதார் எப்போதும்
போகா உடலகன்று போவதென்ப தெக்காலம். 184

நிட்டை தனைவிட்டு நினைவறிவு தப்பிவிட்டு
வெட்ட வெளியில் விரவிநிற்ப தெக்காலம். 185

---

180. அணிகலன் அணிபவனைச் சுமப்பதில்லை. சுமையும் சுமைதாங்கியும் ஒன்றுவது யோகமாகும்.

181. இங்கே சிவம் என்று சொல்லிய போதிலும், களிம்பு ஏறுவது சிவத்தின் மீதில்லை, சிவத்தைக் காணவிடாமற் செய்வதால் இங்ஙனம் கூறப்பட்டது. "கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே" என்றும், "களிம்பறு காத கதிரொளி" என்றும் திருமூலர் கூறுவதையும், செம்பும் களிம்பும் பற்றிய பிற பாடல்களையும் முற்பகுதிகளில் காண்க.

182. உடம்புக்கு உயிர் என்பதுபோல் உயிருக்கு உயிராகி நிற்பது பரமான்ம தத்துவம்.

183. "உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமை" என்ற திருமந்திரத்தை நினைவூட்டுகிறது.

184. போகா உடல் - எளிதில் நீங்காத பிறவி.
சாகாச் சிவனடி - நிலையான பேரின்பம்.

185. "அறிவறியாமை அழகிய வாறே!" என்ற திருமந்திரம் காண்க.

வெட்டவெளி தன்னில் விளைந்த வெறும்பாழைத்
திட்டமுடன் கண்டு தெளிவதினி எக்காலம். 186

எங்கும் பரவடிவாய் என்வடிவு நின்வடிவாய்
கங்குல்பக லின்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம். 187

உண்டதுவும் மாதருடன் கூடிச் சேர்ந்தின்பங்
கண்டதுவு நீயெனவே கண்டுகொள்வ தெக்காலம். 188

ஈமென்று கேட்டதுவும் என்னுள்ளே நின்றதுவும்
ஓமென்று சொன்னதுவும் உற்றறவ தெக்காலம். 189

சத்தம் பிறந்தவிடம் தன்மயமாய் நின்றிவிடம்
சித்தம் பிறந்தவிடம் தேர்ந்தறிவ தெக்காலம். 190

போக்கும் வரவும் புறம்புமுள்ளு மாகிநின்றும்
தாக்கும் ஒருபொருளைச் சந்திப்ப தெக்காலம் 191

நானெனவும் நீயெனவும் நாமிரண்டு மற்றொன்றும்
நீயெனவே சிந்தைதனில் நேர்படுவ தெக்காலம். 192

---

186. முன் பாடல்களில் இதே கருத்து ஓதப்பட்டுள்ளது.

187. "கங்குல் பகல் அற்ற இடம்" என்றும், "கண்டவெலாம் மோன உருவெளிய தாகவும் கருதி அஞ்சலி" என்றும் தாயுமானவர் பாடுவது இந்த நிலையையே!

188. அருமையான பாடல். நுட்பமான கருத்து. இது சித்தர்களின் யோக முறை. திருக்கருவைத் திருவந்தாதியில் இந்த நிலை பக்தியிலுமே பேசப்படுகிறது.

"முருக்கவிழ் வாயாரோடு முயங்கிநெஞ் சழியும்போதும்
திருக்கழா உடையா நம்பா சிந்தைநின் பால தாமே!"

என்ற அடிகள் நினைவுக்கு வருகின்றன.

189. அனைத்தும் பரதத்துவமே என்ற அகஅறிவு.

190. "சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி" என்ற அவ்வை அடிகளுக்கு விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது.

191. எல்லாச் செயல்களும், ஆடுவதும் ஆட்டுவிப்பதுமே பரதத்துவந்தான்.

192. பதிபசுபாச ஐக்கிய நிலையில் பதியருகில் பாசம் நிற்காத தத்துவமும் யோக ஒருமையும் விளக்கிய வாறு.

அறிவையறி வாலறிந்தே அறியும் அறிவுதனிற்
பிறிவுபட நில்லாமல் பிடிப்பதினி எக்காலம். 193

நீடும் புவனமெல்லாம் நிறைந்துசிந் தூரமதாய்
ஆடும் திருக்கூத்தை அறிவதினி எக்காலம். 194

தித்தியென்ற கூத்தும் திருச்சிலம்பி னோசைகளும்
பக்தியுடனே கேட்டுப் பணிவதினி எக்காலம். 195

நயனத் திடைவெளிபோய் நண்ணும் பரவெளியில்
சயனித் திருந்து தலைப்படுவ தெக்காலம். 196

அருவி மலைநடுவே ஆயிரக்கால் மண்டபத்தில்
திருவி ளையாடற்கண்டு தெரிசிப்ப தெக்காலம். 197

மீனைமிக வுண்டுகக்கி விக்கிநின்ற கொக்கதுபோல்
தேனைமிக வுண்டு தெவிட்டிநிற்ப தெக்காலம். 198

---

193. அறிவில் அறிவு அடங்குகிற முறை.

194. புவனம் - உலகம். சிந்தூரமதாய் ஆடும் திருக்கூத்து - வினைகள் பொடிபட ஆடும் ஞானமாநடனம்.

195. அகக்கூத்து தரிசனம் பேசுகிறார் சித்தர்.

196. சுழுமுனைப் பயிற்சியாகிய ஒளிகாணும் ஞானநெறி விளக்கம் பெறுகிறது.

197. அருவிமலை - கண்ணாறு புகமண்டும் உச்சி. ஆயிரக்கால் மண்டபம் - சகஸ்ரதளம்.

198. தெவிட்டி நிற்பது - பேரின்பம் பொங்கித் ததும்புகிற நிலை.

இந்தப் பாடல்கள் அனைத்திலும் ஒளிகண்டு, ஆனந்தம் மேலிட்டு, எல்லாம் கூடிநிற்கிற ஞானக் களிப்பு பேசப்படுகிறது.

பொல்லாத காயத்தைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் சற்பதினி எக்காலம். 199

வெட்டவெளிக் குள்ளே விளங்குஞ் சதாசிவத்தைக்
கிட்டிவரத் தேடக் கிருபைசெய்வ தெக்காலம். 200

பேரறிவி லேமனத்தைப் பேசாம லேயிருத்தி
ஓரறிவி லெந்நாளும் ஊன்றிநிற்ப தெக்காலம். 201

அத்துவிதம் போலுமென்றன் ஆத்துமத்தின் உள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம். 202

நானின்ற பாசமதில் நானிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிரவிநிற்ப தெக்காலம். 203

எள்ளும் கரும்பும் எழில்மலரும் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம். 204

அன்னம் புனலைவகுத் தமிர்தத்தை உண்பதுபோல்
என்னைவகுத் துன்னை இனிக்காண்ப தெக்காலம். 205

---

199. கல்லாவின் பால் - கல்லால் ஆன பசுவாகிய இந்த எளிதில் மாட்டாத இந்த யாக்கையில் சுரக்கிற ஞான அமுது.

200. அந்த ஞான அனுபவம் தலைப்படுவதற்குமே அவன் கருணை புரிய வேண்டும்.

201. பேரறிவு - மெய்ஞ்ஞானம்.
ஓரறிவு - ஒருமையுணர்வு.

202. அத்துவிதம் போலும் - இரண்டற்ற நிலை போன்ற.

203. பாசமலம் களைதலும், இறைமையில் தோய்தலும் எப்போது?

204. எள்ளில் எண்ணெய், கரும்பில் சாறும் சுவையும், மலரில் மணம் - இதுவே கலந்துறைதல்.

205. அன்னம் புனலை வகுத்து - அன்னப்பறவை தண்ணீரைத் தள்ளிப் பாலைக் கொள்ளுவது.

அந்தரத்தில் நீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப தெக்காலம். 206

பிறப்பும் இறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பும் நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம். 207

மன்னும் பரவெளியை மனவெளியில் அடைத்தறிவை
என்னு ளொருநினைவை எழுப்பிநிற்ப தெக்காலம். 208

ஆசைகொண்ட மாதர் அடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானும் ஒடுங்குவதும் எக்காலம். 209

தன்னுயிரைக் கொண்டு தான்றிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கோங்குவது மெக்காலம். 210

சேற்றிற் கிளைநாட்டுத் திடமாம் உடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம். 211

---

206. ஆகாயத் தாமரை என்பது சாமானியருக்கு வெறும் கனவு.
ஞானிகளுக்கு அதுவே யோக அனுபவம்.

207. "செத்த பிணம் போல்" என்று இதே கருத்து வேறு முறையில் முன் பாடல்களில் வருகிறது.

208. பரவெளி - சிதாகாசம்.

209. ஓசை - அகநாதம்.

210. இந்த உயிர் கொண்ட உடம்பில் கண்டபடி திரிந்தாயிற்று.
பரம்பொருளாகிய பரமான்மா கொண்டு உயர்வது எப்போது?

211. கிளைநாட்டும் - பற்றுக்கோடு நாட்டுகிற.
காற்றில் உழல் - வாசியில் அசைகின்ற.

பொல்லாத காயத்தைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் சற்பதினி எக்காலம். 199

வெட்டவெளிக் குள்ளே விளங்குஞ் சதாசிவத்தைக்
கிட்டிவரத் தேடக் கிருபைசெய்வ தெக்காலம். 200

பேரறிவி லேமனத்தைப் பேசாம லேயிருத்தி
ஓரறிவி லெந்நாளும் ஊன்றிநிற்ப தெக்காலம். 201

அத்துவிதம் போலுமென்றன் ஆத்துமத்தின் உள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம். 202

நானின்ற பாசமதில் நானிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிரவிநிற்ப தெக்காலம். 203

எள்ளும் கரும்பும் எழில்மலரும் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம். 204

அன்னம் புனலைவகுத் தமிர்தத்தை உண்பதுபோல்
என்னைவகுத் துன்னை இனிக்காண்ப தெக்காலம். 205

---

199. கல்லாவின் பால் - கல்லால் ஆன பசுவாகிய இந்த எளிதில் மாட்டாத இந்த யாக்கையில் சுரக்கிற ஞான அமுது.

200. அந்த ஞான அனுபவம் தலைப்படுவதற்குமே அவன் கருணை புரிய வேண்டும்.

201. பேரறிவு - மெய்ஞ்ஞானம்.
ஓரறிவு - ஒருமையுணர்வு.

202. அத்துவிதம் போலும் - இரண்டற்ற நிலை போன்ற.

203. பாசமலம் களைதலும், இறைமையில் தோய்தலும் எப்போது?

204. எள்ளில் எண்ணெய், கரும்பில் சாறும் சுவையும், மலரில் மணம் - இதுவே கலந்துறைதல்.

205. அன்னம் புனலை வகுத்து - அன்னப்பறவை தண்ணீரைத் தள்ளிப் பாலைக் கொள்ளுவது.

அந்தரத்தில் நீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப தெக்காலம். 206

பிறப்பும் இறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பும் நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம். 207

மன்னும் பரவெளியை மனவெளியில் அடைத்தறிவை
என்னு ளொருநினைவை எழுப்பிநிற்ப தெக்காலம். 208

ஆசைகொண்ட மாதர் அடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானும் ஒடுங்குவதும் எக்காலம். 209

தன்னுயிரைக் கொண்டு தான்றிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கோங்குவது மெக்காலம். 210

சேற்றிற் கிளைநாட்டுத் திடமாம் உடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம். 211

---

206. ஆகாயத் தாமரை என்பது சாமானியருக்கு வெறும் கனவு.
ஞானிகளுக்கு அதுவே யோக அனுபவம்.

207. "செத்த பிணம் போல்" என்று இதே கருத்து வேறு முறையில் முன் பாடல்களில் வருகிறது.

208. பரவெளி - சிதாகாசம்.

209. ஓசை - அகநாதம்.

210. இந்த உயிர் கொண்ட உடம்பில் கண்டபடி திரிந்தாயிற்று.
பரம்பொருளாகிய பரமான்மா கொண்டு உயர்வது எப்போது?

211. கிளைநாட்டும் - பற்றுக்கோடு நாட்டுகிற.
காற்றில் உழல் - வாசியில் அசைகின்ற.

பொல்லாத காயத்தைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் சற்பதினி எக்காலம். 199

வெட்டவெளிக் குள்ளே விளங்குஞ் சதாசிவத்தைக்
கிட்டிவரத் தேடக் கிருபைசெய்வ தெக்காலம். 200

பேரறிவி லேமனத்தைப் பேசாம லேயிருத்தி
ஓரறிவி லெந்நாளும் ஊன்றிநிற்ப தெக்காலம். 201

அத்துவிதம் போலுமென்றன் ஆத்துமத்தின் உள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம். 202

நானின்ற பாசமதில் நானிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிரவிநிற்ப தெக்காலம். 203

எள்ளும் கரும்பும் எழில்மலரும் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம். 204

அன்னம் புனலைவகுத் தமிர்தத்தை உண்பதுபோல்
என்னைவகுத் துன்னை இனிக்காண்ப தெக்காலம். 205

---

199. கல்லாவின் பால் - கல்லால் ஆன பசுவாகிய இந்த எளிதில் மாட்டாத இந்த யாக்கையில் சுரக்கிற ஞான அமுது.

200. அந்த ஞான அனுபவம் தலைப்படுவதற்குமே அவன் கருணை புரிய வேண்டும்.

201. பேரறிவு - மெய்ஞ்ஞானம்.
ஓரறிவு - ஒருமையுணர்வு.

202. அத்துவிதம் போலும் - இரண்டற்ற நிலை போன்ற.

203. பாசமலம் களைதலும், இறைமையில் தோய்தலும் எப்போது?

204. எள்ளில் எண்ணெய், கரும்பில் சாறும் சுவையும், மலரில் மணம் - இதுவே கலந்துறைதல்.

205. அன்னம் புனலை வகுத்து - அன்னப்பறவை தண்ணீரைத் தள்ளிப் பாலைக் கொள்ளுவது.

அந்தரத்தில் நீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப தெக்காலம். 206

பிறப்பும் இறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பும் நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம். 207

மன்னும் பரவெளியை மனவெளியில் அடைத்தறிவை
என்னு ளொருநினைவை எழுப்பிநிற்ப தெக்காலம். 208

ஆசைகொண்ட மாதர் அடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானும் ஒடுங்குவதும் எக்காலம். 209

தன்னுயிரைக் கொண்டு தான்றிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கோங்குவது மெக்காலம். 210

சேற்றிற் கிளைநாட்டுத் திடமாம் உடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம். 211

---

206. ஆகாயத் தாமரை என்பது சாமாணியருக்கு வெறும் கனவு.
ஞானிகளுக்கு அதுவே யோக அனுபவம்.

207. "செத்த பிணம் போல்" என்று இதே கருத்து வேறு முறையில் முன் பாடல்களில் வருகிறது.

208. பரவெளி - சிதாகாசம்.

209. ஓசை - அகநாதம்.

210. இந்த உயிர் கொண்ட உடம்பில் கண்டபடி திரிந்தாயிற்று.
பரம்பொருளாகிய பரமான்மா கொண்டு உயர்வது எப்போது?

211. கிளைநாட்டும் - பற்றுக்கோடு நாட்டுகிற.
காற்றில் உழல் - வாசியில் அசைகின்ற.

என்வசமுங் கெட்டிங் கிருந்தவச முமழிந்து
தன்வசமுங் கெட்டருளைச் சார்ந்திருப்ப தெக்காலம். 212

தன்னை மறந்து தலத்து நிலைமறந்து
கன்மம் மறந்து கதிபெறுவ தெக்காலம். 213

என்னையென்னி லேமறந்தே இருந்தபூதி யும்மறந்து
தன்னையுந்தா னேமறந்து தனத்திருப்ப தெக்காலம். 214

தன்னையுந்தா னேமறந்து தலைவாசற் றாழ்போட்டே
உன்னைநினைந் துள்ளே உறங்குவது மெக்காலம். 215

இணைபிரிந்தபோ தலறிஇன்பமும் அன்றிலைப்போல்
துணைபிரிந்த போதருள்நூல் தொடர்ந்துகொள்வ
தெக்காலம் 216

ஆட்டமொன்று மில்லாமல் அசைவுசற்றுங் காணாமல்
தோட்டமற்ற வான்பொருளைத் தேடுவது மெக்காலம். 217

முன்னைவினை யாலறிவு முற்றாமற் பின்மறைந்தால்
அன்னை தனைத்தேடி அமுதுண்ப தெக்காலம். 218

---

212. என்வசம் - அகங்கார மமகாரங்கள். இருந்தவசம் - உலக இச்சையில் பற்றுக்கோடு. தன்வசம் - தன்னிலை.

213. தலத்துநிலை மறந்து - ஆதாரங்களைத் தாண்டிச் செல்லல்.

214. இதுவுமது.

215. தலைவாசல் தாழ்போடல் - கண்மூடி மூச்சடக்கி ஆசைகளை வென்று நிற்றல்.

216. அன்றில் தன் துணையைப் பிரிந்ததும் அலறி வீழ்ந்து இன்பம் பெறுகிறது. அவ்வாறு இறைமையைப் பிரிந்தபோது ஞானக் கயிற்றைப் பற்ற வேண்டும்.

217. தேட்டம் அற்ற வான்பொருள் - தேடவேண்டிய அவசியமின்றி உள்ளேயே நிற்கிற உயர்ந்த பரம்பொருள்.

218. அறியாமையும், ஞானநாடாத தன்மையும் தீவினைப் பயனே. அன்னை என்றது பரம்பொருளின் கருணையாகிய திருவருளை.

கள்ளுண் டவர்போற் களிதருமா னந்தமதால்
தள்ளுண்டு நின்றாடித் தடைப்படுவ தெக்காலம். 219

தானென்ற ஆணவமுந் தத்துவமுங் கெட்டொழிந்தே
ஏனென்ற பேச்சுமிலா திலங்குவது மெக்காலம். 220

தானவனாய்க் காண்பதெல்லாம் ஞானவிழி யாலறிந்து
தானவனாய் நின்று சரணடைவ தெக்காலம். 221

தானந்த மில்லாத் தற்பரத்தி னூடுருவி
ஆனந்தங் கண்டே அமர்ந்திருப்ப தெக்காலம். 222

உற்ற வெளிதனிலே உற்றுப்பார்த் தந்தரத்தே
மற்ற மறமாய்கை மாள்வதினி எக்காலம். 223

ஏடலர்ந்த பங்கயமும் இருகருணை நேத்திரமுந்
தோடணிந்த குண்டலமுந் தோன்றுவது மெக்காலம். 224

---

219. கள்மயக்கம் போன்றதே ஞானமயக்கமும். ஆடித்தடைப்படுதல் - ஆடி அகத்தே உள்நிற்றல்.

220. ஏனென்ற பேச்சுமிலாது - என்ன ஆயிற்று என்று பேச முடியாத முற்றானந்த நிலை.

221. தானவனாய்க் காண்பது என்பது வெறும் பாவனையாக இல்லாமல், அகமுகக் காட்சியாகவே இருக்க வேண்டும்.

222. அந்தம் இல்லா - முடிவில்லாத.
அமர்ந்திருப்பது - ஒடுங்கி இருக்கும் அமைதிநிலை.

223. மற்ற மறம் - பிற பாவங்கள்

224. ஏடு அலர்ந்த - இதழ்விரிந்த. பங்கயம் - இங்கே முகத்தாமரை. நேத்திரம் - விழி.

பேரின்ப வடிவம் உமையொரு பாகமாகிய அம்மையப்பனாம். யோக நெறியிலே அம்மை சந்திரன், அப்பன் சூரியன்.

ஐயாறும் ஆறும் அகன்று வெறுவெளியில்
மையிருளில் நின்றமனம் மாள்வதினி எக்காலம். 225

காட்டும் அருள்ஞானக் கடலன்புக் கப்பல்விட்டு
மூட்டுகரு ணைக்கடலில் மூழ்குவது மெக்காலம். 226

நானாரோ நீயாரோ நன்றாம் பரமான
நானாரோ என்றுணர்ந்து தவமுடிப்ப தெக்காலம். 227

எவரெவர்க ளெப்படிக்கண் டெந்தப் படிநினைத்தார்
அவரவருக் கப்படிநின் றாயென்ப தெக்காலம். 228

உற்றுற்றுப் பார்க்க ஒளிதருமா னந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைப்பதினி எக்காலம். 229

விளங்குகின்ற தாரகையை வெய்யோன் மறைத்தாற்போல்
களங்கமற வுன்காட்சி கண்டறிவ தெக்காலம். 230

என்னையே யானறியேன் இந்தவண்ணஞ் சொன்னதெல்லாம்
முன்னையோர் கைக்கொள்ள முன்பணிவ தெக்காலம். 231

---

225. ஐயாறும் ஆறும் - முப்பத்தாறு தத்துவமும்.

226. அருள் ஞானமாகிய கடலில் அன்பு என்ற தோணியிலே செல்வது பக்தி மார்க்கம். அந்தக் கப்பலில் இருந்து குதித்துக் கருணைக் கடலில் மூழ்குவது சித்தர் ஞானம்.

227. வேற்றுமை உணர்ச்சிகளை ஒவ்வொன்றாக விட்டொழிந்து ஒருமைநிலை நிற்பதே தவமாகும்.

228. "அவரவர் தமதம தறிவறி வகைவகை" என்பது ஆழ்வார் வாக்கு. அவ்வாறே அவரவர் இறையவர் குறைவிலர். அதோடு அந்தந்த நிலையும் உயர்வே.

229. நெற்றிக்கு நேர் - சுழுமுனை.

230. உலகக் காட்சி விண்மீன் போன்றது. அகஒளிக் காட்சி கதிரவனுடைய வெளிச்சம். இதில் அது மறைந்திடும்!

231. என்னை நான் அறியேன். மொழிந்தது முன்னவர் அனுபவம். அதை நான் பணிந்து பெறுவது எப்போது?

மாயத்தை நீக்கி வருவினையைப் பாழாக்கிக்
காயத்தை வேறாக்கிக் காண்பதுவெ எக்காலம். 232

அஞ்சு கரத்தனை அடியிணைப் போற்றிசெய்து
நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவ தெக்காலம். 233

---

232. மாயத்தை நீக்கி - மாயமாகிய மலத்தை வென்று நீக்கி. வருவினையைப் பாழக்கி - மேற்கொண்டு சேர்கிற வினைக்களிம்பு மேலும் பற்றாமற் செய்து.
காயத்தை வேறாக்கிக் காண்பது - உடம்பைக் கொண்டு உடம்பிலிருந்து விடுபட்டு நிற்கிற பயிற்சியே ஞான யோகமாகும்.

“பின்னை வினையைப் பிடித்துப் பிசைதல்” என்ற திருமந்திரம் இங்கே ஒப்புநோக்கற்பாலது.

233. அஞ்சு கரத்தனை - ஐந்து கரங்கள் உடைய ஞான விநாயகனை.
இங்கே ஐந்து கரம் என்பது ஞானேந்திரியச் செயலுக்கு உருவகம்.
நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவது - மனம் ஒன்றிய ஒடுக்கத்திலே நிலைபெற்று நிற்பது.

ஐந்து கரம் என்ற உருவகத்தின் நுட்பம் கருதியே மூலாதார மூர்த்தியாக மூலாதார கணபதி வணங்கப் பெறுகிறார். இதன் விரிவு விநாயகர் அகவலின் உரையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

(பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல் முற்றிற்று)

# வாலைக் கும்மி

இந்தப் பாடல்கள் தமிழ்நாட்டில் நன்கு பரவியுள்ளவை. கும்மி மெட்டில் அமைந்துள்ளமையோடு, இந்தப் பனுவல் தனக்குள் பல எளிய இனிய பாடல்களை உள்ளடக்கியது.

இந்த நூலின் ஆசிரியர் கொங்கண நாயனார் என்று வழங்கி வருகிறார். இவர் திருமழிசை காலத்தவர் என்பதால் ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று முடிவு கட்டியுள்ளனர். கொங்கணர் என்ற பெயரில் வைத்திய நூல்களும், இரசவாத நூல்களும் வழங்கி வருகின்றன. இத்தனை கொங்கணரும் ஒருவரா அல்லது வேறானவர்களா என்ற ஐயம் இன்னும் தெளிவாகவில்லை. அதோடு குளிகைக்கதைகள் சிலவும் இவரோடு பிணைத்துப் பேசப்படுகின்றன. சில அறிஞர்கள் "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?" என்ற கதையையும் இவரோடு தொடர்பு படுத்திக் கூறுவர். முறையான ஆராய்ச்சி முடிவாக இந்தக் கதைகளைக் கொள்வதற்கில்லை.

வரலாறு இப்படி இருப்பினும் பாடல்கள் அற்புதமாக இருக்கின்றன. ஆனால் அவற்றிலும்ஒரு சிக்கல் என்னவென்றால், அங்கங்கே மருத்துவக் குறிப்புகள் வருகின்றன. இந்த உரையில் அத்தகைய பாடல்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை.

தீட்சை என்ற நேர்முகக் கல்வியில் வருகிற சில அப்பியாசங்களும் மூடிமறைத்துச் சொல்லப்பட்டுள்ளன. அவற்றை நேரிலே காட்டவேண்டுமேயல்லாமல் உரையிலே சொல்லுக்குப் பொருள் கூறிவிட்டால்மட்டும் சாலாது. அத்தகைய பாடல்களும் சேர்க்கப்படவில்லை. இலக்கிய முறையிலான பாடல்களுக்கே முதன்மையளித்துக் கீழே உள்ள பாடல்கள் வருகின்றன.

# கொங்கண நாயனார் அருளிச்செய்த
# வாலைக் கும்மி

## காப்பு
## விநாயகர் துதி
### பின்முடுகு வெண்பா

கல்விநிறை வாலைப்பெண் காதலியென் றோதுகின்ற
செல்வியின்மேற் கும்மிதனைச் செப்புதற்கே - நல்விசய
நாதனின்சொல் வேதனஞ்சு போதன்மிஞ்சி மானகஞ்ச
பாதம்வஞ் நெஞ்சனில்வைப் பாய்.

### கும்மி

சக்தி சடாதரி வாலைப்பெண் ணாமந்த
உத்தமி மேற்கும்மிப் பாட்டுரைக்க
வித்தைக் குதவிய வொற்றைக்கொம் பாம்வாலை
சித்தி விநாயகன் காப்பா மே. 1

---

காப்பு : வேதம் அஞ்சு போதன்மிஞ்சி - வேதாவே அஞ்சும்படி போதம் மிஞ்சிய ஞானி.
கஞ்சமலர் - தாமரைப் பாதம்.

1. சடாதரி - சடைச்சி.
வாலை சித்தி விநாயகன் - பாலசித்தி விநாயகன்.

குருவுக்கு வணக்கம் மிக்க பணிவோடும் பக்தியோடும் செலுத்திவிட்டு விநாயகன் காப்பைப் பாடுகிறார். வாலைக்கும்மிக்குக் காப்பாக அமைவன் பால விநாயகன், பால சித்தி விநாயகன் என்பதால் ஒரு நயம். ஒற்றைக் கொம்பு என்று ஓர்மை கொண்டுவந்து ஞானத்திற்குரிய தன்மையையும் பொருத்துகிறார்.

## சரஸ்வதி துதி

சித்தர்கள் போற்றிய வாலைப்பெண் ணாமந்தச்
சத்தியின் மேற்கும்மிப் பாட்டுரைக்கத்
தத்திமி தோமென ஆடுஞ் சரஸ்வதி
பத்தினி பொற்பதங் காப்பாமே. 1

## சிவபெருமான் துதி

எங்கும் நிறைந்தவள் வாலைப்பெண் ணாம்மாலின்
தங்கையின் மேற்கும்மி பாடுதற்குக்
கங்கை யணிசிவ சம்புவாஞ் சற்குரு
பங்கயப் பொற்பதங் காப்பாமே. 2

---

1. அந்தச் சத்தி - வாலையாகிய பாலா திரிபுர சுந்தரியே சக்தியும் ஆவாள். திருமூலர் இந்த ஞானப் பேருண்மையைப் பல இடங்களில் அழகோடு பாடுகிறார். ஆடும் சரஸ்வதி - நடன சரஸ்வதி.

2. மாலின் தங்கை - சக்தியாகிய வாலை திருமாலின் தங்கையாவாள். சிவசம்புவாம் சற்குரு - சகஸ்ரதளத்திலே மனோன்மணியாகிய வாலையுடன் கோயில்கொண்ட சதாசிவ மூர்த்தி. பங்கயப் பொற்பதம் - தாமரைபோன்ற பொன்னார் திருவடி.

சதாசிவமாகிய சற்குருவின் திருவடிகளைச் சொல்லும்போது பங்கயம் என்பதில் உள்ள நயம் சகஸ்ரதளத்தை நினைவூட்டுதற்காகும். பொற்பதம் என்ற சொல்லிலும் உள்ளுறை என்னவென்றால், பொன்னம்பலமாகிய உச்சியிலே அருள்நிரம்பி நிற்றலைச் சுட்டுகிறது.

## சுப்பிரமணியர் துதி

ஞானப்பெண் ணாமருள் சோதிப்பெண் ணாமாதி
வாலைப்பெண் மேற்கும்மி பாடுதற்கு
மானைப்பெண் ணாக்கிய வள்ளிக் கிசைந்திடும்
மால்முரு கேசனுங் காப்பாமே. 1

## விஷ்ணு துதி

ஆண்டிப்பெண் ணாம்ராச பாண்டிப்பெண் ணாம்வாலை
அம்பிகை மேற்கும்மி பாடுதற்குக்
காண்டீப னாற்பணி பூண்டவன் வைகுந்தம்
ஆண்டவன் பொற்பதங் காப்பாமே. 2

## நந்தீசர் துதி

அந்தரி சுந்தரி வாலைப்பெண் ணாமந்த
அம்பிகை மேற்கும்மி பாடுதற்குச்
சிந்தையில் முத்திநல் விந்தையாய் வந்திடும்
நந்தீசர் பொற்பதங் காப்பாமே. 3

---

1. அருள் சோதிப்பெண் - திருவருளான ஒளிச் சுடராகக் காட்சி தருகிற அம்மை.
மானைப் பெண்ணாக்கிய வள்ளி - மானீன்ற வள்ளிப்பெண்.

2. ஆண்டிப்பெண் - ஆண்டியோடு ஆடுகிற பெண்.
பாண்டிப்பெண் - பாண்டிய ராணி.
காண்டீபனாற் பணிபூண்டவன் - காண்டீபனுக்கு,
அருச்சுனனுக்குத் தேரோட்டியாகப் பணி கொண்டவன்.

3. அந்தரி - வானமாகிய உச்சியில் உறைபவள்.
விந்தையாய் வந்திடும் - கலைவடிவிலே, கவியாக்க வடிவிலே தோன்றிவருகிற.
நந்தீசர் - சித்தர்கணம் முழுமைக்குமே வழிகாட்டி என்று வணங்கப்பெறுகிற நந்தி.
"நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்" என்ற திருமந்திரமும் இதையே வலியுறுத்தும்.

## நூல்

தில்லையில் முல்லையி லெல்லையு ளாடிய
வல்லவள் வாலைப்பெண் மீதினிலே
சல்லாபக் கும்மித் தமிழ்பா டவரும்
தொல்லை வினைபோக்கும் வாலைப்பெண்ணே. 1

மாதா பிதாகூட இல்லாம லேவெளி
மண்ணும்விண் ணுமுண்டு பண்ணவென்று
பேதைப்பெண் ணாமுதல் வாலைப்பெண் ணாளென்று
புகுந்தா ளிந்தப் புவியடக்கம். 2

வேதமும் பூதமுண் டானது வும்வெளி
விஞ்ஞான சாத்திர மானதுவும்
நாதமுங் கீதமுண் டானது வும்வழி
நான்சொல்லக் கேளடி வாலைப்பெண்ணே. 3

---

1. முல்லை - காடு, இங்கே தில்லைவனம். சல்லாபக் கும்மித்தமிழ் - பேரின்ப விளையாட்டைச் சொல்வதற்குரிய சந்தத்தில் அமைந்த கும்மித்தமிழ். தொல்லைவினை - பழவினை.

2. பிரபஞ்ச உற்பத்திக்கு மற்ற உயிரினப் பெருக்கத்திற்குரிய தாய் தந்தை என்ற கருஉறவு இல்லை.

3. இந்த அண்ட பிண்ட சராசரங்களும் ஒலியும் ஓசையும் உண்டான படைப்பு நுட்பத்தைச் சொல்கிறேன் என்கிறார் சித்தர்.

எல்லாமே பார்வையால் உண்டாயிற்று, அந்தப் பார்வையும் மனக்கருத்திலிருந்து உண்டாயிற்று என்ற பேருண்மை, ஞானம் பயில்கிற மாணவர்கள் உணர்ந்த சித்தர் கல்வியாம்.

முந்தச் செகங்களுண் டானது வும்முதல்
தெய்வமுநீ தேவருண் டானதுவும்
விந்தையாய் வாலையுண் டானது வும்ஞான
விளக்கம் பாரடி வாலைப்பெண்ணே. 1

அரிக்கு முந்தின தவ்வெழுத்தாம் பின்னும்
அரிக்குள் நின்றதும் அஞ்செழுத்தாம்
தரிக்கும் முந்தின தஞ்செழுத்தாம் வாசி
பரிக்குள் நின்றது மஞ்செழுத்தாம். 2

ஆதியி லைந்தெழுத் தாயினாள் வாலைப்பெண்
ஐந்தெழுத் துமென்று பேரானாள்
நாதியி லூமை யெழுத்திவள் தானல்ல
ஞான வகையிவள் தானானாள். 3

---

1. செகங்கண்ட அண்டங்கள்.
தெய்வமும் தேவரும் - தேவதைகளும் அமரரும்.

2. 'அ' என்பது கிரியா சக்தி.
மணிபூரக நிலையும், மூலாதார நிலையும், சுழுமுனை நிலையும் சங்கேதமாகத் திருமாலோடு இணைத்துச் சொல்லப் பட்டன.
திருமால்நிலை மணிபூரகம்.

3. ஐந்தெழுத்து - சூக்கும பஞ்சாட்சரம்.
ஊமை எழுத்து என்பது 'ஓம்'.

மூலாதாரத்திலுள்ள ஓங்காரப் பிரணவம் அ உ ம் என்ற மூன்றன் ஒலிச்சேர்க்கை.

ஆறு ஆதாரங்களிலும் ஓம், ந, ம, சி, வ, ய என்பன அட்சர நிலைகள். தியான நிலையில் இவை முறையே நான்கு இதம் கொண்ட கமலம், ஆறு இதழ் கொண்ட கமலம், பன்னிரண்டு இதழ், பதினாறு இதழ், மூன்று இதழ் கொண்ட கமலம் ஆகிய வடிவில் காட்சி தரும். இவற்றுக்கு மேலே ஆக்ஞைக்கு மேலே ஆயிரம் இதழுடைய தாமரை.

ஊமையெழுத்தே உடலாச்சு மற்றும்
ஓமென் றெழுத்தே யுயிராச்சு
ஆமிந் தெழுத்தை யறிந்துகொண் டுவிளை
யாடிக் கும்மி யடியுங்கடி. 1

செகம்ப டைத்ததும் அஞ்செழுத்தாம் பின்னும்
சிவன் படைத்தலும் அஞ்செழுத்தாம்
உகமு டிந்தது மஞ்செழுத் தாம்பின்னும்
உற்பன மானது மஞ்செழுத்தாம். 2

சாத்திரம் பார்த்தாலுந் தானுமென்ன வேதந்
தானுமே பார்த்திருந் தாலுமென்ன
சூத்திரம் பார்த்தல்லோ ஆளவேணு மஞ்சு
சொல்லை யறிந்தல்லோ காணவேணும். 3

காணாது கிட்டாதே எட்டாதே அஞ்சில்
காரிய மில்லையென் றேநினைத்தால்
காணாதுங் காணலா மஞ்செழுத் தாலதில்
காரிய முண்டு தியானஞ் செய்தால். 4

---

1. 'ம்' என்பது உடலாகவும், 'ஓம்' என்பது உயிராகவும் ஆன நுட்பம் அவ்வை குறளின் உரைப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

2. பஞ்சாட்சரத்தின் ஐந்தெழுத்து நிலைகளையும். ஆதாரங்களிலே படைப்புக் கடவுள், காப்புக் கடவுள், நீக்கும் கடவுள் ஆகிய இறைநிலைகளும் முன்பகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன.

3. சூத்திரம் - எழுத்தின் நுட்பம். அதாவது எழுத்துக்கள் என்று குறிப்பது சொல்லின் ஒலிகளை அல்லாமல், ஆற்றல் நிலைகளை என்ற உண்மையை அனுபவித்து உணரவேண்டும்.

4. காணாது - காணமுடியாது. கிட்டாதே - கிட்ட மாட்டாது. எட்டாதே - அணுகமுடியாது. காணாதும் காணலாம் - புறப்பார்வை கொண்டு பார்க்காமலேயே பார்க்கலாம், பார்க்க முடியாததையும் பார்க்கலாம்.

ஆயனு மைந்தா மெழுத்துக்குள் ளேயறி
வாயனு மைந்தா மெழுத்துக்குள்ளே
வாயனு மைந்தா மெழுத்துக்குள்ளே ளேயிந்த
வாலையு மைந்தா மெழுத்துக்குள்ளே. 1

அஞ்செழுத் தானதும் எட்டெழுத் தாம்பின்னும்
ஐம்பத்தோர் அட்சரந் தானச்சு
நெஞ்செழுத் தாலே நிலையா மலந்த
நிசந்தெ ரியுமோ வாலைப்பெண்ணே. 2

ஏய்க்கு தேய்க்கு தஞ்செழுந் துவகை
எட்டிப் பிடித்துக்கொ ளிரண்டெழுத்தை
நோக்கிக்கொள் வாசியை மேலாக வாரி
நிலையைப் பாரடி வாலைப்பெண்ணே. 3

சிதம்பர சக்கரந் தானறி வாரிந்தச்
சீமையி லுள்ள பெரியோர்கள்
சிதம்பர சக்கர மென்றால் அதற்குள்ளே
தெய்வத்தை யல்லோ அறியவேணும். 4

---

1. ஆயன் - திருமால்.
அறிவாயன் - குரு.
வாயன் - இறைவன்.

2. எழுத்துநிலை என்ற பகுதியும் முதலாவது பகுதியிலுள்ள வரைபடமும் காண்க.

3. இரண்டெழுத்து - மூலாதாரத்தில் சூரிய சந்திர ஆற்றல்களான பிங்கல நாடியும், இடநாடியும் கூடி முதலாவது பின்னல் தொடங்குகிறது. இதுவே படைப்புக்கு முதல்நிலை. பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய சக்திகள் மூன்றுமே அங்கு இடம் பெற்றுள்ளதை உணர்விலே காட்டுவதுதான் எங்கள் ஞானகுரு சிவயோகி இரத்தினசபாபதியார் வழங்குகிற மூலக்கனலின் முதலாவது தீட்சை.

4. முதலாம் பகுதியில் உள்ள ஓவியத்தில் இதைக் காணலாம்.

மனமு மதியு மில்லாவி டில்வழி
மாறுதல் சொல்லியே யென்ன செய்வாள்
மனமு றுதியும் வைககவே ணும்பின்னும்
வாலை கிருபையுண் டாகவேணும். 1

இனிவெ ளியினிற் சொல்லா தேயெழில்
தீமட்டு திந்த வரிவழிக்கே
கனிமொ ழிச்சியீர் வாருங்கடி கொஞ்சங்
கருவைச் சொல்லுவேன் கேளுங்கடி. 2

ஊத்தைச் சடலமென் றெண்ணா தேயிதை
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே
பார்த்த பேருக்கே ஊத்தையில் லையிதைப்
பார்த்துக்கொள் உன்ற னுடலுக்குள்ளே. 3

---

1. 'மடைமாற்றம்' என்ற யோகக் கல்விக்கு அடிப்படையாக வேண்டுவன, மனமும் அறிவும.

2. எழில் நெருப்பு என்கிற பேரின்பக் கனல் விழியில் விளையாடும். இது பரம இரகசியம்.

3. ஊத்தைச்சடலம் - அழுக்குடம்பு.
உப்பிட்ட பாண்டம் - ஆசைகள் நிரம்பிய பற்றான பானை.

இந்தப் பாடல் சிறு மாறுதல்களுடன் வேறு இடங்களிலும் வருகிறது. ஞானக்கும்மி போன்ற வேறு சில நூல்களிலும் இதைக் காணலாம். இதனால் பெறப்படுவது என்னவென்றால், சித்தர்கள் அனைவருமே உடம்பை உதாசீனமாகக் கருதுவதை எதிர்க்கிறார்கள். அவர்களே இந்த உடம்பைத் துச்சமாகப் பேசிவிட்டு இவ்வாறு சொல்வதன் முரண்பாடு என்ன என்று கேட்கலாம். ஞானம் இல்லாதவருக்கு இந்த உடம்பு பயனற்ற சேறு. ஆனால் ஞானம் கைவந்தாலோ இதே சேறு தங்கமாகும்! இதுவே இதை வெல்வதற்குரிய கருவியாகவும் பயன்படுகிறது. இதைத் தவிர வேறு சாதனம் வெளியே இல்லை.

உச்சிக்கு நேராயுண் ணாவுக்கு மேல்நிதம்
வைத்த விளக்கும் எரியுதடி
அச்சுள்ள விளக்கு வாலைய டியவி
யாம லெரியுது வாலைப்பெண்ணே. 1

எரியு தேஅறு வீட்டினி லேயதில்
எண்ணெயில் லையமிழ் தண்ணீரில்லை
தெரியுது போக வழியுமில் லைபாதை
சிக்குது சிக்குது வாலைப்பெண்ணே. 2

சிலம்பொ லியென்னக் கேட்கும டிமெத்த
சிக்குள்ள பாதை துடுக்கமடி
வலம்புரி யச்சங்க மூது மடிமேலே
வாசியைப் பாரடி வாலைப்பெண்ணே. 3

---

1. உள்ளொளியின் இடம் கூறுகிறார். அந்த ஒளியே நித்திய ஒளியான நந்தா விளக்காகும். அதுவே வாலை.

2. ஆறு ஆதார நிலைகளிலும் அந்தக் கனல் சுடர்கிறது. அது எண்ணெயில்லாமல் எரிகிற மனவிளக்கு. அதைக் குளிர வைப்பதற்குத் தண்ணீர் இல்லை. அதனால் அது அமிழாது. அந்த ஒளி தெரிகிறது. அதை எட்டுவதற்கு வழி? அந்த வழியே சிக்கல் உள்ள ஞானப் பாதையாகிய ஆதார நெறி.

3. அங்கே சிலம்பொலி போலக் கேட்கிறது. பாதை சிக்கலானது. நெருக்கமானது. மேலே வலம்புரிச்சங்கம் ஒலிக்கிற நாதமும் கேட்கிறது. வாசியைக் கூர்ந்து பார்ப்பாயாக! இந்த ஒளி அனுபவத்தையும் ஒளியின் வகைகளையும் திருமூலரும் தமது நூலில் எடுத்தோதுகிறார்.

வாசிப் பழக்க மறியவே ணுமற்று
மண்டல வீடுகள் கட்டவேணும்
நாசி வழிக்கொண்டு யோகமும் வாசியும்
நாட்டத்தைப் பாரடி வாலைப்பெண்ணே. 1

மூச்சுட ரான விளக்கனுள் ளேமூல
மண்டல வாசி வழக்கத்திலே
எச்சுட ராகி யந்தச் சுடர்வாலை
இவள்விட வேறில்லை வாலைப்பெண்ணே. 2

சூடாமல் வாலை யிருக்கிற தும்பரி
சுத்த சிவனுக்குள் ளானதால்
வீடாமல் வாசிப் பழக்கத்தைப் பாருநாம்
மேல்வீடு காணலாம் வலைப்பெண்ணே. 3

மேல்வீடு கண்டவன் பாணியடி விண்ணில்
விளக்கில் நின்றவன் வாணியடி
தாய்வீடு கண்டவன் ஞானிய டிபரி
தாண்டிக் கொண்டான்பட் டாணியடி. 4

---

1. வாசிப்பழக்கம் - மூச்சுப்பயிற்சி. மண்டல வீடுகள் கண்டவேணும் - சூரிய சந்திர மண்டலங்களை இணைத்துக் கட்டவேண்டும். நாசிவழியே யோகம் இயற்றி நாட்டாக அகப்பார்வையைச் செலுத்துவாயாக!

2. வாசி வழக்கத்தினால் மூன்று சுடரும் கூடி உயர்ந்த ஓர் சுடராக நிற்கும். அதுவே வாலை.

3. சூடாமல் - சூடு ஆகாமல்.
வீடாமல் - முறிவு வரும்படி விட்டுவிடாமல்.
மேல்வீடு - முத்திநிலை.

4. பாணி - கைவந்தவன். வாணி - ஒலி அறிந்தவன். தாய்வீடு - உச்சியின் மேல் நிலை. பரிதாண்டுல் - வாசி ஏறிச்செல்லுதல். பட்டாணி - தளபதி.

அத்தியி லேகரம் பத்தியி லேமனம்
புத்தியி லேநடு மத்தியிலே
நெற்றி சதாசிவ மென்றுசொன் னேனுன்றன்
நிலைமையைப் பாரடி வாலைப்பெண்ணே. 1

அழுத்தி லேசொல்லஞ் செழுத்தி லேநானும்
வழுத்தி னேன்ஞானப் பழத்திலே
கழுத்தி லேமயெஸ் வரனு முண்டுகண்
கண்டு பாரடி வாலைப்பெண்ணே. 2

அஞ்சிலே பிஞ்சிலே வஞ்சிய ரேநிதம்
கொஞ்சி விளையாடும் வஞ்சியரே
நெஞ்சிலே ருத்திரன் சூழிருப் பானவன்
நேருட னாமடி வாலைப்பெண்ணே. 3

தொந்தியி லேநடுப் பந்தியி லேதிடச்
சிந்தையி லேமுந்தி யுன்றனுடன்
உந்தியில் விஷ்ணுவுந் தாமிருப் பாரிதை
உண்மையாப் பாரடி வாலைப்பெண்ணே. 4

---

1. அத்தி - மூலாதார நிலை, கணபதி இருப்பிடம். கரம் - பிடிப்பு. பத்தியிலே - ஆதார வரிசையிலே. நடுமத்தி - நடுநாடி மையம்.

2. ஆதார நிலைகளிலுள்ள இறையாற்றல்களைக் கூறியவாறு. விசுத்தியிலே மகேசுவரன் நிலை சொல்கிறார்.

3. அநாகதத்தில் உருத்திரன் நிலை பேசுகிறார்.

4. மணிபூரகத்தில் திருமால்நிலை பேசுகிறார்.
ஆதார நிலைகளில் உள்ள வடிவமும் இதழ்களும் கூறுகிற சித்தர்கள், அந்தந்த நிலைகளில் எத்தகைய கடவுளாற்றல்கள் தொழிற்படுகின்றன என்பதையும் கண்டு வகைசெய்து பாடியுள்ளார்கள். இவையனைத்தும் ஒளியும் ஒலியுமான பேராற்றல்கள். இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு உருவக மொழிகளைக் கையாள்கிறது சித்தர் இலக்கியம்.

ஆலத்திலே யிந்த ஞாலத்தி லேவருங்
காலத்தி லேயனு கூலத்திலே
மூலத்தி லேப்ரமன் தானிருந் துவாசி
முடிக்கிறான் பிண்டம் பிடிக்கிறானே. 1

தேருமுண் டைஞ்நூறும் ஆணியுண் டேஅதில்
தேவரு முண்டுசங் கீதமுண்டே
ஆருண்டு பாரடி வாலைத்தெய் வம்மதில்
அடக்கந் தானடி வாலைப்பெண்ணே. 2

ஒன்பது வாயில்கொள் கோட்டையுண் டேஅதில்
உள்ளே நிலைக்கார ரஞ்சுபேராம்
அன்புட னேபரி காரர்க ளாறுபேர்
அடக்கந் தானடி வாலைப்பெண்ணே. 3

---

1. பிரம்மனுடைய நிலையமான சுவாதிட்டானம் சொல்லிலே சித்தரிக்கப்படுகிறது.

2. சிதம்பர வைபவம் கூறுகிறார். அச்சாணிகள் கொண்ட தேரும், அதில் அமரர்களும் சங்கீதமும் உண்டு. வாலைத் தெய்வமாகிய மனோன்மணியின் ஐக்கியமும் அங்கே.

3. ஒன்பது வாயிற் கோட்டை - ஒன்பது வாசல் கொண்ட இந்த உடம்பு.

அஞ்சு பேர் - பஞ்சேந்திரியங்கள்.

பரிகாரராகிய குதிரைப் பாகர் மூச்சு வளைக்கின்ற ஆறு ஆதார ஆற்றல்கள்.

இந்த ஆதார நிலைகளும் இவற்றில் நடைபெறுகின்ற இயக்கங்களும் முன் பாடல்களிலும் கூறப்பெற்றுள்ளன.

இந்த விதத்திலே தேகத்தி லேதெய்வம்
இருக்கையில் புத்திக்க றிக்கையினால்
சந்தோட வாலையைப் பாராமல் மனிதர்
சாகிறதேதடி வாலைப்பெண்ணே. 1

நகார திட்டிப்பே ஆனத னால்வீடு
வான வகார நயமாச்சு
உகார முச்சி சிராசாச் சேஇதை
உற்றுப் பாரடி வாலைப்பெணணே. 2

வகார மானதே ஓசையாச் சேஅந்த
மகார மானது கர்ப்பமாச்சே
சிகார மானது மாய்கையாச் சேஇதைத்
தெளிந்து பாரடி வாலைப்பெண்ணே. 3

---

1. இவ்வாறு உடம்பின் நிலைகளிலே தெய்வம் குடி கொண்டிருக்கிறது. வாலையைப் பார்த்தால் இது புரியும். இதைச் செய்யாமல் மனிதர்கள் புத்தியில்லாமல் மடிகிறார்களே!

2-3. ஓம் என்பதிலுள்ள 'அ' சூரியன், 'உ' சந்திரன், 'ம்' நெருப்பு. இந்த மூன்றும் பருஉடல், நுண்ணுடல், இலிங்கஉடல் ஆயின. சிவயநம என்பதில் ய உயிரானது. மண் என்பது நகாரம். தண்ணீர் என்பது மகாரம். நெருப்பே சிகாரம். வகாரமே காற்று. வான் என்பது யகாரம்.

இந்த எழுத்து நுட்பங்களுக்குள்ளே ஞானப் பயிற்சிமுறை அடங்கியிருப்பதால், இந்த அட்சரங்களைப் படித்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு ஆன்ம ஆற்றலில் நிலையமாக விளங்குகிறது. இது மெய்யாகவே உடம்புகொண்டு கற்கவேண்டிய ஆதாரக் கல்வி.

ஓமென்ற அட்சரந் தானுமுண் டதற்குள்
ஊமை யெழுத்து மிருக்குதடி
நாமிந்தெ ழுத்தை யறிந்துகொண் டோம்வினை
நாடிப் பாரடி வாலைப்பெண்ணே. 1

கட்டாத காளையைக் கட்டவே ணுமாசை
செட்டவே ணும்வாசி யொட்டவேணும்
எட்டாத கொம்பை வளைக்கவே ணுங்காய
மென்றைக்கி ருக்குமோ வாலைப்பெண்ணே. 2

இருந்த மார்க்கமாய்த் தானிருந்து வாசி
ஏற்காம லேதான டக்கவேணும்
திரிந்தே ஓடி யலைந்துவெந் துதேகம்
இறந்து போச்சுதே வாலைப்பெண்ணே. 3

பூத்த மலராலே பிஞ்சுமுண் டேஅதில்
பூவில்லாப் பிஞ்சு மனேகமுண்டு
மூத்த மகனாலே வாழ்வுமுண் டுமற்ற
மூன்றுபே ராலே அழிவுமுண்டு. 4

---

1. ஊமை எழுத்து - 'ம்' என்ற ஒலி.

2. கட்டாத காளை - காம இச்சை.
எட்டாத கொம்பு - முதுகந்தண்டு. இதுவே மூலக்கனலின் நெறி.

3. அமர்ந்தவாறு வாசியோகம் பயில வேண்டும்.

4. பிஞ்சும் உண்டு - அந்த மலரே பிஞ்சாகிறது.
பூவில்லாப் பிஞ்சு - பலாமரம் போன்று பூக்காமலே காய்ப்பதும் உண்டு.
மூத்தவனும் மூவரும் - அகக்கருவிகளாகிய நான்கு; மனம், அறிவு, நினைவு, முனைப்பு என்கிற டினம், புத்தி, சித்தம், அகங்காரம். மூத்தவன் - அகங்காரம். நல்லதோ கெட்டதோ ஈடுபடுவதற்குரிய இயக்கமாக அகங்காரம் முனைகிறது.

காலனைக் காலா லுதைத்தவ ளாம்வாலை
ஆலகா லவிட முண்டவளாம்
மாளாச் செகத்தைப் படைத்தவ ளாமிந்த
மானுடன் கோட்டை யிடித்தவளாம். 1

மாதாவாய் வந்தே அமுதந்தந் தாள்மனை
யாட்டியாய் வந்து சுகங்கொடுத்தாள்
ஆதர வாகிய தங்கையா னாள்நமக்
காசைக் கொழுந்தியு மாமியானாள். 2

சிரித்து மெல்லப் புரமெரித்தாள் வாலை
செங்காட்டுச் செட்டியைத் தானுதைத்தாள்
ஒருத்தி யாகவே சூரர்த மைவென்றாள்
ஒற்றையாய்க் கஞ்சனைக் கொன்றுவிட்டாள். 3

---

1. சிவனும் சத்தியும் ஒன்றே என்ற நிலையில் சிவன் செயல்களை வாலைக்கு ஏற்றிப் பாடுகிறார்.

2. நம்முடைய சுற்றத்துப் பெண்மணிகள் அனைவரும் வாலையின் வடிவங்களாகவே கண்டு பாடுகிறார். அன்னையாகவும், மனைவியாகவும், தங்கையாகவும், கொழுந்தியாகவும் வந்த அனைத்தும் வாலை என்ற தெய்வ தத்துவமே!

3. சிவன், காளி, முருகன், கண்ணன் எல்லாம் வாலையே என்ற ஏகதெய்வ ஒருமைப்பாட்டிலே பாடுகிறார். ஒரே பரம்பொருள்தான் புராணக் கதைகளிலே பற்பல உருவில் பற்பல நிகழ்ச்சிகளுடன் இணைத்துப் பேசப்படுகிறது. சமரச நன்னிலை கண்ட வித்தகச் சித்தரின் பார்வை இதுவே. இஃதே பார்வையாகும்.

இப்படி யல்லோ இவள்தொழி லாமிந்த
ஈனா மலடி கொடுஞ்சூலி
மைப்படுங் கண்ணியர் கேளுங்கடி அந்த
வயசு வாலை திரிசூலி. 1

கத்தி பெரிதோ யுறைபெரி தோவிவள்
கண்ணு பெரிதோ முகம்பெரிதோ
சத்தி பெரிதோ சிவம்பெரி தோநீதான்
சற்றே சொல்லடி வாலைப்பெண்ணே. 2

அன்னம் பெரிதல்லால் தண்ணீர் பெரிதல்ல
அப்படி வாலை பெரிதானால்
பொன்னு பெரிதல்லால் வெள்ளி பெரிதல்ல
பொய்யாது சொல்லுகிறேன் கேளுங்கடி. 3

---

1. ஈனா மலடி - கன்னி. கொடுஞ்சூலி - சூலாயுதம் ஏந்தியவள். திரிசூலி - திரிசூலம் தாங்கியவள், பராசக்தி.

"அகிலாண்ட கோடியெலாம் ஈன்ற அன்னையே
பின்னையும் கன்னிஎன மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே"

என்று பாடினார் தாயுமானவர். இதையே வயசு வாலை என்றார் கொங்கண நாயனார்.

2. முகத்தில் கண் இருக்கிறது, இறையில் கத்தி இருப்பதுபோல். கண் என்றால் வாள்போன்று கூரி, கடல்போன்று பெரிய வாட்டடங்கண்! சத்தி சிவனுள் அடக்கம் எனினும் எந்த ஆற்றல் பெரிய ஆற்றல்?

3. தண்ணீரைப் பிரித்து உண்ணுகிற அன்னமே பெரிது. அப்படியே சக்தி என்ற ஆற்றல் வடிவு பெரிதுதான்! வெள்ளியைவிடத் தங்கத்தின் பெருமை பெரிதே!

சித்தர்கள் தாயைக் கொண்டு தந்தையை அணுகுபவர்கள். யோகநெறியிலும் சந்திர கலையூடு சென்று சூரியனைச் சேருவர். நயனப் பயிற்சியிலும் சந்திரனாகிய இடக்கண்ணுக்கே முதலாவது இடம்.

மாமிச மானா லெலும்புமுண் டுசதை
வாங்கி யோடு கழன்றுவிடும்
ஆமிச மிப்படிச் சத்தியென் றேவிளை
யாடிக் கும்மி அடியுங்கடி. 1

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் விளையாதென்று
கண்டுகொண் டுமுன்னே அவ்வைசொன் னாளது
வுண்டோ வில்லையோ வாலைப்பெண்ணே. 2

மண்ணுமில் லாமலே விண்ணுமில் லைகொஞ்சம்
வாசமில் லாமலே பூவுமில்லை
பெண்ணுமில் லாமேலே யாணுமில் லையிது
பேணிப் பாரடி வாலைப்பெண்ணே. 3

நந்தவ னத்திலே சோதியுண் டுநிலம்
நித்திய பேருக்கு நெல்லுமுண்டு
விந்தையாய் வாலையைப் பூசிக்க முன்னாளில்
விட்ட குறைவேணும் வாலைப்பெண்ணே. 4

---

1. மாமிசம் என்றால் உள்ளே எலும்பு உண்டு. சதையைப் பிடுங்கினால், அது மட்டும் தனியே கழன்று வரும். உள்ளமைப்பு எப்போதுமே வலிமையுடையது. வாலை என்பவள் உள் ஆற்றலின் அம்சமான சக்தி.

2. முளைப்பது அரிசி எனினும், உமி விலகிவிட்டால் அரிசி முளைக்காது. "பண்டு முளைப்பது" என்ற அவ்வையார் பாடல் இதையே வற்புறுத்துகிறது.

3. சிந்தித்துப் பார்த்தால் நிலம் இல்லாமல் வானம் ஏது? வாசமில்லாமல் பூ ஏது? சக்தி அல்லல் ஆற்றல் இல்லாமல் என்ன இயக்கம் உண்டு. பெண் இல்லாமல் ஆண் எப்படி?

4. உடம்பாகிய நந்தவனத்தில் ஒளி உண்டு. விரும்பி உழவு செய்வாருக்கு நெல் உண்டு. அவ்வாறே வாலையைப் பூசித்தால்தான் சதாசிவத்தைக் கூட முடியும்! அதற்கு முன்வினைப் பிணப்பாகிய விட்டகுறை வேண்டும்.

வாலையைப் பூசிக்கச் சித்தரா னார்வாலைக்
கொத்தாசை யாய்ச்சிவ கர்த்தரானார்
வேலையைப் பார்த்தல்லோ கூலிவைத் தாரிந்த
விதந்தெரியுமோ வாலைப்பெண்ணே. 1

வாலைக்கு மேலான தெய்வமில் லைமானங்
காப்பது சேலைக்கு மேலுமில்லை
பாலுக்கு மேலான பாக்கியமில் லைவாலைக்
கும்மிக்கு மேலான பாடலில்லை. 2

நாட்டத்தைக் கண்டா லறியலா குமந்த
நாலாறு வாசல் கடக்கலாகும்
பூட்டைக் கதவைத் திறக்கலா கும்மிது
பொய்யல்ல மெய்யடி வாலைப்பெண்ணே. 3

ஆணும்பெண் ணுங்கூடி யானதனாற் பிள்ளை
ஆச்சுதென் றேநீரும் பேசுகின்றீர்
ஆணும்பெண் ணுங்கூடி யானதல் லோபேதம்
அற்றொரு வித்தாச்சு வாலைப்பெண்ணே. 4

---

1. சித்தர் ஆனவர்கள் எல்லாம் வாலையை வழிபட்டவர்களே. சிவகர்த்தராவது வாலையன் வாயிலாகவே வேலைக்குத் தக்கவாறு கூலி என்பதுபோல், வாலைக்கு உழைக்கிற உழைப்பைப் பொறுத்து ஞானப்பலன் கிட்டும்!

2. மானம் காப்பதற்குச் சேலையை விட எது உண்டு? வாலையை விட்டால் மேலான தெய்வம் இல்லை. பாலுக்கு மேலான. பால் - பாக்கியத்திற்கு மேலான பாக்கியம் ஏது? வாலையின் துதிப்பாடலுக்கு மேலான துதி எதுவுமில்லை.

3. நாட்டத்தை, அகப்பார்வையைக் கண்டால்தான் பத்துமாதம் என்ற பதவி வாயிலைக் கடக்கமுடியும். மெய்ப்பூட்டைத் திறக்கலாவதும் வாலை வழிபட்டினாலேதான்!

4. ஆணும் பெண்ணும் சேர்ந்து கருத்தரிக்கிறது என்று பேசுகிறீர்கள். ஆணும் பெண்ணும் கூடியதால் பேதமற்ற வித்து உண்டாயிற்று என்பதை மறந்துவிடலாமா?

இன்றைக் கிருப்பதும் பொய்யல்ல வேவீடே
என்வாழ்க்கை யென்பதும் பொய்யல்லவே
அன்றைக் கெழுத்தின் படிமுடி யும்வாலை
ஆத்தாளைப் போற்றடி வாலைப்பெண்ணே. 1

வீணாசை கொண்டு திரியா தேயிது
மெய்யல்ல பொய்வாழ்வு பொய்க்கூடு
காணாத வாலையைக் கண்டுகொண் டாற்காட்சி
காணலா மாகாயம் ஆளலாமே. 2

பெண்டாட்டி யாவதும் பொய்யல்ல வோபெற்று
பிள்ளைக ளாவதும் பொய்யல்லவோ
கொண்டாட்ட மான தகப்பன்பொய் யேமுலை
கொடுத்த தாயும் நிசமாமோ. 3

---

1. பொய்யல்லவே - வெறும் பொய் அல்ல. அன்றைக்கு எழுத்தின்படி - பிறந்தபோது கொண்டு வருகிற எழுத்தின்படியே.
ஆத்தாள் - அம்மை.

2. வீணாசைகள் கொண்டால் அது பொய் வாழ்க்கை.
உடம்பும் பொய்க்கூடு.
இதுவே வாலையின் அருள்பெற்று விட்டால் மெய்க் காட்சியாக மாறிவிடும்.
ஆகாயம் ஆளலாம் - வான்பதவி கிட்டும்.

3. உலக உறவுகள் அனைத்தும் நிலையற்றவையே. வாலை என்ற உறவு ஒன்றே நிலையான பிணைப்பு. நிலையான நிலைக்கு ஆளாக்கவும் வல்லது.

தாயும்பெண் டாட்டியுந் தான்சரி யேதன்யம்
தாமே யிருவருந் தாங்கொடுத்தார்
காயும் பழமுஞ் சரியா மோஉன்றன்
கருத்தைப் பார்த்துக்கொள் வாலைப்பெண்ணே. 1

பெண்டாட்டி மந்தைமட்டும்வரு வாள்பெற்ற
பிள்ளை மசானக் கரையின்மட்டும்
தெண்டாட்டுத் தர்மம் நடுவினிலேவந்து
சேர்ந்து பரகதி தான்கொடுக்கும். 2

பாக்கிய மும்மகள் போக்கிய மும்ராச
போக்கிய மும்வந்த தானாக்கால்
சீக்கிரந் தருமஞ் செய்யவேண் டுங்கொஞ்சந்
திருப்ப ணிகள்மு டிக்கவேண்டும். 3

---

1. தாயும் மனைவியும் (இரு வேறு பாங்கிலே) தன்யம், கொங்கை, தந்தார். இரண்டும் சரி.

ஆனால் காயும் பழமும் எப்படிச் சரியாகும்?

2. மந்தை மட்டும் - பொது இடம், வாசல் வெளி வரையில்.
மசானக்கரை - சுடுகாடு.
தெண்டாட்டுத் தருமம் - தேடிச் சம்பாதித்த புண்ணியம்.

3. மகள் போக்கியம் - திருமகளின் வரமான துய்ப்பு. சீக்கிரம் - நாளைக்கு என்று தள்ளிப்போடாமல். திருப்பணிகள் - நற்செயல்களாகிய தான தருமங்கள், புண்ணிய வினைகள்.

திருப்பணி களைமு டித்தோ ருஞ்செத்துஞ்
சாகாத பேரி லொருவரென்றும்
அருட்பொ லிந்திடும் வேதத்தி லேயவை
அறிந்து சொன்னாளே வாலைப் பெண்ணே. 1

மெத்தை தனிலே படுத்திருந் துநாளும்
மெல்லிய ரோடு சிரிக்கும்போது
யுத்தகா லன்வந்து தான்பிடித் தால்நாளும்
செத்த சவமடி வாலைப்பெண்ணே. 2

ஏழை பனாதிக ளில்லையென் றாலவர்க்
கிருந்தா லன்னங் கொடுக்க வேண்டும்
நாளையென் றுசொல்ல லாகா தேயென்று
நான்மறை வேத முழங்குதடி. 3

பஞ்சை பனாதி யடியாதே யந்தப்
பாவந் தொலைய முடியாதே
தஞ்சமென் றோரைக் கெடுக்கா தேயார்க்கும்
வஞ்சனை செய்ய நினையாதே. 4

---

1. திருப்பணிகளை முடித்தவர்கள் மரணமிலாதவர். தம் புகழ் நிறுவித் தாம் மாய்ந்தவர், தம் புண்ணியம் சேர்த்துத் தாம் அதைக்கொண்டு சென்றவர். இவ்வாறு மறை சொல்கிறது.

2. சிற்றின்பத்தில் மூழ்கிய நிலையிலேயே சாவு வருகிறது.

3. திக்கற்றவரும் ஏழைகளும் இல்லை என்று வந்தால், அவர்களுக்கு நம்மிடம் இருக்கும் அன்னத்தை வழங்க வேண்டும். நாளைக்கு என்று தள்ளிப் போடலாகாது.

4. அனாதைகளை அடிப்பது தொலையாத பாவமாகும். தஞ்சம் என்றோர் - அடைக்கலமாக வந்தவர்.

கண்டதுங் கேட்டதுஞ் சொல்லாதே கண்ணில்
காணாத வுத்தரம் விள்ளாதே
பெண்டாட்டிக் குற்றது சொல்லாதே பெற்ற
பிள்ளைக் கிளப்பங் கொடுக்காதே. 1

சிவன்ற னடியாரை வேதிய ரைச்சில
சீர்புல ஞானப் பெரியோரை
மவுன மாகவும் வையா தேயவர்
மனத்தை நோகவும் செய்யாதே. 2

வழக்க ழிவுகள் சொல்லா தேகற்பு
மங்கையர் மேல்மனம் வையாதே
பழக்க வாசியைப் பார்த்துக்கொண் டுவாலை
பாதத்தைப் போற்றடி வாலைப்பெண்ணே. 3

கூடிய பொய்களைச் சொல்லாதே பொல்லாக்
கொலைக ளவுகள் செய்யாதே
ஆடிய பாம்பை யடியா தேயிது
அறிவு தானடி வாலைப்பெண்ணே. 4

---

1. உத்தரம் - செய்தி, சாட்சியம். இளப்பம் கொடுத்தல் - அளவுக்கு மீறிய செல்லம் கொடுத்தல்.

2. மௌனமாகவும் வையாதே - மனசுக்குள்ளே கூடத் தூற்றாதே.

3. வழக்கழிவுகள் - விதண்ட வாதங்கள்.

4. ஆடிய பாம்பை - படம் எடுத்து வருகிற நாகத்தை.

சமுதாய வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சில சீலங்களைக் கூறுகிறார். பொதுவான அறிவுரை இது.

காரிய னாகிலும் வீரியம் பேசவும்
காணா தென்றவ்வை சொன்னாளே
டாரினில் வம்புகள் செய்யா தேபுளிப்
பழம்போ லுதிர்ந்து விழுந்தானே. 1

காசார் கள்பகை செய்யா தேநடுக்
காட்டுப் புலிபின்னே நில்லாதே
தேசாந்த ரங்களுஞ் செல்லா தேமாய்கைத்
தேவடி யாள்தனம் பண்ணாதே. 2

தன்வீ டிருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே
உன்வீட்டுக் குள்ளேயே யூக மிருக்கையில்
ஓடித் திரிகிறாய் வாலைப்பெண்ணே. 4

---

1. காரியன் - செயல் திறன் மிக்கவன். காணாது - ஒவ்வாது
இந்தத் தவறுகளைச் செய்தால் புளியம்பழம் மரத்திலிருந்து விழுகிறது போலே வீழ்ச்சி ஏற்படும். அழிந்தானே - உறுதி, அவன் அழிந்து விடுவான். இறந்த கால வினை உறுதியை அடிக்கோடிடுவதற்காக.

2. காசார் - சுற்றத்தார்.
மாய்கைத் தேவடியாள்தனம் - மோசடியான விலைமாது போன்று நடிப்பினால் ஏமாற்றுகிற பொய்யன்பு.

3. அசல்வீடு போல் - பிறர்மனை நயத்தல்.
உன்வீட்டுக்குள்ளேயே ஊகம் - இந்த உடம்புக்குள்ளேயே மார்க்கம்.

பூரணன் நிற்கும் நிலையறி யான்வெகு
பொய்சொல்வான் கோடிமந் திரஞ்சொல்வான்
காரண குருஅ வனுமல் லவிவன்
காரிய கருபொ ருள்பறிப்பான். 1

எல்லா மறிந்தவ ரென்றுசொல் லியிந்தப்
பூமியி லேமுழு ஞானியென்று
உல்லாச மாக வயிறு பிழைக்கவே
ஓடித் திரிகிறார் வாலைப்பெண்ணே. 2

ஆதிவா லைபெரி தானா லும்மவள்
அக்காள் பெரிதோ சிவன்பெரிதோ
நாதிவா லைபெரி தானா லும்மவள்
நாயக னல்ல சிவம்பெரிது. 3

ஆயுசு கொடுப்பாள் நீரிழி வுமுதல்
அண்டாது மற்ற வியாதியெல்லாம்
பேயும்ப றந்திடும் பில்லிவி னாடியில்
பத்தினி வாலைப்பெண் பேரைச்சொன்னால். 4

---

1. போலி ஆசான்களைப் பற்றிப் பேசுகிறார் சித்தர். பூரணன் - முழுமுதற் கடவுள். அவன் காரண குரு அல்லன், காரியமான தன்னல ஆசான்!

2. ஆடம்பரங்களும் மோசடிகளுமாக வாழ்கிற பொய்க்குருமார்களின் நிலை இப்படி இருக்கிறது.

3. வாலையின் அக்காள் மகேசுவரி.
நாதி - உறவுக்காரி, சுற்றத்தாள்.

4. ஆயுசு - ஆயுள்.
வாலையின் பெயரை ஓதினால் போதும், நீரிழிவு போன்ற நோய்கள் அண்டாது. பேய், பில்லி எல்லாம் வினாடியில் பறந்துபோகும்.

நித்திரை தன்னிலும் வீற்றிருப் பாளெந்த
நேரத்தி லும்வாலை முன்னிருப்பாள்
சத்துரு வந்தாலும் தள்ளிவைப் பாள்வாலை
உற்றகா லனையுந் தானுதைப்பாள். 1

பல்லாயி ரங்கோடி யண்டமு தல்பதி
னான்கு புவனமும் பூர்த்திமுதல்
எல்லாந் தானாய்ப் படைத்தவ ளாம்வாலை
எள்ளுக்கு ளெண்ணெய்போல் நின்றவளாம். 2

தேசம் புகழ்ந்திடும் வாலைக்கும் மித்தமிழ்
செய்ய எனக்குப தேசஞ்செய்தாள்
நேசவான் வீரப் பெருமாள் குருசாமி
நீள்பதம் போற்றிக்கொண் டாடுங்கடி. 3

---

1. வீற்றிருப்பாள் - அருள்பாலித்து இருப்பாள்.
தள்ளி வைப்பாள் - விலக்கிடுவாள்.

2. பூர்த்திமுதல் - உண்டாகி முடிந்தது முதலாக.

3. வாலைக்கும்மி இயற்றுவதற்குக் கற்பித்தவளே அவள்தான்.
நேசவான் - அன்பன்.

நூலை முடிக்கும்போது அந்தப் பாங்கிலேயே நிறைவு ஒலிக்கும்படியாகக் கருத்தை நடத்துகிறார்.

குரு வணக்கம் சொல்லத் தொடங்கியர் தம்மை ஆதரித்த அன்பருக்கு நன்றியுரை கூறுகிறார்.

ஆறு படைப்புகள் வீடு கடைசூத்ர
அஞ்செழுத் துக்கும் வகையறிந்து
கூறு முயர்வல வேந்த்ரன் துரைவள்ளல்
கொற்றவன் வாமக்கொண் டாடுங்கடி. 1

ஆடுங்கள் பெண்டுக ளெல்லோ ருமிந்த
அன்பான கொங்கணர் சொன்னதமிழ்
பாடுங்கள் சித்தர்க ளெல்லோ ரும்வாலை
பாதத்தைப் போற்றிக்கொண் டாடுங்கடி. 2

சித்தர்கள் வாழி சிவன்வா ழிமுனி
தேவர்கள் வாழி ரிஷிவாழி
பக்தர்கள் வாழி சிவன்வா ழிமுனி
பாரதி வாலைப்பெண் வாழியவே. 3

---

1. ஆதரவு தந்த வள்ளலுக்கு வாழ்த்துரைக்கிறார்.

2. கும்மித் தமிழாக இருப்பதாலும், மாணிக்க வாசகர் முதலான பெரியோர்களின் இலக்கிய மரபை ஒட்டியும், பெண்கள் சேர்ந்து போற்றி ஏத்துவது தமிழ் இலக்கியப் பண்பேயாகும். அந்த முறையிலே சித்தரும் பெண்களை அழைத்துக் கும்மி தட்டச் செய்கிறார்.

3. நாந்தியின் இலக்கணப்படி ஆர்வம் மிகுந்த பாங்கிலே எல்லாரையும் எல்லாவற்றையும் அரவணைத்தவாறு வருகிறது சித்தரின் வாழ்த்துமொழி!

(வாலைக்கும்மி முற்றிற்று)

# அழுகணிச் சித்தர்

இவருடைய பெயர் அழுகணி என்றும், அழுகுணி என்றும் இருவிதமாகவும் வழங்குகிறது.

அழு-உன் (அழுகைக்காரன்) என்று கொண்டு அழுகுணி எனவும், அழு - குணி (அழும் குணம் உடையவன்) எனவும் அழுகுணி என்ற சொல் வழக்கத்தில் உள்ளது.

அழு - கண்ணி/கணி என்று கொண்டு அழுகிற கண்ணை உடையவன் என்ற பொருளில் அழுகணி எனவும் வழங்குகிறது.

பாடல்களில் ஒப்பாரிப் பாங்கிலே நடப்பதால் இவை அழுகணிப் பாடல்கள், இவற்றை இயற்றியவர் அழுகணிச் சித்தர் என்பதே ஏற்புடைத்து. சிலர் அழகணிச் சித்தர் என்று மங்கலமாக்குவதும் கேட்டிருக்கிறேன்.

இந்தப் பாடல்கள் ஒப்பாரியாகச் சென்றாலும், அந்த அழுகையானது ஞான அழுகையாகும். ஒரு துறவி மனித சமுதாயத்தின் அவலத்துக்காக, மனிதகுலத்தின் ஆற்றாமையையெல்லாம் தன்மீது ஏற்றிக்கொண்டு பிறருக்காகத் தான் அழுகிற ஒப்பாரியே இந்த அழுகிற பாடல்கள் என்று சொன்னால் மிகையில்லை. எல்லாருமே அழுகிறார்கள், ஆனால் கவிதையாக அழுகிறவர்கள் சிலரே. அவருள்ளும் ஞானக் கவிதையாக அழுபவர் எத்தனை பேர்!

பாடல்களுக்ுள்ளே மறைமுகமான யாக்கைக் குறியீடுகள் உள்ளன. அவற்றை முறையாகத் தீட்சைபெற்றுயோகம் பயில்பவர்கள் மட்டுமே பயன்படுத்திக்கொள்ள இயலும். ஆனால் பாடல்கள் அத்தனையும் உருக்கமான கவிப்பண்பு கொண்டு செல்கின்றன.

# அழுகணிச் சித்தர் பாடல்

## கலித்தாழிசை

மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கத் தெருநடுவே
சாலப் பதிதனிலே தணலாய் வளர்த்தகம்பம்
மேலப் பதிதனிலே என் கண்ணம்மா
விளையாட்டைப் பாரேனோ. 1

எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி
பஞ்சாயக் காரரைவர் பட்டணமும் தானிரண்டு
அஞ்சாமற் பேசுகிறாய் ஆக்கினைக்குத் தான்பயந்து
நெஞ்சார நில்லாமல் என் கண்ணம்மா
நிலைகடந்து வாடுறண்டி. 2

---

1. மூலப்பதி - மூலாதாரம். மூவிரண்டு வீடு - ஆறு ஆதாரங்கள். கோலப்பதி - எழிலான இடம். குதர்க்கத் தெரு - இடைஞ்சல் பிடித்த பாதை. சாலப்பதி - மயக்கம் தருகிற இடம். தணலாய் வளர்ந்த கம்பம் - தீப்பிழம்பாக நிற்கிற நெருப்புத்தூண். மேலப்பதி விளையாட்டு - சிற்றம்பலத் திருநடனம்.

2. எண்சாண் உடம்பு - ஒவ்வொருவருக்கும் அவரவர் உடம்பின் உயரம் தமது கையால் எட்டு சாண் அளவாகும். ஏழிரண்டு வாயில் - உடம்பிலுள்ள ஒன்பது வாசல்கள். கண் 2, நாசிப்புழை 2, செவிகள் 2, வாய் 1, ஆண்குறி அல்லது பெண்குறி 1, மலவாய் 1 ஆக 9. பஞ்சாயக்காரர் ஐவர் - ஐம்புலன்கள். இவற்றின் இயக்கம் நல்வினை தீவினை ஆகிய இரண்டு பிரதேசங்கள் அல்லது பட்டணங்கள்.

முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
பத்தாம் இதழ்பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி
அத்தை யடக்கிநிலை ஆருமில்லா வேளையிலே
குத்து விளக்கேற்றி என்கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனோ. 3

சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க
உண்பாய்நீ யென்றுசொல்லி உழக்குழக்கு நெய்வார்த்து
முத்துப்போ லன்னமிட்டு முப்பழமுஞ் சர்க்கரையுந்
தித்திக்குந் தேனமிர்தம் என்கண்ணம்மா
தின்றுகளைப் பாரேனோ. 4

பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால் மேல்தூ க்கிச்
செம்பொற் கலையுடுத்திச் சேல்விழிக்கு மையெழுதி
அம்பொற் பணிபூண் டறுகோண வீதியிலே
கம்பத்தின் மேலிருந்தே என்கண்ணம்மா
கண்குளிரப் பாரேனோ. 5

---

3. முத்து முகப்பு - சுழுமுனை. முச்சந்தி வீதி - சூரிய கலை, சந்திர கலை, நெருப்பு ஆகிய மூன்று பாதைகள்; வலக்கண், இடக்கண், நெற்றி மையம் எனினும் வலது மூச்சு, இடது மூச்சு, நடுமூச்சு எனினும் ஒக்கும்.

பத்தாம் இதழ் - மணிபூரகம் என்னும் ஆதாரநிலையில் மூச்சுக்குத் தோற்றுவாயன பாம்பு சுருட்டிப் படுத்திருக்கிறது. இந்த இடம் பத்து இதழ்கள் கொண்டது.

4. சம்பா அரிசிச் சாதம் சமைத்தலும், அதில் நெய் வார்ப்பதும், எல்லாம் அகத்தில் மூலக்கனலால் வேள்வி செய்து அவிசொரிதல்.

5. அறுகோண வீதி என்பது விசுத்தி நிலை. ஆறுகோணம், பதினாறு இதழ்க் கமலம், இதுவே அம்மையும் அப்பனும் வீற்றிருக்கும் கோயில்.

பல சித்தர் பாடல்களில் வருகிற அதே சித்திரம் இங்கு வேறு மொழிகளில் வரைந்து காட்டப்படுகிறது.

எட்டாப் புரவியடி யீராறு காலடியோ
விட்டாலும் பாரமடி வீதியிலே தான்மறித்துக்
கட்டக் கயிறெடுத்துக் கால்நாலுஞ் சேர்த்திறுக்கி
அட்டாள தேசமெல்லாம் என் கண்ணம்மா
ஆண்டிருந்தா லாகாதோ. 6

கொல்லன் உலைபோலக் கொதிக்குதடி யென்வயிறு
நில்லென்று சொன்னால் நிலைநிறுத்த கூடுதில்லை
நின்லென்று சொல்லியல்லோ நிலைநிறுத்த வல்லார்க்குக்
கொல்லென்று வந்தநமன் என்கண்ணம்மா
குடியோடிப் போகானோ. 7

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம்விட்டே என்கண்ணம்மா
உன்பாதஞ் சேரேனோ. 8

---

6. ஈராறுகால் - பன்னிரண்டு கால் அதாவது மூன்று. வாசியாகிய புரவியின் மூச்சு இடகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மன்றாம்.

விடுதல் - இரேசகம்.

வீதியிலே மறித்தல் - அதன் நடையை மாற்றுதல்.

கட்டக் கயிறு - பார்வை.

"பார்வையாலே பார்த்துப் பருமுடிச்சுப் போடடா" என்றது போலே!

நாலுகால் - உடல் நாட்டம், கரண ஓட்டம், உலக ஈர்ப்பு, பொருட்சார்பு.

7. மூலக் கனலை எழுப்பும்போது ஏற்படுகிற ஊறுகள் கூறியவாறு.

8. ஊற்றைச்சடலம் - அழுக்கு நிரம்பிய உடல். உப்பிருந்த பாண்டம் - இச்சைகளும் பற்றுகளும் குடியிருக்கிற பானை. மாற்றிப் பிறத்தல் - முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பதும், பின்னை வினையைப் பிடித்துப் பிசைதலும் ஆம்.

வாழைப் பழந்தின்றால் வாய்நோகு மென்றுசொல்லி
தாழைப் பழந்தின்று சாவெனக்கு வந்ததடி
தாழைப் பழத்தைவிட்டுச் சாகாமற் சாகவல்லோ
வாழைப் பழந்தின்றால் என்கண்ணம்மா
வாழ்வெனக்கு வாராதோ. 9

பையூரி லேயிருந்து பாழூரி லேபிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என்கண்ணம்மா
பாழாய் முடியாவோ. 10

---

9. வாழைப்பழம் - யோகத் துய்ப்பு;
கைவந்தால் எளிய வழி.
தாழைப் பழம் - முள் நிரம்பிய உலக பந்தம்.

10. பையூர் - கருப்பையாகிய பிறப்பிறப்புச் சுழலான பட்டணம்.
பாழூர் - தொல்லை நிரம்பிய உலக வாழ்வு.
மெய்யூர் - நுண்ணுடற் பிரதேசம்.

மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்
காமன் கணையெனக்கு கனலாக வேகுதடி
மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்
காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா
கண்விழிக்க வேகாவோ. 11

அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை யம்பாக்கி
மந்திரத்தே ரேறியல்லோ மான்வேட்டை யாடுதற்குச்
சந்திரருஞ் சூரியருந் தாய்போந்த காவனத்தே
வந்துவிளை யாடியல்லோ என் கண்ணம்மா
மனமகிழ்ந்து பார்ப்பதென்றோ. 12

காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பதென்றோ
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலேறி என்கண்ணம்மா
கண்குளிரக் காண்பேனோ. 13

---

11. சிற்றின்பமே பேரின்பமாக வேண்டும். அதற்குரிய அற்புதமான யோகநெறியே நயனப் பயிற்சி. உடலின் ஆசைகள் அனைத்தும் கீழ் நோக்கிச் செல்வதை மறித்து, மேல்நோக்கி எழுப்புவதே சித்தர் ஞானயோகம்.

12. முதுகந்தண்டை வில்லாக வளைப்பதற்குரிய நாணே வாசி. ஐந்தெழுத்து என்பது ஆதாரநிலைப் பயிற்சி; மூலாதாரம் தொடங்கி சகஸ்ராரம் வரை இயக்குதலை அந்தந்த நிலையில் எடுத்துக்கூறி விளக்குவது சித்தர் மரபு. ஞானம் கற்பிக்கிற குருமார்களில் ஒவ்வொரு மரபில் ஒவ்வொரு விதமாக இந் எழுத்தை வகைப்படுத்திச் சொன்னாலும், பலருக்கும் பழக்கமான எழுத்துமுறை: மூலாதாரம் ஓம்; சுவாதிட்டானம் 2; மணிபூரகம் ம; அநாகதம் சி; விசுத்தி வ, ஆக்ஞை 1.

13. காட்டானை - எளிதில் அடங்காத வியகவார மூச்சு. கடைத்தெரு - ஆதாரப்பாதை. நாட்டார் - உடம்பில் உள்ள கீழிழுக்கும் சக்திகள்.

உச்சிக்குக் கீழடியோ ஊசிமுனை வாசலுக்குள்
மச்சுக்கு மேலேறி வானுதிரந் தானெடுத்துக்
கச்சை வடம்புரியக் காயலூர்ப் பாதையிலே
வச்சு மறந்தல்லோ என்கண்ணம்மா
வகைமோச மானேண்டி. 14

மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீடுகட்டி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீட்டினுள்ளே
மூக்காலைக் காணாமல் என் கண்ணம்மா
முழுதுந் தவிக்கிறண்டி. 15

காம மலர்தூவக் கருத்தெனக்கு வந்ததடி
பாம வலிதொலைக்கப் பாசவலி கிட்டுதில்லை
பாம வலிதொலைக்கப் பாசவலி நிற்குமென்றால்
காம மலர்மூன்றும் என் கண்ணம்மா
கண்ணெதிரே நில்லாதோ. 16

---

14. உச்சிக்குக் கீழ் ஊசிமுனை - சுழுமுனை. மச்சு - தலைஉச்சி, உச்சந்தலை. கச்சைவடம் - மூச்சை முறுக்கி இயக்குகிற ஆற்றல். காயலூர்ப்பாதை - கனற் பாதை. பயிற்சியில் நடுவே தடைப்படாமல் உச்சி செல்வது நீண்ட பழக்கத்தால் வரவேண்டும். இடை மயக்கம் தவிர்க்க வேண்டும்.

15. மூக்கால் - தாசி வாசியினால். அரும்பெடுத்தல் - நாடி இயக்கம். மூவிரண்டாய்த் தூக்குவது - ஆறு ஆதார நிலைகளிலும் செலுத்துவது. நாக்கால் - அண்ணாக்கு என்ற உண்ணாக்கு நிலை. நாற்சதுர வீடு - சுவாதிட்டானம்.

16. பாமவலி - குறியாகிய புட்குழிப்பற்று. மூன்று - ஆணவம், கன்மம், மாயை, / மண், பெண், பொன்.

தங்காயந் தோன்றாமல் சாணகலக் கொல்லைகட்டி
வெங்காய நாற்று:விட்டு வெகுநாளாய்க் காத்திருந்தேன்
வெங்காயந் தின்னாமல் மேற்றோலைத் தின்றலவோ
தங்காயந் தோணாமல் என் கண்ணம்மா
சாகிறண்டி சாகாமல். 17

பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்ததுபோல்
உற்றுற்றுப் பார்த்தாலும் உன்மயக்கந் தீரவில்லை
உற்றுற்றுப் பார்த்தாலும் உன்மயக்கந் தீர்ந்தக்கால்
பற்றற்ற நீராகும் என் கண்ணம்மா
பாசியது பேறாமோ. 18

---

17. "மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய சுகம்" சொல்ல ஒண்ணாதது என்றார் திருமூலர்.

சிற்றின்பத்தைப் பேரின்பமாக மாற்றுகிற பயிற்சியின் நுட்பம் என்ன வென்றால், கருக்குழியும் மலவாயுமே யோகப் பயிற்சியின் அடிப்படையாக விளங்குகின்றன.

அந்தப் பயிற்சிமுறை நேரிலே குருநாதனிடம் கற்க வேண்டிய அனுபவ ஞானமாகும்.

18. பற்றற்ற நீர் - கால்வாயின் போக்கு - வரத்து இல்லாத கட்டுக்கடைத் தண்ணீர்.

உண்மையான பற்றற்ற நீராக இந்த உடற்குளத்தை மாற்றினால் உய்வு கிடைக்கும்.

கற்றாரும் மற்றாருந் தொண்ணூற்றொ டாறதிலே
உற்றாரும் பெற்றாரும் ஒன்றென்றே யானிருந்தேன்
உற்றாரும் பெற்றாரும் ஊரைவிட்டுப் போகையிலே
சுற்றாரு மில்லாமல் என் கண்ணம்மா
துணையிழந்து நின்றதென்ன. 19

கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்
உண்ணாக்கு மேலேறி உன்புதுமை மெத்தவுண்டு
உண்ணாக்கு மேலேறி உன்புதுமை கண்டவர்க்குக்
கண்ணுக்கு மூக்கடியோ என் கண்ணம்மா
காரணங்கள் மெத்தவுண்டே. 20

சாயச் சரக்கெடுத்தே சாதிலிங்கந் தான்சேர்த்து
மாயப் பொடிகலந்து வாமூவை நெய்யூற்றிப்
பொட்டென்று பொட்டுமிட்டாள் புருவத் திடைநடுவே
இட்ட மருந்தாலே என்கண்ணம்மா
இவ்வேட மானேண்டி. 21

---

19. தொண்ணூற்றோடு ஆறு - தொண்ணூற்றாறு தத்துவங்கள்.
ஒப்ப அனைவரும் ஓட்டெடுக்கும் நிலையிலுள்ள உடலின் வேதியற் செயல்கள்.
உடல் வாசல் 9, ஆன்ம தத்துவம் 24, தாதுக்கள் 7, கோசம் 5, குணம் 3, மலம் 3, பிணி 3, விகாரங்கள் 8, ஆதாரம் 6, மண்டலம் 3, நாடி 10, காற்று 10, அவத்தை 5 ஆக 96.

20. கண், மூக்கு, காதோர நடுவும் உண்ணாக்கிற்குமான கூடுமையம் ஆகியன மூலாதாரத்தோடு பிணைப்புறுவதே ஞானயோகம். இது கைவந்தால் ஞான அமுது உண்டு அமர வாழ்வு எய்தலாம் என்பது சித்தர் மொழியாகும்.

21. ஞானாசிரியன் நேரிலே கற்பிக்கிற ஒன்பதாவது தீட்சையின் உட்பிரிவு பேசப்படுகிறது.

பாதாள மூலியடி பாடாணந் தான்சேர்த்து
வேதாளங் கூட்டியல்லோ வெண்சாரை நெய்யூற்றிச்
செந்தூர மையடியோ செகமெலாந் தான்மிரட்டித்
தந்த மருந்தாலே என்கண்ணம்மா
தணலாக வேகுறண்டி. 22

கள்ளர் பயமெனக்குக் கால்தூக்க வொட்டாமல்
பிள்ளை யழுதுநின்றால் பெற்றவட்குப் பாரமடி
பிள்ளை யழுவாமல் பெற்றமனம் நோகாமல்
கள்ளர் பயமெனக்கே என்கண்ணம்மா
கடுகளவு காணாதோ. 23

பட்டணத்தை யாளுகின்ற பஞ்சவர்கள் ராசாக்கள்
விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தாம்பேசி
விட்டுப் பிரிந்தவரே வேறு படுங்காலம்
பட்டமுந் தான்பறிபோய் என்கண்ணம்மா
படைமன்னர் மாண்டதென்ன. 24

---

22. பாதாள மூலி - மூலக்கனல். பாடாணம் சேர்த்து - ஆன்மா கற்போலக் கிடக்கும் ஒருவகை முத்திநிலை.
வேதாளம் - பேய்மனம், மனப்பேய். சாரைநெய் - பாம்பு போன்ற முதுகுதண்டு ஆற்றல்; மூலக்கனலை எழுப்பிப் படம் எடுக்கச் செய்தல். செந்தூரமை - தொலைதாண்டிச் செல்கிற ஆன்ம ஆற்றலிலே விளைகிற ஒடுக்க சாதனை.

23. கள்ளர் பயம் - ஆசைகளின் விளைவச்சம், புலனச்சம். கால்தூக்கல் - காற்றை எழுப்புதல். பிள்ளை அழுதல் - புறக்கண் ஒவ்வாமை.

24. பட்டணம் - உடற்பிரதேசம்.
பஞ்சவர்கள் ராசாக்கள் - பஞ்சபாண்டவர் போல ஐம்புல அரசர்கள்! "பட்டமும் கயிறும் போல" என்ற அடியின் கருத்து!

ஆகாப் புலையனடி அஞ்ஞானந் தான்பேசிச்
சாகாத் தலையறியேன் தன்னறிவு தானறியேன்
வேகாத காலறியேன் விதிமோச மானேனடி
நோகாமல் நொந்தல்லோ என்கண்ணம்மா
நொடியில்மெழு கானேனடி. 25

தாயைச் சதமென்றே தந்தையரை ஒப்பென்றே
மாயக் கலவிவந்து மதிமயக்க மானேனடி
மாயக் கலவிவிட்டு மதிமயக்கந் தீர்ந்தக்கால்
தாயுஞ் சதமோமோ என் கண்ணம்மா
தந்தையாரு மொப்பாமோ. 26

அஞ்சாத கள்ளனடி ஆருமற்ற பாவியடி
நெஞ்சாரப் பொய்செல்லும் நேயமில்லா நிட்டுரன்
கஞ்சா வெறியனடி கைசேத மாகுமுன்னே
அஞ்சாதே யென்று சொல்லி என்கண்ணம்மா
ஆண்டிருந்தா லாகாதோ. 27

---

25. ஆகாப்புலையன் - வினை மயக்கிலே அழுந்திய நிலை. காசாத்தலையும் வேகாக்காலும் வாசியோகப் பயிற்சியிலே சிற்றம்பலமாகிய உச்சித்தலை சென்று அமரவாழ்வு வாழ்தலைக் குறிப்பன.

26. பிறவிச் சுழலிலே சிக்கி, இந்த உலக உறவுகள் நிலை என்று எண்ணுகிற பான்மை மாறி நித்தியமான அம்மையப்பனோடு ஒடுங்குவதே முத்தி.

27. நிட்டுரன் - நிஷ்டுரன், கொடியவன். கைசேதம் - வலு இழத்தல்.

மகான் தன்னை இத்துணை இழிவாகப் பாடுவது, ஞானம் பெற்ற நிலையிலே இப்பாடல்களைப் பாடிய ஞானி இன்னும் தாழ்ந்த நிலையிலா இருக்கிறார் என்ற கேள்வியை எழுப்புவதற்கில்லை. பிற மக்களுக்காத் தன்மேல் அந்த இழிவுகளை ஏற்றிப் பாடுவது ஞானியர்களுடைய கருணை கலந்த கவிஉத்தி ஆகும்.

உன்னை மறந்தல்லோ உளுத்த மரமானேன்
தன்னை மறந்தார்க்குத் தாய்தந்தை யில்லையடி
தன்னை மறக்காமற் றாயாரு முண்டானால்
உன்னை மறக்காமல் என்கண்ணம்மா
ஒத்திருந்து வாழேனோ. 28

காயப் பதிதனிலே கந்தமூ லம்வாங்கி
மாயப் பணிபூண்டு வாழுஞ் சரக்கெடுத்தே
ஆயத் துறைதனிலே ஆராய்ந்து பார்க்குமுன்னே
மாயச் சுருளோலை என்கண்ணம்மா
மடிமேல் விழுந்ததென்ன. 29

சித்திரத்தைக் குத்தியல்லோ சிலையை எழுதிவைத்து
உத்திரத்தைக் காட்டாமல் ஊரம்பல மானேன்
உத்திரத்தைக் காட்டியல்லோ ஊரம்பல மானேன்
உத்திரத்தைக் காட்டியல்லோ ஊரம்பல மானால்
சித்திரமும் வேறாமோ என்கண்ணம்மா
சிலையுங் குலையாதோ. 30

---

28. கண்ணம்மா என்று அழைப்பது ஆக ஆற்றலை. கண்ணுக்குக் கண்ணாக இருக்கும் இந்த உள்நோக்கமாகிய ஞானப் பார்வையே மனிதனை அமரனாக்க வல்லது. எனவே சித்தர் அந்த ஆற்றலை நாடாமல் நிற்பாருக்காக உன்னை மறந்தேன் என்று கண்ணம்மையை நோக்கிப் பாடுகிறார். உளுத்தமரம் - பொக்கான மரம்.

29. காயமாகிய இந்தப் பதியிலே மூச்சும் மூலக்கனலும் கொண்டு (கந்தமூலம் கொண்டு) மனத்தின் பாவனையாகிய மாயப் பணியில் இயங்கி, வாழும் சரக்காகிய சுரப்பியிலிருந்து வருகிற ஞானபானம் பருகி, ஆயத்துறையுமான ஆடரங்கிலே சேருமுன்பு மரணம் வந்தால் என்ன ஆகும். இன்றே இப்போதே மரணத்தை வெல்லும் கல்வி பயில வேண்டும்.

30. ஊரம்பலமாகிய பதவி கிடைப்பதற்குச் சித்திரம் மாட்டி, சிலை எழுப்புகிற புறக்கிரியைகள் செய்வதால் ஆன்மலாபம் இல்லை. உத்திரம் காட்டுதலாகிய உச்சிநிலையை உணர்த்துதலே மெய்யான உபதேசமாகும்.

புல்ல ரிடத்திற்போய்ப் பொருள்தனக்குக் கையேந்திப்
பல்லை மிகக்காட்டிப் பரக்க விழிக்கிறண்டி
பல்லைமிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல் என்கண்ணம்மா
பொருளெனக்குத் தாராயோ. 31

வெட்டுண்ட சக்கரத்தால் வேண தனமளித்துக்
குட்டுண்டு நின்றேண்டி கோடிமனு முன்னாலே
குட்டுண்டு நில்லாமற் கோடிமனு முன்னாக
வெட்டுண்ட பிணிநீக்கி என்கண்ணம்மா
விழித்துவெளி காட்டாயோ 32

---

31. உலக வாழ்விலே ஈடுபட்டுப் பொருள்தேடுவதும் பல்லைக் காட்டி வாழ்க்கை நடத்துவதும் வீணே. இது ஒன்றும் அவசியமில்லை, அருட்செல்வம் கிட்டும்போது!

32. வெட்டுண்ட சக்கரம் - பெண்களின் கருக்குழி. குட்டுண்டு நின்றேன் - அடிபட்டு இன்னலில் உழல்கிறேன். கோடிமனு முன்னால் - இந்த மனித சமுதாயத்தின் எதிரில்.

விழித்து - அருட்கண் விழிப்பித்து, ஞானப்பார்வை திறந்து.

வெளி காட்டாயோ - பரவெளி ஞானம் உணர்த்தாயோ!

இந்த உடம்பிலே செய்கிற அகப்பயிற்சியை முறை, மற்றச் சித்தர்களைப் போலவே இவரும் பாடுகிறார். உலக வாழ்வின் துன்பங்களிலே உழல்வது பற்றி மிகுந்த துயரத்தோடு பாடுவதால், அந்த அழுகையின் நாதத்திலே ஞானம் ஒலிக்கும்வண்ணம் அழுகணிச் சித்தரின் இலக்கியம் அமைந்துள்ளது. இதுவே இதன் தனிப்பணபாகும்.

(அழுகணிச் சித்தர் பாடல் முற்றிற்று)

# ஞானக் கும்மி

இந்தப் பாடல்களிலே சில பொது மக்களிடையே நன்கு பரவியுள்ளன. வாலைச் சாமிகளைப் பற்றிய வரலாறு அருகியே காணப் படுகிறது. பெரும்பாலும் இந்தப் பாடல்களிலே முக்கியமானவை மக்களுடைய நாடோடி வழக்கிலும், உரையாடல்களிலும் அடிக்கடி மேற்கோளாக வருகின்றன. மற்றப்படி இவற்றின் வரலாறு தெளிவாக இல்லை.

இந்தப் பாடல்களை இயற்றிய வாலைச் சாமிகள் யோகமுறையில் உள்ள ஒளி, ஒலி என்ற இரண்டு பயிற்சிகளிலுமே அறிவர் என்பது பாடலிலே புலனாகிறது. ஆனால் சுட்டி உணர்த்தவேண்டிய களங்களை மூடி மறைத்துப் பாடுவதால், ஆவல் மிகுமே யன்றிப் பயன் நிறைவேறாது அல்லவா? இத்தகைய பாடல்கள் இத்தொகுப்பிலே சேர்க்கப்படவில்லை. இவைதவிர, வாய்மொழியாகவே பெரும்பாலும் வழங்கிவந்த பாடல்களிலே சொற்பிழை, வரிப்பிழைகள் காணப்படுகின்றன. இது காரணமாகத் தெளிவற்ற நிலையில் சில அடிகள் வாசகர்களைக் குழப்பும் என்று கருதி இத்தகைய பாடல்களும் விடப்பட்டுள்ளன. நூல் முழுதும் அச்சில் இருப்பதால் இலக்கிய ஞானப் பாடல்களாகவே பெரும்பாலும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. தீட்சைக்குரிய பாடல்களிலே மொழியிலே சொன்னால் போதும் என்ற நிலையில் உள்ள பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. கவிநயமும் துள்ளுதமிழும் இணைந்த பாடல்கள் விடாமல் சேர்க்கப்பட்டுள்ளன.

# மதுரை வாலைச்சாமி அருளிச்செய்த
# ஞானக் கும்மி

## காப்பு

சீர்மேவு ஞான வடிவான - பர
தேசிகன் சற்குரு தன்னருளாற்
பார்மீதில் ஞானக்கும் மிபாடச் - சிவ
பாலன் கணபதி காப்பாமே. 1

அம்பிகை வாலை பதம்போற்றி - அருள்
ஆனந்தக் கும்மித் தமிழ்பாடத்
தும்பி முகனுக் கிளையவ னாஞ்சிவ
சுப்பிர மண்யனுங் காப்பாமே. 2

---

1. ஞான வடிவான என் ஆசான், சற்குருவின் அருளால் ஞானக்கும்மி பாடுகிறேன். சிவனுடைய மகனாகிய கணபதி காப்பானாக!

விநாயகரை வணங்குவது என்பது சித்தர் மரபோடு தோய்ந்து நீண்ட காலமாக வழங்கி வந்துள்ள முறையாகும். மூலாதாரத்தில் ஞானச்செயல்கள் புரிகிற ஞானிகள் கணபதியையும், ஞானக் கையாகிய தும்பிக்கையையும் போற்றுவதில் நுட்பமான இயைபு உள்ளது. அதோடு யானைக்குத் தும்பிக்கையே கையாகவும் நாசியாகவும் அமைந்துள்ளதல்லவா? வாசியோகம் பயில்கிற ஞானிகளுக்கு இது எத்துணை முக்கியம்!

2. வாலை - திரிபுரசுந்தரி.
சிவசுப்பிரமணியன் - ஞானக்கனலை இயக்குகிற சித்தர்களின் நெருப்புக் கடவுள்.

நாலாம் வேதமு மோராறும் வெகு
நாநா பேதமாய் நின்றானை
மேலாய்ப் போற்றிக்கும் யிபாடச் செந்தில்
வேலவன் தன்பதங் காப்பாமே. 1

பாரி லுயர்மது ராபுரியில் - வாலை
சாமிசொல் லுங்கும்மிப் பாடலுக்கு
மேரு வதனடி மூலமுக் கோண
விநாயகன் தன்பதங் காப்பாமே. 2

ஆதியும் அந்தமு மொன்றாகி - வளர்
அண்டபிண் டமுமி ரண்டாகிச்
சாதி பலபல வேறா கிநின்ற
தத்துவங் கேளடி ஞானப்பெண்ணே. 3

---

1. ஓராறு - ஆறங்கங்ள்.
நாநா பேதம் - பற்பல வேறுபாடுகளுடன்.

2. மேருவின் அடியில் விநாயகன் என்கிற புறநிகழ்ச்சி, புராணம் கற்றவருக்கும் வியாசர் பாரதத்தின் பின்னணி அறிந்தவருக்கும் தெரியும். இங்கே மூல முக்கோண விநாயகன் என்பதன் தத்துவப்பொருள் மூலாதார ஆற்றலாம். விநாயகர் அகவல் விளக்கம் காண்க.

3. ஆதி அனாதி என்பது ஒன்று.
அண்டமும் பிண்டமும் இரண்டுபட்டதாக இக்கால விஞ்ஞானமும் விளக்குகிறது.

ஒன்றிலிருந்து உதித்துப் பலவாகக் கிளைத்ததே படைப்பும் உயிரினமும் என்பதை அறிவியலார் இக்காலத்து மொழியிலே பலவாறு கூறுகிறார்கள் அல்லவா? சித்தர்கள் ஞானக் கண்ணினால் கண்ட உயிர்த் தோற்றம் அறிவியலுக்கு ஒத்ததோடு ஆழமும் நுட்பமும் இணைந்தது.

*பீட மிருப்பது மையத்தி லேபலி*
*பீட மிருப்பதுங் குய்யத்திலே*
*மாட மிருந்த சிவாயைத் தின்மணி*
*விளக்கி ருக்குது ஞானப்பெண்ணே.* 1

*இப்படி யான திருக்கோ விலதற்*
*கெப்படி வாயி லிருக்காதோ*
*அப்படி யென்று தெரியா மற்றெரிந்*
*தலைகி றாரடி ஞானப்பெண்ணே.* 2

*பூட்டைத் திறப்பதுங் கையா லேமனப்*
*பூட்டைத் திறப்பது மெய்யாலே*
*வீட்டைத் திறக்க முடியாமல் விட்ட*
*விதியி தென்கிறார் ஞானப்பெண்ணே.* 3

---

1. பீடம் - யோக நிலை.
மையம் - நடுநாடி.
குய்யம் - குறியிடம்.

2. உள்ளம் பெருங்கோயில் என்ற திருமந்திரத்தில் வாய் கோபுர வாசல் என்று திருமூலர் குறிப்பிடுகிறார். இதன் நுட்பமான இடத்தை ஞானகுரு உணர்த்த உணருவதே முதலாவது தீட்சை.

3. இந்தப்பாட்டு நாடெங்கும் நன்கு பரவியுள்ள ஓர் அழகான கும்மியாகும்.

சாதாரணமாகப் பூட்டைத் திறப்பது நம்முடைய கையைக் கொண்டு. அதேபோல மனமாகிய பூட்டை எப்படித் திறக்கவேண்டும் என்றால் இந்த உடம்பைக் கொண்டு! அதாவது இந்த யாக்கையினுள்ளே இயங்குகிற நுட்பமான ஆதார நிலைகளை ஞானி உணர்த்த அவற்றைத் தெரிந்து தெளிந்து அந்த முறையிலே மனப்பூட்டைத் திறக்க வேண்டும். இந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ளாமல் அதாவது உடம்பாகிய வீட்டைத் திறக்கத் தெரியாமல் 'விதி விதி' என்று மண்டையில் அடித்துக் கொள்கிறது இந்த மனித உலகம்!

வாசலி லேயொரு மேல்வா சலந்த
வாசலி லேசிறு வாசலுண்டு
நேச முடன்றிரு வாசலிற் பூட்டு
நெருக்கம் பாரடி ஞானப்பெண்ணே. 1

அட்சர மாமெள னாட்சர மாவது
ஆனால் நல்ல திறவுகோலாம்
உச்சித மாகத் திறந்தா லேயந்த
உச்சி வழிகாணும் ஞானப்பெண்ணே. 2

கண்ணா லேமனக் கண்ணா லேயதைக்
கண்டா லேவழி யுண்டாகும்.
பெண்ணாசை தன்னை யடுக்கா மல்வழி
பேணிப் பாரடி ஞானப்பெண்ணே. 3

பார்த்து நடப்பது மேல்வா சலந்தப்
பாதை யறிவது மெவ்வாறு
மாத்திரை நேரம் பிரியா மற்பாதை
மார்க்கங் கேளடி ஞானப்பெண்ணே. 4

---

1. வாசலிலே - சிதாகாசத்திற்குச் செல்லுகிற பாதையிலே உருவான வாசல். அங்கே ஒரு கோபுர வாசல், அதற்குள்ளே ஒரு திட்டி வாசல்!

2. இந்த வாசற்கதவைத் திறப்பதற்குரிய பூட்டும் திறவுகோலும் என்ன? அவற்றை நேர்முகமாகப் பெற வேண்டும். இந்த இரகசியமே 'எழுத்தும் நிலையும்' என்ற ஞானக்கல்வியின் இரண்டாவது பாடமாகும்.

நயன தீட்சை முறையிலே ஒன்பதும் பத்துமாகப் பத்தொன்பது தீட்சைக்கல்வி உண்டு.

3. கண்ணாலே - புறக்கண்கொண்டு, அதாவது அதை மூடிக்கொண்டு உள்ளே பார்க்கவேண்டும். மனக்கண்ணாலே - அகவிழியால்.

4. பார்த்து நடப்பது - எச்சரிக்கையோடு நடப்பது என்பது மட்டுமில்லை, பார்வையாலே நடந்து செல்கிற நயன வழி அது.

எங்கள் ஞானாசிரியரான கண்ணப்ப சுவாமிகள் தமது முதலாவது தீட்சையில் இதைத் தொட்டுணர்த்தி நாமே பார்க்கும்படி செய்வார்கள். எல்லா ஞானகுருமார்களும் இதையே மாணவர்களுக்குச் செய்து காட்டுவதுண்டு.

எருக்கி டந்த குறிதான் டியதில்
இரண்டு விரற்கடை மேற்றாண்டித்
கருக்கி டைக்கும் அடையா ளமதைக்
கண்டு கேளடி ஞானப்பெண்ணே. 1

மாயன் அரண்மனை காணீ ரோவன்னி
மரமி ருப்பதுந் தோணீரோ
நேய மதுகடந் தப்பா லேயறு
கோணப் படியடி ஞானப்பெண்ணே. 2

கோணத்தில் நின்று மயங்கா தேசுழிக்
காற்றை யடக்கிச் சிணுங்காதே
வீணுக் கலைந்து தியங்கா தேதூல
வேடத்தைத் தள்ளடி ஞானப்பெண்ணே. 3

---

1. மூலாதாரமாகிய முதலாவது ஆதாரநிலை. இது மண் என்னும் பருப்பொருட் தத்துவம். குதத்திற்கும் (மலவாய்) ஆண்குறி அல்லது பெண்குறிக்கும் நடுவே அமைந்துள்ளது. எருக்கிடந்த குறி - குதம்.
கருக்கிடைக்கும் அடையாளம் - குறிநிலை.

2. மாயன் அரண்மனை - மணிபூரகம். வன்னிமரம் - நெருப்புத்தூண். அறுகோணம் - விசுத்தி என் ற ஆதாரநிலை.

3. கோணத்தில் - முக்கோணம் ஆறுகோணம் ஆகிய இரு நிலைகளிலும்.

இந்த மூன்று பாடல்களும் ஆதாரநிலைகளைப் பேசுவன.

மூலாதாரம் (முக்கோணம்), சுவாதிட்டானம் (நாற்சதுரம்), மணிபூரகம் (மூன்றாம் பிறை), அநாகதம் (முக்கோணம்), விசுத்தி (அறுகோணம்), ஆக்ஞை (வட்டம்) என்ற ஆறு ஆதாரங்களோடு ஆயிரம் இதழ் பிந்துத்தானமாகிய சகஸ்ராரமும் சேரந்து எழுநிலைகள் ஞானப்பயிற்சிக்குரிய களங்களாம். இந்த ஏழுகளங்களிலும் மூச்சு சுற்றிக் கொண்டிருப்பதை விதிமுறைப்படி ஆளுவதே சித்தர்களின் ஞானயோகமாகும்.

தூலத்தை விட்டு விடாயா கிலதிற்
சூட்சுமத்தைக் காண முடியாது
பாலத்தி லேறி நடந்தக் காற்பெரும்
பாதையி தல்லவோ ஞானப்பெண்ணே. 1

பாதையா னபெரும் பாதையைக் கிட்டிடப்
பட்டண முண்டொரு வட்டமதாய்
நாதமுங் கீதமுங் கேட்குத டிதெய்வ
நாயகன் சந்நிதி ஞானப்பெண்ணே. 2

சந்நிதி யென்னடி கண்டதுண் டோகண்டால்
தத்துவம் பேசத் திறமுமுண்டோ
முன்னேழுப் பாழுங் கடப்பதுண் டோஅதில்
முச்சுட ருண்டடி ஞானப்பெண்ணே. 3

முச்சுடர் வட்டமே சக்கர மாமது
மூக்கு நுனியிற் சுழுமுனையாம்
அச்சுடர் வட்டத் திருந்தவ னேகுரு
ஆனந்த நந்தியாம் ஞானப்பெண்ணே. 4

---

1. தூலத்தை - பருஉடலின் தத்துவங்களை. சூட்சுமத்தை - நுண்ணுடலின் ஞான பீடத்தை. பாதை - மூலக்கனலும், மூச்சுக்காற்றும் ஆதாரநிலைகளைப் பற்றிச் செல்கிற யோகநெறி.

2. விட்டமான பட்டணம் - ஆக்ஞைச் சக்கரமும் அதற்கு மேலே சகஸ்ராரச் சக்கரமும். அங்கே பரமான்ம நிலையம். அதிலே ஓசை கேட்கும். ஒளியும் ஒலியும் இணைந்த தொலைக்காட்சி போன்ற ஆனால் அதையும்விட அற்புதமான அனுபவம் கிட்டும்.

3. முன் ஏழுப்பாழ் - உடம்பிலுள்ள ஏழு நிலைகள். முச்சுடர் - சூரிய சந்திர அக்கினி நிலைகள்.

4. இந்தப் பாடல் நயன நெறி என்கிற சித்தர் முறை பேசுகிறது. சந்திரன் இடது கண். சூரியன் வலதுகண். சுழுமுனையே நெருப்புநிலை. அதாவது ஞானக்கனல். இதில் செய்கிற பயிற்சி முறைகளில் மகாமேதையாக விளங்கியவரே சிக்கனம்பாறை ஆசிரமத்து எங்கள் குருநாதர் கண்ணப்ப சுவாமிகள்.

நந்தி யிருந்தது வன்னிவட் டம்மதில்
நாட்டம் புருவமத் யான திட்டம்
சந்திர னுங்கதிர்ச் சூரிய னுமந்தத்
தலத்தில் நின்றனர் ஞானப்பெண்ணே. 1

நாதவிந் தல்லவோ நால்யோ னிதச
நாதவிந் தல்லோ எழுதோற்றம்
நாதவிந் தாலுட லும்முயி ரும்பரம்
நந்தியைப் போற்றடி ஞானப்பெண்ணே. 2

விந்து விருந்த தலந்தனி லேகுரு
நந்தி யிருந்தார் கொலுவாகி
சிந்தை தெளிந்து மகாரம்வைத் தாலந்தச்
சீமானைக் காணலாம் ஞானப்பெண்ணே. 3

---

1. வன்னி வட்டம் - நெருப்புச் சூழல்.
இது நயன தீட்சையில் இரண்டாவது தீட்சையாகும்.

2. பத்து வாயுக்கள் பத்து நாடிகளில் திரிவதே பிறப்பின் இயக்கம்.

3. குரு என்ற சொல்லுக்கு சித்தர் மொழியிலே ஒளி என்ற ஒரு பொருள் உண்டு.

இந்தப் பாடலில் மௌனநிலையிலே நிட்டை கூடி ஒளிப்பயிற்சி செய்கிற ஞானிகளின் அனுபவம் மறைப் பொருளாகவும் மறைபொருளாகவும் பேசப்படுகிறது.

இந்தப் பாடலிலே உள்ள குழூஉக் குறிகளின் சுவை என்னவென்றால், பயிற்சி கற்ற ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்களுக்குமே அக்கண்ணால் காணுகிற ஒளிக்காட்சிகளை மிகுந்த சதுரப்பாட்டுடன் சொல்லியும் சொல்லாமலும் வெளியிடுகிற உத்தி புலனாகும்!

சித்தர் இலக்கியத்திற்கே உள்ள கவிப்பண்பு இது.

தீட்சை யெனுஞ்சிவ சக்கரத் தின்மையந்
தேவி யெழுத்தை நிரைநிறுத்திக்
காட்சியுடன்சிவ பூசைசெய் தாற்சித்தி
கைவச மாமடி ஞானப்பெண்ணே. 1

கள்ளுண்டு தள்ளுண்டு நில்லா தேபின்பு
கஞ்சா வுறக்கமுங் கொள்ளாதே
உள்ளுண்டு சோமக் கலையாதி பானத்தை
ஊட்டிக் கும்மி யடியுங்கடி. 2

கும்மி அடிபெண்கள் அம்பலத் தையரைக்
கூட்டி யமுதங் குடியுங்கடி
அம்மென்றும் உம்மென்றுஞ் சொல்லா மல்நின்ற
அத்விதம் பாரடி ஞானப்பெண்ணே. 3

அத்வித மாவத்துக் காதிய டிமதி
ஆயிரத் தெட்டிதழ்ப் பூசை பண்ண
முத்தி தருஞ்சோமப் பாலை யனுதினம்
மூட்டிக் கும்மி யடியுங்கடி. 4

---

1. இதுவும் ஞான தீட்சையில் சித்தர்கள் கற்பிக்கிற தியனமுறை சொல்லுகிறது.

2. இந்த உடம்புக்குள்ளே ஞானநெறி வாயிலாக உண்ணுகிற சோமபானம் என்னும் அகச்சுரப்பியின் ஞானப்பால் அமுதம் எனப் போற்றப்படுகிறது. அதுவே விடுபேறு என்னும் மாபெரும் பதம் தரவல்லது. அந்த யோக மயக்கத்திற்குக் கள்ளோ கஞ்சாவோ ஈடாகாது.

3. அம்பலத்தையர் - சிற்றம்பலம் தாண்டிய பரமானந்த மோனநிலை அது!

4. சந்திரனுடைய தண்ணொளி உலகமே அது! ஆயிரத்தெட்டு இதழ்கொண்ட தாமரை மலர்ந்த சந்நிதியிலே ஞான வழிபாடு இயற்றிச் சோமபானம் பருகுவதே அமரவாழ்வாகும்.

மூட்டுவ தென்ன திரிகோண வட்ட
    மூலத்தில் குண்டலி வாசியினால்
நாட்டுவன் பூரண நாலையுங் கட்டினான்
    ஞாயமி தல்லவோ ஞானப்பெண்ணே. 1

கட்டிங்கொள் விந்துவைத் தள்ளா தேசுழிக்
    காற்றை யடிக்கிப் பெருக்காதே
சுட்டி மனப்பொறா துறாதே காமச்
    சோம்பதைத் தள்ளடி ஞானப்பெண்ணே. 2

சோம்பலுந் தூக்கமு மாகா தேஅன்ன
    சுகியுஞ் சோகமுங் கொள்ளாதே
சாம்ப சதாசிவ நாட்டத்திலே நின்று
    சார்ந்து கும்மி யடியுங்கடி. 3

---

1. மிகவும் நுட்பமானபாடல்.
மூலாதாரத்திலுள்ள கனலை எழுப்பி வாசி என்னும் மூச்சுப் பயிற்சியினால் ஆதார நிலைகளின் வழியே சென்று சிற்றம்பலத்திலே நிலைநிறுத்தினால் அதுவே 'ஞாயம்' என்கிற நடுவுநிற்றலாம்.

2. விந்துத்தம்பனம் என்பது உயிர்நீரை வீணாக்காமல் கட்டுப்படுத்திக் கட்டிப்படுத்தலாம். காற்றை அடக்கி இரேசக பூரக கும்பகத்தில் அளவோடு இயக்க வேண்டும், பெருக்கம் கூடாது.

3. அன்ன சுகி - பெருந்தீனி உகப்பு.
சோகம் - பட்டினி.
சாம்பசதாசிவ நாட்டம் - சதாசிவ நிலையாகிய உச்சியிலே கூடி நிற்கிற அகப்பார்வையும் வாசியும் இணைந்த தியான யோகம்.

குதிரை கட்டிய லாயத்திலே மனக்
கோட்டையி லேசந்தைப் பேட்டையிலே
எதிரி தான்வந்து தட்டுகி றானதை
ஏதென்று கேளடி ஞானப்பெண்ணே. 1

காம னெவருக்கும் மூத்தவ னாமவன்
கற்றிடும் வித்தைகள் மெத்தவுண்டாம்
தாமத மானகு ரோதனும் லோபனுந்
தம்பியாங் கேளடி ஞானப்பெண்ணே. 2

மோக மதமிரு பிள்ளைக ளாம்ஒரு
மூர்க்க மசியக் காரனொடு
சேகர விரசை டம்பனுஞ் சம்பனுஞ்
சினேக மாமடி ஞானப்பெண்ணே. 3

சிநேகனுக் கேற்ற வுறவாளி பொல்லாத்
தீயவ னாகுமோ ராங்காரி
அனேகத்தைச் செய்யு மவதியில் ரோசனும்
அத்தை மகளடி ஞானப்பெண்ணே. 4

---

1. குதிரை கட்டிய லாயம் - குதிரை கட்டும் தொழுக்கூடம். இங்கே வாசியாகிய குதிரையைக் கட்டியுள்ள மனமையம். எதிரி - பின்பாடல்களில் காமம் குரோதம் முதலிய இந்த உட்பகையை விரிவாகப் பாடுகிறார்.

'லாயம்' என்ற சொல்லானது இந்த நூல் இஸ்லாமியத் தொடர்பு ஏற்பட்ட பிறகு தோன்றியது என்பதற்கு அகச் சான்றாகும்.

2. காமன் - காம உணர்ச்சி. கற்றிடும் வித்தைகள் மெத்த உண்டாம் - காமமானது மேவிடும்போது அது கையாள்கிற தந்திரங்களும் உத்திகளும் பற்பலவாகும்.

குரோதம் லோபம் முதலியன காமத்தின் உடன்பிறப்புக்கள்.

3. பிள்ளைகள் - காமத்தின் வழித்தோன்றலான மோகமும் மதமும். பிற உட்பகைகளை அடுக்குகிறார். காமத்தின் நண்பர்கள் என்கிறார்.

4. அகங்காரம், ரோசம் ஆகியவற்றை உறவுமுறை சொல்லி நகைச்சுவையோடு பாடுகிறார்.

பெண்ணே கேளு பதின்மூன் றாகிய
பேர்க ளுண்டு பகையாளர்
ஒன்றே யொன்று வசமா னாலவர்
ஒடுங்கு வாரடி ஞானப்பெண்ணே. 1

ஒடுக்க மில்லை யிவரா லேபலன்
ஒட்டமெல் லாமனக் கோட்டையிலே
படுக ளத்துக்கு மேய்ந்துவ ரப்பசு
பற்றுகி றாரடி ஞானப்பெண்ணே. 2

பாம்பி ருக்குது புற்றுக்குள் ளேசுக
பந்த மிருக்குது நெஞ்சுக்குள்ளே
வீம்பை யடக்கி யுயர்ந்தக் கால்பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே. 3

---

1. ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களோடு, விகாரங்கள் என அழைக்கப்பெறுகிற அவா, வெகுளி, மருள் முதலான எட்டும் சேர்ந்து, பதின்மூன்று பகைவர்கள் நமக்கு.

இந்தப் பதின்மூன்றும் ஒடுங்குவதற்கு வழி அகம் வசமாகிப் பயிற்சி தொடங்கி ஆதார நிலைகளில் நிற்க வேண்டும்.

2. ஒடுங்குவது என்பது இவராலே அன்று. மனக்கோட்டையிலே படுகளத்தில் மேய்ந்துவரப் பசுவாகிய உயிரைப் பற்றுகிறார்கள்!

3. புற்றுக்குள்ளே பாம்பு கிடப்பதுபோலே நெஞ்சுக் குள்ளே உலகப்பற்று வளைந்து கிடக்கிறது. இதனுடைய முனைப்பை அடக்கி முன்னேறினால் பரிவேடிக்கை என்கிற வாசியோக இயக்கம் கைகூடும்.

பித்துப் பிடித்த மனக்குரங் குவெறிப்
பேயும் பிடித்துக்கொண் டாட்டமிட்டால்
அத்தை யடக்க மருந்துசெய் தாற்பரி
அன்று நடத்தலாம் ஞானப்பெண்ணே. 1

நடத்த லாமோ மனவா சிஒரு
நாலைந்து பீற்றலை மூடாமல்
திடத்தி னால்மனஞ் சித்தா னாற்சித்தந்
தெளிந்து கொள்ளலாம் ஞானப்பெண்ணே. 2

தெளிந்த சித்தகம் பூட்டிய திற்சேணத்
தேறு மறிவை யதிற்சேர்த்துக்
குளிர்ந்து ஞானவை ராக்கியக் குறடா
கொண்டு மாட்டடி ஞானப்பெண்ணே. 3

மூலத் தெருவி லொருபாய்ச் சலந்த
முச்சந்தி வீதியி லோர்பாய்ச்சல்
மேலைத் தெருவி லொருபாய்ச் சற்பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே. 4

---

1. பைத்தியமான ஒரு குரங்குக்குப் பேயும் பிடித்துவிட்டால் எப்படி? அதற்கு மருந்து கொடுத்து வாசியாவிட்டால் பிறகு வாசி கைகூடும். குதிரை, பரி - வாசியோகம்.

2. நாலைந்து பீற்றல் - நவத்துவாரங்கள் என்று அழைக்கப்பெறுகிற ஒன்பது வாசல்கள்.
மனம் சித்தானால் - மனத்தில் ஞானம் உண்டானால். சித் - அறிவு.

3. சேனம் - குதிரை ஏறுவதற்குரிய சேனம். குதிரை ஏற்றம் என்ற ஒருவகத்திற்கு ஒப்ப மற்ற சொல்லாட்சி வருகிறது.

4. மூலத் தெரு - மூலாதாரத்திலிருந்து முதுகந்தண்டு வழியாகச் செல்கிற கனற்பாதை. முச்சந்தி வீதி - சுழுமுனை. மேலைத் தெரு - உச்சிப்பாதை.

பரியேற்றம் என்பது வாசியோகம். காற்றை வழி நடத்துகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பெரிய பயிற்சியாகும். ஏட்டிலே படித்துவிட்டு ஒன்றுக்கொள்றாகப் பொருள் செய்துகொண்டு இன்னல் ஊறுவார்கள். சிக்கல் நிரம்பிய செயலாக இருப்பதால் ஞானக் கும்மியில் வருகிற நுட்பமான சில வாசியோகப் பாடல்கள் இங்கே உரைவிளக்கத்தில் சேர்க்கப்படவில்லை. நேரில் ஆசான் செய்து காட்ட வேண்டிய கல்வி அது.

அந்த விதங்கள் அறியா மல்மணி
மந்திர மென்று திரிகின்றார்
அந்தர மான வெழுத்தறிந் தால்மணி
மந்திர மல்லவோ ஞானப்பெண்ணே. 1

மவுன மந்திரங் களினாலே தங்கள்
வாய்தனை மூடித் திரிவார்கள்
புவன சாரம் புசிப்பார்க் குமதி
போசன மாகுமோ ஞானப்பெண்ணே. 2

தாயென்று சொல்லுவார் சொப்பனந் திற்காம
சன்னதம் வந்தால் நினைப் பாரோ
வாய்கொண்டு வேதம் படித்தா லுஞ்சுத்த
மௌனத் தங்குமோ ஞானப்பெண்ணே. 3

---

1. மணி - நவமணிகள் அல்லது இரட்சை முதலியன. மந்திரம் - சொற்களால் ஆகிய ஒலி உரைகள். இந்த யோகநெறி தெரியாமல் மணிமந்திரங்களால் பயனில்லை. அந்தரமான எழுத்து, மோனமே!

2. மவுன மந்திரம் - வாய்குள்ளே செபிப்பது.
புவன சாரம் - மண்ணில் விளைந்தவற்றை, கிழங்கு முதலியவற்றை. இவற்றைப் புசிப்பவர்களுக்குச் சந்திர அமுதம் எப்படி உணவாகும், உண்ணக் கிடைக்கும்? கிடைக்காது.

3. தாய் என்று வெறும் கனவு சொல்லுவார்கள். காம மேலீடு வந்தால் அப்படி நினையார்கள். வாயினால் வேதம் படிக்கலாம், மௌனம் அதாவது மோனத்தவம் இவர்களுக்குத் தங்காது.

உலகர்களுடைய ஆசாரப்படி தாயத்து, நவமணி அணிவார்கள். வாய்க்குள்ளேயே செபிப்பார்கள். மறை நூல்கள் படிப்பார்கள். சுத்த மௌனமாகிய ஒடுக்கம் சிந்திக்காது!

தாடி வளர்த்துச் சடைவளர்த் துநல்ல
சந்யாசி யென்றொரு வேடமிட்டே
ஓடித் திரிந்த புலையாட் டையிங்கே
ஒப்புவ தாரடி ஞானப்பெண்ணே. 1

பேசா திருக்கும் இடம்பார்த் தேஅதைப்
பெற்றே யிருப்பது மந்திரமாம்
ஆசானென் றேயுப தேசமிட் டாற்குரு
அல்லவென் றுகும்மி யடியுங்கடி. 2

சொற்குரு வாரே கதியா மோபொய்யைச்
சொல்லுவார் தங்க ளுறவாமோ
சற்குரு வானவ ரைச்சேர்த் தேயவர்
தம்சொல்லைக் கேளடி ஞானப்பெண்ணே. 3

நானென்ற ஆணவம் பேசார் கள்நல்ல
நாடென்றுங் காடென்றுஞ் சொல்லார்கள்
தானென் றியாவையுங் கண்டா ரேநல்ல
சற்குரு வாமடி ஞானப்பெண்ணே. 4

---

1. ஓடித் திரிந்த விளையாட்டை என்று ஒரு பாடம். புலையாட்டை என்றும் ஒரு பாடம். புலையாடு என்பது வெள்ளாடு. தாடையிலே தொங்கு சதை காணலாம். அதர் என்று அதற்குப் பெயர். "ஆட்டின் கழுத்தில் அதர்" என்று வருகிற திருமந்திர அடி இதைக் குறிக்கிறது. ஒப்புவது - ஒப்புக்கொள்வது.

2. பேசாதிருக்கும் இடம் - மோனவெளி.
ஆசான் என்று சொல்லி உபதேசம் செய்ய வந்துவிட்டாலே நம்பக்கூடாது!

3. சொற்குரு - வெறும் பிரசங்கம் செய்கிறவர்.
சற்குரு - நடைமுறையைக் கற்பித்துச் செய்து காட்டுபவர்.

4. நல்ல நாடு, காடு என்ற வேறுபாடு ஞானிகளுக்கு இல்லை. "யாதானும் நாடாமால் ஊராமால் (காடில்லை)" என்றவாறு. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதும் இதுவே. தானென்று யாவையும் காணுதலே ஒருமைநோக்கு. தன்னைப்போல எண்ணுதலும் தனது பிரதிபலிப்பாகக் கொள்ளுதலும் ஆம்.

குருவி ருப்பதும் உள்ளத்தி லேமனக்
கோணல் அறுப்பதுந் தனக்குள்ளே
பொருளி ருப்ப தறியா மற்புடம்
போடுவ தெப்படி ஞானப்பெண்ணே. 1

வாதஞ் செய்ய அறியா மல்ரச
வாதஞ் செய்கிறோ மென்றுசொல்லிச்
சூதங் கெந்தி புடத்திலிட் டாலதிற்
சொன்னம் விளையுமோ ஞானப்பெண்ணே. 2

லிங்க முருக்க அலைவார் கள்சாதி
லிங்க மிருப்ப தறியாமல்
வங்கமுந் தங்கமுஞ் சேர்த்து ருக்கினால்
பங்க மிதல்லவோ ஞானப்பெண்ணே. 3

---

1. உள்ளத்திலேதான் குரு வாழ்கிறார், ஒளி வடிவாக! புடம் எப்போது போடலாம், பொருள் இருந்தால்தானே? வெறும் புடம் என்பது இல்பொருள் அல்லவா?

2. வாதம் செய்ய அறியாமல் - இரசவாத ஞானம் இல்லாமல்.
சூதம் - பாரரசம். கெந்தி - கந்தகம்.
சொன்னம் - தங்கம், சொர்ணம்.

3. லிங்கம் - சாதி இலிங்கம் வங்கம் - ஈயம். பங்கு - பழுது, கேடு.

வெளிவேடங்களும் ஆடம்பரங்களும் மக்களை மயக்கலாம். ஆனால் அவையல்ல உண்மை ஞானம். இவ்வாறே இரசவாதம் என்ற சாதனை அறியாதவர்கள் பொய்யாக இப்படிச் செய்வதாகச் சொல்லி ஏமாற்றுவார்கள்.

உலகில் ஞானத்தின் பெயராலும் பல மோசடிகள் நடப்பதை இவ்வாறு கூறுகிறார் இந்த மெய்ஞ்ஞானி.

பிழைக்க முத்தி யறியா மற்சென்ம
பூர்வக் கியானந் தெறியாமல்
தழையைத் தின்று சருகா கித்திசை
தயங்கு றாரடி ஞானப்பெண்ணே. 1

தயங்கி யென்ன பலனா மோமனஞ்
சாதித்து நிற்கத் திறமாமோ
மயங்கி டாதே அழலை மகத்துவம்
வருவ தெப்படி ஞானப்பெண்ணே. 2

உப்பை யறிந்தவ னேவா திசகத்
துப்பை யொழிந்தவ னேயோகி
தப்பிலை யேபூமி நாத மகிமையைச்
சார்ந்து பாரடி ஞானப்பெண்ணே. 3

---

1. பிழைக்க - உய்வு பெற.
பூர்வக் கியானம் - முன்னை அறிவு.
தழையைத் தின்று - காய்களும் கிழங்குகளும் இலைகளும் உண்டு, துறவு வாழ்வு என்ற பெயரில்.

சருகாகி - உடம்பு, காய்ந்து சருகாகி,
திசைதயங்குறர் - செல்லும்நெறி தெரியாமல் மருளுகிறார்கள்.

2. சாதித்து - உறுதியோடு வல்லமை இயற்றி. அழலை - சோர்வு. அழலை மயங்கிடாதே - நொந்து சோர்ந்து மருளாமல். அழலை மகத்துவம் வருவது எனறு சேர்த்து ஒளிமகிமை சேர்வது என்று சிலர் பொருள் கொள்வதுண்டு.

3. உப்பு - முப்பு என்கிற சித்தர் வேதியற் பொடி.
வாதி - இரசவாதி.
உப்பு - உணவு கொள்கிற கடலுப்பு.

முப்பு கைந்தவன் இரசவாதி.
உலக உப்பை ஒழித்தவன் யோகி.

காயாம் பட்டிக்கு ளத்துக்குள் ளேவெள்ளைக்
காயா வேரு முளைத்திருக்கும்
வாயாற் றின்று நிமிர்ந்தக் காலுடல்
மாயா தல்லவோ ஞானப்பெண்ணே. 1

கற்ப நிலையறிந் தெண்ணா மல்வெறிக்
கஞ்சா வுண்டு விழிப்பார்கள்
அற்பர் குகைமலை சென்றா லும்வத்தை
அறிய லாகுமோ ஞானப்பெண்ணே. 2

கொங்கணர் சொன்ன சடைக்காண் டம்அதிற்
சங்கை யறிவது பிரமாண்டம்
எங்கள் குருசட்டை மாமுனி யாரிரு
நூறும் பாரடி ஞானப்பெண்ணே. 3

நூறிலு ரைத்தது மெய்ஞ்ஞா னந்திரு
மூல ருணர்ந்தது வேஞானம்
பூரண கும்ப முனிசொன்ன சூத்திரம்
பூண்டகம் பாரடி ஞானப்பெண்ணே. 4

---

1. காயாம்பட்டி - யாக்கை.
குளம் - மூலாதாரம். காயா வேரு - ஆதார நாடி.
இந்த மூலாதாரத்திலிருந்து அனல் எழுப்பி வாயினுள் அண்ணாக்கு கொண்டு ஞானச்செயல் புரிந்து உண்டால் உடம்பு மாயாது.

2. கற்ப நிலை - சாகா அமுதம் உண்ணுகிற ஆதாரநிலை.
வத்தை - வஸ்துவை, பரம்பொருளை.

3. சடைக்காண்டம் - முடிவான பகுதி.
சங்கை - சங்கியை ஆகிற கணக்கு.
பிரமாண்டம் - மாபெரும் சிறப்பு.
இருநூறு - இருநூறு பாடல்கள.

4. நூறு - நூறு பாடல். கும்ப முனி - அகத்தியர். பூண்டு அகம் பார் - சிரமேற் கொண்டு அதன்படி அகப்பார்வையைச் செலுத்து.

தீட்சையில் மச்ச முனிதீட் சையவர்
செப்பின ஞான மொரு நூ றும்
தாழ்ச்சிவா ராது பெரியோ ரைக்கண்டு
சாட்சி கேளடி ஞானப்பெண்ணே. 1

இரேசக வூரக கும்பகத் தால்வாசி
நேரிட்டுச் செய்வதும் ஆசையடி
கேசர மாகிய அத்வித பிரமத்தைக்
கிட்டிக் கும்மி யடியுங்கடி. 2

உப்பை விடுவதும் ஆசையடி அன்னம்
ஓர்பொழு துண்பதும் ஆசையடி.
செப்பனுண் ணாத மனோன்மணி தேவனைச்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 3

வாசலி லேயொரு மேல்வா சலந்த
வாசலி லேசிறு வாசலுண்டு
நேச முடன்சிறு வாசலிற் பூட்டியே
நெருக்கம் பாரடி ஞானப்பெண்ணே. 4

---

1. தாழ்ச்சி வாராது - ஒரு குறையும் ஏற்படாது. சாட்சி கேளடி - சான்றாக அனுபவங்களைக் கேட்டுப்பார். உண்மை என்பதை உணர்வாய்.

2. இரேசகம் - மூச்சை வெளிவிடுதல். பூரகம் - மூச்சை உள்ளிழுத்தல். கும்பகம் - மூச்சை அடக்கி நிற்றல்.
கேசரம் - ஆதிமூலம் ஆகிய வான்பொருள், விண்ணில் சஞ்சரிப்பது; இங்கே சிரசில் அசைவது.

3. உப்பை விடுவதும் - உப்பை விட்டுவிட்டு, உப்பில்லாப் பண்டம் புசித்தல்.
அன்னம் - சோறு.
மனோன்மணி தேவனை - மனத்தின் மணி ஆகிய வாலையையும் தலைவனையும்.

4. ஆதாரநிலையின் பாதையிலே மேலே செல்கிற ஒரு பாதை. அதில் ஒரு திட்டிவாசல் உண்டு. இக்கருத்து முன்பும் கூறப்பட்டது.

தேசங்கள் போவதும் ஆசைய டிகுல
தெய்வமுண் டென்பதும் ஆசையடி
நேச மெம்பிர மஞான சோதியைச்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 1

சமய பேதமும் ஆசைய டிகங்கா
ஸ்நான பூசையும் ஆசையடி
மமதை யற்றிருக் கின்ற மமதையை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. 2

பால்கற வாப்பசு தள்ளுங்க டிபதி
பாசத்தை யும்விட் டுத் தீருங்கடி
மேல்வி ளங்கிய தற்பர சோதியை
வேண்டிக் கும்மி யடியுங்கடி. 3

---

1. தேசங்கள் போவது - சேத்திராடனம் என்னும் வழிபாட்டுப் பயணம்.
பிரமஞான சோதி - உச்சி ஞானப் பெருவெளியில் உள்ள சுடராகிய பரம்பொருள்.

2. மமதை யற்றிருக்கின்ற - கர்வம் அற்று இருக்கின்ற.
மமதை - தன்நிலை, தனிமை.

3. பசு - ஆன்மா, அது பால் கறவாத பசு, ஞானம் கைகூடவில்லை என்றால்!
பதி பாசத்தையும் விட்டுத் தீருங்கடி - இறையன்பையும் விட்டு நில்லுங்கள்.
அதாவது "ஈசனோ டாயினும் பாசம் அறுமின்கள்" என்று திருமூலர் சொன்ன பொருளிலே.
மேல் விளங்கிய - உச்சியில் ஒளிவீசுகிற.
தற்பரஞ்சோதி - மேன்மையான பரஞ்சுடர், ஆன்மாவுக்கு எட்டாத அத்தனை உயரமான பரம்பொருள்.

தத்துவக் குப்பையைத் தள்ளுங்க டிவத்தே
சாத்திரப் பொத்தலை மூடுங்கடி
முத்தி தருஞான வத்துவை வாவென்று
மூட்டிக் கும்மி யடியுங்கடி. 1

ஆறா தாரமுந் தொல்லைய டியதற்
கப் பாலேயொன்று மில்லையடி
சீராய் நின்ற நிலைபார்த் துப்பெண்கள்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 2

சித்தர் சொற்படி சித்தானந் தங்கண்டு
தெளிந்து கொள்ளடி வேதாந்தம்
தத்துவ மாகிய வுற்பத்தி சூக்குமச்
சார்பு கேளடி ஞானப்பெண்ணே. 3

---

1. தத்துவக் குப்பையை - ஆன்ம ஆராய்ச்சியாகிய பயனற்ற வீண்குறையை.
சாத்திரப் பொத்தல் - ஓட்டைகள் உள்ள சாத்திரங்களின் குண்டு குழிகளை.
வத்து - வஸ்து, பரம்பொருள்
மூட்டி - மூலக்கனலை மூட்டி.

2. தொல்லையடி - சிக்கல் நிரம்பியது.
அப்பாலும் ஒன்றுமில்லை- தாண்டினால் பாழ்வெளி,
சீராய் நின்ற நிலைபார்த்தல் - அகப்பார்வைப் பயிற்சியாகிய ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக் கண்டு நிற்றல் என்னும் அற்புதமான ஞானப்பயிற்சி.

3. சித்தானந்தம் - பேரறிவாகிய சித் தில் விளைகிற களிப்பு.
உற்பத்தி சூக்குமச் சார்பு - அடியும் முடியும் பாலம் அமைக்கிற நுண்ணுடற் பயிற்சி.

அண்டமும் பிண்டமும் பாழாச் சேஅதற்
கப்பா லும்பெரும் பாழாச்சே
உண்டில்லை யென்று பராபரப் பிரமத்தை
உவந்த கும்மி யடியுங்கடி. 1

சொல்லினும் கல்லினும் நில்லா தேபிரம
சோதியை யாதியைத் தூவெளியை
வல்லவத் தற்பிர காச மவுனத்தை
வகை யறிந்துகொள் ஞானப்பெண்ணே. 2

பிருதிவி தூய்மை மயமாச் சேயதில்
பேதம் பலபல வுண்டாச்சே
சுருதி முடிவைக் குருசொல்லு வாரந்தச்
சூட்சந் தெரியுமோ ஞானப்பெண்ணே. 3

---

1. அண்டம் - வெளியுலகம்.
பிண்டம் - இந்த யாக்கை.
உண்டில்லை - நிலையில்லை.

2. சொல்லினும் - பாடல்களிலும்.
கல்லினும் - சிலைகளிலும். தத் - அது.
தற்பிரகாச மவுனம் - தானே ஒளியாக நிற்கிற மோனவெளி.

3. பிருதிவி - இந்த மண்ணுலகம்.
தூய்மை மயமாச்சே - உண்டாகும்போது சுத்தமாக இருந்தது.
சுருதி முடிவு - மறையின் முடிவாகிய.
சூட்சம் - நுட்பம்.

உலகம் தோன்றிய தத்துவமும், அதில் வேறுபாடுகள் கிளைத்ததுவும், பிரபஞ்ச உற்பத்தியின் வரலாறு பற்றிச் சித்தர்கள் கூறுகிற ஞானக் காட்சி. அதன் கொடுமுடியாகிய ஞானமே வேதாந்தம் என்பதைக் குருவே விளக்கிக் காட்ட வல்லவர்.

அறிந்து கொண்ட பெரியோர் பாதங்கள்
அர்ச்சனை செய்துகும் மித்தமிழைப்
பிரிந்தி டாமனூற் றெண்பத்தைந் துகண்ணி
பேசினேன் சற்குரு தாள்வாழி. 1

சற்குரு பாத மிகவா ழிவாலை
சாமி தமிழ்நிதந் தான்வாழி
நற்குண ஞானக்கும் மித்தமிழ் கற்றவர்
ஞான நெறியே மிகவாழி. 2

---

1. பிரிந்திடாமல் - சிதைந்து விடாதபடி.

2. நாந்தி என்கிற வாழ்த்திலே குருவையும், குருமார்களையும், தனது படைப்புகளையுமே வாழ்த்தி, அந்த நூற் கற்பாரையும் வாழ்த்துவது பொதுவாக எல்லாக் காப்பியப் புலவர்களுக்கும் மரபே எனினும். சித்தர் இலக்கியத்தில் இதற்கு ஒரு தனியான சிறப்பு உண்டு.

ஆன்ம நேய ஒருமைப்பாட்டிலே தோய்ந்து வருகிற வாழ்த்தாக இருப்பதால் இதன் வல்லமைக்கு ஓர் இறையாற்றல் உள்ளது!

(ஞானக்கும்மி முற்றிற்று)

# கருவூரார் பூசைவிதி

கருவூர்ச் சித்தரின் சிலை கருவூர்ப் பசுபதீசுவரர் கோவிலிலும் தஞ்சைப் பெரிய கோவிலிலும் இப்போதும் பார்க்கலாம்.

இவர் வாழ்ந்த காலம் பத்து, பதினோராம் நூற்றாண்டுகள். கருவூராருடைய வரலாறு சித்தர் இலக்கியம் ஆய்வுநூலில் 8, 9, 10ஆம் பக்கங்களில் விரிவாகவே கொடுத்திருக்கிறேன்.

சைவத் திருமுறைகளில் ஒன்பதாந் திருமுறையில் இவருடைய பதிகங்கள் பத்தைக் காணலாம். இந்தப் பூசைவிதி என்னும் பனுவலை அருளியவர் இவரே என்பது அறிஞர் உலகின் முடிவாகும். நடையில் வேறுபாடு இருப்பது குறித்து இவரை வேறொருவர் என்று சொல்வதற்கில்லை.

கருவூர்த் தேவர் ஒரு சித்தராக விளங்கியதும், காயகல்பம் அருந்திப் பல்லாண்டுகள் இந்த உடம்போடு வாழ்ந்ததும் சைவ உலகம் ஒப்புக்கொண்ட உண்மைகள்.

வரலாறு இந்த அளவில் நிற்கிறது. பூசை விதி கூறும் நூல் சித்தரின் ஞானவழிபாட்டின் நுட்பங்களைத் தாங்கி நிற்கிறது. முக்கியமாகச் சந்திரகலைப் பயிற்சியின் மேன்மைகளையும் நுட்பங்களையும் மறைநூலின் தன்மைக்கேற்பச் சொல்லாமல் சொல்லி அமைதி காண்கிறது.

# கருவூரார் பூசைவிதி

## காப்பு

### எண்சீர் விருத்தம்

தெளிவுதனில் தெளிவுதரும் அருளுங் காணும்
க்ஷணத்திலே சிவமயமுஞ் சேரத் தோணும்
வழியதனில் நல்லவழி ஞானங் கூடும்
மகத்தான வேதாந்தஞ் சித்தி காட்டும்
ஒளிவுதனி லொளிவுதரு முறுதி சொல்வார்
உற்பனத்தி லுற்பனமா யுறுதி தோணும்
வெளியதனில் வெளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்ற வாலைப்பெண் ணாதி காப்பே.

## நூல்

ஆதியந்தம் வாலையவ ளிருந்த வீடே
ஆச்சரியம் மெத்தமெத்த அதுதான் பாரு
சோதியந்த நடுவீடு பீட மாகிச்
சொகுசுபெற வீற்றிருந்தாள் துரைப்பெண் ணாத்தாள்
வீதியந்த ஆறுதெரு அமர்ந்த வீதி
விளையாடி நின்றதிரு மாளி கண்டாய்!
பாதிமதி சூடியே யிருந்த சாமி
பத்துவய தாகுமிந்த வாமி தானே. 1

---

காப்பு. தெளிவுதனில் தெளிவுதரும் - உலகமயக்கம் நீங்குவதில் தெளிவைத்தரும்.
அருளும் காணும் - திருவருளையும் நிலைநாட்டும்.
காணுதல் - நிறுவுதல்.
ஒளிவுதனில் ஒளிவுதரும் - அறிவடைதிலே பேரறிவை நல்கும்.
உற்பனத்தில் உற்பனமாய் உறுதி தோன்றும் - உறுதி தோன்றுவதிலும் உறுதியாகத் தோன்றும்.
வெளியதனில் வெளியாகி - பரவெளியிலே வெளிவந்து.

1. ஆதி அந்தம் - அடியும் முடியும்.
நடுவீடு - நடுநாடியோடு செல்லவேண்டிய வீடு.
பீடம் - இருக்கை.

ஆறு தெரு - ஆறு ஆதாரங்கள். திருமாளி - திருமாளிகை. பாதிமதி சூடியே இருந்த சாமி - பிறை சூடியாகிய பரம்பொருள். பத்து வயதாகும் இந்த வாமி - பத்து வயதுச் சிறுமியாவாள் இந்தப் பராசக்தி.

வாமியிவள் மர்மம்வைத்துப் பூசை பண்ண
மதியுனக்கு வேணுமடா அதிக மாக
காமிவெகு சாமிசிவ காம ரூவி
காணரிது சிறுபிள்ளை கன்னி கன்னி
ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர் சித்தர்
அறிந்தாலு மனமடக்க மறிய வேணும்
நாமிவளைப் பூசைபண்ண நினைத்த வாறு
நாட்டிலே சொல்லவென்றால் நகைப்பார் காணே. 2

காணப்பா இவருடைய கற்பு மெத்த
கண்டவர்க்குப் பெண்ணரசு நானே யென்பாள்
ஊனப்பா வமிதமிவ ளூட்டி வைப்பாள்
உள்வீட்டுக் குள்ளிருந்து மேலே யேறப்
பூணப்பா மனமுறைந்து வாவா வென்பாள்
புத்திரனே யென்மகனே யென்று சொல்லி
வேணப்பா வேணதெல்லாந் தருவே னென்பாள்
வேதாந்த சூட்சமெல்லாம் விளங்குந் தானே. 3

---

2. மர்மம் வைத்து - இரகசிய நிலைகள் தெரிந்து, ஆயம் உணர்ந்து.
காமி - காமாட்சி. சாமி - தலைவி.
நாம் இவளை வழிபடுகிற முறையைச் சொன்னால் உலகவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.

3. மெத்த - சால.
உள்வீட்டுக்குள்ளிலிருந்து - நுண்ணுடலில் இருந்தவாறு.
மனம் உறைந்து - மனம் பூரித்து.
வேதாந்த சூட்சம் வேத முடிவாகிய உச்சிவெளியின் நுட்பங்கள்.

சாதாரணமாக பேச்சுத்தமிழில் மிக உயர்ந்த தத்துவ நுட்பங்களைக் கூறுகிறது, இந்தச் சித்தரின் கவிதை. இதுவே இவருடைய இலக்கியப் பண்பு. வேறு சில சித்தர்களும் இதுபோன்ற தமிழ்நடையையே கையாண்டிருக்கிறார்கள்.

தானென்ற வாலையிவள் ரூபங் காணச்
சமர்த்துண்டோ ஆண்பிள்ளை தானு முண்டோ
பானென்ற வாமத்துக் குள்ளே யப்பா
பராபரையாள் பலகோடி விதமு மாடித்
தேனென்ற மொழிச்சியிவள் சித்தர்க் கெல்லாம்
சிறுபிள்ளை பத்துவய துள்ள தேவி
ஊனென்ற வுடலுக்குள் நடுவு மாகி
உத்தமியாள் வீற்றிருந்த வுண்மை தானே. 4

உண்மையிவர் நாணமில்லா திருந்த வீடே
ஊருக்குள் நடுவீடே உற்றுப் பாரு
செம்மையாய்க் கண்டவர்க ளுண்டோ அப்பா
செகசால வித்தையிவ ளாடும் வித்தை
உண்மையடா பஞ்சவண்ண மாகி நின்ற
உலகதனி லலைந்தவர்கள் கோடா கோடி
நின்மலமாய்க் கண்டவர்கள் சொல்லா ரப்பா
நேசமுட னெனக்குரைத்த நிசங்கண் டேனே. 5

---

4. ரூபங் காண - வடிவத்தைப் பார்க்க.
சமர்த்து - திறமை. வாமம் - இடப்பக்கம்.
மொழிச்சி - மொழி உடையாள்.

5. நடுவீடு - நடுமையம்.
பஞ்ச வண்ணமாகி நின்ற உலகம் - ஐந்து பருப்பொருளாக அமைந்துள்ள உலகம்.

வாலை யிருப்பிடம் இடப் பாகம். இதையே வாம பாகம் என்கிறோம். இடகலை, இடது நாசியின் மூச்சு ஆகிய சந்திரகலையில் அவள் இயங்குகிறாள். நயன தீட்சையிலும் இந்த வாம பாகமே வாலைக்குரிய பயிற்சி நிலையமாகக் கற்பிக்கப்படுகிறது. உண்மையில் வாலையின் வழிபாடாகிய அம்மைக்குப் பிறகே வலப் பக்கத்துப் பயிற்சி தொடங்கும். ஒன்பது பாடங்கள் முடிந்த பிறகுதான் பத்தாவது பாடத்தில் அம்மையின் வாயிலாக அப்பனைக் கூடுகிற பயிற்சி தொடங்குகிறது. இந்தப் பயிற்சிமுறைகளிலே வல்லமை மிக்கவரே கண்ணப்ப சுவாமிகள்.

கண்டதொரு பூரணத்தின் மகிமை கேளு
கால்மேலுந் தலைகீழும் நடுவு மாகி
அண்டரொடு முனிவர்களுங் கண்டு போற்ற
ஆதவனு மம்புலியு மதிலே நின்று
தொண்டுபண்ணு மவர்களிலே நாலு பேர்கள்
சுகம்பெறலா மென்றுசொன்ன வாசல் நாலு
கொண்டவர்கள் கண்டுவந்த தொண்ணூற் றாறு
கொள்கையெனக் காத்திருந்த குறிப்பைப் பாரே. 6

பார்த்தவர்கள் செய்தொழிலும் மனமும் வேறாய்ப்
பலநூ லைப் படித்துப்படு குழியில் வீழ்வார்
ஏற்றபடி மனம்போனாற் புத்தி போச்சே
ஏழைமதி போகாதே என்தாய் பாதம்
போற்றுதற்கே ஐவரையு மனத்த லொன்றாய்ப்
புத்திசித்த மோர்நிலையில் நிறுத்தி வாசம்
பூத்தமல ரெடுத்துதிருப் பாதம் போற்ற
பொறியைந்து கருவிகர ணாதி போமே. 7

---

6. இறைமை நிலை பேசுகிறார்.

ஆதவன் - சூரிய கலை. அம்புலி - சந்திரகலை தொண்டுசெய்யும் நாலுபேர் - மனம், அறிவு, நினைவு. அல்லது கருத்து, முனைப்பு அல்லது அகங்காரம். நாலு வாசல் - தொப்பூழ், முகம், தொப்பூழின் உட்பகுதி, நெஞ்சகம்.

தொண்ணூற்றாறு - தொண்ணூற்றாறு தத்துவங்கள்.

7. ஐவரையும் - ஐந்து பேரறிவையும்.

வாசம் பூத்த மலர் - மனமலர்.

கடைசி அடியில் புறக்கரண தண்டமும்,
அகக்கரண தண்டமும் குறிக்கப்பட்டுள்ளமை
ஒரு நுட்பமான பயிற்சி முறை ஆகும்.

போச்சுதடா மனமாய்கை வீறு போச்சு
பொறியைந்து கருவிகர ணாதி போச்சு
ஏச்சுதடா வென்றுமன மிறக்க லாச்சு
எனக்கொருவ ரிணையில்லை யென்ற பேச்சு
வாய்ச்சுதடா மனமடங்க வங்கென் றோர்சொல்
வாய்பேசா மவுனத்தை யதிலே சேர்க்கக்
காய்ச்சுதடா பூத்தமலர் கருத்தை யூன்று 8
கனியாகு மக்களிதைக் கண்டு கொள்ளே.

கொள்ளுதற்கிங் கின்னமொரு குறிப்பைக் கேளு
கோடியிடி மின்முழங்குங் கண்ணை மூடு
விள்ளுதற்கு மனமடங்காப் பூதங் காணும்
விள்ளாதே யுள்ளபடி சிங்கென் றோர்சொல்
விள்ளவுமே வுபாயமதால் நடுவே நில்லு
வேகமெல்லா மொடுங்குமடா சத்தம் போச்சு
கள்ளரைப்போல் மயங்காதே மவுனத் தூன்று 9
கண்ணிணையந் திறக்காதே கருதிப் பாரே.

பாரேது புலனேது அனலு மேது
பாங்கான காலேது வெளியு மாகும்
நாரேது பூவேது வாச மேது
நல்லபுட்பந் தானேது பூசை யேது
ஊரேது பேரேது சினமு மேது
ஓகோகோ அதிசயந்தா னென்ன சொல்வேன்
ஆறேது குளமேது கோயிலேது 10
ஆதிவஸ்தை யறிவதனா லறிய லாமே.

---

8. மாய்கை - மாயை. வீறு - வலிமை. 'வங்' போன்ற ஒலிகள் மந்திர ஆற்றல்நிரம்பியவை. 'ம்' என்பது மௌன எழுத்து.

9. புறக்கண்ணை மூடி சிங் என்ற இரகசியச் சொல் நிலையிலே மனம் ஒன்ற வேண்டும். நடுநாடியூடு சென்று யோகம் கூடவேண்டும். பேச்சற்ற மௌனத்திலே தியானம் இயற்ற வேண்டும்.

10. மண், தண்ணீர், தீ, காற்று, எல்லாம் வானிலே ஒடுங்கும். இதற்குமேல் அர்ச்சனையாவது பூசெய் வினையாவது! ஊர்பேர் கோப தாபங்கள் ஒன்றும் அற்ற நிலை அது! நதி நீராடல், குளத்திலே குளித்தல், கோயிலைச் சுற்றுதல் எதுவும் கிடையாது! எல்லாம் அறிவுமயம்!

ஆமெனவும் ஊமெனவும் இரண்டுங் கூட்டி
அப்பனே ஓமென்ற மூன்று மொன்றாய்
நாமெனவுந் தாமெனவு மொன்றே யாகும்.
நல்லவர்க ளறிவார்கள் சாமி காணான்
வாமம்வைத்துப் பூசைபண்ண இந்த மாரக்கம்
வந்தவர்க்குச் சத்திசிறு பிள்ளைவாலை
சோமநதி யமுதமுண்ண வாவாவென்பாள்
சுகமுனக்குப் பரமசுக மருள்செய் வாளே. 11

செய்குவாய் பூசையது செய்யும் போது
செய்குறிகள் தவறாமல் நடக்க வேண்டும்
உய்குவாய் பெண்ணரவம் கடியா வண்ணம்
ஊமையென்ற நடுத்தீயை யதிகங் கொண்டால்
பைகுவாய் அரவுவிடம் பொசுங்கிப் போகும்
பங்கமுனக் கில்லையடா அங்க மீதில்
ஐகுவா யுள்ளடக்கிப் பேச்சை விட்டே
அழைத்ததிடவே யஞ்சுமது கொஞ்சுங் காணே. 12

---

11. ஓங்காரப் பிரணவத்தின் விரிவுகள் கூறி வாலையின் திருவருட் பாங்கை விளக்குகிறார்.
வாமம் - இடப்பாகம்.
சோமநதி - சந்திர காலை ஊற்று.
அமுதமுண்ண - ஞானப்பால் பருக.

12. அரவு - மூலக்கனல், பாம்பின் வடிவம்.
இந்த அகப்பூசை செய்யும்போது பத்து நாடிகளில் நடுநாடியின் கோடியிலுள்ள களத்திலே சந்திரகலை பாயும்போது எந்தெந்தக் கனவாற்றலை எப்படி எப்படி இயக்கவேண்டும் என்ற விரிவைக் கூறுகிறார். இந்தப் பயிற்சி மாணவனாகச் செய்து முன்னேறவேண்டியது என்றாலும், சிவயோகியார் போன்ற ஞான குருமார்கள் தாங்கள் தருகிற முதலாவது தீட்சையில் தொடக்கத்திலேயே இமே யிருந்து முதுகந்தண்டு வழியாக மூலக்கனலைத் தங்களுடைய கைகொண்டு தடவியவாறு மேலே எழுப்பிக் காட்டுவதுண்டு.

காணாத காட்சியெல்லாங் கண்ணிற் காணும்
கலங்காதே மெய்ம்மயக்கம் மெத்த வாகும்
பூணாத பணிபூண்டு சிறுபெண் ணாகப்
போகமெனும் பொருள்பறிக்க வருவாய் கண்டாய்
வாணானை மடக்கியவள் ரூபங் கண்டு
மயங்காதே மவுனத்தில் நில்லு நில்லு
கோணாத முக்கோணக் குறியைப் பாரு
கூசாதே கண்கூசுங் கூசுங் காணே. 13

கூச்சமற்றுப் பார்க்கையிலே இருள்போல் மூடும்
கொள்ளிகொண்டு கொளுத்தியதை வெளிச்சம் போடு
வாய்ச்சமர்த்துப் பேசாதே மவுனத் தூன்று
வாவாவென் றேநீயும் வருந்தக் கூவச்
சூட்சமனு விருந்தவிடஞ் சொல்ல லாமோ
சொல்லுதற்கு வாய்விட்டுச் சொல்ல லாமோ
தாய்ச்சமர்த்துப் பாராதே தாயைப் போற்று
சற்குருபொ லுற்பனத்தைத் தாய்சொல் வாளே. 14

---

13. காணாத காட்சி - இதுவரை காணாத காட்சி என்பதோடு காணுதற்கு அரிய காட்சி என்றும் பொருள்.

மெய்ம்மயக்கம் மெத்தவாகும் கலங்காதே - இந்த அனுபவத்தினால் தலைக்கிறக்கம் சிலருக்கு மிக அதிகமாகவே ஏற்படும். பயப்பட வேண்டாம். இவள் தோற்றும்போது எழிலைக் கண்டு சொக்கி வீணாகி விடக்கூடாது. முக்கோணக் குறியாகிய ஆகம நிலையையே பார்க்கவேண்டும்.

இந்தப் பாடல் சித்திரிக்கும் யோகமுறை சிக்கனப்பாறை கண்ணப்ப சுவாமிகள் கற்பித்துவந்த அதே முறையாகும்.

14. கொள்ளி கொண்டு கொளுத்தி - மூலக்கனலை எழுப்பி இருளை அகற்று. சொல்லுதற்கு வாய்விட்டுச் சொல்லலாமோ - இரகசியத்தைத் தொட்டுணர்த்த வேண்டுமேயல்லாமல், வாய்விட்டுச் சொல்வதற்கில்லை. சங்கரபாரண ராகத்தைச் சொல்லினால் எப்படி விவரித்து உணர்த்துவது, பாடிக் காட்ட வேண்டும். நீலவண்ணம் அல்லது சிவப்பு எப்படி இருக்குமென்றால் பூசித்தானே காட்ட முடியும்!

சொல்வதற்கிங் கிவளையலால் சுகம்வே றுண்டோ
சூட்சமெல்லா மிவளைவிடச் சூட்ச முண்டோ
நல்லவர்க்கு நடுவில்விளை யாடும் வல்லி
நாதவிந் தோங்கார நிலையுங் காட்டி
வல்லவர்க்கும் வல்லவரும் நானே யென்பாள்
வரமவர்க்கு வேணதெல்லாம் வழங்கு ரூபி
புல்லருக்கிங் காயுதமும் புல்லே யாகும்.
புத்திகெட்ட லோபிகட்குப் புகலொ ணாதே. 15

புகலுவார் வேதமெல்லாம் வந்த தென்று
பொய்பேசித் சாத்திரங்கள் மிகவுங் கற்றே
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்றே
அறிவுகெட்டே ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெலாம் பெண்ணாசை பூசை தானே. 16

பூசையது செய்வமென்று கூட்டங் கூடிப்
புத்திகெட்டுக் கைமுறையின் போக்கை விட்டுப்
பாசையது மிகப்பேசி பாட்டுப் பாடிப்
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக் காணார்
ஆசையிலே பெண்ணாசை மயக்கத் தாலே
அங்கிருந்த வாமத்தைப் பங்கு போட்டுப்
பேசையிலே மனம்வேறாய் நினைப்பான் பாவி
புரட்டுருட்டாய் நினைவுதப்பிப் பேசு வானே. 17

---

15. நடுவில் விளையாடும் வல்லி - நடுவாகிய உச்சி அம்பலத்தில் விளையாடுகிற வல்லிக்கொடியாள்!

16. வாலையைப் பூசிப்பவர்களிலே புரட்டுக்காரர்கள் உண்டு. வேடந்தான், உண்மையிராது. பெண்ணாசையிலே உழன்று திரிவார்கள்.

17. ஆடம்பரமான பேச்சும் படாடோபமான பாட்டுக் களுமாக அட்டகாசம் பண்ணுவார்கள். வந்த பெண்களை நாடி இழுக்குச் சொல்வார்கள். உருட்டும் புரட்டுமாகவே இருக்கும் அவர்கள் போலிச்செயல்!

பேச்சென்றால் வாய்ச்சமர்த்தாயப் பேசிப் பேசி
பின்னுமுன்னும் பாராமல் மதமே மீறி
நீச்சென்றும் நினைப்பென்றும் ஏதுங் காணார்
நிர்மூட ரனேகவித சாலங் கற்றே
ஆச்சென்றா லதனாலே வருவ தேது
ஆத்தாளைப் பூசித்தோ னவனே சித்தன்
மூச்சென்ன செய்யுமடா நரகிற் றுள்ளும்
மோசமது போகாதே மூக்கால் பாரே. 18

முக்காலும் பொருந்துமென்று சொன்ன போதே
மோசமில்லை சூட்சமது மொழிந்து கூடும்
தக்காமற் போனபே ரனேக ருண்டு
சமர்த்தறிந்தா லவன்வாமி யவனே சித்தன்
எக்காலும் நடந்திருநீ காலு முன்னி
இருந்தடங்கி யுள்ளிருந்து வெளியிற் போன
அக்காலைக் காணாம லலைந்தே யோடி
அழிந்துகெட்டுப் போனவர்கள் அறிந்து கொள்ளே. 19

---

18. வாய்ப்பேச்சு மும்முரமாக இருக்கும்.
செயலோ சாதனையோ இராது. பலவிதமான மயக்குகள் காட்டி ஏமாற்றுவார்கள்.
ஆத்தாள் - அம்மை வாலை.
மூச்சென்ன செய்யும் - வெறும் மூச்சு என்ன செய்துவிடும்.
மூக்கால் பாரே - சுழுமுனைப் பயிற்சியினால் அகப்பார்வையைச் செலுத்து.

19. தக்காமற் போன பேர் அனேகருண்டு - பயிற்சியில் முழுதும் பொறுமையோடு
செல்லாமல் நடுவிலே விட்டுப் போனவர் பலருண்டு.
வாமி - வாம வழிபாடு தேர்ந்தவன்.
உள்ளிருந்து வெளியிற் போன கால் - (மரணத்தில்)
வெளியே போன காற்று மீண்டும் வராமற் போகுதல்.

அறிந்தகுறி யடையாளங் காண வேண்டும்
அக்குறியிற் சொக்கிமனந் தேற வேண்டும்
அறிந்தவன்போ லடங்கிமன மிறக்க வேண்டும்
அலகையது வழிபாதை அறிய வேண்டும்
மறைந்தவரை நிறைந்தவரை நீதான் காண
மயக்கத்தைக் கண்டுனையு மதிக்க வேண்டும்
நிறைந்தமதி குறைந்தவகை அறிய வேண்டும்
நிச்சயத்தை யறிவார்க்கு முத்தி தானே. 20

முத்திரு மென்றுமனம் புத்தி யற்று
மோசமது போகாதே பாசங் கையில்
சித்தமதில் சந்திரனை நிறுத்திக் கொண்டு
செந்தீயி லுன்தீயை நடுவில் வாங்கிச்
சுத்தியுடன் ஆதியந்த மனத்தில் வைத்துச்
சொல்லாத மந்திரத்தின் தீயை மூட்டி
நித்யமல ரர்ச்சனைசெய் பாதம் போற்றி
நீயுமதி மதியுமதி லதிக மாமே. 21

---

20. குறிக்கோளில் கண்ணாக இருந்து தவம் இயற்ற வேண்டும். மனம் இறத்தல் என்பது, மன ஒடுக்கம். நிறைந்தமதி குறைந்தவகை - சந்திரகலையிலே பிறையின் நுட்பம்.

21. சந்திரகலை வழிபாடு என்னும் வாலை வழிபாட்டை நுட்பமாகக் கூறுகிறார் கருவூரார். அம்பிகையை வழிபடுகிற வாமமார்க்கம் என்ற சமயப் பிரிவிலே உரக நிறுவனமும் சடங்குகளும் பற்பலவாக உள்ளன. இவற்றைத் தவிர ஞானிகள் வழிபடுகிற சக்தி நெறியானயோகம் முற்றிலும் மாறுபட்டது. மூலக்கனலை எழுப்பி மதியாகிய சந்திரகலையைக் கொண்டு தவம் இயற்றுவதே சித்தர்களுடைய யோக வழிபாட்டின் அடிப்படையாகும். இத்தகைய வாலையின் பூசையை விதிமுறைகளோடு பேசுகிறார். தீ - மூலக்கனல். ஆதி அந்தம் - மூலாதாரத்திலிருந்து விசுத்தி வரையும் அதற்குமேல் ஆயிரம் இதழ்வரையும்!

மதிபெருகும் கதிபெருகும் வாதம் வாதம்
　　வருந்தாதே யந்தமுறை யாகா திப்போ
நிதிபெருகு மிவள்குறியே வாத மாகும்
　　நிர்மூட ரறியாமல் வகாரம் பேசி
நதிகள்தனை யறியாமல் சலத்தில் மூழ்கி
　　நானேதா னென்றுவாய் மதங்கள் பேசி
உரியபொரு ளுள்ளதெல்லாஞ் சுட்டுச் சுட்டே
　　உட்பொருளைப் பாராம வழிந்திட் டாரே. 22

இட்டகுறி நாதவிந்து ரூபங் காண
　　இயலறியார் சண்டாளர் சுட்டு மாய்வார்
விட்டகுறை வந்ததென்றால் தானே யெய்தும்
　　விதியில்லார்க் கெத்தனைதான் வருந்தி னாலும்
பட்டுமன மாய்தலல்லால் வேறொன் றில்லை
　　பக்தியிலார்க் குரைத்துமனம் தேவி பூசை
சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர் தாமே. 23

எட்டிரண்டு மொன்றுமது வாலை யென்பார்
　　இதுதானே பரிதிமதி சுழுமுனை யென்பார்
ஒட்டிமுறிந் தெழுந்ததுமுக் கோண மென்பார்
　　உதித்தெழுந்த மூன்றெழுத்தை யறியா ரையோ
கொட்டுமொரு தேளுருவாய் நிற்கும் பாரு
　　கூட்டமிட்டுப் பாராதே குறிகள் தோன்றும்
சுட்டசுடு காடுமது வெளியு மாகும்
　　சொல்லுதற்கு வாய்விளங்காச் சூட்சந் தானே. 24

---

22. வெளிப்பொருளை நாடி ஓடுவதையே செயலாகக் கொண்டு வழிபடுகிறார்கள். உண்மை அது அன்று. மதியாகிய சந்திரனுக்கு முக்கியம் கொடுத்து வழிபடுவதும் சூரியப் பங்கீட்டை மேலோங்கச் செய்து சந்திரனை அடக்குவதுமான இரண்டு முறைகள் உண்டு. கருவூரார் மதி பூசையையே பரிந்துரை செய்கிறார்.

23. பாணம் வைத்தல் - முதுகந்தண்டாகிய வில்லைக் காற்றாகிய நாண் ஏற்றி மனத்தில் கனல்கொண்டு அம்பாக எய்யவேண்டும் என்ற யோகமுறை.

24. அவ்வைகுறள் விளக்கத்தில் இது ஆராயப்பட்டுள்ளது காண்க.

சூட்சமவள் வாசமது நிலைத்த வீடு
        சொல்லுதற்கு எங்குமாய் நிறைந்த வீடு
தேசமதில் போய்விளங்கு மிந்த வீடு
        சித்தாந்த சித்தரவர் தேடு வீடு
ஓசைமணிப் பூரமதி லுதிக்கும் வீடு
        ஓகோகோ அதிசயங்க ளுள்ள வீடு
ஆசுகவி மதுரமது பொழியும் வீடு
        அவனருளுங் கூடிவிளை யாடும் வீடே. 25

வீடுமது தலைவாசல் அதுமேல் வாசல்
        வெளியான சுழிக்கதவு அடைக்கும் வாசல்
தேடுகிற மூவருமே வணங்கும் வாசல்
        திறமான பன்னிருவர் காக்கும் வாசல்
ஆடுகிற புலியாகி நின்ற வாசல்
        அரகர சிவசிவா வாசி வாசல்
கூடுகிற முக்கோணப் பரங்க ளாகிக்
        குறுகுமதி பெருகுமதி கூறொண் ணாதே. 26

---

25. நிலைத்த வீடு - ஆதார நிலைகளிலே நிலைத்த களம்.

"நாத சங்கீதப் பொன் மணிமண்டபம்" என்று அருணகிரியார் பாடுவது இதையே.

26. தலைவாசல் - உச்சி வாசல்.

சுழிக்கதவு - சுழுமுனையில் பிறவிச் சுழியை அடைக்கும் கதவு.

கூறொண்ணாதே - அந்த ஆனந்தத்தை மொழியிலே வெளியிட இயலாது என்பது ஒருபுறமிருக்க, இந்த யோகச் சடங்குகளைச் செய்துகாட்ட வேண்டுமே ஒழிய, சொற்களால் விளக்க ஒண்ணாது.

ஒண்ணாகி இரண்டாகி விளைவு மாகி
உத்தமி யாளுட்கருத்தை யறியப் போமோ
தின்னாத விடக்கெடுத்துத் தின்னச் சொன்னாள்
செத்தசவம் போலிருந்து செபிக்கச் சொன்னாள்
பண்ணாத பணக்கோடிப் பண்ணி வைத்தாள்
பார்த்திருந்து கழுத்தறுக்கப் பார்த்தாள் பாவி
எண்ணாது மெண்ணிமனம் ஏங்கி நாளும்
எனக்கபய மேதெனவே யெழுந்திட் டேனே. 27

எழுந்திட்ட திவள்பார்த்துத் தொடர்ந்து கூடி
என்னையுமே யிழுத்துமடி பிடித்துக் கொண்டு
கொழுந்துவிட்டு வளர்ந்தெரியு மனலை மூட்டிக்
குடிகேடி சத்துருப்போல் கூச்ச லிட்டாள்
அழுதேனே முந்தியினி யந்த வூரில்
அரகரா துணையெனக்கே யாரு மில்லை
எழுந்திட்டா ரெல்லோரு மோடிப் போனார்
என்னசெய்வேன் தனித்திருந்தே ஏங்கி னேனே. 28

---

27. விடக்கு - இறைச்சி. இங்கே ஊனிலிருந்து சுரக்கிற உயிர்ச்சத்து.
செத்த சவம் போலிந்து காத்தல் - மோனத்தவம்.
கைகூடுவதற்கு முன்பு ஏற்படுகிற சலிப்பு.
வெறுப்பு, தவிப்பைச் சித்திரிக்கிறார்.

28. துணையில்லை - உடலினுள் இருந்த ஆசையும் பாசமும் விட்டோடின.
தனித்திருந்து ஏங்குதல் - ஏகாந்த நிலையிலே மனநாட்டம் மிஞ்சிப் பேரின்ப ஏக்கம் என்ற தாபம் மேலிட்டுக் கனல் கூடுகிற நிலை.

ஏங்கினேன் ஈடழிந்தேன் வீடும் அற்றேன்
என்னைத்தான் கண்டவர்கள் சீசீ யென்னத்
தூங்கினேன் காலறிந்த மடக்க மாட்டேன்
துணையெனக்கு யாருமில்லை சூழ்ச்சி யாக
வாங்கினேன் காலறிந்து மடக்க வேண்டும்
வகையான வெனக்கொருத்தி யுறுதி சொன்னாள்
தேங்கினேன் முன்னுமவள் பின்னு மாகத்
திடமெனக்குச் சொன்னதிந்தத் தெளிவு தானே. 29

தெளிவதற்குச் சூட்சமிது தெளிவாய்ப் பாரு
சிவனிருந்து விளையாடுந் தெருவைப் பாரு
மொழிவதற்கிந் நூலைவிட வேறொன் றில்லை
முன்னாதி யந்தமொடு நடுவுஞ் சொன்னோம்
சுழியதற்குள் சுழியிருந்த சூட்சம் சொன்னோம்
சொல்லாத மவுனமுதற் கருவுஞ் சொன்னோம்
ஒளிபிறக்கு முறுதியிந்த வுறுதி சொன்னோம்
உறபனமாய்ப் பார்த்தவர்கள் சித்தர் தாமே. 30

---

29. கால் அறிந்து மடக்கல் - காற்றை அதன் சட்டம் அறிந்து மடக்கல். இது வாசிப் பயிற்சி.
எனக்கு ஒருத்தி - நான் ஆளாகியுள்ள வாலை.

30. சிவனிருந்து விளையாடும் தெரு - ஆதார வீதி.
சுழியதற்குள் சுழி - சுழுமுனைக்குள் உள்ள சுழற்சி.
ஒளி பிறக்கும் உறுதி - அகக்கண் பயிற்சி வாயிலாக ஒளிகாணும் நிலை.

கருவூரார் பூசைவிதி முற்றிலும் இடகலை கொண்டு யாக்கையிலுள்ள கடவுள் ஆற்றலை அனுகிப் பயின்று அதனோடு இணைந்து பேரின்பம் துய்ப்பதற்கான யோக இரகசியங்களை மிக எளிய பேச்சுத்தமிழில், சொல்லிலே எந்த அளவு வெளியிட முடியுமோ, வெளியிடலாமோ அந்த அளவுக்கு உறுதியோடு விளக்குகிற அழகிய நூலாகும்!

(கருவூரார் பூசைவிதி முற்றிற்று)

# நந்தீசர் பூசை விதி

நந்தீசர் என்னும் இந்தச் சித்தரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனால் பாடல்கள் மதிப்பு மிக்க பயனுள்ள நுட்பமான பாடல்கள் என்பதில் ஐயமில்லை.

சிவயோகி இரத்தின சபாபதியார் ஒரு சமயம் தம்மைக் காண வந்த ஒரு மிகப்பெரிய கோவிலின் அர்ச்சகரைப் பார்த்துக் கேட்டார்: "நீங்கள் மந்திர சபங்களைக் கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளாகச் செய்து வருகிறீர்களே, சாமியைப் பார்த்தீர்களா, எப்போதாவது?"

பட்டரால் மறுமொழி சொல்ல இயலவில்லை. பிறகு என்னிடம் ஒரு பெரிய நுட்பத்தைச் சொன்னார் :

"ஐம் க்ரீம் சௌஹூ என்று ஆயிரந்தடவை நாள்தோறும் சபித்துப் பதினாயிரம் ஆண்டுகள் பூசை செய்தாலும் வாலை வர மாட்டாள்! ஒவ்வொரு மந்திர ஒலிக்கும் இந்த உடம்பில் ஆதார நிலைகள் உள்ளன. எல்லாம் ஆறு ஆதாரங்களுக்குள்ளே அடக்கந்தான். என்றாலும் அந்தந்த ஒலிக்குரிய இடங்களைத் தொட்டுநின்று அந்தந்த ஒலிகளை உச்சரித்தால்தான் பலன் உண்டு!"

சிவயோகியார் சொன்ன இந்த இரகசியத்துக்கு விளக்கமாக விளங்குகிறது இந்த அரிய சிறிய பனுவல்.

பொதுவாக ஒலியும் இடமும் சொல்லப்பட்டிருந்தாலும், யோக முறையிலே இவற்றைப் புரிந்து கொள்வதற்கு ஆதார தீட்சை பெறவேண்டும். குருநாதனே பக்குவம் உள்ள மாணவன் என்று தேர்ந்தெடுத்து இந்த இரகசியங்களை விளக்கி வழங்க வேண்டும். கலை பெரிது. மந்திர நுட்பமும் உயர்ந்தது. உண்டவருக்குச் சுவை தெரியும் என்றவாறு, உண்ண வேண்டும், உட்கொள்ள வேண்டும் என்பதே இந்தப் பூசைவிதியின் ஆதார நுட்பமாகும்.

# நந்தீசர் பூசைவிதி

## எண்சீர் விருத்தம்

கேளப்பா ஓம்ஸ்ரீம் கம்என் றுந்தான்
கெடியாக மூலத்தில் கும்பித் தக்கால்
வாளப்பா பழந்தெங்கவல் வடைகள் தோசை
வளமாவிக் கினர்க்குப்புட்ப பரிம ளங்கள்
நாளப்பா மனமடங்கித் தோத்ரஞ் செய்து
நலமான விக்கினரைப் பூசித் தக்கால்
ஆளப்பா ஆசீர்வா தங்க ளீவார்
அப்பனே விக்கினரைப் பூசை செய்யே. 1

---

1. விநாயகர் வழிபாட்டைப் புறச்சடங்குகளோடு இயற்றுகிற முறையைப் பேசுகிற பாடலுடன் இந்நூல் தொடங்குகிறது.

"ஓம் ஸ்ரீம் கம்" என்ற மந்திரத்தை "ஓம் ஸ்ரீம் கங்" என்று பல அச்சு நூல்களில் வெளியிட்டு இருப்பதைப் பார்க்கலாம். "கம்" என்பதே கணபதிக்குரிய உயிர்ச்சொல்.

இந்த மந்திர உச்சரிப்போடு கணபதியின் இருக்கையாகிய மூலாதாரத்தை இணைத்து இந்த வழிபாடு சொல்லப்படுகிறது.

எங்கள் குருநாதர் இரத்தின சபாபதியார் அடிக்கடி ஏளனம் செய்வார், வெறும் மந்திரங்களை மட்டும் செபிப்பவர்களை! ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து செபித்தாலும் சித்தி கிடையாது. அந்தந்த தேவைதைகளுக்கு உரிய ஆதார நிலைகளின் பிணைப்பு இல்லாமல் வாய் மட்டும் முணுமுணுப்பதால் எவ்விதமான பயனும் கிடைக்காது.

செய்யப்பா விக்கினர்தம் பூசை சொன்னேன்
செயமான சண்முகவன் பூசை கேளு
வையப்பா சங்வங்மங் சரவ ணாய
வளமாக அனாகத்தில் பூசை பண்ணு
வையப்பா புட்பபரி மளங்கள் கொண்டு
மைந்தனே தூபதை வேத்யங் காட்டி
கையப்பா கனகசபை யதிலே பூசிக்
கண்மணியே சண்முகத்தை வரங்கள் கேளே. 2

காணப்பா ஆசார பூசை சொன்னேன்.
கண்மணியே சிவபூசை சொல்லக் கேளு
வாணப்பா நமசிவய கிம் ஆம் என்று
வளமாகப் பூரணத்தி லிருத்திக் கொண்டே
ஆணப்பா தூபதீப நைவேத் யத்தோ
டப்பவே சதாசிவத்தைத் தோத்தி ரஞ்செய்
மாணப்பா நீகேட்ட தெல்லா மீவார்
மைந்தனே சிவத்தினுடை மகிமை தானே. 3

---

2. இந்தப் பாடலில் சித்தர் நெறியிலே நின்று ஆறுமுகப் பெருமானை வழிபடுகிற நுட்பம் பேசப்படுகிறது.

'சங்வங்மங்' என்று குறிப்பிடப்பட்டது 'சம்வம்பம்' என்ற ஒலிகளையே. சரவணாய என்பது முருகனுடைய மந்திரச்சொல் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இதற்குரிய ஆதார நிலையைப் பலரும் அறியார்கள். அனாகதம் என்பது இதய கமலம். கனகசபையில் கைவைப்பது, சிரசின்மேல் கைகூப்பி விளங்குவதாகும்.

3. இந்தப் பாடலில் சிவபூசையின் நுட்பம் கூறுகிறார். 'நமசிவய கிம் ஓம்' என்ற மந்திரச் சொல்லும் மந்திர ஒலியும் சொல்லிப் பூரண நிலையில் வழிபட வேண்டும். இந்த நிலைகளின் வரைபடம் இரண்டாம் பகுதியில் 275ஆம் பக்கத்தில் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளமை காண்க.

தானான சிவத்தினுடைப் பூசை சொன்னேன்
தண்மையுள்ள சத்தியுடைப் பூசை கேளு
வானான இம்மென்றுங் கும்ப கத்தில்
வெட்டிவள மாகவொரு மனமாய் நின்று
ஆனான கதம்பகத் தூரி புட்பம்
அப்பனே பால்பழங்கள் வந்து வைத்து
மானான தேவியைத்தான் தோத்தி ரித்து
மைந்தனே சாட்டாங்கச் சரணம் பண்ணே. 4

பண்ணப்பா என்னவம்மா வென்று கேளு
பலவிதமாய் நீதொடுத்த வெல்லாம் மெய்யாம்
அண்ணப்பா வென்றவனே சொன்னாற் போதும்
அப்பனே யட்சரத்திற் பலிக்கும் பாரு
வண்ணப்பா சத்தியுடைப் பூசை சொன்னேன்
வளமான சிவத்தினுடைய பூசை சொன்னேன்.
கண்ணப்பா விஷ்ணுபூசை சொல்லக் கேளு
கண்மணியே மங்நங்சிங் கென்றே ஏத்தே. 5

---

4. இது சக்தி வழிபாடு.
இம் என்பதே இதற்குரிய விளக்கம் சாஷ்டாங்கக் கும்பிடு என்ற முறையில் என தரையில் வீழ்ந்து விளங்குதலாகும்.

5. சக்தியை வழிபட்டு அவள் அந்தப் பூசையிலே மனம் ஒப்பி விட்டாளானால் என்ன வரமும் தருவாள்.

அட்சரங்களுக்கு வலிமையும் பலனும் கிட்டும், சந்தேகமில்லை என்று சொல்லி மேலே திருமால் வழிபாடு பேச முனைகிறார் சித்தர்.

ஏத்தப்பா புட்பபரி மளங்கள் சாத்தி
என்மகனே கதம்பகத் தூரி சாத்தி
வாத்தப்பா சங்கீதத் துடனே பூசி
வளமான விஷ்ணுவுக்குப் பூசி பூசி
போற்றப்பா மனமடங்கிப் பத்தி யாகப்
போற்றவே விஷ்ணுவவர் கேட்ட தீவார்
ஆற்றப்பா விட்டுணுவின் பூசை சொன்னேன்
அரகரா கெசமுகவன் பூசை கேளே. 6

## இரேசக பூசை

பாரப்பா ரேசகத்தின் பூசை கேளு
பண்பான ரேசகத்தின் ஆமென் றேத்தி
ஆரப்பா நைவேத்யங் கும்ப கஞ்செய்
தப்பனே ரேசகத்தில் மனத்தை நாட்டு

---

6. புட்ப பரிமளங்கள் - பூவும் வாசனைப் பொருள்களும். பொதுவாகத் திருமாலைப் பற்றிக் குறிப்பிடும்போது என் மந்திர ஆசிரியருள் ஒருவராக விளங்கிய பூரணானந்த குரு என்ற ஞானப் பெயர்பெற்ற எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்ற பெரியவர் "விஷ்ணு ஒரு ஜோர்ப் பேர்வழி" என்று வேடிக்கையாகச் சொல்வார். அவருக்கு வாசனாதி லேபனாதி களில் மோகம் என்று குறிப்பிடுவார். என ஒருசாலை மாணவராக அவரிடம் மந்திரம் பயின்ற ஜி.எம்.பி. (இசைக்கலைஞர்) இந்த வார்த்தைகளை ரசிப்பதோடு, தாமும் இந்த வாசனைப் பொருள்களைப் பயன்படுத்துவார்.

7. இரேசக பூசை என்கிற கணபதியின் யோக வழிபாடு கூறுகிறார். 'ஆம்' என்பது மந்திர ஒலி. வாசியிலே இரேசகம். அந்த நிலையிலே மனம் இரேசமாகிறது. இது மிகவும் நுட்பமான இரேசக கும்பக யோகப் பயிற்சி முறையாகும்.

வாரப்பா மனமதுரே சகமே யாச்சு
வளமான ரேசகந்தான் வசிய மாச்சு
நாரப்பா ரேசகத்தின் பூசை சொன்னேன்
நலமான பூரகத்தின் பூசை கேளே. 7

## பூரக பூசை

கேளப்பா மணிபூ ரகத்தில் மைந்தா
கெடியாக இம்மென்று கும்பித் தேத்து
வாளப்பா வகையாக நின்று கொண்டு
வளமான பூரகத்திற் றோத்ரம் பண்ணி
வாளப்பா வேண்டியவாம் வரங்கள் கேளு
வளமாக விஷ்ணுவர மீவார் பாரு
ஆளப்பா பூரகத்தின் பூசை சொன்னேன்.
அப்பனே கும்பகத்தின் பூசை யாமே. 8

---

8. இனி வாசியிலே பூரகம் பேசுகிறார்.
இம் என்று கும்பித்து, பூரகத்தில் துதிபாடி, வரங்கள் கேட்பது திருமாலுக்குரிய ஞான பூசையாகும்.

ஒவ்வொரு தேவதைக்கும் ஆதார நிலையிலே பிணைந்து வழிபடுவதுபோலே, மூச்சை அந்தந்த நிலைகளிலே நிறுத்துவ தோடு, இழுப்பதும், அடக்குவதும், விடுவதுமாகிய செயல்களுக்குள்ளும் வழிபாட்டை இணைப்பது மிகப்பெரிய யோக நுட்பமாகும்.

## கும்பக பூசை

ஆமப்பா கும்பகத்துள உம்மென் நாடி
அப்பனே மனத்தைக்கும் பகத்தில் வைத்து
வாமப்பா பூசைநை வேத்தியஞ் செய்து
வளமான கும்பகத்தை மனத்தால் வேண்டிக்
காமப்பா கும்பகத்தை வரங்கள் கேளு
கண்மணியே வேண்டுவர மீவா ரையா
நாமப்பா சூரியன்றன் பூசை கேளு
நலமாக மங்சிங் கென்று சொல்லே. 9

## சூரிய பூசை

சொல்லப்பா சூரியகும் பகமே செய்து
சொற்பெரிய பூசைநை வேத்தியஞ் செய்தே
அல்லப்பா சாட்டாங்க சரணஞ் செய்தே
அப்பனே தோத்திரஞ்செய் கும்ப கத்தை

---

9. கும்பக பூசை செய்கிறார். இதுவும் மனத்தைக் கொண்டு செய்கிற வாம யோகமாகும்.
வாசியும் ஆதார நிலைகளும் மனமும் பிணைந்த வழிபாடு இது.

10. சூரிய வழிபாடு கூறுகிறார்.
சாட்டாங்க சரணம் - தரையில் வீழ்ந்து வணங்குதல்.
இந்தப் பூசை முறையில் தேவதைகளின் திருவருள் கிட்டுவதோடு, அந்தத் திருவருள் குருவருளாக வந்து பலன் தருகிறது. இந்த நுட்பம் யோகம் பயில்கிற மாணவருக்கு நன்கு தெரியும். பக்குவம் பெற்ற மாபெரும் சித்தர்களுமே தொடக்கத்தில் குருவை வணங்கிமேற் செல்வதன் தத்துவம் இதுவே.

மல்லப்பா அட்டசவு பாக்கிய மீவார்
அகத்தியர்தாம் கும்பகத்தில் வரங்க ளீவார்
வல்லப்பா சூரியன்றன் பூசை சொன்னேன்.
வளமான சந்திரன்றன் பூசை கேளே. 10

## சந்திர பூசை

கேளப்பா யங்டநங் கென்று கும்பி
கெடியாகப் பால்பழம்பா யாசம் வைத்தே
ஆளப்பா தூபதீப நைவேத்யஞ்செய்
தப்பனே சந்திரனைத் தோத்தி ரித்து
வாளப்பா சோடசசந் திரனில் நின்று
வளமான சந்திரனை வரங்கள் கேளு
நாளப்பா வேணவர மீவா ரையா
நலமான சந்திரன்றன் மகிமை பாரே. 11

---

11. இனி, மதிவழிபாடு என்னும் சந்திர பூசை இயம்புகிறார்.

நவகிரகங்களையும் யோக முறையிலே வழிபடுகிற இந்த யோக தந்திரம் மிகவும் உயர்ந்தது என்பது பெரியோர் அனுபவம்.

இந்தச் சந்திர பூசை சந்திரனில் நின்று செய்கிற இடகலை வழிபாடாகும். இடக்கண், இட மூச்சு, உடம்பின் இடப்பாகம் அனைத்தும் சந்திர நிலைகள். இந்த நிலைகளிலே மனத்தை ஒடுக்குவதும் ஆறாவது ஆதார நிலையிலே சந்திரனோடு கூடுவதும் உயர்ந்த பயிற்சிகளாம்.

## சனி பூசை

பாரப்பா சனிபூசை சொல்லக் கேளு
பண்பான வங்கென்றுஞ் சங்கென் றுந்தான்
நாரப்பா மேருவிலே குந்திக் கொண்டு
நலமாகத் தோத்திரித்துப் பூசை செய்நீ
வாரப்பா தூபநை வேத்யத் தோடு
வளமாகத் தோத்திரித்துப் பானஞ் செய்து
ஆரப்பா வேணவரங் கேட்டுக் கொண்டே
அப்பனே யட்சணத்தி லீவார் காணே. 12

---

12. நவகிரகங்களிலே சூரிய பூசையும் சந்திர பூசையும் சொல்கிற சித்தர் சனிபூசை சொல்கிறார்.

நுட்பம் என்னவென்றால் குவய சந்திர கலைகளை ஒட்டிச் செய்கிற வழிபாட்டிலே மற்ற கிரகங்களின் நிலைகளும் இணைந்து விடுகின்றன. சனி மட்டும் உச்சி நிலையிலே நிற்பதாகச் சித்தர்களின் அகநிலை ஆய்வு அறுதியிடுகிறது. எனவே மேருவிலே இருக்கை கொண்டு யோகம் இயற்றி வழிபாட்டால் சனியின் திருவருள் முழுமையாகக் கிடைக்கும் என்கிறது சித்தர் இலக்கியம்!

(நந்தீசர் பூசைவிதி முற்றிற்று)

# இராமதேவர் பூசை விதி

இந்தச் சித்தர் நாகப்பட்டினத்தில் வாழ்ந்தவர் என்று தெரிகிறது.

இவர் வாழ்ந்த காலம் பற்றிய துல்லியமான குறிப்பு கிடைத்திலது. தமது தவ ஆற்றலினால் இவர் நாகையிலே பல அற்புதங்கள் நிகழ்த்தியதாகச் சொல்லப்படுகிறது. யோகநெறியும் ஞானநெறியும் தேர்ந்த மகானாக இருப்பினும், சமுதாய மக்களிடையே வாழ்ந்தமையினால் உலக வாழ்வை ஒட்டிய சில மந்திர ஆற்றல்களையும் இவர் வளர்த்துக்கொண்டார் என்று அறிகிறோம். அதோடு மக்களுக்குப் பயன்தருகிற முறையில் பற்பல மருந்துகள் செய்து உதவிவந்தார் என்றும், இவருடைய வைத்திய நூலை ஒரு மருத்துவச் சட்டமாகவே மருந்தியல் வல்லார் போற்றினார்கள் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

இந்நப் பனுவல் மிகச் சிறியதுதான். ஆனாலும் இதை இங்கே சேர்ப்பதற்குரிய காரணங்களில் மிகவும் முக்கியமான இந்தப்பாடல்கள் நுதல்கிற பொருளே.

மனம் ஒடுங்கவும், முத்தி கிட்டவும் ஞானக்கல்வி விடுத்த பெரியோர்கள், தீமையை அழிப்பதற்கும் வழிசொன்னார்கள். யுத்த தருமம் எனறு ஒன்று இருக்கிறது. அதன்படி அழிப்பாகிய சம்காரமும் அதிலே இடம் பெறுகிறதல்லவா? அந்த வகையில் எதிரிகளை அழிப்பதற்குரிய சில விதிமுறைகளும் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன.

நல்லவர்களைக் காப்பாற்றத் தீயவர்களை அழிக்கவேண்டிய மறச்செயலும் சில சூழ்நிலைகளில் அவசியமாகிறது. மந்திரம் தெரிந்த ஒருவன் - இதைச் செய்வதற்குரிய முறைகளை இங்கே பேசுகிறார். எனினும் முடிவிலே தாயின் கருணையினால் முத்தியே குறிக்கோள் என்று சொல்லி அணை கட்டுகிறார். இந்த அடிப்படையிலேதான் 'களவும் கற்று மற' போன்ற பழமொழிகள் தோன்றின போலும். எது ஏதானாலும் இப்படிப்பட்ட மந்திரக்கலையும் நமது தமிழ்மொழியிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு சிறிய சான்றாக வருகிறது இந்நூல்.

# இராமதேவர் பூசைவிதி

ஆதியென்ற மணிவிளக்கை அறிய வேணும்
அகண்ட பரிபூரணத்தைக் காண வேணும்
சோதியென்ற துய்யவெளி மார்க்க மெல்லாஞ்
சுகம்பெறவே மனோன்மணியென் னாத்தாள் தன்னை
நீதியென்ற பரஞ்சோதி ஆயி பாதம்
நிற்குணத்தி னின்றநிலை யாருங் காணார்
வேதியென்ற வேதாந்தத் துள்ளே நின்று
விளங்குவதும் பூசையிது வீண்போ காதே. 1

---

1. தூய்மையான ஒடுக்க நிலையில் வாலையாகிய மனோன்மணியின் வழிபாட்டு முறையைச் சொல்கிறார். பிற சித்தர்களின் பாடல்களுக்கு எழுதியுள்ள உரைக் குறிப்பிலே தலை உச்சியில் மனோன்மணியின் நிலையம் விளக்கப்பட்டுள்ளது. பூசை முறைகளிலே மிக உயர்ந்ததும், சித்தர்களின் பக்குவ நிலைக்குப் பெரிதும் காரணமாக விளங்குவதுமான இந்தப் பூசை நிர்க்குண நிலையில் ஆற்றப்படுகிற மனமலர்ப் பூசனையாகும்.

ஆயி - ஆத்தாள், அன்னை.
நீதியென்ற பரஞ்சோதி - நடுவுநிற்றல் என்று திருமூலர் குறிக்கிற நடுநாடி ஒடுக்கமும் அதில் கூடுகிற ஒளிப்பிழம்புமாம்.

வீண் போகாதே - இந்த வழிபாடு நுட்பம் தெரிந்து இயற்றினால் பயனற்றுப் போகாது, ஐயமில்லை.

போகாமல் நின்றதோ ரையா நீநான்
 பூரணத்தி னானகலை ஐந்தும் பெற்றே
ஆகாம லானந்த வல்லி யாலே
 அடிமுடியி னடுவாசி யாறுக் குள்ளே
வாகாமல் வாலையுடை மூலத் தாலே
 வழிதோன்றும் மூன்றெழுத்தை யுரைக்க வேணும்
சாகாமல் சாருமடம் இந்த மூலஞ்
 சசிவட்டம் நடுக்கோ ணமுக் கோண மாமே. 2

முக்கோண மூசுழிதற் கோண மாகி
 முதலான மூலமணி வாரை தன்னில்
நாற்கோண நாலுவரை நயந்து காக்க
 நாயகியாள் பரஞ்சோதி நாட்ட முற்றுத்
தீக்கோண திக்குதிசை யிருந்த மாயம்
 தெரிந்திடவே யுரைத்திட்டேன் விவர மாக
தாக்கோண விட்டகுறை வந்த தென்றால்
 தரியிருந்து பார்த்தவனே சித்த னாமே. 3

---

2. ஐந்து - ஆன்ம ஆற்றலின் நுட்பமான ஐந்து பிரிவுகள்.
மூன்றெழுத்து - ஐம், க்லீம், சௌஹ்; இதையே ஐயும் கிலியும் சவ்வும் என்று பாடுவர்.

வட்டம், கோணம், முக்கோண நிலைகள் முன் படத்தில் காட்டப்பட்ட நிலைகள்.

3. ஆதார நிலைகளில் உள்ள சக்கரங்களும், இதழ்களும், ஆற்றல்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியிலுள்ள வரைபடமும், முதலாம் பகுதியிலுள்ள ஆதார நிலைவிளக்கமும் இந்தக் குறிப்புக்களுக்கு விரிவாக விளக்கம் தந்துள்ளன.

சித்தான மூன்றெழுத்துச் செயலாஞ் சோதி
　　சீரியவை யுங்கிலியும் சவ்வு மாகி
முத்தான லட்சவுரு செபிக்கச் சித்தி
　　முற்றிடுமே யெதிரியென்ற பேய்கட் குத்தான்
வித்தான வித்தையடா முட்டும் பாரு
　　விரிவான முகக்கருவு மூன்று கேளு
சத்தான அதன்கருவும் சிலையில் வைத்துச்
　　சதுரான விதிவிவர மறியக் கேளே. 4

கேளப்பா பலிகொடுத்துப் பூசை செய்து
　　கிருபையுள்ள வுருவேற்றித் திட்ட மாக
வாளப்பா சுடுகாட்டின் சாம்பல் தன்னில்
　　வளமாகப் புதைத்துவிடு நடுச்சா மத்தில்
ஆளப்பா அடியற்று மரண மாகி
　　ஆண்டிருந்த தவசுநிலை தான்கு லைந்து
காணப்பா கண்மணியே வீழ்வான் பாவி
　　கதைதெரியச் சொல்லுகிறே னின்னம் பாரே. 5

---

4. இந்தப் பாடலில் வருகிற ஐம் க்லீன் சௌஹூம் பற்றி முன் பாடலிலே பார்த்தோம். இதில் சொல்லியுள்ள கரு என்பதும் அந்த முறையும் ஒன்றுக்கொன்று பொருள்கொண்டு விபரீதமாகி விடக்கூடாது. குரு முகமாகத் தெரிந்துகொண்டு செய்ய வேண்டுவதாகும்.

5. எதிரியை வீழ்த்துகிற உத்திக்கான முறைகளை மேலும் விரிவாகச் சொல்கிறார். மிகப்பெரிய ஞான சித்திகள் பெற்ற ஒரு மகான் இப்படி ஒரு வேலை செய்வது பற்றி ஏன் சொல்கிறார் என்ற திகைப்பு ஏற்படலாம். முதலில் எனக்குமே ஏற்பட்டது. ஆனால் தத்துவ இரகசியங்களும் பூசனை முறைகளும் தமிழகத்திலே ஒரு கல்வியாக வழங்கி வருவதால் அதனுடைய எல்லாத் துறைகளையும் கற்பிக்க வேண்டும் அல்லவா? வடமொழியிலும் மிகப்பெரிய மறைநூல்களிலும் இப்படிப்பட்ட சில்லறை வேலைகளைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு. எகிப்து போன்ற நாடுகளிலும் வழங்கி வருகின்றன.

இன்னமின்னங் கண்முன்சோ தனையு மாகும்
ஈடேற வேணுமென்றா லிதனிற் சூட்சம்
அன்னமின்னார் அகிற்கட்டை தேவ தாரம்
ஆறிவுடைய முளைசிவிச் சிங்கை யோதி
வன்னமின்னார் பேர்சொல்லி நசியென் றேதான்
வலுவான நூற்றெட்டு வுருவும் போடு
சன்னமின்னா மரத்தடியி லிருந்து கொண்டு
சதிராக ஆணிகொண் டடித்தி டாயே. 6

அடித்தமுளை பிடுங்கித் திருக்கிப் போடு
ஆனந்த வுருக்குலைந்து பட்டுப் போகும்
தொடுத்தமுதல் நாலாநாள் கண்டு தானுந்
தொகைமுடிந்து வாச்சுதடா விந்தப் போக்கு
விடுத்தபின்பு விடமேறக் கருவிப் போகும்
விரித்துரைத்தேன் பூட்டிதுவே வீண்போ காது
தடுத்துவிடு நகரத்தி லடித்துப் பாரு
தட்டழிந்து உயிர்முதலாய்ச் சேத மாமே. 7

---

6-7. அழிவு என்பதும் ஆக்கம் போன்று ஒரு கலையே. ஆக்குவதற்கு உபாயம் சொல்கிற கல்வி, அழித்தலுக்கும் வழிமுறைகளை வகுத்துரைத்துள்ளது. கேரள நாட்டில் இவ்வகையான பூசைமுறைகள் பற்பலவாக உள்ளன. எப்படிப்பட்ட அறிவியல் விஞ்ஞான உலகிலும் இப்படி ஒரு கலையானது பயிற்சியில் இருந்து வந்திருக்கிறது, இருந்து வருகிறது என்பது உண்மை.

மலையாள நாடு, தெலுங்கு நாடு என்றில்லாமல் எல்லா மொழிகளிலும் எல்லா மாநிலங்களிலும் இதுபோன்ற பூசைமுறைகள் வழக்கத்தில் இருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்தபோது அங்கும் இநத வகையான வழிபாடுகள் இருநதுவருகின்றன என்று தெரிந்தபோது, மனிதகுலம் எல்லாத் திசைகளிலும் ஒரே பாங்கில்தான் இருக்கிறது என்பதைப் புரிய நேர்ந்தது. அருவருப்பின்றிப் படிக்க வேண்டும் என்பதற்காகக் குறிப்பிட்டேன். பயிலவேண்டியது என்ற கருத்தில் அன்று. மனித தருமம் என்று ஒன்று இருக்கிறது அன்றோ?

ஆமப்பா அடிதரிசிங் களத்தி லானால்
அதிசயங்காண் கண்டவர்க்கே யடைக்க லம்போம்
வீமப்பா வெளிதிறந்து சொன்னேன் பாரு
விளையாட்டே யில்லையடா விந்தப் போக்கு
சோமப்பா சுத்தியுடன் தலையும் மூழ்கிச்
சுருக்கெனவே தியானிப்பா யாத்தாள் மூலம்
தாமப்பா சத்தியமே சொன்னேன் பாரு
தவறாது ராமனுடை வாக்கியந் தானே. 8

தானென்ற மூலமுடன் சித்தி பண்ணு
தனதான நூற்றெட்டுக் குள்ளே சித்தி
ஆனென்ற அண்டர்பதி யெட்டு மாடும்
அறுபத்து நால்மூலி யெல்லா மாடும்
கோனென்ற கோடிசித்துக் கத்தி லாடுங்
குணமாக ரேவதிநாட் செய்ய நன்று
வாவென்ற அட்டமியிற் செய்ய நன்று
வளர்பிறையில் செய்தவனே யோகி யாமே. 9

---

8. அறத்திற்குத் துணைசெய்கிற வழிபாடு மறத்திற்கும் துணைசெய்கிறது என்பதில் ஐயமில்லை. இராமாயணத்தில் தவம்செய்து இராக்கதத் தலைவர்களும் இராமனுக்கு எதிராக வலிமை பெறுகிறார்கள். தவத்தினால் இந்தரஜித் பெற்ற வலிமை யாவரும் அறிந்ததே. என்றாலும் அறம் அறந்தான், மறம் மறந்தான். ஆனால் அதற்காகக் கல்வியிலே பிசகு சொல்வதற்கில்லை அல்லவா?

9. சித்தர்கள் கைவருவதற்கும் உலக ஈர்ப்புக்கும் சில முறைகள் இருக்கின்றன. இவற்றைச் சொல்கிறார். உலகத்தில் வாளும் வில்லும் உற்பத்தியே செய்யக் கூடாது என்னலாமா? கேடயங்களும் கவசங்களும் கூடவே செய்யப்படுகின்றன.

யோகியா யாவதற்கீ துனக்குச் சொன்னேன்
        ஓகோகோ முன்னுரைத்த மூலத் தாலே
யோகிகளா யேகாந்த வல்லி யாட்கிங்
        கேட்டிலே யெழுதினதால் எல்லா மாச்சு
தாகிகளாய்த் தாயுடைய கிருபை யாலே
        தகமாகும் மவமாகும் சுபமுண் டாகும்
மோகிகளாய் மூலபூசா விதிபத் தாலே
        முத்திபெறச் சித்திவிளை பத்து முற்றே. 10

---

10. தவமோ, அவமோ பயிற்சி செய்பவன் கையிலே இருக்கிறது என்பதை ஞானியே சொல்கிறார்.

யோகி என்றால் எல்லா வித்தைகளும் தெரிந்திருக்க வேண்டும் அன்றோ? அடிப்படையில் தாயினுடைய அருளாலே சுபமே நடக்கும்.

முத்தி என்பதொன்றே குறிக்கோள் என்பதைச் சொல்லி முடிக்கிறார் சித்தர்.

(இராமதேவர் பூசைவிதி முற்றிற்று)

# உரோம ரிஷி ஞானம்

உரோம ரிஷி என்ற பெயரில் ரோமாபுரி இருப்பதோடு உரோமன் என்ற சொல்லும் முளைத்து நிற்கிறது.

இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு அகச்சான்று வல்ல ஆய்வாளர்கள், இவருக்கும் ரோமாபுரிக்கும் தொடர்பு இருந்திருக்கும் என்பதாகவும், இவருடைய உடம்பு முழுதும் உரோமம் இருந்தது என்பதாகவும் கூறுகிறார்கள். இந்த இரண்டும் இலக்கிய ஆய்வுக்கு ஊட்டம் தருமே யல்லாமல், முடிவு செய்ய இயல்வதில்லை.

சித்திகள் கைவரப் பெற்ற மகான் என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. இவர் புசுண்ட முனிவரின் மாணாக்கர் என்பது தெரிகிறது.

நீண்ட சடையுடையவராக இருந்தார் என்ற செய்தி பல சுவடிகளிலும் காணப்படுவதால், அந்த நீண்ட சடையின் காரணத்தால் உரோம ரிஷி என்று பெயர் வந்திருக்கலாம்.

பாடல்களில் அமைதியும் ஆழமும் காணுகிறோம். மொழிப்புலமையும் வெளிப்படுகிறது.

# உரோம ரிஷி ஞானம்

## எண்சீர்விருத்தம்

மூலவட்ட மானகுரு பாதங் காப்பு
முத்திக்கு வித்தான முதலே காப்பு
மேலவட்ட மானபரப் பிரமங் காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு
காலவட்டத் தங்கிமதி யமுதப் பாலைக்
கண்டுபசி யாற்றிமனக் கவடு நீக்கி
ஞாலவட்டஞ் சித்தாடும் பெரியோர் பாதம்
நம்பினதா லுரோமனென்பேர் நாயன் றானே. 1

---

1- மூலாதாரத்திலுள்ள அடிப்படையான ஆற்றலுக்கு ஆதாரமாக உள்ளவன் குருநாதன். அவனுடைய திருவடிகள் காப்பாக அமையுமாக! மேலவட்டம் - உச்சிநிலை.

மதியமுதப்பால் - உச்சிக்களத்திலே ஒடுங்கி மனோன்மணியும் சதாசிவமும் ஆலயங்கொண்டுள்ள நிலையிலே ஒன்றி நிற்கும்போது இந்த உடற் சுரப்பிகளின் இயக்கத்தினால் பால் சுரக்கிறது. பால் என்றால் அது ஞான அமுதப் பால்.

நிலவைப் பிழிந்து சாறு எடுப்பதுபோலே சந்திர கலையின் அதிர்வாலே இந்தச் சுரப்பு ஏற்படுகிறது. இதுவே சித்தர்கள் சொல்கிற இந்த ஞானப்பால்.

"உள்ளுண்டு சோமக் கலையாதி பவனம்" என்பது இந்த மதியமுதப் பாலேதான். இதுவே மனிதனை அமரனாக்கித் தெய்வநிலையிலே பேரின்பம் துய்க்கும்படி செய்கிறது.

கண்ணாடி சிலமூடித் தனுப்பி னாலே
கருவதனை யறியாமல் மாண்டு போனான்.
விண்ணாடிப் பாராத குற்றம் குற்றம்
வெறுமண்ணாய்ப் போச்சுதவன் வித்தை யெல்லாம்
ஒண்ணான மவுனம்என்றே யோகம் விட்டால்
ஒருபோதுஞ் சித்தியில்லை வாதந் தானும்
பெண்ணார்தம் ஆசைதன்னை விட்டு வந்தால்
பேரின்ப முத்திவழி பேசுவேனே. 2

பேசுவேன் இடைகலையே சந்த்ர காந்தம்
பின்கலைதா னாதித்த னாதி யாச்சு
நேசமதாய் நடுவிருந்த சுடர்தான் நீங்கி
நீங்காம லொன்றானா லதுதான் முத்தி
காதலாய்ப் பார்த்தோர்க்கிங் கிதுதான் மோட்சம்
காணாது பேர்க்கென்ன காம தேகஞ்
சோதனையாய் இடைகலையி லேற வாங்கிச்
சுழுமுனையில் கும்பித்துச் சொக்கு வீரே. 3

---

2. கண் இமைகளை மூடித் தவம் இயற்றும்போது சந்திர சூரிய நாடிகளின் புறநோக்கு இயக்கம் நின்று விடுகிறது. இதையே "கண்ணாடி சில மூடி" என்றார்.

"கண்ணாடி யுள்ளே கருத்துற நோக்கில்
உண்ணாடி யுள்ளே ஒளித்திருக்கும்" அந்தச் சுடர்ஒளி கூடுகிறது.
விண்ணாடி - உச்சித் தளத்தை நோக்கி. ஒண்ணான மவுனம் - ஒண்ணிய, கூடிச் சேர்ந்த மோனத்தவம்.

3. இடைகலை - யாக்கையின் இடப்பக்கத்து இயக்கம், பார்வை, மூச்சு, நாடித்துடிப்பு முதலியன. பின்கலை - பிங்கலை. நடவிரிந்த சுடர் - இடத்துக்கும் வலத்துக்கும் நடுவிலுள்ள நெருப்பு. இடைகலையான சந்திரனின் வழியூடு சென்று வலத்துக்கலையான சூரியனை இணைத்து நடுவணதான நெருப்புச் சேர்த்தால் அதுவே ஒடுக்கத்தில் சித்திக்கிற வீடுபேறு!

வாங்கியந்தப் பன்னிரண்டி னுள்ளே ரேசி
வன்னிநின்ற விடமல்லோ சூரியன் வாழ்க்கை
ஓங்கியிந்த இரண்டமு மறிந்தோன் யோகி
உற்றபர மடிதானே பதினா றாகும்
தாங்கிநின்ற காலடிதான் பன்னி ரண்டு
சார்வால பதினாறில் மெள்ள வாங்கி
ஏங்கினதைப் பன்னிரண்டில் நிறுத்தி யூதி
எழுந்தபுரி யட்டமடங் கிற்றுப் பாரே. 4

பாரையா குதிரைமட்டம் பாய்ச்சல் போச்சு
பரப்பிலே விடுக்காதே சத்தந் தன்னை
நேரையா இரண்டிதழி னடுவே வைத்து
நிறைந்தசதா சிவனாரைத் தியானம் பண்ணு
கூரையா அங்குலந்தா னாலுஞ் சென்றால்
குறிக்குள்ளே தானடக்கிக் கொண்ட தையா
ஆரையா உனக்கீடு சொல்லப் போறேன்
அருமையுள்ள என்மகனென் றழைக்க லாமே. 5

---

4. பன்னிரண்டு என்பது துடிப்பு, மூச்சு இவற்றின் ஞானக் கணக்கு.

காலடி - காற்றின் நடை. புரியட்டம் - நுண்ணுடல் நிலை.

5. குதிரை - வாசி.

மூச்சுக்காற்றை இயக்குகின்ற நெறிமுறைகளைப் பேசுகிறார்.

எழுத்துக் கணக்கைப் புரிந்துகொண்டு யார் வேண்டுமானாலும் பயிற்சியைத் தொடங்கலாம் என்று எண்ணக் கூடாது.

மூச்சு ஒன்றுக்கொன்று கணக்கு மாறிவிட்டால் "சுழிமாறிப் போனாலும் போச்சு!" என்ற நிலை வந்துவிட இடமுண்டு. அஃதில்லாமல் ஆசான் வழிகாட்டக் குதிரையிலே ஏறி இவர்ந்தால் வெற்றி ஒப்பற்ற வகையிலே கிட்டும்!

அழைப்பதும் நல்லபிள்ளை யானால் நன்றே
ஆகாத சீடாகளைச் சேர்த்தல் தோடம்
பிழைப்பதற்கு வழிசொன்னால் பார்க்க மாட்டான்
பெண்டாட்டி மனங்குளிரப் பேசு மாடு
உழைப்பதற்குச் செனனமெடுத் தானே யல்லால்
உதவிதனக் கெவ்வளவு முண்டோ வில்லை
இளபபமிவன் பேச்சையடிக் கடிதா னாகு
மேலுக்குச் சொல்லுகிறோ மினிமேல் தானே. 6

மேலென்ன இருக்கையிலும் நடக்கும் போதும்
வேறுரையால் சாரங்கள் விடாம லேற்று
நாலென்ன எட்டென்ன வெல்லா மொன்று
நலமான அட்டாங்க மப்பிய சித்துக்
காலென்னப் பிராணாய முன்னே செய்யில்
கணக்காகப் பூரகங்கும் பகுமே நாலு
கோலென்ன ரேசகந்தா னொன்று மூன்று
குறையாமற் சரபீசங் கூட்டித் தீரே. 7

கூட்டியே பழகினபின் சரபீ சத்தில்
குறையாமல் சாதித்தால் பிரம ரந்த்ரம்
காட்டுவிக்கும் அல்லால்விழிக் குறியி னாலே
கண்மூக்கு மத்தியிலே கண்டு பாரு
மூட்டுவலிக்கு மாதார மாறுந் தானே
மூலவட்டக் கணபதிநான் முகத்தோன் மாயன்
தாட்டிகமா மணிவூரங் கையன் வட்டத்
தணலான ருத்திரனுந் தணலு மாமே. 8

---

6. உருப்படாத சீடனுக்கு இதை உரைத்துப் பயனில்லை.

7. அட்டாங்க யோகம் பயின்றவனுக்கு, இருக்கும்போதும் நடக்கும்போதும் எப்போதும் வாசிக் கணக்கு சட்டப்படி யே இயங்கும். அந்தக் கணக்கு மூச்சை இழுப்பதிலும், வைத்திருப்பதிலும், விடுவதிலுமே இயக்கம் செய்கிறது.

8. இந்தப் பயிற்சியினை நன்கு கற்றுத் தேறினால் பிரமரந்திர ஒடுக்கம் கூடும். இந்த நிலைகளில் பாலம் அமைத்துவிட்டால் அங்கே தொடர்பு யார் யாருடன்? மூலாதார கணபதியிலிருந்து, அயன், திருமால் என்று உச்சியிலுள்ள ருத்திரன் வரை இணைப்பு ஏற்பட்டு விடுகிறது.

தணலாகும் விசுத்தியறு கோண வட்டஞ்
சதாசிவனார் வட்டமல்லோ குறுபீ டந்தாள்
மனையான பதியினிலே குறித்துப் பார்க்க
மத்யமுதல் கரிகொண்டு தூங்குந் தூங்கும்
கனலேறிக் கொண்டிருந்தா லெல்லா முண்டு
காற்றைவெளி விட்டக்கால் கருமந் தீதான்
புனலூறும் வழிபாதை யிந்த மார்க்கம்
பொல்லாத துரோகிக்குப் பொய்யா மன்னே. 9

செலுத்துவது முண்ணாக்கி லண்ணாக் கையா
சென்றேறிப் பிடரிவழித் தியானந் தோன்றும்
வலுத்ததடா நாலுமுனக் கமுத மாச்சு
மவுன மென்று நிருவிகற்ப வாழ்க்கை யாச்சு
சொலித்திருக்கும் பன்னிரண்டி விருத்தி யூது
சோடசமாம் சந்த்ரகலை தேய்ந்து போச்சு
பலித்ததடா யோகசித்தி ஞான சித்தி
பருவமாய் நாடிவைத்துப் பழக்கம் பண்ணே. 10

---

9. அறுகோண வட்டம் - அனாகதத்துக்குப் பத்து விரற்கடை விசுத்தி. இது அறுகோண மாயிருக்கும். இந்த அறுகோணத்தின் நடுவிலே வகாரத்திலே மகேசுவரன் இருக்கை.

10. உண்ணாக்கில் இயற்றுகிற செயல் முன்பகுதிகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது

இந்த வாசி யோகம் பயிலப் பயில மூலாதாரத்துக்கும் விசுத்திக்கும் உள்ள இணைப்பு வலுவடைவதோடு, மூச்சின் இயக்கமும் சுரப்பிகளின் செயலும் விதிமுறைப்படி செயற்படும். இவ்வாறு யோகம் புரிந்தால் யோக சித்தியான தெய்வ உடலும், ஞான சித்தியான சாயுச்சியமும் கைகூடும். சாயுச்சியம் - ஆன்ம ஒருமைப்பாடு கூடிய ஐக்கிய நிலை.

மூடாமல் சிறிதுமனப் பாடம் பண்ணி
முழுவதுமவன் வந்ததுபோல் பிரசங் கித்து
வீடேதிங் குடலேது யோக மேது
வீண்பேச்சாச் சொல்லியல்லோ மாண்டு போனார்
காடேறி மலையேறி நதிக ளாடித்
காய்கிழங்கு சருகுதின்று காமத் தீயால்
சூடேறி மாண்டவர்கள் கோடா கோடி
சொருபமுத்தி பெற்றவர்கள் சுருக்க மாச்சே. 11

சொருபமுத்திக் கடையாள மேதென் றக்கால்
சுடர்போலக் காணுமடா தூல தேகம்
அருபமுத்தி யிடமல்லோ பிரம ஞானம்
அபராட்ச மென்றுசொல்லுஞ் சிரவ ணந்தான்
பருபதத்தை அசைப்பனெனச் சிற்றெ றும்பின்
பழங்கதைபோ லாச்சுதிந்த யோகம் விட்டால்
வெறுங்கடத்தி லீப்புகுந்த வாறு போல
வேதாந்த மறியாத மிலேச்சர் தாமே. 12

---

11. ஒடுக்கம் கூடாத நிலையில், பாட்டுக்களைப் பாடம் பண்ணி வாய்க்கு வந்தபடி பிரசங்கங்கள் செய்து வீடு பேறாவது யாக்கை யோகமாவது எல்லாம் வீண்பேச்சு - என்பதாகக் கதைத்தவர்களும், காடு மலையெல்லாம் சென்று தீயினுக்கு இரையானவர்கள் கோடி கோடி! சொரூபமுத்தி என்கிற யோகசித்தி கண்டவர்கள் மிகச்சிலரே.

12. சாரூபம் என்று சொல்கிற சொரூப முத்தியாகிய இறையுடலம் எப்படி இருக்கும்? உடம்பு கனல்போலச் சுடரும். அரூபமுத்தி என்கிற சாயுச்சியும் பரமஞானம் என்ற பெருங்கல்வியாம். மலையை அசைப்பதற்குச் சிற்றெறும்பு முயன்ற கதையாக வீண்பேச்சாளர் கதை முடியும். வெறும் பானைக்குள் ஈ புகுந்தவாறுதான்!

ஓமென்ற கெட்டபுத்தி மாணா கேளே
உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே
ஆமென்றே இருபத்தோ ராயி ரத்தோ
டறுநூறு சுவாசமல்லோ ஒருநா ளைக்குப்
போமென்று போனதனால் நான்கு றைந்து
போச்சுதுபோ காவிட்டால் போவ தில்லை
நாமொன்று நினைக்கயிலே தெய்வ மொன்று
தானினைந்த தன்மையல்லோ விதிகள் தாமே. 13

---

13. மாணா - மாணவனே!

ஒரு நாளைக்கு 21600 சுவாசம் என்றும் பொதுக்கணக்கில் 21000 என்றும் சித்தர் இலக்கியம் பேசுகிறது. இந்த வெளியீட்டைக் கட்டுப்படுத்தி இயக்கினால் ஆயுள் நீடிக்கும் என்பது சித்தர் ஞானம்!

வீணாகிற மூச்சுக்காற்றை வீண்போகாமல் அடக்கி ஆளுதலே மரணமிலாப் பெருவாழ்வுக்குரிய யோக நெறியாகும். அதோடு இளமையேடு வாழ்வதற்கு இது வழி என்பதே மகான்கள் கண்ட அனுபவ உண்மையாகும். இதையேதான் சிவவாக்கியரும்,

"உருத்தரித்த நாடியில் ஓடுகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருட்தரித்த நாதன்ஆணை அம்மைஆணை உண்மையே

என்று நமக்குக் கையடித்துக் கொடுக்கிறார்!

(உரோமரிஷி ஞானம் முற்றிற்று)

# வால்மீகி சூத்திர ஞானம்

இராமாயணம் இயற்றிய "ஆதிகவி" வடமொழியாளர் கொண்டாடுகிற வால்மீகி முனிவர் ஒருவர். சங்க காலப் புலவர் மற்றொருவர். இந்த வால்மீகி இவ்விருவரிலும் வேறுபட்டவர் என்றே சொல்லத் தோன்றுகிறது.

'வான்மீகி' என்று தமிழ்வழக்கு இருப்பினும் நூல்களில் வால்மீகர் என்றே இவர் குறிக்கப் பெறுகிறார். மற்றப்படி இவர் வரலாறு தெரியவில்லை.

பாடல்கள் அற்புதமான கவிப்பண்பும், ஞானச் செறிவும் கொண்டனவாக ஒளி வீசுகின்றன.

எளிமை, இனிமை, திருத்தம், நேர்மை, ஞானப் பரிபக்குவம், எல்லாவற்றிற்கும் மேலாக ஒப்பற்ற தெளிவு இந்தப் பாடல்களில் பொங்கி அலைவீசுகிற எழிலானது சித்தர் இலக்கியத்தில் இந்தச் சிறிய பனுவலை அரிய பெரிய பனுவலாக மதிப்பிட வைக்கிறது.

கரப்பு, மயக்கம், குழப்பம் ஏதும் இல்லாமல் தெளிந்த சிந்தனையும், தெளிவான வெளியீடுமாகச் செல்கிறது இந் மகானுடைய கவிமாண்பு!

# வால்மீகர் அருளிச் செய்த
## சூத்திர ஞானம் - 16

### எண்சீர்விருத்தம்

இருள்வெளியாய் நின்றசிவ பாதம் போற்றி
  எழுத்ததனின் விவரத்தை விரித்துச் சொல்வேன்
அருவுருவாம் நின்றதுவோ எழுத்த தாகும்
  ஆதியந்தம் அகண்டபிண்ட மதுவே யாகும்
திருவுருவாய் ரவிமதியாய் நின்ற ரூபம்
  சிவசக்தி திருமாலின் ரூப மாகும்
வருமுருவே சிவசக்தி வடிவ மாகும்
  வந்ததிலும் போனதிலும் மனத்தை வையே. 1

வந்ததுவும் போனதுவும் வாசி யாகும்
  வானில்வரும் ரவிமதியும் வாசி யாகும்
சிந்தைதெளிந் திருப்பவனா ரவனே சித்தன்
  செகமெலாஞ் சிவமென்றே யறிந்தோர் சித்தன்
நந்தியென்ற வாகனமே தூல தேகம்
  நான்முகனே கண்மூக்குச் செவிநாக் காகும்
தந்திமுகன் சிவசக்தி திருமூச் சாகும்
  தந்தைதாய் ரவிமதியென் றறிந்து கொள்ளே. 2

---

1. இருள்வெளி - இந்த உடம்புக்குள்ளே உள்ள பரவெளி. எழுத்து - ஆதார நிலைகளிலுள்ள அதிர்வாற்றல். அருஉரு - கண்ணுக்குத் தெரியாமல் நுட்ப ஆற்றல் வடிவில் நிற்கிற பொருள்.

வந்ததிலும் போனதிலும் - வாங்குகிற காற்றும் வெளிச் செல்கிற காற்றும்; வாசி.

2. ரவிமதி வாசியாகும் - வல மூச்சாகவும், இட மூச்சாகவும் இயங்குகிற சூரிய சந்திர கலைகள். தூல தேகம் - பருவுடல். நந்தி என்ற வாகனம் - சிவசக்தி ஊர்கிற ஊர்தி. கண்மூக்கு செவி நாக்கு என்ற நான்கும் ஆன்ம ஆற்றலுக்கு நான்கு முகங்கள். வாசி இயக்கமே மூலாதார ஆற்றலாகிய ஆனைமுகன், தந்திமுகன்.

அறிந்துகொள்ளு பூரகமே சரியை மார்க்கம்
அடங்குகின்ற கும்பகமே கிரியை மார்க்கம்
பிரிந்துவரும் ரேசகமே யோக மார்க்கம்
பிசகாமல் நின்றதுவே ஞான மார்க்கம்
மறிந்துடலில் புகுகின்ற பிராண வாயு
மகத்தான சிவசத்தி அடங்கும் வீடு
சிறந்துமனத் தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்
சிவசிவா அவனவனென் றுரைக்க லாமே. 3

ஆம்ப்பா வுலகத்தில் பெருநூல் பார்த்தோர்
அவரவர்கண் டதையெலாம் சரிதை யென்பார்
ஓமப்பா கல்செம்பைத் தெய்வ மென்றே
உருகுவார் பூசிப்பார் கிரியை யென்பார்
வாமப்பா யோகமென்று கனிகாய் தின்று
வாய்பேசா வூமையப்போல் திரிகு வார்கள்
காமப்பா ஞானமென விண்டு மேலும்
காக்கைபித்தன் மிருகம்போல் சுற்று வாரே. 4

---

3. மூச்சு நிலைகளை நான்கு நெறிகளோடு பிணைத்து அழகாக வெளியிடுகிறார்.

பூரகம் - மூச்சை உள்ளே இழுத்தல்; அதுவே சரியை என்னும் தொண்டு நெறி.

கும்பகம் - மூச்சடக்குதல்; அதுவே சற்புத்திர நெறி. இரேசகம் - மூச்சை வெளியிடுதல்; அது யோகம் என்னும் சகமார்க்கம். பிசகாமல் நிற்பது - வாசியோகம் சட்ட திட்டப்படி சரியாக ஒடுங்கி நிற்றல்; அதுவே ஞானம் என்கிற சன்மார்க்கம்.

4. சரிதை - சரியை. சரியை என்ற பெயரால் தொண்டுநெறி என்று கண்டபடி செய்வார்கள். கிரியை என்ற பெயரால் உருவ வழிபாடு இயற்றுவார்கள். யோகம் என்று சொல்லிக் காய்கனி தின்று மௌனியாகத் திரிவார்கள். ஞானி என்று பெயர் வைத்துக்கொண்டு காக்கை போலும், பித்தன் போலும், விலங்கு போலும் கட்டுப்பாடின்றிச் சுற்றிப் பறப்பார்கள்.

சுற்றுவார் பெருநூ லைப் பார்த்துப் பார்த்துத்
தூடிப்பா ருலகத்தில் சிற்சில் லோர்கள்
தெற்றுவா ரவர்பிழைக்க அநேக வேடம்
தேகத்தி லணிந்துகொண்டு திரிகு வார்கள்
பற்றுவார் குருக்களென்பார் சீட ரென்பார்
பையவே தீட்சைவைப்பார் தீமை யென்பார்
கத்துவார் திரிமூர்த்தி தாமே யென்று
காரணத்தை யறியாத கசடர் தாமே. 5

தானென்ற வுலகத்தில் சிற்சில் லோர்கள்
சடைபுலித்தோல் காசாயத் தாவ டம்பூண்
டேனென்ற வுடம்பெல்லாம் சாம்பல் பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானி யென்பார்
தேனென்ற சிவபூசை தீட்சை யென்பார்
திருமாலைக் கண்ணாலே கண்டோ மென்பார்
கானென்ற காட்டுக்கு ளலைவார் கோடி
காரணத்தை யறியாமல் கதறு வாரே. 6

---

5. தூடிப்பார் - குற்றம் சொல்வார்கள், துச்சமாகப் பேசுவார்கள்.
தூடித்தல் - தூஷித்தல்.
தெற்றுவார் - ஏமாற்றுவார்கள்.

மூலகாரணத்தை உணராத போலிகள் எப்படியெல்லாம் வேடம் அணிந்து ஏமாற்றித் திரிகிறார்கள் என்பதை இயம்புகிறார்.

6. தாவடம் - கழுத்தணியாகிய அக்க மாலை.
வேடதாரிகளின் தற்பெருமை, நடிப்பு, பொய்ச் செயல்கள், சுற்றித் திரிதல் முதலியன கூறி, ஞானத் துறையிலும் எப்படிக் கள்ள நாணயங்கள் செலாவணியில் இருக்கின்றன என்பதை எடுத்துக் கூறுகிறார்.

கதறுகின்ற பேர்களையா கோடி கோடி
காரணத்தைக் கண்டவர்கள் கொஞ்சம் கொஞ்சம்
பதறுகின்ற பேர்களெல்லாம் பராப ரத்தைப்
பற்றிநின்று பார்த்தவர்கள் சுருக்க மப்பா
உதறுகின்ற பேர்களெல்லாம் மூலகத் துள்ளே
உதித்தகலை தம்முள்ளே யறிய மாட்டார்
சிதறுகின்ற பேர்களைப்போல் சிதறி டாமல்
சிவசத்தி வரும்போதே தன்னில் நில்லே. 7

நில்லென்ற பெரியோர்கள் பாஷை யாலே
நீடுலகம் தன்னுள்ளே நாலு வேதம்
வல்லமையாய்ச் சாத்திரங்க ளிருமூன்றாக
வயிறுபிழை புராணங்கள் பதினெட் டாகக்
கல்லுகளைக் கரைப்பதுபோல் வேதாந் தங்கள்
கட்டினா ரவரவர்கள் பாஷை யாலே
தொல்லுலகில் நற்சாதி யனேகஞ் சாதி
தொடுத்தார்க ளவரவர்கள் பிழைக்கத் தானே. 8

---

7. காரணத்தை - காரணப் பொருளாகிய இறைவனை. பேர்கள் எல்லாம் - பேர்களில் எல்லாம். உதறுகின்ற பேர்கள் - துறவிகளாகக் காண்பவர்கள். சிவசக்தி வரும்போது - தக்க பருவத்திலேயே.

8. உலகத்தில் நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், பதினெட்டுப் புராணங்கள், கற்களும் கரைகிற வேதாந்த நூல்கள் என்று அவரவர் தத் தம் மொழிகளில் இட்டுக் கட்டினார்கள். நான்கு சாதி, பற்பல சாதி என்று புனைந்தார்கள். எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகவே.

ஞான உலகினிலும் கள்ளச்சந்தை வாணிபம் எப்படி நடக்கிறது என்பதை இந்த மகான் காழ்ப்பு இன்றிக் கழறுகிறார்.

தானென்ற வுலகத்தி லில்லா விட்டால்
தற்பெருமை யாலழிந்து சகத்தில் வீழ்வார்
ஊனென்ற வுடம்பெடுத்தா லெல்லாம் வேணும்
உலகத்தி லவரவர்கள் வாடை வேணும்
மானென்ற சிவகாமி சிவனுங் கூடி
மாமுனிவர் முகம்பார்த்து மறைநூல் சொன்னார்
தேனென்ற சிவகாமி யருளி னாலே
திரட்டினார் வெகுகோடி தேச பாஷை. 9

தேசத்தின் பாஷைதனை யறிந்தி டாமல்
தெளிவாகத் தாமுரைப்பார் பாஷை பார்த்தோர்
ஆசிப்பா ருலகத்தில் கண்ட தெல்லாம்
ஆச்சரியந் தனைக்கண்டு மறந்து போவார்
வாசிதனை யறியாத சண்டி மாண்பர்
வார்த்தையினால் மருட்டிவைப்பார் வகையி லாமல்
நாசிநுனி யதனடுவில் சிவத்தைக் கண்டோர்
நான்முகனும் திருமாலும் சிவனுந் தாமே. 10

---

9\. தற்பெருமையினால் உலகில் அழிந்து வீழ்கிறார்கள். ஆனால் ஒன்று, இந்த ஊனுடம்பை எடுத்துவிட்டால் இத்தனையும் வேண்டியிருக்கிறது! அவரவர்களுடைய மொழி வேண்டுந்தான்! மான்விழிக் காமாட்சியாகிய சிவகாமியும் சிவனும் வீற்றிருந்து முனிவர்களை நோக்கி மறைநூல் இயம்பினார்கள். சிவகாமியின் கருணையினால் உலகத்திலே பலகோடி மொழிகளைத் திரட்டினார்கள்! மொழிகள் அனைத்தும் அண்டமுதலான் அரன்சொன்ன வாறே என்று திருமூலர் எல்லா மொழிகளுமே தேவபாஷை என்றார் அல்லவா!

10\. ஆசிப்பார் - யாசிப்பார்கள். சண்டி மாண்பர் - இடக்குப் பிடித்த பெரும் பதவியாளர்கள். மருட்டி வைப்பார் - அச்சுறுத்தி மயக்கமுறச் செய்வார்கள்.

நாசி நுனியிலே சிவனைக் கண்டவர்கள் அயனும் திருமாலும் அந்தச் சிவமூர்த்தியுமே என்று நகைச்சுவையோடு பாடுகிறார்!

சிவசிவா பதினெண்பேர் பாடற் கெல்லாம்
திறவுகோல் வால்மீகன் பதினா றாகும்
சிவம்பெத்த சித்தரெல்லா மென்னூல் பார்த்துச்
சிவனோடே கோள்சொன்னார் சினந்தான் நாதன்
அவமாகிப் போகாமல் சிவனுத் தார
அருளினால் திறந்துசொன்னேன் உலகுக் காக
நவமான நவக்கிரகந் தன்னுள் ளேயே
நாக்குவாய் செவிமூக்கு மத்திக் கப்பால். 11

நாக்குவாய் செவிமூக்கு மத்திக் கப்பால்
நடுவீதி குய்யமுதல் உச்சி தொட்டுத்
தாக்குவாய் அங்கென்றே அதில் முட்டுத்
தாயாரைப் பூசித்து வேதம் ஓது
வாக்குவாய் அசையாமல் மவுனங் கொண்டு
வாசிவரு மிடத்தில்மனம் வைத்தக் காத்து
நீக்குவாய் வாசியொடு மனந்தான் புக்கு
நினைவதனி லடங்கிவரும் வரிசை காணே. 12

---

11. பதினெண் பேர் பாடல் - பதினெண் சித்தர் பாடல். பதினாறு - இந்தப் பதினாறு பாடல்களும். சிவம் பெத்த சித்தர் - சிவனுடைய அணுக்கத் தொண்டர்.

கோள் சொன்னார் - குண்டுணி பேசினர். அவமாகிப் போகாமல் - வீணாகி விடாமல்.

12. நடுவீதி குய்ய முதல் உச்சி தொட்டு - குறிநிலையிலிருந்து உச்சிவரை நடுநாடு பிடித்து. அங்கென்றே - 'அம்' என்றே. தீக்குவாய் - தீய்த்திடுவாய்; மூலக்கனலில் இடுவாயாக!

காணரிதே யெவராலு மிருசு வாசம்
காண்பவனே சிவசித்த னவனே யாகும்
பூணரிதிவ் வுலகத்தில் லிந்நூல் கிட்டில்
பூலோக சித்தனென வுரைக்க லாகும்
காணரிலு சிவசத்தி திருமூச் சாகும்
காட்டாதே மூடருக்கே யிந்நூல் தன்னை
தோணரிதே விழிமயக்கம் சும்மா போமே
சொல்லரிய சூட்சமத்தைச் சொன்னே னப்பா. 13

சூட்சமிந்நூல் சொல்லுகிறேன் வாசி காண
சூட்சாதி சூட்சத்தைத் துறக்கப் போகா
சாட்சியில்லை துணையில்லை கேள்வி யில்லை
சந்தேக மொன்றுமில்லை விழியைக் காணக்
காட்சியென்ன கற்பகத்தில் வசிக்கு மாப்போல்
காரணத்தைக் கண்ணாலே கண்டி ருக்க
ஆட்சிதரு முமையாளப் படியே கண்டேன்
ஆனந்தத் திருக்கூத்தின் நடக்கை காப்பே. 14

---

13. இருசுவாசம் காண்பவனே - இடகலை, பிங்கலை இரண்டும் இயக்கிக் கண்டவனே.

14. அகப் பார்வையிலே ஒடுக்கம் கூடிவிட்டால், எல்லாம் ஏகம். யாரும் எதுவும் இல்லை. கற்பகத்தில் வசிக்குமாப்போல் - காலம் கடந்த இடத்தில் சென்று வாழ்வது போலே.

காரணத்தைக் கண்ணாலே கண்டிருக்க - முழுமுதற் காரணமாகிய பரம்பொருள் நிலையை அகப்பார்வையினால் நோக்கி ஒடுங்கும் போது.

காப்பதற்குப் பத்தியத்தைச் சொல்லக் கேளு
காய்கனிகள் பஞ்சரசம் பரமான் னங்கள்
ஏற்கையுட துண்டுகொண்டு சிவத்தைக் காத்தே
என்மகனே சித்தருடைக் குருநூல் பாராய்
ஆத்துமத்துக் கழிவில்லா திருக்க வேணும்
அவரவர்கள் நித்தியகர் மம் நடக்க வேணும்.
தீர்க்கமுட னின்றவர்க்கு வாசி சித்தி
சிறப்புடனே பதினாறும் பலிக்குந் தானே. 15

தானவனா யிருக்கவென்றால் வாசி வேணும்
தனக்குள்ளே தானிற்க இடமும் வேணும்
வானவனாம் நின்றவர்கட் கெல்லாஞ்சித்தி
வானுக்குள் மனமிருக்க மதிபோல் காணும்
தேனவனாஞ் சித்தருக்குத் தெவிட்டா மூலி
சிரசப்பா வுடலுக்குப் பதியே யாகும்
கோனவனா யிருக்கவென்று குறியைச் சொன்னேன்
குவலயத்தில் பதினாறுங் குறுகத் தானே. 16

---

15. காய்கனிகள், பஞ்சாமிருதம், சோறு ஏற்கும் வகையில் உண்ணுவாயாக என்கிறார் சித்தர். சிவத்தில் சிந்தை வைப்பதே முக்கியம் என்பதை வற்புறுத்துகிறார். அவரவர்கள் தங்கள் இயல்பான வேலைகளைச் செய்துவர வேண்டும்.

16. தானவனாக இருத்தல் என்பது பரனோடு ஒன்றுதல். தனக்குள்ளே தான் இருக்கவேண்டும் என்றால் அதற்கு இடம் வேண்டும் என்கிறார். அதாவது, ஆதார நிலைகளை ஆயத்தப் படுத்த வேண்டும். சித்தருக்குத் தெவிட்டல் காணாத தேன் அந்தச் சிவம் தானே! தலைதான் உடம்புக்கு உரிய களம். கோனவனாய், ஞானப் பேரரசனாக இருப்பதற்கு வழி சொன்னேன்.

பதினாறு பேறும் பெறுவாயாக, பதினாறு நிலைகளையும் அவத்தைகளையும் கைக்குள் அடங்குமாக!

(வான்மீகர் ஞானம் 16 முற்றிற்று)

# அகத்தியர் ஞானம்

அகத்தியர் "என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான்" என்று கம்பரால் வணங்கிப் போற்றப்படும் தமிழின் தந்தை.

இவருடைய பெயரால் பல ஞான நூல்களும் மருத்துவ நூல்களும் வழங்கி வருகின்றன. இவை அகத்தியரே இயற்றித் தந்தாரா அல்லது அவருடைய உபதேசப் பொருளை அவருடைய மாணவர் பரம்பரை அவ்வப்போது பாடல்களாக இயற்றி வழங்கினரா என்பது ஒரு நுட்பமான கேள்வியாகும்.

எது எப்படியானாலும், இந்தப் பனுவல்களிலே ஓதப்படுகிற ஞானம், அகத்தியருடைய தவத்திலிருந்து வெளிப்போந்த ஆணிவேரான தமிழர்களின் சொத்து, பேரறிவுச் செல்வமாகும்.

இது வெறுங்கல்வியன்று, அனுபவப் பேரறிவு என்பதும், நாமே பயின்று நாமே காணக்கூடிய துய்ப்பு முறை என்பதும் இத்தகைய பனுவல்களின் உயர்தனிப் பண்பாம்.

# அகத்தியர் ஞானம் 9

## எண்சீர்விருத்தம்

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலவுயிர் சீவனுக்கு மதுதா னாச்சு
புத்தியினா லறிந்தவர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்தில் கோடியிலே யொருவ ருண்டு
பத்தியினால் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனதைவிடார் பரம ஞானி
சுத்தியே யலைவதில்லைச் சூட்சந் சூட்சஞ்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந் தானே. 1

---

1. புத்தியினால் அறிதல் - மனம் கொண்டு செலுத்தி அனுபவம் பெறுதல். சுத்தியே அலைவதில்லை - காடு மலை என்று ஏறி இறங்கிச் சுற்றி அலைவதில்லை. எல்லா ஏற்ற இறக்கங்களும் இந்த உடம்புக்கு உள்ளேயே!

ஊனில் நின்று பூரணமானது உலவுவதைக் காணாமல் கானும் மலையும் அலைந்து தாம் கால் அலுத்ததாகவும், உடலுக்குள் பூரணம் இருந்து உலவுவதை அறியாமல் கடலும் மலையும் அலைந்து கால் அலுத்ததாகவும் பட்டினத்தடிகள் பாடுகிறார் அல்லவா!

மோட்சமது பெறுவதற்குச் சூட்சஞ் சொன்னேன்
மோசமுடன் பொய்களவு கொலை செய்யாதே
காய்ச்சலுடன் கோபத்தைத் தள்ளிப் போடு
காசியினிற் புண்ணியத்தைக் கருதிக் கொள்ளு
பாய்ச்சலது பாயாதே பாழ்போ காதே
பலவேத சாத்திரமும் பாரு பாரு
ஏச்சலில்லா தவர்பிழைக்கச் செய்த மார்க்கம்
என்மக்கா ளெண்ணியெண்ணிப் பாரீர் நீரே. 2

பாரப்பா நால்வேதம் நாலும் பாரு
பற்றாசை வைப்பதற்கோ பிணையோ கோடி
வீரப்பா ஒன்றொன்றுக் கொன்றை மாறி
வீணிலே யவர்பிழைக்கச் செய்த மார்க்கம்
தேரப்பா தெருத்தெருவே புலம்பு வார்கள்
தெய்வநிலை ஒருவருமே காணார் காணார்
ஆரப்பா நிலைநிற்கப் போறா ரையோ
ஆச்சரியங் கோடியிலே யொருவன் தானே. 3

---

2. ஞானம் பெறுவதற்குரிய வழிகளைத் தெரிந்த பின்னும் பல புண்ணிய உணர்வை வளர்த்துக் கொள்கிற சமுதாய நீதி அவசியமே என்பதை வற்புறுத்துகிறார். பலவேத சாஸ்திரங்களையும் படித்துப் பார்க்க வேண்டாம். அப்போதுதான் வயிற்றுப்பிழைப்புக்குச் சொன்னது எது, ஆன்ம ஈடேற்றத்துக்குச் சொன்னது எது என்ற வேறுபாடு உணர்ந்து கொள்ளலாம்.

3. நூல்களைப் படித்துவிட்டுத் தெருத்தெருவாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். இறைமை நிலை இவர் ஒருவருக்கும் தெரியாது. கோடியில் ஒருவர்தான் மெய்யை அறிந்து மெய்யிலே நிற்கிற மெய்ஞ்ஞானி ஆவர்.

ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்
உத்தமனாய்ப் பூதிதனி லிருக்க வேணும்
பருவமதிற் சேறுபயிர் செய்ய வேணும்
பாழிலே மனத்தைவிடான் பரம ஞானி
திரிவார்கள் திருடரப்பா கோடா கோடி
தேசத்திற் கள்ளரப்பா கோடா கோடி
வருவார்க ளப்பனே அநேகங் கோடி
வார்த்தையினால் பசப்புவார் திருடர் தானே. 4

தானென்ற தானேதா னொன்றே தெய்வம்
தகப்பனுந் தாயுமங்கே புணரும் போது
நானென்று கருப்பிடித்துக் கொண்டு வந்த
நாதனைநீ எந்நாளும் வணங்கி நில்லு
கோனென்ற திருடனுக்குத் தெரியு மப்பா
கோடானு கோடியிலே ஒருவ னுண்டு
ஏனென்றே மனத்தாலே யறிய வேணும்
என்மக்காள் நிலைநிற்க மோட்சந் தானே. 5

---

4. ஒருவனென்றே - தெய்வம் ஒன்றே என்று. "ஒருவனே தேவனும்" என்றவாறு. பருவமதில் - இளமைப் பருவத்திலேயே மனவலிமை இருக்கும்போது. பயிர் செய்ய வேணும் - ஞான உழவு நடத்த வேண்டும். சேறு - மனச்சேறு. பசப்புவார் - நடித்து ஏமாற்றுவார்கள்.

5. தந்தையும் தாயும் கூடும்போது கருத்தரிப்பதற்கு இறையாற்றல் துணைநிற்கிறது என்பது மிகவும் நுட்பமான ஒரு தத்துவ உண்மை.
எல்லாப் புணர்ச்சிகளும் கருவாவதில்லை.
மனித ஊனீரோடு பரம்பொருள் ஆற்றல் முனைந்தாலன்றி மனிதனுக்குத் தோற்றமில்லை.
இந்த நுட்பங்கள் அனைத்தையும் மனம் செலுத்தி அறிய வேண்டும்.

மோட்சமது பெறுவதற்குச் சூட்சங் கேளு
முன்செய்த பேர்களுடன் குறியைக் கேளு
ஏய்ச்சலது குருக்களது குலங்கள் கேளு
எல்லாருங் கூடழிந்த தெங்கே கேளு
பேச்சலது மாய்கையப்பா வொன்று மில்லை
பிதற்றுவா ரவரவரும் நிலையுங் காணார்
கூச்சலது பாளையந்தான் போகும் போது
கூட்டோடே போச்சுதப்பா மூச்சுத் தானே. 6

மூச்சொடுங்கிப் போனவிடம் ஆருங் காணார்
மோட்சத்தின் நரகாதி யிருப்புங் காணார்
வாச்சென்றே வந்தவழி யேற்றங் காணார்
வளிமாறி நிற்குமணி வழியுங் காணார்
வீச்சப்பா வெட்டவெளி நன்றாய்ப் பாரு
வேதங்கள் சாஸ்திரங்கள் வெளியாய்ப் போச்சே
ஆச்சப்பா கருவுதனில் அமைந்தாற் போலாம்
அவனுக்கே தெரியுமல்லா லறிவாய்ப் பாரே. 7

---

6. முத்திநிலை தெரிந்ததாகப் புரட்டியவர்கள் எல்லாரும், மரணமிலாப் பெருவாழ்வு வாழ்கிறார்களா?
போன இடம் தெரியவில்லையே என்கிறார் சித்தர்.

7. வளிமாறி நிற்கும் மணிவழி - காற்றின் போக்கை அதாவது வாசியை இயக்கி மடைமாற்றுகிற மணியான வழியை.

பாரப்பா வுலகுதனிற் பிறவி கோடி
படைப்புகளோ பலவிதமாய்க் கோடா கோடி
வீரப்பா அண்டத்திற் பிறவி கோடி
வெளியிலே யாடுதப்பா வுற்றுப் பாரு
ஆரப்பா அணுவெளியி லுள்ள நீதான்
ஆச்சரியம் புழுக்கூடு வலைமோ தப்பா
கூரப்பா அண்டத்திற் பிண்ட மாகும்
குணவியவா னானக்காற் சத்திய மாமே. 8

சத்தியே வேணுமடா மனித னானால்
வண்டாளஞ் செய்யாதே தவறி டாதே
நித்தியகர் மம்விடாதே நேமம் விட்டு
நிட்டையுடன் சமாதிவிட்டு நிலைபெ றாதே
புத்திகெட்டுத் திரியாதே பொய்சொல் லாதே
புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கி யாதே
கர்மியென்று நடவாதே கதிர்தான் முற்றே. 9

---

8. அண்டத்தில் - இந்தப் பரந்த உலகிலே.
அணுவெளி - மலை முகட்டிலே பரவெளி. காணுதல் என்றால் இந்த உலகளவு பரந்து விரிதல் என்பதாக எண்ணி விடுவதற்கில்லை. 'அணுவில் அவனும்', 'அவனில் அணுவும்' என்றவாறு.

9. எந்தநிலை பெற்றாலும் உண்மையே அடிப்படையாக இருக்க வேண்டும். சண்டாளம் - கொடிய கேடுகள். தினப்படியான வேலைகளையும், கடமைகளையும், சீலங்களையும் விட்டுவிடக் கூடாது என்பதை அறிவுறுத்துகிறார். எந்த ஞான நிலையை அடையினும் சமுதாயச் சட்டங்களையும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் துறந்துவிடக் கூடாது என்பதை அடிக்கோடிட்டு அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்.

(அகத்தியர் ஞானம் 9 முற்றிற்று)

# அகத்தியர் ஞானம் 13

## எண்சீர்விருத்தம்

கற்பமென்ன வெகுதூரம் போக வேண்டா
　　கன்மலையில் குவடுகளில் அலைய வேண்டா
சர்ப்பமென்ன நாகமதோர் தலையில் நின்று
　　சாகாத கால்கண்டு முனையி லேறி
நிற்பமென்று மனமுறுத்து மனத்தில் நின்று
　　நிசமான கருநெல்லிச் சாற்றைக் காணு
சொற்பமென்று விட்டுவிட்டால் அலைந்து போவாய்
　　துரியமென்ற பராபரத்திற் சென்று கூடே. 1

---

1. கற்பமென்ன - காயகற்பம் தேடி.
குவடு - மலை உச்சி.
நாகமதோர் தலையில் நின்று - குண்டலினியாகிய பாம்பின் மீது.
சாகாத கால் கண்டு - சாகாக் கலைக்கு வாயிலாக அமைகிற வாயுக் கல்வி.
நிசமான கருநெல்லிக் கனி - அவ்வையார் வரலாற்றிலும் வேறு சில கதைக்குறிப்புகளிலும் காணுகிற கருநெல்லிக் கனி அல்லாமல், இந்த உடம்புக்குள்ளேயே உள்ள கருநெல்லி போலும் சுரப்பிலிருந்து வருகிற மூலாதார (கரு)மும், விசுத்தியும் இணைந்த ஞான அமுது.
துரிய நிலை - சாக்கிர சொப்பன சுழுத்தி கடந்த மேலான அவத்தை நிலை.

கூடப்பா துரியமென்ற வாலை வீடு
சுறரிய நாதர்மேகச் சுரியே யென்பார்
நாடப்பா அவள்தனையே பூசை பண்ணு
நந்திசொல்லுஞ் சிங்காரந் தோன்றுந் தோன்றும்
ஊடப்பா சிகாரவரை யெல்லாந் தோன்றும்
ஊமையென்ற அமிர்தவெள்ளம் ஊற லாகும்
தேடப்பா இதுதேடு காரிய மாகும்
செகத்திலே இதுவல்லோ சித்தி யாமே. 2

ஆமென்ற பூர்ணஞ்சுழு முனையிற் பாராய்
அழகான விந்துநிலை சந்த்ர னிற்பார்
ஓமென்ற ரீங்காரம் புருவ மையம்
உத்தமனே வில்லென்ற வீட்டிற் காணும்
வாமென்ற அவன்பாதம் பூசை பண்ணு
மற்றொன்றும் பூசையல்ல மகனே சொன்னேன்
பாமென்ற பரமனல்லோ முதலே மூத்தாம்
பாடினேன் வேதாந்தம் படி னேனே 3

---

2. துரிய நிலையிலுள்ள வாலையின் இருப்பிடம் முன்னரே விளக்கப்பட்டது.
சிங்காரம் - பேரின்பம்.
சிகாரம் - ஆதாரநிலை விளக்கத்தில் காட்டப்பட்டுள்ள 'சி' யின் நிலை.
காரிய மாகும் - சித்தி பெறலாம்.

3. வில் - முதுகந் தண்டு.
முன்வந்துள்ள ஞானப் பனுவல்களில் பிற சித்தர்கள் கூறியுள்ள வாலையின் வழிபாட்டையும், ஆதார நிலைகளையுமே இவரும் கூறுகிறார். சித்தர்கள் அனைவருமே தாயைக் கொண்டு தகப்பனைச் சேர்பவர்கள். மணிவாசகரும் இதனையே வற்புறுத்தியுள்ளார்.

பாடுகின்ற பொருளெல்லாம் பதியே யாகும்
பதியில்நிற்கும் அட்சரந்தான் அகார மாகும்
நாடுகின்ற பரமனதோங் கார மாகும்
நலம்பெரிய பசுதானே உகார மாகும்
நீடுகின்ற சுழுமுனையே தாரை யாகும்
நின்றதோர் இடைகலையே நாத விந்தாம்
ஊடுகின்ற ஓங்கார விந்தை யாகும்
ஒளியான அரியெழுத்தை யூணிப் பாரே. 4

மணியதோர் ஓங்காரம் மேலு முண்டே
உத்தமனே சீருண்டே வூணப் பாரே
ஆணியாம் நடுநாடி நடுவே மூட்டும்
ஆச்சரிய வெழுத்தெல்லாம் அடங்கி நிற்கும்
ஏணியா யிருக்குமடா அஞ்சு வீடே
ஏகாந்த மாகியவவ் வெழுத்தைப் பாரு
தோணிபோற் காணுமடா அந்த வீடு
சொல்லாதே ஒருவருக்குந் துறந்திட் டேனே. 5

---

4. பதி - பசுபதியாகிய பரம்பொருளும் அந்த நிலையிலுள்ள ஒளியும்! ஓங்காரத்திலுள்ள அ, உ, ம பற்றிய பிரிவுகள் முன்னரே கூறப்பட்டன.

5. ஞானேந்திரியங்களைக் கொண்டு நுண்ணுடலிலே இயக்கும்போது மூலக்கனலின் இயக்கமானது அடிக்கும் முடிக்குமாக எழுந்து ஏறி இறங்கி எழுந்தேறி ஒரு சட்ட முறைப்படி ஞானப் பாதையிலே தொழிற்படுகிறது. இதுவே ஏணி, இதுவே தோணி.

துறந்திட்டேன் மேல்மூலங் கீழ்மூலம்பார்
துயரமாய் நடுநிலைமை யூணிப் பாராய்
அறைந்திட்டேன் நடுமூலம் நடுந டிப்பார்
அப்பவல்லோ வரைதாக்கும் தாரை காணும்
உறைந்திட்ட ஐவருந்தான் நடனங் காணும்
ஒளிவெளியும் சிலம்பொலியு மொன்றாய்க் காணும்
நிறைந்திட்ட பூரணமு மிதுதா னப்பா
நிசமான பேரொளிதா னிலைத்துப் பாரே. 6

சும்மாநீ பார்க்கையிலே மனத்தை யப்பா
சுழுமுனையி லோட்டியங்கே காலைப் பாராய்
அம்மாநீ தேவியென்று அடங்கிப் பாராய்
அப்பவல்லோ காயசித்தி யோகசித்தி
உம்மாவும் அம்மாவும் அதிலே காணும்
ஒருமனமாய்ச் சுழுமுனையில் மனத்தை யூன்று
நம்மாலே ஆனதெல்லாஞ் சொன்னோ மப்பா
நாதர்களி லிதையாரும் பாடார் காணே. 7

---

6. துயரமாய் - உருக்கத்தோடு, வரை - உச்சிமேரு. சிலம்பொலி பற்றிப் பிற சித்தர்களும் பாடுகிறார்கள். திருமூலர் அகத்தினுள்ளே கேட்கிற இத்தகைய ஒலிகளை வரிசைப் படுத்தியே பாடுகிறார்.

7. உம்மாவும் அம்மாவும் - உகர ஆற்றலும் அகர ஆற்றலும். சுழுமுனை என்ற சந்தியிலே சூரியனும் சந்திரனும் நெருப்பும் இணையும்போது அங்கே மனம், ஆன்மா, அம்மை, அப்பன் எல்லாம் கூடிய ஒடுக்கம் கைகூடுகிறது!

காணுகின்ற ஓங்கார வட்டஞ் சற்றுக்
கனலெழும்பிக் கண்ணினிலே கடுப்புத் தோன்றும்
பூணுகின்ற இடைகலையில் பம்பரம்போ லாடும்
பொல்லாத தேகமென்றா லுருகிப் போகும்
ஆணவங்க ளானவெல்லா மழிந்து போகும்
அத்துவிதத் தூரியாட்ட மாடி நிற்கும்
ஊனியதோ ரெழுத்தெல்லாந் தேவி யாகும்
ஓங்காரக் கம்பமென்ற உணர்வு தானே. 8

உணர்வென்றாற் சந்திரனி லேறிப் பாணி
ஓடியங்கே தலையென்ற எழுத்தில் நில்லை
அணுவென்றால் மனையாகுஞ் சிவனே யுச்சி
அகாரமென் பதியுமென்ன சூட்ச மாகும்
கணுவென்ன விற்புருவ மகண்ட வீதி
கயிலாய மென்றதென்ன பரத்தின் வீடு
துணுவென்ற சூரியன்றன் நெருப்பைக் கண்டு
தூணென்ற பிடரியிலே தூங்கு தூங்கே. 9

மூவெழுத்தும் ஈரெழுத்து மாகி நின்ற
மூலமதை யறிந்துரைப்போன் குருவு மாகும்
ஊவெழுத்துக் குள்ளேதா னிருக்கு தப்பா
உணர்வதே கண்டறிந்தோ னவனே யாசான்
யாவருக்குந் தெரியாதே அறிந்தோ மென்றே
அவரவர்கள் சொல்வார்க ளறியா மூடர்
தேவரொடு மாலயனுந் தேடிக் காணார்
திருநடனங் காணமுத்தி சித்தி யாமே. 10

---

8. இரண்டாவது தீட்சையிலே கனற் சுழற்சியே மாணவர்களின் அனுபவமாக இருக்கும். கண்ணிலே எரிச்சல் உண்டாகும். இடப்பக்கம் ஒருவிதமான பதட்டமும் கிறக்கமும் உண்டாகும். சில மாணவர்கள் இந்த அனுபவத்தைத் தாங்க முடியாமல் பயிற்சியை நிறுத்தியதும், சில பிணிகளுக்கு உள்ளானதும் நான் அறிவேன்.

9-10. மணிபூரகம், சுவாதிட்டானம், அநாகதம், விசுத்தி என்று மேலே சென்று ஆக்ஞையிலும் சகஸ்ரதளத்திலும் காணுகிற அனுபவங்கள் கூறுகிறார்.

ஒளியிலும் காற்றிலும் ஓசையிலும் காணுகிற இத்தனை அனுபவங்களும் பயிற்சியின் முன்னேற்றத்துக்குத் தக்கவாறு வலிமை பெறும்.

ஈரெழுத்து மோரெழுத்து மாகி யாங்கே
இயங்கிநிற்கும் அசபையப்பா மூலத் துள்ளே
வேரெழுத்தும் வித்தெழுத்து மிரண்டுங் கொண்டு
வித்திலே முளைத்தெழுந்து விளங்கி நிற்கும்
சீரெழுத்தை யூணிநல்ல வாசி யேறித்
தெருவீதி கடந்தமணி மண்ட பத்துச்
சாரெழுத்தி னுட்பொருளாம் பரத்தை நோக்கிச்
சார்ந்தவர்க்குச் சித்திமுத்தி தருமே தானே. 11

ஏகமெனு மோரெழுத்தின் பயனைப் பார்த்தே
எடுத்துரைத்து மிவ்வுலகி லெவரு மில்லை
ஆகமங்கள் நூல்கள்பல கற்றுக் கொண்டே
அறிந்தமென்பார் மவுனத்தை அவனை நீயும்
வேகாக்கால் சாகாத்தலை விரைந்து கேளாய்
விடுத்ததனை யுரைப்பவரே ஆசா னாகும்
தேகமதி லோரெழுத்தைக் காண்போன் ஞானி
திருநடனங் காணமுத்தி சித்தி யாமே. 12

---

11. ஆதார வீதியோடு கனல் எழுப்பிச் சென்று நாத சங்கீதப் பொன்மணி மண்டபமாகிய உச்சிச் சிற்றம்பலத்தை அடைந்து ஆனந்தம் பெறுவதே சித்தி.

12. ஆகமங்கள் உள்ளிட்ட பல நூல்களைப் படித்துவிட்டு, இரகசியங்களை தெரியும் என்று பெருமை பேசுவார்கள். இந்தப் பேச்சை நம்ப வேண்டாம். உடம்பிலே எழுத்தின் நிலை கண்டவனே ஞானி. உச்சி அரங்கிலே திருநடனம் காணப்பெற்றால் அதுவே முத்தியாகும்.

குருவாக உமைபாக னெனக்குத் தந்த
சூறிய ஞானமது பத்தின் மூன்று
பொருளாகச் சொல்லிவிட்டே னப்பா நீதான்
பொருளறிந்தார் பூரணமும் பொருந்திக் காணே
அருளாகா திந்நூலைப் பழித்த பேர்கள்
அருநரகிற் பிசாசெனவே அடைந்து வாழ்வார்
அருளாக ஆராய்ந்து பார்க்கும் பேர்கள்
ஆகாயம் நின்றநிலை அறிய லாமே. 13

---

13. உமையொரு பாகனான பரமசிவனே எனக்குக் குருவாக வந்து உணர்த்திய ஞானப் பேருண்மைகள் இவை. இவற்றை வெளியிட்டேன். இந்த நூலைப் பழித்துக் குறைபேசுவோர் நரகத்தில் பேயாகி உழல்வார்கள். மதிப்போடு பார்த்தோர் வானநிலையாகிய ஜீவன் முத்திநிலை அடையப் பெறுவார்கள்.

(அகத்தியர் ஞானம் 13 முற்றிற்று)

# அகத்தியர் ஞானம்

## காப்பு

### அறுசீர் விருத்தம்

மனமது செம்மை யானால் மந்திரஞ் ஜெபிக்க வேண்டா
மனமது செம்மை யானால் வாயுவை யுயர்த்த வேண்டா
மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மை யானால் மந்திரஞ் செம்மை யாமே. 1

---

1. மனச்செம்மை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று நீதி நெறிமுறைகள் தவறாமல் தீமையற்ற நல்லெண்ணங்களால் மனத்தைத் தூய்மைப்படுத்தி, நல்லனவே கற்றலும் நல்லனவே கேட்டலுமாக வாழ்ந்தால் செயல்களும் நல்லனவாகவே மலரும். மனத்தைச் செயல் தூய்மை செய்கிறது, செயல் மனத்தைத் தூய்மைப் படுத்துகிறது. இரு ஒரு வாழ்வு முறை. இதனால் மனம் செம்மையாகிறது.

இன்னொரு முறை மனத்தின் அழுக்கு பற்றாவண்ணம் உடம்பினில் சில பயிற்சி முறைகளைக் கடைப்பிடித்தல். ஞானிகளும் யோகிகளும் இநத முறையைக் கையாண்டு மாசற்ற மனனாகத் தங்கள் எண்ணக் கொள்கலனைச் செம்மைப் படுத்தினார்கள். இந்த முறையிலே மனம் செம்மைப்படும்போது அந்தச் செம்மை புறக்கட்டுப்பாடுகளால் அல்லாமல், உட்கட்டுப்பாடுகளால் உருவாகிய செம்மையாக இருப்பதால் நிலையான செம்மையாக அது நிறுவி நிற்கிறது. அந் நிலை மனத்துக்கு ஏற்பட்டு விட்டால் பிறகு மந்திரமோ வாசிப் பயிற்சியோ எதுவும் மேற்கொண்டு அவசியமில்லை என்ற நிலை உண்டாகிறது.

## உயர் ஞானம்

### எண்சீர் விருத்தம்

உண்ணும்போ துயிரெழுத்தை உயர வாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகும்
பெண்ணின்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணிவலம் மேல்நோக்கி அவத்தில் நில்லு
திண்ணுங்கா யிலைமருந்து மதுவே யாகும்
தினந்தோறும் அப்படியே செலுத்த வல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார் பாரு
மறலிகையில் அகப்படவு மாட்டார் தானே. 2

## தனி ஞானம்

ஒண்ணான உச்சிவெளி தாண்டி நின்று
உமையவளுங் கணபதியு முந்தி யாகி
விண்ணொளியாம் அம்பரம்ஓம் அவ்வும் உவ்வும்
விதித்தபரம் ஒருவருக்கு மெட்டா தப்பா

---

2. உயிரெழுத்தின் நிலையும் அகர உகர மகாரங்களின் விரிவும் ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கிறது. பெண்ணினோடு இன்பம் துய்க்கும்போது வலத்தில் தவத்துக்கு மாறான அவத்தில் நிற்க வேண்டும்.

3. மூலாதாரத்திலுள்ள பிரணவ ஆற்றலை உச்சியிலே செலுத்துவதும், அர்த்த மாத்திரைப் பிரணவமான சோதி எழுத்தும், இதன் விரிவும் முதலாம் பகுதி 200-210ஆம் பக்கங்களில் காண்க.

சந்திரன் என்ற அபானனை எழுப்புவதும், அதற்கு முன்பு சூரிய ஒளியை வலது கண்ணிலே பார்க்கும் பயிற்சி முக்கியமானது. இதன் நுட்பத்தையே தீட்சைகளில் குருமார்கள் தொட்டு உணர்த்துவார்கள்.

பண்ணான உன்னுயிர்தான் சிவம தாச்சு
பாற்கடலில் பள்ளிக்கொண்டான் விண்டு வாச்சு
கண்ணான கணபதியைக் கண்ணில் கண்டால்
கலந்துருகி யாடுமடா ஞானம் முற்றே. 3

## தனி ஞானம்

விந்துநிலை தனியறிந்து விந்தை கண்டால்
விதமான நாதமது குருவாய்ப் போகும்
அந்தமுள்ள நாதமது குருவாய்ப் போனால்
ஆதியந்த மானகுரு நீயே யாவாய்
சந்தேக மில்லையடா புலத்தியனே
சகலகலை ஞானமெல்லா மிதற்கொவ் வாது
முந்தாநாள் இருவருமே கூடிச் சேர்ந்த
மூலமதை அறியாவிட்டால் மூலம் பாரே. 4

---

3-4. கணபதி, திருமால், சிவம் ஆகிய மூன்று நிலைகளும் படத்தில் வரைந்து காட்டப்பட்டுள்ளது காண்க.

வலது சரத்துக்குத் தேவதை சூரியனும், இடச் சரத்துக்குச் சந்திரனும், உடம்பிற்குத் தேவதை மகேசுரனும், நாபிக்குச் திருமாலும், கண்களுக்கு உருத்திரனும், மூக்கிற்குப் பிரமனும், காதுகளுக்குத் தேவதை சதாசிவனும், உச்சிக்குத் தேவதை பரம சிவனும் என்று சொல்லப்பட்ட நிலைகளையும் ஆன்மாவுக்கு ஆதாரமாக இயங்குகிற கருவிகள் வலது சரம், இடது சரம், நாபி, கண், மூக்கு, செவி, உச்சி என்ற ஏழும் என்பதும் புரிந்து பயின்றால் நாதவிந்து நுட்பங்களைக் கண்டு துய்க்கலாம்.

மூலமதை யறிந்தக்கால் யோக மாச்சு
முறைமையுடன் கண்டக்கால் வாத மாச்சு
சாலமுடன் கண்டவர்முன் வசமாய் நிற்பார்
சாத்திரத்தைக் கண்டறிந்தா லவனே சித்தர்
சீலமுள்ள புலத்தியனே பிரம்ம யோகி
செப்புமொழி தவறாமல் உப்பைக் கண்டால்
ஞாலமுள்ள எந்திரமாஞ் சோதி தன்னை
நாட்டினால் சகலசித்தும் நல்கும் முற்றே. 5

---

5. அகத்தியர் புலத்தியனை நேர்முகப்படுத்திச் சொல்வதாக அமைந்துள்ள உத்தியின் நுட்பம் என்னவென்றால், இந்த நிலைகளையும் ஆற்றல் இயக்கங்களையும் நேரிலே சொல்ல வேண்டும் என்பதோடு, அந்தந்த நிலைகளைச் சொல்கையில் குருநாதன் தனது நுண்ணுடலிலே அதே நிலைகளில் நின்றவாறு உணர்த்துகிறான் என்பதே!

பொதுவாகச் சித்தர் யோகத்தின் அடிப்படையே, கல்வி கற்பிப்பதோடு கொள்கலமாகிய மாணவனின் அறிவை ஆசான் தனது ஆற்றலினால் செம்மைப்படுத்தி அந்த நிலத்தை உழுது பிறகு விதை தெளிக்கிறான் என்பதுவே!

(அகத்தியர் ஞானம் 5 முற்றிற்று)

# திருமூல நாயனார் ஞானம்

இந்தச் சிறிய நூலின் ஆசிரியரும் திருமந்திரமாலை அருளிய ஒப்பற்ற சித்தரும் ஒருவரே ஆன திருமூலர் என்றும் நாயன்மார்களில் ஒருவராகிய திருமூல நாயனாரே என்றும் பல அறிஞர்களும் கூறுகிறார்கள்.

நடையிலும் போக்கிலும் ஒரு சில மாறுதல்கள் இருந்தாலும், யாப்பமைதிம், புலமையும் செம்மையான வடிவத்திலே வெளிவருகின்றன.

அதோடு கவிநலமும் தெளிவும் நம்மை ஆட்கொள்ளும் முறையில் அமைந்துள்ளன.

பாடல் நுதல்கிற பொருளும் திருமூலருடைய ஞானக் கல்வியின் பாற்பட்டதாகவே மிளிர்கிறது.

# திருமூல நாயனார் ஞானம்

## எண்சீர்விருத்தம்

அடியாகி யண்டரண்டத் தப்பா லாகி
அகாரமெனு மெழுத்ததுவே பாத மாகி
முடியாகி நடுவாகி மூலந் தன்னில்
முப்பொருளுந் தானாகி முதலு மாகிப்
படியாய்முப் பாழற்றுப் படிக்கு மப்பாற்
படிகடந்த பரஞ்சோதிப் பதியு மாகி
அடியாகு மூலமுமே அகார மாகி
அவனவளாய் நின்றநிலை யணுவ தாமே. 1

---

1. அடியாகி - அடிப்படையான ஆதார சக்தியாகி.

அவன் அவளாய் நின்ற நிலை - அப்பனும் அம்மையுமாக நின்ற நிலை.

சூரியன், சந்திரன், நெருப்பு என்ற இந்த மூன்றுமே உடம்பிலுள்ள இயக்கங்கள் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளன.

இந்த மூன்றும் இணையும்போதுதான் யோகம் கூடுகிறது.

இந்த மூன்றுக்கும் ஆதியாகி, இந்த மூன்றையும் இணைத்து இயக்குகிற ஆற்றலுக்கு ஆற்றலுமாகித் தொழில் செய்வதும், செய்விப்பதும் பரம்பொருளே!

அதுவாகி யவனவளா யெல்லா மாகி
அடிநடுவு முடிவாகி யகண்ட மாகி
பொதுவாகி புல்லுயிர்க ளனைத்துக் கெல்லாம்
புகலிடமா யெப்பொருட்கு மூல மாகி
மதுவாகி வண்டாகிச் சுவையு மாகி
மலராகி மணமாகி மதிக்க வொண்ணா
அதுவாகும் அகாரமதே மூல மாகி
அண்டமெல்லாந் தாங்கிநின்ற அம்மூல மாமே. 2

மூலமெனு மாதார வட்டந் தானே
முச்சுடரு முக்கோண மூன்று நாடிச்
சீலமெனுஞ் சிவலிங்க பாத தீர்த்தந்
திருவடியுந் திருமேனி நடமு மாகும்
கோலமுட னண்டமெல்லாந் தாங்கிக் கொண்டு
கொழுந்துவிட்ட கம்பமதாய் மேலே நோக்கி
ஆலமுண்ட கண்டமெலாந் தானாய் நின்ற
ஆகாரமுதல் அவ்வெழுத்தை அறிந்து பாரே. 3

---

2. அஃறிணை, உயர்திணை, ஆண்பால், பெண்பால், எல்லாமாகி நிற்பது அந்த ஒரு பொருளே! எல்லா உயிர்கட்கும், எல்லாப் பொருளுக்கும் தோற்றமும் அதுவே; புகலிடமும் அதுவே. தேனாகவும், அதை உண்ணுகிற வண்டாகவும், அந்த வண்டு தேர்கிற தேனின் சுவையாகவும் இருப்பது அதே ஒரு பொருள்தான்!

3. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவும் திருவடியும், திருமேனியும், அவை புரிகிற நடனமும் அவனே!

கொழுந்துவிட்ட கம்பம் - நெருப்புப் பிழம்பாக ஒரே தூணாய் நின்ற நித்தியப் பொருள் அதுவே!

அறிந்ததுவுந் தற்பரமே அகார மாகும்
அறிவுடைய உகாரம்சிற் பரம தாகும்
பிறந்ததுவு மூலகமெலாஞ் சமயந் தானும்
பேதமெனுங் கருவிவகை யெல்லா மாகும்
அறிந்ததுவும் அகாரமெனும் பாதந் தன்னை
அடிமுடியென் றனுதினமு மறிந்து நோக்கே. 4

நோக்கமுடன் மூலமெனும் பரதந் தன்னை
நுண்பொருளாஞ் சிற்பரத்தி னூடே நோக்குந்
தீர்க்கமுட னாதார வகையுந் தாண்டித்
திருநயனம் நாசிநெற்றி நடுவே பார்த்துட்
போக்கறிந்திங் கிந்தநிலை நோக்க வல்லார்
புரிசடையோன் தன்னுடைய புதல்வ ராவார்
ஆக்கமுட னருட்சுடர்போற் குருவைத் தானே
அனுதினமு நோக்கிநிற்பார் ஆசா னாமே. 5

---

4. அ, உ என்ற விரிவு கூறுகிறார். முந்திய பாடல்களில் பல சித்தர்கள் கூறியுள்ள அதே கருத்து இங்கேயும் கூறப்படுகிறது.

5. மூலாதாரத்தில் கனலை எழுப்பி முடி வரை இயக்கி ஆதார நிலைவழியே செல்கிற யோகமுறை பல பாடல்களில் வந்துள்ளது.

புரிசடை - சுருண்ட சடை.

அருட்சுடர்போல் குரு - குரு என்ற சொல்லுக்கு ஒளி என்ற சித்தர் ஞானப் பொருள் முன்பே விளக்கப்பட்டுள்ளது.

ஆசானு மீசானு மொன்றே யாகும்
அவனவளு மொன்றாகும் அதுதா னாகும்
பேசாத மந்திரமு மிதுவே யாகும்
பேரொளியின் வடிவாகும் பேரு மாகும்
நேசாருங் கலைகளெலாந் தானே யாகும்
நிலையான ஓங்கார பீட மாகும்
ஈசானை ஆசானாய்க் காணும் போக்கிங்
கின்பமுடன் கயிலாச மெய்த லாமே. 6

எய்தரிய பரசிவத்தின் மூலந் தன்னில்
இருசுடரு மதித்தொடுங்கு மிடமே யென்று
மெய்தொழவுஞ் சுழுமுனையே கம்ப மாகி
மெய்ப்பொருளாஞ் சோதியென மேவி நிற்கும்
இவ்வகையே மூலமெனும் பாதந் தன்னை
இருநேர மற்றிடத்தே யிறைஞ்சிக் காணே. 7

---

6. ஈசான் - ஈசான மூர்த்தி, ஈசனும் ஆம். பேசாத மந்திரம் - ஒலி அதிர்வுகள். வடிவாகும் பேருமாகும் - உருவமும் பெயரும் பெறுவதும் அதுவே.

ஈசானை ஆசானாய் எண்ணுதல் என்பது, இறைவனே குருவுக்கெல்லாம் பெரிய குருவான ஞான ஒளி எனற கருத்திலே.

7. இருநேரம் அற்றிடம் - இரவு பகல் இல்லாத வெளியிலே.

காண்பதுதான் பேரொளியின் காட்சி யாகும்
காணரிய பொருளாகும் காட்டும் போதே
ஆண்பெண்ணாய் அலியாகி அடியு மாகி
அப்பாலைக் கப்பாலாய் அமர்ந்து சோதி
வீண்பயிலும் வேதமெல்லாந் தேடிக் காணா
வெறும்பாழ தாகியே மேவி நின்றார்
சேண்பயிலும் செகசோதி மூலந் தன்னைத்
தேடரிய பாதமென்றே தெளிந்து நோக்கே. 8

தெளிவரிய பாதமது அகார மாகிச்
சிற்பரமுந் தற்பரமுந் தானே யாகி
அழிவரிய சோதியது தானே யாகி
அடிமுடிவு முடியாகி யமர்ந்து நின்று
மொழிவரிய முதலாகி மூல மாகி
முச்சுடருந் தானாகி முடிந்த சோதி
சுழியினிலே முனையாகிச் கோப மாகிச்
சொல்லரிய வெழுத்தென்றே தொகுத்துப் பாரீர். 9

---

8. யோகப் பயிற்சியிலே நாம் காணுகிற அக ஒளியானது பரம்பொருள் காட்சியாகும். திணைகளையும் பாலையும் கடந்த பரம்பொருள் அது. சேண் பயிலும் - எட்டாத தொலையில் இயங்குகிற.

9. மொழிவரிய - மொழிவதற்கு அரிதான, சொல் கடந்த. முச்சுடர் - சூரிய சந்திர நெருப்புச் சுடர். முடிந்த சோதி - மூன்றும் ஒன்றாகி இணைந்துவிட்ட பிழம்பு.

கோபமாகி - கிளர்ந்து எழுந்து, சொல்லரிய எழுத்து - இந்த எழுத்து மொழியில் சொல் அன்று.

அணுத்திரள் ஒலி என்னும் அதிர்வுநிலையும், அந்த அதிர்விலே வெளிப்படுகிற கனலுமான ஓர் ஒப்பற்ற பிழம்பு அது!

தொகுப்பதும்தாம் மந்திரங்கள் கருவி நூல்கள்
சொல்லரிய தத்துவங்கள் தம்மை யெல்லாம்
வகுத்துடனே யிவற்றையெலாங் கண்டு நீங்கி
வாகான உடலுயிரை வகையாற் கண்டு
பகுப்புடனே சேராமற் பாதந் தன்னைப்
பரகதிக்கு வழியெனவே பற்றிக் கொண்டு
விகற்பமிலா மூலமதில் நின்ற சோதி
மேலான பாதமென்றே மேவி நில்லே. 10

மேவியதோர் சற்குருவின் பாதந் தன்னை
மெய்ஞ்ஞான மென்றதனை மேவிக் கொண்டு
ஆவியுடல் காயமெல்லா மறிந்து பார்த்தே
அத்தனார் வடிவமென்றே அறிந்து கொண்டு
பாவனையு வானவெல்லாம் விட்டு நீங்கிப்
பகலிரவு மற்றிடத்தே கருத்தை வைத்துச்
சீவனையுஞ் சிவந்தனையு மொன்றாய்த் தானே
திருமூலர் பாதமொன்றித் திடமாய்க் காணே. 11

---

10. கற்றுத் தெளிந்து பிறகு உடம்புக்குள்ளே செல்லுவதுதான் பரிணாமமாக இருக்கிறது ஞானப் பயிற்சித் துறையிலே.

11. பாவனையு வானவெல்லாம் விட்டு நீங்கி - ஒடுக்கம் கூடும்போது மனத்தில் இயக்கமான பாவனை நீங்கி அசைவற்ற, எண்ணமற்ற, சிந்தனையற்ற ஒரு மாபெரும் வெறுமை சித்திக்கிறது.

அந்த நிலையிலே இரவு என்றும் பகல் என்றும் கால இயக்கம் அற்றுப் போகிறது. இடம் பொருள் செயல் என்ற மூன்றும் நீங்கிய ஒரு பாழ்வெளியாக அது ஆட்கொள்கிறது. அதுவே சீவனும் சிவனும் ஒன்றுகிற அனுபவமாகும்.

(திருமூல நாயனார் ஞானம் முற்றிற்று)

# சுப்பிரமணியர் ஞானம்

இந்த நூல் சுப்பிரமணியர் என்ற பெயர் கொண்ட ஒரு ஞானியால் அருளப் பெற்றது என்றும், சுப்பிரமணியச் சித்தர் வழங்கிய ஞான நூல் இது என்றும் காணப்படுகிறது. இந்தப் பனுவல் இயற்றிய மகானைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கவில்லை.

நூலை இயற்றிய சித்தர் தமது நூலின் பெயருக்கேற்ப, அகத்தியருக்கு முருகப் பெருமானே ஞானம் வழங்கியதாக நாடகப் பாங்கோடு ஒரு பின்னணி அமைத்துக்கொண்டு, நூலின் பொருளாகிய ஞானத்தைத் தொடங்குகிறார். சுப்பிரமணியர் ஞானம் என்ற பெயருக்கு இவ்வாறு ஒரு பொருட் தொடர்பு நிறுவப்படுகிறது.

பாடல்கள் எளிமையும், தெளிவும் கொண்டு நடந்து செல்கின்றன. எனினும் நடுவிலே வருகிற பதின்மூன்று பாடல்கள் நேர்முகக் கல்வியை மறைபொருளாகச் சங்கேதச் சொற்களைக் கையாண்டு குழூஉக் குறியாகத் தருகின்றன. சித்தர் இலக்கியத்தின் பரஞானம் ஆகிய அட்சரக் கல்வியை ஆழமாகப் பொதிந்துள்ள பாடல்கள் இவை.

# சுப்பிரமணியர் ஞானம்

## காப்பு

### எண்சீர்விருத்தம்

ஒழியாத சுழுமுனையி லொடுங்கி நல்ல
உற்றகலை வாசிசிவ யோகத் தேகி
வழியான துறையறிந்து மவுனங் கொண்டு
மகத்தான அண்டவரை முடிமேற் சென்று
தெளிவான ஓங்கார வடிவேல் கொண்டு
தெளிந்துமன அறிவாலே தன்னைக் கண்டு
வெளியான பரவெளியில் வாச மாகி
வேதாந்த சத்திசிவ ஆதி காப்பே.

## நூல்

ஆதியிலே பராபத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்றபர சிவமு மாகிச்
சோதியென்ற சிவனிடமாய்ச் சத்தி யாகித்
தொல்லுலகி லெழுவகையாந் தோற்ற மாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்தபரி பூரணநிட் களமு மாகிச்
சாதியென்ற சத்திசிவ மருள்தன் னாலே
சண்முகனுங் கணபதியுந் தாமுண் டாச்சே. 1

---

காப்பு. ஒழியாத சுழுமுனை - ஒருபோதும் தடையில்லாமல் இயங்குகிற நடுநிலையான சுழுமுனை. உற்ற கலை - சூரிய கலையும் சந்திர கலையும். வழியான துறை - ஆதாரநிலைகளின் வழியாகச் சென்று சேர்கிற மேலிடமான ஞானக்களம். ஓங்கார வடிவேல் பிரணவ மயமான கூரிய கனற் பாய்ச்சல்.

சுப்பிரமணியர் என்னும் சித்தர் தமது ஞானத்தை இயம்புவதற்குச் சக்தியும் சிவமும் ஆகிய ஆதிப் பரம்பொருளையே காப்பாக வணங்குகிறார். இந்தக் காப்புச் செய்யுளில் வடிவேல் என்ற சொல்லை அவர் கையாளும் முறையில் மூலக்கனலின் நுட்பமான இயைபு துலங்குகிறது. சுப்பிரமணியர் ஞானம் என்று மகுடம் சூட்டப்பெற்றுள்ளதோடு, நுதலுகிற கதையிலே சுப்பிரமணியருடைய புராண நிகழ்ச்சியும் முருகனுடைய ஞானக்கல்வியும் இணைந்துள்ளன.

1. ஆதியில் உற்பத்தியின் முதலாவது தோற்றம் ஓசையே என்பது எல்லா நாட்டு வேதங்களும் கண்டு சொல்லுகிற பேருண்மையாகும்.

உண்டான சத்திசிவம் ஏக மாகி
　　உளங்கனிந் துபூரணமாய் நிற்கும் போது
குண்டான மாங்கனியைக் கையில் வாங்கிக்
　　குமரனுடன் கணபதியைக் குணமாய்ப் பார்த்து
நன்றாகக் கிரிவலமாய் வந்த பேர்க்கு
　　நல்லகனி தானீவோம் என்று சொன்னார்
பன்றான கனியறிந்து குமரன் றானும்
　　பாய்ந்துமயி லேறிகிரி வலஞ்சென் றானே. 2

சென்றபின்பு கணபதியும் ஆலோ சித்துத்
　　தீர்க்கமுள்ள மேருகிரி நீர்தா மென்று
கண்டவுடன் சிவனுமையாள் பாதந் தன்னைக்
　　கருத்துடனே சுற்றிவந்து கனியை வாங்கிக்
கொண்டந்த சிவனுமையைத் தியானஞ் செய்து
　　குறியறிந்து நெறிதமக்குள் திருவைப் போற்றித்
தின்றுருசி கண்டறிந்து நிற்கும் போது
　　தீர்க்கமுள்ள கணபதியை வாவென் றாரே. 3

---

2. இந்தப் பாடலிலிருந்து முருகப் பெருமானுடைய புகழ்பெற்ற புராணக்கதை ஒன்றைச் சொல்லத் தொடங்குகிறார் சித்தர். அதுவே கணபதிக்கும் முருகனுக்கும் போட்டிவைத்து ஞானப்பழத்தைத் தந்த கதையாகும். உலகம் முழுவதையும் கிரிவலமாய் வருகிறவர்களில் வென்றவர்க்கு இந்தக் கனியை வழங்குவதாக ஆதி முதல்வன் கூறுகிறான். முருகன் உடனே மயில்மீது ஏறிச் செல்கிறான், பூமியை வலம் வருவதற்காக.

3. முருகன் புறப்பட்டுச் சென்றபிறகு, ஆடி அசைகிற ஆனையாகிய கணபதி நன்கு யோசனை செய்து பேச ஆரம்பிக்கிறார். "எல்லா உலகமும் நீரே, உம்மை வலம் வருவது உலகையே வலம் வந்ததாகும்" என்று கூறி, அம்மையும் அப்பனுமாயமைந்த பரம்பொருளை வலம்வந்து வணங்கி நிற்கிறார். கனியையும் பெறுகிறார்.

கனியைச் சுவைத்து நிற்கும் கணபதியை அன்போடு அருகில் அழைக்கிறார் பரம்பொருள்.

வாவென்றே எடுத்தணைத்தங் கருள்பா லித்து
மகத்தான ஐவருக்கும் பீட மாகி
ஆவென்று மூலமதற் கரசாய் நின்றே
ஐந்தெழுத்திற் குயிரான ஆதி யாகிக்
கூவென்ற சத்துசித்த சுத்த மாகிக்
குவிந்தெழுந்த வாதிகுரு தேசியாகிப்
பூவென்ற லாயிரத்தெண் மலருக் குள்ளே
பொருந்திமன அறிவாலே யிருந்து வாழே. 4

இருந்துவா ழென்றுரைத்த வேலை தன்னில்
ஏகாந்த மயல்வீர னெதிரில் வந்தே
அருந்தவமாய் நின்றநிலை தன்னைப் பார்த்தே
அருமையுள்ள கண்மணியே வாவென் றேதான்
வருந்தியே மாங்கனியொன் றீந்து நல்ல
மகத்தான அண்டரண்ட வரைகள் சுற்றித்
திருந்தியே தீர்க்காயுள் பெற்று வாழ்ந்து
தீர்க்கமுடன் மலைக்கரசா யிருந்து வாழே. 5

---

4. அருகில் கணபதியை அழைத்து, ஞானேந்திரியங்களின் பீடமாக மூலாதாரத்தில் அரசாகும்படியும், ஆதியான குருநாதனாக அமரும்படியும, அந்நிலையிலேயே சகஸ்ர தளமான ஆயிரம் எண்ணுள்ள மலருக்குள் ஞானவடிவிலே பொருந்துமாறு பணிக்கிறார் பரம்பொருள்.

5. கணபதிக்கு ஞானபதம் தந்து வாழ்த்திக் கொண்டிருந்த நேரத்தில் மயிலேறிச் சென்ற முருகன் வந்துவிடுகிறான். அவனுக்கும் ஒரு மாங்கனியை வழங்கி, மலைகளெல்லாம் சுற்றி நீடு வாழ்ந்து மலைக்கு அரசாக இருக்கும்படி பரமசிவன் வாழ்த்தி அருளுகிறான்.

வழக்கத்திலுள்ள கதையின் முடிவுப் பகுதியிலே ஒரு சிறிய மாறுதல் செய்து மங்கள வாழ்த்தோடு முழுமை செய்கிறார் சித்தர்.

வாவென்று சொன்னவுடன் மயில்வீ ரன்தான்
மகத்தான சிவசக்தி பதமேழ் கொண்டே
ஆவென்று மயிலேறிக் கயிலா சத்தை
ஆவலுடன் சுற்றிவரும் போதி லேதான்
சூவென்றே இமயகிரி வடபா கத்திற்
சுத்தசித்த மானதபோ தனர்கள் கண்டு
தாள்பணிந்து வணக்கமதாய் நிற்கும் போது
தபோதனர்கள் ரிடிகளுமே தாம்வந் தாரே. 6

வந்தவரைத் தான்பார்த்து வரையில் நிற்க
மகத்தான சற்குருவென் றடிப ணிந்தே
இந்தமலைச் சாரலிலே வெகுநா ளாக
இன்பமுடன் தவஞ்செய்து வாழ்ந்தோ மையா
அந்தமாய் ராட்சதர்க ளண்டி வந்தே
அலங்கோலஞ் செய்துமே துரத்து கின்றார்
சுந்தரமா யிருந்துவதங் காவாய் என்று
சுத்தசித்த மாய்த்தவத்தைக் தொடங்கி னாரே. 7

---

6. இவ்வாறு தாய் தந்தையார் வாழ்த்தியதும் அவர்களை மகிழ்வோடு வணங்கிய முருகன், மயில்மீது ஏறிக் கைலாய மலையைச் சுற்றி வருகிறான். அதுகாலை, இமயமலையின் வடக்கில் தவம் செய்கின்ற முனிவர்களைப் பார்க்கிறான். முருகன் வணக்கமாய் நிற்பது கண்டு முனிவர்கள் அருகில் வருகிறார்கள்.

7. முனிவர்கள் சற்குரு என்று முருகனை அடிபணிந்து பேசத் தொடங்குகிறார்கள்.

"இந்த மலைச் சாரலிலே பல்லாண்டுகளாக இன்பத்தோடு நாங்கள் தவம் செய்து வாழ்ந்துவந்தோம். கடைசியில் இப்போது அரக்கர்கள் வந்து அலங்கோலம் செய்து எங்களை வெருட்டுகிறார்கள். எங்களுடைய தவத்தை நீதான் பாதுகாக்க வேண்டும்."

இவ்வாறு சொல்லித் தங்கள் தவத்தைத் தொடங்குகிறார்கள் முனிவர்கள்.

தொடங்கிமன மடங்கிநிலை தன்னைக் காத்துச்
சுத்தமுட னின்றுவிளை யாடும் போதில்
அடங்கிமன மடங்காத அசுரர் தாமும்
அஞ்சாமல் அழும்புசெய்யு மதத்தைப் பார்த்துத்
திடங்கொண்டு மயிலேறிச் செவ்வேல் கொண்டு
சிவந்துவரும் அசுரர்கிளை மாள வென்று
படங்குவித்து வேல்முனையைத் தியானம் பண்ணிப்
பாயவிட அசுரர்கிளை பறந்து போச்சே. 8

பறந்துபோய்ப் பலவிதமாய் ரூபங் கொண்டு
பந்திபந்தி யாயசுரர் பறந்து வந்தார்
சிறந்துவந்த சேனைகளை நன்றாய்ப் பார்த்துத்
தீர்க்கமுள்ள மயிலேறித் தெளிந்து நின்றே
அறந்தழைக்க வேணுமென்ற தூல சூட்சம்
அரூபமெனுங் காரணமாய் ரூபங் கொண்டு
நிரந்தரமாய வந்தபொலா அசுராள் தம்மை
நிர்த்தூளி செய்துதவம் நிலைகொண் டாரே. 9

நிலைகொண்டு நின்றசெயங் கொண்டு சிந்தை
நேர்மையுடன் தவஞ்செய்யு முனிவர் கண்டு
கலைகொண்டு மனந்தெளிந்து மகிழ்ச்சி யாகிக்
கானமயில் வீரனடி கருதிப் போற்றித்
தலைகொண்டு தாள்பணிந்தே அருட்கண் பெற்றுத்
தபோதனரும் ரிடிகளுமே தாம்ப ணிந்து
சிலைகொண்டு நின்றவடி வேலன் தன்னைத்
தெரிசித்தே அவரவர்கள் பதிசென் றாரே. 10

---

8. முனிவர்கள் மீண்டும் தவம் தொடங்கியபோது, அசுரர்கள் அச்சமின்றி அங்கே வந்து தொல்லை கொடுக்கத் தொடங்கினார்கள். முருகப் பெருமான் மயில்மீது ஏறி அசுரர்குலம் அழியுமாறு தியானித்து வேலைப் பாய்ச்சுகிறான். இதுகண்டு அசுரர்கள் பறந்து மறைகிறார்கள்.

9. பறந்துசென்ற அசுரர்கள் பற்பல மாற்றுவடிவமெடுத்து, அணிஅணியாக மறுபடியும் பறந்து வந்தார்கள். இந்த அசுரசேனையைக் கண்ட முருகன் உடனே நுண்ணுருவம் எடுத்து, அந்தப் பொல்லாத அசுர சேனையை மிச்சமின்றி நிலையாக அழித்து விடுகிறான். முனிவர்களின் தவம் நிலைகொள்கிறது.

10. தமது தவம் நிலைகொண்டது கண்ட முனிவர்கள் அந்த வெற்றியிலே மகிழ்ந்து முருகனுடைய திருவடிகளைத் தலைதாழ்த்திப் பணிந்து அவரவருடைய இடங்களுக்கு நன்றி உவகையோடு செல்லுகிறார்கள்.

பதிதேடி யவரவர்கள் செல்லும் போது
பக்தியுள்ள அகத்தியமா முனிவர் வந்து
விதியறிந்தே அசுரர்கிளை மாள வென்று
வெற்றியுள்ள வடிவேலைத் தியானம் பண்ணிக்
கெதியறிந்து தூலமுடன் சூட்ச மாகிக்
கிருபையுள்ள காரணமாம் ரூபங் கொண்டு
சதியறிந்து சங்காரஞ் செய்தீ ரையா
சண்முகமே என்குருவே சரணந் தானே. 11

சரணமென்ற அகத்தியமா முனியைப் பார்த்துச்
சண்முகமாய் நின்றவடி வேலன் தானும்
திரணமதாய்த் தானறிந்து நீயார் என்னத்
திருவடியைப் பூசைசெய்யுஞ் சேயன் என்றார்
கரணமந்தக் கரணமதாய் வந்த தேதோ
கருணையுடன் வாஎன்று கடாட்சம் நல்கித்
தருணமறிந்து உதவுவது தரும மென்று
சங்கையுடன் தான்வந்த வகைசொல் வாயே. 12

---

11. முனிவர்கள் அங்ஙனம் செல்லும்போது, அகத்திய முனிவன் அன்புடன் வந்து, அறநெறிப்படி அசுரர்களைக் கிளையோடு அழித்தமைக்காக நன்றி சொல்கிறான். "சண்முகமே, என் குருவே, சரணம்" என்று சொல்லி அடிபணிகிறான்.

12. அடிபணிந்த முனிவனை நோக்கி முருகப் பெருமான், "நீ யார்" என்ற வினவுகிறான், "உனது திருவடியை வழிபடுகிற மைந்தன்" என்று அகத்தியன் சொல்ல, அன்புடன் முருகன் முனிவன் வந்த காரணத்தைக் கேட்கிறான்.

முருகப்பெருமான் அசுரர்களை அழித்த பின்பு, அவர்கள் தங்கள் தவத்தைத் தொடரும்வண்ணம் அருள்செய்து குருமார்களுக்கெல்லாம் குருநாதனாக விளங்குகிறான். இந்நிலையிலே அவன் அகத்திய முனிவருக்கு ஞானம் வழங்குவதற்குரிய சூழ்நிலை உருவாகி விடுகிறது.

சொல்லென்று மயில்வீரன் கேட்க வந்து
சோதிமய மானஅகத் தியர்தாம் சொல்வார்
சல்லென்று வந்தபொலா அசுராள் தம்மைச்
சண்முகமாம் நின்றவடி வேலுங் கொண்டு
சொல்லென்று சங்காரஞ் செய்தீ ரந்தத்
திருவுருவாய் நின்றகா ரணத்தைக் காட்டி
உள்ளென்ற ஆகார தூல சூட்சம்
உண்மையென்ற காரணமு முறைசெய் வீரே. 13

உரைசெய்வீ ரென்றுசொன்ன வுறுதி கேட்டே
உண்மையென்று மயில்வீரன் உறுதி யாகி
நிரைசெய்தே எக்கியங்கள் தாமுண் டாக்கி
நேமமுடன் அகத்தியமா முனிவர் என்றே
அரையறிந்தே அருகிருத்தி ஓம குண்டம்
ஆதியென்ற மந்திரத்தி லங்கி யாக்கிப்
புரையறிந்து மந்திரங்கள செபிக்கும் போது
பூரணமாய்க் கும்பமதில் தானுண் டாச்சே. 14

---

13. வந்த காரணத்தைக் கேட்ட முருகப்பெருமாளிடம் அகத்தியர் விண்ணப்பம் செய்கிறார். அசுரர்களை அழிப்பதற்காக முருகன் எடுத்துக்கொண்ட வடிவத்தையும், நுண்ணிய அரு உருவின் மெய்ம்மைகளையும் தனக்கு முருகப் பெருமான் உபதேசம் செய்து அருளவேண்டும் மென்று அகத்தியர் எம்பெருமானைக் கோருகிறார்.

14. ஞான உபதேசம் அருளத் தொடங்குகிறான் மயில்வீரனாகிய முருகன். யாகம் செய்வதற்குரிய ஏற்பாடுகளை முடித்து, ஓமகுண்டம் அமைத்து, அகத்தியரை அருகில் உட்கார்த்தியவாறு, மந்திரத் தீ உண்டாக்கிச் சேவிக்கத் தொடங்கும்போது, வேள்வியிலிருந்து பூரண கும்பம் எழுந்து வருகிறது.

உண்டான பூரணமாய்க் கும்பம் வாங்கி
உண்மையென்று மாமுனிக்கே அபிஷே கித்து
நன்றாக நவக்கிரக மொன்ப துக்கும்
நலமான அனுக்கிரக நிலையுங் காட்டிக்
குன்றான அனுக்கிரக வாசல் காணக்
குவிந்துமன அறிவதனால் விண்ணென் றானே. 15

விண்ணென்று விசையுடனே முனைநா வுள்ளே
மெய்ஞ்ஞான வாசலது திறக்கு மப்போ
கண்ணென்ற கபாடவழிக் குள்ளே நின்று
கலையறிந்து வாசியினால் காலம் நோக்கி
உன்னென்று மூலமதில் வங்கென் பூரி
உறுதியென்ற சமாதியிலே சிங்கென் ரேசி
என்றென்று மிப்படியே கொண்டு நின்றால்
ஏகமுள்ள தசதீட்சை யுண்மை கேளே. 16

உண்மையுடன் சுழுமுனையில் விண்ணென் றானி
உறுதியுடன் ஆதார தீட்சை கேளு
நன்மையுடன் ஓங்-ரீங்-அங்-உங்கென் றோதி
நாட்டமுடன் பதினாறாம் உருவே செய்தால்
தண்மையுடன் கணபதியும் பிரகா சிப்போர்
தானமென்ற சுழுமுனையில் தன்னைப் பார்த்து
நுண்மையுடன் ஓம்நமசி வாய மென்றால்
நோக்குமுன்னே பிரமந்தரி சனமு மாமே. 17

---

15. கும்பத்தை வாங்கி மாமுனிவனுக்குக் குடமுழுக்குச் செய்து, நவக்கிரகங்கள் ஒன்பதுக்கும் அனுக்கிரக நிலை என்கிற வேள்விச் சடங்கை முடிக்கிறான் முருகப் பெருமான். இதைத் தொடர்ந்து முருகன் தருகிற மெய்ஞ்ஞானக் கல்வி தொடங்குகிறது.

16-28. பதினாறாவது பாடலிலிருந்து சித்தர்களின் வழிபாட்.டு முறை விளக்கங்கள் காணப்படுகின்றன. இருபத்தெட்டாவது பாடல் வரை ஆழ்ந்து செல்கிற இந்த ஞான உபதேசம் யாக்கையின் செயல்முறைகளையும், இந்த உடம்புக்குள்ளே நிலையங் கொண்டுள்ள எழுத்தாகிய ஆற்றல்களையும் , ஆறு ஆதார நிலைகளையும், குதத் தடத்திலிருந்து ஆக்ஞா சக்கரம் வரை மூலக் கனலின் இயக்கத்தையும், வாசிப் பயிற்சி முறைகளையும் பேசாக் கிளவி வாயிலாக விளக்குகிறது.

ஆமப்பா நமசிவா யநம வென்றே
அதன்பின்வய நமசிவய நமசி யென்று
தாமப்பா தலைகாலால் மாறிக் கொள்ளு
சங்கையுடன் கால்தலையால் மாறிக் கொள்ளு
ஆமப்பா நமசிவய சிவயநம வென்றும்
அதன்பிறகு சிவயநம சிவநம வென்றும்
ஓமப்பா நமசிவய வென்று மாற
உண்மையென்ற ஆதாரஞ் சித்தி யாமே. 18

சித்தமுட னைந்தெழுத்தை மைந்தா நீயும்
செம்மையுடன் தலைகால்கால் தலையாய் மாறச்
சுத்தமுடன் ஆதரதே வதைகள் வந்து
சொன்னபடி யிருதயத்தில் சுகமாய் நின்று
பக்தியுட னிப்படியே தியானம் பண்ணிப்
பதிவாக விபூதியையுந் தளமாய்ப் பூசி
நித்தியமு மிப்படியே செய்து நின்றால்
நிலையில்லாத் தூலசடம் நிலைக்கும் பார. 19

---

16-28. ஞான குருவின் நேர்முக இருக்கை கொண்டு, ஆசான் தொட்டுணர்த்த வேண்டிய பேருண்மைகளே இவை. எனவே, இந்தப் பாடலுக்கு அடிப்படையாக உள்ள ஞான இரகசியங்களை சுருக்கிக் கீழே தருகிறேன்:

காலின் எலும்புகள் இரண்டும் கதிரெலும்பும் வந்திக்கிற இணைப்பே குய்யம். இந்தக் குய்யத்திற்கும் ஆண்குறி, பெண்குறி ஆகிய குதத்திற்கும் நடுவிலே குண்டலி என்பது வட்டமாய்ச் சுருண்டு கிடக்கிறது. இந்த அற்புதமான வட்டத்தின் நடுவிலே முக்கோணம் காண்கிறது. இந்த முக்கோணத்திற்கு நடுவிலே பிரணவமாகிய ஓம் என்ற நுண்ணெழுத்து நிற்கிறது.

புருவத்தின் நடுவிலே இரண்டு ஆற்றல்கள் வேலை செய்கின்றன. சித்தர் மொழியிலே இந்த இரண்டு ஆற்றல்களும் வெவ்வேறு சங்கேத மொழியிலே அழைக்கப் பெறுகின்றன.

பொதுவாக இந்த இரண்டு ஆற்றல்களையும் கணபதி என்றும், வல்லமை சக்தி என்றும் அழைப்பது உண்டு. மூலாதார கணபதி தம்முடைய வல்லமையோடு கோயில் கொண்டு இருக்கிறார் என்பர்.

பாரப்பா கலையறிந்து நிலையில் நின்று
பத்தியுட னாகார சூட்சங் கேளு
நேரப்பா ஓம்கிலிஅங் கென்றென் றோது
நிலையறிந்தே அங்கிலிநங் கென்றென் றோது
காரப்பா வங்கிலிசிங் கென்றேன் றோது
கருணையுடன் சிங்கிலிவங் கென்றென் றோது
சாரப்பா வங்கிலியங் கென்றேன் றோது
சலுதியாம் அங்கிலிமங் கென்றேன் றோது. 20

ஓதியபின் வங்கிலிசிங் கென்றென் றோது
உண்மையுடன் அங்கிலிசிங் கென்றேன் றோது
நீதியுடன் அங்கிலிசிங் கென்றேன் றோது
நிலையறிந்து மங்கிலிரீங் கென்றேன் றோது
ஆதியுடன் ரீங்கிலினும் என்றென் றோது
அப்பனே தலைகாலாய் மாறிய போது
சோதியுடன் சுழுமுனையில் மனக்கண் சாத்திச்
சுத்தமுடன் விபூதியைநீ தரித்துக் கொள்ளே. 21

---

16-28. இந்த மூலாதாரத்தின் முக்கோண நடுவே நான்கு இதழ்கொண்ட மலர் பூத்திருக்கிறது. கமலம் என்று அழைக்கப்படினும் இந்த மலர் முருகனுக்குரிய கடப்பம் பூப்போன்று தோற்றம் தருகிறது.

இந்த மையத்திலிருந்து பச்சைநிறம் ஒளிர்வதாக, நயனப்பயிற்சி கைவந்த ஞானிகள் கூறுவர்.

நான்கு இதழகளிலும் வ, ச, ஷ, ஸ என்ற நான்கு அட்சரங்கள் நிற்கின்றன. இந்த அட்சர நிலையானது முக்கோண வடிவமே. இதுவும் நான்கு இதழ் கொண்ட மலர். தோற்றத்தில் இதை நாலிதழ்க் கமலம் எனலாம். நிறம் மாணிக்கம்.

கணபதி, குண்டலி சக்தி, ஓங்காரம் ஆகியவை அனைத்தும் இந்த இடத்திலே உதிப்பதும் போலத் தோற்றம் தரும்.

கொள்ளப்பா விபூதியைநீ தரித்துக் கொண்டு
    கூர்மையுடன் கால்தலையாய் மாறிக் கொண்டு
சொல்லப்பா ஓங்கிலிரீங் கென்றென் றோது
    சுத்தமுடன் ரீங்கிலிமங் கென்றென் றோது
வில்லப்பா மங்கிலிசிங் கென்றேன் றோது
    விவரமாய்த் தோற்றுமடா செய்கை யாவும்
உள்ளப்பா மங்கிலிங் கென்றேன் றோது
    உத்தமனே சிங்கிலிமங் கென்றென் றோது. 22

ஓதியபின் வங்கிலிசிங் கென்றேன் றோது
    வுத்தமனே சிங்கிலிமங் கென்றேன் றோது
நீதியுடன் மங்கிலிநங் கென்றேன் றோது
    நிலையறிந்து நங்கிலியங் கென்றேன் றோது
சோதியுடன் மங்கிலிஓ மென்றென் றோது
    சுத்தமுடன் ஈராறு தவமுஞ் சித்தி
வீதியென்ற ஆதார மேலா தாரம்
    விண்ணடங்கிக் கண்ணடங்கி மேவி நில்லே. 23

நில்லப்பா கண்ணடங்கி விண்ணென் றாணி
    நிலையறிந்து பிராணாயஞ் செய்தால் மைந்தா
கல்லப்பா தேகமது கால னேது
    காலனென்னும் வியாதியெல்லாங் காண தோடும்
உள்ளப்பா வாசியது முறுதி யாகும்
    ஓதுகின்ற மந்திரமுஞ் சித்தி யாகும்
சொல்லப்பா தூலமுடல் சூட்சஞ் சொன்னேன்
    துலங்கிநின்ற தூலத்தின் சூட்சங் கேளே. 24

---

16-28. மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடை மேலே சுவாதிட்டானம் என்ற ஆதார மையம் திகழ்கிறது.

சுவாதிட்டானத்தின் வடிவம் நாற்சதுரம். இது அட்சர நிலைகளிலே முக்கியமானதாகும். முக்கோணத்திற்கு மேலே உள்ள சதுரமானதால், மூலக்கனலின் இயக்கம் அடியிலிருந்து எழும்போது இந்நிலை முக்கியமான பங்கு பெறுகிறது.

நாற்சதுரத்தின் நடுவிலே 'ஆறு இதழ்கள் கொண்ட ஒரு பூவட்டம் மலர்ந்திருக்கிறது. அதன் நடுவிலே இலிங்க பீடம்.

வீணாதண்டத்தின் அடிப்பாகமாக அமைந்துள்ள இந்த ஆறிதழ் வட்டத்தின் நடுவிலே 'ந' என்ற எழுத்து நிற்கிறது. இந்த எழுத்திலேதான் அயனும் கலைமகளும்கோயில் கொண்டுள்ளார்கள். இந்த மையத்திலிருந்து தங்க ஒளி வீசுகிறது.

சுருக்கமுடன் ஆதார தூல சூட்சஞ்
சொன்னபடி பிராணாயஞ் செய்து கொண்டே
உருக்கமுடன் ஜெபதபங்கள் பூஜை யாலும்
உண்மையா யுனக்குள்ளே கண்டு தேறிப்
பெருக்கமுடன் தானிருந்து சிவான் மாவே
பிராணவாய் நின்றபரம் நீரு மாகி
நெருங்கியந்த அண்டவெளிக் குள்ளே சென்று
நேமமுடன் பிராணாயம் நினைவாய்ச் செய்யே. 25

செய்யப்பா பிராணாயம் நினைவாய்ச் செய்யச்
சிவசிவா கருமானஞ் செப்பக் கேளு
பொய்யப்பா போகாது பிராண வாயு
பொருந்திநின்று விளையாடும் புதுமை கேளு
பையப்பா சுழுமுனையில் விண்ணென் றாணிப்
பதியாக மூலமதில் வங்கென் பூரி
மெய்யப்பா சுழுமுனையில்சிங் கென்று ரேசி
வேகமுடன் கண்டம்அங் கென்று கும்பே. 26

---

16-28. பொன்நிறம் ஒளிர்கிற இந்த ஆதார நிலையிலே பிரும்மாவும் சரஸ்வதியும் நகாரமும் சேர்ந்து தோற்றம் தருவதை அகக்கண் பார்வை பெற்ற ஞானிகள் காண்பர்.

சுவாதிட்டானத்திற்கு எட்டுவிரற்கடை தாண்டியிருப்பது மணிபூரகம் ஆம்.

மணிபூரகத்தின் வடிவம் கோழிமுட்டை போன்றது. இந்த இடம் ஓர் அற்புதமான பின்னலாகும். சுற்றிச் சூழ்ந்துள்ள ஆயிரத்தெட்டு நரம்பு நாடிகளுக்கும் வேராக அமைந்திருக்கிறது இது.

இந்த மணிபூரகத்தையே உந்திக்கமலம் என்பர். இது கொப்புழுக்கு நேரே தண்ணீர் மையத்தில் ஏழாவது பிறையைப் போன்று காட்சி தருவதாக ஞானிகள் கண்டு சொல்கிறார்கள்.

இந்த நிலையத்தின் நடுவில் பத்து இதழ்கொண்ட மலர் பூத்திருக்கிறது. இந்தப்பூவின் நடுவிலே மகார எழுத்துநிற்கிறது. இந்த எழுத்தின் நடுவிலே திருமாலும் திருமகளும் கோவில்கொண்டுள்ளார்கள். இதிலிருந்து ஒளிர்வது பளிங்கு நிறம்.

அங்கென்று கண்டமதில் கும்பித் தேதான்
அசையாது வாசிதிரு வாசி தானும்
செங்கமல மானசுழி பிண்டத் தேறும்
திரும்பியந்தப் பிண்டமதில் சென்று வாழும்
சங்கையுடன் தன்னகத்தில் தானே தானாய்த்
தன்மையுடன் நின்றுவிளை யாடும் வாசி
மங்களமாய்ச் சுழுமுனையில் விண்ணென் றூவி
மார்க்கமுடன் இகரமா யிருந்து காணே. 27

காணவே சந்தியவள் தியானம் கேளு
கருவாகச் சொல்லுகிறேன் கருத்தாய்க் கேளு
பூணவே யுரைத்திடுவாய் அங்சிங் கென்று
புத்தியுடன் பதினாறு வுருவே செய்து
தோணவே விபூதிதா ளிதமே பூசிச
சுத்தமுடன் பராசக்தி நிர்த்தஞ் செய்வாள்
ஊணவே யிப்படியே தியானம் பண்ணி
உண்மையுடன் பிராணாய வுறுதி பாரே. 28

---

16-28. மணிபூரகத்திற்கு மேல் பத்துவிரற்கடையில் அனாகதம். இது இதயகமலத்தில் முக்கோண வடிவம். முக்கோண நடுவில் 12 இதழ்கொண்ட மலர். அந்த மலரின் நடுவே 'சி' என்ற எழுத்து நிற்கிறது. அதன் நடுவில் பார்வதியும் உருத்திரனும் கோயில் கொண்டுள்ளார்கள். இந்த இடத்திலிருந்து ஒளிர்வது கனலின் நிறம்.

அனாகத்திற்கு மேலே பத்துவிரற்கடையில் இருப்பது விசுத்தி என்னும் ஆதார நிலையாகும். இது கழுத்திலே வாயுவின் இடமாக உள்ளது.

விசுத்தியின் வடிவம் அறுகோணம், நடுவில் பதினான்கு இதழ்கொண்ட மலர். அதன் நடுவில் 'வ' என்ற எழுத்து நிற்கிறது. இந்த எழுத்திலே மகேசனும் அம்மையும் கோயில் கொண்டுள்ளார்கள். இங்கிருந்து ஒளிர்வது கருநிறம்.

விசுத்திக்கு மேலே ஆக்ஞை. இது விசுத்தியிலிருந்து பன்னிரண்டு விரற்கடை தள்ளி மேலே இருக்கிறது. இதுவே மிகவும் முக்கியம் வாய்ந்த 'லலாட பீடம்' என்கிற நெற்றி மையம். இது வீணாதண்டின் முடிவாக நிற்கிறது. பொன் போன்ற வடிவமுற்ற பீடம் இது.

ஆக்ஞை என்ற இந்த நிலை புருவ வெளியாக ஆகாயத்தின் இடமாக மூன்று இதழுடைய ஒரு மலரோடு இணங்கி நிற்கிறது. இந்தப் பூவின் நடுவிலே 'ய' கர அட்சரம் நிற்கிறது. இந்த அட்சரத்தின் நடுவிலே தான் சித்தர்களுக்கெல்லாம் தலைமையான மனோன்மணியும் சதாசிவரும் கோயில்கொண்டுள்ளார்கள். இந்த அட்சரநிலையத்திலிருந்து மேகநிறம் ஒளிர்கிறது.

உறுதியுள்ள அகத்தியமா முனியே கேளாய்
உண்மையுள்ள சத்தியைநீ தியானம் பண்ணிப்
பருதிமதி சுடரொளிபோல் பஞ்ச கர்த்தாள்
பதியறிந்து பிராணாயம் பதிவாய்ச் செய்து
சுருதிபொரு ளானதொரு பொதிகை மேவிச்
சுகசீவ பிராணகலை வாசி யேறந்
கருதிமன மொன்றாகிச் சுழியில் நின்ற
கலக்கமற்ற அமிர்தமா னங்கைக் கொள்ளே. 29

பானமென்ற மதயமிர்த பானங் கொள்ளப்
பரபிரம மானசுழி வழியுங் காட்டிக்
தானமென்ற ஆதார மேலா தாரத்
தனையறியும் பிராணாயச் சங்கை சொல்லி
ஞானமென்ற நிலைகாட்டி மூலங் காட்டி
நாதாந்த ஆறுமுக நிலையுங் காட்டி
மோனமென்ற வடிவேலின் முனையுங் காட்டி
முனையறிந்து கலைநிறுத்தி முடிமேல் நில்லே. 30

நில்லப்பா சதுரகிரி முடியிற் சென்று
நிலையான பொதிகையிலே வாச மாகி
உள்ளப்பா தானாகி விண்ணென் றாணி
உன்மனத்தில் நினைத்ததொரு மந்த்ரந் தன்னைச
சொல்லப்பா தியானமுடன் செபிக்கும் போது
சுத்தமுடன் சித்திக்கும் சும்மா நின்று
செல்லப்பா அட்டாங்க யோகத் தேகிச்
சிவாயகுரு பாதமதில் தெளிவாய் நில்லே. 31

---

29. உண்மையுள்ள சக்தியை என்றும் நிலையாக உள்ள அம்மையை. பிராணாயம் - மூச்சுப்பயிற்சி; பிராணாயமம் எனினும் ஆம். பதிவாய் - விடாமல் ஒழுங்காக.

30. மதியமிர்த பானம் - ஞான அமுதம் என்கிற சோமபானம். பிராணாயச் சங்கை சொல்லி - மூச்சுப் பயிற்சிகளின் கணக்குகளை ஓதி. ஆறுமுகநிலை - ஆறு ஆதாரங்களின் ஆழமும் அகலமும். வடிவேலின் முனை - மூலக்கனலின் அடியாகிய மூலாதாரமும் முடியாகிய சுழுமுனை நிலையும்.

31. சதுரகிரியின் சிகரத்திலே சென்று, பின்பு நிலையான "பொதிகை மலையிலே வாழ்வாயாக!" என்று அகத்திய முனிவனை வாழ்த்தி வழியனுப்புகிறான் முருகன். புறப்படுமுன், அட்டாங்கயோகம் என்கிற பயிற்சிமுறையை முனிவனுக்கு உணர்த்துகிறார் குருநாதனாகிய சுப்பிரமணியன்.

தெளிவான தெளிவதனால் தன்னைக் கண்டு
 தீர்க்கமுட னிருந்துதவஞ் செய்ய வென்றும்
அழியாத அனுக்கிரக வரமு மீந்தே
 ஆர்வமுடன் மயில்வீரன் வடிவேல் கொண்டே
அழியாத ஆண்டவரை முடிமேற் சென்றே
 அட்டகிரி பர்வதத்திற் கரசு மாகி
ஒழிவாதி அண்டவெளி யெங்குந் தானாய்
 ஓங்கார வடிவேலை யுவந்தான் முற்றே. 32

---

32. துல்லியமான அறிவுத் தெளிவோடு ஞானத்தவம் செய்ய அகத்திய முனிவனுக்குத் திருவருள்செய்து வரங்கள் நல்கி ஏகுகிறான் மயில்வீரன்.

எட்டுத் திக்கிலுமுள்ள அஷ்டகிரிக்கு அரசனாகி முருகப் பெருமான் சுப்பிரமணியன் என்ற ஞானக் கடவுளாக அண்டவெளியெல்லாம் பரந்துநின்று பிரணவமாகிய ஓங்காரக் கூர்வேலை உவந்து தாங்கி நிற்கிறான்.

சுப்பிரமணிய மூர்த்தி அகத்திய முனிவனுக்கு வழங்கிய கல்வியே சுப்பிரமணியர் ஞானமாக நிலைத்து நிற்கிறது.

(சுப்பிரமணியர் ஞானம் முற்றிற்று)

# சிவயோக சாரம்

இந்த நூலின் ஆசிரியர் பூரணானந்தர் ராஜயோக மார்க்கத்தை ஹிந்துஸ்தானி பேசுகிற வடநாட்டுத் துறவிகள் வாயிலாகக் கற்றுக் கொண்டதாகவும், அந்தக் கல்வியைத் தாமே கற்றுத் தெளிந்துகொண்ட பல நூல்களின் அறிவோடு ஒப்பிட்டுப் பார்த்ததாகவும், அந்த ஆய்வின் பயனாகத் தமிழில் இந்நூலை இயற்றுவதாகவும், தமது அவையடக்கத்திலே கூறுகிறார். மேலும், குரு சண்தாஸ் பாபாஜி என்ற ஞானகுரு வடதேசத்து ஹிந்துஸ்தானி மொழியில் எழுதியதையும், பிற நூல்களில் கண்டறிந்த ஞானத்தையும் சேகரித்துச் சிவயோக சாரம் எனப் பெயரிட்டு இந்த நூலை வெளியிட்டிருப்பதாகப் பூரணானந்தர் சொல்கிறார்.

சித்தர் நெறி என்பது உலகெங்கிலுமே பயின்று வருகிறது. மனிதகுலம் முழுமைக்கும் ஒரே முறையில் அமைந்துள்ளதே இந்த உடம்பு. இதன் அகப்பயிற்சியே யோகம் ஆகும். மொழிகள் மாறலாம்; நாடுகள் மாறலாம்; எனினும், இந்த மனித உடம்பும் இதன் செயற்பாடுகளும் உலக மக்கள் அனைவருக்கும் ஒரே தன்மையதாகவே அமைந்துள்ளன. வட இந்தியனுக்கு மூலாதாரம் நெற்றியிலோ அல்லது வேறு இடத்திலோ அமைவதில்லை. கடலுக்கப்பால் உள்ள ஒரு வெளிநாட்டவனுக்குச் சுழுமுனை என்பது முதுகிலேயா அமைந்திருக்கும்? எல்லா மக்களுக்கும் ஆறு ஆதார நிலைகளும் தமிழனைப் போலவே அந்த அந்த இடங்களிலேதான் அமைந்துள்ளன.

வடநாட்டில் யோகப்பயிற்சியாளர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருந்த போதும், மேனாடுகளில் நான் இருந்தபோது சில ஆங்கிலேய அறிஞர்களுடன் ஞானப்பயிற்சி முறைகளைப் பற்றிக் கலந்துரையாடியபோதும், இந்த ஆன்ம ஞானப் பயிற்சியின் ஒரே தன்மையும், ஒரே நெறிமுறையும், ஒருமைப்பாடும் மிகத் தெளிவாகத் துலங்கின.

சுழுமுனை அல்லது சுழிமுனை, இடகலை அல்லது பிங்கலை முதலிய சொற்களும் இவை போன்ற வேறு சில சொற்களும் மிகச்சிறிய மாறுதல்களுடன் ஹிந்துஸ்தானி மொழியிலும் பயின்று வருவதால்,

பொதிகை மலையிலிருந்துதான் இந்தச் சித்தர் ஞானம் வடநாடு சென்றது என்று சில அறிஞர்கள் கூறுவதுண்டு. தமிழ்மொழியிலிருந்து சமஸ்கிருதத்திற்குச் சென்றுள்ள சில சொற்களைப் பற்றி இங்கிலாந்து நாட்டிலுள்ள பன்மொழி வல்லுநர்கள் சிலர் காய்தல் உவத்தலின்றித் தெளிவான முடிவுகளைத் தங்கள் ஆய்வு நூல்களில் எழுதி உள்ளார்கள்.

இந்த ஆராய்ச்சிகள் ஒரு நிலையைத் தாண்டும்போது, சாதி சமய உயர்வு தாழ்வுகளுக்கும், மொழிப்பிணக்குகளுக்கும் வழியாகி விடும். ஆகவே, எது எங்ஙனம் ஆகினும், வட இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி சித்தர்களின் ஞானப் பயிற்சி முறையானது ஒருபடித்தாகவே நிலவி வருகிறது என்பது தேற்றம்.

இத்தியாதி காரணங்களால் சிவயோக சாரம் என்ற நூலையும், இந்த ஆய்வுப் பகுதியிலே சேர்த்திருக்கிறேன். நாடெங்கிலும் வழங்கி வருகிற ஒரேபடித்தான சித்தர் பயிற்சி முறைகளின் சாறாகப் பிழியப்பட்டு இந்நூல் அமைந்திருப்பதாலும், உரைநடையில் எழுதப்பட்டிருப்பதாலும், இந்தச் சிறிய வசன நூலை அப்படியே சொல்லுக்குச் சொல் தந்திருக்கிறேன். இதனுடைய நடையிலே வடசொல்லின் வாசனை அதிகமாக இருப்பினும், எளிமையான சொற்களால் பேச்சு நடையில் அமைந்திருப்பதால், உரைக்குறிப்புக்குள் இல்லாமல் மூல வடிவிலே எந்த மாறுதலுமின்றி இப்பனுவல் இணைக்கப்பட்டுள்ளது.

# பூரணானந்தர் அருளிச் செய்த சிவயோக சாரம்

## சிறப்புப் பாயிரம்

## அவையடக்கம்

***

'கனகவரை' என்னும் புருவத்திடை நடன ஒளி கேட்டானந்திக்கும் எந்தைமார்களே, உங்கள் பாதபங்கயங்கட்கு அனந்த வந்தனம்! அறிவிற் சிறியேன் குருமுகமாய் ஹிந்துஸ்தானியால் உணர்ந்த ராஜயோக மார்க்கத்தைப் பல நூல்களிலுள்ள அரும் பொருளோடு 'சிவயோக சாரம்' என வரைதலுற்றேன். நீரைப் பிரித்துப் பாலைக் கொள்ளும் அன்னத்தைப் போலக் குற்றம் தவிர்த்துக் குணத்தைக் கொள்ளக் கோருகிறேன்.

## அறுசீர் விருத்தம்

ஏதமுற்ற பேதையேன் இயம்பு மிந்த யோகநூல்
பேத மற்ற போதமுற்றோர் பேசுவார்க ளாசையால்
வேத னைப்பட் டுழலுவாரிம் மெய்யு ணாரப்பொய்யரிப்
பூதலத்தி லுள்ளதீது புதுமை யன்று புலவிர்காள்.

நீர்வளம் முதலியவைகளால் சிறப்புத்றோங்கும் உத்தர தேசங்களில் பஞ்சாபு என்னும் பாஞ்சால தேசத்தில் அவதரித்தவராய், ஜீவேசுவர பேதாபேத முணர்ந்து நித்தியானுபவம் செய்யும் பரம யோகீந்திரராய் ஸ்ரீஜனகாம்ஸ பூதரான உதாசி பாபா நானக் குரு பரம்பரையினர் அனேக வருட காலமாக அனுபவித்து வரும் இராஜயோக தயாளகுண பரிபூரணருமான குரு சரண்தாஸ் பாபாஜி அவர்களால் இந்துஸ்தானி பாஷையில் இந்தத் தக்ஷிண தேசத்திலுள்ள சகல வருணாச்சிரமிகளும் உய்யும் பொருட்டுத் தமிழில் மொழிபெயர்த்து உபநிஷத்துகளிலும் யோகவாசிஷ்டம் பாதஞ்சலியம், அடயோகம் முதலியவைகளிமுள்ள அரும்பொருளைச் சேகரித்துச் 'சிவயோக சாரம்' என நற்பெயரமைத்து இதனை வெளியிடலாயிற்று.

இந்நூலைச் சாங்கோபாங்கமாக உணரும், புண்ணியோத்திருஷ்டர்கள் அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டமா சித்திகளை அடைவரென்பது திண்ணம்.

## குருவணக்கம்
### எண்சீர் விருத்தம்

ஆரணசாத் திரமனைத்தும் உணர்ந்து சீடர்
அவித்தையெலாம் அகற்றியருள் புரியும் ஞான
பூரணனா யெழுந்தெளியேற் குபதே சித்துப்
பூணா னந்தனென நாமந் தந்த
நாரணதே சிகனாமென் குருநா தன்றன்
நளியமல ரடியிணையைச் சிரமேற் கொண்டு
தாரணயிற் சிவயோக சார மென்னுநீ
தகைபெறுமிந் நூலடியேன் சாற்று லுற்றேன்.

## காப்பு
### நேரிசை வெண்பா

துவராடை யுள்ளோருந் தூயுடையா ருய்வான்
சிவயோக சாரமனச் செப்ப - நவையில்புகழ்
கொண்டபர வைந்துகரக் கோநின் னடிகட்குத்
தண்டனிட் டேனருளைத் தா.

## ஆசிரியர் நிலை

இந்த ராஜ யோகத்தை அப்பியசிக்கும் ஆசிரியன் தெளிந்த ஆத்தும ஞானியாய், அடுத்தவர்களை ஆதரித்துப் போதிக்கத் தக்கவனாயிருக்க வேண்டியது. அதாவது சின்முத்திரையாகிய மௌனநிலை ஈதென்றும், அதைக் கைவல்லியப் படுத்துவதற்குரிய ஆசனம் முதலிய விதிகள் இவையென்றும், சாம்பவி முதலிய மகா முத்திரை இன்னவை யென்றும், குண்டலி சத்தி ஈதென்றும், அதை விழிப்பிக்கும் மார்க்கம் ஈதென்றும், இதுவே சிவராஜயோகமென்றும், இந்த யோகம் செய்யத்தக்கவர் பெறத்தக்க நாதாந்தம் இதுவென்றும், இது வசமுற்றால் ஒரு மயக்கந் தோன்றுமென்றும், அது நீங்கும் வரையில் நின்றால் அருள் தரிசனம் உதயமாமென்றும், அவ்வனுபவம்

கிடைக்கில் சுாண்பானாதிகள் இறக்குமென்றும், அங்ஙனம் மனம் அசையாதிருக்குமென்றும், அப்போது அந்நாதாந்தத்தில் பஞ்சாக்ஷர முதலியவைகள் தோன்றா தொடுங்குமென்றும், இத்தன்மைப்பட்ட சுவானுவ சாக்ஷாத்காரத்தை உணர்ந்த ஆத்தும ஞானாசாரியாய் இருக்க வேண்டும்.

## மாணாக்கரின் நிலை

உத்தம ஜென்மமாயும், வித்தைக்கு உடையவனாகவும், சாந்த சற்குண முடையவனாயும், பற்றில்லாதவனாயும், காம சற்பற்பம் இல்லாதவனாயும், கோபத்தை வென்றவனாயும், சத்திய தருமத்தை விரும்பினவனாயும், குரு பணிவிடையில் பிரியமுள்ளவனாயும், மாதாபிதாக்களை உபசரிப்பவனாயும், தனது கருகத்தலிருப்பவனாயும், நல்லொழுக்க முடையவனாயும், சற்சீடனென்றும் பக்குவ முடையவனாயுமுள்ள மாணாக்கனே இவ்விராஜ யோகத்துக்கு அதிகாரியென்று சொல்லப்படுவான்.

இத்தன்மைப்பட்ட நற்சீடன் சாக்ஷாத்காரத்தை உணர்ந்த ஞானாசாரியரைக் கண்டெத்து, அவர் திருவடிகளில் பணிந்து, அவர் மனங்களிகூரும்படி நடந்து உடல்பொருளாவி மூன்றும் அச்சற்குருவின் திருவடியில் தத்தஞ் செய்து, அவரால் அநுக்கிரகிக்கும் திருவடித் தீக்ஷையையும் பிராணாயாமத்துக்குரிய மூல மந்திரத்தில் முதல் வாக்கியத்தையும் இந்த யோகத்தின் விதிகளையும் உபதேசிக்கப் பெற்று, குருவின் சன்னிதியிலிருந்து, வற்குருவால் சொல்லாமற் சொல்லும் முதல் வாக்கியத்தை உன்னாமல் உன்னி யோகசாதனை செய்து வருங்காலையில் சுவானுபவத்தின்கண் அடையாநின்ற சம்சயங்களனைத்தும் தீரும்படி அவ்வாசிரியரிடத்தில் விண்ணப்பம் அடிக்கடி செய்துகொண்டு, அந்தச் சங்கற்பம் நசிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டுவதாம்.

## பிராண வாயுவின் நிலை

மாணாக்கன் ஆரம்பத்தில் கவனிக்க வேண்டிய விதிகள் யாதெனில், அவை சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூன்று நாடிகளின் நடைகளெனப்படும்.

மூன்று கலையின் சுவாசத்தினாலுண்டாகும் சத்தத்தைக் கண்டறியவேண்டும்.

அச்சப்தத்துக்கு 'அஜபா' என்பது பெயராம்.

அந்தச் சப்தத்தைக் கண்டுபிடிக்கச் சில விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன: வாயுக்கள் மூன்று: அவை இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்பன. இடைகலை என்பது இடநாசியினும், பிங்கலை என்பது வலநாசியிலும், சுழுமுனை என்பது இரண்டு நாசியிலும் வரவும் போகவுமிருக்கற சுவாசம். இதற்கு அஜபா என்பது பெயராம். இடைகலை என்பது சந்திரனும், பிங்கலை என்பது சூரியனும், சுழுமுனை என்பது அக்கினியுமாம்.

அன்றியும் இடகலையானது, சுககிலபட்சமாகிற அமாவாசையில் பிரதமை முதல் மூன்று நாளைக்குக் காலையில் தொடர்ச்சியாய் வரவேண்டும்.

சதுர்த்தி முதல் மூன்று நாளைக்குப் பிங்கலை நடக்க வேண்டும். இதே மாதிரியாகச் சுக்கிலபட்சம் முழுமையும் மூன்று நாளைக்கு இடகலையும் மூன்று நாளைக்குப் பிங்கலையுமாய் நடக்க வேண்டும்.

இவ்வண்ணமாகச் சுக்கில பட்சத்தில் சந்திரகலை வராவிடில், அவனுக்குத் தேகம் அசவுக்கியப்பட்டுக் கவலை மேலிடுமென்றறிக. அதைச் சரிப்படுத்த வேண்டிய விஷயத்தைப் பற்றி பின்வரும் வாக்கியத்தில் காண்க.

கிருஷ்ணபக்ஷம், அதாவது பௌர்ணமி பிரதமை முதல் மூன்று நாட்களும் பிங்கலை நடக்க வேண்டும்.

பின் மூன்று நாளைக்கும் இடகலை நடக்கவேண்டும்.

இத்தன்மையாய் இரண்டு கலைகளும் மும்மூன்று நாளைக்கொருமுறை மாறிமாறி நடக்க வேண்டும்.

இதை மாணாக்கன் குறிப்பாகத தினம் தினம் கவனிக்க வேண்டும். சுழுமுனை கூடுவது கஷ்டமானதால், அதைச் சாக்கிரதையாய் அப்பியசித்துப் பழகல் வேண்டும்.

மாணாக்கனுக்கு முக்கிய வேலை, இடைகலையும் பிங்கலையும் திதிக்குத் தவறி நடந்தால், அதை மாற்ற வேண்டிய விஷயத்தைப் பற்றிக் குரு மூலமாகக் கேட்டுக்கொள்ளுதலே.

## இடைகலையின் பலனாவது

இடகலை, நடக்குங் காலம் தாகம், ஜலவிருத்தி, தீர்மானம் செய்ய, வேலை செய்ய, நகை செய்ய. நகையணிந்து கொள்ள, அன்னிய தேசத்திலிருநது யாத்திரை போக, வீடு சத்திரம் கோவில் கட்ட, தருமஞ் செய்ய, சாமான் சேகரஞ் செய்ய, கிணறு குளம் வெட்ட, கலியாணம் செய்ய, வஸ்திரம் கட்ட, வைத்திய சாஸ்திர அப்பியாசம் மருந்து கற்பங்கள் முதலியவை செய்ய, சினேகிதரைக் காண, வியாபாரஞ் செய்ய, தானியம் இருப்புச் செய்ய, வீட்டிற்குக் குடிபோக, விதை விதைக்க, சமாதானஞ் செய்ய, அன்னிய பாஷை அப்பியாசஞ் செய்ய, உபதேசஞ் செய்ய, பலனைப் பற்றி யாத்திரை போக, யானை குதிரை ஏறி வேட்டைக்குப் போக, எஜமானாக, ஆடல் பாடல் கற்க, ஒருபுதிய ஊருக்குப் போக, பந்துக்களைக் காணவுமாகிய நடவடிக்கைகள் செய்தால் பயன்படும்.

இடைகலையானது சரிவர நடந்தால், தேகம் சௌக்கியமாயிருககும். இதில் ஆகாசத்தின் அம்சமிருக்குமானால் முன்சொன்ன நடவடிக்கைகளுள் ஒன்றும் செய்யக் கூடாது. இரவாக இருந்தாலும், பகலாக இருந்தாலும், மேற்சொன்ன வேலைகளை இடைகலையில் நடத்த வேண்டுமென்பதாம்.

## பிங்கலையின் பலனாவது

வலநாசியி லுண்டாகிற பிங்கலை வாயுவில் அதாவது சூரிய நாடிக் காலத்தில் கஷ்டமான வேலை எதுவும் அப்பியசிக்க, எவ்விதக் கொடூரமான செய்கையும் செய்ய, போஜனம் செய்ய, மலம் கழிக்க, போகம் செய்ய, கடல் யாத்திரை போக, சண்டை செய்ய, படை எடுக்க, கஷ்டமான சாஸ்திரம் கற்க, குதிரை முதலாகிய நாற்கால் ஜீவன்களை வாங்க விற்க, மட்டமான மலை ஏற, குதிரை மல்யுத்தம் முதலாகிய பழக்கம் செய்ய, ஆறு குளம் கடல் முதலாகிய இடங்களில் நீந்த, உலோகங்களைக் கொடுக்க, எஜமானத்துவமான வேலை பார்க்க, அரசனைக் காண, இரண வைத்தியத்திற்கு மருந்து செய்ய, கடினமான ஆகாரம் ஜீரணிக்க இவை முதலாகிய செய்கைகள் செய்ய வேண்டுமென்பதாம்.

## சுழுமுனையின் பலனாவது

சுழுமுனை நடி, இரண்டு நாசியிலும் வரும் சுவாசம். அதை அவன் நடவடிக்கைக் காலத்திலேதான் அறியலாம்.

ஒரு கணத்தில் இடநாசியிலும், ஒரு கணத்தில் வல நாசியிலும் வரும் வாயுவானது, இரண்டு நாசியிலும் வரும்போது சுழுமுனையாம். இந்தச் சுழுமுனை நடக்கும் காலத்தில் உலக நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டும். தவறி நடந்தால் அபஜெயமாம்.

எண்ணத்துக்கு விரோதமாய் நடக்கும் இந்த வாயுவின் காலத்திலே ஆத்துமத் தியனமும் பூசையும் செய்யலாம்.

இந்த வாயு நடக்குங் காலத்திலேதான் சுவாச வந்தனம் செய்யக்கூடும். இந்தச் சுவாசம் கட்டுவதனால் மனத்திற்கும் தேகத்திற்கும் இன்பம் உண்டாகின்றது.

## நாடிகளின் நிலை

முதல் ஆதாரமாகிய மூன்று நாடிகளைப் பற்றியும் விவரமாகச் சொல்லுவோம்.

அதாவது மனிதர்களுக்கு எழுபத்தீராயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை இருபத்து நான்கு. இவை எப்போதும் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இவைகளைக் குண்டலி சத்தி என்று ஆதிநாதர் அருளிச் செய்திருக்கின்றனர்.

குண்டலி சத்தி மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. பத்து நாடிகள் மேலாகவும், பத்து நாடிகள் கீழாகவும், இரண்டு நாடிகள் ஒரு பக்கத்திலும், இரண்டு நாடிகள் மற்றொரு பக்கத்திலும் இருக்கின்றன.

இந்தக் குண்டலி சத்தியானது பாம்பைப் போலச் சுற்றிக் கொண்டு சுவாதிஷ்டானத்திற்கு மேலாகவும், மணிபூரகத்திற்குக் கீழாகவுமிருக்கின்றது.

இந்த இருபத்துநான்கு நாடிகளுள் பத்து நாடிகளை முக்கியமாக எடுத்திருக்கின்றனர்.

இந்தப் பத்து நாடிகளில் முன்சொல்லிய மூன்று நாடிகளை முக்கியமாயெடுத்திருக்கின்றபடியால், அதில் இடகலையானது தேகத்தின் இடப் பாகத்திலும், பிங்கலையானது தேகத்தின் வலப் பக்கத்திலும், சுழுமுனையானது தேகத்தின் மத்தியிலுமிருக்கின்றன.

இக்குண்டலி சத்தியைப் பற்றி விவரமாகப் பின்னே சொல்லப் பட்டிருக்கிறது.

## ஆசன விதிகள்

அதாவது பத்திரம், வீரம், பதுமம், கோமுகம், குக்குடம் ஆகிய ஐந்தும் ஞான சாதனத்துக்குரிய ஆசனமாகும்.

இவற்றுள் பதுமாசனமாவது இரண்டு தொடைகளில் இரண்டு பாதங்களையும் செவ்வையாக வைத்து உட்காருதல்.

இது சகல பாவங்களையும் நாசம் செய்வதாகும்.

இதை மான்தோல், புலித்தோல், வெண்துகில், சித்திராசனம், தர்ப்பை இவைகளின் மேலிருந்து அனுபவிக்கலாம்.

இதில் இடை, வயிறு, கண்டம், தலை சமனாய் ஸ்தம்பத்தைப் போல் நிமிர்ந்திருக்க வேண்டும். அன்றியும், வடமுகம் நோக்கித் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் ஆத்துமஞான குருவின் சன்னிதிக்கு நேராய் உட்கார வேண்டியது.

இதைச் சுவஸ்திகா ஆசனம் என்பர். கிருகஸ்தருக்குப் பதுமாசனமென்றும், சன்னியாசிகளுக்குச் சித்தாசனமென்றும் ஹடயோக தீபிகை நூலிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

## இரேசக பூரக லக்ஷணம்

பிராண வாயுவின் அசைவு எதுவோ, அதுவே சித்தத்தின் அசைவென்றும், மேலான புத்திமான்கள் பிராணனது சலனத்தை ஜெயித்தலில் முயல்கிறார்கள். ஆகையால், ராஜஸ தாமஸ குணங்களை நீக்கி, சாத்துவிக குணத்தோடு பிராணாயாமம் செய்ய வேண்டும். பிராணயாமத்தில் வெளிவாயுவை உட்கொள்வது பூரகமாம். அவ்வாயுவை நிறுத்துதல் கும்பகமாம். கும்பித்த வாயுவை

வெளிப்படுத்துதல் இரசகம் எனப்படும். இதுவே பிராணாயாம அங்கமாகிய இரேசக பூரக லக்ஷணம்.

சூரிய நாடியாகிய பிங்கலையால் பிராணனை இழுத்து, மெள்ள மெள்ள வயிற்றை நிரப்ப, விதிப்படி பந்த பூர்வமாகிய கும்பகம் செய்து, மறுபடியும் சந்திர நாடியாகிய இடகலையால் இரேசிக்க வேண்டும்.

சந்திர நாடி சூரிய நாடிகளுள் எந்த நாடியால் பூசிக்கிறானோ, அதனாலேயே இரேசித்து நிரோதித்தலால், வேர்வை நடுக்கம் முதலியவை உண்டாகும். அதுவரையில் கும்பித்து எதனால் பூரகஞ் செய்யப்பட்டதோ, அதற்கன்னியமான நாடியால் மெள்ளமெள்ள இரேசிக்க வேண்டும். வேகமாய் இரேசித்தால், பலக்குறைவு உண்டாகும். எதனால் இரேசகம் செய்யப்பட்டதோ, அதனாலேயே பூரகம் செய்யலாம். இடகலையால் பிராணனைப் பூரித்துக் கும்பிக்கப்பட்ட பிராணனை, மற்றப் பிங்கலையால் இரேசிக்க வேண்டும். பிங்கலையால் வாயுவைப் பூரித்துக் கும்பித்த வாயுவை இடகலையால் இரேசிக்க வேண்டும். இவ்வண்ணம் சந்திரனால் பூரித்துக் கும்பித்து, சந்திரனால் இரேசிக்க வேண்டும். இவ்விதம் சூரிய சந்திர நாடிகளின் அப்பியாசத்தைத் தினமும் விஸ்தரிக்க வேண்டும். இதனால் நாடிகள் மூன்று மாசத்திற்குமேல் சுத்தமாகின்றன.

## அஜபாவின் நிலை

இந்த யோகத்துக்குரிய ஏகாந்த ஸ்தானத்தில் பதுமாசன மிட்டு உட்கார்ந்து, உடனே அஷ்டகந்த தூபமிட வேண்டும். இந்த யோகத்திற்காக ஏற்படுத்திய அறையானது மிக்க நலமாக இருக்க வேண்டும். தான் தனியேதான் இருக்க வேண்டும். இதில் சொல்லிய நான்கு காலங்களில் எந்தக் காலமாவது வைத்துக்கொண்டு அப்பியாசப்படுத்த வேண்டும்.

இடைகலையானது எப்போதும் வலது நாசியிலும் ஹம்ஸம் எனவேயிருக்கும். ஹம்ஸமென்பது ஆத்துமாவின் பெயராகும். முதலில் வெளியே வருகிற சுவாசத்தின் சப்தமாகிய 'ஹம்' என்பதையும் உள்ளே போகிய சுவாசத்தின் சத்தமாகிய 'ஸம்' என்பதையும் கண்டறிய வேண்டும். இந்த ஹம் ஸம் என்கிற சத்தத்தைக் கண்டறிந்தவன், இந்த அப்பியாசத்தில் முதற்படி தெரிந்தவன். இம்மாணாக்கன் எப்போதும் உலக ஆசையும்

குடும்பமாகிய கட்டையும் நிவர்த்திக்க வேண்டியது. ஒரே காலத்தில் நீக்கக் கூடாது.

ஏனெனில், ஒரு வருஷ காலம் வரையில் மனக்கலக்கமும் பலவிதக் கவலையும் நேரிடுமாகையால், நாளுக்கு நாள் கொஞ்ச கொஞ்சமாக நீக்க வேண்டியது. மாணாக்கன் கூடிய அளவு மனத்தை ஸ்திரப்படுத்த வேண்டும்.

இதே மாதிரியாகத் தன்னுடைய சுவாசத்தைக் குறித்து, அதனால் உண்டாகும் ஹம்-ஸம் என்ற சத்தத்தைக் கண்டறிய வேண்டும். இப்படி அப்பியசித்து மூன்று நாடிகளின் குணத்தையும் ஹம் ஸம், என்ற சத்தத்தையும் கண்டறிந்தவுடன் தத்துவத்தை அறிய வேண்டியது.

மூன்று நாடிகளைக் கண்டறியாமல், பஞ்ச தத்துவத்தை ஆரம்பிக்கக் கூடாது. இந்த யோகம் அப்பியசித்து ஜீரண சக்தியை உணர்ந்து தேகத்தைப் பலப்படுத்த வேண்டும்; அதாவது அரிசி கோதுமை பச்சைப்பயறு துவரை உழுந்து கம்பு கேழ்வரகு நெய் பால் தயிர் மோர் முதலியவற்றை உபயோகிக்க வேண்டும். இந்த யோகி அரைவயிறு அன்னமும், கால்வயிறு ஜலமும் சாப்பிட வேண்டும். ஏனெனில், உள்வாயு மற்ற ஒரு பாகத்தில் சஞ்சரிக்க வேண்டுமென்றுணர்க.

புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு முதலியவை அதிகமாகச் சேர்க்கக் கூடாது. இத்தன்மைப்பட்ட யோகி சன்னியாசியாக வேண்டியதில்லை. எல்லாக் கிருகஸ்தரும் செல்வர்களும் ஏழைகளும் ஜாதி பேத நிற வித்தியாசம் பார்க்க வேண்டியதில்லை. எவர்கள் திரிகரண சுத்தமாக இந்த யோகத்தைச் செய்வார்களோ அவர்களுக்கு இவை சித்திக்கும் என்பது நிச்சயம்.

ஒருவன் பதினெட்டு வயதில் இந்த யோகம் அப்பியசத்தானால், ஐம்பதாவது வயதில் அந்தக் கேசரி முத்திரையை அடைவான். இத்தன்மையான யோகி மது மாமிசங்களைக் கண்டிப்பாய் நீக்கியிருப்பதன்றி, ராஜஸ தாமஸ குணங்களற்று, தத்துவத்தைக் கொண்டு சுறுசுறுப்பாக அப்பியசித்து, அதி தீவிர பக்குவமாய் வாழ்பவன்.

## பஞ்ச தத்துவ நிலை

இனி, சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத் தியானத்தின் ஆதாரமாகிய பஞ்ச தத்துவங்களைக் குரு சம்பிரதாயத்தால் அறிய வேண்டியதும், அந்தப் பஞ்ச தத்துவங்களின் குறிப்புகளின் விவரணமும் கூறப்படும். அதாவது, முன்சொன்ன மூன்று நாடிகளின குணங்களையும் சுத்தமாக அறிந்துகொண்டு, ஒன்றை ஒன்றில் மாற்றிக் குண்டலியை அடையாமல் தத்துவங்களை அப்பியசிக்க லாகாது.

முதலிற் சொல்லியிருக்கிற நாடிகளைத் தன் வசப்படுத்திக் கொள்ளாமல், யோகிகள் தத்துவங்களைக் குறித்து ஆரம்பிக்கக கூடாது. போஜனம், மலம் கழித்தல், போகஞ் செய்தல் இவை மூன்றுஞ் சூரிய நாடியில் செய்ய வேண்டியவை. தாகம், ஜலவிருத்தி இவைகளை இடைகலையில் செய்யவேண்டும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து தத்துவங்களும் மூன்று நாடிகளில் ஒவ்வொரு நிமிஷத்திற்கு ஒருமுறை மாறிக்கொண்டே வருகின்றன. இந்தத் தத்துவங்களைக் கண்டறிவதற்கு அடியில் வருமாறு கூறுவோம்.

அதாவது எவர்கள் இந்த மூன்று வாயுக்களை அப்பியசித்திருக்றார்களோ, அவர்கள்தாம் இந்த யோகத்திற்குரியவர்கள். இந்த உலகம் பஞ்சபூதத்தால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இது கண்டுகொள்பவர்களுக்கு ஆயுள் விருத்தியாகும். அப்படிப்பட்டவர்கள், பூஜை முதலாகிய உபசாரங்கள் செய்யப்பெற்று மேலாவார்கள்.

இந்த ஐந்து தத்துவங்களும் சத்தியலோகம். பூலோகம், மிருத்தியுலோகம் முதலாகிய இடங்களில் வியாபித்திருக்கின்றன. அவைகட்கு அன்னியமாக ஒரு வஸ்துவும் ஏற்படாது.

இப்பஞ்ச தத்தவத்தைக் கண்டறிவதற்கு விவரம் சொல்லுவோம்.

1வது தத்துவங்களின் நடை; 2வது சுவாசத்தினால் தத்துவங்களை அறிதல்; 3வது சுவாசத்தில் தத்துவத்தின் அடையாளம்; 4வது தத்துவங்களின் நிறம்; 5வது தத்துவங்களின்

சுவை; 6வது சுவாசத்தின் அளவு; 7வது தத்துவங்களின் அசைவு; 8வது தத்துவங்களின் பலன்.

ஆகிய இந்த எட்டு விதங்களினால் பஞ்ச தத்துவத்தைக் கண்டறிய வேண்டும்.

மாணாக்கன் எந்த வாயுவில் எந்தத் தத்துவம் நடக்கிறதோ, அதனைக் கண்டறிய வேண்டும். மேலும், முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது பஞ்சேந்திரியங்களைச் சண்முகி முத்திரையால் மூடிக்கொண்டு, தினந்தினம் கொஞ்சஞ் கொஞ்சமாக அப்பியசிக்க வேண்டும். அதிகமாக அப்பியசித்தால் அசௌக்கியம் நேரிடும். குரு எவ்வளவு பிரமாணஞ் சொல்லுவாரோ, அவ்வளவுதான் நடக்க வேண்டுமென்பதாம்.

1) இந்தச் சண்முகி முத்திரையை மூடிக்கொண்டு அப்பியசிக்குங் காலத்தில் மஞ்சள் நிறம் தோன்றினால், பிருதிவி என்றும், வெண்ணிறம் தோன்றினால், அப்பு என்றும், சிவப்பு நிறம் தோன்றினால், தேயு வென்றும்; பச்சை நிறம் தோன்றினால், வாயுவென்றும்; கறுப்புநிறம் தோன்றினால் ஆகாயமென்றஞ் சொல்லப்படும்.

2) மாணாக்கன் கண்ணாடியைத் தனக்கு முன்னால் வைத்துக் கொண்டு, அதன்மேல் சுவாசத்தை விட்டால், அது நாற்சதுரமாக இருந்தால் பிருதிவி என்றும், அரையுருண்டை வடிவமாக இருந்தால் அப்புவென்றும், முக்கோணமாக இருந்தால் தேயுவென்றும், அறுகோண உருண்டை வடிவமாக இருந்தால் வாயுவென்றும், சிறுபுள்ளிகள் மாதிரியிருந்தால் ஆகாயமென்றும் அறியவேண்டும்.

3) மாணாக்கன் சுவாசம் விடும்போது சுவாசம் நேராகப் போனால், பிருதிவி; கீழாகப் போனால், அப்பு; மேலாகப் போனால், தேயு; ஒழுங்கீனமாய்ப் போனால், வாயு; அடங்கிப் போனால், ஆகாசமென்று அறிய வேண்டும்.

4) பிருதிவு, மஞ்சள், அப்பு, வெண்மை; அக்கினி, சிவப்பு; வாயு, பச்சை; ஆகாயம், கறுப்பு என இவைகளைக் கண்டறிய வேண்டும்.

## உணரும் விவரம்

ஒவ்வொரு வண்ணமுள்ள குண்டுகள் ஐந்தைத் தனக்குப் பின்னால் வைத்துக்கொண்டு பத்மாசனத்தில் உட்கார்ந்து, தனது எண்ணத்தைக் கூட்டி, நிஷ்டையிலிருந்துகொண்டு, பஞ்ச தத்துவத்தில் எதையாகிலும் ஒன்றை நினைத்துப் பின்னால் இருக்கிற குண்டுகளில் ஒன்றை எடுப்பானாகில் அதுதான் எண்ணிய நிறம்போல் இருந்தால், இதை அறிந்தவன் ஆகிறான். இவ்வண்ணமே ஒவ்வொரு குண்டையும் எடுப்பானானால், முற்று முணர்ந்தவனாகின்றான்.

5) தித்திப்பு, பிருதிவி; துவர்ப்பு, அப்பு; புளிப்பு, தேயு; உவர்ப்பு, வாயு, ஆகாயம், கார்ப்பாகும்.

6) சுவாசம் 12 அங்குலம் நீண்டால், தேயு; 16 அங்குலம் நீண்டால், அப்பு; 4 அங்குலம் நீண்டால், தேயு; 8 அங்குலம் நீண்டால் வாயு; மூக்கினுள்ளாகவே இருந்தால் ஆகாயம்.

7) அசையாத வேளை, பிருதிவி; அசையும் வேளை, அப்பு; கஷ்டமான வேளை, தேயு; துஷ்ட வேளை, வாயு; பூசை வேளை, ஆகாயம்.

8) பிருதிவி தத்துவத்தில் ஆரம்பிக்கும் வேலை, கண்டிப்பாக இலாபத்தில் முடியும். ஜல தத்துவத்தில் அசையும்படியான வேலைகள் செய்யத் தக்கவை. ஏனென்றால், ஏதாவது ஒருமுடிவான வேலையை ஆரம்பித்தால் சீக்கிரத்தில் முடிந்துவிடும்.

அக்கினி, வாயு, ஆகாயம் ஆகிய இந்த மூன்று தத்தவத்தில் எந்த வேலையை ஆரம்பித்த போதிலும் அது அபஜெயமாகவே முடியும். ஆகையால், மாணாக்கன் இவைகளை எந்தக் காலத்தில் உபயோகப்படுத்த வேண்டுமோ, அந்தக் காலத்தில் தத்துவத்தை அறிந்து உபயோகப்படுத்த வேண்டும். இந்தத் தத்துத்தில் புத்தியைச் சரியாகச் செலுத்த வேண்டும்.

ஏனெனில், வியாதி முதலாகிய ஹிம்சைகள் வரவொட்டாமல் பலவிதக் குணமில்லாமலும், நிரோதத்தை ஒரே குணமாக இருந்து பார்க்கவேண்டும்.

## பிராணாயாம நிர்ணயம்

அதாவது முன்சொன்ன பிராணாயமத்தின் பிரமாணத்தை உணர்த்துதல்; அதாவது அருணோதய முதல் மூன்று நாழிகை வரையிலும் மத்தியானத்திலும், அஸ்தமிக்கிறதற்கு முன்னும் பின்னுமாக இரு முகூர்த்தமும், அர்த்த ராத்திரியிலும், பிரதி தினம் நான்கு முறை செய்ய வேண்டும். காலம் ஒன்றுக்கு 80 பிராணாயாமம் வரையிலும் நன்றாய் அப்பியசிக்க வேண்டும்.

முகூர்த்தமென்பது இரண்டுநாழிகை யளவுள்ளதாம். நான்கு முறை செய்தால், தினந்தோறும் 320 பிராணாயாம மாகின்றது.

ஒரு புருஷன் அப்பியாசிக்க வேண்டுமானால், காலையில் 60ம் மத்தியானத்தில் 40ம், சாயங்காலத்தில் அர்த்தராத்திரியில் 20ம் ஆக மெள்ளமெள்ளப் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

அது கைவல்லிப் படும்போது முதலில் வேர்வையும், இரண்டாவது நடுக்கமும், மூன்றாவது தவளைக் கத்தும், அப்பியாசத்தால் பத்மாசனத்தி லிருக்கையில் பூமியினின்று ஆகாயத் தெழும்புதலும் உண்டாகுமென்பது குருநாதரால் சொல்லைப்பட்டிருக்கின்றது.

கிருகஸ்தாசிரமிகளுக்கு உபயோகம்:- இந்தப் பிராணாயாமம் கிருகஸ்தனுக்கு பாப சுத்தியின் பொருட்டும், யோகிகளுக்கு யோக சித்தியின் பொருட்டுமாம். கிருகஸ்தன் சங்கத்தை விட்டு ஏகாந்தத்திலிருந்து அப்பியாசம் செய்யவேண்டும். அதன்பின் ஆகாரத்தின் பொருட்டு வெளியே சங்கத்தில் பிரியமுடையவன்போல் வியவகரிக்க வேண்டும். கருமத்தால் உண்டான யாவும் கருமத்தின்படியிருக்கிறது. நியமித்த காரணமாக இவற்றைச் செய்வதில் ஒருக்காலும் தோஷமில்லை.

நல்ல விவேகி இந்த யோகத்தை அனுசரிப்பானாயின் அவன் அவசியம் சித்தியடைவான். இதற்கு சம்சயமில்லை. அவன் புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டு, தேகாபிமானத்தை நீக்கி, கிருகத்திலிருந்தே முத்தியை அடைவான். அந்த யோகியானவன் லோக சங்கிரகம் லோகபரிபாலனமாகிய தனது காரியத்தில் புண்ணிய பாவங்களைச் செய்யினும், அப்புண்ணிய பாவங்களினால்

பற்றப்படான்; கிடைத்ததில் சந்தோஷ முடையவனாகவும், உள்ளே கொஞ்சமும் பற்றில்லாதவனாயும், காலவரம்பு, இடவரம்பு, நடைவரம்பு என்னும் சகல வரம்புகளும் உள்ளவனாயும் யோக சாதனத்தில் பொருந்தியிருப்பான். யோககிரியைகளோடு கூடிய கிருகஸ்தனுக்கு ஈஸ்வர வாச்சியமாகிய பிரணவத்தின் சப்தத்தால் சித்தியுண்டாகும். ஆனால் அவன் அதைச் செவ்வையாக அப்பியசிக்க வேண்டும்.

உதாரணம்:- "கிருகஸ்தன் புத்திர தாராதிகளால் நிரம்பியவனாய் வீட்டில் இருந்துகொண்டு, அகப்பற்றில்லாமல் யோகமார்க்கத்தில் தன்னிடத்தில் சித்தியின் அடையாளங்களைக் கண்டபிறகு எனது அஞ்ஞையைச் சாதித்துக் கிரீடிப்பன்" எனற சிவசங்கிதையின் வாக்கியத்திலும் கிருகஸ்தனுக்குச் சித்தி உண்டாகுமென்று சாதிக்கின்றது.

## மாத்திரை

ஆரம்பத்தில் ஒரு மனிதன் ஜாக்கிரத்தில் விடும் சுவாசம் வெளிப்பட்டு உள்ளே போகிற தெவ்வளவோ, அவ்வளவு பிராணாயாமத்தின் மாத்திரையாகும். அனுபவத்தின் பின் ஒரு புருஷன் நித்திரை செய்யும்போது சுவாசம் எவ்வளவு காலம் போய்த் திரும்புகிறதோ, அவ்வளவு காலம் பிராணாயாமத்தின் மாத்திரைகள் எனப்படும்.

மாணக்கன் அப்பியாச காலத்தில் பால் நெய் முதலியவற்றோடு கூடிய உணவை உண்பது சிலாக்கியம். அப்பியாசம் திடமான காலத்தில் அப்படிப்பட்ட நியமம் வேண்டுவதில்லை என்றும், பிராணன், பிராணாயாமம், ரேசக பூரக கும்பக மாத்திரைகளென்றும், 'பிராணன்' என்பது தன் தேகத்தில் ஜீவித்திருக்கும் வாயுவென்றும், ஆயாமம் என்பது அந்த வாயுவைத் தடுப்பதென்றும், நாரதீயத்திலும், சௌரவ புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இரேச பூரக கும்பக பேதத்தால் மூன்று விதமாயும் மூன்று வர்ணமாயும் இருப்பதால், பிரணவமே பிராணாயாம மெனப்படும். பதுமாஸனத்திலிருக்கும் புருஷன், நாசி நுனியில் சந்திர பிம்பம் பிரகாசங்களாய் விரிந்த அகார மூர்த்தியானது இரக்தாங்க முடையதும் அன்ன வாகினி, தங்டங்கத்தில் உடைய வாலையுமாகிய, காயத்திரியாகின்றது. கருடவாகினி, எவ்வர்ணமுடையது;

சக்கரத்தைக் கரத்திலுடையது, சாவித்திரி யாகின்றது. மகா மூர்த்தியானது, கருமையான அங்கமுடையது; இடபவாகினி, வயது சென்றதும் சூலந் தரித்ததுமாகிய சரஸ்வதியாகின்றது; அகாராதி மூன்றிற்கும் காரணம், பரஞ்சோதியாகிய ஏகாக்ஷர பிரணவமாகிறதென்று தியானிக்க வேண்டும்.

இடையினால் வெளிவாயுவை மாத்திரை யளவு பூரித்து, ஆகாரத்தைச சிந்தித்து, பூரித்த வாயுவை 64 மாத்திரை அளவு கும்பித்து, உபகாரத்தையே தியானித்து, கும்பித்ததைப் பிங்கலையா**ல்** 32 மாத்திரையளவு இரேசித்து, மகாமூர்த்தியைத் தியானிக்க வேண்டும்.

அன்றியும், பூரகம் பன்னிரண்டு ஓங்கரமாகவும், கும்பகம் பதினாறு ஓங்காரமாகவும், இரேசகம் பத்து ஓங்காரமாகவும் செய்யவேண்டும். இது பிராணாயாம அப்பியாசமெனப்படும். பிரமா, விஷ்ணு, உருத்திரன் மூவரும் பூரக, கும்பக, இரேசகங்களுக்கு அதிதேவதைகளென்று சொல்லப்படுவர்.

முன்சொல்லிய குண்டலிசத்தியைச சொல்லுகிறோம். அதாவது, நித்திரை செய்யுங் குண்டலியானது குருப்பிரசாத மூன்றாம் வாக்கியத்தால் எப்போது விழிக்கின்றதோ, அப்போது சகல பதுமங்களும் ஆறு சக்கரங்களும் பிரம கிரந்தி, விஷ்ணு கிரந்தி, உருத்திர கிரந்தி என்னும் மூன்று கிரந்திகளும் பேதத்தை அடைகின்றன.

அப்போது சூரிய பதவி என்னும் சுழிமுனையிற் பிராணவாயு இராசமார்க்கமாக அனுசரிக்கப்படுகின்றது.

சுகமாக போக்குச் சம்பவித்தால், சித்தம் நிராலம்ப நிர்விஷயமாகின்றது; சித்தம் நிராலம்பமாகுங்கால் காலனை வஞ்சிக்கக் கூடும்.

சுழிமுனையென்றும், சூனியபதவி யென்றும், பிரமரந்திர மென்றும், மகாமேருவென்றும், பெருவழியென்றும், மயானமென்றும், சாம்பவி மத்தியபாகமென்றும் சொல்வதால், இந்தக் குண்டலி பேதத்தினாலே ஷட்சக்கர பேத முதலியவை உண்டாகின்றமையால் முழுமுயற்சியோடு பிரமாந்திரத்தின் சுழுமுனையின் வாயிலை

முகத்தால் மூடிக்கொண்டு நித்திரை செய்யும் ஈஸ்வரியாகிய குண்டலியை விழிப்பிக்க மகாமுத்திரை முதலியவற்றைச் செவ்வையாக அனுசரிக்க வேண்டும்.

இந்தக் குண்டலி சத்தியானது கந்தத்தின் மேல்பாகத்தில் யோகிகளுக்கு மோஷத்தின் பொருட்டும், மூடர்களுக்குப் பந்தத்தின் பொருட்டுமாகத் தூங்குகின்றது. சகல யோக தந்திரங்களுக்கும் குண்டலி சத்தி ஆதிக்கமாய் இருப்பதால் அக்குண்டலி சக்தியை எவன் அறிகிறானோ, அவன் யோக வித்தாவான் என்றும், யோகிகள் தூங்கும் குண்டலியை விழிக்கச் செய்கிறவர்களென்றும் அடயோக தீபிகையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## குண்டலி ஸ்தான நிலை

மூலாதாரத்தில் பொருந்தும் உட்பாகமாகிய அக்குண்டலியைச் சூரியனால் பூரிக்க வேண்டும். குதத்திற்கு இரண்டங்குலம் மேலும், இலிங்கத்திற்கு இரண்டங்குலங் கீழுமாகிய தேகத்தின் மத்தியானது சரீர நடுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

கந்த ஸ்தானம் மனிதர்களுக்குத் தேக மத்திய மூலாதாரத்தினின்றும் ஒன்பதங்குலத்தின்மேல் நான்கு அங்குல அகலமும் நீளமும் உள்ளதாய், முட்டை போன்ற வடிவுள்ளதாய், துவக்குத் தோல் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

குதத்திற்கு இரண்டங்குலமேல் தேக மத்திய பாகம் ஓர் அங்குலத்திலிருந்து ஒன்பதங்குலம் வரை கந்த ஸ்தானமாகும்.

ஆகப் பன்னிரண்டு அங்குலப் பிரமாணம், அதாவது ஒரு ஜான். எழுபத்தீராயிரம் நாடிகளின் பலத்தைச் சோதிக்க வேண்டுமாயின், அதற்குச் சத்தி சலனமாகிய குண்டலி அப்பியாசமன்றி வேறு சுத்தி செய்யும் உபாயமில்லை.

இந்த மத்திய நாடியாகிய சுழுமுனையானது, யோகிகளுக்குத் திடப்பியாசம் சுவஸ்திகா பங்கயாசனங்களாலும் பிராணாயாமத்தாலும், மகாமுத்திரை முதலிய முத்திரைகளாலும் சௌக்கிய முண்டாக்குகின்றது. ஆகிலும், சமாதியினால் அன்னிய விர்த்தி நிரோதிக்கலாகாது. ஏகாக்கிர தன்மையால் மனத்தைத்

தாரணை செய்து அப்பியசித்து நிலைபெறச் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும்.

ஏனென்றால், ராஜயோகமின்றிப் பரமபருஷார்த்த பலன் சித்தியாமையால், வாயுவின கும்பக முத்திரை விதானமாகிச் சகல விதிகளையும் மனத்தோடு அப்பியசிக்க வேண்டும். புத்திமான்கள் வாயுவின் விதிக்கு அன்னியமாகிய விஷயத்தில் மனோவிர்த்தியைச் செலுத்தலாகாது. எவர் யோகிகளின் குரு பரம்பரையாகிய சம்பிரதாயத்தால் வந்த சாம்பிரதாக்கியமாகிய மகாமுத்திரை முதலியவற்றின் உபதேசத்தைத் தருகின்றரோ, அவரே ஸ்ரீகுரு. அவரே சகல குருக்களுக்கும் சிரேஷ்டரானவர். அவரே பிரபு. அவரே சாக்ஷாத் பிரந்தியக்ஷ ஈஸ்வரர் என்றும் சொல்லப்படுவர்.

அன்றியும், அக்கினிமண்டலம் நாபியின் கீழ்ப்பாகத்தி-லிருக்கின்றது. அது மனிதர்களுக்குத் தேகத்தின் மத்தியில் பொன்னிறமுள்ளதாய் முக்கோணமாய் இருக்கின்றது. அக்குண்டலியை எழுப்பும் விதமாவது, சூரிய உதய காலத்திலும் அஸ்தமன காலத்திலும் தினந்தோறும் இரண்டு முகூர்த்தம் போதிக்க வேண்டும். சூரியனால் பூரித்துச் சந்திரனால் இரேசிப்பதால், அபானனும் அக்கினியை அடைந்து, உஷ்ண சொரூபத்தால் பிராணனை அடைகின்றது.

அக்கினியின் உஷ்ணத்தால் செவ்வையாகத் தகிக்கப் படுகின்றதால் தூங்குகின்ற குண்டலி சத்தி நன்றாய் விழிப்புடையதாகின்றது; தண்டத்தால் அடிபட்ட சர்ப்பத்தைப் போல நிஸ்வாசத்தைச் செய்து நிமிர்ச்சி அடைகின்றது; அதன்பின் பிலத்திற் பிரவேசித்த பாம்பைப் போலச் சுழுமுனையினுள் பிரவேசிக்கின்றது.

ஒரு புருஷன் சலனம் செய்து மூலஸ்தானத்திலிருந்து குண்டலியை மேலே கொண்டு வருவானாயின், அவன் மேற்சென்று அமிர்தத்தை அடைவான். இந்தக் குண்டலி சத்தியை வாலைப் பிடித்து எழுப்பினால் நித்திரையை விட்டு மேலே எழும்புகின்றது. இதைக் குருமுகமாக அறிய வேண்டும்.

## அமிர்த நிலை

சிகையின் மத்தியில் பரமாத்மா பொருந்தி யிருப்பதால், மேருவைப் போல உயர்ந்திருக்கும் சுழுமுனையினது மேல்பாகத்தின் மத்தியில் சோமஜலம் ஒழுகிக் கொண்டிருக்கின்றது. அந்தத் துவாரமான சந்திர மண்டலத்தினின்று சரீரத்திற்குச் சாரம் ஒழுகுகின்றது.

ஒழுகும் சந்திர அமிர்தத்தின் சுவை கார்ப்பு, உவர்ப்பு இவற்றிற்குச் சமானமாக உள்ளதாயும், தேன், நெய், பால்களைப் போல இரசமுடையதாயுமானால், அப்போது அவனுக்குக் காரியசித்தி ஆகின்றது. அந்தச் சந்திராமிர்தமென்னும் சத்தை எவன் பானம் பண்ணுகிறானோ, அந்த யோகி வியாதியில்லாதவனாய்த் தாமரைத் தண்டுபோல மிருதுவான சரீரமுடையவனாய், வெகுகாலம் ஜீவித்திருப்பான்.

## சுவாசாங்குலப் பிரமாண நிலை

இந்த மனித ஜன்மத்துக்குச் சாதாரணமாய்ச் சுவாசம் உள்ளே பத்தங்குலமும், வெளியில் பன்னிரண்டங்குலமும். போகும்; இதுவல்லாமல் நடக்கும்போது 24 அங்குலமும், ஓடும்போது 42 அங்குலமும், போகஞ் செய்யும்போதும் தூங்கும்போதும 50, 60 அங்குலமும் போகும். சாப்பிடும் போதும் வாந்தியாகும்போதும் 18 அங்குலம் ஓடும்; சாதாரணமாய 13 அங்குலம் ஓடும். ஆகையால், இந்தச் சுவாசத்தை யோக அப்பியாசிகள் கவனிக்க வேண்டும். இவ்வளவு நீளமாகப் போகிற சுவாசத்தைத் தன்னால் கூடிய அளவு சிறிது சிறிதாகக் குறைக்க வேண்டியது.

அது ஏனென்றால், இந்த மனித ஜன்மத்திற்குக் கலைகளாகிய சுவாசம் 12 அங்குலம் ஓடி, 4 அங்குலம கழித்து, 8 அங்குலந்தான் நின்ற இடத்தில் நோக்கும். இப்படிச் சாதாரணாமாக 4 அங்குலம் கழிந்ததனால், 120 வயதாகின்றது. இதைப் படிப்படியாகச் சுவாசத்தைப் பந்தனம் பண்ணுவதனால் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.

சாதாரணமாய் மனிதர்களுக்கு உண்டாகிய சுயபுத்தி போதாது. ஆகையால், அனுபவமுடைய யோகிகளின் புத்தியைக் கேட்டு நடக்க

வேண்டும். இல்லாவிட்டால் துன்பம் நேரிடும். இந்த மூன்று வாயுக்களையும், பஞ்ச தத்துவங்களையும், சுவாசத்தையும், கணிக்க அறிந்துகொண்டால், வரப்போவதைச் சொல்லலாம். தைரியத்தினால் சுறுசுறுப்பாய் மாணாக்கன் இந்த இராஜயோகத்தை அப்பியசிப்பானாகில் இரண்டு மூன்று வருஷத்தில் அறியப்படுகிறான்.

இடைகலை அல்லது பிங்கலையில் ஓர் இராத்திரி சுவாசம் முழுவதும் இடைவிடாமல் நடந்தால், அம்மனிதன் மூன்று வருஷத்தில் மரணமடைவான். இதே மாதிரியாகப் பிங்கலையில் மாறுதலில்லாமல் இரண்டு இராத்திரி இரண்டு பகல் இடைவிடாமல் நடக்கும் மனிதனுக்கு மரணம் இரண்டு வருஷத்தில் நேரிடும். இடைவிடாமல் ஒரு நாசியில் சுவாசம் மூன்று நாளைக்கு நடக்கிற மனிதனுக்கு ஒரு வருஷத்தில் மரணம் நேரிடும். இராத்திரி முழுதும் இடைகலையும் பகல் முழுவதும் பிங்கலையும் இடைவிடாமல் நடக்கும் மனிதனுக்கு ஆறு மாதத்தில் மரணம் நேரிடும். பிங்கலை தொடர்ச்சியாக இடைவிடாமல் ஒரு பாகம் நடக்கும் மனிதனுக்குப் பதினைந்து தினத்தில் மரணம் நேரிடும். இடைகலையானது இதே மாதிரியாக ஒரு மாதம் நடந்தால் இந்த விதிப்பிரகாரம் முடியும்.

புருவத்தைப் பார்த்தால் தெரியாதவர்களுக்கு ஒன்பது நாளிலும், காது கேளாதவர்களுக்கு ஐந்து நாளிலும், மூக்கு நுனி தெரியாதவர்களுக்கு மூன்று நாளிலும், இரண்டு கண்களையும் கையாலமுக்கினால் தண்ணீர் வராதவர்களுக்குப் பத்து நாளிலும் மரணம் நேரிடும் என்பது குரு வாக்கியம்.

யோகிகளுக்கு மேற்கூறிய அடையாளங்கள் நேரிட்டால், உடனே வாயுவைச் சோதித்து, அதைச் சரிபடுத்திக் கொள்ளுந் தன்மை அவர்கட்கு உண்டு.

யோகிகளுக்கு மரணம் நேரிடுவது கஷ்டம். யோகிகள் அப்பியாசத்தால் வாயுக்களையும் தத்துவங்களையும் உணர்ந்து, முத்திரையைப் பின் தொடருவார்கள்.

பிறகு கேசரி முத்திரை எவ்வளவு காலம் ஜீவித்திருக்க வேண்டுமோ, அவ்வளவு காலம் ஜீவித்திருப்பார்கள். இந்த யோகிகள் மூன்று வாயுக்களையும் தத்துவங்களையும் அதிகமாகக் கவனித்து ஸ்திரப்படுத்த வேண்டும்.

சாதாரண மனிதர்களுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் நடக்கும் பக்ஷத்தில் 120 வருஷம் ஜீவித்திருக்கலாம்.

இப்போது மனிதர்கள் அறுபத்தோராயிரத்து அறுநூறு சுவாசத்துக்கு மேல் விடுகிறார்கள். எப்படியெனில் ஓடுவதனாலும், நடப்பதனாலும், தூங்குவதனாலும், போகம் செய்வதனாலும் சுவாசம் அதிகரிப்பதனால், இந்த நூற்றிருபது வயதுக்குக் குறைவு நேரிடுகின்றது.

சாதாரணமாய் மனிதர் விடும் சுவாசம் எவ்வளவு குறையுமோ, அவ்வளவு வயது ஏறிவரும். திடீரென்று சுவாசத்தைக் கட்டக்கூடாது.

மக்கள் அதிக விரைவாக ஓடக்கூடாது; அதிகம் சாப்பிடக்கூடாது; வேகமாக நடக்கக்கூடாது; அதிக போகம் செய்யக் கூடாது.

இந்த விதிகளுள் ஒன்றும் தவறக் கூடாது; தவறி நடப்பார்களானால், அதிக கஷ்ட நஷ்டமடைவார்கள்.

## சாம்பவியின் முத்திரை

உள்ளாதார முதல் பிரமாந்திரம் வரையிலுமுள்ள சக்கரங்களுள் தன்னாற் கொள்ளப்பட்ட சக்கரத்தில் லக்ஷியமும், தேகத்திற்கு வெளிப்பிரதேசத்தில் மூடுதலும் திறத்தலும் இல்லாத திருஷ்டி பார்வையுமாக இருத்தல் எதுவோ, அது சாம்பவி முத்திரையாம்.

இதை இருக்கு முதலிய வேதங்களிலும், சாங்கிய பதஞ்சலி முதலிய யோக சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சாம்பவிக்கு வெளித் திருஷ்டியும, கேசரிக்கு உள்திருஷ்டியும், சாம்பவிக்கு இருதயப் பார்வையும், கேசரிக்குப் புருவ நடுப் பார்வையுமாம். ஸ்ரீசாம்பவிக்கும் கேசரிக்கும் ஸ்தான பேதமுண்டு. சித்தம் லயானந்தமானால் பேதமில்லையென்பது கருத்து.

ஸ்ரீசாம்பவி முத்திரையால் ஸ்திரமனமுடையவனாய் நாசி நுனிபாகத்தில் வைக்கப்பட்ட திருஷ்டியையுடையவனாய் நிஷ்பந்தக் தன்மையாலும், தேகேந்திரிய மனங்களின் நிற்சலனத் தன்மையாலும், சந்திர சூரியர்களை லயமாக்குகிறவனாய்ப் பிராண சஞ்சாரத்தை

ஸ்தம்பிக்கிறவன் எவனோ, அவனே அதுவிதுவென்று சொல்லக்கூடாத பதமாகிய ஆத்தும சொரூபத்தில் நிலைத்தவனாகிறான்.

## கேசரி முத்திரை

இடது வலது நாடிகளிலுள்ள வாயு எந்த மத்திய தேகத்தில் செலுத்திறதோ, அத்தேகத்தில் கேசரி முத்திரை ஸ்திரமுடையதாகின்றது. இதில் ஐயமில்லை. சூனியத்தில் பிராணன் ஸ்திரமாதலே வாயுவை விழுங்குத லெனப்படும்.

சந்திர சூரியர்களென்றும் இடைகலை பிங்கலைகளின் மத்தியில் நிராலம்பமாகிய உள் ஆகாயத்திலிருக்கும் ஆகாயங்களின் சமுதாயத்தில் செவ்வையாய்ப் பொருந்தி இருப்பது எதுவோ, அம்முத்திரையே கேசரி முத்திரை எனப்படும்.

இதன் அப்பியாசம்: முன்னமே சுழுமுனைப் பிராணனால் பூசிக்க வேண்டும்.

அப்போது நியமிக்கப்பட்ட கேசரி முத்திரை உண்டாகிறது. புருவமத்தி சிவமென்னும் சுகவடிவமாகிய பரமாத்துமாவின் ஸ்தானமாம்.

சிவத்தில் ஒடுங்க வேண்டியது, எவன் மனத்தை நிராலம்பமாக்கி ஒன்றையும் சிந்தியா திருக்கின்றானோ, அவனே கேசரி முத்திரையை உணருவான். எவன் பிரமகாய விரத்தியைப் பர வைராக்கியத்தால் விடுகிறானோ, அவன் உள்ளும் வெளியும் இருக்கும் ஆகாயத்தில் கடத்தைப்போல நிற்பான். இது நிச்சயம்.

ஒருவன் தேகத்தினுள்ளும் வெளியுமுள்ள வாயுவைத் தனக்குள் கேசரியில் எப்படி இலயமாக்குகிறானோ, அப்படியே தேகத்திலிருக்கும் வாயுவையும் இலயமாக்குவான். இதில் ஐயமில்லை. அன்றியும், பிராணனது ஸ்தானத்தில் சித்தத்தோடு ஸ்திரத்தன்மையும் அடைவான்; வேறு ஒன்றையும் சிந்தியான்; அப்போது சொரூபத்தில் நிலைத்தலாகிய ஜீவன் முத்தனாவது திண்ணம்.

## அஜபா காயத்திரியின் நிலை

பூரக ரேசகம் செய்யுங்கால் (ஹம்ஸம் ஸோஹம் என்று) நேராகவும் தலைகீழாகவும் பிரகாசிக்கின்றன.

அஜபா மந்திரத்தினால் தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஜீவப் பிரம ஐக்கியம் அடிக்கடி சிந்திக்கப் பட்டிருக்கிறது.

இந்த 'ஸோ' என்னும் அஜபா காயத்திரியை ஈஸ்வர நாமத்தைப் போல ஜெபித்தால் சித்தசுத்திக்கு ஹேதுவாகும். வெகுகாலம் வரையில் ஜெபம் செய்யின், விருத்தி அந்தர்முகப்படும்..

அப்போது சுவாசம் வெளிப்படுங்கால், சகாரமாகிறதை (ஸோ என்னும் சுவாசத்தை) உட்கொள்ளுங்கால், அகாரத்தை 'ஹம்' என்றே தியானிக்க வேண்டும். இந்த அகாரம் மறுபடியும் உட்செல்லுகின்றபடியால், 'ஹம்ஸம்' என்றே மகாமந்திரத்தை ஜீவன் எப்போதும் ஜெபிக்கிறான். ஒரு வாக்கியத்தினால் இந்த மந்திரத்தின் ஜெயம் சுழுமுனையில் விபரீதமாயுண்டாகிறது.

அது 'ஸோஹம்' 'ஸோஹம்' என்றடையப்படுகின்றது. சகாரம் 'கேசரி' எனப்படுகின்றது. த்வம் பதமென்று நிச்சயிக்கப்படுகின்றது. அகாரம் பரமேசுவரனாகிறான்.

தற்பதமென்று நிச்சயக்கப்பட்டிருக்கின்றது.

சகாரத்தைத் தியானிக்கும் ஆத்மா நிச்சயமாய் அகாரமே ஆகின்றான் என்று யோகபீஜம் யோகசூடாமணி உபநிஷத்து, யோகத்துவ உபநிஷத்து முதலியவற்றால் காண்க.

இது அஜபா காயத்திரியாம். இது முக்கியமாகப் பிரவர்த்தியுடையவன் எவனோ, அவன் அதிகாரியாவன். அது சோபாதிக தியானமாம்.

இவற்றினின்றும் சகாரம் அகாரமென்னும் மெய்யெழுத்துக்களை அடக்கி, எஞ்சிநிற்கும் 'ஓம்' என்னும் அக்ஷரத்தைத் தியானித்தால் நிருபாதிகமாம் 'ஓம் ஸோஹம்' என்னும் இவ்விரண்டு சத்தங்களும் பிரத்தியேகாத்துமாவோடு பின்னமாகிய பிரமமென்னும் ஒரே

அர்த்தமுடையன. சுத்தமாய் இருத்தலால், நிரூபாதிகமாயினும், 'ஓம்' என்னும் அக்ஷரத்தில் சகார அகாரமென்னும் உபாதிகளைச் சேர்த்தலால், 'ஸோ, ஹம்' என்னும் சத்த முண்டாகிறது. ஆகையால், சோபாதிகமெனப்படுவது, விசார சாகரம், பதார்த்த மஞ்சூக்ஷரம் முதலிய நூல்களிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

## நாதானுசந்தானம்

இந்த நாதானுசந்தானத்தை முதன்முதல் அப்பியசிக்கும் மாணாக்கன், சுரராஜ குமாரியைவி ரந்திரத்தில் தனது கைவிரல் களிரண்டினால் நிரோதித்து உள்ளே பரவும் சமுத்திரம் போன்ற திரமான நாதத்தைச் சீக்கியமாகக் கோருகிறான். அதனால், எவனுக்குச் செவ்வையா யெழும்பிய நாதமும் வாயுவும் சுத்தமாய் ஜெபிக்கப்பட்டவை களாகின்றனவோ, அந்த மகா குணோதய முள்ளவனுக்கு அணிமாதி குணங்களும் அளவற்ற புண்ணியமும் உண்டாகின்றன என்பது சொல்லப்பட்டிருக்கின்றது.

சுரராஜன் இந்திரன், அவன் குமாரன் அர்ச்சுணன, அன் வைரி கர்னன், அந்தக்கரணாந்தரத்தில் என்பது பொருளாம். அனாகதம் என்னும் நாத வெளியிலுண்டாகும் சுரோத்திர துவக்காதி இந்திரியங்களுக்கு விஷயமாகிய தொனி சூழ்கின்றது. இந்த நாத அப்பியாசி ஒரு பட்சத்தில் சலக சித்த சஞ்சலங்களையும் ஜபித்து நிஜானந்த முடையவனாகிறான்.

முதலில் அப்பியசிக்குங்கால் சமுத்திரம் போலும் பேரி முதலிய வாத்தியம் போலும் நாநாவிதமாகிய நாதம் கேட்கப்படும். பின் நாதானுசந்தானம் நிவர்த்தியாகுங்கால் சூட்சுமா சூட்சுமமாகக் கேட்கப்படும். ஆதியில் வாயு பிரமரந்திரத்தில் செல்லுங் காலத்து சமுத்திரம், சச்சரம், மேகம், பேரிகை, கனக தப்பட்டை பிரமரந்திரத்தில் வாயு ஸ்திரப்பட்ட பின் மத்தளம், சங்கு, கண்டாமணி, காகளம் என்பவற்றால் உண்டாகும் சத்தத்தைப் போன்ற நாதமும், அந்தத்தில் பிராணன் பிரமரந்திரத்தல் மிகவும் ஸ்திரமான பின் கிங்கிணி, வேணு, வீணை. தந்திரி, வண்டு என்பவற்றின் சத்தங்களைப் போன்ற நாதங்களும், இன்னும் நாநாவிதமான நாதங்களும், தேகத்தின் மத்தியில் உள்ளனவாகக் கேட்கப்படும். மேகம், பேரி முதலியவற்றாலுண்டாகிய பெரும்சத்தங்கள் கேட்கப்படினும்,

அவற்றுள் சூட்சமத்திலும் சூட்சுமமாகிய நாதத்தையே சிந்திக்க வேண்டும். சூட்சுமமாகிய நாதம் நெடுநேர மிருப்பதால் சித்தம் நெடுநேரம் ஸ்திரமுடையதாய் நிலைக்கும்.

கனமாகிய நாதத்தைவிட்டுச் சூட்சுமத்திலும், அல்லது சூட்சுமத்தை விட்டுக் கனநாதத்திலுமாக இரமிப்பதாயிருக்கினும், கனசூட்சுமமென்னும் இரண்டிலொரு நாதத்தைக் கொள்ளுதல் தள்ளுதல் கூடாது. ஏனெனில் அப்படிக் கொள்ளலும், ராஜசகுண இயல்பாதலால், அவ்வித ராஜச குணத்தை வரவொட்டாமல், சுத்த சாத்துவிக குணச் செய்கையான சூட்சும நாதத்தில் மனத்தைச் செலுத்த வேண்டும்.

அஃதேனெனில், நாதங்களில் இரம்மிக்கும் மனமே, சமாதியையடையும் என்பது கருத்து. அதாவது மலர்ந்த புஷ்ப ரசத்தைக் குடிக்கும் வண்டு, கந்தத்தை விரும்பாதது போல, சூட்சும நாதத்தில் சித்தம் நிலைக்க வேண்டும். சப்தாதி விஷயமாகிய உத்தியானத்தில் சஞ்சரிக்கும் மனமென்னும் மதயானையை அடக்குதலில் இந்த அனாகதத் தொனியானது, கூரிய அங்குசம் போன்ற வலியுடையதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

## வாசியையடக்கி அடையும் பலன்

இந்த யோக அப்பியாசிகள், சூரிய சந்திர கலைகளில் பிராணவாயு செல்லுங்கால், பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு தத்துவங்கள் வந்து விலகும். அப்போது அப்பிராணவாயு ஆகாய தத்துவத்தில் அடையும். அச்சமயம் சுவாசம் குறைந்து வரும். அக்காலத்துச் சுவாச பந்தனம் செய்யக்கூடும்.

அப்போது ஓர் அங்குலம் குறைந்தால் இவ்வுலகத் திச்சையினின்று சுவாதீனப்படுவான். இரண்டு அங்குலம் குறைந்தால், மனம் ஆனந்திக்கப்பட்டு ஞானச் செல்வமுண்டாகும். மூன்றங்குலம் குறைந்தால் விவேகி யாவான். நான்கு அங்குலம் குறைந்தால் தூர தேசத்தில் நடக்கும் நடவடிக்கைகளைச் சொல்லப்படுவான். ஆறங்குலம் குறைந்தால், ஆகாசத்திலுள்ள சகலமும் கண்டுணர்வான். ஏழங்குலம் குறைந்தால், சரீரம் காயசித்தி பெறுவான். எட்டங்குலம் குறைந்தால், அணிமாதி சித்திகளை அடைவான். ஒன்பதங்குலம் குறைந்தால் நவகண்டங்களிற் சங்கரிப்பான். பத்தங்குலம் குறைந்தால்

ஒரு தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பான். பதினோரு அங்குலம் குறைந்தால் தனது ஆன்மாவைக் கண்டு வசனிப்பான். பன்னிரண்டு அங்குலம் அடங்கும் சுவாசமானது உதித்த இடத்திலே சூழன்று கொண்டிருக்கிற படியால், அந்தப் பரமயோகி நெடுங்காலம் அன்ன பானாதிகளை நீக்கி, அவாவற்றிருப்பான். சமாதியிலுட்கார்ந்து மாணாக்கன் இடைகலையைப் பிங்கலையிலும், பிங்கலையை இடைகலையிலும் மாற்றக் கற்றுக்கொண்டபின், பகல் முழுவதும் இடைகலையிலும், இரவில் அதை அடைத்துவிட்டுப் பிங்கலையிலும் நடத்தப்படுவான்.

இதற்காகப் பழம் பருத்தியிற் கொஞ்சம் சுத்தம் பண்ணி வைத்துக்கொண்டு, இடைகலை நடத்த வேண்டியிருப்பதால் வலது நாசியிலும், பிங்கலை நடத்த வேண்டியிருந்தால் இடது நாசியிலும் அடைத்துவிட வேண்டும். இப்படிச் சரிவர நடந்தால் மனிதர்கள் நூற்றிருபது வயது ஜீவித்திருக்கலாம்.

மற்றச் சங்கதிகளைச் சிந்திக்கும் பக்ஷத்தில் யோகிகளுக்கு வயதே இல்லை.

எந்த விதிகள் எப்படியிருந்தாலும், இந்த விதிகள் யாவும் கிருகஸ்தர்களுக்காகவே ஏற்பட்டிருக்கின்றன.

இதை அப்பியாசிகள் எப்போதும் இவ்விதிப் பிரகாரம் நடத்துவார்கள். அப்போது தேக சௌக்கியமும், நீண்ட ஆயுளும், மன ஒடுக்கமும், சித்த சாந்தியும் உடையவர்களாய் இருப்பார்கள்.

## மனோலய நிலை

பிராணவாயு சுழுமுனையாகிய மத்திய நாடியிற் செல்லுங்கால், அந்தக்கரணம் சூனிய தேச கால வஸ்து பரிச்சேத மில்லாத பிரமத்தில் பிரவேசிக்கின்றது. அப்போது சித்த நிரோதமுள்ள யோக வித்தானவன், பிரார்த்தத்தோடு சகல கருமங்களையும் நிர்மூலமாக்குகிறான். எதுவரையில் பிராணனும் இந்திரியங்களும் ஜீவித்திருக்கின்றனவோ, அதுவரையில் மனத்தில் ஞானம் எப்படி உண்டாகும்? பிராணன் மனம் என்னும் இவ்விரண்டையும் எவன் லயமாக்குகிறானோ, அப்புருஷன் மோக்ஷத்தை அடைகிறான்.

பிராண மனோலயங்களில்லாதவன், எவ்விதத்திலும் மோக்ஷமடையான். நல்ல ஸ்தானத்தில் இருந்துகொண்டு சுழுமுனையென்னும் மத்திய நாடியை நன்றாய்ப் பேதிக்கும் தன்மையைக் குருமுகமாய் அறிந்து, பிராண வாயுவை மத்தியிற் செலுத்துவதாகிய பிரமரந்திரத்தில் நிரோதித்தல் வேண்டும். இப்படி அப்பியசித்தால், பிராணனது அசைவிற்கு க்ஷயம் வரும். அப்போது மனம் மிகவும் சாந்தியடைகின்றது. அக்காலம் நிர்வாணம் மிஞ்சுகின்றது.

சூரியனும் சந்திரனும் இராப்பகல் வடிவமாகிய காலத்தைப் புசிப்பவர்களாயிருக்கிறார்கள். இது ரகசியமாய்ச் சொல்லப்பட்டது. இரண்டரைக் கடிகை சூரியனோடுங்கால் பகலென்றும், சந்திரனோடுங்கால் இரவென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. எப்போது சுழுமுனை மார்க்கத்தால் வாயு பிரமரந்திரத்தில் ஒடுங்குகின்றதோ, அப்போது இராப்பகல் வடிவமாகிய காலமில்லாமையல், அச்சுழுமுனை காலத்தைப் புசிப்பதாய் இருக்கின்றது.

எந்த யோகியால் பிராண வாயு கட்டப்படுகின்றதோ, அந்த யோகியால் மனமும் கட்டப்படுகின்றது. எவனால் மனம் கட்டப்படுகின்றதோ, அவனால் பிராணனும் கட்டப்படும்.

மனம் பிராணன் என்னும் இரண்டில் ஒன்றைக் கட்டினால், மற்றொன்றுங் கட்டப்படும். ஆதலால், மனம் ஒடுங்காத வரையில் வாசனை நசியாது. வாசனை நசியாத வரையில் சித்தம் நசியாது. சித்தம் நசியாத வரையில் தத்துவ ஞானம் உண்டாகாது.

இவற்றுள் (மனம் பிராணனென்னும் இரண்டினுள்) ஒன்று நசித்தால், மற்றொன்று நாசமாம். ஒன்றின் பிரவிர்த்தியால் மற்றொன்றும் பிரவிர்த்தியாகின்றது. இவ்விரண்டும் லயமானால், மோட்ச சித்தி உண்டாகும்.

மனட் ஸ்திரப்பட்டால் பிராணன் ஸ்திரமாகும். சுரோத்திரம் முதலிய இந்திரியங்களுக்கு மனம் நாதனாகிறது. மனத்திற்குப் பிராணன் நாதனாகிறது. பிராணனுக்கு மனோலயம் நாதனாகிறது. அம்மனோலயம் நாதத்தை ஆசரித்திருக்கின்றது.

அதாவது மனம் நாதத்தில் ஒடுங்குகின்றது. சுவாச நிசுவாசங்களை நஷ்டமாகிறதும், சத்தாதி விஷயக் கிரகணம் நஷ்டமாகிறதும், சேட்டைகள் நீங்குகிறதும், விவகாரங்களில்லாததும் மனோலயமேயாம். மனோலயம் எதுவரையில் ஆகவில்லையோ, அதுவரையில் இந்திரிய விஷயங்கள் ஜயமாகா. இந்திரிய விஷயங்கள் ஜயமாகாத வரையில் எனதென்பது எப்படி நீங்கும்? எனதென்பது நீங்கார வரையில் யானென்னும் அகந்தை எப்படி நீங்கும்? யானென்னும் அகந்தை நீங்காத வரையில் மனச்சுத்தம் எப்படி ஆகும்? மனம் சுத்தமாகாத வரையில் அபரோக்ஷ ஞானம் எப்படி உதயமாகும்? அபரோக்ஷ ஞானம் உதயமாகாத வரையில் பிரமசை தன்னியம் சமாதியின்கண் எப்படிப் புலப்படும்? பிரமசைதன்னியம் சமாதியின்கண் புலப்படாத வரையில் திடஞானம் எப்படி உதயமாகும்? திடஞானம் பெற்ற மகான்களுக்குத் துவிதமேது? பேதமேது? மாய்கையேது? பந்தமேது? ஜன்மமேது? அப்போது அந்த யோகி ஜன்மமாகிதனாகின்றான்.

ஆகையால் இந்த யோகத்தை அனுஷ்டிக்கும் பக்குவடைய முமுக்ஷுக்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டுவது யாதெனில், வாசி யோகத்தையன்றி மற்ற ஹடயோகம், கௌடயோகம், அம்பிகாயோகம் முதலிய யோகங்களால் சாட்சாத்காரத்தை அடைய இயலாதென்பதை உணரவேண்டும். அஃதெப்படியெனில், ஒருவன் கௌசனையால் விசாலமான விண்ணை மூடுவது போலாகும். இந்த வாசி யோகமெனில் அப்படியன்று. கண்மூட விண் மறையுமென்பதாம். ஆகையினால் இந்த யோகத்தை அனுஷ்டித்தவர்கள், இந்த நூலை வாசித்தவர்கள்,வாசிக்கக் கேட்டவர்கள் மனம் இவ்வாசியை நாடுவதால், சித்தம் நிலைத்து, ஞானம் உதயமாய்.

அணிமாதி சகல ஐஸ்வரியங்களும் அடைந்து, ஜீவன் முத்தர்களாய், நிரதியானந்தத்தில் சதா காலமும் நிலைத்து வாழ்வார்கள் என்பது வாக்கியம்.

### வாழி விருத்தம்

வாழ்க நாரண தேசிகர் வானருள்
வாழ்க அன்னவர் மாணவர் யாவரும்
வாழ்க இந்நூல் படிப்பவர் கேட்பவர்
வாழ்க இந்தச் சிவயோக சாரமே.

